அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64) தகுதியும் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப் பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003

தொலைநிலைக்கல்வி இயக்ககம்

இளங்கலை வரலாறு

மூன்றாமாண்டு - ஆறாம்பருவம்

தாள்: 108 51

தமிழக வரலாறு

தொடக்கம் முதல் கி.பி.1947 வரை

Author:

DR. T. ASOKAN, M.A.,M.Phil.,Ph.D.,NET.

Associate Professor, Department of History, Bharathidasan University, Tiruchirappalli – 620 024

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: A-27, 2nd Floor, Mohan Co-operative Industrial Estate, New Delhi-110044
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

Work Order No.AU/DDE/DE12-27/Preparation and Printing of Course Materials/2020 Dated 12.08.2020 Copies – 1800

முன்னுரை

இந்திய வரலாறானது தமிழகத்தில் இருந்துதான் எழுதப்பட வேண்டும் என்று தென்னிந்திய வரலாற்று ஆசிரியர்கள் வாதிடுகின்றனர். சங்ககாலத்திற்கு முன்னரே தமிழர்களும் தமிழ்மொழியும் இருந்ததுக்கான ஆதாரங்கள் அண்மைக்காலங்களில் கிடைக்கின்ற அதரங்கள் விளக்குகின்றது. மேலும் தமிழர்கள் அவர்தம் வரலாறு கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகவே இருக்கும் என அண்மையில் மேற்கொள்ளப்பட்டுவரும் கீழடி அகழ்வாராய்ச்சி அறிதியிட்டு கூறுகிறது.

சங்ககால மக்கள் அவர்தம் அரசியலும் பொருளாதாரமும், இலக்கிய வளர்ச்சியும் அக்காலகட்டத்தில் பிறப்பகுதியில் வாழ்ந்தோர்க்கு ஒரு மிகப்பெரிய எடுத்துக்காட்டாக விளக்கியது. சங்க கால இலக்கியங்களும் அதன் பிறகு தோன்றிய இலக்கியங்களும் கலை மற்றும் கட்டிடக்கலை வளர்ச்சியும் கிடைக்கப்பெற்ற கல்வெட்டு மற்றும் புதைபொருள் ஆதாரங்களும் பழந்தமிழர்களின் பண்பாண்டினை வெளிப்படுத்துகிறது. அதே சமயத்தில் இடைக்காலத்தில் ஏற்பட்ட பண்பாட்டு கலப்புகளும் அதனால் ஏற்பட்ட கலாச்சார மாற்றங்களும் இடைக்கால தமிழர்களின் வாழ்வில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

ஐரோப்பியர்களின் வருகையைத் தொடர்ந்து தமிழகத்தில் ஏற்பட்ட காலனியாதிக்கம் அதற்கு எதிராக எழுந்த எழுச்சிப்போராட்டம் இந்தியாவிலே தமிழகத்தில்தான் முதலில் ஏற்பட்டது எனலாம். மேலும் ஆங்கிலேயர் கல்வினால் ஏற்பட்ட தாக்கம் அவர்களுக்கு எதிராகவே எழுந்த சுதந்திரப் போராட்டத்தில் தமிழர்கள் ஆற்றியப்பங்கு நவீன தமிழர் வரலாற்றில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இத்தகைய சிறப்பியல்புகளை மையமாகக்கொண்டு இந்த நூலானது எழுதப்பட்டுள்ளது. இந்த நூல் பதினான்கு அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அத்தியாயங்களின் தொடக்கத்திலுள்ள முன்னுரை மற்றும் நோக்கங்கள் மாணவர்களுக்கு அறிமுகத்தை வழங்குகிறது. பாடத்தை நன்கு புரிந்துக் கொள்வதற்கு வசதியாக அத்தியாயத்திற்குள் 'உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்' என்ற தலைப்பில் வினாக்களும் உரியப்பதில்களும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பயிற்சிக் கேள்விகள் அத்தியாத்தில் இறுதியில் வழங்கப்பட்டுள்ள பாடம் தொடர்பான பல நூல் பட்டியல், இந்தப் பாடத்தைத் தாண்டி மேலும் பயிலவேண்டும் என்று நினைப்போருக்குச் சிறந்த வழிகாட்டியாக உள்ளது.

பொருளடக்கம்

அலகு - 1
தமிழக வரலாற்று ஆய்வுக்கான ஆதாரங்கள்- சங்க காலம்

பாட அமைப்பு
1.1. முன்னுரை
1.2. நோக்கங்கள்
1.3. வரலாறு
    1.3.1. தமிழ்நாட்டு வரலாறு
1.4. வரலாற்றுச் சான்றுகள்
    1.4.1. இலக்கியச் சான்றுகள்
        1.4.1.1. தொல்காப்பியம்
        1.4.1.2. எட்டுத்தொகை
        1.4.1.3. பதிற்றுப்பத்து
        1.4.1.4. பத்துப்பாட்டு
        1.4.1.5. பதினெண் கீழ்க்கணக்கு
        1.4.1.6. காப்பியங்கள்
    1.4.2. கல்வெட்டுச் சான்றுகள்
    1.4.3. தொல்பொருள் சான்றுகள்
    1.4.4. நாணயச் சான்றுகள்
1.5. சங்க காலம்
    1.5.1. முச்சங்க மரபு
1.6. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்
1.7. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
1.8.கூடுதல் வாசிப்புகள்

அலகு - 2
சங்ககால சமூக மற்றும் பொருளாதார நிலை- சமயம்

பாட அமைப்பு
2.1. முன்னுரை
2.2. நோக்கங்கள்
2.3. முன் தேவைகள்
    2.3.1. நாகரிகம், பண்பாடு
2.4. பொருளாதார நிலை
    2.4.1.விவசாயம்
        2.4.1.1. விவசாயத் தொழில்
        2.4.1.2. நிலத்திற்கேற்ற தொழில்கள்
        2.4.1.3. நெசவுத் தொழில்
        2.4.1.4. பிற தொழில்கள்
2.5. உள்நாட்டு வாணிகம் வர்த்தகம்
    2.5.1. வர்த்தக விரிவாக்கம்
    2.5.2. வெளிநாட்டு வர்த்தகத் தொடர்பு
2.6. துறைமுகங்கள்

2.6.1. ஏற்றுமதி, இறக்குமதி
2.6.2. வெளிநாட்டினர் வருகை
2.6.3. தமிழ்நாடும் ரோமப் பேரரசும்
2.6.4. வரவும் செலவும்
2.7. சங்ககால சமுதாயம்
2.7.1.திணை மக்கள் வாழ்க்கை
2.7.1.1. குறிஞ்சி மக்கள் வாழ்க்கை
2.7.1.2. முல்லை மக்கள் வாழ்க்கை
2.7.1.3. மருத மக்கள் வாழ்க்கை
2.7.1.4. நெய்தல் மக்கள் வாழ்க்கை
2.7.1.5. பாலை மக்கள் வாழ்க்கை
2.7.2. சமநிலைச் சமுதாயம்
2.8. குடும்ப வாழ்க்கை
2.8.1. மண வாழ்க்கை
2.8.2. மணமுறை
2.9.மகளிர் நிலை
2.9.1. அழகு மகளிர்
2.9.2. பரத்தையர்
2.10. விழாக்கள்
2.11. உடை அலங்காரம்
2.12. சங்ககால சாதிமுறை
2.13. சங்ககால சமயம்
2.13.1. வைதீக சமயம்
2.13.2. புத்த சமயம்
2.13.3. சமண சமயம்
2.13.3.1. சமணர்களின் இலக்கியப்பணி
2.13.4. இருசமயங்களின் தாக்கம்
2.14. சங்க காலத்தின் வீழ்ச்சி
2.15. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்
2.16. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
2.17. கூடுதல் வாசிப்புகள்

அலகு – 3
களப்பிரர்கள்-ஆரம்பகால பாண்டியர்கள்

பாட அமைப்பு
3.1. முன்னுரை
3.2. நோக்கங்கள்
3.3. களப்பிரர்
3.3.1. கால வரன்முறை
3.3.2. முத்தரையர்கள்
3.3.3. கொள்கைக் கூட்டத்தார்
3.3.4. கங்கர்கள்
3.3.5. குறவர்கள்
3.3.6. கர்நாடகத்தவர்
3.4. களப்பிரர் ஆட்சி

3.4.1. அச்சுதவிக்கிரமன்
3.4.1.1. புத்தமதப் புரவலர்
3.4.1.2. சமண மதத்தின் செல்வாக்கு
3.5. களப்பிரர் கால வாழ்வியல்
3.5.1. அரசியல் நிலை
3.5.2. பொருளாதார நிலை
3.5.3. சமுதாய நிலை
3.5.4. சமய நிலை
3.5.5. கல்வி நிலை
3.5.6. மொழி நிலை
3.5.7. இலக்கியம்
3.6. பிறமொழி இலக்கியம்
3.6.1. சித்தர்கள்
3.7. களப்பிரர் வீழ்ச்சி
3.7.1. களப்பிரர் காலம் இருண்ட காலமா?
3.8. முற்காலத்திய பாண்டியர்கள்
3.9. வரலாற்றுச் சான்றுகள்
3.9.1. கல்வெட்டுச் சான்றுகள்
3.9.2. செப்பேட்டுச் சான்றுகள்
3.9.3. இலக்கியச் சான்றுகள்
3.9.4. உத்தேச காலவரையறை
3.10. பாண்டியப் பேரரசர்கள், (575-920)
3.10.1. கடுங்கோன், (575-600)
3.10.2. மாறவர்மன் அவனி சூளாமணி, (600-645)
3.10.3. செழியன் சேந்தன், (645-670)
3.10.4. அரிகேசரி பராங்குசன் மாறவர்மன், (670-710)
3.10.4.1. சோழருடன் மணவுறவு
3.10.4.2. சமயப் பொறையின்மை
3.10.5. கோச்சடையன் ரணதீரன், (710-740)
3.10.6. முதலாம் மாறவர்மன் ராஜசிம்மன், (740-765)
3.10.6.1. பேரரசுப் பெருக்கம்
3.10.6.2. சாளுக்கியருடன் மணவுறவு
3.10.6.3. பெண்ணாகடப் போர்
3.10.6.4. பேரரசு விரிவாக்கம்
3.10.6.5. வேந்தர் வள்ளல்
3.10.6.6. வேள்விக்குடி செப்பேடு
3.10.7. ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன், (815-860)
3.10.7.1. இலங்கைப் போர்
3.10.7.2. தெள்ளாற்றுப் போர்
3.10.8. இரண்டாம் வரகுணன், (860-880)
3.10.8.1. ஸ்ரீபுறம்பியப் போர்
3.10.8.2. போரின் விளைவுகள்
3.10.9. பராந்தக வீரநாராயணன், (880-900)
3.10.10. இரண்டாம் இராஜசிம்மன், (900-920)
3.11. பாண்டியர் வாழ்வியல்
3.11.1. அரசியல் நிலை

3.11.2. இராணுவ வல்லாட்சி
3.11.3. உள்ளாட்சி
3.11.4. பொருளாதார நிலை
3.11.5. வர்த்தகச் சிறப்பு
3.11.6. சமுதாய நிலை
3.11.7. சமுதாயத் தாக்கம்
3.11.8. சமய நிலை
3.11.9. பாண்டியர் பண்பாடு
3.11.10. கல்வி நிலை
3.11.11. கட்டிடக்கலை
3.11.12. சிற்பம், ஓவியம், நடனம்
3.11.13. சமணச் சிற்பங்கள்
3.12. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்
3.13. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
3.14. கூடுதல் வாசிப்புகள்

அலகு – 4
சோழப் பேரரசு-முதலாம் இராஜாராஜா- முதலாம் இராஜேந்திர-சாதனைகள்

பாட அமைப்பு
4.1. முன்னுரை
4.2.நோக்கங்கள்
4.3.இராஜராஜன்
4.3.1. புகழ் பெற்ற போர்கள்
4.3.2. காந்தளூர்சாலைப் போர்
4.3.3. பாண்டியருடன் போர்
4.3.4. மலைநாட்டுப் படையெடுப்பு
4.3.5. இலங்கைப் படையெடுப்பு
4.3.6. சாளுக்கியப் போர்
4.3.7. மாலத்தீவுகள் படையெடுப்பு
4.3.8. இராஜராஜனின் ஆட்சிக்கால சாதனைகள்
4.4. இராஜேந்திரன்
4.4.1.புகழ் பெற்ற போர்கள்
4.4.1.1. இலங்கைப் படையெடுப்பு
4.4.1.2. பாண்டியருடன் போர்
4.4.1.3. சேரருடன் போர்
4.4.1.4. சாளுக்கியப் போர்கள்
4.4.1.5. கங்கை படையெடுப்பு
4.4.1.6. கடாரம் படையெடுப்பு
4.4.1.7. பிற படையெடுப்புகள்
4.4.2. ஆட்சிக்கால சாதனைகள்
4.5. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்
4.6. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
4.7. கூடுதல் வாசிப்புகள்

அலகு – 5

நிர்வாக வளர்ச்சி-கலை மற்றும் கட்டிடக்கலை- சாளுக்கிய சோழர்கள் முதலாம் குலோத்துங்கன்-மூன்றாம் குலோத்துங்கன்- சாதனைகள்-இலக்கிய வளர்ச்சி

பாட அமைப்பு

5.1. முன்னுரை

5.2. நோக்கங்கள்

5.3. அரசாங்க அமைப்பு

- 5.3.1. அரச குடும்பம்
- 5.3.2. அமைச்சரவை
- 5.3.3. அதிகாரவர்க்கம்
- 5.3.4. மாநில நிர்வாகம்
- 5.3.5. மண்டல நிர்வாகிகள்
- 5.3.6. உள்ளாட்சி நிர்வாகம்
- 5.3.7. நகராட்சி நிர்வாகம்
- 5.3.8. கிராம நிர்வாகம்
- 5.3.9. கிராம சபை
- 5.3.10. வாரிய முறை
- 5.3.11. குடஓலை முறை
- 5.3.12. நீதி நிர்வாகம்
- 5.3.13. முடியாட்சியில் மக்களாட்சி
- 5.3.14.பொருளாதார நிலை
  - 5.3.14.1. விவசாயம்
  - 5.3.14.2. தொழில்
  - 5.3.14.3. வணிகம் உள்நாட்டு வர்த்தகம்
- 5.3.15. அரசாங்க வருமானம்

5.4. கலை-கட்டடக் கலை வளர்ச்சி

- 5.4.1. கோயில்கள்
- 5.4.2. தஞ்சைப் பெருவுடையார் கோயில்
- 5.4.3. கங்கைகொண்ட சோழபுரக் கோயில்
- 5.4.4. பிற கோயில்கள்

5.5. சிற்பக்கலை

- 5.5.1. ஓவியக்கலை
- 5.5.2. நாடகக் கலை
- 5.5.3. நாட்டியக்கலை
- 5.5.4. இசைக்கலை
- 5.5.5. அறிவியல் நிலை

5.6. சாளுக்கிய சோழர்கள்

- 5.6.1. முதலாம் குலோத்துங்கன்
- 5.6.2. மேலைச் சாளுக்கியருடன் மோதல்
- 5.6.3. பாண்டியர் பிரச்சனை
- 5.6.4. சேரர் சவால்
- 5.6.5. கலிங்கச்சிக்கல்
- 5.6.6. வெளிநாட்டு உறவு
- 5.6.7. குலோத்துங்கனின் சாதனைகள்
- 5.6.8. கடைசி காலம்

5.7. விக்கிரம சோழன்
5.8. மூன்றாம் குலோத்துங்கன்
    5.8.1. இலங்கை எதிர்ப்பு
    5.8.2. பாண்டியர் எதிர்ப்பு
    5.8.3. எழுச்சியும் வீழ்ச்சியும்
    5.9. இலக்கியம் வளர்ச்சி
5.10. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்
5.11. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
5.12. கூடுதல் வாசிப்புகள்

அலகு – 6
பிற்காலப் பாண்டிய பேரரசு

பாட அமைப்பு
6.1. முன்னுரை
6.2. நோக்கங்கள்
6.3. முதலாம் சுந்தரபாண்டியன்
    6.3.1. ஒய்சாளர் எதிர்ப்பு
6.4. இரண்டாம் சுந்தரபாண்டியன்
6.5. முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்
6.6. மாறவர்மன் குலசேகர பாண்டியன், 1268-1310
6.7. பாண்டியர் கால வாழ்வியல்
    6.7.1. பொருளாதார நிலை
    6.7.2. சமுதாய நிலை
    6.7.3. வீழ்ச்சிக்கான காரணங்கள்
6.8. பயணிகளின் பார்வையில் பாண்டிய நாடு
6.9. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்
6.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
6.11. கூடுதல் வாசிப்புகள்

அலகு – 7
தமிழ்நாட்டில் முஸ்லிம் படையெடுப்புகள்

பாட அமைப்பு
7.1. முன்னுரை
7.2. நோக்கங்கள்
7.3. மாலிக்காபூர் படையெடுப்பு
7.4. முகமது துக்ளக் படையெடுப்பு
    7.4.1.இணைப்புக் கொள்கை
    7.4.2. விளைவுகள்
7.5. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்
7.6. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
7.7. கூடுதல் வாசிப்புகள்

அலகு – 8
மதுரை சுல்தான்கள்- சமூக மற்றும் பொருளாதார நிலை

பாட அமைப்பு
8.1. முன்னுரை
8.2. நோக்கங்கள்
8.3. ஜலாலுதீன் அசன் ஷா
8.4. கியாசுதீன் தாமன் ஷா
8.5. நசீருதீன் முகமது
8.6. சுல்தானியத்தின் சீரழிவு
8.7. மதுரை சுல்தானியத்தின் வீழ்ச்சியும் விளைவும்
8.8. சமூக மற்றும் பொருளாதார நிலை
8.9. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்
8.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
8.11. கூடுதல் வாசிப்புகள்

அலகு - 9
மதுரை நாயக்கர்கள்

பாட அமைப்பு
9.1. முன்னுரை
9.2. நோக்கங்கள்
9.3. நாகம நாயக்கர்
9.4. விசுவநாத நாயக்கர்
    9.4.1. பாண்டியர் கிளர்ச்சி
    9.4.2. மதுரை நாயக்கம்
9.5. குமார கிருஷ்ணப்ப நாயக்கர், 1563-1573
    9.5.1. பாளையக்காரர் கிளர்ச்சி
    9.5.2. இலங்கைப் படையெடுப்பு
9.6. வீரப்ப நாயக்கர்
    9.6.1.மதுரை மிஷன்
    9.6.2. சமயப்பணி
9.7. இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர்
9.8. மூன்றாம் கிருஷ்ணப்ப நாயக்கர்
    9.8.1. இராபர்ட் நொபிலி
    9.8.2. கல்விச் சிறப்பு
9.9. இரண்டாம் வீரப்ப நாயக்கர்
9.10. திருமலை நாயக்கர்
    9.10.1. இராமநாதபுரப் பிரிவினை
    9.10.2. மூக்கறுப்புப் போர்
9.11. சொக்கநாத நாயக்கர்
9.12. முத்து வீரப்ப நாயக்கர்
9.13. இராணி மங்கம்மாள்
    9.13.1. ஆக்கப்பணிகள் மக்கள் நலத்திட்டங்கள்
9.14. விஜயரங்க சொக்கநாதர்
9.15. இராணி மீனாட்சி

9.16. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்
9.17. கூடுதல் வாசிப்புகள்

அலகு - 10
செஞ்சி, தஞ்சை நாயக்கர்கள்- பாளையக்காரர்களின் நிர்வாகம்

பாட அமைப்பு
10.1. முன்னுரை
10.2. நோக்கங்கள்
10.3. செஞ்சி நாயக்கர்கள்
    10.3.1. வையப்ப நாயக்கர்
    10.3.2. மகா நாயக்கர்
    10.3.3. துபாகி கிருஷ்ணப்ப நாயக்கர்
    10.3.4. சூரப்ப நாயக்கர்
    10.3.5. முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர்
    10.3.6. இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர்
        10.3.6.1.உள்நாட்டுப் போர்
10.4. செஞ்சி நாயக்கர்களின் வீழ்ச்சி
    10.4.1. வீழ்ச்சியின் விளைவு
10.5. தஞ்சை நாயக்கர்கள்
10.6. செவப்ப நாயக்கர்
10.7. அச்சுதப்ப நாயக்கர்
10.8. இரகுநாத நாயக்கர்
10.9. விஜயராகவ நாயக்கர்
10.10. தஞ்சையின் வீழ்ச்சி
10.11. பாளையக்காரர்களின் நிர்வாகம்
10.12. பாளையக்காரர்
    10.12.1. பாளையக்காரர் ஆட்சி முறை
    10.12.2. குறிப்பிடத்தக்க பாளையக்காரர்கள்
    10.12.3. ஆர்க்காட்டு நவாபுகளின் கீழ் பாளையக்காரர்கள்
10.13. போராளி பூலித்தேவன்
    10.13.1. ஆங்கிலேயரின் எதிர்த்திட்டம்
10.14. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்
10.15. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
10.16. கூடுதல் வாசிப்புகள்

அலகு – 11
ஐரோப்பிய செல்வாக்கின் ஆரம்பம் - போர்ச்சுக்கீசியர்- டச்சுக்காரர்கள் - டேனியர்கள் - ஆங்கிலேயர் - பிரெஞ்சுக்காரர்கள் - ஆங்கிலோ - பிரஞ்சு போட்டி - ஆங்கிலோ மைசூர் போர்கள்.

பாட அமைப்பு
11.1. முன்னுரை
11.2. நோக்கங்கள்
11.3. போர்ச்சுக்கீசியர்

11.3.1. வர்த்தக விரிவாக்கம்
11.3.2. புனித தாமஸ்
11.4. டச்சுக்காரர்கள்
11.4.1. வர்த்தக வல்லுநர்கள்
11.5. டேனியர்கள்
11.5.1.கல்விப் பணி
11.5.2. சமுதாயப்பணி
11.6. ஆங்கிலேயர்கள்
11.7. பிரெஞ்சுக்காரர்கள்
11.8. ஆங்கிலோ- மைசூர் போர்கள்
11.8.1. முதல் மைசூர் போர், 1767-1769
11.8.2. போரின் போக்கு
11.8.2.1. கர்நாடகப் படையெடுப்பு
11.8.2.2. அமைதி உடன்படிக்கை
11.8.2.3. உடன்படிக்கை விதிகள்
11.8.2.4. தோல்விக்காரன காரணங்கள்
11.8.3. இரண்டாம் மைசூர் போர், 1780-1784
11.8.3.1. போரின் போக்கு
11.8.3.2. மங்களூர் உடன்படிக்கை
11.8.3.2.1. மங்களூர் உடன்படிக்கை விளைவுகள்
11.8.4. மூன்றாம் மைசூர் போர், 1790-1792
11.8.4.1. போரின் போக்கு
11.8.4.2. முதல் கட்டப் போர்
11.8.4.3. இரண்டாம் கட்டப் போர்
11.8.4.4. மூன்றாம் கட்டப் போர்
11.8.4.4.1. ஸ்ரீரங்கப்பட்டனம் உடன்படிக்கை
11.8.4.4.2. விளைவுகள்
11.8.5. நான்காம் மைசூர் போர், 1799
11.8.5.1.போரின் போக்கு
11.8.5.2. விளைவுகள்
11.9. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்
11.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
11.12. கூடுதல் வாசிப்புகள்

அலகு – 12

நவாபுகளின் நிர்வாகம்- கம்பெனிக்கு எதிராகக் கிளர்ச்சி- பாளையக்காரர் கிளர்ச்சி: வீரபாண்டிய கட்டபொம்மன்-தென்னிந்தியக் கிளர்ச்சி- கிளர்ச்சிக்கான காரணங்கள்- கிளர்ச்சியின் போக்கு- கிளர்ச்சியின் வீழ்ச்சி- வேலூர்க் கிளர்ச்சி

பாட அமைப்பு
12.1. முன்னுரை
12.2. நோக்கங்கள்
12.3. ஆர்க்காட்டு நவாபுகள்
12.4. நெவாயத்து நவாபுகள்
12.5. வாலாஜா நவாபுகள் (Wallajahs)

12.5.1. அன்வருதீன்கான்
12.5.2. முகமது அலி
12.6. நவாபுகளின் நிர்வாகம்
12.6.1. நவாபி அரசாங்கம்
12.6.2. நிதி நிர்வாகம்
12.7. கான்சாகிபு
12.8. கம்பெனிக்கு எதிராகக் கிளர்ச்சி
12.9.பாளையக்காரர் கிளர்ச்சி
12.9.1. வீரபாண்டிய கட்டபொம்மன்
12.9.1.1. பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர்
12.9.1.2. கட்டபொம்மனும் ஜாக்சனும்
12.9.2. ஊமைத்துரை
12.9.2.1. காளையார்கோவில் கிளர்ச்சி
12.9.3. வேலு நாச்சியார்
12.9.4. மாவீரன் தீரன் சின்ன மலை
12.9.5. சுவர்னகிரி வீரன் சுந்தரலிங்கம்
12.9.6. மாமன்னர் மருதுபாண்டியன்
12.10. தென்னிந்தியக் கிளர்ச்சி
12.10.1.கிளர்ச்சிக்கான காரணங்கள்
12.10.2. கிளர்ச்சியின் போக்கு
12.10.3. கிளர்ச்சியின் வீழ்ச்சி
12.10.3.1. வீழ்ச்சிக்கான காரணங்கள்
12.11. வேலூர்க் கிளர்ச்சி, 1806
12.11.1. கிளர்ச்சிக்கான காரணங்கள்
12.11.2. கிளர்ச்சியின் போக்கு
12.11.3. தோல்விக்கான காரணங்கள்
12.11.4. விளைவுகள்
12.12. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்
12.13. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
12.14. கூடுதல் வாசிப்புகள்

அலகு - 13

பிரிட்டிஷ் நிர்வாகம் - ஆங்கிலக் கல்வி அறிமுகம் - தமிழ் வளர்ச்சி - அரசியல் கட்சிகளின் எழுச்சி - நீதிக்கட்சியின் எழுச்சி மற்றும் தோல்வி - சுயமரியாதை இயக்கம்

பாட அமைப்பு
13.1. முன்னுரை
13.2. நோக்கங்கள்
13.3. ஆங்கிலேயர் நிர்வாகம்
13.3.1. மாநில நிர்வாகம்
13.3.2. மாவட்ட நிர்வாகம்
13.3.3. கிராம நிர்வாகம்
13.3.4. நீதி மன்ற நிர்வாகம்
13.3.5. காவல்துறை நிர்வாகம்

13.3.6. சிறைச்சாலை நிர்வாகம்

13.4. ஆங்கிலக் கல்வி அறிமுகம்

13.4.1. மெக்காலே தீர்வு

13.4.2. தாம்சான் திட்டம்

13.4.3. ஸ்டான்லியின் கல்விக் குறிப்பு

13.4.4. உட்டின் கல்வித் திட்டம், 1854

13.4.5. கல்விச் சீர்திருத்தம்

13.4.6. மன்றோவின் கல்விக் கொள்கை

13.5. தமிழ் வளர்ச்சி

13.6. அரசியல் கட்சிகளின் எழுச்சி

13.6.1. நீதிக்கட்சி

13.6.2. சுயராஜ்யக் கட்சி

13.6.3. ஆதிதிராவிடர் ஜனசபை

13.6.4. சென்னை பிராமணரல்லாதார் சங்கம்

13.6.5. சென்னை திராவிடர் சங்க

13.6.6. தேர்தல் திருப்புமுனை

13.7. நீதிக்கட்சியின் தோற்றம்

13.7.1. பிராமணரல்லாதார் பிரகடனம்

13.7.2. நீதிக்கட்சி ஆட்சி, 1920-1937

13.7.3. சட்டச் சாதனைகள்

13.7.4.ஆட்சியின் வீழ்ச்சி

13.7.5. நீதிக்கட்சியின் சாதனைகள்

13.8. சுயமரியாதை இயக்கம்

13.8.1. பெரியார் ஈ.வெ. இராமசாமி (1879-1973)

13.8.2. இயக்கத்தின் குறிக்கோள்கள்

13.8.3. சுயமரியாதை இயக்கத்தின் சாதனைகள்

13.9.உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

13.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

13.11. கூடுதல் வாசிப்புகள்

அலகு - 14

சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு - ஆரம்ப கட்டம் - வ.உ.சி. - சுப்ரமணிய பாரதி-வாஞ்சிநாதன்-சுப்ரமணிய சிவா-பிற்காலகட்டம்-இராஜாஜி-சத்தியமூர்த்தி-காமராஜ்

பாட அமைப்பு

14.1. முன்னுரை

14.2. நோக்கங்கள்

14.3. தமிழ்நாடும் துவக்க கால காங்கிரசும்

14.4. வாஞ்சிநாதன்

14.5. பாரதியார்

14.6. வ.உ.சிதம்பரம்

14.7. சுப்பிரமணிய சிவா

14.8. இராஜாஜி

14.8.1. நகர்மன்ற சாதனைகள்

14.8.2. விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்பு

14.8.3.சட்டச் சாதனைகள்

14.8.4. இந்தி எதிர்ப்புப் போராட்டம்

14.9. எஸ். சத்தியமூர்த்தி

14.10. கு.காமராசர்

14.11. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

14.12. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

14.13. கூடுதல் வாசிப்புகள்.

அலகு - 1

தமிழக வரலாற்று ஆய்வுக்கான ஆதாரங்கள்- சங்க காலம்

குறிப்பு

பாட அமைப்பு

1.1. முன்னுரை

1.2. நோக்கங்கள்

1.3. வரலாறு

1.3.1. தமிழ்நாட்டு வரலாறு

1.4. வரலாற்றுச் சான்றுகள்

1.4.1. இலக்கியச் சான்றுகள்

1.4.1.1. தொல்காப்பியம்

1.4.1.2. எட்டுத்தொகை

1.4.1.3. பதிற்றுப்பத்து

1.4.1.4. பத்துப்பாட்டு

1.4.1.5. பதினெண் கீழ்க்கணக்கு

1.4.1.6. காப்பியங்கள்

1.4.2. கல்வெட்டுச் சான்றுகள்

1.4.3. தொல்பொருள் சான்றுகள்

1.4.4. நாணயச் சான்றுகள்

1.5. சங்க காலம்

1.5.1. முச்சங்க மரபு

1.6. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

1.7. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

1.8.கூடுதல் வாசிப்புகள்

1.1. முன்னுரை

தமிழக வரலாற்றை அறிந்து கொள்ள பல வகையான ஆதாரங்கள் உள்ளன அவை என்ன என்ன என்பதை அறிந்து அறிவை விரிவு செய்ய இந்த அத்தியாயம் உதவுகிறது. மேலும் சங்ககாலத்தில் எழுதப்பட்ட இலக்கிய ஆதாரங்கள் மூலம் அக்காலம் பற்றி அறிந்துகொள்ள இந்த அத்தியாயம் உதவுகிறது.

குறிப்பு

1.2. நோக்கங்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர் கீழ் கண்டவற்றை அறிய முடியும்

- ஒரு வரலாற்றை எவ்வாறு கட்டமைப்பது என்பதை விவரிக்கிறது.
- தமிழக வரலாற்றை அறிய உதவும் ஆதாரங்களை பற்றி தெரிய உதவுகிறது.
- சங்ககாலத்தை பற்றி ஆய்வாளர்களின் நிலைப்பாடு என்ன என்பதை அறிய உதவுகிறது.

1.3. வரலாறு

வரலாறு (History) என்பது தனித்தன்மை வாய்ந்த, நினைவு கூறத்தக்க மனிதர்கள், மனித நிகழ்வுகள், இயக்கங்கள் பற்றியது. இது பதிவு செய்யப்பட்ட கடந்த காலமாகும். வரலாறு ஐயத்துக்கு இடமின்றி, ஒப்பிட்டு, சரிபார்த்து, உறுதி செய்யப்படத்தக்க ஆவண ஆதாரங்களின் அடிப்படையில் எழுதப்படுவதாகும். அதாவது, வரலாற்று ஆதாரங்களைக் கொண்டு கடந்த காலத்தை மறுஉருவாக்கி, வரையறுத்து, முழுமையான விளக்கம் அளிப்பது வரலாறு ஆகும். வரலாற்று வரைவியல் (Historiography) என்பது வரலாற்றாளர் எடுத்துக் கொள்ளும் தலைப்பு, ஆதாரங்களைக் கையாளும் பாங்கு, அணுகுமுறை, தீர்வுகாண விழையும் பிரச்சனைகள், விளக்கம், கருத்தியல், கோட்பாடு, பரப்பெல்லை, பயன்பாடு போன்றவை குறித்தது.

1.3.1. தமிழ்நாட்டு வரலாறு

தமிழ்நாட்டு வரலாறு தொன்மையானது பாரம்பரியமிக்கது தனித்தன்மை கொண்டது பாராட்டுக்குரியது. எனினும், முற்கால தமிழ்நாட்டு வரலாற்றை எழுதுவதில் பல சிக்கல்கள் உள்ளன. முதலாவதாக, கிடைக்கக்கூடிய வரலாற்று ஆதாரங்கள் மிகவும் குறைவு. இரண்டாவதாக, குறைவான ஆதாரங்களும் மிகைப்படுத்திக் கூறப் பட்டவையாக உள்ளன. மூன்றாவதாக, இலக்கிய ஆதாரங்கள் மட்டுமே பிரதானமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை உறுதிப்படுத்தும் சமகாலச் சான்றுகள் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1.4. வரலாற்றுச் சான்றுகள்

வரலாற்றுச் சான்றுகள் கடந்த கால நிகழ்வுகளுக்கான சாட்சியங்கள் அடிச்சுவடுகள் அடையாளங்கள் மூலப் பொருள்கள்.

குறிப்பு

"சமுதாயத்தில் தனித் தன்மையுடைய நடவடிக்கைகள் பற்றி மனிதன் விட்டுச் செல்லும் பதிவுகளே வரலாற்றுச் சான்றுகள்" என்று கூறுகிறார் நீலகண்ட சாஸ்திரி. இச்சான்றுகள் வரலாறு சார்ந்தவையாகவோ, சாராதனவையாகவோ இருக்கக்கூடும். வரலாற்றுச் சான்றுகளே நம்பகமானவை. சான்றுகளின் தன்மைக்கேற்ப இவற்றை தொல்பொருள் சார்ந்த அல்லது சாராத எழுத்துச் சான்றுகள் என்று பிரிக்கலாம். பொதுவாகச் சான்றுகளை 1) முதல் நிலைச் சான்றுகள் (Primary Sources) 2) இரண்டாம் நிலைச் சான்றுகள் (Secondary Resources) 3) மூன்றாம் நிலைச் சான்றுகள் (Tertiary Sources) என்று வகைப்படுத்தலாம். இத்தகைய வரலாற்றுச் சான்றுகளே தொல்பொருள், கல்வெட்டு, நாணய, இலக்கிய, அரசாங்க ஆவண, சுயசரிதைச் சான்றுகளாகும். வரலாற்று ஆதாரங்களைக் கொண்டே வரலாற்று உண்மைகள் (Historical Facts) உறுதி செய்யப்படுகின்றன.

1.4.1. இலக்கியச் சான்றுகள்

சங்க காலத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்குப் பயன்படும் வரலாற்று மூலங்களாவன: 1) இலக்கியச் சான்றுகள் 2) கல்வெட்டுகள், செப்பேடுகள் 3) தொல்பொருளியல் 4) காசியல் 5) மரபுச் செய்திகள். இவற்றுள் சங்க காலத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள இலக்கிய மூலங்களே பிரதான சான்றுகளாக உள்ளன. ஏனெனில் பிற சான்றுகள் அனைத்தும் மிகக் குறைவாகவே கிடைத்துள்ளன் பல கல்வெட்டுகள் தமிழ்நாட்டுக்கு வெளியே உள்ளவை இவை சங்க காலத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்குப் போதுமானவை அல்ல. இலக்கிய மூலங்கள் மட்டுமே சங்க காலத்தின் பல பரிமாணங்களையும் படம்பிடித்துக் காட்டுவனவாக உள்ளன. பிறச்சான்றுகள் இலக்கியத் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காகப் பயன்படக் கூடியவை.

தமிழ்நாட்டு வரலாற்றுச் சான்றுகளில் இலக்கியம் மட்டுமே வீச்சிலும், அளவிலும், பயனிலும் முதன்மையாக உள்ளது. தமிழல்லாத இலக்கிய மூலங்களைவிட தமிழ் இலக்கியமே "பெருமையிலும் பயன்பாட்டிலும் சிறந்தது".- சங்க இலக்கியத்தை 1) தொல்காப்பியம் 2) எட்டுத்தொகை 3) பதிற்றுப்பத்து 4) பத்துப்பாட்டு 5) பதினெண் கீழ்க்கணக்கு 6) சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்கள் எனப் பிரிக்கலாம். இவையாவும் ஒரு காலத்தைச் சேர்ந்தவை ஆகையால் இவற்றில் காணப்படும் தகவல்கள் வரலாற்று முக்கியத்துவமிக்கவை.

1.4.1.1. தொல்காப்பியம்

தொல்காப்பியம் தமிழ் இலக்கியத்தில் தொன்மையானதும், முதல் முக்கியத்துவம் வாய்ந்ததுமான நூலாகும். இது ஒரு இலக்கண நூல். இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களையும் உள்ளடக்கியது. ஒவ்வொரு அதிகாரத்துக்கும் 9 இயல்கள் என்ற முறையில் 27 இயல்களையும், 1602 நூற்பாக்களையும் கொண்டுள்ளது.

தொல்காப்பியத்துக்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், கல்லாடர், தெய்வச் சிலையார் ஆகியோர் உரை எழுதியுள்ளனர்.

குறிப்பு

தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்தில் 483 நூற்பாக்கள் உள்ளன. இவற்றில் எழுத்துக்களின் வகை, பெயர், மொழி முதல், இறுதி எழுத்துக்கள், எந்த எழுத்துக்குமுன் எந்த எழுத்து வரவேண்டும் போன்ற விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. 463 நூற்பாக்களைக் கொண்ட சொல்லதிகாரத்தில் சொற்களின் இலக்கணம் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. திணை, பால், எண், இடம் ஆகிய வகைகள் விளக்கப்பட்டுள்ளன. அதேபோன்று சொற்றொடர்களின் அமைப்பும், சொற்களின் பொருட்களும் இடத்துக்கேற்ப எவ்வாறு மாற்றமடைகின்றன என்பதும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. பொருளதிகாரத்தில் 656 நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் ஆகிய 9 இயல்கள் அமைந்துள்ளன. தொல்காப்பியம் தமிழ் இலக்கணத்தைப் பற்றிக் கூறுவதோடு தமிழர் வாழ்வியலைப் பற்றி விவரிப்பதும் குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியம் தமிழின் தனித்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

1.4.1.2. எட்டுத்தொகை

எட்டுத்தொகை பாட்டுத் தொகுப்பு நூல். இத்தொகைப் பாடல்கள் பல புலவர்களால் பல்வேறு காலங்களில் பாடப்பட்டவை. எட்டுத்தொகை நூல்களாவன: 1) நற்றினை சங்க காலத் தமிழர்களின் பழக்கவழக்கங்கள் பற்றிய வரலாற்று விவரங்கள் இதில் உள்ளன. 2) குறுந்தொகை அகப்பொருள் பற்றிய இந்நூலில் காதல், ஆண்பெண் உறவு, காதல் பிரிவு, பரத்தையர் நிலை போன்றவை பற்றிய தகவல்கள் உள்ளன. 3) ஐங்குறுநூறு திணைக்கு நூறு பாடல்கள் வீதம் ஐந்து திணைகளுக்கும் 500 பாடல்களைக் கொண்டது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணை மக்களைப் பற்றி அறிந்து கொள்ள உதவியாக உள்ளன. ஒன்றுபட்டால் உண்டு இன்பம், இனிக்கும் மனமெல்லாம் இனிக்கும் போன்ற வாழ்வியல் உண்மைகள் இவற்றில் புதைந்து கிடக்கின்றன. 4) அகநானூறு 400 பாடல்களைக் கொண்ட இந்நூலில் தமிழரின் திருமண முறை, சங்ககால மன்னர்கள், யவன நாட்டுடன் தமிழ்நாட்டுக்கு இருந்த தொடர்பு பற்றிய தகவல்கள் காணக்கிடக்கின்றன. 5) புறநானூறு சங்க காலத்தின் புறப்பொருள் பற்றி 400 பாடல்கள் உள்ளன. இவற்றில் அக்கால அரசியல் கருத்துக்கள், வாழ்க்கை நெறிமுறைகள், மரபுகள், போர் முறைகள் பற்றிய விவரங்கள் காணக்கிடக்கின்றன. சங்க காலத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கான அரிய வரலாற்று வளாகமாக விளங்குகிறது புறநானூறு. 6) பதிற்றுப்பத்து இதுவும் புறப்பொருள் பற்றியதாகும். சேர மன்னர்களை முறையாகப் பட்டியலிட்டுக் காட்டும் ஒரே சங்க நூல் பதிற்றுப்பத்தாகும். இதை ஓரளவுக்குக் காஷ்மீர் மன்னர்களைப் பற்றிக் கல்ஹணர் எழுதிய ராஜதரங்கிணியுடன் ஒப்பிட்டுக் கூறலாம். சேர

குறிப்பு

மன்னர்கள் தவிர வஞ்சி மாநகரின் சிறப்பும் இதில் விவரிக்கப் பட்டுள்ளது. 7) பரிபாடல் 70 பாடல்களைக் கொண்ட இத்தொகுப்பு நூலில் திருமால், முருகன், காளி, வையை, மதுரை பற்றிய விவரங்கள் உள்ளன. இறை வழிபாட்டுக்கு ஏற்ற வகையில் பாடல்கள் அமைந்துள்ளன. 8) கலித்தொகை இத்தொகை நூலில் ஐந்திணையோடு கைக்கிளை, பெருந்திணை, மடலேறுதல் பற்றியும் கூறப்படுகிறது. இதில் மகாபாரத நிகழ்வுகளும் இடம் பெற்றுள்ளன. பதிற்றுப்பத்து சேர மன்னர்களைப் பற்றி மட்டுமே கூறுவதைப் போன்று, கலித்தொகை பாண்டிய மன்னர்கள் பற்றி மட்டுமே குறிப்பிடுகின்றது. மேலும் மனதைக் குளிர்விக்கும் பல உவமைகள் கலித்தொகையில் சிதறிக்கிடக்கின்றன.

1.4.1.3. பதிற்றுப்பத்து

முதலாம் பத்திலிருந்து பத்தாம் பத்துவரை முறையே குமட்டூர்க் கண்ணனார், பாலைக் கௌதமனார், காப்பியாற்றுக் காப்பியனார், பரணர், காக்கைப் பாடினியார், நச்செள்ளையார், கபிலர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார் ஆகிய 10 புலவர்கள் பாடியுள்ளனர். (பத்தாம் பத்து பாடிய புலவர் பெயர் தெரியவில்லை). இப்பாடல்களுக்குரிய மன்னர்கள்: இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழுகுட்டுவன், களங்காய்க்கண்ணி, நார்முடிச்சேரல், கடல்பிறகோட்டிய செங்குட்டுவன், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், செல்வக்கடுங்கோ , வாழியாதன், தகடூர் எறிந்த பெருஞ்சேரல், இரும்பொறை ஆகியோர்.

1.4.1.4. பத்துப்பாட்டு

எட்டுத் தொகையும், பத்துப்பாட்டும் சேர்ந்து பதிணென் மேல்கணக்கு என்று அறியப்படுகிறது. பத்துப்பாட்டுக்கள் வருமாறு: 1) திருமுருகாற்றுப்படை. நக்கீரர் இயற்றிய இந்நூல் 317 அடிகளைக் கொண்டது. இது புலவராற்றுப்படை என்றும் அழைக்கப்படுகிறது. முருகனின் அறுபடை வீடுகளைப் பற்றி இந்நூல் விவரிக்கின்றது. 2) பெருநர் ஆற்றுப்படை. முடத்தாமக் கண்ணியார் என்ற பெண்பாற் புலவர் பாடிய இதில் பரிசில் பெற விழைந்த பொருநனை பொருள் பெறுவதற்காக கரிகால் பெருவளத்தானிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது. 3) சிறுபாணாற்றுப்படை. இந்நூலில் சேர, சோழ, பாண்டிய நாடுகளின் தலைநகர்களாகிய வஞ்சி, உறையூர், மதுரை ஆகிய நகர்களின் சிறப்புகள் ஆமூர், வேலூர், மாவிலங்கை, ஏழு வள்ளல்களின் கொடைத்திறம் விறலியரின் அழகு பாணனின் வறுமை போன்ற காட்சிகள் விவரிக்கப்பட்டுள்ளன. 4) பெரும்பாணாற்றுப் படை. இதில் தொண்டைமான் இளந்திரையனிடம் பாணன் ஆற்றுப்படுத்தப்படுவதாக அமைந்துள்ளது. பேரியாழ் கொண்ட பாணனைப் பாடியதால் பெரும்பாணாற்றுப்படை என்று அழைக்கப்படுகிறது. ஐந்து நிலங்களில் வாழ்ந்த மக்களின் இயல்பு வர்ணிக்கப் படுகிறது. மேலும் யாழின் இயல்பு, விருந்தோம்பல், போகுமிடங்களின் சிறப்பு, அங்கு

குறிப்பு

கிடைக்கும் பல்வேறு பொருட்கள் போன்றவற்றைப் பற்றி சுவையான தகவல்கள் உள்ளன. வீரக்குடி மக்களின் வீரம் உரைக்கப்படுகிறது. ஆடையின் மேன்மை சிறப்பிக்கப்படுகிறது. திருவெக்கா திருமாலின் பள்ளி கொண்ட தோற்றம் விளக்கப்பட்டுள்ளது. 5) முல்லைப் பாட்டு. காவிரிப்பூம்பட்டினத்து பொன் வணிகனார் நம்பூதனாரால் பாடப்பெற்ற இப்பாட்டில் முல்லைத் திணைக்குரிய முதற்பொருள், கருப்பொருள், உயிர்ப்பொருள் ஆகியவை அழகுற இணைத்துப் பாடப்பட்டுள்ளது. தலைவனைப் பிரிந்து வாழும் தலைவியின் நிலை சித்தரிக்கப்பட்டுள்ளது. திருமால் அவதாரம் உவமையால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கார்கால விலங்கின் நிலை வர்ணிக்கப்பட்டுள்ளது. 6) மதுரைக்காஞ்சி. மாங்குடி மருதனாரால் பாடப்பட்ட இதில் மதுரை மாநகரின் சிறப்பு விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மதுரைக் காஞ்சியின் பாட்டுடைத் தலைவன் நெடுஞ்செழியன். 7) நெடுநெல்வாடை. இதுவும் நக்கீரரால் பாடப்பட்டதாகும். பாட்டுடைத் தலைவன் நெடுஞ்செழியன் தலைவி பாண்டிமாதேவி பிரிவாற்றாமையால் வருந்துவது போன்றும், அவருக்கு நல்வார்த்தை கூறி அற்றுவிப்பது போன்றும் இப்பாடல் அமைந்துள்ளது. மேலும், கூதிர் காலத்தின் கொடுமை வர்ணிக்கப்படுகிறது. 8) குறிஞ்சிப் பாட்டு. கபிலரால் பாடப்பட்டதாகக் கருதப்படும் இப்பாடலில் குறிஞ்சி நிலப் பெருமை பேசப்படுகிறது. களவொழுக்கம் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. 9) பட்டினப்பாலை. கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் பாடப்பட்ட இப்பாலைப் பாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தின் வணிகச் சிறப்பு சித்தரிக்கப்பட்டுள்ளது. தலைவியின் பிரிவாற்றாமை பேசப்படுகிறது. கரிகாலனின் வீரம் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. 10) மலைபடுகடாம். இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனாரால் பாடப்பெற்ற இதில் மன்னன் செங்கண் மாத்துவேள் நன்னன்சேய் நன்னனின் வள்ளல் குணம் உயர்த்திக் கூறப்பட்டுள்ளது. அதேபோன்று நன்னின் காட்டு வளம் உவமைகளோடு விவரிக்கப்பட்டுள்ளது.

1.4.1.5. பதினெண் கீழ்க்கணக்கு

திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஏலாதி, ஆசாரக்கோவை, முதுமொழிக் காஞ்சி, பழமொழி, சிறுபஞ்சமூலம், ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, கார் நாற்பது, களவழி நாற்பது ஆகிய 18 நூல்களும் பதினெண் கீழ்க்கணக்காகும்.

1.4.1.6. காப்பியங்கள்

சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்களாகும். சிலப்பதிகாரம் முப்பெரும் அரசுகளையும்-சேர, சோழ, பாண்டியர்-முப்பெரும் நகரங்களையும்-வஞ்சி, புகார், மதுரை-முப்பெரும்

குறிப்பு

ஆறுகளையும்-பேரியாறு, காவிரி, வைகை-முப்பெரும் உண்மைகளையும்-வைதிகம், பௌத்தம், சமணம்-விளக்குவதால் சிலப்பதிகாரம் முத்தமிழ் காப்பியம் என்று அழைக்கப்படுகிறது. இக்காப்பியத்தின் மூலம் தமிழ் நாட்டில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமுதாய மாற்றங்களைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிகிறது.

மணிமேகலை

சிலப்பதிகாரத்தைப் போன்றே மணிமேகலையும் தமிழ்நாட்டை களமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியே இக்காப்பியமாகும். பெண்ணின் பெயரில் அமைந்த இக்காப்பியம் பௌத்த நூல் என்று கருதப்படுகிறது. புகார், காஞ்சி, வஞ்சி, சாவகம், சுவர்ண தீவம், மணி பல்லவம் பற்றிய தகவல்கள் பல உள்ளன. மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, வீடு பற்றிப் பேசுகிறது. மது, பொய், பரத்தமை, கொலை, களவு ஆகியவற்றை அடியோடு ஒழிக்க வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றது. இரட்டைக் காப்பியங்களும் தமிழ்நாடு முழுவதற்கும் பொதுவான ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் மலையைக் கண்ணாடியில் காட்டுவது போல்“ படம் பிடித்துக் காட்டுகின்றன.

1.4.2. கல்வெட்டுச் சான்றுகள்

பொதுவாகப் பண்டைய வரலாற்றை எழுதுவதற்குக் கல்வெட்டுகள் நம்பத்தக்க சான்றுகள் என்று கருதப்படுகிறது. எழுத்துப் பொறிகள் நிலையானவை, சிறப்பானவை, சரிபார்த்து அறியக்கூடியவை.

1) இத்தகைய கல்வெட்டுகள் தமிழ் மாவட்டங்களில் சில பாறைப் படுகைகளில், குகைகளில் காணப்படுகின்றன. இவை இறந்தோரின் பெயர்களையோ, ஆக்கியோரின் பெயர்களையோ குறிப்பிடுபவனாக உள்ளன.“ இவ்வெழுத்துப் பொறிகள் பிராமி எழுத்தில் தமிழ் மொழியில் அமைந்தவை. 2) அசோகர் காலத்துக் கல்வெட்டுகள். அசோகரது பாறைக் கட்டளைக் கல்வெட்டு ஒன்று அவரது பேரரசின் தென் எல்லைக்கு அப்பாற்பட்ட சோழர், பாண்டியர், சேரர் சுதந்திர நாடுகள் பற்றிப் பதிவு செய்துள்ளது. “தெற்கிலுள்ள இம்மூன்று அரசுகள் பற்றியும் முதன் முதல் கல்வெட்டுகளில் குறிப்பிட்டிருக்கக் காண்பது அசோகரது கல்வெட்டுகளே ஆகும்”. 3) காரவேலரின் ஹரிகும்பா கல்வெட்டு வரலாற்று முக்கியத்துவமுடையது. இக்கல்வெட்டு கலிங்கத்தை எதிர்த்த தமிழ்நாட்டு அரசுகளின் கூட்டமைப்பு பற்றிக் குறிப்பிடுகின்றது. இக்கூட்டமைப்பு “கலிங்க மன்னரின் மன அமைதியைக் கெடுத்து, தமிழ் அரசுகளின் நெடுநோக்கை வெளிப்படுத்தி பொதுப்பகையை எதிர்க்க ஒன்று திரண்டு பிற்காலத்தில் பல நூற்றாண்டுகளுக்குத் தமிழகம் அரசியல் சுதந்திரத்தோடு வாழ்ந்தமையை விளக்குகின்றது”. 4) வேள்விக்குடி சாசனம். இச்சாசனத்தை பராந்தக நெடுஞ்சடையன் (கி.பி.765-815) அளித்தார். இதில் சங்க காலப் பண்டைய மன்னரான

குறிப்பு

பல்யாகசாலை முதுகுடுமிப் பெழுவழுதி சில பிராமணர்களுக்கு ஒரு கிராமத்தைத் தானமாக வழங்கியதாகவும், அந்த கிராமத்தை மீண்டும் பிராமணர்களின் வழிவந்தோருக்கே வழங்கிவிட்டதாகவும் கூறுகிறது. 5) திருக்கோவிலூர் கல்வெட்டு. இக்கல்வெட்டு சங்கப் புலவரான கபிலர் பாரியின் பெண்களைக் கோவலூர் மன்னரான மலையமானுக்கு மணமுடித்தபின் உயிர் நீத்தத் தகவலைப் பதிவு செய்துள்ளது. 6) சின்னமனூர்ச் செப்பேடுகள் தலையாலங்கானத்துப் பாண்டியன் நெடுஞ்செழியன் பற்றிக் குறிப்பிட்டது. இக்கல்வெட்டுகளும், செப்பேடும் இலக்கியச் சான்றுகளுக்கு வலிமை சேர்க்க வல்லவை.

1.4.3. தொல்பொருள் சான்றுகள்

பாண்டிச்சேரிக்கு அருகில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருளியல் சான்றுகள் தமிழ் நாட்டுக்கும் ரோமானியப் பேரரசுக்குமிடையே இருந்த வாணிபத் தொடர்பை உறுதி செய்கின்றன. இங்கு கிடைக்கப்பெற்ற வாணிபக் கேந்திரம் ரோமானியர் இங்கு தந்தியிருந்ததைக் காட்டுவதாக உள்ளது. இக்கண்டுபிடிப்புகளின் வரலாற்றுச் சிறப்புகள் இரண்டு: 1) சங்க இலக்கிய காலத்தை நிர்ணயிக்க உதவுகின்றன் 2) இவ்விலக்கியத்தில் காணப்படும் நிகழ்வுகளைக் காலவரன்முறைப்படுத்தப் பயன்படுகின்றன.

1.4.4. நாணயச் சான்றுகள்

நாணயச் (காசியல்) சான்றுகள் மன்னர்களின் ஆட்சிக் காலம் பற்றிய தகவல்களைக் கொடுக்கக்கூடியவை. சங்க காலத் தமிழ்நாட்டைப் பற்றி அறிந்து கொள்வதற்காக மிகச் சில தாமிரக் காசுகளும், சதுர செப்புக் காசுகளும் கிடைத்துள்ளன. ஆனால் இவை உருக்குலைந்த நிலையில் உள்ளன. இக்காசுகளில் காணப்படும் உருவங்கள் மிகவும் மங்கிப் போய் உள்ளன. தெளிவின்றி காணப்படுகின்றன. எனவே, இன்றைய நிலையில் நாணயச் சான்றுகள் சங்க காலத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்குப் பயன்படக்கூடிய நிலையில் இல்லை.

மேலே குறிப்பிட்ட சான்றுகளை வைத்து நாம் தமிழக வரலாற்றை அறிந்துகொள்ள முடிகிறது.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. சான்றுகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
2. எதை பற்றி தொல்காப்பியம் விவரிக்கிறது?
3. மதுரைக்காஞ்சி யாரால் பாடப்பட்டது?

1.5. சங்க காலம்

குறிப்பு

சங்கம்

சங்கம் என்பது சமஸ்கிருதச் சொல். இச்சொல்லுக்குச் கூடல் அல்லது மன்றம் என்று பொருள். சங்க இலக்கியத்தில் சங்கம் என்ற சொல்லாட்சியில்லை. கி.பி.இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் பயன்படுத்தப்படும் சங்கம் என்ற சொல் புத்த சங்கத்தைக் குறிப்பதாகவே உள்ளது.“ சங்க இலக்கியத்தில் புலனாவுழவர், சூழ்புளனூர் கூடலார் போன்ற சொற்களே பயன்படுத்தப் பட்டுள்ளன. தமிழ்நாட்டில் பௌத்த-சமணத் துறவிகள் சங்கம் அமைத்துப் பிரச்சாரம் செய்தமையால் சங்கம் என்ற சொல்லைப் பின்னர் வந்த உரையாசிரியர்கள் கடன் வாங்கிக் கையாண்டனர்! அதன் பின்னர் சங்கம் என்ற சொல் புலவர்களிடையேயும், அவர்கள் மூலம் மக்களிடையேயும் மிகுந்த செல்வாக்கைப் பெற்றது!

புலவர் பேரவை கி.பி.7 ஆம் நூற்றாண்டு வரை தமிழ் இலக்கியத்தில் புலவர் பேரவையைக் குறிப்பதற்காக சங்கம் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. இந்நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் அப்பர் என்ற திருநாவுக்கரசர்தான் முதன் முதலில் சங்கம் என்ற சொல்லைக் குறிப்பிட்டார். அதன்பின் கி.பி.எட்டாம் நூற்றாண்டில் இறையனார் அகப்பொருளுக்கு உரை எழுதிய நக்கீரர் புராணக் கதைக்கு வரலாற்று வடிவம் கொடுத்தார்.

1.5.1. முச்சங்க மரபு

பண்டைத் தமிழ்நாட்டில் தென் மதுரை, கபாடபுரம், உத்தரமதுரை ஆகிய இடங்களில் முறையே முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் அமைந்திருந்தன. முதற்சங்கம் தென்மதுரையில் 4440 ஆண்டுகள் இயங்கியது. இச்சங்கத்துக்குப் பாண்டிய மன்னர்கள் தலைமை தாங்கினர். இதில் சிவபெருமான், முருகப்பெருமான், அகத்தியர் உட்பட 549 புலவர்கள் பங்கேற்றனர். இச்சங்கத்துக்கு 89 பாண்டிய மன்னர்கள் புரவலர்களாக இருந்தனர். அகத்தியரின் அகத்தியம் இச்சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

கபாடபுரத்தில் கூடிய இடைச்சங்கத்தில் 3700 புலவர்கள் பங்கேற்றுத் தமிழ் ஆய்வில் ஈடுபட்டனர். தொல்காப்பியரும் அகத்தியரோடு இவ்வவையில் வீற்றிருந்தார். 59 பாண்டிய மன்னர்கள் இடைச்சங்கத்துக்குப் புரவலர்களாக இருந்தனர்.

தற்போதைய மதுரையில் கூடிய கடைச்சங்கம் 1850 ஆண்டுகள் நிலைப்பெற்றது. இதில் 449 புலவர்கள் தமிழாய்வு செய்தனர். இச்சங்கத்தில்தான் அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, பரிபாடல் போன்ற இலக்கியங்களும், இசை நூல்களும் தோன்றின. 49 பாண்டிய மன்னர்கள் கடைச்சங்கத்துக்குத் தலைமையேற்று, பொருளுதவி

குறிப்பு

செய்து, புலவர்களை ஊக்குவித்தனர். முச்சங்க மரபு பண்டைக்கால தமிழ்நாட்டில் புலவர்களும் புலவர் அவையும் இருந்ததைக் குறிப்பிடுவதற்காகப் புனையப்பட்ட கற்பனைப் படைப்புகளாகும். இம்மரபுக்கு ஊற்றுக்கண் நக்கீரர் எழுதிய இறையனார் அகப்பொருள் உரையாகும்.

இந்த இலக்கிய மரபைப் பின்பற்றி கி.பி.10ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சின்னமனூர்ச் செப்பேட்டிலும் தமிழ் நாட்டில் சங்கம் இருந்ததாகப் பதிவு செய்யப் பட்டுள்ளது. இவையாவும் மரபேயன்றி வரலாறு அல்ல. எனினும், இம்மரபால் மதுரையில் புலவர் அவை இருந்து தமிழ் வளர்த்தது என்பதை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

சங்க காலத்தைக் கணிக்க ஆய்வாளர்கள் மேற்கொண்ட முயற்சிகள் இக்காலத்தின் தொடக்கம் மற்றும் முடிவு பற்றி உச்ச உயர்நிலை ஊகங்களைத் தொட்டன. அது கி.மு.10,000லிருந்து கி.பி.400 வரை செல்கின்றன! இலக்கிய வானியல் குறிப்புகளைக் கொண்டு கணக்கிட்ட ஒரு ஆய்வாளர் கி.பி.8ம், 9ம், 10ம் நூற்றாண்டுகளைத் தமிழக வரலாற்றில் சங்ககாலம் எனக் கொள்ள வேண்டும் என்ற கொள்கையை வகுத்தார். பலர் கி.மு.500 முதல் கி.பி.500 வரையிலான காலத்தைச் சங்க காலம் என்று ஏற்றுக் கொண்டுள்ளனர்.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

4. சங்கம் என்பது ..... சொல்.

5. முதற்சங்கம் எங்கு கூடியது?

6. எத்தனை பாண்டிய மன்னர்கள் இடைச்சங்கத்துக்குப் புரவலர்களாக இருந்தனர்?

1.6. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

1. முதல் நிலைச் சான்றுகள், மற்றும் இரண்டாம் நிலைச் சான்றுகள் என்று வகைப்படுத்தலாம்.

2. தொல்காப்பியம் தமிழ் இலக்கணத்தைப் பற்றிக் கூறுவதோடு தமிழர் வாழ்வியலைப் பற்றி விவரிக்கிறது.

3. மாங்குடி மருதனாரால் பாடப்பட்டது.

4. சமஸ்கிருதம்.

5. தென்மதுரையில்.

6. 59 பாண்டிய மன்னர்கள்.

1.7. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

குறிப்பு

குறுகிய வினாக்கள்

1. வரலாறு என்றால் என்ன?
2. வரலாற்றுச் சான்றுகள் யாவை?
3. எட்டுத்தொகை நூல்கள் யாவை?

விரிவான வினாக்கள்

1. இரட்டை காப்பியங்கள் பற்றி விவரி.
2. முச்சங்கம் பற்றி விவாதி.

1.8.கூடுதல் வாசிப்புகள்

Subramania N. History of Tamil Nadu

சுப்பிரமணியன் ந. சங்ககால வாழ்வியல்

Rajayyan K. History of Tamil Nadu

பிள்ளை கே.கே. தென்னிந்திய வரலாறு

Nilakanda Sastri K.N. A History of South India

Sathianathair R. History of India

வெங்கடேசன் க. முற்கால தமிழ்நாட்டு வரலாறு

அலகு - 2

சங்ககால சமூக மற்றும் பொருளாதார நிலை- சமயம்

பாட அமைப்பு

2.1. முன்னுரை

2.2. நோக்கங்கள்

2.3. முன் தேவைகள்

2.3.1. நாகரிகம், பண்பாடு

2.4. பொருளாதார நிலை

குறிப்பு

2.4.1.விவசாயம்

2.4.1.1. விவசாயத் தொழில்

2.4.1.2. நிலத்திற்கேற்ற தொழில்கள்

2.4.1.3. நெசவுத் தொழில்

2.4.1.4. பிற தொழில்கள்

2.5. உள்நாட்டு வாணிகம் வர்த்தகம்

2.5.1. வர்த்தக விரிவாக்கம்

2.5.2. வெளிநாட்டு வர்த்தகத் தொடர்பு

2.6. துறைமுகங்கள்

2.6.1. ஏற்றுமதி, இறக்குமதி

2.6.2. வெளிநாட்டினர் வருகை

2.6.3. தமிழ்நாடும் ரோமப் பேரரசும்

2.6.4. வரவும் செலவும்

2.7. சங்ககால சமுதாயம்

2.7.1.திணை மக்கள் வாழ்க்கை

2.7.1.1. குறிஞ்சி மக்கள் வாழ்க்கை

2.7.1.2. முல்லை மக்கள் வாழ்க்கை

2.7.1.3. மருத மக்கள் வாழ்க்கை

2.7.1.4. நெய்தல் மக்கள் வாழ்க்கை

2.7.1.5. பாலை மக்கள் வாழ்க்கை

2.7.2. சமநிலைச் சமுதாயம்

2.8. குடும்ப வாழ்க்கை

2.8.1. மண வாழ்க்கை

2.8.2. மணமுறை

2.9.மகளிர் நிலை

2.9.1. அழகு மகளிர்

2.9.2. பரத்தையர்

2.10. விழாக்கள்

2.11. உடை அலங்காரம்

2.12. சங்ககால சாதிமுறை

2.13. சங்ககால சமயம்

2.13.1. வைதீக சமயம்

2.13.2. புத்த சமயம்

குறிப்பு

2.13.3. சமண சமயம்

2.13.3.1. சமணர்களின் இலக்கியப்பணி

2.13.4. இருசமயங்களின் தாக்கம்

2.14. சங்க காலத்தின் வீழ்ச்சி

2.15. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

2.16. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

2.17. கூடுதல் வாசிப்புகள்

2.1. முன்னுரை

சங்ககாலத் தமிழரின் வாழ்க்கை பரிணாம வளர்ச்சியின் விளைவாகும். லெமூரியா கண்டத்தில் தோன்றியதாகக் கருதப்படும் தமிழரின் மூதாதையர் புவியியல் மாற்றங்களை எதிர்கொண்டு பூகோள நெருக்கடிகளை வெற்றி கண்டு கற்கால, உலோக காலங்களைக் கடந்து வந்து நாகரிக நிலையை அடைந்தனர். இப்பரிணாம வளர்ச்சி மானிடவியல் விளக்கத்திற்குப் பொருந்தி வருவதைப் புவியியல் மற்றும் மானிடவியல் ஆய்வாளர்கள் தக்க ஆதாரங்களுடன் கோடிட்டுக் காட்டியுள்ளனர். அதாவது தமிழ்நாட்டு மக்கள் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட காலத்திலிருந்து வரலாற்றுக் காலத்துக்கு வந்தது இயல்பான மாற்றமாகும். வேட்டையாடுதல், உணவு சேகரித்தல், காடுகளைத் திருத்தி கழனிகளாக்கல், கால்நடை வளர்த்தல், பயிர்த்தொழில் செய்தல் ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. இம்மாற்றங்களைக் கூர்ந்து கவனித்த சங்ககாலப் புலவர் பெருமக்கள் இவற்றைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று பாகுபடுத்திக் காட்டினர். இந்த ஐந்து திணைகளும் சங்ககால நாகரிகத்தின் துவக்கத் தொட்டில்கள். மேலும், சமூக மற்றும் பொருளாதார நிலைமைகள் மற்றும் சமயம் பற்றி அறிய இந்த அத்தியாயம் உதவுகிறது.

2.2. நோக்கங்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர் கீழ் கண்டவற்றை அறிய முடியும்

- சங்க கால மக்களின் வாழ்க்கை நிலை பற்றி அறிய உதவுகிறது.
- சங்க கால மக்களின் பொருளாதார நிலை குறித்து விவரிக்கிறது.
- சங்ககால சமுதாய நிலை பற்றி அறிய உதவுகிறது.

• சங்ககால சமயங்கள் மற்றும் அதன் வேறுபாடுகள் பற்றி விவாதிக்கிறது

குறிப்பு

2.3. முன் தேவைகள்

ஒரு இன மக்கள் நாகரிக நிலையை அடைவதற்கு 6 முன் தேவைகள் இன்றியமையாதவை: 1) அரசியல் அமைப்பு 2) பொருளாதாரப் பாதுகாப்பு 3) சமுதாய கட்டுக்கோப்பு 4) சமய நம்பிக்கை 5) கல்வி அறிவு 6) கவின் கலைகள். இவையே மக்களின் நாகரிக மற்றும் பண்பாட்டு நிலையைக் கண்டறிவதற்கான அளவுகோல்களாகும். இந்த அளவுகோல்களைக் கொண்டே சங்ககால வாழ்வியலைப் புரிந்து கொள்ள வேண்டும் மதிப்பீடு செய்ய வேண்டும். மேற்கண்ட ஆறு முன் தேவைகளில் சமநிலை நிலவும் போது நாகரிகமும், பண்பாடும் ஆரோக்கியமாக இருக்கும். இவற்றின் சமநிலை கெடும்போது நாகரிகமும், பண்பாடும் சீர்கெட்டுச் சீரழிந்து போகும்.

2.3.1. நாகரிகம், பண்பாடு

நாகரிகமும், பண்பாடும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை பிரிக்க முடியாதவை. நாகரிகம் மக்களின் புற வளர்ச்சியின் வெளிப்பாடு. பண்பாடு அக வளர்ச்சியின் உள்ளீடு. அக வளர்ச்சியின் பிரதிபலிப்பே புற வளர்ச்சியாகும். கட்டடம், போக்குவரத்து, தகவல் தொடர்பு போன்ற நாகரிக வெளிப்பாடுகள் நாட்டுக்கு நாடு வேறுபடக்கூடும். ஆனால் வாய்மை, தூய்மை, நேர்மை, கண்ணோட்டம், கண்ணியம், அன்பு, காதல், கற்பு போன்ற பண்புகள் மனித குலத்துக்குப் பொதுவானவை. இத்தகைய பண்புகளில் சிலவோ, பலவோ குறிப்பிட்ட மக்களிடம் குறைந்தோ, நிறைந்தோ காணப்படும். பொதுவாக, ஒரு இனத்தின் பண்பாடு அதன் மொழி மற்றும் இலக்கியத்தின் மூலம் வெளிப்படும். இதுவே மக்களின் வாழ்வியலாகும்.

2.4. பொருளாதார நிலை

சங்ககாலத் தமிழர்கள் தங்களது வளத்துக்கும், நலத்துக்கும் பொருளையே ஆதாரமாகக் கருதினர். அவர்களது வாழ்க்கையே பொருள்மய வாழ்க்கை (ஆயவநசயைடளைவஅை டுகைந) ஆகும். அவர்களுடைய நோக்கும் போக்கும் பொருள் வயப்பட்டதாகும். பொருள் சேர்ப்பதற்காக சங்கத் தமிழர்கள் கால்வழிப் பிரிந்தனர் கடல்வழிப் பிரிந்தனர். உழவும், தொழிலும் சங்கப் பொருளாதார நாணயத்தின் இரு பக்கங்களாகவும், சமுதாயத்தின் இரு கண்களாகவும் இருந்தன. அக்காலப் பொருளாதாரம் தன்னிறைவுப் பொருளாதாரமாகும். தங்களது தேவைக்கேற்ப உணவுப் பொருளை விளைவித்துக் கொண்டு உபரியான பொருளைப் பண்டமாற்று (டீயசவநச) செய்து கொண்டனர் பின்னர் நகரங்கள் தோன்றி பொருளாதாரம் வளர்ச்சியடைந்த பின்னர் உபரிப்

பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர். சுருங்கக் கூறின், சங்கத் தமிழர்கள் பொருளாதாரத்தின் ஆதாரப் பொருளை நன்கு புரிந்து கொண்டிருந்தனர்.

குறிப்பு

2.4.1.விவசாயம்

2.4.1.1. விவசாயத் தொழில்

வாழ்க்கையின் முதல் தேவை உணவே. உணவை உற்பத்தி செய்வதற்கான உழவைத் தொழிலாகக் கருதினர் சங்கத் தமிழர்கள். உழுவர் உலகத்தாருக்கே ஆணியாகப் போற்றப்பட்டார். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நில மக்கள் அவரவர் தேவைக்கேற்ப உணவை உற்பத்தி செய்து கொண்டனர். குறிப்பாக, மருத நில மக்கள் உழவையே வாழ்க்கையின் ஆதாரத் தொழிலாகக் கருதினர். ஆண்கள் உழவர். பெண்கள் உழத்தியர். உழவுத் தொழிலாளர்கள் உழுவோர் எனப்பட்டனர். காவிரியும், பருவ மழையும் அவர்களது தோன்றாத் துணைகள் உடலும் தோலும் போன்றவை. மருத நில மக்களுக்கு அரிசியே முக்கிய உணவு (Staple Food) ஆகையால் நெல் பிரதானமாகப் பயிரிடப்பட்டது. அதோடு, வரகு, வாழை, கரும்பு, பருத்தி போன்ற பயிர்களும் விளைவிக்கப்பட்டன. மருத மக்கள் உருவாக்கிய கழைக்கரும்பு என்ற கலப்புக் கரும்புவகை (Hybrid Cane) அவர்களது புத்தாக்கத் திறமைக்கான எடுத்துக்காட்டாகும். கரும்பு, பருத்தி போன்ற பணப் பயிர்கள் மிகுதியாகப் பயிரிடப்பட்டு பண்ட மாற்றுக்கும், வாணிபத்துக்கும் பயன்படுத்தப்பட்டன.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு நிலப்பகுதிகளில் மருதநிலப் பகுதி மட்டுமே விவசாயத்தால் உயர்ந்தது. இந்நில மக்கள்தான் நன்செய் பயிரிடும் முறையைக் கண்டுபிடித்து செம்மைப்படுத்தினர். காவிரி நீரைப் பயன்படுத்தியதோடன்றி அணைகள் கட்டி, கால்வாய்கள் வெட்டி, குளங்களமைத்து, மடைகள் கட்டி, நீர்ப்பாசனத்தை நெறிப்படுத்தி, விவசாயத்தை வளப்படுத்தி விளைச்சலைப் பெருக்கினர். வேளாண்மைக்கேற்ப ஆடு, மாடுகளைப் பழக்கினர். உழவுத் தொழிலுக்கு வேண்டிய கருவிகளைக் கண்டுபிடித்தனர். ஏற்றங்களுக்கு ஏற்ற தோல்பைகள் செய்தனர். பருத்தியைக் கொண்டு ஆடை நெய்யக் கற்றுக் கொண்டனர். இவற்றின் விளைவாக விளைச்சல் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகிற்று. அபரிமிதமாக விளைந்த நெல்லைப் பாதுகாக்கக் கட்டிடங்கள் எழுப்பினர். வளமான வாழ்க்கை மக்களுக்கு ஓய்வு நேரம் கிடைக்கச் செய்தது. இவ்வோய்வு இலக்கியமும், கலைகளும் தோன்றிச் சிறக்க வழிவகுத்தது. இவ்வேலைகளையெல்லாம் பார்க்கும் பொருட்டு மருத நில மக்கள் தனித்தனிப் பிரிவுகளாகப் பிரிந்தனர். இவற்றின் விளைவாக உழவர்கள் ஒரு பிரிவாகவும், நிலச் சொந்தக்காரர்கள் மறு பிரிவாகவும் பிரிந்தனர். மருத நிலத்தில் புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டது. உழவர்கள் உழைத்துப் பிழைத்தனர். நிலச் சொந்தக்காரர்கள் உழவர்கள்

குறிப்பு

உழைப்பில் வாழ்ந்தனர். நிலத்தை உழுது உற்பத்தி செய்தோர்க்கு நிலம் சொந்தமில்லாத நிலை ஏற்பட்டது. பருவ மழை பொய்த்த போதும், பஞ்சம் ஏற்பட்ட போதும் பாதிக்கப்பட்டோர் உழவர்களே. நிலக்கிழார் நிலத்தைப் பார்க்காமலே வீட்டில் இருந்து கொண்டே வாழ்க்கையை அனுபவித்தனர். இந்த விவசாயப் பொருளாதார வளமும், வலிமையும் சோழர்கள் சிறப்புற காரணமாக இருந்தன. சோழ மன்னர் மருத நிலத்தை சோழ நாடாக மாற்றினர்.

2.4.1.2. நிலத்திற்கேற்ற தொழில்கள்

சங்ககால மக்கள் வாழ்ந்த இடங்களுக்கேற்ப தொழில்கள் வேறுபட்டன. குறிஞ்சி நிலத்தோருக்கு வேட்டையாடுதலும், தேனெடுத்தலும், கிழங்கு தோண்டுதலும் பிரதான தொழில்களாக இருந்தன. முல்லை மக்கள் மாடு மேய்த்தலையும், மருத மக்கள் உழவையும், நெய்தல் நிலத்தவர் உழவையும், பாலை மக்கள் போரிடுவதையும் தொழில்களாகக் கொண்டிருந்தனர்.

2.4.1.3. நெசவுத் தொழில்

உழவுக்கு அடுத்தபடியாக நெசவுத் தொழில் முக்கிய இடத்தில் இருந்தது. உணவுக்கு அடுத்தது உடைதானே. பெண்கள் நூற்க, ஆண்கள் நெய்தனர். உழவைப் போன்றே நெசவும் இருபாலர் தொழிலாகத் திகழ்ந்தது. பூவேலைமிக்க துணிகள் தயாரிக்கப்பட்டன. நெசவுத் தொழிலுக்கு நெருக்கமான சாயத் தொழில் சிறப்பிடம் பெற்றது. பருத்தி, பட்டு, கம்பளி நூல்கள் சாயமேற்றப்பட்டு நெய்யப்பட்டன.

2.4.1.4. பிற தொழில்கள்

நெசவுத் தொழில் மட்டுமன்றி வெல்லக்கட்டி வடித்தல், தச்சு வேலை, வீடு கட்டுதல், சங்கறுத்தல், முத்துக் குளித்தல், ஓலை எடுத்தல், கட்டுமரம் கட்டுதல், கயிறு தயாரித்தல், மண்பாண்டம் வனைதல், உலோகப் பாத்திரங்கள் உருவாக்குதல், தங்க நகை செய்தல், தந்த வேலை, வளையல்கள் வடித்தல், போர்ப் படைக்கலங்கள் படைத்தல், கள் இறக்கல் போன்ற பல்வேறு தொழில்கள் மேற்கொள்ளப்பட்டன. நகரங்கள் பெருகப் பெருக தொழில்களும் பெருகலாயின.

2.5. உள்நாட்டு வாணிகம் வர்த்தகம்

சங்க காலத் தமிழர்கள் தொழில் திறன் மிக்கவர்கள் சுறுசுறுப்பானவர்கள் புத்தமைப்புகளைப் படைப்பவர்கள் படகையும் கட்டிக் கொண்டு கடலையும் கடக்கக் கூடிய வல்லமை பெற்றவர்கள். அவர்கள் பொருட்களை உற்பத்தி செய்து தங்களுக்குத் தேவையானவைபோக உபரியாக உள்ளவற்றை உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் விற்பனை செய்தனர். பண்டமாற்று உள்நாட்டு வர்த்தகம்

குறிப்பு

பெரும்பாலும் பண்டமாற்றாகவே இருந்தது. குறிஞ்சி, முல்லை, நெய்தல் நில மக்கள் தங்களுக்குள் பண்டமாற்று செய்து கொண்டனர். எடுத்துக்காட்டாக, முல்லை இடையர்கள் மருத உழவர்களிடம் பால், வெண்ணெய், நெய்யைக் கொடுத்து அதற்குப் பதில் நெல், வரகு, துணி ஆகியவற்றைப் பெற்றுச் சென்றனர். அதேபோன்று, மருத மக்கள் நெய்தல் மக்களிடமிருந்து நெல்லைக் கொடுத்து மீனை வாங்கிச் சென்றனர். பரஸ்பர பண்டமாற்று துவக்ககால சங்கத் தமிழரின் உள்நாட்டு வர்த்தகத்தின் உயிர்நாடியாக இருந்தது.

2.5.1. வர்த்தக விரிவாக்கம்

காலப்போக்கில் சங்க காலத்தின் பிற்பகுதியில் நகரங்கள் தோன்றியமையால் உள்நாட்டு வர்த்தகம் வியத்தகு வகையில் விரிவடைந்தது. பூம்புகார், மதுரை, காஞ்சி போன்ற நகரங்களில் சந்தைகளும், அங்காடிகளும் பிரபலமடைந்தன. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் உள்நாட்டிலேயே விற்கப்பட்டதோடு பிற மாநிலங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டன. கூடைக்காரர்கள் மூட்டைகளைச் சுமந்து சென்று அங்காடிகளிலும், நுகர்வோர் வாழும் இடங்களிலும் விற்றனர். மதுரையில் விற்கப்பட்ட பொருட்களை மொத்தமாக வாங்கிச் சென்றனர். அதேபோன்று பூம்புகார் அங்காடிகளில் சந்தனக் குழம்பும், பல்வகைப் பூக்களும், குறிப்பாக விழாக்காலங்களில் மிகுதியாக விற்பனையாயின. வியாபாரிகளிடம் நேர்மை, நாணயம், நம்பகத்தன்மை காணப்பட்டன. வர்த்தகம் விரிவடைந்த போது இவ்வியாபாரப் பண்புகள் குறையலாயின. அதனால்தான் வியாபாரிகள் பிறர் பொருளையும் தம் பொருள்போல் போற்றிச் செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டனர். இருப்பினும் நினைப்புக்கும் நடைமுறைக்குமிடையே மிகப் பெரிய இடைவெளி இருந்தது. வளத்துக்கிடையே வறுமை.

2.5.2. வெளிநாட்டு வர்த்தகத் தொடர்பு

சங்க காலத் தமிழர்கள் கடல்வழிப் பிரிந்து, திரைகடல் ஓடி திரவியம் சேர்த்தவர்கள். நீண்ட நெடுங்காலமாக வெளிநாடுகளுடன் வர்த்தகம் செய்தவர்கள். வெளிநாட்டு வாணிகம் (குழசநபைெ வுசயனந) அவர்களுக்குப் புதிதன்று. கிறிஸ்து சகாப்தத்துக்கு முன்பிருந்தே தமிழ்நாட்டு வெளிநாட்டு வர்த்தகத் தொடர்பு இருந்து வந்தது. இத்தொடர்பு சங்க காலத்தின் பிற்பகுதியில் மேலும் விரிவடைந்து சிறப்புற்றது.

2.6. துறைமுகங்கள்

தமிழ் நாட்டில் நன்கு வளர்ச்சி அடைந்திருந்த துறைமுகங்கள் மூலம் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. வெளிநாட்டுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. கப்பல்களுக்கு கடல்வழி காட்ட கலங்கரை

குறிப்பு

விளக்கங்கள் இருந்தன. இவை "கலங்கரை இலக்கு சுடர்" என்று அழைக்கப்பட்டன. பண்டகசாலைகளில் அளந்தறியாப் பல் பண்டங்கள் ஏற்றுமதிக்காக சேர்த்து வைக்கப்பட்டிருந்தன. பூம்புகாரும், முசிறியும் புகழ் பெற்ற துறைமுகங்களாகவும், துறைமுகப் பட்டினங்களாகவும் திகழ்ந்தன. இவையன்றி கண்ணனூர், தொண்டி, குமரிமுனை, கொற்கை, புதுச்சேரி, மரக்காணம் முதலிய துறைமுகங்களும் வாணிகத்துக்குப் பயன்பட்டன.

2.6.1. ஏற்றுமதி, இறக்குமதி

தமிழ் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு உணவுப் பொருட்கள், உடைக்கான மூலப் பொருட்கள், ஆடம்பர அலங்கார அணிகலன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களாவன: அரிசி, மிளகு, இஞ்சி, ஏலம், இலவங்கம், மஞ்சள், சந்தனம், அகில், தேக்கு மரங்கள், தந்தம், முத்து, மரகதம், குநந்தம் போன்ற விலைமிகு கற்கள், விளக்குகள், பருத்தி, பட்டுத் துணிகள், மாடு, குரங்கு, மயில், கிளி, சிறுத்தை, புலி போன்ற விலங்குகள். இவற்றுக்குப் பதில் வெளி நாடுகளிலிருந்து கண்ணாடி, உலோக சாமான்கள், மது வகைகள் இறக்குமதி செய்யப்பட்டன.

2.6.2. வெளிநாட்டினர் வருகை

தமிழ்நாட்டு வர்த்தகக் கப்பல்கள் கிரேக்க, ரோமானிய, எகிப்திய, அரேபிய நாடுகளுக்குச் சென்றன. குறிப்பாக தமிழக-ரோமானிய வர்த்தகம் சுறுசுறுப்பாக நடைபெற்றது. ரோமானியர் யவனர் என்று அழைக்கப்பட்டனர். ரோமானியர் பலர் வாணிகம் செய்வதற்காகத் தமிழ் நாட்டுக்கு வந்து தங்கினர். பூம்புகாரின் பகுதியான மருவூர்ப்பாக்கத்தில் வெளிநாட்டு மாலுமிகள் அதிகம் காணப்பட்டனர். வாணிகர்கள் தத்தம் சேரிகளில் வசித்தனர். அங்காடிகளில் ஒவ்வொரு கடைக்கும் எதிரே ஒரு கொடி பறக்கவிடப்பட்டு, அக்கொடி மீது அக்கடையில் விற்கப்படும் பொருட்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

2.6.3. தமிழ்நாடும் ரோமப் பேரரசும்

கி.பி.முதல் நூற்றாண்டில் ரோமானியரோடு வர்த்தக விரிவாக்கம் பற்றிய பேச்சுவார்த்தை நடத்த தமிழ் நாட்டிலிருந்து ரோமானியப் பேரரசர் அகஸ்டஸ் சீசர் அரசவைக்கு இரண்டு தூதுக் குழுக்கள் அனுப்பப்பட்டன. அதன் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம் ரோமாபுரி பொறாமைப்படும் அளவுக்கு விரிவடைந்தது. எனினும், கி.பி.மூன்றாம் நூற்றாண்டில் ரோமானியப் பேரரசு வீழ்ச்சி அடைந்த பின்னர் இருநாட்டு வாணிகத்தில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. ரோமானியப் பேரரசும் சங்க காலமும் ஒரே காலகட்டத்தில் வீழ்ச்சியடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது. வாணிக வீழ்ச்சி ஒரு

நாட்டின் வீழ்ச்சிக்கு வழி வகுக்கும் என்பது வரலாறு கற்பிக்கும் பாடங்களில் ஒன்றாகும்.

2.6.4. வரவும் செலவும்

குறிப்பு

சங்ககால மன்னர்கள் வரி வருவாயை நம்பியே இருந்தனர். வரி (வுயஒ) என்ற சொல் சங்க இலக்கியத்தில் இடம் பெறவில்லை. மாறாக, இறை, கறை, இரவு போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டன. மக்களிடமிருந்து இறுக்கப்பட்டதால் இறை என்றும், மக்களிடமிருந்து கேட்டுப் பெறப்பட்டமையால் இரவு என்றும் அழைக்கப்பட்டது. நிலவரி இறை அல்லது கறையாகும். வரி விதிப்பு, வரியின் அளவு, வரி வசூலிக்கும் முறை பற்றிய சட்டங்கள் இல்லாமையால் இவை பற்றிய அறநெறி மரபுகள் வழக்கத்தில் இருந்தன. உதாரணமாக, மக்களின் அன்பு கெடாதபடி வரி வசூலிக்க வேண்டும். மக்களின் மனம் புண்படுமாறு வரி வசூலிப்பது யானை புகுத்த புலம் போலாகிவிடும் அரசனும் கெடுவான் நாடும் நலிவுறும். கொடுங்கோலால் வரி வசூல் செய்யும் மன்னன் கள்வனைப் போன்றவன். வானம் பொய்த்து விளைச்சல் குன்றிய போது மக்களை வரி செலுத்தும்படி வற்புறுத்தலாகாது. எனவே, மன்னரின் வரிக் கொள்கை நியாயமாகவும், நேர்மையாகவும் இருத்தல் வேண்டும். ஏனெனில் நெறியற்ற, நேர்மையற்ற வரிவசூலால் மன்னன் நாட்டையே இழக்க நேரிடும் என்று நம்பப்பட்ட காலம் அது. வரிகளில் முதல் முக்கியத்துவம் வாய்ந்தது நிலவரி ஆகும். பொதுவாக, நில வருவாய் மட்டுமன்றி அனைத்து வருவாயின் மொத்த மதிப்பில் ஆறில் ஒரு பங்கு வரியாக வசூலிக்கப்பட்டது." கருவூலத்தை நிரப்பிய பிற வரிகளாவன: 1) இறக்குமதி, ஏற்றுமதி பொருட்களுக்கான சுங்க வரி 2) வாரிசின்றி இறப்போரின் சொத்துக்கள் 3) சட்டத்தை மீறுவோர் மீது விதிக்கப்படும் அபராதத் தொகை 4) குற்றவாளிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள் 5) இறையிலி நிலங்களைப் பார்ப்பனர்களிடமிருந்து பெறப்பட்ட வரிப் பணம் 6) போரில் தோற்ற நாடுகளிலிருந்து கவர்ந்து வரப்பட்ட பணமும், பொருளும். இது அரசாங்கத்தின் மிகப் பெரிய வருவாயாகக் கருதப்பட்டது. இதோடு தோற்ற அரசர்களிடமிருந்து பெறப்பட்ட திறைப்பணம். பொதுவாக, வரிகள் பணமாகவோ அல்லது பொருளாகவோ தரப்பட்டன. பார்ப்பனர்களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட பிரமதேய கிராமங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது. அதனால் அரசாங்கத்துக்கு வரி இழப்பு ஏற்பட்டது. செலவினம் தற்போது உள்ளதைப் போன்று பொது வருவாய்களையும், செலவுகளையும் கொண்ட வரவு-செலவுத் திட்டம் (டீரனபநவ) அக்காலத்தில் இல்லை. சங்ககால மன்னர்கள் அடிக்கடி போரிட்டு வந்தமையால் அப்போர்களுக்கான செலவே அதிகம். அதற்கு அடுத்தபடியாக அரண்மனையிலிருந்த அரச பரம்பரையைச் சேர்ந்த பெருங்கூட்டத்துக்கான செலவாகும். அதேபோன்று அரசாங்க அமைச்சர்கள், அதிகாரிகள், அலுவலர்கள், ராணுவத்தினர் ஆகியோருக்கான செலவு, முடிசூட்டு விழா,

குறிப்பு

விருந்துகள், பொது விழாக்கள், பண்டிகைக் கொண்டாட்டங்கள், அரசனின் ஆடம்பரங்கள் ஆகியவற்றுக்கான செலவுகள். மேலும் புலவர்கள், பாணர், கூத்தர், இசைக் கலைஞர்கள் போன்றோருக்குத் தாராளமாக வழங்கிய பரிசில் பணம்.்.பொருட்கள். சுருங்கக்கூறின், போர்ச் செலவும், அரண்மனைச் செலவும், அரசாங்கச் செலவும் வருவாயின் மிகப் பெரும் பகுதியை விழுங்கிவிட்டன. இவைபோக எஞ்சி இருந்த வருவாயே நிரந்தர மதிப்புள்ள பொதுப் பணிகளுக்கும், மக்கள் நலப் பணிகளுக்கும் செலவிடப்பட்டது. அரசாங்கத்தின் வரவினங்கள் அனைத்தும் அரசுக் கருவூலத்தில் (வுசநயளரசல) செலுத்தப்பட்டன. அதேபோன்று செலவினங்கள் அனைத்தும் கருவூலத்திலிருந்து எடுத்து செலவு செய்யப்பட்டன.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. எது சங்கப் பொருளாதார நாணயத்தின் இரு பக்கங்களாகவும், சமுதாயத்தின் இரு கண்களாகவும் இருந்தன.

2. எந்த தொழிலை மருத நில மக்கள் வாழ்க்கையின் ஆதாரத் தொழிலாகக் கருதினர்.

3. தமிழகத்தில் புகழ் பெற்ற சங்க கால துறைமுகங்கள் யாவை?

2.7. சங்ககால சமுதாயம்

சங்ககால சமுதாயம் இயற்கையானது இயல்பானது தனித்தன்மையுடையது. அது தமிழர்களின் ஆளுமை (Personality) வெளிப்பாடாகும் பண்பாட்டின் பிரதிபலிப்பாகும். சங்கச் சமுதாயம் மக்கள் வாழ்ந்த இடத்தால் அறியப்பட்டது திணையால் அழைக்கப்பட்டது. இச்சமுதாயம் மக்கள் பரிணாம வளர்ச்சியின் விளைவாகும். பண்டைக் கால தமிழ்ச் சமுதாயம் ஆற்றல் வேகமுற்றது தேக்க முற்றதன்று (Dynamic not static). மக்களின் வாழ்க்கை, தொழில், நடவடிக்கைகள், பொழுதுபோக்கு, நம்பிக்கைகள் ஆகிய அனைத்தும் வாழ்விடத்தைப் பொறுத்தே அமைந்திருந்தன. சங்ககாலத் தமிழர்கள் இயற்கைத் தாயின் காலடித் தடத்தில் பயணித்தனர். அவர்கள் நிலவழிப் பிரிந்தனரேயன்றி, பிறப்பு வழிப் பிரியவில்லை. சங்ககால சமுதாய அமைப்பு படுகிடையானது (Horizontal); செங்குத்தானது (Vertical) அன்று. சங்கச் சமுதாயம் எளிய, இயல்பான, இணக்கமான, முழுமையான, ஒருங்கிணைந்த, சுதந்திரமான தற்சார்புடைய, சமயம் சாரா, சாதி அறியா சமுதாயமாகும். திணை சார்ந்த அமைப்பே உண்மையான, கலப்படமற்ற (Genunie) துல்லியமான (Authentic) அமைப்பாகும்.

2.7.1.திணை மக்கள் வாழ்க்கை

2.7.1.1. குறிஞ்சி மக்கள் வாழ்க்கை

குறிப்பு

சங்ககாலத் தமிழ்நாடு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்து நன்கு வரையறுக்கப்பட்ட திணை நிலப் பகுதிகளாகத் திகழ்ந்தன. மலையும், மலை சார்ந்த பகுதிகளும் குறிஞ்சி நிலமாகும். இந்நிலத்தில் வாழ்ந்தவர்கள் குறவர்கள். இவர்களது தலைவன் வேற்பன், சிலம்பன், பொருப்பன் என்று அழைக்கப்பட்டான். குறிஞ்சி நில வேட்டுவர் (எயினர்) கொடுவில் எயினர்" என்று அறியப்பட்டனர். குறிஞ்சி நிலப் பெண்கள் எயிற்றினர் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் ஈத்தியை வேய்ந்த குடிசைகளில் வாழ்ந்தனர். மான் தோலில் படுத்தனர் இரும்பு உளி கொண்டு புல்லரிசித் தோண்டினர் புல்லரிசியை கள்ளோடு கூட்டி உண்டனர் பன்றியையும், முயலையும் வேட்டையாடினர் வேட்டைக்கு நாயைப் பயன்படுத்தினர். மூங்கிலரிசி, கிழங்குகள், தேன் ஆகியவை இவர்களது முக்கிய உணவுப் பொருட்களாகும். குறிஞ்சி நிலத்தில் அகில், சந்தனம், தேக்கு, வேங்கை ஆகிய மரங்கள் அபரிமிதமாக வளர்ந்தன. யானை, மயில், கிளி போன்ற விலங்குகளையும், பறவைகளையும் வீட்டுச் சூழலுக்கேற்ப பழக்கினர். குழங்கு அகழ்தலும், தேன் எடுத்தலும் குறிஞ்சி மக்களின் முக்கிய தொழில்கள். குறிஞ்சி யாழ் இவர்களது இசைக் கருவியாகும். குறிஞ்சிப் பண் இசைப் பண்ணாகவும் இருந்தன. சேயோன் இவர்களது வழிபடு கடவுள்.

2.7.1.2. முல்லை மக்கள் வாழ்க்கை

காடும், காடு சார்ந்த பகுதியும் முல்லை என்று அழைக்கப்பட்டது. முல்லை நில மக்கள் ஆயர், இடையர் ஆவர். இவர்களது தலைவன் அண்ணல், தோன்றல், நாடன், குறும்பொறை என்று அழைக்கப்பட்டான். முல்லை நிலத்து ஆயர் ஆடு, மாடுகள் மேய்த்து வாழ்ந்தனர். இவர்கள் "அறவை நெஞ்சத்து ஆயர்" எனப்பட்டனர். ஆயர் பெண்கள் ஆய்ச்சியர் எனப்பட்டனர். இம்மக்கள் எளிய குடிசைகளில் வாழ்ந்தனர். இவர்கள் ஏறு தழுவுதலை மரபாகக் கொண்டிருந்தனர்.முல்லை நில மக்கள் வரகு, சாமை, முதிரை ஆகியவற்றை உணவாகக் கொண்டனர். புலி போன்றவை வன விலங்குகள். கொன்றையும், முல்லையும் முக்கிய விளை பொருட்கள். ஆநிரை மேய்த்தலும், பயிர் விளைவித்தலும் முல்லை மக்களின் முக்கிய தொழில்கள். இவர்களது வாழ்விடம் பாடி, சேரி, பன்றி என்று அறியப்பட்டது. இவர்களது இசைக்கருவி முல்லை யாழ் இசைப்பண் முசாரிப் பண். முல்லை நில மக்கள் மாயோனை வழிபட்டனர்.

2.7.1.3. மருத மக்கள் வாழ்க்கை

வயலும், வயல் சார்ந்த நிலப்பகுதி மருத நிலமாகும். மருத மக்கள் உழவர்கள். இவர்களது தலைவன் மனையோன், ஊரன்,

குறிப்பு

மகிழ்பன் என்று அழைக்கப்பட்டான். மருத நில மக்களின் முக்கிய உணவுப் பொருட்கள் அரிசி, பால், வெண்ணெய். இவர்கள் வளர்த்த விலங்குகள் பசு, எருமை, வாத்து, கொக்கு போன்றவை. மருத நிலத்தில் வஞ்சியும், காஞ்சியும், மருத மரமும், குவளை, தாமரைப் பூக்களும் விளைந்தன. வேளாண்மையே மருத மக்களின் முக்கிய தொழில். இவர்களது வாழ்விடம் பேரூர், மூதூர் என்று அழைக்கப்பட்டது. இவர்களது இசைக்கருவி மருத யாழ் இசைப்பண் மருதப்பண். மருத நில மக்கள் வழிபட்ட தெய்வம் வேந்தன்.

மருத நில மக்கள் உழவாலும், உழைப்பாலும் உயர்ந்தவர்கள். இந்நிலப் புலவர்கள் தங்களைப் புலன் உழுதுண்மார்" என்று பெருமையுடன் கூறிக் கொண்டனர். உழவர்கள் ஏரின் வாழ்நர்" என்று பாராட்டப்பட்டனர். ஆண்களும், பெண்களும் உழவுத் தொழிலில் ஈடுபட்டனர். நெல்லை அளக்கப் பயன்பட்ட கருவி அம்பணம் என்று அழைக்கப்பட்டது. நாழி, பதக்கு, மா போன்ற சொற்கள் அளவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. மருத மக்கள் நாகரிகத்தின் முன்னோடிகள் பண்பாட்டின் பாதுகாவலர்கள் தாங்களும் உயர்ந்து பிறரையும் உயர்த்தியவர்கள் அரச குலங்களோடு மண உறவு கொண்டிருந்தனர். மருத மண்ணிலிருந்து குறுநில மன்னர்களும், மன்னர்களும் தோன்றியதில் வியப்பில்லை.

2.7.1.4. நெய்தல் மக்கள் வாழ்க்கை

கடலும், கடல் சார்ந்த பகுதி நெய்தல் நிலமாகும். இந்நில மக்கள் பரதவர், நுனைஞர், வலைஞர் என்று அழைக்கப்பட்டனர். இவர்களது தலைவன் கொங்கன், துறைவன், சேர்ப்பன் என்று அறியப்பட்டான். இவர்களது முக்கிய உணவு மீன். இவர்கள் பயன்படுத்திய குறும் படகுக்குத் திமில் என்று பெயர். மீன் வர்த்தகத்தில் வல்லவர்கள். மீன் பிடித்தலும், உப்பு தயாரித்தலும் இவர்களது தொழில். வாத்தும், வானம்பாடியும் பரதவர் வளர்த்த பறவைகளாகும். நெய்தல் மண்ணில் கண்டல், வேந்தல் போன்ற பரங்கள் வளர்ந்தன. பட்டினமும், பாக்கமும் நெய்தல் நில மக்களின் உறைவிடங்களாகும். இவர்களது இசைக்கருவி நெய்தல் யாழ் இசைப்பண் நெய்தல் பண். இவர்கள் வழிபட்ட தெய்வம் வருணன்.

நெய்தல் நிலப் பரதவர் கடற் பரவைகள். கடலே இவர்களது நீச்சல் குளம். இந்நில மக்கள் ''வள்ளை நீக்கி வயமீன் முகந்து கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்'' என்று பாராட்டப்பட்டனர். பரதவர் மீன் பிடித்தால், பரதவப் பெண்கள் மீனைக் கூடைகளில் சுமந்து சென்று, பண்டமாற்றி, நெல்லைக் கொண்டு வருவர். பரதவர் தாழை உடலைச் சூடிக்கொண்டு பனங்கள்ளினை அருந்தி மகிழ்ந்தனர்.

குறிப்பு

2.7.1.5. பாலை மக்கள் வாழ்க்கை

இரு நிலம் திரிந்த நிலம் பாலை எனப்பட்டது. இந்நில மக்கள் மறவர், எயினர் எனப்பட்டனர். இவர்களது தலைவன் காளை, விடலை, மீழி என்று அழைக்கப்பட்டான். போரிடுவதும், வழிப்பறியும் இவர்களது முக்கிய தொழில்களாகும். இம்மண்ணில் இலுப்பை, சேமை, உழிஞை ஆகிய மரங்கள் வளர்ந்தன. இவர்கள் போற்றிய பறவை கழுகு. பாலை மக்களின் இசைக்கருவி பாலை யாழ் இசைப் பண் பஞ்சிரபண். இவர்கள் வழிபாட்டு தெய்வம் கொற்றவை.

2.7.2. சமநிலைச் சமுதாயம்

பண்டைக்கால தமிழ் மக்கள் இயற்கையின் புத்திரர்கள். இயற்கைவழிச் சென்றவர்கள். இயல்பாக வாழ்ந்தவர்கள். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை நில அமைப்புகளும், அவற்றில் வாழ்ந்த மக்களும் உண்மையானவை புலவர் கற்பனையன்று. திணை வாழ் மக்கள் தோற்றத்தாலும், உணவாலும், உடையாலும், உறையுளாலும், பழக்க வழக்கங்களாலும் வேறுபட்டிருந்தாலும், பண்டமாற்றாலும், பண்பாட்டுப் பரிமாற்றத்தாலும், இனத்தாலும், மொழியாலும் ஒன்றுபட்டிருந்தனர். அவர்களது சமுதாயம் சமயம் சாராத, பொருள்மய சமுதாயமாகும். இச்சமுதாயம் சங்ககாலப் பிற்பகுதியில் நகர்மயமாயிற்று. பல மாற்றங்கள் ஏற்பட்டன. உயர்வு தாழ்வு உணர்வற்ற சங்ககால திணைச் சமுதாயம் ஒரு சமநிலைச் சமுதாயமாகும்.

2.8. குடும்ப வாழ்க்கை

சங்க இலக்கியத்தில் குடும்ப வாழ்க்கைக்கு முதல் முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளது. குடும்ப அடிப்படை சமுதாய அமைப்பாக விளங்கியது. இல்லறம் நல்லறமாகக் கருதப்பட்டது. குடும்ப வாழ்க்கையில் விருந்தோம்பல் சிறப்பிடம் பெற்றிருந்தது. விருந்தோம்பல் குடும்ப அறமாகக் கருதப்பட்டது. பொருள் ஈட்டுவதே விருந்தோம்பல் பொருட்டே என்று கருதப்பட்டது. விருந்தோம்பல் தமிழர் பண்பாட்டின் சாரமாகக் கொள்ளப்பட்டது. சுருங்கக் கூறின், குடும்ப வாழ்க்கை தொண்டு வாழ்க்கையாக இருந்தது.

2.8.1. மண வாழ்க்கை

சங்ககாலத் தமிழர்கள் மணவாழ்க்கை பற்றிய தெளிவான, யதார்த்தமான, உலகாயத கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தனர். ஒத்த மனமும், குணமும் உடைய இருவர் இணைவதே திருமணம் என்பது அவர்களது நிலைப்பாடாக இருந்தது. காதலும், கற்பும் மண வாழ்க்கை என்ற நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. ஒருதலைக் காமம் கைக்கிளை என்றும், மிகு காமம் பெருந்திணை என்றும் பாகுபடுத்தப்பட்டது. மண வாழ்க்கையின் அடிப்படையிலேயே குறிஞ்சி

குறிப்பு

புணர்தலையும், முல்லை இருத்தலையும், மருதம் ஊடலையும், நெய்தல் இரங்கலையும், பாலை பிரிதலையும் உரிப் பொருளாகக் கொண்டிருந்தன. மணம் பேசி விட்டாலே திருமணம் முடிந்து விட்டதாகக் கருதப்பட்டது! சங்க காலத் தமிழரிடையே தாலி கட்டும் பழக்கமில்லை.

2.8.2. மணமுறை

அகவாழ்க்கை களவு, கற்பு என இரு வகையாக இருந்தது. ஊரறியாது வயது வந்த ஆணும் பெண்ணும் புணர்ந்து இன்புறுவது களவெனப்பட்டது. பொருத்தம் பார்த்து, பரிசளித்து பெற்றோர் சம்மதத்துடன் ஊரறிய நடைபெற்றது கற்பெனப்பட்டது. இரு வீட்டுப் பெற்றோரே திருமணத்தை நடத்தி வைத்தனர். அணி அணியும் பழக்கம் இருந்ததேயன்றி தாலி அணிவிக்கும் வழக்கம் இல்லை. பார்ப்பான் மறைவழி தாலி பூட்டும் பழக்கம் பின்னர் சிலப்பதிகாரக் காலத்தில் புகுத்தப்பட்ட புதுப் பழக்கமாகும். திருமணமாவதற்கு முன்புவரை பெண் காற்சிலம்பு அணிந்திருந்தாள். திருமணத்துக்கு முன் அச்சிலம்பைக் கழற்றி விடுவது மரபாக இருந்தது. அதேபோன்று, திருமணத்துக்குப் பின்னரே மகளிர் மலர் சூடினர். சங்க காலத்தில் கணவனை இழந்த மகளிர் பூவணியையும், பிற அணிகலன் களையும் நீக்கினர்.

2.9.மகளிர் நிலை

சங்ககாலப் பெண்களுக்குப் பூரண சுதந்திரம் கொடுக்கப்பட்டிருந்தது. அவர்கள் திருமணமாகுமுன்பே காதலனுடன் வாழ்ந்து, பின்னர் திரும்பி வந்து பெற்றோருடன் இருப்பது கனவாகக் கருதப்பட்டது கூடா உறவாகக் கருதப்படவில்லை . எனினும் முறைப்படி மணந்து கொண்ட மகளிருக்கு சமுதாயத்தில் தனி மரியாதை இருந்தது. கணவனை இழந்தோர் கைம்பை நோன்பு மேற்கொண்டனர். தீக்குளித்தலும் உண்டு.36 கைம்பெண் மறுமணம் செய்து கொண்டதாகத் தெரியவில்லை. விதவைப் பெண்கள் அணிகளை இழந்தனர். அவர்களுக்கு விருந்தோம்பல் மறுக்கப்பட்டது. பெண் புலவர்கள்

சங்கப் பெண்களுக்குக் கல்வி மறுக்கப்படவில்லை. அக்கால மகளிர் கல்வித் தேர்ச்சி பெற்று கலைகளில் சிறப்புற்று இருந்தனர். ஔவையார், காக்கைப் பாடினியார், வெள்ளி வீதியார் போன்ற பெண்பாற் புலவர்கள் புகழ் பெற்றுத் திகழ்ந்தனர். குறிப்பாக, ஔவையார் அதியமான் சார்பாக தொண்டைமானிடம் தூது சென்றார்! அதேபோன்று தன்னைப் பாடிய காக்கைப் பாடினியார்க்கு ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் நூறாயிரம் கழஞ்சு கொடுத்துப் பாராட்டினார். பெண் கலைஞர்கள் சங்ககால மகளிர் ஆடல் பாடல்களில் பங்கேற்றனர். இவற்றில் விறலியர் பங்கு குறிப்பிடத்தக்கது. வெறியாட்டு, வள்ளிக்கூத்து, குரவைக்கூத்து ஆகியவற்றில் பெண்கள் பெரும் பங்கேற்றனர். மன்னரின் அவைக் களத்திலும், ஊர் மன்றங்களிலும், பாசறைகளிலும் விறலியர் ஆடிப் பாடி

மக்களை மகிழ்வித்தனர். வீரமகளிர் சங்ககாலப் பெண்கள் நாட்டுப்பற்று மிக்கவர்களாக இருந்தனர். வீரம் அவர்களது குருதியில் கலந்த குணமாக இருந்தது. மகளிர் போரில் நேரில் கலந்து கொள்ளாவிடினும் போரில் பங்கேற்ற கணவரையும், மகனையும் வெகுவாக ஊக்குவித்தனர். தன் கணவன் போரில் வென்று வெற்றி வாகை சூடி திரும்ப வேண்டி மனைவியர் நடுகல்லைத் தொழுதனர். தம் கணவன் மார்பில் பாய்ந்த வேலைப் பிடுங்கி எறிந்த போது யானைகள் மிரண்டு ஓடியதாக ஒரு மனைவி பெருமையுடன் பேசுகிறாள். பகைவனை வெல்வதில் தந்தைக்கு நிகரானவன் மகன் என்று பாராட்டுகிறார் மற்றொரு தாய். தன் மகன் போர்க்களத்தில் புறமுதுகு காட்டியிருந்தால் அவனுக்குப் பாலூட்டிய மார்பை அறித்து எறிவேன் என்று சூளுரைக்கிறார் மற்றொரு தாய்.

குறிப்பு

2.9.1. அழகு மகளிர்

சங்கப் பெண்டிர் ஒப்பனைக்கு உரிய இடம் கொடுத்தனர். இளம் பெண்கள் கூந்தலுக்கு நெய்யிட்டு, ஐந்தாக வகுத்து, பின்னலிட்டுக் கொண்டனர். முதியோர் கூந்தலை வாரி முடித்துக் கட்டினர். மகளிர் குளித்தபின் கூந்தலுக்கு அகில் புகை காட்டினர். கண்களுக்கு மை தீட்டிக் கொண்டனர். மணமான பெண்கள் வேங்கை, வெட்சி, குவளை, அரும்பு, மல்லிகை ஆகிய மலர்களை விருப்பம்போல் சூடிக் கொண்டனர். சந்தனம், குங்குமம் ஆகியவற்றை மார்பில் பூசிக் கொண்டு அதில் ஓவியங்களைத் தீட்டிக் கொண்டனர்.

2.9.2. பரத்தையர்

சங்க இலக்கியத்தில் பரத்தையர் பற்றிய பாடல்கள் ஏராளம். இவர்கள் சங்ககால சமுதாயத்தின் அங்கமாகவே இருந்தனர். பரத்தையர் அழகிலும், இளமையிலும், ஆடல் பாடலிலும் சிறப்புற்றிருந்தனர். இவர்கள் பலவீன உள்ளம் கொண்ட ஆடவரை ஈர்க்கும் காந்தக் கட்டிகள். ஆடவர் பரத்தையருடன் தொடர்பு கொள்வது பெண்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பழக்கமாக இருந்தது. ஆடவர் காதல் கிழத்தியோடு காமக்கிழத்தியரை வைத்துக் கொள்வது பெருமையாகக் கருதப்பட்டது. பரத்தையர் பொது மகளிர். இவர்கள் இற்பரத்தையர், காமக் கிழத்தியர், சேரிப் பரத்தையர், நயப்புப் பரத்தையர் எனப் பலவகைப்பட்டனர். சங்ககால ஆடவரின் பால் பலவீனம் பரத்தையர் மூலம் வெளிப்பட்டது. இது ஆண்கள் ஆதிக்கத்தின் அறிகுறியாகும். கற்பு ஒருவழிப் பாதையல்ல என்ற உண்மை உணரப்படவில்லை. பரத்தமை சங்கத் தமிழர்களின் பலவீனங்களில் ஒன்றாகும். நேர்மையான கோவலன் இப்பலவீனத்துக்குப் பலியானான். அதன் விளைவாகத் தன்னையும், தன் குடும்பத்தையும், மாதவியின் குடும்பத்தையும் தீராத் துயரத்துக்கு ஆளாக்கினான்.

குறிப்பு

2.10. விழாக்கள்

விழாக்கள் சங்ககால சமுதாயக் கொண்டாட்டங்கள். விழாக்களில் குறிப்பிடத் தக்கவை வருமாறு: 1) கார்த்திகைத் திருவிழா. கார்த்திகை விண்மீனை மையமாகக் கொண்டது. இப்பண்டிகை அறம் செய்யும் விழாவாகக் கொண்டாடப்பட்டது. வீடுகளும், தெருக்களும் ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டன. 2) பொங்கல். தைத்திங்களில் கொண்டாடப்பட்ட இப்பண்டிகை தமிழரின் தனித் திருவிழாவாகும். பொங்கல் "அறுவடை விழாவாகத் தொடங்கிப் பின்னர் வளத்தைக் குறித்த விழாவாக மாறியது". 3) தை நீராட்டு. தமக்கு வாய்க்கும் கணவன் நற்பண்புடையவராக இருக்க வேண்டும் என்று வேண்டி தைத்திங்களில் பெண்கள் ஆறு, குளங்களில் நீராடினர். 4) இளவேனில் விழா. இது காமன் திருவிழா. இவ்விழாவின் போது காதலர் களித்து விளையாடினர். 5) இந்திர விழா. இவ்விழா சங்க காலத்தின் பிற்பகுதியில், காப்பிய காலத்தில், சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இது பல தெய்வ வழிபாட்டு விழா. இவ்விழாவில் பல்வேறு சமயத்தவர் பங்கேற்றனர். பட்டிமண்டபம் நடத்தப்பட்டது. 6) மேற்கண்ட பெருவிழாக்களன்றி நீர் விழா, திருப்பதியில் விழா, உள்ளி விழா, பங்குனி விழா, கோடியர் விழா, வெறியாட்டு விழா, பிறந்த நாள் விழா போன்ற பல விழாக்களும் கொண்டாடப்பட்டன.

முற்காலத் தமிழர்கள் தங்கள் வாழ்க்கையை பிறப்பு முதல் இறப்பு வரை முறைப்படுத்திக் கொண்டனர். உணவு, உடை, உறையுள் முதல் இறுதிச் சடங்குகள் வரை வகைப்படுத்திக் கொண்டனர். பண்டைத் தமிழர் பிறப்பு வழி வேறுபாடு அறியாதோர். பிறப்பு எல்லா உயிர்க்கும் பொது என்ற கோட்பாட்டைக் கொண்டிருந்தனர். உலக வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று விரும்பியவர்கள் விழைந்தவர்கள். சாப்பாட்டுப் பிரியர்கள். சுவைமிக்க உணவைச் சமைப்பதில் வல்லவர்கள். வாழ்ந்த நிலத்திற்கேற்ப உணவு முறையைப் பின்பற்றினர். மதுவும் மாமிசமும் சங்கத் தமிழர் அனைவரும் மரக்கறி உணவோடு மாமிசத்தையும், மதுவையும் விரும்பி உண்டனர். பன்றி இறைச்சி விரும்பி உண்ணப்பட்டது. பலவகை மதுவகைகள் இருந்தன. சாதாரண மக்கள் முதல் மன்னர்கள் வரை மது அருந்துவதை கட்டாயப் பழக்கமாகக் கொண்டிருந்தனர். நன்கு புளித்த கள் தேன் கடுப்பன்ன கடுமையாக இருந்ததாம். தென்னை, பனை மரங்களிலிருந்து இறக்கிய கள்ளை வீட்டிலேயே உணவோடு சேர்த்து வழங்கினர். தமிழர்கள் யவனர்களோடு தொடர்பு கொண்ட பின் வெளிநாட்டு மது வகைகள் தடையின்றி இறக்குமதி செய்யப்பட்டன. இவற்றை மன்னர்களும், செல்வர்களும் குடித்துக் களித்தனர். பிறருக்கும் கொடுத்து மகிழ்ந்தனர். எடுத்துக்காட்டாக, அதியமான் அஞ்சி கள் குறைவாக இருந்தமையால் அதைத் தான் அருந்தாது ஔவையாருக்கும், இரவலர்களுக்கும் கொடுத்தானாம். அதேபோன்று, தேர்வண் மலையன் என்ற வள்ளல் நெருப்பெனச் சிவந்த இறைச்சியை மண்டையில் ஊற்றிய கள்ளோடு

கலந்து கொடுப்பதுண்டாம். கள்ளுண்டு களிப்பதற்கென்றே உண்டாட்டு விழா கொண்டாடப்பட்டது. கள் தமிழர்களின் குருதியோடு கலந்து விட்டது. மதுவை விலக்குவது இவர்களுக்கு இயலாத காரியம். சங்க காலத்தில் மதுவருந்தல் வீட்டை மட்டுமன்றி நாட்டையும் கெடுத்தது.

குறிப்பு

2.11. உடை அலங்காரம்

சங்க காலத் தமிழர்கள் தகுதிக்குத் தகுந்த உடை அணிந்தனர். ஆடவர் இடையில் ஓர் ஆடையும், மேலே ஒரு துண்டையும் அணிந்தனர். பெண்டிர் இடையில் பட்டும் புடவையுடுத்தினர். மன்னனும், மன்னரது குடும்பத்தினரும், செல்வந்தரும் விலையுயர்ந்த, கைவேலைப்பாடுமிக்க உடை அணிந்தனர். பிறரெல்லாம் எளிய ஆடையையே உடுத்தினர். வீரர்கள் பூவேலை செய்யப்பட்ட நீலநிறக் கச்சையினை கட்டிக் கொண்டனர். அக்காலத்து ஆடைகள் அழகும், நேர்த்தியும், கலை உணர்வு மிக்கதாகவும் இருந்தன. ஆடை பாம்பின் சட்டையைப் போன்றது மூங்கிலின் உட்புறத்து வெண்தோல் போன்றும் இருந்ததாம்!"" பட்டு ஆடைகளின் ஓரங்களில் அழகிய குஞ்சங்கள் அமைக்கப் படுவதுண்டு. மெல்லிய ஆடைகள் யவனம், எகிப்து போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. வீடுகள், மாளிகைகள் உடையைப் போன்றே உறையுளும் மக்களின் தகுதிக்கேற்ப மாறுபட்டது. குறிஞ்சி நிலக் குறவரும், முல்லை ஆயரும், மருத உழவரும், நெய்தல் பரதவரும், பாலை எயினரும் அவர்களது நில அமைப்புக்கேற்ப தனித்தன்மையுடன் எளிய குடிசைகளிலும், வீடுகளிலும் வசித்தனர். உதாரணமாக, முல்லை நிலத்து ஆயர்களின் வீடுகளில் ஆடுகள் நின்று திண்பதற்குரிய தழைக் கொத்துகள் கட்டப்பட்டிருந்தன. மருதநில உழவர்களின் வீடுகள் நெடிய சுவர்களைக் கொண்டிருந்தன. நெய்தல் பரதவர் வீடுகளில் புலால் நாற்றம் வீசும். வேலும் கேடயமும் பத்திப் பத்தியாய் இருந்தனவாம். மன்னர்கள் அரண்மனையிலும், செல்வர் மாளிகையிலும் வாழ்ந்தனர். அரண்மனையில் பல பகுதிகள் இருந்தன. அந்தப்புரம் தனிக் காவலுடன் காணப்பட்டது. அரண்மனையின் வாயிலில் பெரிய இரட்டைக் கதவுகள் இருந்தன. அரண்மனையிலும், மாளிகையிலும் வேயா மாடம் என்ற மொட்டை மாடி இருந்தது. சாளரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. உட்சுவர்களில் ஓவியங்கள் தீட்டப் பட்டிருந்தன. இவையாவும் சாதாரண மக்களுக்கும், செல்வந்தர்களுக்கும் இடையேயான இடைவெளியைக் காட்டுவனவாக இருந்தன. இடுதலும் சுடுதலும் பிறப்பைப் போன்றே இறப்பும் எல்லா உயிர்க்கும் பொதுவானது. இறப்பொக்கும் எல்லா உயிர்க்கும். சங்க காலத்தில் பணத்தைப் பாடையில் கிடத்திச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லும் பழக்கம் இருந்தது. இறந்தோரைத் தாழிகளில் கிடத்திப் பாதுகாப்பாகப் புதைத்தனர். இறந்தோர் மீது கோடித் துணி போர்த்தினர். வீட்டுப் பெண்கள் மாரடித்துப் புலம்பினர். சாப்பறைகள் முழங்கப்பட்டன. பிணத்தைப் புதைக்கும் இடம் பெருங்காடு, முதுகாடு எனப்பட்டது. இடுதலும், சுடுதலும் மரபுகளாய்

இருந்தன. போரில் இறந்த வீரர்களுக்கு கல்நட்டு மரியாதை செலுத்தினர். இறந்தோர்க்கு மைந்தர் செய்யும் கடன் தென்புலத்தார் கடன் எனப்பட்டது.

குறிப்பு

2.12. சங்ககால சாதிமுறை

ஆரியரின் வருகைக்குப் பிறகுதான் இந்தியாவில் வர்ண அடிப்படையிலான படியடுக்கு சாதிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தியாவின் மீது படையெடுத்து வந்த ஆரியர் முதலில் சிந்து சமவெளிப் பகுதியைக் கைப்பற்றினர். பின்னர் கிழக்கு நோக்கி ஊடுறுவிச் சென்று கங்கை-யமுனைப் பகுதிகளை கையகப்படுத்தினர். அதன்பின் இந்தியா ஆரியமயமாக்கப்பட்டது (யுசலயளையவழைெ ழக ஜனெயை). வடநாட்டை வசப்படுத்திக் கொண்ட ஆரியர் தெற்கு நோக்கி வந்து தக்காணத்திலும், தமிழ் நாட்டிலும் குடியேறினர். தமிழ் நாட்டில் குடியேறிய ஆரியர் அந்தணர், பார்ப்பார், பிராமணர், பார்ப்பனர், அறவோர் என்ற பெயர்களாக அழைக்கப் பட்டனர். ஆரிய--பிராமணர் வந்த பின்னர் தமிழ் நாட்டின் சமூக-சமய வாழ்க்கையில் மாபெரும் மாற்றம் ஏற்பட்டது. அரைகுறை முயற்சி ஆரியர் தமிழ் நாட்டுக்கு வந்து குடியேறியபோது இந்நிலம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று இயற்கைவழிப் பிரிந்து, முறையே குறவர்கள், ஆயர், உழவர், பரதவர், எயினர் என மக்கள் குலவழி, தொழில் வழி வாழ்ந்து வந்தனர். இவர்களே சங்ககாலத் துவக்கத்திலிருந்து தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்த ஆதிகுல மக்கள் ஆவர். இக்குலங்கள் குடிகளாகக் கருதப்பட்டனர். இப்பாரம்பரிய சமுதாய அமைப்பு படுகிடை அமைப்பாகும். இந்த அமைப்பின் மீது வெளியிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து குடியேறிய ஆரிய-பிராமணர் அவர்களுக்கேயுரிய வர்ணம் சார்ந்த சாதிமுறையைப் புகுத்த முற்பட்டனர். தமிழ் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சியைப் பற்றி வரலாற்று ஆய்வாளர் வி.ஏ.ஸ்மித் நான்கு முக்கிய முடிவுகளுக்கு வந்தார்: 1) தமிழர் வட இந்தியத் தொடர்பின்றியே ஒரு உயர் நிலை நாகரிகத்தை வளர்த்துக் கொண்டிருந்தனர் 2) வடக்கிலிருந்து வந்து குடியேறியோர் சாதி, சடங்கு முதலிய இந்துக் கொள்கைகளைப் புகுத்த முயன்றனர் 3) அவர்களது அத்தகைய முயற்சிக்கு பெரிய அளவு எதிர்ப்பு இருந்தது 4) எனவே, ஆரியரால் புகுத்தப்பட்ட சாதி அமைப்பு முறை வளர்ச்சி அடையாமலும், அறைகுறையாகவும் இருந்தது.

தமிழ் நாட்டில் ஆரிய-பிராமணரின் வர்ண-பிறப்பு-அடிப்படையிலான படிமுறை, செங்குத்து சாதிமுறை தோல்வியுற்றது. பிறப்பால் அனைவரும் சமம், தொழில் வேறுபாடின்றி பிற வேறுபாடுகள் இல்லை என்று கருதிய தமிழ்ச் சமுதாயம் புதிதாகப் புகுத்தப்பட்ட சாதி முறையை ஏற்றுக் கொள்ளவில்லை. அதேசமயம் பார்ப்பனரின் சமுதாய, சமய சுதந்திரத்தை எதிர்க்கவுமில்லை. மாறாக, கல்வியைப் பெரிதும் போற்றிய பார்ப்பணர்களைத் தங்களது முன்மாதிரியாகக் கொண்டனர். எனவே, அவர்கள் தமிழ் நாட்டில் தனித்தன்மையுடன் திகழ்ந்தனர்.

குறிப்பு

பார்ப்பனர்களின் தனித்துவத்துக்கான காரணங்கள்: 1) அவர்களுக்கு சௌனியன், கோதமனார், கௌசிகனார், பாரதாயனர் ஆகிய கோத்திரப் பெயர்கள் இருந்தன் 2) பலவகை வேள்விகளைச் செய்தனர் 3) தோள் மீது பூணூல் அணிந்தனர் 4) பூணூல் அணிவதால் பார்ப்பார் இருபிறப்பாளராகக் கருதப்பட்டனர் 5) காலை, நண்பகல், மாலை எனும் முப்போதும் வேத மந்திரங்களை ஒதினர் 6) தங்களையும், சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொண்டனர். கருங்கக்கூறின், தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் நம்பிக்கைகளாலும், நடவடிக்கைகளாலும், பழக்கவழக்கங்களாலும், சமஸ்கிருத வேதக் கல்வியாலும், புரோகிதம், சோதிடம் போன்ற தொழில்களாலும் பிறரிடமிருந்து மாறுட்டுத் தனித்தன்மையுடன் வாழ்ந்தனர். அரசரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக அரசவையில் இடம் பெற்றனர். சமுதாய அந்தஸ்தும், அங்கீகாரமும் பெற்றனர். தங்களை உயர் சாதியினர் எனக் கூறிக் கொண்டனர். அதைத் தமிழ்ச் சமுதாயம் ஏற்றுக் கொண்டது! "தமிழகத்துச் சமுதாய ஏற்பாட்டில் பிராமண சமூகம் வேரூன்றிவிட்டது".

தமிழ் நாட்டில் வேரூன்றிய பிராமண சமூகம் சங்க காலத்தின் பிற்பகுதியில் துளிர்விட்டு, கிளை பிரிந்து சாதிக் கனிகளைக் கொடுத்தது. காப்பிய காலத்தில் மேல் சாதியர், கீழ்ச்சாதியர் என்ற பாகுபாடும், வேறுபாடும் நிலைபெற்றன. எடுத்துக்காட்டாக, பொற்கொல்லர் கம்மாளராகவும், வணிகர் வைசியனாகவும் சித்தரிக்கப்பட்டனர். அதனால்தான் உயர்சாதி வைசியனான கோவலனிடமிருந்து கீழ்ச்சாதி பொற்கொல்லக் கம்மாளன் விலகிச் சென்றதாக சிலப்பதிகாரத்தில் காட்டப்பட்டது. அதேபோன்று, புலையன் இழிபிறப்பாளனாகக் கருதப்பட்டான். காப்பிய காலத்தில்தான் பிராமண சாதிமுறை தமிழ் நாட்டின் மீது திணிக்கப்பட்டது. எனவே, பார்ப்பன சாதி முறை சங்ககாலச் சரிவு நிலையில் நிலைபெற்றுவிட்டதாகவே கருத வேண்டியுள்ளது. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற உரிய எண்ணம் தமிழ்நாட்டைவிட்டு விடைபெற்றுக் கொண்டது.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

4. எந்த நிலம் மலையும், மலை சார்ந்த பகுதி?

5. கார்த்திகைத் திருவிழா எதை மையமாகக் கொண்டது?

6. இறந்தோர்க்கு மைந்தர் செய்யும் கடன் எவ்வாறு அழைக்கப்பட்டது.

2.13. சங்ககால சமயம்

பண்டைக்காலத் தமிழர்கள் இயற்கையை இறைவனாகக் கருதினர். இயற்கை ஆற்றல்களை இறைவனின் வெளிப்பாடுகளாகப் பார்த்தனர். அவர்கள் தீயுனுள் தேறலை(கள்)யும், பூவினுள் நாற்றத்தையும் (நறுமணம்), அறத்தினுள் அன்பையும், வெஞ்சுடலில்

குறிப்பு

ஒளியையும், திங்களில் அன்பையும் கண்டனர். முற்காலத் தமிழரின் இயற்கை வாழ்வுக்கேற்ப முருகனும் (குறிஞ்சி), திருமாலும் (முல்லை), இந்திரனும் (மருதம்), வருணனும் (நெய்தல்) தெய்வ வடிவம் பெற்றனர். இவர்களே மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்றும் வர்ணிக்கப்பட்டனர். பகைவரிடமிருந்து காப்பாற்ற மாயோன் பகைவரை எதிர்க்கொள்ள சேயோன் இயற்கைச் சீற்றத்திலிருந்து காப்பாற்ற இந்திரன் நீர்வழி அச்சம் நீக்க வருணன். கடவுள்கள் கற்பிக்கப்படுகிறார்கள் கண்டு பிடிக்கப்படுவதில்லை! சுருங்கக்கூறின், முற்காலத் தமிழரின் சமயம் பகுத்தறிவுப் பூர்வமானது. இயற்கையோடு இயைந்தது. அனைவருக்கும் பொதுவானது. விழாக்களும் சடங்குகளும் சங்கத் தமிழரின் சமயத்துக்கேற்ப வழிபாடுகளும், விழாக்களும், சடங்குகளும் அமைந்தன. வழிபாடுகளுள் முருக வழிபாடு, கொற்றவை வழிபாடு, வருண வழிபாடு, இந்திரன் வழிபாடு, திருமால் வழிபாடு, பத்தினி வழிபாடு, நடுகல் வழிபாடு ஆகியவை முக்கியமானவை. விழாக்களுள் சிறப்பானவை: இந்திர விழா, காமன் விழா, உள்ளி விழா, விளக்கேற்றும் விழா, திருவாதிரை விழா ஆகியவை. சடங்குகளில் பிரதானமானதாக தை நீராடல் இருந்தது. சங்க காலத்தின் பிற்பகுதியில் நிமித்தம் பார்த்தல், உளாழ் வலி, மறுபிறப்பு, உருவ வழிபாடு போன்ற பகுத்தறிவுக்கொவ்வாத பழக்கங்களும், நம்பிக்கைகளும் தமிழரை உடும்பென பற்றிக் கொண்டன.

2.13.1. வைதீக சமயம்

தமிழ்நாட்டில் குடியேறி, தமிழர்களோடு கலந்துவிட்ட பார்ப்பனர்கள் அவர்கள் பின்பற்றிய சமயத்தால் அறியப்பட்டனர். அவர்களது சமயம் வேதங்களையும், ஆகமங்களையும், நம்பிக்கைகளையும் அடிப்படையாகக் கொண்டது. இவர்களது சமயம் வேள்விகளை மையமாகக் கொண்டு சுழன்றது. அரசனின் ஆதரவோடு வேள்விகள் விரிவடைந்தன. இவர்களது மார்க்கம் ஆரிய வேத (நிகமம்) மார்க்கமாகும். முத்தீயிட்டு வேள்விகள் நடத்தினர். வேள்விக் குண்டங்களைச் சுற்றி நின்று வேத மந்திரம் ஓதினர். சமயச் சடங்குகள் பல செய்தனர். இவர்கள் வேள்வி அந்தணர்கள்" என்று அழைக்கப்பட்டனர். வேள்விகள் செய்யாது தமிழ்நாட்டு மக்களின் சமயத்தைப் பின்பற்றி தங்களுடைய சமயச் சடங்குகளையும் விட்டுக் கொடுக்காத பார்ப்பனர் அறவோர் என்று அறியப்பட்டனர்! இவர்கள் வேளாப் பார்ப்பனர்கள் என்று அழைக்கப்பட்டனர். பார்ப்பனர்களின் வேள்விகளாலும், சமய நடைமுறைகளாலும், சமயச் சடங்குகளாலும் தமிழரின் சமயத்தில் மாறுபாடுகளும், வேறுபாடுகளும் தோன்றலாயின. இருவேறு சமயங்களும் இணைப்புக் கூடல் (Melting Pot) நிலையை அடைந்தது. இது தமிழ்நாட்டு சமய வரலாற்றில் திருப்புமுனையை ஏற்படுத்தியது. வேத வழிபட்ட பார்ப்பன சமயம் தமிழ் நாட்டில் வேரூன்றுவதற்கான விளக்கம் பரிபாடலில் கூறப்பட்டுள்ளது. நான்கு வேதங்கள்: அவற்றுக்குரிய ஆறு அங்கங்கள் வேத வேள்வியின் மூன்று

குறிப்பு

பிரிவுகள், அவற்றின் ஏழு உட்பிரிவுகள் வேள்வி செய்யும் அந்தணன் கலைமானின் தோலைப் போர்த்தல், மூவகைப் பசுக்களைப் பலியிடல் பற்றிய விவரங்கள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. வேத மோதல், தேவர்களுக்கு தட்சிணை கொடுத்தல், பூவுலகைக் காத்தல் பற்றிய தகவல்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. சங்க காலத்தில் வேதப் பிராமணர் உயர்ந்த நிலையில் இருந்தனர். அரசர்களின் ஆதரவைப் பெற்றனர். இரு பிறப்பாளர், மறை காப்பாளர் எனக் கூறிக் கொண்டனர். பார்ப்பார்க்கும் பொன்னும், பொருளும், நிலமும் வரையாது வழங்கப் பெற்றன. பல மன்னர்கள் பார்ப்பனர்களுக்கு ஊர்களை பிரமதேயமாக வழங்கினர். அந்தணர்க்கே நிலமளித்தல் மன்னனின் கடமையாகக் கருதப்பட்டது. அந்தணரைக் கொல்வது பெரும் பாவமாகப் பாவிக்கப்பட்டது. போர்க் காலங்களில் அவர்களுக்குப் பிரத்யேகப் பாதுகாப்பு அளிக்கப் பட்டது. இவை யாவற்றுக்கும் காரணம் அவர்கள் பின்பற்றிய வேத வேள்வி நெறியாகும். இச்சலுகை சமுதாய-சமய ஏற்றத்தாழ்வுகளுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது.

2.13.2. புத்த சமயம்

சங்கத் தமிழ்நாட்டு சமய வானத்தில் தோன்றிய மற்றொரு விண்மீன் புத்த சமயமாகும். பார்ப்பன சமயத்தைப் போன்றே புத்த சமயமும் தமிழ் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட புற சமயமாகும். புத்த சமயம் பார்ப்பன சமயத்துக்கு எதிர்மறையான சமயமாகும். முன்னது ஆத்திய சமயமெனில் பின்னது நாத்திக சமயமாகும். இரண்டும் இரு துருவங்கள். புத்த சமயம் வர்ண வேறுபாட்டையும், பிறப்பினடிப்படையில் கற்பிக்கப்பட்ட சாதிகளையும், வேள்விச் சடங்குகளையும், மக்களிடையே உயர்வு தாழ்வுகளை ஏற்படுத்துவதையும், சமஸ்கிருதத்தை தேவமொழியாக கருதுவதையும் அடியோடு எதிர்த்தது. சங்கம் மூலம் சமுதாய மாற்றம் அசோகர் காலத்தில் தமிழ்நாட்டுக்கு வந்த பௌத்தர்களால் அறிமுகமானது புத்த சமயம். சங்கம் அமைத்து தங்கள் சமயத்தைப் பரப்பினர். பார்ப்பனர்கள் போலன்றி, பௌத்தர்கள் மக்களோடு மக்களாகக் கலந்து, பழகி சமய-சமுதாய-இலக்கியத் தொண்டாற்றினர். அரசர்கள், வணிகர்கள், செல்வந்தர் ஆகியோரது ஆதரவோடு அமைக்கப்பட்ட புத்த விகாரங்களிலும், பள்ளிகளிலும், மடங்களிலும் எவ்வித வேறுபாடுமின்றி அனைத்து மக்களுக்கும் சமய-சமுதாய-கல்வித் தொண்டு மேற்கொள்ளப்பட்டது. மக்கள் தொண்டு பௌத்தர்களின் தொண்டு பலதரப்பட்டது: 1) தமிழைக் கற்று தமிழ் மூலம் தமிழரோடு தொடர்பு கொண்டனர் 2) தமிழில் இலக்கிய, இலக்கணங்களைப் படைத்தனர். 3) மாற்றுத் திறனாளிகளுக்கு உணவு விடுதிகள் கட்டிக் கொடுத்து மறுவாழ்வளித்தல் 4) ஏழை எளியோருக்கு மருத்துவப்பணி 5) வர்ண சாதி முறையைக் கடுமையாக எதிர்த்தல் 6) கல்வி மூலம் புத்தக் கோட்பாடுகளை-உண்மை பேசல், உயிர்க்கொலை செய்யாமை, புலால் உண்ணாமை போன்றவற்றைக் குழைத்துக் கொடுத்தல் 7) குரலற்ற

குறிப்பு

கீழோர் என்று ஒதுக்கப்பட்டோருக்கு குரல் கொடுத்தல் 8) வேற்றுமை பாராது அனைவருக்கும் பயன் கருதாப் பணியாற்றல் 9) இறை மறுப்புக் கொள்கையைப் பிரச்சாரம் செய்தல் 10) பெரிய நகரங்களில் புத்த மடங்களையும், கோயில்களையும், பள்ளிகளையும் ஏற்படுத்தல்.

2.13.3. சமண சமயம்

புத்த சமயத்தைப் போன்றே சமண சமயமும் சங்கத் தமிழ்நாட்டுக்குப் புதிய சமயமாகும். சந்திரகுப்த மௌரியப் பேரரசரின் ஆட்சிக் காலத்தில் அவரது ஆசான் பத்திரபாகு முனிவர் ஆயிரக்கணக்கான மாணவர்களுடன் மைசூரில் உள்ள சிரவண பெல்கொளாவில் குடியேறினர். இவர்களில் ஒரு பகுதியினர் தமிழ் நாட்டுக்கு வந்து தங்கினர். இவர்களுள் பெரும்பாலோர் பாண்டிய நாட்டில் நிலை கொண்டனர். இவர்களும் அரசர்கள், வணிகர்கள், செல்வந்தர் ஆகியோரின் ஆதரவோடு சங்கம் அமைத்து தங்கள் மதத்தைப் பரப்பினர் தொண்டாற்றினர். தமிழ் நாட்டு சமணர்கள் மூன்று வகைப்பட்டனர்: 1) வெள்ளாடை அணிந்த சுவேதாம்பிரர் 2) ஆடை அணியா திகம்பரர் 3) அங்க மறைகளை வழிபடும் சுதானவாசிகள். சமணர்களும் பௌத்தர்களும் கொள்கையால் ஒன்றுபட்டு நடைமுறைச் சமயச் சடங்குகளால் மாறுபட்டவர்கள். எனினும் சமுதாயத் தொண்டைப் பொறுத்தவரை இரு சாயத்தாரும் மக்கள் நலப் பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்கள். சமணர்கள் குறிப்பாக கிராமங்களில் தங்கள் கடமைகளைச் செய்தனர். இவர்களும் பார்ப்பனரின் வர்ண சாதி முறையைச் சாடினர். வேதங்களையும், யாகங்களையும், சத்தற்ற சமயச் சடங்குகளையும் ஒதுக்கினர். பார்ப்பனரின் வைதீக சாயத்துக்கு எதிராகச் செயல்பட்டனர். உயிர்க்கொலை செய்யும் தொழிலைத் தவிர பிற தொழில்களைப் போற்றினர். சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டோருக்கு அறிவும், உணவும், மருந்தும் கொடுத்தனர். ஆதரவற்றோருக்கு அடைக்கலம் கொடுத்தனர். கொல்லாமையை பற்பறுத்தினர். சமய நூல்களை இலவசமாக விநியோகித்தனர். தமிழைக் கற்று தமிழின் மூலம் தமிழர்களின் உள்ளங்களை கொள்ளை கொண்டனர்.

2.13.3.1. சமணர்களின் இலக்கியப்பணி

சமணர்களின் சமுதாயத் தொண்டைப் போன்றே இலக்கியத் தொண்டும் வரலாற்று முக்கியத்துவமிக்கது. தமிழிலக்கியத்தில் சமணர்கள் தொடாத துறையே இல்லை எனலாம். தொல்காப்பிய உரையாசிரியரான இளம்பூரனார் சமணர் என்பது குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியரே சமணர் எனக் கூறுவோரும் உண்டு. அதேபோன்று கொல்லாமை, புலால் மறுத்தல், கள்ளுண்ணாமை போன்ற சமணக் கருத்துக்கள் வலியுறுத்தப்படுவதால் திருவள்ளுவரும் சமணரே என்பர். நாலடியார் சமண கருத்துக்களின் கருவூலம். கணிமேதையார் இயற்றிய ஏலாதியின் ஒவ்வொரு பாடலிலும் 6 அறங்கள் வலியுறுத்தப்படுகின்றன.

குறிப்பு

காரியாசனாரின் சிறுபஞ்சமூலத்தில் ஒவ்வொரு செய்யுளும் 5 அறங்களைக் கூறுகின்றது. சிலப்பதிகாரத்தில் சமணக் கொள்கைகள் சிதறிக் கிடக்கின்றன. சீவக சிந்தாமணி, சூளாமணி, நீலகேசி, நன்னூல், யாப்பெருங்கலவிருத்தி, யாப்பெருங்கலக்காரிகை, நேமிநாதம் ஆகியவை சிறந்த சமண நூல்களாகும்.

2.13.4. இருசமயங்களின் தாக்கம்

தமிழ்நாட்டு மக்களின் சமுதாய வாழ்வில் புத்த, சமண சமயங்களின் தாக்கம் அளப்பரியது. புத்த, சமண சமயத்தினர் தங்களது பள்ளிகளைத் துவக்கி அனைவருக்கும் சாய சமச்சீர் கல்வி அளித்தனர். காஞ்சிபுரம் சமணக் கோட்டையாகத் திகழ்ந்தது. பூம்புகாரில் சமணப் பள்ளிகள் செயல்பட்டன. உறையூரில் ஸ்ரீகாந்தப் பள்ளி, நிக்கந்தக் கோட்டம் போன்ற சமணக் கோயில்கள் இருந்தன. இதேபோன்று, புத்தப் பள்ளிகளும் செயல்பட்டன. இப்பள்ளிகள் மலைச்சோலைகளுக்கிடையே அமைந்திருந்தன. தமிழர்களில் பலர் இச்சமயங்களின்பால் ஈர்க்கப்பட்டனர். பெண்கள் சிலர் இல்லற வாழ்வைத் துறந்து துறவறத்தை மேற்கொண்டனர். மாதவியும், மணிமேகலையும் புத்தத் துறவிகள். கவுந்தி அடிகள் சமணத் துறவி. எனினும், தமிழர்கள் தங்களது பகுத்தறிவாலும், விழிப்புணர்வாலும் தங்களது பாரம்பரிய சமயத்தைப் பாதுகாத்துக் கொண்டதோடு, சமயச் சமநிலை பிறழாது பார்த்துக் கொண்டனர். வைதீக, புத்த, சமணச் சூறாவளிகளால் சிக்காமல் பாதுகாத்துக் கொண்டனர். "இத்தமிழர் வாழ்க்கையில் அவநம்பிக்கையும், நாத்திகமும் ஓரளவு கலந்திருந்தனவாயினும் அவற்றால் மனம் மாறினோர் மிகச் சிலரே".

2.14. சங்க காலத்தின் வீழ்ச்சி

சங்க காலத்தின் எழுச்சியைப் போன்றே அதன் வீழ்ச்சியும் பிரமிக்கத்தக்கதாய் உள்ளது. 500 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்திருந்த வரலாறு சங்க காலத்தின் சரிவும் சீரழிவும் சரியாக விளக்கப்படாத, இன்னும் அவிழ்க்கப்படாத வரலாற்று முடிச்சாகவே உள்ளது. சங்ககாலத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1) அரசியல் காரணங்கள்

மன்னராட்சி முறையில் வாரிசுரிமை பற்றிய தெளிவின்மை வாரிசுகளிடையே பொறாமைப் போட்டியை வளர்த்தது. அரச குடும்பத்தினரின் அரசியல் குறுக்கீடுகளும், ஆடம்பரச் செலவுகளும் ஆட்சியைப் பலவீனப்படுத்தின. போரிடுவது வீரமாகக் கருதப் பட்டமையால் ஒவ்வொரு மன்னரும் வீரத்தை வெளிப்படுத்த படையெடுப்புகளிலும், போர்களிலும் ஈடுபட்டனர். போரிட்டு நாடு பிடித்தல்

குறிப்பு

அறமாகக் கருத்தப்பட்டது. மன்னர்களின் மண்ணாசையும், போர்ப்புகழ் போதையும் மக்களின் தோன்றாத் துன்பங்களுக்குக் காரணமாயிற்று. ஒரு போர் அடுத்த போருக்கான விதையை விதைத்தது! இந்த விஷ வட்டத்தில் சிக்கிய தமிழ்நாடு சரிந்து சீரழிந்தது. சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தமிழர்கள். அவர்கள் பேசிய தமிழால் அவர்களை ஒன்று சேர்க்க முடியவில்லை. ஒருவரை ஒருவர் பகைவராகவே கருதினர். தற்கொலைக்கொப்பான போர்களில் ஈடுபட்டனர். தன் இனம் பகைத்த பண்பே இவர்களது வீழ்ச்சிக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது. "வீரத்தின் பெயரால் போர்க்களத்தே ஏராளமான மக்களைக் கொன்று குவித்து அரச குலங்கள் எழுதலும் விழுதலுமை வரலாறு என்றாயின் கி.பி.600 வரையில் வரலாறே இல்லாத மகிழ்ச்சி மீதுறும் நாடு தமிழ்நாடு எனலாம்".

2. பொருளாதார காரணங்கள்

சங்ககாலத் திணைப் பொருளாதாரத்தில் நிலம் பொது உடைமையாய் இருந்தது. உழுது உழைத்தோர் தனி உடைமைத் தளையின்றி சுதந்திரமாக, தன்னிறைவோடு வாழ்ந்தனர். பின்னர் ஏற்பட்ட நிலவுடைமைப் பொருளாதாரம் சுயநலத்தையும் சுரண்டல் மனப்போக்கையும் வளர்த்துவிட்டது. நிலக்கிழார்கள் நிலமற்றோரின் உழைப்பில் வாழ்ந்தனர். கிராமங்களில் உழைக்காமல் உண்ணும் நிலவுடைமையாளர்களைப் போன்று நகரங்களில் தொழில் அதிபர்கள் அதிகரித்து தீய பொருளாதார நடவடிக்கைகள் நடைமுறைக்கு வந்தன. அன்னிய நாணயப் புழக்கம் தமிழர்களின் நாணயத்தைக் கெடுத்தது. பொருளாதார ஏற்றத்தாழ்வு என்றுமில்லாத அளவுக்குப் பணக்காரர் களுக்கும், ஏழைகளுக்கும் இடையேயான இடைவெளியைப் பெரிதுபடுத்திவிட்டது. நிலக்கிழார்களும், தொழில் அதிபர்களும் இன்ப நுகர்ச்சியில் திளைக்க, ஏழைகள் வறுமையில் வாடினர்.

3. சமுதாய காரணங்கள்

வெளியிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்து குடியேறியோரின் சமுதாய நிலைப்பாட்டால் தமிழ்க் குல சமுதாயங்களுக்கிடையேயான சமநிலையும், சகவாழ்வும், விட்டுக் கொடுத்து வாழும் நிலையும் மாறிப்போயிற்று. குறிப்பாக வேத வைதீக சாதி வேற்றுமை தமிழர்களின் சமுதாய ஒற்றுமையைச் சீர்குலைத்து விட்டது. உயர்சாதி-கீழ்ச்சாதி வேறுபாடு வேரூன்றியது. பிரம்மதேய சமுதாயம் தமிழ்நாட்டில் தனித்தீவாக உருவெடுத்தது. அரசாங்கத்தின் உதவியையும், பாதுகாப்பையும் முழுமையாகப் பெற்றிருந்த ஆரியப் பார்ப்பார் அந்தணர்களாகி, நம்பிக்கைகளாலும், நடைமுறைகளாலும், வழக்கங்களாலும், பிறரிடமிருந்து மாறுபட்டு சமுதாய வேறுபாட்டைத் தோற்றுவித்தனர். அரசாங்கச் சலுகைகளும், வசதியான வாழ்க்கையும், ஓய்வு நேரமும் இவர்களது தனித்துவத்தைப் பலப்படுத்தியது. இதேபோன்று நகர மக்களும் பொருளாதார வளர்ச்சியாலும், பணப்

குறிப்பு

புழக்கத்தாலும் பல்வேறு தீய சமுதாய பழக்கங்களுக்குப் பலியாயினர். பரம்பரையாகத் தொடர்ந்த குடிப்பழக்கம் நகர மக்களிடையே விரைவாகப் பரவலாயிற்று. குடிப்பழக்கத்தோடு பரத்தையர் தொடர்பும் அதிகரித்தது. "செல்வக்குடி ஆடவர்களுக்கு விபசார வாழ்வு சமூக உரிமையாக மாறிக் கொண்டிருந்தது"."

4.சமயக் காரணங்கள்

சங்ககால சமுதாயம் சமயம்சாரா சமூகமாக இருந்தது. மன்னர்களும் அவர்களது சமய நம்பிக்கையை மக்கள்மீது திணிக்கவில்லை. மன்னர்களும், மக்களும் மத உரிமையை மதித்தனர். இவர்களது சமயம் சாராப் பொதுநோக்கு வியப்புக்குரியது. ஆனால் வடக்கிலிருந்து வந்த வேத வைதீக பிராமண சமயமும், பௌத்த சமண சமயங்களும் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு தமிழ்நாட்டின் சமயப் பொதுப் பார்வையைக் குருடாக்கிவிட்டது! தமிழர்கள் சமயங்களின் வழிப் பிரிந்தனர். தமிழர்களின் இயற்கை சார்ந்த சமயம், வேத வைதீகப் பிராமண சமயம், புத்த சமயம், சமண சமயம் ஆகியவற்றுக்கிடையே எழுந்த போராட்டங்களும், போட்டிகளும் தமிழ்ச் சமுதாயத்தின் சமய அமைதியை நிரந்தரமாகக் கெடுத்துவிட்டன. சமயப் பொதுநோக்கு கடந்தகாலக் கனவாயிற்று. சமயக் காழ்ப்புணர்ச்சி தமிழர்களை சமயவழிப் பிரித்தது. சாதி வேறுபாட்டோடு சமய வேறுபாடும் சேர்ந்து கொண்டது. சமய நம்பிக்கைகள் தமிழர்களைத் தொற்றுநோய்போல் பற்றிக் கொண்டது. தமிழ் நாட்டில் நம்பிக்கைகளுக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் வித்தியாசமற்ற வேறுபாடு என்ற நிலை உருவாயிற்று! சாதியைப் போன்றே சமயமும் தமிழ்ச் சமுதாயத்தைப் பிரித்து பலவீனப்படுத்தியது.

5) கலாச்சார காரணங்கள்

சங்ககாலச் சமுதாயத்தில் ஏற்பட்ட பொருளாதார, சமூக, சமய மாற்றங்கள் மக்களின் கலாச்சாரத்தையும் பாதித்தன. இம்மாற்றங்களுக்கு முதலில் பலியானது கல்விதான். சங்ககாலத் தமிழ் நாட்டில் கற்றலின் வாய்ந்த பிறப்பில்லை" என்று கருதப் பட்டது. நூல், அரசன், ஆசிரியன், தாய், தந்தை ஆகிய ஐவரும் ஐங்குரவர் என்று கருதப்பட்டனர். திண்ணைப் பள்ளிகளாயினும் கல்வி அனைவருக்கும் பொதுவாக இருந்தது. ஆனால் இந்நிலை ஆரிய அந்தணர், பௌத்தர்கள், சமணர்கள் வந்த பின்னர் அடியோடு மாறிப்போயிற்று! மக்களுக்கு வேதக் கல்வியும், பௌத்தக் கல்வியும், சமணக் கல்வியும் கற்பிக்கப்பட்டன. இப்புறச் சமயத்தார் தங்களுக்கென தனிப் பள்ளிகளை ஏற்படுத்திக் கொண்டு அவற்றின் மூலம் சமயக் கல்வி கொடுத்தனர். தமிழ் நாட்டில் கல்வி சமயமயமாக்கப்பட்டது. பொருளாதார-சமுதாயச் சாதி-சமய வழிப் பிரிந்த தமிழர்கள் கல்வி வழியாகவும் பிரிந்தனர்! சமயம்சாரா பொதுக்கல்விக்குப் பதில் சமயம் சார்ந்த சிறப்புக் கல்வி கொடுக்கப்பட்டது. இதன் விளைவாக இலக்கியத்துக்கும் சமயச் சாயம் பூசப்பட்டது. சைவ

குறிப்பு

இலக்கியம், பௌத்த இலக்கியம், சமண இலக்கியம் என்று ஒரு புதிய இலக்கிய சாதி உருவாக்கப்பட்டது. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் சமய இலக்கியங்களாகச் சித்தரிக்கப்பட்டன. சிலப்பதிகாரக் காலத்தில் சமயத்தோடு சாதியும் கைகோர்த்துக் கொண்டது. "நால்வகை வருணத்து அடங்காத்தம்பலை" என்ற சிலப்பதிகார சொற்றொடர் இதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. சங்ககாலப் பரத்தையர் சிலப்பதிகாரக் காலக் கணிகையர் ஆயினர். மாதவி ஒரு விதிவிலக்காகக் காட்டப் பட்டார். சுருக்கமாகச் சொன்னால், காப்பிய காலத்தில் கலாச்சார சீரழிவு அதன் உச்சகட்டத்தை எட்டியது எனலாம். அரசியல், பொருளாதார, சமுதாய, சமய, கலாச்சார சீர்கேடுகள் களப்பிரர் எளிமையாகத் தமிழ் நாட்டின் மீது படையெடுத்து, மூவேந்தர்களையும் தோற்கடித்து, ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான களத்தை ஏற்படுத்திக் கொடுத்தன.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

7. இயற்கைச் சீற்றத்திலிருந்து காப்பாற்றும் இறைவன் யார்?
8. யாருடைய காலத்தில் மற்றும் யாரால் தமிழகத்தில் புத்த சமயம் அறிமுகமானது.
9. தொல்காப்பிய உரையாசிரியரான இளம்பூரனார் எந்த சமயத்தை சார்ந்தவர்?

2.15. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

1. உழவும், தொழிலும்.
2. உழவையே.
3. பூம்புகாரும், முசிறியும்.
4. குறிஞ்சி நிலம்.
5. கார்த்திகை விண்மீன்.
6. தென்புலத்தார் கடன்.
7. இந்திரன்.
8. அசோகர் மற்றும் பௌத்தர்கள்.
9. சமணர்.

2.16. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

குறுகிய வினாக்கள்

1. பண்டமாற்று முறை என்றால் என்ன?
2. ஐந்திணைகள் குறித்து சிறு குறிப்பு எழுதுக.

3. சங்ககாலத்தில் விவசாயம் எவ்வாறு இருந்தது?

குறிப்பு

விரிவான வினாக்கள்

1. சங்ககாலத்தில் பொருளாதாரா நிலை குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
2. சங்ககாலத்தில் மக்களின் வாழ்க்கை நிலை குறித்து விவாதி.
3. சங்க காலத்தில் சமயம் மற்றும் அதன் தாக்கம் குறித்து விவரி.

2.17. கூடுதல் வாசிப்புகள்

Subramania N. A History of Tamil Nadu up to 1336

சுப்பிரமணியன் ந. சங்ககால வாழ்வியல்

Rajayyan K. History of Tamil Nadu

பிள்ளை கே.கே. தென்னிந்திய வரலாறு

Nilakanda Sastri K.N. A History of South India

Sathianathair R. History of India

வெங்கடேசன் க. முற்கால தமிழ்நாட்டு வரலாறு

Srinivasa Iyengar P.T. History of Tamils: from Earliest Times to 600 AD.

அலகு – 3

களப்பிரர்கள்-ஆரம்பகால பாண்டியர்கள்

பாட அமைப்பு

3.1. முன்னுரை

3.2. நோக்கங்கள்

3.3. களப்பிரர்

- 3.3.1. கால வரன்முறை
- 3.3.2. முத்தரையர்கள்
- 3.3.3. கொள்கைக் கூட்டத்தார்
- 3.3.4. கங்கர்கள்
- 3.3.5. குறவர்கள்
- 3.3.6. கர்நாடகத்தவர்

3.4. களப்பிரர் ஆட்சி

குறிப்பு

3.4.1. அச்சுதவிக்கிரமன்

3.4.1.1. புத்தமதப் புரவலர்

3.4.1.2. சமண மதத்தின் செல்வாக்கு

3.5. களப்பிரர் கால வாழ்வியல்

3.5.1. அரசியல் நிலை

3.5.2. பொருளாதார நிலை

3.5.3. சமுதாய நிலை

3.5.4. சமய நிலை

3.5.5. கல்வி நிலை

3.5.6. மொழி நிலை

3.5.7. இலக்கியம்

3.6. பிறமொழி இலக்கியம்

3.6.1. சித்தர்கள்

3.7. களப்பிரர் வீழ்ச்சி

3.7.1. களப்பிரர் காலம் இருண்ட காலமா?

3.8. முற்காலத்திய பாண்டியர்கள்

3.9. வரலாற்றுச் சான்றுகள்

3.9.1. கல்வெட்டுச் சான்றுகள்

3.9.2. செப்பேட்டுச் சான்றுகள்

3.9.3. இலக்கியச் சான்றுகள்

3.9.4. உத்தேச காலவரையறை

3.10. பாண்டியப் பேரரசர்கள், (575-920)

3.10.1. கடுங்கோன், (575-600)

3.10.2. மாறவர்மன் அவனி சூளாமணி, (600-645)

3.10.3. செழியன் சேந்தன், (645-670)

3.10.4. அரிகேசரி பராங்குசன் மாறவர்மன், (670-710)

3.10.4.1. சோழருடன் மணவுறவு

3.10.4.2. சமயப் பொறையின்மை

3.10.5. கோச்சடையன் ரணதீரன், (710-740)

3.10.6. முதலாம் மாறவர்மன் ராஜசிம்மன், (740-765)

3.10.6.1. பேரரசுப் பெருக்கம்

3.10.6.2. சாளுக்கியருடன் மணவுறவு

3.10.6.3. பெண்ணாகடப் போர்

குறிப்பு

3.10.6.4. பேரரசு விரிவாக்கம்
3.10.6.5. வேந்தர் வள்ளல்
3.10.6.6. வேள்விக்குடி செப்பேடு
3.10.7. ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன், (815-860)
3.10.7.1. இலங்கைப் போர்
3.10.7.2. தெள்ளாற்றுப் போர்
3.10.8. இரண்டாம் வரகுணன், (860-880)
3.10.8.1. ஸ்ரீபுறம்பியப் போர்
3.10.8.2. போரின் விளைவுகள்
3.10.9. பராந்தக வீரநாராயணன், (880-900)
3.10.10. இரண்டாம் ராஜசிம்மன், (900-920)
3.11. பாண்டியர் வாழ்வியல்
3.11.1. அரசியல் நிலை
3.11.2. இராணுவ வல்லாட்சி
3.11.3. உள்ளாட்சி
3.11.4. பொருளாதார நிலை
3.11.5. வர்த்தகச் சிறப்பு
3.11.6. சமுதாய நிலை
3.11.7. சமுதாயத் தாக்கம்
3.11.8. சமய நிலை
3.11.9. பாண்டியர் பண்பாடு
3.11.10. கல்வி நிலை
3.11.11. கட்டிடக்கலை
3.11.12. சிற்பம், ஓவியம், நடனம்
3.11.13. சமணச் சிற்பங்கள்
3.12. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்
3.13. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
3.14. கூடுதல் வாசிப்புகள்

3.1. முன்னுரை

சங்ககாலத்துக்கு பிறகு தமிழகத்தை ஆட்சி செய்தோர் களப்பிரர்கள் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் வெளியிலிருந்து வந்து தமிழ் நாட்டை ஆக்கிரமித்தவர்கள் என்பதில் எவ்வித

குறிப்பு

ஐயமுமில்லை. களப்பிரர்கள் ஆதி அரசர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்களை முறியடித்ததன் மூலம் சங்க காலத்தை முடிவுக்குக் கொண்டு வந்தவர்கள். தமிழ்நாட்டை முன்னூறு ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி செய்தார்கள். இவர்களது ஆட்சியின் போது தமிழ்நாடு முதன் முறையாக ஒரு குடையின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. பரஸ்பர தற்கொலைப் போர்களுக்கு முடிவுகட்டப்பட்டது. வல்லாட்சியின் விளைவாக நாட்டில் அமைதியும், கட்டுப்பாடும் நிலவிற்று. இலக்கியம் தடையின்றி வளர்ந்தது. விவசாயப் பொருளாதாரம் வளம் பெற்றது. துவக்கப் பள்ளிகளில் தமிழ் மூலம் கல்வி கற்பிக்கப்பட்டது. சாதி, சமய வேறுபாடின்றி அனைவருக்கும் சமச்சீர் கல்வி அளிக்கப்பட்டது. திணை மரபு மாறாமல் பூம்புகாரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்யப்பட்டது. களப்பிர மன்னர்கள் தங்கள் கொடியில் வில், புலி, கயல் சின்னங்களைப் பொறித்துக் கொண்டது மக்களைக் கவர்வதற்கான அரச தந்திர உத்தியாகும். களப்பிரர் காலத்தில் தமிழ் நாட்டின் ஆதி அரசர்களான சேர, சோழ, பாண்டியர்களின் அரச பரம்பரை அழிந்து போயிற்று. இக்காலகட்டத்தில் மன்னர்களும், குறுநில மன்னர்களும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தனர். தமிழ்நாட்டின் சமுதாய, சமயச் சமநிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. புத்த, சமண சமயங்களின் ஆதிக்கம் மேலோங்கியது. சங்ககால சமயச் சார்பற்ற அரசாங்கம் சமயச் சார்புடைய அரசாங்கமாக உருமாற்றமடைந்தது.

பாண்டிய மரபினர் தென்னிந்திய வரலாற்றில் பழம்பெரும் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியர் என்ற பெருமைக்குரியவர்கள். களப்பிரர் சங்ககாலப் பாண்டியர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தனர். அதேபோன்று தென் தமிழ் நாட்டில் களப்பிரர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தவர்கள் பாண்டியர்கள். இம்மாற்றத்தைச் செய்தவர் பாண்டியன் கடுங்கோன். பாண்டியர் பரம்பரை தமிழ்நாட்டின் மிகவும் தொண்மையான அரச குலங்களில் ஒன்றாகும். களப்பிரர் காலத்துக்குப் பின்னர் பதினோறு பாண்டியப் பேரரசர்கள் 350 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி செய்துள்ளனர். அறை நூற்றாண்டு காலம் ஆட்சி செய்த பராந்தக நெடுஞ்சடையனின் ஆட்சிக் காலத்தின் போது பாண்டியப் பேரரசின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தன என்பது குறித்த நிகழ்வுகளை பற்றி இந்த அத்தியாயத்தில் காணலாம்.

3.2. நோக்கங்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர் கீழ் கண்டவற்றை அறிய முடியும்

- களப்பிரர்களின் வளர்ச்சி மற்றும் வீழ்ச்சியை அறிய உதவுகிறது.

குறிப்பு

• களப்பிரர்களின் அரசர்கள் மற்றும் அவர்களின் நிர்வாகத் தன்மை குறித்து விளக்குகிறது.

• முற்கால பாண்டியர்களைப் பற்றி அறிய உதவுகிறது

•முற்கால பாண்டியர்களின் ஆட்சி மற்றும் நிர்வாக நிலை குறித்து அறியலாம்.

3.3. களப்பிரர்

களப்பிரர் என்ற சொல் சமஸ்கிருதச் சொல்லாகும். கள்வர், களவர் ஆகிய சொற்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன வேயன்றி களப்பிரர் என்ற சொல் சங்க இலக்கியத்தில் கையாளப்படவில்லை. புத்ததத்தரின் விநயவிநீச்சம் என்ற பாலி மொழியில் எழுதப்பட்ட நூலில் காப்பக்குலம் என்ற குறிப்பு தெளிவாக உள்ளது. செப்பேடுகளில் களப்பிரர், கலியரை என்ற சொற்கள் காணப்படுகின்றன. குறிப்பாக, களப்பிரன் என்ற கவியரசன் என்ற சொற்றொடர் வேள்விக்குடி செப்பேட்டில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. செந்தலைக் கல்வெட்டு இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையரை கல்வரக் காவலன் என்று குறிப்பிடுகிறது. சுருங்கக்கூறின், களப்ரா என்ற வடசொல்லே கள்வரா-களப்பிரர் என்று மருவி வந்திருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது..

3.3.1. கால வரன்முறை

இன்றைய நிலையில் கிடைக்கக்கூடிய சான்றுகளைக் கொண்டு களப்பிரர் கால வரலாற்று வரன்முறை (Chronoogy) செய்வது இயலாத காரியம். புத்ததேவர் வாழ்ந்த காலம் கி.பி.450 என்று கூறப்படுகிறது. களப்பிரரின் அழிவுக்குக் காரணமாகக் கருதப்படும் பல்லவ மன்னன் சிம்ம விஷ்ணு வாழ்ந்த காலம் கி.பி.560-580 என்றும், பாண்டிய மன்னன் கடுங்கோனின் ஆட்சிக் காலம் கி.பி.575-600 என்றும் கூறப்படுகிறது. எனவே, சங்க காலம் முடிவுற்றபின் கி.பி.மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.ஆறாம் நூற்றாண்டு வரையிலான மூன்று நூற்றாண்டுகளைக் களப்பிரர் காலம் எனக் கருதலாம்.

களப்பிரர் யார்? என்ற வினாவிற்கு விடை காண வேண்டுமாயின் இவர்களது பூர்வீகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். இவர்கள் உள் நாட்டவரா, அண்டை நாட்டவரா அல்லது அயலவரா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். களப்பிரர் வெளி நாட்டவர் என்பதற்கான எந்தக் குறிப்பும் கிடைக்காமையால் இவர்கள் உள்நாட்டவரா அல்லது அண்டை நாட்டவரா என்பதைக் கண்டறிய வேண்டியுள்ளது. இதுபற்றி ஆய்வு செய்தவர்கள் களப்பிரர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று ஒரு சாராரும், அண்டை நாட்டவர் என்று மற்றொரு சாராரும் கருதுகின்றனர். இதற்கான தற்காலிக ஊகக் கோட்பாடுகள்

குறிப்பு

(Hypothetical Concepts) அல்லது அனுமானங்களையும் கொடுத்துள்ளனர்.

3.3.2. முத்தரையர்கள்

பல்லவர்களிடையேயும், பாண்டியர்களிடையேயும் பணியாற்றிய முத்தரையர் மரபினரே களப்பிரர்கள் என்று கூறப்படுகிறது. குறிப்பாக, கொடும்பானூர் முத்தரையரே களப்பிரர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றனர்." இக்கோட்பாட்டுக்கு இவர்கள் கூறும் காரணம் இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையன் "கள்வர் காவலன்" "களப்பிரக் காவலன்" என்ற பட்டப்பெயர் பெற்றிருந்தார் என்பதாகும். எனினும், களப்பிரரில் ஒரு பிரிவினரே முத்தரையர் என்பதை ஆராய்ச்சி மூலம் உறுதிப்படுத்தியுள்ளார் எம்.எஸ்.கோவிந்தசாமி. தமிழ்நாட்டுக் குறுநில மன்னர்களே களப்பிரர் என்று கூறுவோரும் உண்டு.

3.3.3. கொள்கைக் கூட்டத்தார்

தமிழ் நாவலர் சரிதை களப்பிரரை கொள்கைக் கூட்டத்தாராக சித்தரிக்கிறது. இவர்களது தலைவன் களப்பாளன் மூவேந்தரைத் தோற்கடித்து, சிறைப்பிடித்து, தன்னைப் புகழ்ந்து பாடச் சொல்லியதாகவும், அவ்வாறே அவர்கள் பாடியதாகவும், அதன்பின் தில்லை நடராசர் களப்பாளனுக்கு முடி சூட்டியதாகவும் புராணச் செய்தி கூறுகின்றது. அதுமட்டுமல்ல. கள்ளர் குடியைச் சேர்ந்ததாகக் கருதப்படும் கூற்றுவ நாயனாரும், இடைச்சுழி நாயனாரும் களப்பிரர் இனத்தவர் என்றும் கூறப்படுகிறது. இத்தகைய புராணம் கலந்த இலக்கியத் தகவல்கள் களப்பிரர் கொள்ளைக் கூட்டத்தவர் என்ற ஊகக் கோட்பாட்டுக்கு ஆதாரமாக உள்ளது.

3.3.4. கங்கர்கள்

களப்பிரர் கங்கர்களே (Gangas) என்றும் கூறப்படுகிறது. இவர்கள் கி.பி. நான்காம் நூற்றாண்டில் மைசூரின் பெரும் பகுதியை உள்ளடக்கிய கங்க நாட்டைத் தோற்றுவித்தனர். தண்டிகா என்ற கொங்கனிவர்மன் இந்நாட்டை உருவாக்கினார். தமிழ் நாட்டைத் தாக்கிக் கைப்பற்றியவர்கள் கங்கர்களே என்று கூறப்படுகிறது. இக்கூற்றுக்குக் காரணமாக சுங்கரும், களப்பிரரும் யானைச் சின்னத்தைக் கொண்டிருந்தனர். ஆனால், காலத்தால் பிற்பட்ட கங்கர்கள் பாண்டியரை வென்று தமிழ் நாட்டில் களப்பிரர் ஆட்சியை ஏற்படுத்தினர் என்ற கோட்பாடு நம்பக்கூடியதாக இல்லை என்று நிராகரிக்கப்படுகிறது.

3.3.5. குறவர்கள்

தமிழ்நாட்டுக் குறவர்கள் வேங்கட மலைக்குக் குடியேறி, யானைகளைப் பிடித்துப் பழக்கி, மலைப் பாம்புகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொண்டனர். இவர்களே களப்பிரர் என்று அழைக்கப்பட்டனர்

குறிப்பு

என்று குறிப்பிட்டுள்ளார் பொய்கை ஆழ்வார். குறபா என்பதன் மருவலே களப்பிரர் என்பர். இக்கோட்பாட்டுக்குச் சான்றாக குறவர்கள் சேலம், கோவை, நீலகிரியில் வாழ்வதாகவும் குறபால கோட்டா, குறபாலப் பட்டி, குறபநாகலாபுரம், குறபாலபாளையம், குறம்பாப்பட்டி, குறுபாரஹல்லி போன்ற ஊர்ப் பெயர்கள் உள்ளதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது. திருப்பதி மலைகளும், அவற்றைச் சுற்றி இருந்த இடங்களும் இவர்களது கட்டுப்பாட்டில் இருந்ததாகவும், அவற்றைப் பல்லவர்கள் கைப்பற்றினர் என்றும் எடுத்துரைக்கப்படுகிறது.

3.3.6. கர்நாடகத்தவர்

கர்நாடகக் கல்வெட்டுகளில் கலிகுலன், கலிதேவன் ஆகிய பெயர்கள் காணப் படுகின்றன. மேலும் கர்நாடக மன்னன் ஒருவன் பாண்டிய நாட்டை ஆட்சி செய்ததாகவும், அவரது ஆட்சிக் காலத்தில் சைவம் அழிந்து சமணம் செழித்தது என்றும் பெரிய புராணத்தில் குறிப்பு உள்ளது. எனவே, களப்பிரர்கள் கர்நாடகப் பகுதியிலிருந்து தமிழ் நாட்டுக்குக் குடி பெயர்ந்தவர்களே என்று கூறப்படுகிறது. தற்போதைய ஆய்வு நிலையில் களப்பிரர் கர்நாடக நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற கோட்பாட்டுக்குக் கருத்தொற்றுமை உள்ளது.

3.4. களப்பிரர் ஆட்சி

கர்நாடகக் களப்பிர மன்னர்கள் அரச குலத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தொண்டை மண்டலத்தில் நிலவிய நிலையற்ற நெருக்கடிச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு அப்பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டனர். பின்னர் சோழ நாட்டில் வாரிசுரிமைப் போட்டியால் ஏற்பட்ட குழப்பத்தைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு அப்பகுதியையும் கையகப்படுத்திக் கொண்டனர். தொண்டை மண்டலத்தையும், சோழ மண்டலத்தையும் வசப்படுத்திக் கொண்ட களப்பிரர் பாண்டிய மண்டலத்தையும், சேர மண்டலத்தையும் தங்களது ஆட்சிக் குடையின்கீழ்க் கொண்டு வந்தனர்.

3.4.1. அச்சுதவிக்கிரமன்

ஓராட்சி

களப்பிரரில் சிந்தனைத் தெளிவும், செயல் விவேகமும் மிக்கவர் அச்சுத விக்கிரமன். தமிழ் நாட்டை ஆட்சி செய்த சேர, சோழ, பாண்டிய மன்னர்களை வெற்றி கொண்டு தமிழ் நாட்டை ஒரு ஆட்சிக் குடையின் கீழ்க் கொண்டு வந்தார். முப்பெரும் மன்னர்கள், பல குறுநில மன்னர்களின் கீழ் பிரிவுபட்டு, சிதறிக்கிடந்த தமிழகத்தை ஒரு ஆட்சிக்கு உட்படுத்தினார். ஒரு நாட்டுக்குள் மூன்று நாடுகள்- சேர, சோழ, பாண்டிய என்ற ஆட்சி முரண்பாட்டுக்கு (Anachronism) முற்றுப்புள்ளி வைத்தார்.

குறிப்பு

தமிழ் மன்னர்களின் சின்னங்களான வில், புலி, கயல் ஆகியவற்றை தனது கொடியில் பொறித்துக் கொண்டார். அச்சுத விக்கிரமன் ஒன்றுபடுத்தப்பட்ட தமிழகத்தின் தனிப் பெரும் தலைவராகத் திகழ்ந்தார். அடிமைப்பட்ட தமிழர்கள் நாட்டு ஒருமைப்பாட்டின், ஆட்சி ஒற்றுமையின் இன்றியமையாமை பற்றிய பல பாடத்தைக் கற்றுக் கொண்டனர்.

3.4.1.1. புத்தமதப் புரவலர்

அச்சுத விக்கிரமன் புத்ததத்தரின் புரவலர். புத்ததத்தர் உரகபுரா என்ற ஊரில் வாழ்ந்தவர். தெரவாடின் புத்த சமயத்தின் தன்னிகரற்ற தத்துவர், உரையாசிரியர். சோழ நாட்டில் புத்த மங்களகாமம் என்ற இடத்தில் அமைந்திருந்த புத்த மடத்தில் தங்கி அவரது நூல்களை எழுதினார். இவர் வினய விளிச்சயா, உத்தர வினிச்சயா, அபிதம்ம யாத்திரை, ரூபரூப விபகா, மதுரரவிலாசம், ஜிவியலங்காரம் ஆகிய நூல்களைப் பாலி பொழியில் எழுதினார். புத்தகோசர் என்ற மற்றொரு புத்த மேதை தமிழகத்தில் வாழ்ந்த புத்ததத்தரின் சமகாலத்தவர் என்று கூறப்படுகிறது. புத்ததத்தரின் அபிதம்மயாத்திரை என்ற நூல் அச்சுத விக்கிரமனின் அவைக்களத்தில் அரங்கேற்றப்பட்டது.

3.4.1.2. சமண மதத்தின் செல்வாக்கு

அச்சுத விக்கிரமனின் ஆட்சிக் காலத்தில் புத்த சமண சமயங்கள் தமிழ் நாட்டில் மிகுந்த செல்வாக்கைப் பெற்றன. அந்தணர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த நிலக்கொடைகளாகிய பிரம்மதேய கிராமங்களை நாட்டுடமையாக்கி சமத்துவ சமுதாயத்துக்கு வழிவகுத்தார். இவரது ஆட்சியின் கீழ் வேத வைதீக சமயத்தார் மதமாற்றம் செய்யப்பட்ட தாகவோ அல்லது கொடுமைப்படுத்தப்பட்டதாகவோ தெரியவில்லை. அச்சுத விக்கிரமன் புத்த சமண சமயங்களை ஆதரித்தபோதிலும், வைதீக சமயத்தாரை தடை செய்யவோ, தண்டிக்கவோயில்லை. அதேபோன்று அச்சுதவிக்கிரமன் பாலி மொழியை ஆதரித்ததைப் போன்று தமிழ் இலக்கியத்தையும் ஊக்குவித்தார்

.

3.5. களப்பிரர் கால வாழ்வியல்

3.5.1. அரசியல் நிலை

களப்பிரர் ஆட்சி யதேச்சாதிகார முடியாட்சி வல்லாட்சியாகும். களப்பிர மன்னர் கட்டுப்பாடற்ற அதிகாரங்களைக் கொண்டிருந்தார். இவ்வாட்சி சமயம் சார்ந்த ஆட்சி (வுாநழசயஉல) ஆகும். அனைத்து அதிகாரங்களும் மைய ஆட்சியில் குவிக்கப் பட்டிருந்தன. நகர, கிராம சுயாட்சி மன்றங்கள் மதிப்பிழந்தன் புறக்கணிக்கப்பட்டன. ஐம்பெருங்குழு, எண்பேராயம் போன்ற ஆலோசனை அமைப்புகள் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. புத்த, சமணத் துறவிகள் ஆலோசகர்களாக

இருந்திருக்கக் கூடும். ஆதி அரசர்களுக்குப் பதில் ஆட்சிப் பொறுப்பேற்ற களப்பிரர்கள் தமிழ் நாட்டில் வலிமைமிக்க வல்லாட்சியை ஏற்படுத்தினர்.

குறிப்பு

3.5.2. பொருளாதார நிலை

களப்பிரர் ஆட்சிக் காலத்தில் கிராமப் பொருளாதாரத்தில் மாபெரும் மாற்றம் ஏற்பட்டது. அந்தணர்கள் பாரம்பரியமாக அனுபவித்து வந்த இறையிலி நிலங்கள் அனைத்தும் திரும்பப் பெறப்பட்டு உழவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. நிலமிழந்தோர் இழந்த நிலங்களைப் பெற்றனர். குறிப்பாக, தனிநபர் இறையிலியாக இருந்த வேள்விக்குடி கிராமம் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதேபோன்று தேவதான கிராமங்களும், முறைகேடாகக் கையகப்படுத்தப்பட்ட கிராமங்களும் மீட்கப்பட்டன. இவற்றின் விளைவாக நில உரிமையில் அடிப்படை மாற்றம் ஏற்பட்டது. வேளாண்மைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. நெல்லும், தினையும், பிற விவசாய விளை பொருட்களும் நன்கு விளைந்தன. போர்களற்ற நாட்டில் கிராமப் பொருளாதாரம் பல்கிப் பெருகியது. இதேபோன்று தலைநகர் காவிரிப்பூம்பட்டினம் வர்த்தக, வணிக மையமாகத் திகழ்ந்தது. அதேபோன்று மதுரை, வஞ்சி, காஞ்சி ஆகிய நகரங்களும் செல்வச் செழிப்புடன் இருந்தன.

3.5.3. சமுதாய நிலை

களப்பிரர் காலத்தில் தமிழ் நாட்டில் சாதீய அநீதிகளும், ஏற்றத் தாழ்வுகளும், வேறுபாடுகளும், மாறுபாடுகளும் களையப்பட்டன. உயர்சாதி-கீழ்ச்சாதி என்ற சாதிப் பாகுபாடு அடியோடு அகற்றப்பட்டது. புத்த, சமணத் துறவிகள் அடித்தட்டு மக்களோடு பழகி, அவர்கள் பேசிய மொழி மூலம் தொடர்பு கொண்டு, சமத்துவ சமுதாயம் ஏற்படுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். புத்த-சமண சமயங்கள், வேத-வைதீக சாதி முறைக்கு விரோதமானவை. எனவே, சாதி வேற்றுமைகளைக் களைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. திருமூலர் போன்ற சித்தர்கள் இச்சமூக சீர்திருத்த முயற்சிக்கு உறுதுணையாக இருந்தனர். சமுதாய ஒழுக்க நெறிகளும், நியதிகளும் வலியுறுத்தப்பட்டன.

3.5.4. சமய நிலை

களப்பிரர் ஆட்சியின் கீழ் தமிழ் நாட்டுச் சமய நிலையில் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டது. வேத-வைதீக சமயம் செல்வாக்கிழந்தது. அதற்குப் பதிலாக புத்த, சமண சமயங்கள் செல்வாக்கு பெற்றன. இவை அரசு சமயங்களாயின. அரசும் சமயமயமாக்கப்பட்டது. சங்ககால உலகியல் சார்ந்த சமயச் சார்பற்றப் பொதுநோக்கு (ளுநஉரடயச முரவடழழம) கைவிடப்பட்டது. தமிழ் நாடெங்கும் புத்த, சமண மடங்களும், சங்கங்களும் பல்கிப் பெருகின. புத்த, சமணத் துறவிகள் தமிழ் நாடெங்கும் சமயப் பிரச்சாரம் மேற்கொண்டனர். பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இப்புறச் சமயங்களைத் தழுவினர்.

குறிப்பு

தமிழ் நாட்டுப் பெண்கள் பலர் துறவு மேற்கொண்டு தூய்மையான வாழ்க்கைக்கு வழிகாட்டினர். சமயத் தத்துவக் கோட்பாடுகளும், இக்கோட்பாடுகள் பற்றிய விவாதங்களும் தமிழ்ச் சமுதாயத்தை சமயம்சாரா நோக்கிலிருந்து சமயம் சார்ந்த நோக்கிற்குத் திசை திருப்பிவிட்டது. சுருங்கக்கூறின், தமிழ் நாட்டில் அரசாங்க ஆதரவுடன் புத்த, சமண நாத்திக சமயங்களின் கை மேலோங்கியது. பல கடவுளர்களுக்குப் பதில் ஒன்றே குலம் ஒருவனே கடவுள் என்ற ஒரு கடவுள் கொள்கை செல்வாக்கு பெற்றது.

3.5.5. கல்வி நிலை

களப்பிரர் காலத்தில் தமிழ்நாட்டுக் கல்வி நிலையில் வியத்தகு வளர்ச்சி ஏற்பட்டது. நூற்றுக்கணக்கான புத்த, சமணப் பள்ளிகள் திறக்கப்பட்டன. இப்பள்ளிகளை புத்த, சமணத் துறவிகள் நடத்தினர். கடிகாக்கள் (புாயவமையள) என்று அழைக்கப்பட்ட இக்கடிகைப் பள்ளிகளில் சாதி, சமய, நிற, குல வேறுபாடுகளின்றி அனைத்துப் பிரிவு மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். சமயக் கல்வியோடு வாழ்வியல் ஒழுக்கக் கல்வியும் கொடுக்கப்பட்டது. சமயத்தைவிட வாழ்க்கை ஒழுக்கத்துக்கே முதலிடம் அளிக்கப்பட்டது. கட்டுப்பாட்டுடன் கூடிய கல்வி அனைவருக்கும் அளிக்கப்பட்டது. இச்சமச்சீர்க் கல்வி களப்பிரர் காலத்தில் நடைபெற்ற கல்விப் புரட்சியாகும். திருப்பாதிரிப்புலியூரில் செயல்பட்ட சமணப் பள்ளி இப்புரட்சியின் நிலைக்களமாகத் திகழ்ந்தது. புத்ததத்தர், புத்தகோசர், போதிதர்மர், தர்மபாலர், தின்னகர், சர்வநந்தி, வஜ்ரநந்தி போன்ற பிரபல சமணத் துறவிகள் இக்கல்விப் புரட்சியின் தூண்களாகத் திகழ்ந்தனர். போதி தர்மரும், தர்மபாலரும் நாலந்தா பல்கலைக் கழகத்தில் பேராசிரியர்களாகப் பணியாற்றினர். காஞ்சியில் பிறந்த போதிதர்மருக்குச் சீனாவிலும், ஜப்பானிலும் நினைவுக் கோயில்கள் எழுப்பப்பட்டன. தின்னகர் பெரும் புகழ் பெற்ற தர்க்க நிபுணராவார். இவருடைய நூல்கள் நாலந்தா பல்கலைக் கழக மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களாகப் பயன்பட்டன. சமணத் துறவிகள் பன்மொழிப் புலவர்கள். பள்ளிகளில் தமிழ் பாட மொழியாகவும் பயிற்று மொழியாகவும் இருந்தது. சமணர்களைப் போன்றே புத்தத் துறவிகளும் கல்விப் பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். புத்த விகார்கள் இப்பணியை மேற்கொண்டன. சிறந்த புத்த சமயத் துறவிகள் நல்லாசிரியர்களாகப் பணியாற்றினர். இவர்களில் பலர் வட நாட்டு நாலந்தா பல்கலைக்கழகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். பூம்புகார், நாகை, புத்தமங்கலம், மயிலாடுதுறை, உறையூர் ஆகியவை முக்கிய புத்த கல்வி மையங்களாகச் செயல்பட்டன. காஞ்சி, கடிகாசலம், வாகூர் ஆகிய இடங்களில் கல்லூரிகள் செயல்பட்டன.

குறிப்பு

3.5.6. மொழி நிலை

தமிழ் பயிற்று மொழியாக இருந்ததைப் போன்று பிராகிருதம் இலக்கிய மொழியாக இருந்தது. பிராகிருத மொழிக்கு இணையாகப் பாலி மொழியும் பிரபலமடைந்தது. அதேபோன்று சமஸ்கிருதமும் இலக்கிய மொழியாயிற்று. பல புத்த நூல்கள் பாலி மொழியில் படைக்கப்பட்டன. தமிழ் பள்ளிகளில் பயிற்று மொழியாகவும், இலக்கிய மொழியாகவும் சிறப்புற்றன. களப்பிரர் காலத்தில் இயற்றப்பட்ட கீழ்க்கணக்கு நூல்களும், பிற அற நூல்களும் தமிழ் மொழியிலேயே இயற்றப்பட்டன.

3.5.7. இலக்கியம்

களப்பிரர் காலம் தமிழ் இலக்கியப் பொற்காலம் என்று கூறலாம். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் மிகப் பெரும்பான்மையானவை களப்பிரர் காலத்தில் இயற்றப் பட்டவை. இவற்றைப் பற்றி சுருக்கமாகக் காணலாம்: நாலடியார். நானூறு வெண்பாக்களைக் கொண்ட இந்நூலைத் தொகுத்தவர் பதுமனார் என்ற சமணர். நாலடியார் உவமைகளின் உறைவிடம். உதாரணத்துக்கு: "கல்வி கரையில, கற்பவர் நாள்சில் நாய் கடித்தால் அதைத் திருப்பிக் கடிப்பார் உண்டோபழமொழி நானூறு. இதன் ஆசிரியர் மூன்றுறை அரையனார். ஒவ்வொரு பாடலின் நான்காவது அடியில் பழமொழி வருவதாக அமைந்துள்ளது. உதாரணமாக, கல்தேயும், தேயாது சொல். நுணலும் தன் வாயால் கெடும். பாம்பறியும் பாம்பின் கால். நான்மணிக்கடிகை. இதற்கு நான்கு மணிகள் பதித்த நகை என்று பொருள். ஒவ்வொரு பாடலிலும் நான்கு கருத்துக்கள் இடம் பெற்றிருக்கும். திரிகடுகம். இதன் ஆசிரியர் நல்லாதனார். சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் கலந்தது திரிகடுகம். உடல் நோய்க்கு நல்ல மருந்து. கணவன்-மனைவி மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி? என்ற வினாவுக்கான விடை இதில் உள்ளது. சிறுபஞ்சமூலம். காரியாசான் இயற்றிய இந்நூலில் பஞ்சத்தை மழை போக்குவதைப் போன்று உடல் நோயை சிறுபஞ்சமூலம் நீக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடலிலும் ஐந்து கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. ஏலாதி. மருந்தின் பெயரைக் கொண்ட இந்நூலில் ஏலம், இலவங்கம், நாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய ஆறு பொருட்களின் கலவை உடல் நோயைத் தீர்ப்பதைப் போன்று ஒவ்வொரு வெண்பாவிலும் ஆறு தகவல்கள் உள்ளன. இதன் ஆசிரியர் கணிமேதாவியார். ஒரு பாடலில் உடற்பயிற்சியின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. ஆசாரக்கோவை. கயத்தூர் பெருவாயில் முள்ளியார் எழுதியுள்ள இந்நூலில் ஒழுக்கங்கள் கோர்வையாகக் கூறப்பட்டுள்ளன. வடமொழி மரபையொட்டி எழுதப்பட்ட இதில் ஒழுக்கத்துக்கான எட்டு குணங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன: 1) நன்றி அறிதல் 2) பொறை உடைமை 3) இன்சொல் 4) இன்னாச் சொல் 5) எவ்வுயிர்க்கும் ஊறு செய்யாமை 6) கல்வி 7) ஒப்புரவு 8) நல் இனத்தாரோடு நட்டல். ஒவ்வொருவரும் காலை எழுந்ததிலிருந்து இரவு உறங்கப்போகும் வரை என்ன செய்ய வேண்டும் என்று

குறிப்பு

பட்டியலிடப்பட்டுள்ளது. இன்னா நாற்பது. கபிலர் எழுதியுள்ள இந்நூலில் நாற்பது வெண்பாக்கள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு வெண்பாவிலும் இன்னா என்ற சொல் திரும்பத் திரும்ப வரும். இனியவை நாற்பது. பூதஞ்சேத்தனார் எழுதியுள்ள இந்நூலில் நாற்பது பாடல்கள் உள்ளன. இவற்றைச் செய்யக்கூடாது என்று கூறுவதன் மூலம் இவற்றைச் செய்ய வேண்டும் என்று எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. உதாரணமாக, கல்லாதாரோடு சேராமை, ஐம்பொறியை அடக்காதவன் இன்னா, ஊனைத் தின்று ஊனைப் பெருக்குதல் முன் இன்னா. முதுமொழிக்காஞ்சி. மதுரை கூடலூர் கிழார் எழுதிய இந்நூலில் பல பழமொழிகள் உள்ளன. பத்து பிரிவுகள் கொண்ட இந்நூலில் ஒவ்வொரு பத்திலும் பத்துப் பாடல்கள் உள்ளன. சில பழமொழிகள் வருமாறு: கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று பொருள் மீது ஆசை கொண்டவன் நீதி பேணமாட்டான் உணர்வு இல்லார்க்கு வாழ்வும் சாவே அறியாத் தேசத்து ஆச்சாரம் பழியார். திணைமொழி ஐம்பது. கண்ணன் சேத்தனார் இயற்றிய இந்நூலில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை திணைக்குப் பத்துப் பாடல்கள் வீதம் ஐம்பது பாடல்கள் உள்ளன. யாழும், குழலும், முழுவும் அருவியின் இனிய ஓசைக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. ஐந்திணை ஐம்பது. ஆசிரியர் மாறன் பொறையனார். இந்நூலிலும் திணைக்குப் பத்துப் பாடல்கள் உள்ளன. சங்க இலக்கியத்தை நினைவூட்டும் இந்த நூலில் சமயப் பொறையுடைமை வலியுறுத்தப்படுகிறது. அதேபோன்று காதலன்-காதலி பிரிவுத் துன்பம் பேசப்படுகிறது. ஐந்திணை எழுபது. ஐந்து திணைகளைப் பற்றிய எழுபது பாக்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. திணைமாலை நூற்றைம்பது. மாலை போல் தொடுக்கப்பட்டுள்ள இந்நூலில் திணைக்கு முப்பது பாடல்கள் வீதம் நூற்றைம்பது பாடல்கள் இடம் பெற்றுள்ளன. கார் நாற்பது. இந்நூல் கார்காலத்தை வர்ணிக்கின்றது. கைந்நிலை. இந்நூல் ஐந்திணை ஒழுக்கத்தை விவரிக்கிறது. களவழி நாற்பது, போர்க்களத்தைப் பற்றிய நாற்பது பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இவையன்றி புத்த, சமண ஒழுக்கக் கருத்துக்களை உள்ளடக்கிய பல அறநூல்கள் இயற்றப்பட்டன. அவற்றுள் முக்கியமானவை: இன்னிலை ஔவையாரின் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், நல்வழி அறநெறிச்சாரம் அருங்கச் செப்பு வெற்றி வேற்கை நீதி நெறி விளக்கம் உலக நீதி. இவையாவும் நீதி நூல்களாகும்.

3.6. பிறமொழி இலக்கியம்

களப்பிரர் காலத்தில் பிராகிருதமும், சமஸ்கிருதமும் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தன. திருப்பாதிரிப்புலியூரிலிருந்த சர்வநந்தி லோக வியாபகம் என்ற நூலை சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்தார். புத்ததத்தரும், புத்தகோசரும் பல நூல்களைப் படைத்ததை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். திருப்பருத்திக்குன்றத்தில் வாழ்ந்த சமணத் துறவி

சமண சமயப் பணிக்காக மதுரையில் மதுரை திராவிட (திரமிள) சங்கத்தைத் தோற்றுவித்தார்.

3.6.1. சித்தர்கள்

குறிப்பு

களப்பிரர் காலத்தில் சித்தர்கள் சிறப்புற்று விளங்கினர். குறிஞ்சி நிலம் சித்தர்களின் சிந்தனை நந்தவனமாயிற்று. குன்றுகளே அவர்கள் வாழ்ந்த ஞானக் கோயில்கள். மருத்துவ ஆராய்ச்சியே அவர்களது பிரதானத் தொழிலாக இருந்தது. சித்தர்கள் தமிழ் நாட்டில் அறிவியல் சிந்தனைக்கு அடித்தளமிட்டனர். ஏராளமான நூல்களை எழுதினர். சித்தர்களின் சிந்தனைக் கருவூலங்களாகத் திகழும் நூல்கள் ஓலைச் சுவடிகளில் எழுதிக் காப்பாற்றப்பட்டன. இவர்களது மருத்துவ முறையே பின்னர் சித்த மருத்துவமாக சிறப்புற்றது. பொதுவாக சித்தர்கள் சமுதாய சமய சீர்திருத்தத்தின் முன்னோடிகள். குறிப்பாக இவர்கள் சாதி முறைக்கு எதிரானவர்கள். அவர்களுடைய சமுதாய நோக்கும், போக்கும் சமூகச் சீர்திருத்த நோக்குடையதாகும். களப்பிரர் காலச் சித்தர்களுள் முன்னிலை வகிப்பவர் திருமூலர் என்று கருதப்படுகிறார். ஆயினும் இவர் வாழ்ந்த காலத்தைப் பற்றிய கருத்து வேறுபாடு உள்ளது. எனினும், இவர் தேவார ஆசிரியர்களுக்கு முற்பட்டவர் என்பதில் கருத்தொற்றுமை உள்ளது. உடல் நலனுக்கும், உடல் வளர்ச்சிக்கும் சிறப்பிடம் கொடுத்தவர் திருமூலர். ஆரோக்கியமான உடலும், மனமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை என்பது திருமூலரின் அசைக்க முடியாத வாதம். காற்று (வாதம்), நெருப்பு (பித்தம்), நீர் (சிலோத்துமம்) ஆகியவற்றை சரிவிகிதத்தில் பொருத்தி அனைத்து நோய்களையும் உடலை நெருங்காமல் தடுக்க இயலும் என்றார். "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்பது திருமூலரின் தீர்க்கமான முடிவு.

3.7. களப்பிரர் வீழ்ச்சி

களப்பிரர்களது வீழ்ச்சியும் அவர்களது எழுச்சியைப் போன்றே தக்கச் சான்றுகளுடன் விளக்க முடியாத விளைவாக உள்ளது. இவர்களது வீழ்ச்சிக்கான காரணங்களாவன: களப்பிரர்கள் தமிழ் நாட்டின் மீது வெட்டுக்கிளிகள் போன்று படையெடுத்து வந்து, தமிழ்நாட்டுத் தோட்டத்தை நாசம் செய்து, பரம்பரையாக வந்த சேர, சோழ, பாண்டியர்களைத் தோற்கடித்து, கைது செய்து அவமதித்ததைத் தமிழர்கள் மன்னிக்கத் தயாராக இல்லை. களப்பிர மன்னர்கள் சமய மறுப்பாளர்கள் (ர்நசவைஉள). இவர்கள் நாத்திய சமயங்களான புத்த, சமண சமயங்களை ஆதரித்து, பாதுகாப்பளித்து, முன்னிலைப் படுத்தியது மக்களுக்குப் பிடிக்கவில்லை. புத்த, சமணத் துறவிகளின் கல்வி, மருத்துவ, சமூக சீர்திருத்த முயற்சிகளைத் தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக் கொண்டாலும் களப்பிரர்களின் சமய ஆதிக்கத்தை எதிர்க்கவே செய்தனர். சமயம் சார்ந்த யதேச்சாதிகார வல்லாட்சி ஆலமரத்தின் கீழ்

குறிப்பு

சுதந்திர சுயாட்சி நகர, கிராம மன்றங்கள் என்ற செடிகள் வளர முடியாமல் போயிற்று. இயல்பாகவே தன்னாட்சி நாட்டமுடைய மக்கள் புல்லிதழ் ஜனநாயகம் (Grass-root Democracy) பட்டுப்போவதை விரும்பவில்லை. யாவற்றுக்கும் மேலாக பிராமணர்கள் அனுபவித்து வந்த பிரம்மதேய கிராமங்களைப் பறித்துக் கொண்டதன் மூலம் அவர்களுடைய தீராப் பகையைக் களப்பிரர்கள் தேடிக் கொண்டனர். களப்பிரர்கள் தமிழர்களை முன்னூறு ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி செய்தனர். தமிழும், தமிழ் இலக்கியமும் அவர்களது ஆட்சியின் கீழ் செழித்து வளர்ந்தது. தமிழ் மூலம் பள்ளிகளில் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. திணை வாழ்க்கை முறை நீடிக்கவே செய்தது. எனினும் களப்பிரர்கள் தமிழ் நாட்டு உடலில் குத்திய அன்னிய முட்களாகவே இருந்தனர். மக்களின் கலாச்சாரத்தில் கரைந்து கலைந்துவிடாமல் தாமரை இலைத் தண்ணீரைப் போல் ஒட்டியும் ஒட்டாமலும் இருந்தனர். தமிழ்நாட்டு மக்கள் அவர்களை அன்னியர்களாகவே கருதினர். எனவே, மக்கள் பர வாழ்க்கையில் களப்பிரரின் கொடுங்கோலாட்சிக்குப் பணிந்தாலும், அகவாழ்க்கையில் விடுதலையையே விரும்பினர். அதனால்தான் பாண்டிய மன்னன் கடுங்கோன் களப்பிரருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தபோது மக்கள் அவருக்கு முழு ஆதரவையும் அளித்தனர். அதேபோன்று, பல்லவ மன்னன் சிம்ம விஷ்ணு தொண்டை மண்டலத்தையும், அதன் மேலாண்மையின் கீழ் இருந்த சோழ மண்டலத்தையும் விடுவிக்க முற்பட்ட போது இரு மண்டலங்களின் மக்களும் அவருக்கு ஒத்துழைப்பு கொடுத்தனர். மக்களின் பேராதரவுடன் தமிழ்நாட்டில் களப்பிரர் ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. களப்பிரர் முற்கால தமிழ்நாட்டு வரலாற்றில் ஒரு அத்தியாயமாயினர்.

3.7.1. களப்பிரர் காலம் இருண்ட காலமா?

களப்பிரர் காலம் நீண்ட வரலாற்று இரவு என்று வர்ணிக்கப்படுகிறது. தமிழ்நாட்டு வரலாற்றை மறைத்த மேகக் கூட்டமாகக் கருதப்படுகிறது. இப்படிக் கூறப்படுவதற்கான காரணம் என்ன? 1) களப்பிர காலத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கான போதிய, சரிபார்த்து ஒப்பிட்டு உறுதி செய்து கொள்வதற்கான சான்றுகள் கிடைக்கவில்லையாதலால் இக்காலம் இருண்ட காலமாக உள்ளது. போதிய ஆதாரங்கள் கிடைக்கும் போது இக்காலம் ஒளிபெறக்கூடும். 2) களப்பிரா மன்னர்கள் சில வகுப்பினருக்குக் கொடுக்கப்பட்டிருந்த இறையிலி நிலங்களைப் பறித்துக் கொண்டு, வேத வைதீக சமயத்தையும், சமயச் சடங்குகளையும் தடை செய்தனர். இந்நடவடிக்கை களால் பாதிக்கப்பட்டோர்க்கு களப்பிரர் காலம் இருண்ட காலமாகக் காட்சியளித்தது. 3) சங்க காலத்தில் வேத வைதீக சமயம், புத்த, சமண சமயங்களுக்கிடையே போட்டி நிலவியது. களப்பிரர் காலத்தில் இப்போட்டிக்கு முடிவு கட்டப்பட்டு புத்த, சமண சமயங்கள் ஆதிக்கச் சமயங்களாயின. எனவே இப்போட்டியில் தோல்வியுற்றோருக்குக் களப்பிரர் காலம் இருண்ட காலமாகக் காட்சியளித்தது. 4) களப்பிரர் காலத்தில்

நடந்தவை எல்லாம் தீயவையே களப்பிரர்கள் பண்பாட்டுப் பகைவர்கள் தொற்றுநோய் போல் பரவியவர்கள் இவர்களின் வருகையால் தமிழ்நாடு தேக்கமடைந்தது என்று சித்தரிப்பதற்காகக் களப்பிரர் காலம் இருண்ட காலம் என்று வர்ணிக்கப்பட்டது. 5) களப்பிரர் பற்றி எழுதியவர்கள் திட்டமிட்டே இவர்களைப் பற்றிய தகவல்களை இருட்டடிப்பு செய்தனர். ஆவணங்களிலிருந்து இவர்களது சாதனைகள் பற்றிய தகவல்கள் நீக்கப்பட்டுவிட்டன (நுஞிரபெநன). இதனால் களப்பிரரைப் பற்றிய விவரங்கள் வரலாற்றின் இருண்ட அத்தியாயத்துக்குள் புதைந்து விட்டன. 6) திட்டமிட்டே களப்பிரர் பற்றிய சான்றுகள் அழிக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் 300 ஆண்டுகளுக்கு மேல் தமிழ் நாட்டை ஆட்சி செய்தவர்கள் போதிய தடயங்களை விட்டுச் செல்லாமலா போயிருப்பார்கள்? அன்பு அகிம்சை அறம் சமூக சமய சமத்துவம் தனிமனித பொது ஒழுக்கம், கட்டுப்பாடு, சமச்சீர் கல்வி வேளாண்மை வளர்ச்சி இலக்கிய எழுச்சி, நாட்டொற்றுமை ஆகியவற்றைப் பேணிக்காத்தோர் வாழ்ந்த காலத்தை இருண்ட காலம் எனக் கூறுவது முதிர்ச்சியடையாத முன்கணிப்பாகும்.

குறிப்பு

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. புத்ததத்தரால் எழுதப்பட்ட நூலின் பெயர்?
2. களப்பிரர்கள் எந்தப் பகுதியிலிருந்து தமிழ் நாட்டுக்குக் குடி பெயர்ந்தவர்கள்?
3. எந்தப் களப்பிரர் மன்னர் தமிழ் நாட்டை ஒரு ஆட்சிக் குடையின் கீழ்க் கொண்டு வந்தார்?
4. யார் நாலந்தா பல்கலைக் கழகத்தில் பேராசிரியர்களாகப் பணியாற்றினர்?
5. "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்பது யாருடைய தீர்க்கமான முடிவு?

3.8. முற்காலத்திய பாண்டியர்கள்

பாண்டியர்

பாண்டியர் என்ற சொல் பாண்டி என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். பாண்டி என்றால் எருது என்று பொருள். அதாவது ஆண்மைக்கும், வீரத்துக்கும் அடையாளமாக விளங்குவது. இச்சொல் பழம்பெரும் நாடு என்ற பொருளிலும் பயன்படுத்தப்படுகிறது. பாண்டிய மரபினர் தென்னிந்திய வரலாற்றில் பழம்பெரும் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியர் என்ற பெருமைக்குரியவர்கள். களப்பிரர் இடைவெளி நீங்கலாக இவர்களுக்குத் தொடர்ச்சியான வரலாறு உண்டு. களப்பிரர் சங்ககாலப் பாண்டியர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தனர். அதேபோன்று தென் தமிழ்

நாட்டில் களப்பிரர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தவர்கள் பாண்டியர்கள். இம்மாற்றத்தைச் செய்தவர் பாண்டியன் கடுங்கோன்.

குறிப்பு

3.9. வரலாற்றுச் சான்றுகள்

3.9.1. கல்வெட்டுச் சான்றுகள்

கல்வெட்டுச் சான்றுகள் பாண்டியப் பேரரசர்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்குப் பெரிதும் பயன்படுகின்றன. ஆனால் ஆயிரக்கணக்கான கல்வெட்டுகள் இருப்பினும் இவற்றுள் பல சிதைவுற்ற நிலையிலேயே உள்ளன. கிடைக்கின்ற குறைவான கல்வெட்டுத் தகவல்களும் கோயில்களுக்கும், பிராமணர்களுக்கும் அளிக்கப்பட்ட அறக்கொடைகள் பற்றியனவாக உள்ளன. சேரமாதேவி கல்வெட்டு நிலவரி ஆட்சி முறையைப் பற்றி அறிந்து கொள்ள உதவுகிறது. வானியல் பற்றிய கல்வெட்டுச் சான்றுகள் தெளிவாக இல்லை. இவற்றைக் கொண்டு பாண்டியரின் மரபு வரிசையையோ அல்லது காலக் கணிப்பையோ செய்வது கடினம்.

3.9.2. செப்பேட்டுச் சான்றுகள்

களப்பிரர் காலத்துக்குப்பின் ஆட்சிக்கு வந்த பாண்டியர் பற்றி அறிந்து கொள்வதற்கான பட்டயச் சான்றுகள் பல உள்ளன. இவற்றுள் வேள்விக்குடி செப்பேடுகள், தளவாய்புரச் செப்பேடுகள், சிவகாசிச் செப்பேடுகள், திரிபுவனம் செப்பேடுகள் குறிப்பிடத்தக்கவை. குறிப்பாக, நெடுஞ்சடையன் பராந்தகனின் (கி.பி.765-790) வேள்விக்குடி செப்பேடுகள், சங்க காலத்துப் பாண்டியன் பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி பற்றியும், "களப்பிரனெனுங் கவியரசன்" குறித்தும், பாண்டியன் பராந்தகன் களப்பிர அரசனை தோற்கடித்து, வேள்விக்குடியை மீட்டு நற்சிங்கன் என்ற பிராமணனுக்கு வேள்வி செய்து நிலக்கொடையாகக் கொடுத்ததைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இவையாவும் அரிய வரலாற்றுத் தகவல்கள் தான். எனினும், கி.பி.8 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சடையவர்மன் பராந்தகன் நெடுஞ்சடையன் சங்க காலத்தில் வாழ்ந்த பாண்டியன் பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி மற்றும் கொற்கைக் கிழான் நற்கொற்றன் அல்லது நற்சிங்கன் என்ற அந்தணனுக்கு அளித்த வேள்விக்குடி என்ற நிலப்பகுதி பற்றிய தகவல்கள் மிகுந்த சர்ச்சைக்குரியனவாக உள்ளன. ஏனெனில் வேள்விக்குடி என்ற சொல் சங்க இலக்கியங்களில் இடம் பெறவில்லை. மேலும் வேள்விக்குடி செப்பேடுகள் கொடுக்கும் தகவல்களை ஒப்பிட்டு அறியக்கூடிய வேறுசான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. எனவே, "வரலாற்று மூலங்கள், ஆவணங்கள் என்று சொல்லப்படுபவற்றையும், புனிதங்கள் என்று ஆராதிக்காமல், அவற்றின் வாய்ப்பாடுகளை வழிமறித்துப், பன்முக வாசிப்புகளுக்கு உட்படுத்த வேண்டும் அவ்வாறு உட்படுத்தப்படும் போதுதான் வரலாறு புறவயமான அறிவியல் நிலைக்கு உயரும்".- வேள்விக்குடிப் பட்டயச் சான்றுகளைக் கொண்டு பாண்டிய மன்னர்களை அடையாளம் காணவோ, அவர்களது

கால வரையறையை கணக்கிடவோ இயலாது. இருப்பினும் வேள்விக்குடி செப்பேடு இருண்ட வானில் ஒளிக்கீற்றுபோல உள்ளது என்பதில் ஐயமில்லை.

குறிப்பு

3.9.3. இலக்கியச் சான்றுகள்

புராணங்களும், தலபுராணங்களும் பாண்டியர்களின் பெயர்களைக் குறிப்பிடுவதோடு மட்டுமின்றி அவர்கள் கால வாழ்வியல் பற்றி அறிந்து கொள்ளவும் பயன்படுகின்றன. குறிப்பாக மதுரை தல வரலாறும், பண்பாட்டுச் சின்னங்களும் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான தொடர்ச்சியான பண்பாட்டு வரலாற்றைக் கொண்ட மதுரை நகரின் பெருமையைப் பற்றி அறிந்து கொள்ள உதவுகின்றன.

3.9.4. உத்தேச காலவரையறை

களப்பிரர்களுக்குப்பின் வந்த பாண்டியர்களைப் பற்றிய புராண, தொல்பொருளியல், கல்வெட்டு, பட்டய, இலக்கியச் சான்றுகள் மிகவும் குறைவு. இக்குறைவான ஆதாரங்களைக் கொண்டு பாண்டிய மன்னர்களின் ஆட்சிக் காலங்கள் பற்றி சரியாகக் கணிப்பதில் பல இடையூறுகளும், இடைவெளிகளும் உள்ளன. இவர்களின் காலவரையறை பற்றி ஆழமாக ஆய்வு செய்த கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, சதாசிவப் பண்டாரத்தார், ஆர்.சத்தியனாதய்யர் போன்றோர் வெவ்வேறு முடிவுகளுக்கு வருகின்றனர். இவர்களது மாறுபட்ட காலக் கணிப்புகள் குழப்பத்தை ஏற்படுத்துவதாக உள்ளன. இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள பாண்டிய மன்னர்களின் ஆட்சிக் காலங்கள் உத்தேசமானவையே சரியானவையல்ல. இதுபற்றி இக்கால ஆய்வாளர்கள் ஒன்றுகூடி விவாதித்து ஒரு முடிவுக்கு வரவேண்டியது இன்றியமையாதது.

3.10. பாண்டியப் பேரரசர்கள், (575-920)

3.10.1. கடுங்கோன், (575-600)

சங்க காலத்துக்குப்பின் நாம் சந்திக்கும் முதல் பாண்டிய மன்னன் கடுங்கோன். இவர் பாண்டிய ஆதிராஜா என்று குறிப்படப்பட்டுள்ளார். கடுங்கோன் களப்பரனெனுங் கவியரைசன் கைக்கொண்டவன்“ என்று வேள்விக்குடி செப்பேடு சொல்லுகிறது. கடுங்கோன் களப்பிரரைத் தோற்கடித்து, பாண்டிய நாட்டை மீட்டு, மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி அமைத்தது வரலாற்று முக்கியத்துவமிக்க நிகழ்வாகும். கடுங்கோன் களப்பிரரை வீழ்த்தியதும், பாண்டிய அரசை மீண்டும் அமைத்ததும் அரிய சாதனைகளாகும். வளைந்து கொடுக்காத விரோதிகளுடைய ஒளிமிக்க நகரங்களை அழித்தவர் என்று பாராட்டப்பட்டுள்ளார் கடுங்கோன். இப்பாண்டிய

குறிப்பு

மன்னர் சிம்ம விஷ்ணு பல்லவரின் சமகாலத்தவர். சிம்ம விஷ்ணு தமிழ் நாட்டின் வடபகுதியில் களப்பிரர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து தொண்டை மண்டலத்தில் பல்லவர் ஆட்சியை ஏற்படுத்தியதைப் போன்று, தமிழ் நாட்டின் தென் பகுதியில் களப்பிரரை வென்று பாண்டிய நாட்டை மீட்டவர் கடுங்கோன். இவர் களப்பிரர்களைக் களைகட்டறுத்து" பாண்டிய நாட்டைக் கைப்பற்றிக் காப்பாற்றினார். இவரது களப்பிரர் வெற்றி பிராமண சமயத்தின் வெற்றியாகக் கருதப்படுகிறது. கடுங்கோன் மேலும் பல குறுநில மன்னர்களையும் தோற்கடித்து அவர்களின் ஆட்சிப் பகுதிகளையும் பாண்டிய நாட்டுடன் சேர்த்தார். இதன் மூலம் இப்பாண்டிய மன்னர் பாண்டியப் பேரரசின் அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தார்.

3.10.2. மாறவர்மன் அவனி சூளாமணி

மாறவர்மன் அவனி சூளாமணி கடுங்கோனின் மகள். இவர் ஆட்சிக்கு வந்தபின் மாறவர்மன் சடையவர்மன் என்ற பட்டப் பெயரைப் பெற்றார். இவர் காலத்தில் கொடுக்கப்பட்ட இப்பட்டப் பெயரைப் பின்வந்த பாண்டிய மன்னர்களும் சூட்டிக் கொண்டனர். இம்மன்னரை "வாய்மையின் வேந்தன்" என்று செப்புப் பட்டயங்கள் குறிப்பிடுகின்றன. 30 ஆண்டு காலம் ஆட்சி செய்த மாறவர்மன் அவனி சூளாமணி பற்றி வேறு தகவல்கள் கிடைக்கவில்லை.

3.10.3. செழியன் சேந்தன

மாறவர்மன் அவனி சூளாமணிக்குப் பின் அவருடைய மகன் சேந்தன செழியன் அரியணையேறினார். இப்பாண்டிய மன்னர் சேரர்களைத் தோற்கடித்து, சேர நாட்டைப் பாண்டியரது ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்து வானவன் செங்கோற் சேந்தன் என்று அழைக்கப்பட்டார். செழியன் சேந்தன் பாண்டியர் பேரரசின் எல்லையை விரிவுபடுத்திக் கொண்டிருக்கும் போது வடக்கிலிருந்து பல்லவப் பேரரசர்கள் பாண்டியர் நாடு நோக்கித் தங்களது பேரரசின் எல்லையை விரிவுபடுத்திக் கொண்டிருந்தனர். தெற்குத் தமிழ் நாட்டில் செழியன் சேந்தனின் செல்வாக்கு பெருகுவதை பல்லவப் பேரரசர் நரசிம்மவர்மன் விரும்பவில்லை. இதன் காரணமாகப் பாண்டியர்-பல்லவர் ஆதிக்கப் போட்டி வலுவடைந்தது. செழியன் சேந்தன் நெல்லை மாவட்டத்தில் உள்ள மலையடிக்குறிச்சியில் மலையைக் குடைந்து ஒரு குகைக் கோயிலை உருவாக்கியதாகக் கூறப்படுகிறது. இவரது ஆட்சிக் காலத்தில் காஞ்சிக்கு வருகைதந்த சீனப் பயணி யுவான் சுவாங் பாண்டிய நாடு பஞ்சத்தின் பிடியில் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். செழியன் சேந்தன் வீரத்துக்கும், நீதியுணர்வுக்கும் பெயர் பெற்றவர்.

குறிப்பு

3.10.4. அரிகேசரி பராங்குசன் மாறவர்மன்

கூன் பாண்டியன்

சேந்தன் செழியனின் மகன் அரிகேசரி பராங்குச மாறவர்மன் பஞ்சத்துக்கிடையே பதவிக்கு வந்து, பாண்டிய நாட்டைப் பஞ்சத்தின் பிடியிலிருந்து மீட்டு, பேரரசுப் பெருக்கத்தில் அக்கறை கொண்டார். இந்த மன்னரே கூன் பாண்டியன், சுந்தர பாண்டியன் என்றும் கருதப்படுகிறது. பராங்குசன் என்பது இவரது பட்டப் பெயராகும். இவரை நின்றசீர் நெடுமாறன் என்று பெரிய புராணம் பாராட்டுகிறது.

3.10.4.1. சோழருடன் மணவுறவு

சேந்தன் செழியன் ஆட்சிக் காலத்தில் புகைந்து கொண்டிருந்த பாண்டிய-பல்லவப் பகைமை அரிகேசரி மாறவர்மன் காலத்தில் பற்றிக் கொண்டது. நெல்வேலியில் நடைபெற்ற போரில் பல்லவரைத் தோற்கடித்து நெல்வேலி வென்ற நெடுமாறன் என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். இப்பாண்டிய மன்னர் பல்லவர்களை மட்டுமன்றி சேரர்களையும், பல குறுநில மன்னர்களையும் வெற்றி கொண்டதாகக் கூறப்படுகிறது. பல்லவர் ஆதிக்கத்தின் கீழ் இருந்த சோழர் மீது படையெடுத்து உறையூரைக் கைப்பற்றி, சோழர்களுடன் மண உறவு கொண்டு, அவர்களின் துணையுடன் மீண்டும் பல்லவருடன் மோதினார். பல்லவப் பேரரசர் முதலாம் நரசிம்மவர்மன் சாளுக்கியருடன் போராடிக் கொண்டிருந்ததைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட அரிகேசரி மாறவர்மன் சோழர் படையின் துணையுடன் பல்லவர் நாட்டின் மீது படையெடுத்தார். சங்கரமங்கை என்ற இடத்தில் பல்லவர் படை தோற்கடிக்கப்பட்டது. சங்கரமங்கைப் போரால் பாண்டிய மன்னரின் புகழ் பரவியது.

3.10.4.2. சமயப் பொறையின்மை

அரிகேசரி மாறவர்மன் தீவிர சமணர். இவருடைய ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டில் பக்தி இயக்கம் சூறாவளிக் காற்றென சுழன்றடித்துக் கொண்டிருந்தது. இவரது சமகாலத்தவர்களான திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் தீவிர சைவ சமயப் பிரச்சாரத்திலும், மதமாற்றத்திலும் முனைப்புடன் ஈடுபட்டிருந்தனர். திருஞானசம்பந்தரின் செல்வாக்கால் சமணராக இருந்த அரிகேசரி மாறவர்மன், சைவ சமயத்துக்கு மாறினார். மதம் மாறிய மாறவர்மன் சமணர்களைத் தண்டிப்பதிலும், துன்புறுத்துவதிலும், உயிருடன் கழுவேற்றிக் கொள்வதிலும் கொலை வெறியுடன் ஈடுபட்டார். சமய வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. 8000 சமணர்களைத் தோலுரித்துக் கழுமரத்திலேற்றிக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. இக்கொடூரச் செயல் மிகைப்படுத்திக் கூறப்பட்டதாக சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சைவ சமயத்துக்கு மாறிய அரிகேசரி மாறவர்மன் சைவ சமயம் விரைந்து வளர அறப்பணிகள் பல செய்தார். கொடையில் சிறந்த

குறிப்பு

இப்பாண்டிய மன்னர் இரணிய கர்ப்பம், துலாபாரம் போன்ற தானங்களைச் செய்தார். வைதீக பிராமணர்களுக்கு கொடைகள் கொடுத்து ஆதரித்து, அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் வேள்விகளை நடத்தினார். வேதியர்கள் சமுதாய செல்வாக்கு பெற்றனர். பாண்டிய நாட்டிலும் சமய சகிப்புத்தன்மை இல்லாமல் போயிற்று. சமயப் பொறையின்மை சமய நல்லிணக்கத்தைப் பெரிதும் பாதித்தது.

3.10.5. கோச்சடையன் இரணதீரன்

அரிகேசரியின் மகன் கோச்சடையன் இரணதீரன் ஆட்சிக் காலத்தில் பல வெற்றிகளைப் பெற்றார். இவர் சாளுக்கிய மன்னர் முதலாம் விக்கிரமாதித்தனாகிய சிங்கனை வென்றதால் இரணதீரன் என்று அழைக்கப்பட்டார். இப்பாண்டிய மன்னர் சேரர்களையும், சோழர்களையும் அடக்கி ஆண்டதாகக் கூறப்படுகிறது. கோச்சடையன் பங்களூரில் மராத்தியரைத் தோற்கடித்தார். செங்கோடு, பூதாங்கோடு ஆகிய இடங்களையும் வென்றதாக வேள்விக்குடி செப்பேட்டில் பதியப்பட்டுள்ளது. நெல்லை அம்பாசமுத்திரத்துக்கு அருகேயுள்ள திருப்புடைமருதூர் என்ற இடத்தில் ஆய் மன்னரையும் வென்றார். கொங்கர்களும் இவரது ஆதிக்கத்துக்கு அடிபணிந்தனர். கொங்கு நாட்டைக் கைப்பற்றியது சிறப்புச் சாதனையாகக் கருதப்படுகிறது. பல வெற்றிகளைப் பெற்ற கோச்சடையன் வானவன், செம்பியன், சோழன், மதுராந்தகன், கொங்கர் கோமான், செங்கோற்றென்னன் போன்ற பட்டப் பெயர்களைச் சூட்டிக் கொண்டார்.

3.10.6. முதலாம் மாறவர்மன் இராஜசிம்மன்

கோச்சடையன் மகன் இராஜசிம்மன் மாறவர்மன் என்ற பட்டப் பெயருடன் ஆட்சிப் பொறுப்பேற்றார். இவர் முதலாம் இராஜசிம்மன் என்றும் அழைக்கப்பட்டார். இவர் பாண்டியப் பேரரசின் எல்லையை விரிவுபடுத்துவதில் தீவிர கவனம் செலுத்தினார். பல்லவர் நாட்டில் இரண்டாம் பரமேஸ்வரவர்மன் இறந்தபின் ஏற்பட்ட வாரிசுரிமைப் போராட்டத்தில் தலையிட்டார். இரண்டாம் நந்திவர்மனுக்கும், சித்திரமாயனுக்குமிடையே நடைபெற்ற போராட்டத்தில் இராஜசிம்மன் சாளுக்கிய மன்னன் இரண்டாம் விக்கிரமாதித்தனுடன் சேர்ந்து கொண்டு சித்திரமாயனை ஆதரித்தார். இப்போட்டியில் சித்திரமாயன் கொல்லப்பட்டார் நந்திவர்மன் மன்னரானார். எனவே பல்லவர்--பாண்டியர் பகை தொடர்கதையாயிற்று. பல்லவரது வாரிசுரிமைப் போராட்டத்தில் பங்கேற்றதால் பாண்டியருக்கு நிலப்பகுதி கிடைத்ததாகத் தெரிகிறது."

3.10.6.1. பேரரசுப் பெருக்கம்

பேரரசுப் பெருக்கத்தில் பேரார்வம் கொண்ட மாறவர்மன் நெடுவயல், குறுமடை, மண்ணிக்குறிச்சி, திருமங்கை, பூவானூர், கொடும்பாலூர், பெரியவூர் ஆகிய போர்களில் வெற்றி பெற்று அப்பகுதிகளைப் பேரரசுடன் இணைத்தார். கொங்கரையும், கங்கரையும்,

குறிப்பு

சாளுக்கியரையும் வென்றதாகக் கூறப்படுகிறது. கும்பகோணத்துக்கு அருகே உள்ள நந்திகிராமக்கோட்டையில் நந்திவர்ம பல்லவர் உள்ளிருக்கையில் முற்றுகை யிட்டதாகக் கூறப்படுகிறது. மாறவர்மன் ராஜசிம்மன் பண்டிகொடுமுடியைத் தாண்டிச் சென்று ஸ்ரீபுருஷரின் கங்க நாட்டைத் தாக்கினார். பாண்டியர் படையின் தாக்குதலைத் தாக்குப் பிடிக்க முடியாத ஸ்ரீபுருஷர் சாளுக்கிய மன்னன் இரண்டாம் கீர்த்திவர்மனின் ஆதரவைக் கோரினார். கங்கர்-சாளுக்கியப் படை பாண்டியர் படையிடம் தோற்றது (கி.பி.750).

3.10.6.2. சாளுக்கியருடன் மணவுறவு

பாண்டியர்-சாளுக்கிய உறவைப் பலப்படுத்திக் கொள்ளும் பொருட்டு பாண்டிய மன்னர் மாறவர்மன் தனது மகன் ஜதிலா பராந்தகனுக்கு சாளுக்கிய இளவரசியை மணமுடித்துக் வைத்தார். இதன் மூலம் மாறவர்மன் ராஜசிம்மன் தனது பல்லவ விரோதியின் பரம்பரை விரோதியை உறவினராக்கிக் கொண்டார். இப்பாண்டியர்சாளுக்கியர் உறவு பாண்டியப் பேரரசு மேலும் பலமடைய உதவியாக இருந்தது. வைதீக சமய செல்வாக்கு முதலாம் மாறவர்மன் ராஜசிம்மன் வேத வைதீக சமயத்தின் செல்வாக்கு தொடர்ந்து அதிகரிக்கக் காரணமாக இருந்தார். வைதீக பிராமணர்களுக்குப் பல மகாதானங்களைக் கொடுத்தார். பிராமணப் பெரியோர்கள் பாராட்டப்பட்டனர். பிராமணப் புரோகிதர்களின் வழிகாட்டுதலின் பேரில் துலாபாரம், இரணியகர்ப்பம், கோசகசரா போன்ற வேள்விகளை விமரிசையாக நடத்தினார். வேத வல்லுநர்கள் சிறப்பிக்கப்பட்டனர்.

3.10.6.2. சாளுக்கியருடன் மணவுறவு

இராஜசிம்மனின் மகன் பராந்தகன் நெடுஞ்சடையன். இவருடைய தாய் மைசூர் மாநிலத்தை ஆட்சி செய்த கன்னட மரபைச் சேர்ந்த கங்க மன்னனுடைய மகள் பூசுந்தரி எனவே, தந்தை வழி பாண்டியனாக அரசுக் கட்டில் ஏறியவர் பராந்தகன் நெடுஞ்சடையன். கடுங்கோன் வழிவந்த பாண்டிய மன்னர்களில் மாபெரும் ஏகாதிபத்தியவாதியாகத் திகழ்ந்தவர் இப்பராந்தகப் பாண்டியன். பிற நாடுகளைத் தன்னாட்சியின் கீழ்க் கொண்டு வருவதில் முனைப்புடன் செயல்பட்டவர். பேரரசு விரிவாக்கவாதி (நுஎியளெழைளைவ). இம்மன்னருக்கு ஜடிலன், பராந்தகன், வரகுண மகாராஜா, நெடுஞ்சடையன், மாறன் சடையன் ஆகிய பல பட்டப் பெயர்கள் உண்டு.

3.10.6.3. பெண்ணாகடப் போர்

முதலாம் வரகுண பாண்டியன் என்று அழைக்கப்பட்ட நெடுஞ்சடையன் கிட்டத்தட்ட கால் நூற்றாண்டு காலம் பேரரசுப் பெருக்கத்திலேயே குறியாக இருந்தார். பாண்டியர் பேரரசுப் பெருக்கத்துக்குப் பெரும் தடையாக இருந்தவர் நந்திவர்மன். நந்திவர்மப் பல்லவன் பெண்ணாகடத்தில் தோற்கடிக்கப்பட்டார். பாண்டிய மன்னரிடம்

குறிப்பு

தோல்வி கண்ட பல்லவ மன்னன் சேர, கொங்கு நாடு மற்றும் தகடூர் அரசர்களுடன் ராணுவக் கூட்டணி அமைத்து பாண்டியன் நெடுஞ்சடையனை எதிர்த்தார். இக்கூட்டுப் படையும் பாண்டியரிடம் தோற்றது. எனினும், பாண்டிய நாடு இப்போர்களால் பெரிதும் பாதிக்கப்பட்டது. பல்லவர் எதிர்ப்பு முறியடிக்கப்பட்டதால் பராந்தகன் நெடுஞ்சடையனின் புகழ் ஓங்கியது.

3.10.6.4. பேரரசு விரிவாக்கம்

பல்லவர் கூட்டுப் படையைப் புறம்கண்ட நெடுஞ்சடையன் பல்லவ மன்னனுடன் கூட்டு சேர்ந்த அரசர்களைத் தனியே தண்டித்தார். தகடூர் அதிகமானை புகளூரில் தோற்கடித்தார். கொங்கு நாட்டு அரசனை சிறைப்பிடித்தார். அதியமானின் உறவினன் ஆனைமலை அரசனை ஆரியூர் கோட்டையை முற்றுகையிட்டு வென்றார். முத்தரையரும், வேணாட்டவரும் நெடுஞ்சடையனின் பேராதிக்கத்தின்கீழ் கொண்டு வரப்பட்டனர். இவற்றின் விளைவாக, தஞ்சை, திருச்சி, சேலம், கோவை மாவட்டங்களும், திருவாங்கூரின் தென்பகுதியும் பாண்டியர் பேரரசுடன் இணைக்கப்பட்டன.

3.10.6.5. வேந்தர் வள்ளல்

பராந்தகன் நெடுஞ்சடையன் மாவீரன் மட்டுமல்ல் சிறந்த கட்டடங்களைக் கட்டியவர். இப்பாண்டிய மன்னர் வைணவரானதால் திருமாலுக்குக் கோயில்கள் கட்டுவதில் கவனத்தைச் செலுத்தினார். கொங்கு நாட்டு காஞ்சிவாய்ப் பேரூரில் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்ட கோயிலும், மதுரைக்கு அருகே உள்ள திருமால் கோயிலும் இவற்றுக்கான சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். நெடுஞ்சடையன் தீவிர வைணவராயினும் சிவாலயங்களும் கட்டப்படுவதை ஊக்குவித்தார். வைணவ, சைவ சமய வேறுபாடின்றி அறப்பணிகளுக்குத் தாராளமாக உதவி செய்தார். மாணிக்கவாசகர் இவரது காலத்தவர் என்று கருதப்படுகிறது. வைதீக வேதியர்களுக்கு நிலக்கொடைகள் அளித்து ஆக்கிரகாரங்கள் அதிகரிக்கக் காரணமாக இருந்தார். பராந்தக நெடுஞ்சடையனை வேந்தர் வள்ளல் என்றால் மிகையாகாது.

3.10.6.5. வேள்விக்குடி செப்பேடு

பராந்தக நெடுஞ்சடையன் தமிழ்நாட்டு வரலாற்றில் சிறப்பிடம் பெற்றிருப்பதற்கு முக்கியக் காரணம் அவர் வெளியிட்ட வேள்விக்குடி செப்பேடாகும். இப்பாண்டிய மன்னர் ஆட்சிக்கு வந்த மூன்றாம் ஆண்டிலேயே இச்செப்பேட்டைப் படைத்தார். வரலாற்று முக்கியமிக்க இச்செப்பேடு சங்ககால பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி பற்றியும், நற்கொன்றன் என்ற பிராமணருக்கு அப்பாண்டிய மன்னர் வேள்விக்குடியைத் தானமாக வழங்கியது குறித்தும், பின்னர் அந்த நிலம் களப்பிர மன்னன் ஒருவனால் பறிக்கப்பட்டதாகவும், பறிக்கப்பட்ட அந்நிலத்தைப் பராந்தக நெடுஞ்சடையன் நற்கொன்றன் வழிவந்த

நற்சிங்கன் என்ற பிராமணருக்கு மீட்டுக் கொடுத்ததாகவும் பதிவு செய்துள்ளது. இச்செப்பேடு சங்க காலம், களப்பிரர் காலம், பாண்டியர் காலம் ஆகிய மூன்று காலங்களைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளது. வேள்விக்குடி செப்பேடு தொடர்ச்சியாக ஒன்றன்பின் ஒன்றாக வந்த மூன்று ஆட்சிக் காலங்களைப் பற்றியும் கூறுகின்றது. இச்செப்பேடு முற்கால தமிழக வரலாற்றில் காணப்படும் இடைவெளிகளில் ஒன்றை நிறைவு செய்ய உதவுகின்றது. வேள்விக்குடி செப்பேடு பராந்தக நெடுஞ்சடையனின் நிலையான வரலாற்றுச் சிறப்புமிக்க பங்களிப்பாகும்.

குறிப்பு

3.10.8.ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன்

வரகுண பாண்டியன் என்ற பராந்தகன் நெடுஞ்சடையனின் மகன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் தந்தை வழி சென்று பாண்டியப் பேரரசைக் கட்டிக் காப்பதில் கவனம் செலுத்தினார். இவரது ஆட்சிக் காலம் ஏற்ற இறக்கங்களைக் கண்டது. பதவிப் பொறுப்பேற்றவுடன் ஏக வீரன், சடையன் மாறன், பரசக்கர கோலாகலன், அவனிசேகரன் ஆகிய பட்டப் பெயர்களால் தன்னை அலங்கரித்துக் கொண்டார். ஏகவீரன் என்ற பட்டத்துக்கேற்ப கங்கர்களையும், காலிங்கர்களையும், சோழர்களையும் பல்லவர்களையும் தனது பேராதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதில் குறியாக இருந்தார். காவிரிப்படுகை இவரது பேரரசின் பகுதியாயிற்று. இதற்குக் காரணம் பாண்டிய மன்னரின் குடமுக்கு (கும்பகோணம்) வெற்றியாகும்.

3.10.8.1. இலங்கைப் போர்

பேரரசுப் பெருக்கப் பேராசையால் உந்தப்பட்ட ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் இலங்கை மீது படையெடுத்தார். இலங்கை மன்னன் முதலாம் சேனா தோற்கடிக்கப்பட்டார். இலங்கைத் தலைநகர் கைப்பற்றப்பட்டு, சூறையாடப்பட்டு, அதன் செல்வம் கைப்பற்றப்பட்டது. புத்த விகாரங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. பாண்டியரின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்ட முதலாம் சேனா மீண்டும் இலங்கை மன்னராக்கப் பட்டார். எனினும் பாண்டியருக்கு எதிரான சிங்களவர் பகையும், பழிவாங்கும் போக்கும் குறையவில்லை.

3.10.8.2. தெள்ளாற்றுப் போர்

இலங்கையை வெற்றி கொண்ட ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் தனது பரம்பரைப் பகைவரான பல்லவரைப் புறங்காணத் தீர்மானித்தார். அப்போது பல்லவர் நாட்டுப் பேரரசராக இருந்த மூன்றாம் நந்திவர்மன் பாண்டியரை வென்று இழந்த பகுதிகளை மீட்க வேண்டும் என்ற முடிவுடன் இருந்தார். பாண்டியப் படையும், பல்லவர் படையும் தெள்ளாறு என்ற இடத்தில் சந்தித்தன. தெள்ளாற்றுப் போரில் பாண்டிய மன்னன் தோற்கடிக்கப்பட்டார். தன் வலிமையையும், பகைவனுடைய வலிமையையும், இருவருக்கும் துணையாக இருப்பவர்களின் வலிமையையும் நன்கு ஆராய்ந்து பாராமல் மேற்கொண்ட போருக்கான

குறிப்பு

விலையைப் பாண்டிய மன்னர் கொடுக்க வேண்டியதாயிற்று. தெள்ளாற்றுப் போர் பாண்டியர் வரலாற்றின் திருப்புமுனையாகவும், பாண்டியப் பேரரசின் சரிவின் அறிகுறியாகவும் அமைந்தது. "முதலாம் பாண்டியர் பேரரசு வீழ்ச்சியடைந்ததற்குத் தெள்ளாற்றுப் போரே முக்கிய காரணமாகும்".

3.10.9. இரண்டாம் வரகுணன்

ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனின் மகன் இரண்டாம் வரகுணன் தன் தந்தை விட்டுச் சென்ற பேரரசுப் பெருஞ்சுமையை சுமந்து கொண்டு ஆட்சிப் பொறுப்பேற்றார். பாண்டிய நாடு சரிவுப் பாதையில் விரைந்து சென்று கொண்டிருந்த போது சோழ நாடு வளர்ச்சிப் பாதையில் பயணித்துக் கொண்டிருந்தது. இரண்டாம் வரகுண பாண்டியனுக்குப் பாண்டியப் பேரரசுக்கு ஏற்பட்ட நெருக்கடியை எதிர்க்கொள்வதற்கான வீரமோ, விவேகமோ அல்லது வேகமோ இல்லை. எனவே இவர் தன்னைச் சூழ்ந்து வந்த நெருக்கடி வளையத்துக்குள் சிக்கிக் கொண்டார்.

3.10.9.1. ஸ்ரீபுறம்பியப் போர்

தன் தந்தையின் தோல்வியிலிருந்து எந்தப் பாடத்தையும் கற்றுக் கொள்ளாத இரண்டாம் வரகுணன் தன் வலிமையைப் பெருக்கிக் கொள்ளாமல், தக்க துணைவர்களை சேர்த்துக் கொள்ளாமல் சோழ நாட்டையும், தொண்டை நாட்டையும் பாண்டியர் பேராதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர விரும்பினார். இச்செயல் ஒருவர் மரத்தின் நுனிக் கொம்பில் ஏறிக்கொண்டு, அதனையும் தாண்டிச் செல்ல முயற்சிப்பதைப் போன்ற நடவடிக்கையாகும். போரின் போக்கு பல்லவர் நாட்டில் நடைபெற்ற வாரிசுரிமைப் போராட்டத்தில் இரண்டாம் வரகுணன் தலையிட்டார். வீண் வம்பை விலைக்கு வாங்கினார். பல்லவப் பேரரசன் மூன்றாம் நந்திவர்மன் இறந்தபின் அவரது மைந்தர்கள் நிருபதுங்கனுக்கும், அபராஜிதனுக்குமிடையே வாரிசுரிமைப் போட்டி ஏற்பட்டது. இப்போட்டியில் இரண்டாம் வரகுணன் பல்லவ இளவரசன் நிருபதுங்கனை ஆதரித்தார். சோழர்களும், கங்கர்களும் அபராஜிதன் பக்கம் இருந்தனர். சோழ இளவரசன் முதலாம் ஆதித்தனும், கங்க அரசன் முதலாம் பிரதிவிபதியும் அபராஜிதனுக்கு ராணுவ உதவி செய்தனர். பல்லவ-சோழ-கங்க கட்டுப் படைக்கும், நிருபதுங்கனை ஆதரித்த வரகுண பாண்டியனின் படைக்குமிடையே கும்பகோணத்துக்கருகே ஸ்ரீபுறம்பியம் என்ற இடத்தில் போர் நடைபெற்றது (கி.பி.880). இப்போரில் இரண்டாம் வரகுண பாண்டியன் படுதோல்வி அடைந்தார். உயிர் பிழைத்து மதுரை திரும்பினார். போரில் வெற்றி பெற்ற அபராஜிதன் பல்லவ மன்னரானார்.

3.10.9.2. போரின் விளைவுகள்

ஸ்ரீபுறம்பியப் போரின் விளைவுகள் பாண்டியப் பேரரசின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தன. இப்போருக்குப் பின் தன்னை ஆதரித்த சோழ மன்னன் ஆதித்த சோழனுக்குத் தன் ஆதிக்கத்தின் கீழ் இருந்த சோழ

நாட்டுப் பகுதிகளைத் திருப்பிக் கொடுத்துவிட்டார் அபராஜிதவர்ம பல்லவர். இதனால் சோழ மண்டலம் சோழர் வசமாயிற்று. அதுமட்டுமல்ல. இரண்டாம் வரகுணனின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த சோழ நாட்டுப் பகுதிகளையும் ஆதித்த சோழனிடம் ஒப்படைக்க வேண்டியதாயிற்று. இவற்றின் கூட்டு விளைவாகப் பல்லவரும், பாண்டியரும் பலமிழக்க, சோழர்களின் கை மேலோங்கியது. சுருங்கக்கூறின், ஸ்ரீபுறம்பியப் போர் பாண்டியரது வீழ்ச்சிக்கும் சோழர்களின் எழுச்சிக்கும் வழி வகுத்தது.

குறிப்பு

3.10.10. பராந்தக வீரநாராயணன்

பராந்தக வீர நாராயணன் இரண்டாம் வரகுணனின் இளைய சகோதரர். இவரது பத்தாண்டு கால ஆட்சியின் போது பதவியைத் தக்க வைத்துக் கொள்வதே இவருக்குப் பெரும் பிரச்சனையாக இருந்தது. வீழ்ச்சிப் பாதையில் விரைந்து சென்று கொண்டிருந்த பாண்டியப் பேரரசுத் தேரை இவரால் நிறுத்த முடியவில்லை. இவர் செய்த சாதனை சேர இளவரசி வானவன் மாதேவியை மணந்து கொண்டதுதான். இவர்களுக்குப் பிறந்த பிள்ளைதான் மாறவர்மன் ராஜசிம்மன். பராந்தக வீரநாராயணனின் ஆட்சிக்கால இறுதியில் வாரிசுரிமைப் போட்டியால் பாண்டிய நாடு குழப்பக்காடாயிற்று. பராந்தக வீரநாராயணன் போரில் ஆர்வம் காட்டாமைக்கு இவர் ஒரு தீவிர சமணராயிருந்தது காரணமாக இருக்கலாம். இப்பாண்டிய மன்னன் மறவீரத்தைவிட அறவீரமே சிறந்தது என்று எண்ணி சமணப் பள்ளிகளுக்குப் பேருதவி செய்தார். இவரது ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாட்டில் சமணம் தழைத்தோங்கியது.

3.10.11.இரண்டாம் இராஜசிம்மன்

பராந்தக வீரநாராயணனுக்குப் பின் அரசுப் பொறுப்பேற்ற இரண்டாம் இராஜசிம்மன் சேரநாட்டு வானவன் மாதேவியின் மகன். இவருக்கு மாறவர்மன் என்ற பட்டப் பெயரும் உண்டு. அதனால் இவர் மாறவர்மன் ராஜசிம்மன் என்று அழைக்கப்பட்டார். இவரது ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாட்டுக்கு வடக்கே விரைந்து வளர்ந்து கொண்டிருந்த சோழர்களின் சவாலை சமாளிக்க வேண்டியதாயிற்று. இலங்கைச் சிங்கள மன்னரின் துணை கொண்டு சோழரை முறியடிப்பதற்கான முயற்சியை மேற்கொண்டார் இராஜசிம்மன். ஆனால் வலிமைமிக்க முதலாம் பராந்தக சோழனின் எதிர்ப்பை இவரால் எதிர்க்கொள்ள முடியவில்லை. சோழ மன்னன் பராந்தகனின் தாக்குதலை சமாளிக்க முடியாத இரண்டாம் இராஜசிம்மன் வேலூர் போரில் தோல்வியடைந்து இலங்கையில் தஞ்சமடைந்தார். இறுதியில் இவருக்குத் தாய் வீடான சேரநாடு அடைக்கலம் அளித்தது. இத்துடன் தமிழ் நாட்டில் பாண்டியர் ஆதிக்கம் முடிவுக்கு வந்தது. பாண்டியப் பேரரசு சோழப் பேரரசுக்குத் திறை செலுத்த வேண்டிய அளவுக்குத் தள்ளப்பட்டது. பாண்டிய நாடு சோழ நாட்டின் பகுதியாயிற்று. இராஜசிம்மனின் மகன் வீரபாண்டியன் பாண்டியப் பேரரசின் வீழ்ச்சிக்கு சாட்சியாக இருந்தார்.

குறிப்பு

3.11. பாண்டியர் வாழ்வியல்

3.11.1. அரசியல் நிலை

முற்காலத் தமிழ்நாட்டு வரலாற்றில் சங்ககாலம், களப்பிரர் காலம், பாண்டியர் காலம் ஆகிய மூன்றும் தொடர்ச்சியாக வரும் காலகட்டங்களாகும். சங்ககாலப் பாண்டியப் பரம்பரையினர் களப்பிரர் காலத்தைக் கடந்து வந்த போது அவர்களது வாழ்வியலில்அரசியல், பொருளாதார, சமூக, சமய, கலாச்சார நிலைகளில்-வேதியல் மாற்றம் (Chemical Change) ஏற்பட்டது. குறிப்பாக சமுதாய, சமய நிலைகளில் அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டன. அரசு பேரரசாயிற்று சங்ககால பாண்டியர் அரசு பேரரசாக உருமாற்றம் அடைந்தது. இந்த மாற்றத்துக்கு முன்னோடியாக இருந்தவர் களப்பிரரை வெற்றி கொண்டு பாண்டிய நாட்டை அவர்களது பிடியிலிருந்து மீட்ட கடுங்கோன். இம்மன்னருக்குப் பாண்டியப் பேரரசு பற்றிய தொலைநோக்கு இருந்தது. இப்பாண்டிய மன்னன் பாண்டியர் மரபு வழி வந்த செழியன், மாறன், வழுதி ஆகிய குலப் பெயர்களால் அழைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பாண்டியப் பேரரசர்களின் பெயர்களில் சமஸ்கிருதச் சொற்கள் சேர்க்கப்படுவது புதுப்பழக்கமாயிற்று. ரணதீரன், ராஜசிம்மன், ஸ்ரீமாற ரீவல்லபன் எனக் கூறிக் கொள்வதில் பெருமைப்பட்டனர். அதுமட்டுமல்ல முச்சங்கம் வைத்து முத்தமிழ் வளர்த்த சங்கப் பாண்டியர் வழி வந்தோர் சீவரன், சீமனோகரன், விநய விச்சுதன், மருத்பலன், வீதகன் மஷின், விக்ரம பராசரன், மனுபமன், பர்த்திவீரன், கிரிஸ்தரன், கீதகிந்தரன், கிருபாலயன், கிருதாபதானன், கண்டக நிஷ்டுரன், கார்யதஷிணன், பாபபீரு போன்ற சிறப்புப் பெயர்களை வைத்துக் கொள்ளத் தயங்கவில்லை.

3.11.2. இராணுவ வல்லாட்சி

முற்காலப் பாண்டிய நாட்டில் முடியாட்சி முறையே பின்பற்றப்பட்டது. மன்னனை மையமாக வைத்தே மத்திய, மாநில அரசாங்கங்கள் சுழன்றன. அமைச்சர்களில் முதன்மையாக இருந்தவர் உத்தம மந்திரி என்று அழைக்கப்பட்டார். இராணுவம் சார்ந்த, இராணுவம் சாராத அதிகாரங்கள் என்று பிரிக்கப்படவில்லை. அதாவது இராணுவ வல்லாட்சியே நடைபெற்றது.

3.11.3. உள்ளாட்சி

உள்ளாட்சி நிர்வாகத்தைப் பொறுத்தவரை ஊர் மன்றங்களும், குழுக்களும் கிராம விவகாரங்களைக் கவனித்துக் கொண்டன. இத்தகைய உள்ளாட்சி அமைப்பு முறை பிரம்மதேய கிராமங்களில் செயல்பட்ட கிராம சபைகளால் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஒரு

சுவையான தகவல் என்னவெனில் சபை நடவடிக்கைகளைத் தடுக்க முற்பட்டவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

3.11.4. பொருளாதார நிலை

பாண்டியரின் பொருளாதார நிலை பற்றி அறிந்து கொள்வதற்கான ஆதாரங்கள் மிகவும் குறைவு. பண்டைக்கால பாண்டிய நாட்டில் முத்துக்குளித்தலும், முத்துக்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டுச் சான்றுகள் பல உள்ளன. இக்காலகட்டத்தில் முத்துக் குளித்தல் பற்றிய வரலாற்றை ஆய்வு செய்த எஸ். அருணாசலம் பின்வரும் தகவல்களைத் தருகிறார்: கி.பி.400க்கும் 1000க்குமிடையேயான முத்துக்குளித்தல் தொழில் பற்றியும், அதுபற்றிய வர்த்தகத் தொடர்புகள் பற்றித் தெரிந்து கொள்வதற்கான இலக்கியம் எதுவுமில்லை.

3.11.5. வர்த்தகச் சிறப்பு

63 நாயன்மார்களைப் பற்றிக் கூறும் பெரிய புராணத்தில் இதுபற்றி எந்தத் தகவல்களும் இல்லை. கடவுளைப் புகழ்ந்து பாடுவதைத் தவிர வேறு எதைப் பற்றியும் சைவ வைணவ நாயன்மார்களும், ஆழ்வார்களும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை, சீனப் பயணி யுவான் சுவாங்கும் பாண்டியரது முத்து வர்த்தகத்தைப் பற்றி எதுவும் குறிப்பிட வில்லை. முத்து வர்த்தகத்தின் கேந்திரமாகச் செயல்பட்டு வந்த கொற்கைத் துறைமுகம் புறக்கணிக்கப்பட்டிருந்தது. எனினும், பிற நாடுகளுடனான முத்து வியாபாரம் தொடர்ந்தது என்று நம்பலாம். பொதுவாக இக்காலகட்டத்தில் மதுரை மண்டலம் வர்த்தகத்தில் தான் சிறப்புற்றிருந்தது என்று குறிப்பிட்டுள்ளார் யுவான் சுவாங்.

3.11.6. சமுதாய நிலை

சங்ககால சமுதாயத்தில் வீரமும், காதலும் முக்கியமாகக் கருதப்பட்டன. அவை புவியியல் ரீதியான திணை வாழ்க்கை முறையாகும். இத்திணைச் சமுதாய அமைப்பு முறை களப்பிரர் ஆட்சிக் காலத்தில் அடியோடு மாறிப்போயிற்று. தமிழ்ச் சமுதாயம் புத்த, சமண சமயங்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. களப்பிரர்களுக்குப்பின் வந்த பாண்டியர் காலத்தில் களப்பிரர் அகற்றப்பட்டனர். ஆனால் சமணத்தின் செல்வாக்கு குறையவில்லை. சமய வாழ்வில் சமணத்தின் செல்வாக்கு நீடித்தது. ஆனால் சமுதாய வாழ்வியலில் வைதீக வேத வர்ணமுறை மேலோங்கியது. நான்குவகை சாதிமுறை வேரூன்றியது. உயர்சாதி-தாழ்ந்த சாதி வேறுபாடுகள் அதிகரித்தன. சங்ககாலப் பார்ப்பணர்கள் பாண்டியர்கால பிராமணர்கள் ஆனார்கள். இவர்கள் வேதியர்கள் என்று அழைக்கப்பட்டனர். வைதீக சமுதாய மரபுகள் தமிழ்ச்சமுதாய மரபுகளுடன் சங்கமித்தன. பிரம்மதேய, தேவதான கிராமங்கள் பல்கிப் பெருகின. இக்கிராமங்கள் பிராமணர்கள் தனியாகவும், கூட்டாகவும்

குறிப்பு

குறிப்பு

பயன்படுத்திக் கொள்வதற்காகக் கொடுக்கப்பட்டவை. இவை முழுமையான வரிவிலக்குப் பெற்றன. பல சலுகைகளைப் பெற்று தன்னுரிமையுடன் செயல்பட்டன.

3.11.7. சமுதாயத் தாக்கம்

இவற்றின் சமுதாயத் தாக்கம் கணிசமானது. சடையவர்மன் பராந்தகனின் வேள்விக்குடி செப்பேடு கொற்றைக்கிழான் நற்கொன்றன் என்ற அந்தணனுக்கு வேள்விச் சாலைக்கு முன்பு நின்று பிரம்மதேய நிலத்தை மீட்டுக் கொடுத்ததை உறுதி செய்கிறது. எனவே, பாண்டியர் சமுதாயம் பிராமணர்கள், போர்த்தொழில் புரிவோர், வெள்ளாளர்கள், தாழ்த்தப்பட்டோர் என்று சாதி-வகுப்பு வழி பிரிக்கப்பட்டிருந்தனர். பாண்டிய மன்னர்கள் இச்சமுதாயப் பிரிவினையை பலப்படுத்தினார்களேயன்றி, சாதி வேறுபாடுகளைப் போக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

3.11.7. சமய நிலை

தமிழ் நாட்டில் பக்தி இயக்கம் விரைந்து பரவிக் கொண்டிருந்த வேளையில் பாண்டிய நாடு சமணக் கோட்டையாகக் காட்சியளித்தது! களப்பிரர் காலத்தில் ஆதிக்கம் செலுத்திய சமணம் பாண்டியர் காலத்தில் சூழ்நிலைக்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டு செல்வாக்கு குறையாமல் நீடித்தது. சிலை வழிபாட்டை முழுமூச்சுடன் எதிர்த்து வந்த சமண சமயம் உருவச் சிலைகளில் நம்பிக்கை கொள்ளத் துவங்கியது. மதுரையிலும், மதுரையைச் சுற்றிலும் பல சமணப் பள்ளிகள் செயல்பட்டன. இப்பள்ளிகளில் பல பாண்டியர் காலத்தில் துவக்கப்பட்டவையாகும். அதேபோன்று சமணப் பள்ளிச் சந்தங்களும் கட்டப்பட்டன. பாண்டியர் குலத்தைச் சேர்ந்த பராந்தக வீரநாராயணன் வானவன் மகாதேவியின் பெயரால் மகாதேவிப் பெரும்பள்ளி ஒன்றைக் கட்டினார். இம்மன்னரே சமணராக இருந்தமையால் பாண்டிய நாட்டில் சமணம் அரசாங்கப் பாதுகாப்புடன் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தது. அச்சணந்தி என்ற சமணத் துறவி பாண்டிய நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று சமணத்தைப் பரப்பினார் என்று கூறப்படுகிறது. சைவ, வைணவ சமயங்கள் பாண்டிய நாட்டில் சமண சமயம் செல்வாக்கு பெற்றிருந்தாலும் வைணவ, சைவ சமயங்களும் பாண்டிய மன்னர்களால் ஆதரிக்கப்பட்டன. குறிப்பாக, பாண்டிய மன்னர்கள் பராந்தகன் நெடுஞ்சடையன், ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் ஆட்சிக் காலங்களில் வைணவ சமயம் சைவ சமயத்தைவிட வளர்ச்சியடைந்தது. அதற்குக் காரணம் இந்த இரண்டு பாண்டிய மன்னர்களும் வைணவர்களாக இருந்தமையேயாகும். ஆழ்வார்கள் அரசாங்க ஆதரவுடன் வைணவத்தைப் பரப்பினர். ஸ்ரீவில்லிபுத்தூர் வைணவ சமயத்தின் கேந்திரமாகத் திகழ்ந்தது. சமண-வைணவ--சைவ சமயங்கள் சச்சரவின்றி செயல்பட்டன. பல்லவ, சோழ நாடுகளில் சமயப் பொறையின்மை கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த நேரத்தில் பாண்டிய நாட்டில் சமய சமத்துவம் நிலவியது.

முதல் பாண்டியப் பேரரசில் சமய சமத்துவம் நிலவிய போதிலும் பக்தி இயக்கத்தின் தாக்கம் இருக்கவே செய்தது. மாணிக்கவாசகர் சிதம்பரத்தில் புத்தர்களை விவாதத்தில் வெற்றி கண்டு சைவ சமயத்துக்கு மதமாற்றம் செய்தார். ஆனால் கூன்பாண்டியன் என்று அறியப்பட்ட அரிகேசரி பராங்குச மாறவர்மன் பாண்டியன் எந்த சைவ நாயன்மாராலும் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்துக்கு மாறியது பாண்டிய நாட்டில் சமணத்தின் செல்வாக்குக் குறையக் காரணமாயிற்று."" மதுரை மண்டல மக்கள் சைவ நாயன்மார்களின் பிரச்சாரத்தால் மனமாற்றம் அடைந்தனர். சுருங்கக்கூறின் "சங்க காலத்தில் நிலவிய மகிழ்ச்சிகரமான சமயச் சூழ்நிலை முற்றிலுமாக மாறிவிட்டது.

குறிப்பு

3.11.8. பாண்டியர் பண்பாடு

பண்பாடு (Culture) என்பது அக வளர்ச்சியின் வெளிப்பாடாகும். அன்பு, அருள், வாய்மை, தூய்மை போன்றவை பண்பாட்டின் அடையாளங்களாகும். அதாவது பண்பட்ட மனதைக் குறிப்பது பண்பாடு. அதனால் தான் மக்களின் பழக்கவழக்கங்கள், சமுதாய நெறிகள், சமய நம்பிக்கைகள், கலைகளின் நிலை போன்றவை பொதுவாகப் பண்பாடு என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. இந்த அளவுகோலைக் கொண்டு பார்க்கையில் முதலாம் பாண்டியப் பேரரசின்கீழ் மக்களின் கல்வி நிலை, இலக்கியப் படைப்புகள், கவின் கலைகளின் வளர்ச்சி போன்றவை பற்றி அறிந்து கொள்வதற்கான ஆதாரங்கள் மிகக் குறைவாகவே உள்ளன.

3.11.9. கல்வி நிலை

மக்களின் கல்வி நிலையைப் பொறுத்தவரை சமணப் பள்ளிகள் சாதி வேறுபாடின்றி அனைவருக்கும் சமய, ஒழுக்கக் கல்வி அளித்தன. பிரம்மதேய நிலப் பகுதிகளில் வேதக்கல்வி பிராமணர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டது. ஓரளவு வசதி படைத்தோர் பிள்ளைகள் திண்ணைப் பள்ளிகளில் பயின்றனர். எஞ்சியிருந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எக்கல்வியும் கொடுக்கப்படவில்லை. கல்வியின் சிறப்புணர்ந்த தமிழ்ச் சமுதாயத்தில், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியர் பேரரசில் மிகப் பெரும்பான்மையான மக்கள் தற்குறிகளாகவே இருந்தனர். கல்வியின் பயனைப் பெறாத இவர்கள் சமய நம்பிக்கைகளில் மூழ்கிப்போயினர். சமஸ்கிருதத்துக்குக் கொடுக்கப்பட்ட மதிப்பும் சிறப்பும் தமிழுக்குக் கொடுக்கப்படவில்லை. எனவே, முதலாம் பாண்டியப் பேரரசில் தமிழ் இலக்கியம் வளராமல் போனதில் வியப்பில்லை. பாண்டியன் சடையவர்மன் பராந்தகனின் வேள்விக்குடி செப்பேடு விதிவிலக்குபாண்டியர்கள் "கருப்பான, இரக்கமற்ற, மூர்க்கத்தனமான, பண்பாட்டைப் பற்றி அக்கறையற்றவர்கள்" என்று குறிப்பிட்டுள்ளார் யுவான் சுவாங்.

குறிப்பு

3.11.10. கட்டிடக்கலை

கலைகளின் பிறப்பிடமாகவும், இருப்பிடமாகவும் இருப்பவை கோயில்கள். மதுரையில் உள்ள மீனாட்சி-சுந்தரேஸ்வரர் கோயில் உலகப் புகழ் பெற்றது. இக்கோயில் பற்றிய புராணக் கதைகள் பல. அவற்றுள் ஒன்றில் மதுரை மீனாட்சி அம்மன் பார்வதி தேவியின் அவதாரம் என்றும், மதுரை மன்னன் மலையத்துவஜ பாண்டியனுக்குப் பிறந்தவர் எனவும் திருவிளையாடல் புராணம் கூறுகிறது. சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த பாண்டிய மன்னர்களும், நாயக்க மன்னர்களும் இக்கோயில் வளரவும், உயரவும் பங்களிப்பு செய்துள்ளனர். இப்பங்களிப்பில் முதல் பாண்டியப் பேரரசைத் தோற்றுவித்த கடுங்கோன் மற்றும் அவர் வழி வந்த பாண்டிய மன்னர்களின் பங்கு கணிசமானது. இதேபோன்று மதுரைக்கு அருகில் உள்ள அழகர்கோயிலுக்கும் இம்மன்னர்கள் உதவியிருக்க வேண்டும்.

3.11.11. சிற்பம், ஓவியம், நடனம்

புதுக்கோட்டைக்கு அருகே உள்ள சித்தன்னவாசல் மலையில் உள்ள சமணர் குகைக் கோவில் சமண சிற்பக் கலையின் சிகரமாகக் கருதப்படுகின்றது. இக்கோயிலின் சுவர்களில் சமணத் தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்த ஸ்ரீமாற ஸ்ரீவல்லப பாண்டியன் ஆட்சிக் காலத்தில் இக்குகைக் கோயில் சிறந்த சமண மையமாகத் திகழ்ந்தது. இப்பாண்டிய மன்னரின் ஆதரவோடு இளம் கௌதமன் என்ற ஆசிரியர் சித்தன்னவாசல் குகைக் கோயிலுக்குத் திருப்பணி செய்து வியத்தகு ஓவியங்களைத் தோற்றுவித்தார் என்று இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்றைக்கும் இந்த வண்ண ஓவியங்கள் பாண்டியர் கால ஓவியக்கலைத் திறனைப் பறைசாற்றுபவையாக உள்ளன. இந்த ஓவியங்களைக் கொண்டு அக்காலப் பெண்கள் அணிந்த அணிகலன்கள், கூந்தல் அலங்காரம், ஆடைகள், ஒப்பனை போன்ற பலவற்றையும் தெரிந்து கொள்ள முடிகின்றது. இக்குகைக் கோயிலில் சிற்பம், ஓவியம், நடனம் ஆகிய முக்கலைகளும் சங்கமிக்கின்றன.

3.11.12. சமணச் சிற்பங்கள்

வரகுண மகாராஜா என்று அழைக்கப்பட்ட பராந்தகன் நெடுஞ்சடையன் ஆட்சிக் காலத்தில் திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டிக்கு அருகே அமைந்துள்ள கழுகுமலை வெட்டுவான் கோயில் புகழ் பெற்றுத் திகழ்ந்தது. இங்குள்ள ஒற்றைக் கற்கோயில் பாண்டியர் உருவாக்கிய ஈடு இணையற்ற கலைக் கருவூலமாகும். இக்கோயிலுக்கு அருகாமையில் உள்ள மலைப்பாறையில் பல அரிய சமண சிற்பங்கள் காணப்படுகின்றன. இவையாவும் பராந்தகன் நெடுஞ்சடையன் காலத்தில் உருவாக்கப்பட்டவையாகும். தமிழ்

நாட்டிலேயே இங்குதான் சமண சிற்பங்கள் அதிகமாக உள்ளன. இச்சிற்பங்களின் அடியில் வட்டெழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மகாவீரர், பர்சுவநாதர், நேமிநாதர் போன்ற சமண தீர்த்தங்கரர்களின் அமர்ந்த நிலையிலுள்ள சிற்ப உருவங்கள் மற்றும் யக்ஷர், பஷிகளின் சிற்ப உருவங்களும் காணப்படுகின்றன. தீர்த்தங்கரரின் தலைக்கு மேல் உள்ள முக்குடையும், கொடியும், யஷிகளின் கரங்களில் ஏந்தியுள்ள சாமரங்களும் செம்மையாக செதுக்கப்பட்டுள்ளன. இக்கோயில் வளாகத்தில் பல புகழ் பெற்ற சமணத் துறவிகள் வாழ்ந்துள்ளனர். இறந்தோர் நினைவு சிற்ப உருவங்களும் உள்ளன.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

6. பாண்டி என்றால் ..... என்று பொருள்.
7. களப்பிரரைத் தோற்கடித்து, பாண்டிய நாட்டை மீட்டது யார்?
8. பராங்குசன் என்பது யாருடையப் பட்டப் பெயராகும்?
9. யார் வேள்விக்குடி செப்பேட்டை வெளியிட்டது?
10. அரிகேசரி மாறவர்மன் யாரால் சைவ சமயத்துக்கு மாறினார்?

3.12. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

1. விநயவிநீச்சம் என்ற பாலி மொழியில் எழுதப்பட்ட நூல்.
2 கர்நாடகப் பகுதியிலிருந்து.
3. அச்சுத விக்கிரமன்.
4. போதி தர்மரும், தர்மபாலரும்.
5. திருமூலரின்.
6. எருது.
7. கடுங்கோன்.
8. அரிகேசரி பராங்குசன் மாறவர்மன்.
9. பராந்தக நெடுஞ்சடையன்.
10. திருஞானசம்பந்தர்.

3.13. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

குறுகிய வினாக்கள்

1. களப்பிரர் யார்?
2. களப்பிரர் ஆட்சி குறித்து சிறு குறிப்பு எழுதுக.
3. களப்பிரர் வீழ்ச்சி குறித்து எழுதுக.

குறிப்பு

குறிப்பு

விரிவான வினாக்கள்

1. களப்பிரர் காலத்தில் சமுதாய நிலை குறித்து கட்டுரை எழுதுக.
2. பாண்டிய மன்னர்களின் வளர்ச்சியை குறித்து ஆராய்க.
3. பாண்டிய காலத்தில் சமுதாய நிலை குறித்து விவாதி.

3.14. கூடுதல் வாசிப்புகள்

Subramania N. A History of Tamil Nadu up to 1336

Rajayyan K. History of Tamil Nadu

பிள்ளை கே.கே. தென்னிந்திய வரலாறு

Nilakanda Sastri K.N. A History of South India

Sathianathair R. History of India

வெங்கடேசன் க. முற்கால தமிழ்நாட்டு வரலாறு

செல்வம் வே. தி. தமிழக: வரலாறும் பண்பாடும்

அலகு – 4

சோழப் பேரரசு-முதலாம் இராஜாராஜா- முதலாம் இராஜேந்திர-சாதனைகள்

பாட அமைப்பு

4.1. முன்னுரை

4.2.நோக்கங்கள்

4.3.இராஜராஜன்

- 4.3.1. புகழ் பெற்ற போர்கள்
- 4.3.2. காந்தளூர்சாலைப் போர்
- 4.3.3. பாண்டியருடன் போர்
- 4.3.4. மலைநாட்டுப் படையெடுப்பு
- 4.3.5. இலங்கைப் படையெடுப்பு
- 4.3.6. சாளுக்கியப் போர்
- 4.3.7. மாலத்தீவுகள் படையெடுப்பு
- 4.3.8. இராஜராஜனின் ஆட்சிக்கால சாதனைகள்

4.4. இராஜேந்திரன்

குறிப்பு

4.4.1.புகழ் பெற்ற போர்கள்

4.4.1.1. இலங்கைப் படையெடுப்பு

4.4.1.2. பாண்டியருடன் போர்

4.4.1.3. சேரருடன் போர்

4.4.1.4. சாளுக்கியப் போர்கள்

4.4.1.5. கங்கை படையெடுப்பு

4.4.1.6. கடாரம் படையெடுப்பு

4.4.1.7. பிற படையெடுப்புகள்

4.4.2. ஆட்சிக்கால சாதனைகள்

4.5. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

4.6. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

4.7. கூடுதல் வாசிப்புகள்

4.1. முன்னுரை

விஜயலாயன் முதலாம் சோழப் பேரரசுக்கு வித்திட்டார். அவரது வழிவந்தோர் அப்பேரரசை விரிவுபடுத்தினர். அருள்மொழி வர்மன் என்று அழைக்கப்படுகின்ற இராஜராஜ சோழன் சோழப்பேரரசுக்கு ஒரு வலிமையான அடித்தளத்தை அமைத்தார். இவர் மேற்கொண்டபோர்களின் மூலமாக சோழப்பேரரசு தென்னிந்திய மட்டுமின்றி இலங்கை வரையிலும் பரத்துவங்கியது. இவர்க்கு பிறகு அரியணை ஏறிய இராஜேந்திரச்சோழன் தன்னுடைய வலிமையான கடற்படையை கொண்டு கடாரத்தை வென்றார். இவ்விரு அரசர்களும் வழங்கிய நிர்வாகம் நவீனகாலத்துக்கும் ஒரு முன்னுதாரணமாக விளக்கியது. இந்த அத்தியாமானது இவ்விரு அரசர்களின் படையெடுப்பு, நிர்வாகம் மற்றும் பிற சாதனைகளை விளக்குகிறது.

4.2.நோக்கங்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர் கீழ் கண்டவற்றை அறிய முடியும்

- இராஜராஜன் படையெடுப்புகள் குறித்து விளக்குகிறது.
- இராஜேந்திரனின் படையெடுப்புகள் குறித்து அறிய உதவுகிறது.
- இராஜராஜன் மற்றும் இராஜேந்திரன் ஆகியோரின் சாதனைகளை குறித்து அறியலாம்.

குறிப்பு

4.3.இராஜராஜன்

உத்தம சோழன் இறந்தபின் அவரது மகன் மதுராந்தகன் மன்னராகவில்லை. மாறாக இரண்டாம் பராந்தகனுக்கும் (சுந்தரசோழன்) சேர நாட்டு இளவரசி வானவன் மாதேவிக்கும் பிறந்த அருள்மொழிவர்மன் அரசுக் கட்டிலேறினார். தந்தையுடனிருந்து ஆட்சியில் பங்கேற்று, அறிவுத் தெளிவும், அரசாங்க விவேகமும், நிர்வாகத் திறமையும், போர் அனுபவமும் பெற்றிருந்த அருள்மொழிவர்மன் இராஜராஜனாகி புதிய சகாப்தம் படைத்தார். இவரது ஆட்சிக் காலம் சோழர் வரலாற்றில் புதிய திருப்புமுனையை ஏற்படுத்தியது. சோழப் பேரரசு புதிய பரிமாணங்களுடன் பிரகாசித்தது. இராஜராஜன் இராஜகேசரி, பெருவுடையார், மகாராஜராஜன் என்று அழைக்கப்பட்டார். இவர் சோழர்களின் இரண்டாவது பேரரசைத் துவக்கினார். இராஜராஜனின் வழி வந்தோர் பிற்காலச் சோழர்கள் என்று அறியப்பட்டனர்.

4.3.1. புகழ் பெற்ற போர்கள்

முற்காலத் தமிழ் மன்னர்கள் போர்களால் அறியப்பட்டார்கள். சங்ககால மன்னர்களும், அவர்களுக்குப் பின் களப்பிரர் காலத்தைத் தாண்டி வந்த பாண்டியர்களும் சோழர்களும் போர்ப் பாரம்பரியத்தை முன்கொண்டு சென்றனர். முதல் சோழ பேரரசுக்கு அடித்தளமிட்ட விஜயாலயன் தஞ்சையை மீட்டு, தஞ்சையைத் தலைநகராக கொண்டு, பல போர்களில் வெற்றி பெற்று சோழர்களின் ஆட்சிக்கு நிலைத் தன்மையைக் கொடுத்தார். இராஜராஜன் ஆட்சி பொறுப்பேற்பதற்கு முன்பு சோழ நாட்டு அரசியலில் தெளிவற்ற நிலை நீடித்தாலும் அவர் ஆட்சிக்கு வந்த போது சோழர் மரபும், நிர்வாகமும், இராணுவமும் நிலையாக இருந்தா அரசாங்க அமைப்பும் தரைப்படை, கடற்படை விரிவாக்கத்துக்கான உட்கட்டமைப்பட இருந்தது. இக்கட்டமைப்பையும், இயற்கை-செயற்கை வளங்களையும் முழுமையாக பயன்படுத்தி சோழப் பேரரசை வலிமைமிக்க ஆதிக்க அரசாக மாற்றிய பெருமை இராஜராஜனைச் சேரும். இராஜராஜன் விரிவாக்கவாதி (நுஞியளெழைளைவ ஏகாதிபத்தியவாதி (ஐஅிநசயைடளைவ). இவர் போர்களைப் பயன்படுத்திப் பேரரசை விரிவுபடுத்திப் பலப்படுத்தினார். இராஜராஜனின் போர்கள் புகழ் பெற்றவை.

4.3.2. காந்தளூர்சாலைப் போர்

இராஜராஜன் சோழர் அரசுரிமையை மட்டும் வாரிசாகப் பெறவில்லை சோழர்களின் பாரம்பரியப் பகைவர்களான சேரர்-பாண்டியர்-சிங்களவர் ஆகியோரின் பகைமையையும் வாரிசாகப் பெற்றார். இராஜராஜன் பதவிக்கு வந்தபின் இவர்களின் எதிர்ப்பை முறியடிப்பதற்கான முயற்சிகளில் முனைப்புடன் ஈடுபட்டார். எட்டாண்டு கால ஏற்பாட்டுக்குப் பின்னர் படையெடுப்புகளுக்குத் தயாரானார். இராஜராஜன் முதலில் தனது பார்வையை சேர நாட்டின் மீது திருப்பினார்

குறிப்பு

யானையின் பலம் துதிக்கையில் இருப்பதைப் போன்று சேரரின் பலம் கடற்படையில் இருப்பதை அறிந்த சோழ மன்னன் சேரர்களின் கடற்படை முதுகெலும்பை முறிக்கத் திட்டமிட்டார். அத்திட்டத்தின்படி, தான் அனுப்பிய தூதுவரை சேர மன்னன் பாஸ்க ரவிவர்மன் அவமதித்து விட்டதாகக் கூறி சேர நாட்டின் மீது படையெடுத்தார் திருவனந்தபுரத்தின் கடற்கரைப் பகுதியாக இருந்த காந்தளூர் சாலையில் போர் மூண்டது. இப்போரின் போது சேரரின் கடற்படை அழிக்கப்பட்டது. அதோடு ராணுவ பயிற்சிப் பள்ளியும் தரைமட்டமாக்கப்பட்டது. சேர மன்னன் பாஸ்கர இரவிவர்மனும் அவருக்குத் துணைபோன பாண்டிய மன்னன் அமரபுஜங்கனும் தோல்வியைத் தழுவினர். தன் முடியுடன் சேர, பாண்டியர்களது முடிகளையும் சூட்டிக் கொண்டமையால் இராஜராஜன் மும்முடிச் சோழன் என்று அழைக்கப்பட்டார். இப்போர் சேரரின் கடற்படை வலிமையைக் செயலிழக்கச் செய்யவே மேற்கொள்ளப்பட்டது. சேர மன்னன் கொல்லத்துக்குத் தப்பிச் சென்றதால் கொல்லமும் தாக்கப்பட்டு கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட காந்தளூர் மற்றும் கொல்லம் பகுதிகளின் நிர்வாகம் சீரமைக்கப்பட்டது. அங்கிருந்த வேதப் பள்ளிகளுக்கு வேண்டிய உதவிகள் செய்து கொடுக்கப்பட்டன. சேர நாட்டில் சதயம் திருவிழாவும் துவக்கப்பட்டது. காந்தளூர் சாலைப் போர் வெற்றி இராஜராஜனின் புகழ் பரவக் காரணமாக இருந்தது. அதுமட்டுமல்ல. அருள்மொழிவர்மனுக்கு ராஜராஜன் என்ற பெயரை சிதம்பரம் கோயில் நிர்வாகிகள் கொடுத்ததாக மரபு வழிச் செய்தி உள்ளது.

4.3.3. பாண்டியருடன் போர்

காந்தளூர் சாலைப் போரில் பாண்டிய மன்னன் அமரபுஜங்கன் சேர மன்னன் பாஸ்கர இரவிவர்மனுக்குத் துணையாக இருந்தார். எனவே, பகைவனின் நண்பன் தனக்கு எதிரி எனக் கருதிய இராஜராஜன் பாண்டிய மன்னனுக்குப் பாடம் கற்பிக்கும் பொருட்டு பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தார். இப்போரில் பாண்டிய மன்னன் அமரபுஜங்கன் தோற்கடிக்கப்பட்டார். பாண்டிய நாடு சோழ நாட்டுடன் இணைக்கப்பட்டது. இவ்வெற்றியைப் பாராட்டு முகத்தான் இராஜராஜனுக்கு தென்ன பராக்கிரமன் என்ற விருதுப் பெயர் சூட்டப்பட்டது. இவ்வெற்றியின் மூலம் பாண்டிய நாட்டின் மீது சோழரது ஆதிக்கம் திரும்பவும் நிலைநாட்டப்பட்டது.

4.3.4. மலைநாட்டுப் படையெடுப்பு

பாண்டியரை வெற்றி கொண்ட இராஜராஜன் மலை நாடு அல்லது குடமலை நாடு (கூர்க்) மீது படையெடுத்தார். இப்படையெடுப்பின் நோக்கம் சேரரும், பாண்டியரும் மீண்டும் தலைதூக்காமல் இருப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகும். அதேபோன்று கொங்கு நாட்டுக்கு அருகாமையிலிருந்த நுனம்பாடி கைப்பற்றப்பட்டது. அதோடு கங்கவாடி, தடிகைபாடி, தலைக்காடு ஆகிய மைசூர் பகுதிகளும் கைப்பற்றப்பட்டன.

குறிப்பு

இப்படையெடுப்புகள் எல்லாம் ராஜராஜனின் பட்டத்து இளவரசன் இராஜேந்திரன் தலைமையில் மேற்கொள்ளப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. வெற்றி நாயகன் இராஜேந்திரனுக்கு மாதண்ட நாயகன் என்ற பொறுப்புமிக்க பதவியை அளித்துப் பெருமைப்படுத்தினார் தந்தை இராஜராஜன்.

4.3.5. இலங்கைப் படையெடுப்பு

சேரர், பாண்டியரைப் போன்றே இலங்கைச் சிங்களவரும் சோழர்களுக்குப் பரம்பரைப் பகைவர்கள். எப்போதெல்லாம் சோழர்கள் சேரர் மற்றும் பாண்டியர்களுடன் போரிட்டனரோ அப்போதெல்லாம் சிங்களவர் அவர்களை ஆதரித்துள்ளனர். எனவே இராஜராஜன் இலங்கையை வென்று, சோழ நாட்டுடன் இணைத்து சிங்களவர் எதிர்ப்புக்கு நிரந்தரமாக முடிவு கட்டத் தீர்மானித்தார். அதற்கான வாய்ப்பை எதிர்நோக்கியிருந்தார். அவர் எதிர்பார்த்த வாய்ப்பும் வந்தது. இலங்கை மன்னன் ஐந்தாம் மகேந்திரனுக்கு எதிராக அவரது படையினரே கிளர்ச்சி செய்தனர். இக்கிளர்ச்சியை எதிர்க்கொள்ள முடியாத இலங்கை அரசன் இலங்கையிலிருந்து தப்பி பாண்டிய நாட்டுக்கு வந்தார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட இராஜராஜன் இலங்கை மீது படையெடுத்தார். ஆயிரம் ஆண்டுகால இலங்கைத் தலைநகரான அனுராதபுரம் கைப்பற்றப்பட்டு, அழிக்கப்பட்டது. அதையடுத்து இலங்கையில் வடக்குப் பகுதியும் வீழ்ந்தது. அப்பகுதிக்கு மும்முடி சோழ மண்டலம் என்று பெயரிடப்பட்டது. ராணுவக் காவல் தலைநகராயிருந்த பொலனருவை இப்புதிய மண்டலத்தின் தலைநகரமாக்கப்பட்டது. இந்நகருக்கு ஜகன்னாத மங்கலம் என்று பெயரிடப்பட்டது. அங்கு ஒரு சிவன் கோயிலும் கட்டப்பட்டது. இதன் மூலம் இலங்கையின் வடபகுதி சோழ நாட்டுடன் இணைக்கப்பட்டது. இலங்கை வெற்றியின் விளைவாக சேர-பாண்டிய-இலங்கை ராணுவக் கூட்டமைப்பு முற்றிலுமாக முறியடிக்கப்பட்டது.

4.3.6. சாளுக்கியப் போர்

மேலைச்சாளுக்கியப் போர்

இராஷ்டிரகூடர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட சாளுக்கியர் மேலைச் சாளுக்கியர், கீழைச் சாளுக்கியர் என்று இரு பிரிவினராகப் பிரிந்து ஆட்சி அமைத்து, தனித்தனியே செயல்பட்டு வந்தனர். மேலைச் சாளுக்கியர் கல்யாணி (மைசூர்)யைத் தலைநகராகக் கொண்டும், கீழைச் சாளுக்கியர் வெங்கியைத் தலைநகராகக் கொண்டும் ஆட்சி செய்து வந்தனர். தைலப்பனுக்குப் பிறகு மேலைச்சாளுக்கிய மன்னரான சத்தியாசிரயன் கீழைச் சாளுக்கியரை வென்று தன்னுடைய நாட்டுடன் இணைத்துவிட விரும்பினார். தைலப்பனின் நோக்கம் நிறைவேறினால் ஒன்றுபட்ட சாளுக்கியர் தனக்கு சவாலாக இருப்பார்கள் என்பதை உணர்ந்த இராஜராஜன் மேலைச் சாளுக்கிய மன்னனின் முயற்சியை

குறிப்பு

முளையிலேயே கிள்ளிவிட வேண்டுமென்று முடிவு செய்தார். கீழைச் சாளுக்கியரிடையே ஏற்பட்ட வாரிசுரிமைப் போராட்டத்தை வாய்ப்பாக்கிக் கொண்ட இராஜராஜன் அவர்களது விவகாரத்தில் தலையிட்டு சக்திவர்மன் என்பவரை அரசராக்கினார் (கி.பி.999). அதற்கு நன்றிக்கடனாக சத்தியவர்மன் சோழ மன்னரின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டார் இந்த ஏற்பாட்டைக் கடுமையாக எதிர்த்தார் மேலைச் சாளுக்கிய மன்னன் சத்தியாசிரயன். இந்த எதிர்ப்பே மேலைச்சாளுக்கிய-சோழப் போருக்குக் காரணமாயிற்று. மேலைச் சாளுக்கியருக்கு எதிராக இராஜேந்திரன் தலைமையில் வலிமையான சோழர் படையை அனுப்பினார் இராஜராஜன். மேலைச் சாளுக்கியர் படை தோற்கடிக்கப்பட்டது (1007). அவர்களுடைய தளபதி கேசவன் கைது செய்யப்பட்டார். இப்போரின் விளைவாக மேலைச்சாளுக்கிய நாடு நிர்மூலமாக்கப்பட்டது. சத்தியாசிரயனின் மற்றொரு போர் முயற்சியும் முறியடிக்கப்பட்டது. இப்போரின் விளைவாக துங்கபத்திரை ஆறு சோழப் பேரரசுக்கும் மேலை சாளுக்கிய நாட்டுக்கும் இடையேயான எல்லையாயிற்று.

கீழைச்சாளுக்கியப் போர்

கீழைச் சாளுக்கிய நாட்டில் நிலவிய வாரிசுரிமைப் போட்டியில் இராஜராஜன் தலையிட்டு சக்திவர்மனை மன்னராக்கிய போதிலும் அங்கு அமைதி நிலவவில்வை சோழரின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்ட சக்தியவர்மனை மேலைச்சாளுக்கிய மன்னன் சத்தியாசிரயன் மன்னிக்கத் தயாராயில்லை. ராஜராஜனிடம் தோல்வியடைந்த சத்தியாசிரயன் வெங்கி மீது படையெடுத்தார். அப்படையை இராஜேந்திரன் தலைமையிலான சோழர் படை தோற்கடித்தது. மேலும், சக்திவர்மனை அடுத்து பட்டத்துக்கு வந்த விமலாதித்தனுக்கு தன் மகள் குந்தவையை மணமுடித்து வைத்து இராஜராஜன் கீழைச் சாளுக்கியருடனான உறவைப் பலப்படுத்தினார். இதன் மூலம் தஞ்சைக்கும் வெங்கிக்குமிடையேயான தொடர்பு உறுதி செய்யப்பட்டது. அதன்பின் கீழைச் சாளுக்கியர் வெங்கியைத் தலைநகராகக் கொண்டு மூன்று நூற்றாண்டுகள் ஆட்சி செய்தனர்.

4.3.7. மாலத்தீவுகள் படையெடுப்பு

இராஜராஜனின் படையெடுப்புகள் தென்னிந்தியா தாண்டி மாலத்தீவுகள் வரை சென்றன. முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம் என்று அழைக்கப்பட்ட மாலத்தீவுகள் இராஜராஜனால் ஆக்கிரமிக்கப்பட்டன. இப்படையெடுப்புக்குப் பெரிதும் காரணமாக இருந்தது இராஜராஜனின் வலிமைமிக்க கடற்படையாகும். சோழர் கடற்படை இராஜராஜனுக்கு மூன்று மகத்தான வெற்றிகளைப் பெற்றுத் தந்தது: 1) சேரர் கடற்படையை வெற்றி கண்டது 2) இலங்கையைக் கைப்பற்ற உதவியது 3) மாலத்தீவுகளை சோழ நாட்டுடன் சேர்த்தது. மாலத்தீவு படையெடுப்பு இராஜராஜனின் இறுதிச் சாதனையாகக் கருதப்படுகிறது. மாலத்தீவு

வெற்றிக்குப்பின் இராஜேந்திரன் முறைப்படி யுவராஜாவாக முடிசூட்டப்பட்டார்.

குறிப்பு

4.3.8. இராஜராஜனின் ஆட்சிக்கால சாதனைகள்

இராஜராஜன் சோழ மன்னர்களுள் மாமன்னராகத் திகழ்ந்தார். இந்தியாவின் முற்கால மாமன்னர்கள் வரிசையில் இடம் பெறத் தகுதியானவர். ஆளுமை ஆற்றலும், ஆட்சித் திறமையுமிக்கவர். இவரது முப்பதாண்டு ஆட்சிக் காலத்தில் சோழப் பேரரசு பதிய எல்லையைத் தொட்டது சாதனைகள் பல செய்யப்பட்டன. அவற்றுள் சிறப்பானவை வருமாறு: 1) கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்தி என்னும் வரலாற்று அறிமுகம் செய்யும் வழக்கம் இவர் காலத்தில் இருந்துதான் தொடங்கப்பட்டது. 2) நடுவண் அரசை மையமாகக் கொண்டு சோழ நாடு பல நிர்வாகப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அதிகாரக் குவிமைய முடியாட்சி (Centralized Monarchy) உருவாக்கப்பட்டது. 3) ஆட்சிக் காலத்திலேயே வாரிசு இளவரசர் (Heir-apparent) பதவியை ஏற்படுத்தி இணையாட்சிக்கு (Joint-rule) வழி வகுக்கப்பட்டது. 4) கிராம மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தாமல் அவற்றின் நிலவருவாய் கணக்கு மத்திய தணிக்கைக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டது. 5) சோழ நாடு முழுவதுமுள்ள நிலங்கள் தரவாரியாகப் பிரிக்கப்பட்டு, சரியாக அளக்கப்பட்டு, முறையான நிதி நிர்வாகக் கட்டுக்கோப்புக்குள் கொண்டு பாரப்பட்டது. 6) சோழப் பேரரசின் விரிவாக்கத்துக்கும், பாதுகாப்புக்கும், பராமரிப்புக்கும், வெளியுறவுத் தொடர்புகளுக்கும் தேவையான நிலையான இராணுவத்தையும், பலமிக்க உற்படையும் உருவாக்கப்பட்டன. 7) இராஜராஜன் சிறந்த சிவபக்தராக இருந்தபோதிலும் சமயப் பொறையைக் கடைப்பிடித்தார். அனைத்து சமயங்களும் சமமாக மதிக்கப்பட்டு மரியாதை செய்யப்பட்டது. எடுத்துக்காட்டாக சுமத்திராவின் மன்னர் சைலேந்திரர் நாகப்பட்டினத்தில் ஒரு புத்த விகாரத்தைக் கட்டிக் கொள்வதற்கு அனுமதித்து உதவியதோடன்றி அது கட்டி முடிக்கப்படுவதற்குத் தேவையான முழு ஒத்துழைப்பையும் கொடுத்தார். 8) இராஜராஜன் கோயில் கட்டிடக் கலைக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். இவர் காலத்தில் தஞ்சையில் கட்டப்பட்ட பெருவுடையார் (பிரகதீஸ்வரர்) ஆலயம் இதற்கான தலைசிறந்த எடுத்துக்காட்டாகும். 9) பல்கலை வல்லவரான இம்மன்னர் சிறந்த கவிஞராக இருந்ததோடு மட்டுமன்றி கலை, இலக்கியப் புலவர்களுக்குப் புரவலராகவும் இருந்தார். 10) இராஜராஜனின் சாதனைகளை நினைவூட்டும் வகையில் இவர் பல பட்டங்களை சூட்டிக் கொண்டார். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை. மும்முடிச்சோழன், சோழேந்திர சிம்மன், சிங்களாந்தகன், ஜெயம் கொண்டார், தெலிங்க குலாகலன், ரவிகுல மாணிக்கன், சிவபாத சேகரன் ஆகியவை. 11) இராஜராஜனின் தொலைநோக்கு இவர்கால சோழப் பேரரசு பாறையின் மீது எழுப்பப்பட்டது. அதைக் கட்டிக் காக்க அவர் ஆட்சிக் காலத்திலேயே அவரது மகன் இராஜேந்திரனைத் தயார் செய்தார்.

அதனால்தான் இராஜராஜன் தென்னிந்தியாவை ஆட்சி செய்தவர்களில் தலைசிறந்தவர் என்று பாராட்டப்படுகிறார்.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

குறிப்பு

1. இராஜகேசரி என்று அழைக்கப்பட்டவர் யார்?
2. காந்தளூர் சாலை எங்கு அமைந்துள்ளது?
3. எந்த நாட்டில் சதயம் திருவிழா துவக்கப்பட்டது?
4. பொலனருவை எங்கு அமைந்துள்ளது?

4.4. இராஜேந்திரன்

இராஜராஜனின் ஒரே மகன் இராஜேந்திரன். இவரது இயற்பெயர் மதுராந்தகன்." ராஜராஜனின் ஆட்சிக் காலத்திலேயே இவர் பட்டத்து இளவரசனாகப் பிரகடனப் படுத்தப்பட்டவுடன் (1012) இராஜேந்திரன் என்று அழைக்கப்பட்டார். தாத்தா சுந்தர சோழனை (இரண்டாம் பராந்தகன்)ப் போன்ற அழகும், தந்தை இராஜராஜனைப் போன்ற ஆளுமையும் பெற்ற இராஜேந்திரன் தந்தையுடன் இணைந்தே ஆட்சி நடத்தினார். எனவே இவரது ஆட்சி 1012-லிருந்தே துவங்குவதாகக் கொள்வது மரபாக உள்ளது. தந்தையும், மகனும் சோழ நாட்டைக் கிட்டத்தட்ட 60 ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சி செய்தனர். இக்காலகட்டத்தில் சோழப் பேரரசின் சிறப்பும், செல்வாக்கும் உச்சகட்டத்தை எட்டியது.

4.4.1.புகழ் பெற்ற போர்கள்

4.4.1.1. இலங்கைப் படையெடுப்பு

இராஜேந்திரன் தனது தந்தை இராஜராஜ சோழனிடமிருந்து சோழ நாட்டுடன் பல நாடுகளின் பகையையும் மரபுடைமையாகப் பெற்றார். இவரது தனியாட்சி துவங்கியபின் தந்தையை முன்மாதிரியாகக் கொண்டு தனது மகன் முதலாம் இராஜாதிராஜனுக்கு யுவராஜா (பட்டத்து இளவரசர்) பட்டம் சூட்டினார் (1018). அதிலிருந்து இருவருமே இணைந்து ஆட்சி செய்தனர். சோழர்-சாளுக்கியர் பகையைப் போன்றே சோழர்-சிங்களவருக்குமிடையேயான விரோதமும் தொடர் கதையைப் போன்று தொடர்ந்தது. இராஜராஜன் இலங்கையின் வடபகுதியைத் தனது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்த போதிலும், பாண்டிய மன்னன் இராஜசிம்மன் இலங்கை மன்னனிடம் ஒப்படைத்த அரச சின்னங்களைக் கைப்பற்ற முடியவில்லை. மேலும் இலங்கை மன்னன் ஐந்தாம் மகிந்தன் சோழரிடம் இழந்த பகுதிகளை மீட்பதில் முனைப்பாக இருந்தார். எனவே இரண்டு காரணங்களுக்காக இராஜேந்திரன் இலங்கை மீது படையெடுத்தார்: 1) இலங்கை முழுவதையும் கைப்பற்றி சோழ நாட்டுடன் இணைப்பது 2) பாண்டிய மன்னன் ஒப்படைத்த அரச சின்னங்களை அடைவது. மேற்கண்ட இரண்டு நோக்கங்களையும் நிறைவேற்றும்

குறிப்பு

பொருட்டு இராஜேந்திரன் மூன்றாவது ஆட்சி ஆண்டில் (1017) இலங்கை மீது படையெடுத்தார். இப்போரில் இலங்கை மன்னன் ஐந்தாம் மகிந்தன் தோற்கடிக்கப்பட்டார். தோற்கடிக்கப்பட்ட இலங்கை அரசன் கைது செய்யப்பட்டு சோழ நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பாண்டிய மன்னன் ஒப்படைத்திருந்த அரச சின்னங்கள் கைப்பற்றப்பட்டன. இவற்றின் மூலம் இராஜேந்திரனின் இரண்டு நோக்கங்களும் நிறைவேறின. இருப்பினும் சிங்களவர் மகிந்தாவின் மகன் தாசப்பா சோழர்களுக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டார். அக்கிளர்ச்சி ஒடுக்கப்பட்டது. இலங்கையில் சோழர் ஆதிக்கம் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலம் வரை நீடித்தது.

4.4.1.2. பாண்டியருடன் போர்

இராஜராஜனின் பாண்டிய நாட்டுப் படையெடுப்பு முழு வெற்றி பெறவில்லை. சோழர் மீதிருந்த பாண்டியர் பகை வளர்ந்ததேயன்றி குறையவில்லை. சுயமரியாதையும், சுதந்திர உணர்வுமிக்க பாண்டியர் சோழரின் மேலாதிக்கத்தை எதிர்த்து கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இக்கிளர்ச்சியை ஒடுக்கவும், பாண்டிய நாட்டில் சோழர் ஆட்சியை உறுதிப்படுத்தவும் இராஜேந்திரன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தார். பாண்டியர் படை தோற்கடிக்கப் பட்டது. பாண்டிய நாடு மதுரையைத் தலைநகராகக் கொண்ட தனி மண்டலமாக்கப்பட்டு, இராஜேந்திரனின் மகன் இளவரசன் இராஜாதிராஜன் அதன் ஆளுநராக நியமிக்கப்பட்டார். அவருக்கு ஜடவர்மன் சுந்தர சோழ-பாண்டியன் என்ற பட்டப் பெயரும் வழங்கப்பட்டது.

4.4.1.3. சேரருடன் போர்

பாண்டியர்களைப் போன்றே சேரர்களும் சோழர்களின் மேலாதிக்கத்தை ஏற்கவில்லை. எதிர்த்த வண்ணம் இருந்தனர். அவர்களது எதிர்ப்பை முறியடிப்பதற்காக இராஜேந்திரன் சேர நாட்டின் மீது போர் தொடுத்தார். கடுமையான போருக்குப்பின் சேர நாடு பணிந்தது. சேர நாடும் மதுரையிலிருந்த சோழ ஆளுநரின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டது.

4.4.1.4. சாளுக்கியப் போர்கள்

மேலை சாளுக்கியப் போர்

இராஜராஜன் ஆட்சிக் காலத்தில் மேலை சாளுக்கிய மன்னன் சத்தியாசிரயன் தோற்கடிக்கப்பட்டு சோழர் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது. சத்தியாசிரயனுக்குப்பின் ஆட்சிக்கு வந்த இரண்டாம் இராஜசிம்மன் (1015) தந்தை இழந்த பகுதிகளை மீட்க முற்பட்டார். எனவே, இராஜேந்திரன் மேலை சாளுக்கிய நாட்டின் மீது படையெடுத்தார். சோழர் படையும் மேலைச் சாளுக்கியப் படையும் முசங்கி என்ற இடத்தில் சந்தித்தன. சோழர் படை வென்றது. மேலை சாளுக்கிய நாட்டில் மீண்டும்

சோழர் ஆதிக்கம் உறுதி செய்யப்பட்டது. அதேபோன்று துங்கபத்திரை ஆறு சோழ நாட்டுக்கும் மேலைச் சாளுக்கிய நாட்டுக்கும் எல்லையாக நீடித்தது.

குறிப்பு

கீழைச் சாளுக்கியப் போர்

மேலை சாளுக்கிய மன்னன் இரண்டாம் இராஜசிம்மன் இராஜேந்திரனிடம் தோற்றாலும் கீழைச்சாளுக்கிய விவகாரத்தில் தலையிடுவதை நிறுத்தவில்லை. கீழைச் சாளுக்கிய நாட்டில் வாரிசுரிமைப் போராட்டம் நடந்ததை வாய்ப்பாகக் கொண்டு இரண்டாம் இராஜசிம்மன் குறுக்கிட்டார். வெங்கி வேந்தன் விமலாதித்தன் இறந்தபின் இரண்டாம் விஜயாதித்தனுக்கும், இராஜராஜ நரேந்திரனுக்குமிடையே வாரிசுரிமைப் போட்டி ஏற்பட்டது. விமலாதித்தன் மகனான இராஜராஜ நரேந்திரன் சோழ நாட்டு குந்தவைக்குப் பிறந்தவன். குந்தவை இராஜேந்திரனின் சகோதரி. எனவே அவர் தனது தங்கை மகனை ஆதரித்தார். இரண்டாம் இராஜசிம்மன் இரண்டாம் விஜயாதித்யன் பக்கம் இருந்தார். இப்போராட்டத்தில் இராஜேந்திரனின் இராணுவ உதவியோடு இராஜராஜ நரேந்திரன் இரண்டாம் விஜயாதித்தனை தோற்கடித்து கீழைச்சாளுக்கிய நாட்டின் மன்னரானார். இரண்டாம் இராஜசிம்மன் கீழைச் சாளுக்கிய நாட்டைக் கைப்பற்ற மேற்கொண்ட மற்றொரு முயற்சியும் முறியடிக்கப்பட்டது (1035). இராஜேந்திரனின் தொடர் போர்களால் இரண்டாம் இராஜசிம்மனையும் அவரை ஆதரித்த குறுநில மன்னர்களையும் தலைதூக்கவிடாமல் செய்து கன்னட நாடு முழுவதையும் தன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தார். முடிகொண்ட சோழன், ஜெயசிம்ம சாரபன், மன்னை கொண்ட சோழன், இரட்டபாடி கொண்ட சோழன், நிருபதிவாகரன் போன்ற விருதுப் பெயர்கள் அவரது வெற்றிகளுக்கான அங்கீகாரங்களாகும். சாளுக்கியப் போர்களின் விளைவாக இராஜேந்திரனிடம் ஏராளமான செல்வம் குவிந்தது.

4.4.1.5. கங்கை படையெடுப்பு

வடநாட்டு வெற்றி

மேற்கு மற்றும் கீழைச் சாளுக்கியர்களை சோழ மேலாதிக்கத்தின் கீழ் கொண்டு வந்த இராஜேந்திரன் தனது கவனத்தை வடநாட்டின் மீது திருப்பினார். கங்கை பள்ளத்தாக்கு வரை செல்லத் திட்டமிட்டார். இராஜேந்திரன் தலைமையிலான சோழர் படை கோதாவரி வரை சென்று முகாமிட்டது. அதற்குக் காரணம் அவருக்குப் பின்னால் ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாக தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டதேயாகும். எனவே, அவர் கோதாவரிக் கரையில் தங்கிக் கொண்டு சோழர் படையை அவர் திட்டமிட்டபடி வடக்கு நோக்கி அனுப்பினார். இராஜேந்திரன் தளபதியின் தலைமையிலான சோழர் படை கோதாவரியைக் கடந்து பஸ்தார், ஒரிசா வழியாக மேற்கு வங்காளத்தை அடைந்தது. அப்போது வங்காளத்தை ஆட்சி செய்த தர்மபாலரையும், மகபாலரையும் தோற்கடித்து சோழர் ஆதிக்கத்தை நிலைநாட்டினார். அதன்பின் சோழர்

குறிப்பு

படை கங்கை வரை சென்று அங்கு ஆட்சி செய்த மன்னரையும் வென்ற பின்னர் கங்கை ஆற்று நீரை எடுத்துக் கொண்டு வந்து கோதாவரிக் கரையில் முகாமிட்டிருந்த இராஜேந்திரனுடன் சேர்ந்து கொண்டன. அதன்பின் இராஜேந்திரன் தலைமையில் சோழர் படை திருச்சி மாவட்டத்தில் புதிதாக உருவாகிக் கொண்டிருந்த கங்கை கொண்ட சோழபுரம் சென்றடைந்தது. கங்கைப் படையெடுப்பை விளைவுகளற்ற வெற்றியென்றோ அல்லது புனிதப் பயணம் என்றோ, கோப்பையில் எழுந்த புயல் என்றோ ஒதுக்கிவிட முடியாது. வடநாட்டில் வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகள் நடைமுறைக் காரணங்களுக்காக சோழ நாட்டுடன் இணைக்கப்படவில்லை. எனினும் அவை சோழ மன்னனுக்கு திறை செலுத்தும் பகுதிகளாக இருந்தன. வட இந்திய நாடுகள் சோழப் பேரரசின் ஆதிக்க வலிமையை உணர்ந்தன. தமிழர்கள் வங்காளத்தில் குடியேறி சேனா ஆள்நிலப் பகுதி உருவாவதற்கான அடித்தளமிடப்பட்டது. அதேபோன்று மிதிலையில் குடியேறிய தமிழர்கள் அங்கு கர்னாடகுலம் தோன்றக் காரணமாக இருந்தனர். தமிழர்கள் வட இந்தியப் பகுதிகளில் குடியேறியதைப் போன்றே வட இந்திய சைவர்கள் தமிழ் நாட்டுக்கு வந்து தங்கினர். கங்கையிலிருந்து கொண்டு வரப்பட்ட நீர் இராஜேந்திரன் நிர்மாணித்த புதிய நகரில் சோழ கங்கை என்ற குளத்தை வெட்டி அதில் கங்கை நீரைக் கலந்து கங்கா ஜலமயம் சயத்தம்பம் என்று பாராட்டி விழா எடுக்கப்பட்டது. கங்கைப் படையெடுப்பு சோழர் வரலாற்றில் பொன்னான முத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுகூறத்தக்க நிகழ்வாகும்.

4.4.1.6. கடாரம் படையெடுப்பு

இராஜேந்திரனின் கடாரம் படையெடுப்பு அவரது கடற்படை படையெடுப்புகளில் மிகவும் புகழ் பெற்றதாகும். தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மீது இராஜேந்திரன் ஆதிக்கம் செலுத்த விரும்பினார். மலேயா தீபகற்பம், சுமத்திரா, ஜாவா மற்றும் அதன் அன்மைத் தீவுகள் ஸ்ரீவிஜயப் பேரரசின்கீழ் இருந்தன. இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையேயான கடல்வழி ஸ்ரீவிஜய மன்னரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. இராஜராஜன் ஆட்சிக் காலத்தில் சோழப் பேரரசுக்கும் ஸ்ரீவிஜயப் பேரரசுக்குமிடையே நல்ல நட்புறவு இருந்தது. தமிழ் நாட்டிலிருந்து சீனாவுக்கு வர்த்தக தூதுக்குழுக்கள் அனுப்பப்பட்டன. ஆனால் இராஜேந்திரன் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் சோழப் பேரரசுக்கும் ஸ்ரீவிஜயப் பேரரசுக்குமிடையேயான தொடர்பில் விரிசல் விழுந்தது. அதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு: 1) இராஜராஜனின் பேரரசு விரிவாக்கம் 2) சோழ-சீன வர்த்தகப் பெருக்கத்துக்கு ஸ்ரீவிஜயப் பேரரசு குறுக்கே நின்றது. எனவே இராஜேந்திரன் ஸ்ரீவிஜயப் பேரரசின் மீது படையெடுத்தார் (1025). ஸ்ரீவிஜயப் பேரரசுக்குட்பட்ட கடாரம் (சுமத்திரா) மற்றும் ஸ்ரீவிஜயப் பேரரசின் தலைநகர் கைப்பற்றப்பட்டது. ஸ்ரீவிஜயப் பேரரசர் சங்ரம விஜயோத்துங்கவர்மன் கைது செய்யப்பட்டார். சுமத்ரா படையெடுப்புகளும், மலேயாவை வெற்றி கொண்டதும் இராஜேந்திரனின் சோழப் பேரரசின் வெளிநாட்டு விரிவாக்கத்துக்குப் புதிய பரிமாணத்தைக்

கொடுத்தது. மலேயாவும், சுமத்திராவும் சோழப் பேரரசின் பகுதிகளாயின் சோழர்களால் நிர்வகிக்கப்பட்டன."

குறிப்பு

4.4.1.7. பிற படையெடுப்புகள்

இராஜேந்திர சோழனின் இறுதிக் காலத்தில் அவர் விதைத்த விதைகளின் விளைவுகளை அவரே அறுவடை செய்ய வேண்டியதாயிற்று. சோழர் படையெடுப்புகளால் பாதிக்கப்பட்ட நாடுகள் தங்களது சுதந்திரத்திற்காகப் போராடத் துவங்கின. இலங்கை சோழர் ஆதிக்கத்தை எதிர்த்தது. அதேபோன்று பாண்டிய நாடும், சேர நாடும் கிளர்ந்தெழுந்தன. மேலைச் சாளுக்கிய மன்னன் முதலாம் சோமேஸ்வரன் சோழர் ஆதிக்கத்திலிருந்து விடுபட முயன்றார். இவற்றையெல்லாம் எதிர்க்கொள்ள வேண்டிய பொறுப்பு இராஜேந்திரனின் வாரிசான இராஜாதிராஜனின் தலையில் விழுந்தது.

4.4.2. ஆட்சிக்கால சாதனைகள்

இராஜராஜனின் ஆட்சிக் காலச் சாதனைகள் கற்பாறையின் மீது பொறிக்கப்பட்ட எழுத்துக்களைப் போல் நிலைத்து நிற்பவை. கால வெள்ளத்தால் அழிக்கப்பட முடியாதவை. வரலாற்று முக்கியத்துவமிக்கவை. தந்தை இராஜராஜனும், மகன் இராஜேந்திரனும் சோழ நாட்டைத் தொடர்ந்து கிட்டத்தட்ட அறுபது ஆண்டுகள் ஆட்சி செய்தனர். இராஜேந்திரன் அவரது முப்பதாண்டு கால ஆட்சியின் போது தந்தைக்கு இணையாக சாதனைகள் செய்தார். இவரது சாதனைகளில் குறிப்பிடத்தக்கவை வருமாறு: 1) சோழப் பேரரசின் எல்லையை வெகுவாக விரிவுபடுத்தினார். அவரது வெற்றிகளைக் குறிப்பதற்காகவே முடிகொண்டான், கங்கை கொண்டான், கடாரங்கொண்டான், பண்டித சோழன், வீரராஜேந்திரன், சோழேந்திரசிம்மன் போன்ற விருதுப் பெயர்களை சூட்டிக் கொண்டார் 2) வடநாட்டு வெற்றிக்குப் பிறகு தலைநகரைத் தஞ்சையிலிருந்து கங்கை கொண்ட சோழபுரத்துக்கு மாற்றினார். இது தந்தைக்கு நிகரான மாற்றுத் தலைநகராகத் திகழ்ந்தது 3) விவசாய விரிவாக்கத்தில் அக்கறை கொண்ட இராஜேந்திரன் கங்கை கொண்ட சோழபுரத்துக்கருகே சோழ கங்கம் என்ற பெரிய ஏரியைக் கட்டினார் 4) புதிய தலைநகரில் கங்கைகொண்ட சோழேச்சுரம் என்ற சிற்பக் கலைக்குப் புகழ் பெற்ற சிவாலயத்தை எழுப்பினார் 5) வேதக் கல்வியை ஊக்குவிப்பதற்காக வேதக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தினார் 6) சைவராக இருந்தும் சமயப்பொறையைக் கடைப் பிடித்தார். கங்கைக் கரையில் வாழ்ந்த சமணர்கள் காஞ்சியில் குடியேறுவதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்தார் 7) சிறந்த சிந்தனையாளர் தரமான படைப்பாளி சிவபெருமான் மீது பல பக்திப் பாடல்களை இயற்றியுள்ளார் 8) தன் பிள்ளைகளுக்கு சிறந்த ஆட்சி பயிற்சி அளித்தார். அவரது மகன்கள் மூவரும் ஒருவர்பின் ஒருவராக ஆட்சிக்கு வந்தனர் 9) இவரது

நிர்வாகம் உதாரணமாக விளங்கியது 19) வெளிநாடுகளுடன் குறிப்பாக சீனாவுடனான வர்த்தகத் தொடர்பு மேம்பட்டது.

குறிப்பு

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1 இளவரசன் இராஜாதிராஜன் எந்த பகுதிக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டார்?

2 இராஜேந்திரன் தலைநகரைத் தஞ்சையிலிருந்து எந்த பகுதிக்கு மாற்றினார்?

4.5. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

1. இராஜராஜன்
2. திருவனந்தபுரம்
3. சேர நாட்டில்
4. இலங்கை
5. மதுரையைத் தலைநகரம்
6. கங்கை கொண்ட சோழபுரம்

4.6. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

குறுகிய வினாக்கள்

1. காந்தளூர்சாலைப் போர் குறித்து சிறு குறிப்பு எழுதுக.
2. இராஜராஜன் மேலைச்சாளுக்கியப் போர் குறித்து எழுதுக.
3. இராஜேந்திரனின் கடாரம் படையெடுப்பு குறித்து சிறு குறிப்பு எழுதுக.

விரிவான வினாக்கள்

1. இராஜராஜன் வளர்ச்சியை குறித்து கட்டுரை எழுதுக.
2. இராஜேந்திரனின் படையெடுப்புகள் குறித்து ஆராய்க.
3. இராஜராஜன் மற்றும் இராஜேந்திரன் ஆகியோரின் சாதனைகளை விவாதி.

4.7. கூடுதல் வாசிப்புகள்

Subramania N. A History of Tamil Nadu up to 1336

Rajayyan K. History of Tamil Nadu

பிள்ளை கே.கே. தென்னிந்திய வரலாறு

Nilakanda Sastri K.N. A History of South India

Nilakanda Sastri K.N. Cholas

Sathianathair R. History of India

வெங்கடேசன் க. முற்கால தமிழ்நாட்டு வரலாறு

செல்வம் வே. தி. தமிழக: வரலாறும் பண்பாடும்

இராமசாமி அ. தமிழ் நாட்டு வரலாறு

குறிப்பு

அலகு – 5

நிர்வாக வளர்ச்சி-கலை மற்றும் கட்டிடக்கலை- சாளுக்கிய சோழர்கள் முதலாம் குலோத்துங்கன்-மூன்றாம் குலோத்துங்கன்- சாதனைகள்- இலக்கிய வளர்ச்சி

பாட அமைப்பு

5.1. முன்னுரை

5.2. நோக்கங்கள்

5.3. அரசாங்க அமைப்பு

- 5.3.1. அரச குடும்பம்
- 5.3.2. அமைச்சரவை
- 5.3.3. அதிகாரவர்க்கம்
- 5.3.4. மாநில நிர்வாகம்
- 5.3.5. மண்டல நிர்வாகிகள்
- 5.3.6. உள்ளாட்சி நிர்வாகம்
- 5.3.7. நகராட்சி நிர்வாகம்
- 5.3.8. கிராம நிர்வாகம்
- 5.3.9. கிராம சபை
- 5.3.10. வாரிய முறை
- 5.3.11. குடஓலை முறை
- 5.3.12. நீதி நிர்வாகம்
- 5.3.13. முடியாட்சியில் மக்களாட்சி
- 5.3.14.பொருளாதார நிலை
  - 5.3.14.1. விவசாயம்
  - 5.3.14.2. தொழில்

குறிப்பு

5.3.14.3. வணிகம் உள்நாட்டு வர்த்தகம்

5.3.15. அரசாங்க வருமானம்

5.4. கலை-கட்டடக் கலை வளர்ச்சி

5.4.1. கோயில்கள்

5.4.2. தஞ்சைப் பெருவுடையார் கோயில்

5.4.3. கங்கைகொண்ட சோழபுரக் கோயில்

5.4.4. பிற கோயில்கள்

5.5. சிற்பக்கலை

5.5.1. ஓவியக்கலை

5.5.2. நாடகக் கலை

5.5.3. நாட்டியக்கலை

5.5.4. இசைக்கலை

5.5.5. அறிவியல் நிலை

5.6. சாளுக்கிய சோழர்கள்

5.6.1. முதலாம் குலோத்துங்கன்

5.6.2. மேலைச் சாளுக்கியருடன் மோதல்

5.6.3. பாண்டியர் பிரச்சனை

5.6.4. சேரர் சவால்

5.6.5. கலிங்கச்சிக்கல்

5.6.6. வெளிநாட்டு உறவு

5.6.7. குலோத்துங்கனின் சாதனைகள்

5.6.8. கடைசி காலம்

5.7. விக்கிரம சோழன்

5.8. மூன்றாம் குலோத்துங்கன்

5.8.1. இலங்கை எதிர்ப்பு

5.8.2. பாண்டியர் எதிர்ப்பு

5.8.3. எழுச்சியும் வீழ்ச்சியும்

5.9. இலக்கியம் வளர்ச்சி

5.10. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

5.11. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

5.12. கூடுதல் வாசிப்புகள்

5.1. முன்னுரை

சங்க காலச் சோழர்கள் உறையூரையும், பூம்புகாரையும் தலைநகர்களாகக் கொண்டு ஆட்சி செய்தனர். ஒன்பதாம் நூற்றாண்டில் சோழர்கள் மீண்டும் ஆட்சி அமைக்கும் வரை உறையூரே தலைநகராக நீடித்தது. பின்னர் விஜயாலய சோழன் முத்தரையர்களிடமிருந்து தஞ்சையை மீட்டபின் தஞ்சை தலைநகராயிற்று. முதலாம் இராஜராஜன் காலத்தில் தஞ்சைத் தலைநகர் வெகுவாக விரிவடைந்தது. அவர் திரிபுவன சக்கரவர்த்தி அதாவது மூவுலகுக்கும் அதிபர் என்று அழைக்கப்பட்டார். அவரது மகன் இராஜேந்திரன் கங்கை கொண்ட சோழபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தார். சோழர்கால உச்சகட்ட பரப்பெல்லை கிட்டத்தட்ட தென்னிந்தியா முழுவதும் பரவியிருந்தது. கிழக்கே வங்கக்கடல், மேற்கே அரபிக்கடல், தெற்கே இந்துமாக்கடல், வடக்கே துங்கபத்திரா வரை ஏகாதிபத்தியப் பேரரசு அளவுக்கு சோழப் பேரரசின் பரப்பெல்லை விரிவடைந்திருந்தது.

குலோத்துங்கன் வித்தியாசமான சோழ வேந்தர். இராஜேந்திர சோழன் மகன் அம்மங்காதேவிக்கும் குந்தவை (ராஜேந்திரனின் சகோதரி)யின் மகன் கீழைச் சாளுக்கிய மன்னன் இராஜராஜ நரேந்திரனுக்கும் பிறந்த இரண்டாம் இராஜேந்திரன் தான் குலோத்துங்கன் என்று அழைக்கப்பட்டார். குலோத்துங்கன் என்பது பட்டப் பெயர். எனவே, குலோத்துங்கன் இராஜராஜ சோழனின் கொள்ளுப் பேரன்." இவரும் இவரது மரபினரும் குலோத்துங்கன் குலத்தவராவர். இந்த அத்தியாமானது மேலே குறிப்பிடப்பட்ட அரசர்களின் நிர்வாக, கலை மற்றும் கட்டிடக்கலை ஆகிவற்றிற்கு அவர்கள் ஆற்றிய பங்கு குறித்து விவரிக்கிறது.

5.2. நோக்கங்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர் கீழ் கண்டவற்றை அறிய முடியும்

- சாளுக்கிய சோழர்களின் நிர்வாக தன்மையை அறிய உதவுகிறது.
- சோழர்களின் கலை மற்றும் கட்டிட கலை வளர்ச்சி பற்றி அறிய உதவுகிறது.
- முதல் மற்றும் மூன்றாம் குலோத்துங்கனின் சாதனைகளை பற்றி விவாதிகிறது.
- சோழர்களின் இலக்கிய வளர்ச்சி குறித்து விளக்குகிறது.

குறிப்பு

குறிப்பு

5.3. அரசாங்க அமைப்பு

சோழர் கால மைய அரசு தனித்தன்மை வாய்ந்ததாக இருந்தது. அது வரலாற்றுத் தொன்மையும், குலப் பெருமையும் குடிச்சிறப்பும் பெற்றிருந்தது. சோழ அரசு மன்னனைச் சுற்றியே சுழன்றது. அரசனே அரசாங்கக் கோபுரக் கலசமாகக் காட்சியளித்தார். முடியாட்சியாயினும், மன்னன் மக்களின் மதிப்பீட்டில் மிக உயர்ந்த நிலையில் இருந்தார். படைக்கு அடுத்து குடிமக்களே அரசாங்கத்தின் அடுத்த அங்கமாகக் கருதப்பட்டார். சட்டமியற்றல், சட்டத்தைச் செயல்படுத்தல், நீதி வழங்கல் ஆகிய முப்பெரும் அதிகாரங்களும் மன்னனிடம் குவிந்திருந்தன. மன்னனே படைத் தலைவராகவும் இருந்தார். அவரே அதிகாரத்தின் ஆரம்பமாகவும் முடிவாகவும் இருந்தார். அவரது அதிகாரம் வரம்பற்றது. பரம்பரை முடியாட்சி முறை பின்பற்றப்பட்டாலும், மன்னனின் ஆட்சிக் காலத்திலேயே பட்டத்து இளவரசனுக்கு முடிசூட்டுவிழா நடத்துவதும், மூத்த மகன் இருக்கும் போதே இளைய மகனைப் பட்டத்துக்குரியவனாக்குவதும் சோழர் கால வாரிசு முறையின் தனித்தன்மையாகும். சோழ மன்னர்களைக் கோயில்களில் சிலைகளாக வைத்து வழிபடும் அளவுக்கு மக்களின் பக்தியையும், மரியாதையையும் பெற்றிருந்தனர். அசுவமேக யாகம் நடத்தாமலே சோழ அரசர்கள் மாமன்னர்களாகத் திகழ்ந்தனர்.

5.3.1. அரச குடும்பம்

மன்னரைப் போன்றே மன்னரின் குடும்பமும் புகழ் பெற்றுத் திகழ்ந்தது. அரச குடும்பம் அளவில் பெரியது. அதற்குக் காரணம் சோழ மன்னர்கள் பிற அரச குடும்பங்களோடு மண உறவு கொண்டிருந்தனர். பல மனைவியர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் பட்டத்து இளவரசர்களாகவும், ஆட்சிப் பகுதி ஆளுநர்களாகவும், படைத்துறை அதிகாரிகளாகவும், நிர்வாகத் துறைத் தலைவர்களாகவும் நியமிக்கப்பட்டனர். இருப்பினும் இவர்கள் வாரிசுரிமைப் போட்டிகளுக்கும், அரசியல் சூழ்ச்சிகளுக்கும், சதித் திட்டங்களுக்கும் காரணமாக இருந்தனர். பட்டத்தரசிகளும் அரசர்களைப் போன்றே அறக்கொடைகள் அளித்தனர். குறிப்பாகக் கோயில்களுக்கு வாரி வழங்கினர். அரச குடும்பத்தினர் பல சலுகைகளைப் பெற்று அரண்மனைகளில் ஆடம்பரமாக வாழ்ந்தனர். தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், பழையாறை, காஞ்சிபுரம், உத்திரமேரூர், வேங்கி, மதுரை, சிதம்பரம் போன்ற நகரங்கள் அரச குடும்ப மையங்களாகக் காட்சியளித்தன. காஞ்சி பொன் மாளிகை பெரும் புகழ் பெற்றிருந்தது. மாளிகைகளில் சித்திரகூட மாளிகையும், பெரும்படி மாளிகையும் குறிப்பிடத்தக்கவை. அரண்மனைகளைப் பராமரிக்கப் பரிவாரங்கள் இருந்தன. அரண்மனைகளில் அவ்வப்போது கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன் விழாக்கள் கொண்டாடப்பட்டன. சுருங்கக்கூறின், அரச குடும்பம் வாழ்ந்த அரண்மனை முடியாட்சியின் பெருமையையும், அரச குடும்பத்தினருக்கும்

அன்றாட மக்கள் வாழ்க்கைக்குமிடையே இருந்த இடைவெளிச் சிறுமையையும் பிரதிபலிப்பதாக இருந்தது.

குறிப்பு

5.3.2. அமைச்சரவை

அரசர், பேரரசர், சக்கரவர்த்தி என்றெல்லாம் அழைக்கப்பட்ட சோழ மன்னரின் அதிகாரத்துக்கு எல்லை இல்லை. எனினும் அவருக்கு ஆலோசனை கூற முறையாக அமைக்கப்பட்ட அமைச்சரவை இருந்ததாகத் தெரியவில்லை. எனினும் அமைச்சரின் இன்றியமையாமை உணரப்பட்டிருந்தது. சோழ மன்னர்கள் அமைச்சர்களைக் கலந்து ஆலோசித்து முடிவெடுப்பது வழக்கத்தில் இருந்தது. அரசர்கள் வாய்வழி உத்தரவுகளைப் பிறப்பித்தனர். இந்த உத்தரவுகளைத் திருமந்திர ஓலை நாயகம் ஓலைச் சுவடிகளில் எழுதி ஆவணப்படுத்தினார். இத்தகைய அரசு முடிவுகளையும், உத்தரவுகளையும் நடைமுறைப் படுத்த வேண்டிய பொறுப்பு அமைச்சர்களுக்கு இருந்தது. அமைச்சரவையில் செயல்பாடும் செயல்திறனும் மன்னனின் நீதி, நியாய, நேர்மையுணர்வைப் பொறுத்தே இருந்தது.

5.3.3. அதிகாரவர்க்கம்

அரசரது ஆணைகளை அமைச்சர்கள் செயல்படுத்துவதற்காக வலிமைமிக்க அதிகாரவர்க்கம் (Bureaucracy) இருந்தது. பல்வேறு பணித்துறைகளின் அதிகாரிகளையும், அலுவலர்களையும் தேர்ந்தெடுப்பதில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. மறையன், ஓலை நாயகம், வரிக்கணக்கு, பிரிவுவரித்திணைக் களம், கண்காணிகள், சாந்துவிக்கிரம், நாடுவகை, நாட்டுக்கண்ட காட்சி ஆகியவை முக்கிய அரசுப் பதவிகளாகும். உடன்கூட்டத்து அலுவலர்கள் என்று அறியப்பட்ட அரசு அலுவலர்கள் பெருந்தனம், சிறுதனம், கருமிகள், பணிமக்கள் என்று பலவகைப்பட்டனர். வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்வதற்காகத் தூதுவர்கள் இருந்தனர். அதிகாரவர்க்கம் முறைப்படி நன்கு அமைக்கப்பட்டிருந்தது. பணிமூப்பு அடிப்படையில் அதிகாரவர்க்கம் அமைக்கப்பட்டபோதிலும் அவர்களது பணிக்காலம் அரசனின் முடிவைப் பொறுத்தே இருந்தது. வல்லாட்சி மைய அரசுக்கும் தன்னாட்சி ஊராட்சிக்குமிடையேயான சமநிலை பாதுகாக்கப்பட்டது. மைய ஆட்சி உள்ளாட்சி அமைப்பிலும், செயல்பாட்டிலும் தலையிடுவதில்லை. உள்ளாட்சி சுயாட்சி புனிதமாகக் கருதப்பட்டது. அரசாங்கத்தின் வரவு செலவுகளைக் கவனித்தால் வருவாய்த்துறை அதிகாரிகளும், அலுவலர்களும் அதிகாரவர்க்கத்தில் சிறப்பிடத்தைப் பெற்றிருந்தனர். அதிகாரிகளின் நடவடிக்கைகள் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டன.

5.3.4. மாநில நிர்வாகம்

நிர்வாக வசதி கருதி சோழ நாடு பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. இலங்கையைச் சேர்த்து ஒன்பது மண்டலங்கள்

குறிப்பு

இருந்ததாகக் கூறப்படுகிறது. இம்மண்டலங்களின் எல்லைகளும், பெயர்களும் காலத்துக்கேற்ப மாற்றமடைந்தன. ஒவ்வொரு மண்டலமும் பல கோட்டங்களாகவும், ஒவ்வொரு கோட்டமும் பல கூற்றங்கள் அல்லது வளநாடுகளாகவும் பிரிக்கப்பட்டன. கூற்றம் என்பது பல கிராமங்களைக் கொண்ட கூட்டமைப்பாகும்.

5.3.5. மண்டல நிர்வாகிகள்

மண்டலங்களை வழக்கமாக அரச குலத்தினர் நிர்வகித்தனர். பட்டத்து இளவரசர்களும், நெருங்கிய உறவினர்களும் மண்டல ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர். மண்டலங்களில் அமைதி காப்பதும் மண்டல படைத் தளங்களைப் பராமரித்துப் பாதுகாப்பதும் தேவைப்படும்போது மன்னனுக்குப் படையுதவி செய்வதும் கோட்ட அதிகாரிகளையும், அலுவலர்களையும் கண்காணிப்பதும் இவர்களது பிரதான பணிகளாகும். போர்க்காலங்களில் இவர்கள் தளபதிகளாகவும், துணைத் தளபதிகளாகவும் செயல்பட்டனர். வரி வசூலைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்தனர்! இவர்கள் உள்ளாட்சி நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். மண்டல ஆட்சியர்கள் அறப்பணிகளிலும், ஆலயத் திருப்பணிகளிலும் அக்கறை செலுத்தினர். சுருங்கக்கூறின், மண்டல ஆளுநர்கள் குறுநில மன்னர்களைப் போன்று செயல்பட்டனர்.

5.3.6. உள்ளாட்சி நிர்வாகம்

சோழர்கால வாழ்வியலின் தொன்மைச் சிறப்பியல்புகளில் குறிப்பிடத்தக்க ஒன்று உள்ளாட்சி நிர்வாகமாகும். ஊரும், ஊர் மன்றம், ஊரவர் தேர்ந்தெடுக்கப்பட்டதும், குட்டிக் கிராமக் குடியரசுகள் செயல்பட்ட முறையும் பாராட்டுக்குரியவை. களப்பிரர் காலத்தில் புறக்கணிக்கப்பட்ட உள்ளாட்சி முறை சோழர் ஆட்சி மீட்சிக்குப் பின்னர் புத்துயிரும், புதுப்பொலிவும் பெற்றது. குறிப்பாக முதலாம் பராந்தகன் (907-950) ஆட்சிக் காலத்தில் உள்ளாட்சி நிர்வாகம் உச்சகட்டத்தை எட்டியது. பொதுவாக சோழர் காலம் உள்ளாட்சியின் பொற்காலமாகும்.

5.3.7. நகராட்சி நிர்வாகம்

நகரங்கள் பெரும்பாலும் வணிகர் குடியிருப்புகளாகும். நகரங்களில் நகராட்சிகள் செயல்பட்டன. இவை தன்னாட்சி நிறுவனங்களாகும். நகர அவை நகரத்தோம் என்று அழைக்கப்பட்டது. ஊரவைகள், கிராம சபைகள் போன்ற நகர் மன்றங்களும் நடைபெற்றன. இத்தகைய மன்றங்கள் தஞ்சை, காஞ்சி, மதுரை போன்ற நகரங்களில் சிறப்பாகச் செயல்பட்டன. நகர் மன்றங்களின் அமைப்பு, அதிகாரங்கள், நடவடிக்கைகள் நன்கு வரையறக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு

5.3.8. கிராம நிர்வாகம்

சோழர் காலத்தில் இருவகையான கிராம நிர்வாக அமைப்புகள் இருந்தன. 1) ஊர் மன்றங்கள் 2) கிராம சபைகள். ஊர் என்பது கிராம மக்களைக் கொண்ட அடிப்படை அமைப்பு. கிராமம் ஊர் எனப்பட்டது. ஊர் என்பது ஊர் மன்றத்தைக் குறிப்பதாகவும் இருந்தது. ஊரக இசைந்த ஊரோம் என்ற சொற்றொடர் இதை விளக்குவதாக உள்ளது. கிராமம் பரப்பளவில் சிறியதாக இருந்தமையால் ஊர் மன்றக் கூட்டம் பறை அறிவிக்கப்பட்டு ஊர்ப்பொது மரத்தடியிலோ அல்லது பொது இடத்திலோ நடத்தப்பட்டது. ஊர் மன்றம் ஊர்ப் பொது இடத்தில் கூடி கிராம மக்களின் பொது விவகாரங்களை விவாதித்து முடிவு செய்வது எளிதாக இருந்தது. இம்முடிவுகள் அலுவலர்கள் மூலம் நிறைவேற்றப்பட்டன. இத்தகைய நேரடி மக்களாட்சி, மக்களாட்சி முறை சங்ககால கிராம நிர்வாக முறையை நினைவூட்டுவதாக உள்ளது.

5.3.9. கிராம சபை

கிராம சபை பிராமணர்களின் பிரம்மதேய கிராமங்களின் கிராமப் பொது மன்றத்தைக் குறிப்பதாகும். கிராம சபை ஊர் மன்றத்தைப் போன்று கிராம அரசாங்கத்தின் அடிப்படை அமைப்பாகும். கிராம சபை உறுப்பினர்கள் சபையோர் என்று அழைக்கப் பட்டனர். இவர்கள் கிராமதான நிலவுடைமையாளர்கள். வசதியும், சலுகையும், செல்வாக்கு மிக்கவர்கள். எனவே இவர்கள் அனைவரும் சபை நடவடிக்கைகளில் முனைப்புடன் பங்கேற்றனர். ஏனெனில், ஏகபோக நிலங்களையும், கிராமத்துக்குப் பொதுவான கணபோக நிலங்களையும் பராமரிக்க வேண்டிய பொறுப்பு இவர்களுக்கு இருந்தது. இவர்களின் பிரதிநிதிகள் பல குழுக்களாகப் பிரிந்து பணியாற்றினர். இவர்கள் தமிழ்நாட்டு உள்ளாட்சி வளர்ச்சிக்கு விட்டுச் சென்ற நினைவுகூறத்தக்க நன்கொடைகள் இரண்டு: 1) வாரிய முறை 2) குடஓலை முறை.

5.3.10. வாரிய முறை

சோழர் கலத்தில் பிரம்மதேய கிராமங்களில் கிராம சபையின் கரங்களாகச் செயல்பட்டவை வாரியங்கள் ஆகும். கிராம சபையும், வாரியங்களும் கிராம நிர்வாக நாணயத்தின் இருபக்கங்களாகும். ஒன்று கிராமப் பொது மன்றமாயின், மற்றது அதன் ஆட்சிக் கரமாகும். இத்தகைய வாரியங்கள் 12 இருந்தன:1) ஏரி வாரியம். இதன் பணிகள் நீர் நிலைகளைப் பராமரித்தல், நீர் விநியோகம், நீர்ப்பாசனம், நீர் நிர்வாகக் கண்காணிப்பு 2) தோட்ட வாரியம். தோட்டம், வேளாண்மை, நில அளவு, நிலத்தீர்வை, நிலத்தகராறு தீர்த்தல், சாலைப் பழுதுபார்த்தல், கால்வாய்ப் பராமரிப்பு, பாசன வரி வசூலித்தல், கீழ்க்குடி மக்களிடமிருந்து கட்டாய வேலை வாங்கல் ஆகியவை இந்த வாரியத்தின் முக்கிய கடமைகளாகும். 3) சம்வத்சர வாரியம். இதன் பிரதான பணி ஆலயங்கள், மடங்கள், அன்னச் சாவடிகள், வேதப்

குறிப்பு

பள்ளிகள் ஆகியவற்றை நிர்வகித்தல், மேற்பார்வையிடல் 4) பஞ்சவத வாரியம். பஞ்ச நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டது 5) பொன் வாரியம். தங்கத்தை மதிப்பீடு செய்தல் 6) குடும்பு வாரியம். கிராமத் தொகுதிகள், அவற்றின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல் பற்றியது 7) கழனி வாரியம். விவசாய நிலங்களைக் கவனித்தல். 8) வடகழனி வாரியம். வடப்புற நிலப் பராமரிப்பு குறித்தது 9) கணக்கு வாரியம். தன் முக்கிய கடமைகள்: நிதி நிர்வாகம், வரி வசூல், சேமிப்புக் கணக்கு, தணிக்கை ஆகியவை 10) கவிங்க வாரியத்தின் வேலை கண்மாய் பராமரிப்பு 11) தடவழி வாரியம். பாதைகள் பராமரிப்பு பற்றியது 12) உதாசீன வாரியம். கிராமத்துக்குள்வரும் அயலவர்களைக் கண்காணித்தது. ஒவ்வொரு வாரியத்திலும் குறைந்தது ஆறு உறுப்பினர்கள் இடம் பெற்றிருந்தனர். வாரிய முறை சோழர் காலத்து வியத்தகு புல்லிதழ் ஜனநாயகப் பங்களிப்பாகும்.

5.3.11. குடஓலை முறை

வாரியங்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒவ்வொரு கிராமமும் பல குரும்புகள் அல்லது தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. வாரிய உறுப்பினர்கள் இக்குரும்புகளிலிருந்து குடஓலை முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த முறையின்படி குரும்புக்குரிய வேட்பாளர்களின் பெயர்கள் பனை ஓலைத் துண்டுகளில் எழுதப்பட்டு, கட்டப்பட்டு, குரும்புக்குரிய குடத்தில் இடப்பட்டது. தேர்வு நாளன்று கிராம மக்களும், அரசு அலுவலர் ஒருவரும், முதியோரும் கூடியிருக்க குடங்களில் கிடப்பட்ட ஓலைக்கட்டுகள் ஒவ்வொன்றாகக் கலைக்கப்பட்டு, சிறுவன் ஒருவனால் ஒரு ஓலைத்துண்டு எடுக்கப்படும். அவரே அக்குடும்பின் உறுப்பினராக அறிவிக்கப்படுவார். இவ்வாறு குடும்புகளின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவர். இவர்களே கிராம சபையின் உறுப்பினர்களாவர். இவர்களின் தகுதி, திறமை அடிப்படையில் வாரிய உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். வாரிய உறுப்பினர்களின் தகுதிகள் எவ்வித ஐயத்துக்கும் இடமின்றித் தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்தன: 1) இவர்கள் சார்ந்த கிராமத்தில் சொந்த வீட்டில் வசிக்க வேண்டும் 2) நிலவரியை ஒழுங்காகச் செலுத்தியிருக்க வேண்டும் 3) 35 வயதிலிருந்து 70 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும் 4) வேதங்கள், வேத மந்திரங்கள், பிராமணங்கள், பாஷ்யங்கள் பற்றி அறிந்திருத்தல் அவசியம். இவ்வேத அறிவோடு வர்த்தக அனுபவமும், நன்னடத்தையும், ஒழுக்கமும் இருத்தல் வேண்டும் 5) நிலவரி செலுத்தாதோர், ஊழல் செய்தோர், மோசடியில் ஈடுபட்டோர், தேர்தல் அதிகாரியை அணுகித் தவறாகப் பயன்பெற்றோர், குற்றம் புரிந்தோர், திருந்தாப் பாவிகள், திருடியோர், விபச்சாரம் செய்தோர், கூடா ஒழுக்கத்தில் ஈடுபட்டோர், கையூட்டு பெற்றோர், குடிகாரர்கள் ஆகியோர் தகுதி நீக்கம் செய்யப்பட்டனர் 6) ஒருமுறை வாரிய உறுப்பினராக இருந்தவர் பத்தாண்டுகளுக்குப் பின்னரே மீண்டும் உறுப்பினராக முடியும். இத்தகுதிகள் கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டன. பெண்கள்

குறிப்பு

மேற்பார்வையாளர்களாகப் போட்டியிடத் தகுதி பெற்றிருந்தனர். வாரிய முறையைப் போன்றே குடஓலை முறையும் பெருமைக்குரிய சோழர்காலப் பங்களிப்பாகும். மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது ஊர் மன்றங்களும், கிராம சபைகளும் வெவ்வேறானவை போல் தெரிகின்றன. ஆனால் நடைமுறையில் இவ்விரு கிராம நிர்வாக நிறுவனங்களும் ஒரே முறையைத்தான் பின்பற்றின. இதற்குக் காரணம் பல கிராமங்களில் ஊர் மன்றமும் கிராம சபையும் ஒரே இடத்தில் செயல்பட்டன. மேலும் புதிய பிராமண குடியிருப்புகளால் உருவான கிராமங்களில் இவ்விருவகை மன்றங்களும் இருந்தன. சில கிராமங்கள் இரு அவைகளாலும் நிர்வகிக்கப்பட்டன. சுருங்கக்கூறின், பிரம்மதேய, பிரம்மதேயமல்லாத கிராமங்களில் கிட்டத்தட்ட ஒரே உள்ளாட்சி முறையே பின்பற்றப்பட்டது. எனினும் வாரிய உறுப்பினர்களின் தகுதிகளை வைத்துப் பார்க்கும் போது ஊர்மன்ற நிர்வாகத்துக்கும், கிராமசபை நிர்வாகத்துக்குமிடையே மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு இருக்கவே செய்தது.

5.3.12. நீதி நிர்வாகம்

சோழ மன்னர்கள் நீதி நிர்வாகத்துக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்தனர். மன்னர் உச்ச நீதிபதியாயினும் கிராம மன்றம் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் உரிமை பெற்றிருந்தது. நியாயத்தார் குற்ற வழக்குகளை விசாரித்து முடிவு செய்தனர். அதிகாரிகள் தண்டனையை நிறைவேற்றினர். வாரியம் மூலம் நீதி வழங்கப்பட்டதால் சோழர் காலத்தில் முறைமன்ற ஆயம் அல்லது அறங்கூறாயம் (Jury System) இருந்ததாகக் கூறப்படுகிறது. கொலைக் குற்றங்கள் (Homicide) பாகுபடுத்தப்பட்டு அதற்கேற்ப தண்டனைகள் வழங்கப்பட்டன. மரண தண்டனை முதல் கழுதை மேலேற்றல் வரை தண்டனைகள் தரப்பட்டன. சோழர் கால நீதி நிர்வாகம் கடுமையானதாகவோ அல்லது கொடுமையானதாகவோ இருந்ததாகத் தெரியவில்லை.

உத்திரமேரூர் கல்வெட்டுகள் அடிப்படை ஆவணம்

உத்திரமேரூர் காஞ்சி மாவட்டத்தில் உள்ளது. இங்குள்ள மூன்று கோயில்களில் கிராமசபை நிர்வாகம் பற்றி ஏராளமான கல்வெட்டுக் குறிப்புகள் காணப்படுகின்றன: 1) சுந்தர வரதராஜப் பெருமாள் கோயில் 2) சுப்பிரமணியர் கோயில் 3) கைலாசநாதர் கோயில். கல்வெட்டுக் குறிப்புகள் இக்கோயில்களின் சுவர்களில் காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் கிராம மன்றங்கள் தொன்றுதொட்டு நடைமுறையில் இருந்தபோதிலும் இவை பராந்தக சோழன் காலத்தில்தான் முறைப்படுத்தப்பட்டு, அமைப்பு ரீதியாக முழுமை பெற்றது. தமிழ் நாட்டில் வேறு பல கோயில்களிலும் ஊராட்சி அமைப்புகள் பற்றிய தகவல்கள் காணப்படினும், உத்திரமேரூர் பட்டயங்கள் (Uttaramerur

Charters 919 and 921) தான் கிராம நிர்வாகத்தின் அரசியல் அமைப்புக்கான (Constitution) அடிப்படை ஆவணமாகும்.

குறிப்பு

5.3.13. முடியாட்சியில் மக்களாட்சி

உத்திரமேரூர் கல்வெட்டுகள் முழுமையாக வளர்ச்சியடைந்த கிராம அரசாங்க அமைப்புகளைப் பற்றி விவரிக்கின்றன. குறிப்பாக வாரிய, கிராமசபை பற்றி அறிந்து கொள்வதற்கு இவை மதிப்பற்ற ஆவணங்களாகும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் எழுதப்பட்ட அரசியல் அமைப்பும் (Written Constitution) முழுமையான தேர்தல் முறை (Perfect Electoral System)யும் நடைமுறையில் இருந்தது வியந்து பாராட்டுதற்குரியது. இந்திய உள்ளாட்சி வரலாற்றில் உத்திரமேரூர் கல்வெட்டுகள் குறிப்பிடத்தக்க முதல் முக்கியத்துவம் வாய்ந்த முழுமையான ஆவணமாகும். இது முடியாட்சியின் கீழ் மக்களாட்சி செயல்பட்டதற்கான எடுத்துக்காட்டாகும்.

5.3.14.பொருளாதார நிலை

5.3.14.1. விவசாயம்

சங்க காலத்திலிருந்து சோழர் காலம் வரை விவசாயமே மக்களின் வாழ்வாதாரத் தொழிலாக இருந்தது. மிகப் பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தையே நம்பியிருந்தனர். விவசாயம் நிலம் சார்ந்ததாக இருந்தமையால் நிலஉடைமை விவசாயத்தின் வளத்தையும், வீச்சையும் தீர்மானித்தது. நிலஉடைமை தனியார் பெயரிலும், சமுதாயத்தின் பெயரிலும் இருந்தது. நிலத்தை உழுத விவசாயிகளே நிலச் சொந்தக்காரர்களாக இருந்த வரை விவசாயம் வளமோடு இருந்தது. பிரம்மதேய கிராமங்கள் அதிகரித்தமையால் இந்நிலையில் மாபெரும் மாற்றம் ஏற்பட்டது.

விவசாய வளம் நீர்ப்பாசன நிர்வாகத்தைப் பொறுத்திருந்தது. எனவே நீர்ப்பாசனத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. சங்க காலத்தில் கரிகால் சோழன் கட்டிய கல்லணை காலத்தைக் கடந்து முன்மாதிரியாகத் திகழ்ந்தது. அதைத் தொடர்ந்து சோழர்கள் காவிரிக் கழிமுகத்தை முழுதுமாக நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்தினர். வீர நாராயண ஏரி, சோழ கங்க ஏரி, கண்டராதித்தப் பேரேரி, சோழ கங்கம், செம்பியன் மாதேவிப் பேரேரி, சுந்தரசோழப் பேரேரி ஆகிய ஏரிகள் குறிப்பிடத்தக்கவை. கங்கை கொண்ட சோழபுரத்தில் இருந்த சோழகங்கம் ஏரிக்கு 60 மைல் நீளக் கால்வாய் வெட்டப்பட்டது. ஏரிப் பாசனத்தோடு கிணற்றுப் பாசனமும் கைகொடுத்தது. புறம்போக்கு நிலங்களும், காடுகளும்கூட விவசாயத்தை விரிவுபடுத்துவதற்காகப் பயன்படுத்தப் பட்டன. நீர்ப்பாசனம் புறக்கணிக்கப்பட்ட போது சோழ நாட்டில் பஞ்சம் தலைதூக்கியது. விக்கிரம சோழனும், மூன்றாம் குலோத்துங்கனும் வேளாண்மையை உதாசீனப் படுத்தியமையால் மக்கள்

பஞ்சத்தால் வாட வேண்டியதாயிற்று! அவர்களுடைய பக்தியால் பஞ்சத்தைப் போக்க முடியவில்லை.

குறிப்பு

5.3.14.2. தொழில்

விவசாயமும், தொழிலும் பொருளாதார நாணயத்தின் இரண்டு பக்கங்களாகும். ஒன்றையொன்று சார்ந்து இருப்பவை. விவசாயமின்றேல் தொழில் வாழ முடியாது தொழிலின்றேல் விவசாயம் வளர இயலாது. சோழர் காலத்தில் சிறு தொழில்களும், குடிசைத் தொழில்களும் செழிப்புற்றிருந்தன. விவசாயத் தொழில் மாடு மேய்த்தல் மீன் பிடித்தல் ஆபரணத் தொழில் நெசவுத் தொழில் உப்பெடுத்தல் கப்பல் கட்டல் வெள்ளி, வெண்கலம், செம்பு, பித்தளை போன்ற உலோகங்களைக் கொண்டு செய்யப்பட்ட பண்டம், பாத்திரம், படிமத் தொழில்கள் நாடெங்கும் பரவலாக இருந்தன. காஞ்சி நெசவுத் தொழிலின் இதயமாக விளங்கியது. ஆபரணத் தொழில் அரச குடும்பத்தினருக்கும், செல்வந்தருக்கும் தேவையான கிரீடம், குண்டலம், கண்டிகை, ஆரம், வளையல், சிலம்பு போன்ற நகைகள் செய்வதற்குத் தேவையாக இருந்தது. இவையன்றி அழகு அலங்காரப் பொருட்களைத் தயாரித்தல், கட்டடம் கட்டுதல், ஓவியம் போன்ற கலைத் தொழில்கள் பிரபலமாக இருந்தன.

5.3.14.3. வணிகம் உள்நாட்டு வர்த்தகம்

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட சிறுதொழில் மற்றும் குடிசைத் தொழில் பொருட்கள் சந்தைகளில் விற்கப்பட்டன. இவை பண்டமாற்று மற்றும் பணமாற்று முறையில் விற்கவோ வாங்கவோ பட்டன. வட்டிக்குக் கடன் கொடுக்கப்பட்டது. பொருட்களை ஒரு இடத்திலிருந்து பிற இடங்களுக்குக் கொண்டு செல்ல நெடுஞ்சாலைகள் அமைக்கப் பட்டிருந்தன. உறுதிப் பத்திரங்கள் புழக்கத்தில் இருந்தன. எண்ணல், எழுத்தல், முகத்தல், நீட்டல் ஆகிய அளவைகள் பொருட்களை அளக்கப் பயன்பட்டன. தங்கம், வெள்ளி, செப்பு நாணயங்கள் வர்த்தகப் பரிமாற்றத்துக்குப் பயன்படுத்தப்பட்டன. சந்தைகளில் வர்த்தகம் சுறுசுறுப்பாக நடைபெற்றது. சோழர்களிடம் வலிமைமிக்க கடற்படை இருந்தமையால் வர்த்தகக் கப்பல்கள் மூலம் வெளிநாட்டு வணிகம் சிறப்பாக நடைபெற்றது. சுமத்திரா, ஜாவா, மலேயா, ஸ்ரீவிஜயம், சீனா முதலிய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு இருந்தது. முத்து, பவளம், யானைத் தந்தம், கண்ணாடிக்கல், பாக்கு, அகில் அட்டை, ஏலம், கிராம்பு, துணி, சாயப் பட்டு நூல், மருந்துகள், வாசனை திரவியங்கள் ஆகியவற்றை ஏற்றிச் சென்ற சோழ நாட்டு வர்த்தகக் கப்பல்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் துறைமுகங்களை அடைந்தன. வணிக சங்கங்கள் மூலம் வெளிநாட்டு வணிகம் செழிப்புடன் செயல்பட்டது. குறிப்பாக அரபு நாடுகளிலிருந்து குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. மாமல்லபுரம், கொற்கை, கொல்லம் ஆகியவை முக்கிய வணிகத் துறைமுகங்களாகும்.

குறிப்பு

5.3.15. அரசாங்க வருமானம்

நில வருவாய்

நில வருமானம் (டுயனெ சுநஎநரெந) அரசாங்கத்தின் முக்கிய வருவாயாகும். எனவே இதற்காக அரசாங்கம் அதிக அக்கறை செலுத்தியது. வரி கணக்கிடுவதற்காக நிலம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது: 1) வரி விதிப்பதற்கேற்ற விளை நிலங்கள் 2) வரியில்லா தரிசு நிலங்கள். இவை இறையிலி அல்லது தரமிலி என்று அறியப்பட்டன. கோயில்களுக்கும், பிராமணர்களுக்கும் தானமாகக் கொடுக்கப்பட்ட கிராமங்கள் இறையிலி கிராமங்களாகக் கருதப்பட்டன. இவை நிலவரி விலக்கு பெற்றவை. நில அளவை நிலத்தைத் தரம் பிரிப்பதற்காக விரிவான நிலக் கணக்கெடுப்பு (டுயனெ ளுரசஎநல) எடுக்கப்பட்டது. குறிப்பாக முதலாம் குலோத்துங்கன் காலத்தில் நில அளவாய்வு விரிவாக மேற்கொள்ளப்பட்டது. இதற்கென நில ஆய்வாளர்கள் (டுயனெ ளுரசஎநலழசள) இருந்தனர். இவர்களைக் கொண்டு தனியார் நிலங்கள், பொது நிலங்கள், கிராமங்களின் எல்லை, மேய்ச்சல் நிலங்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு, ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன.

நிலவரி

நில ஆவணங்களின் அடிப்படையில் நிலவரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டது. நிலவரியன்றி, தொழில் வரி, சுங்கவரி, வனவரி, கனிமவள வரி போன்ற வரிகளும் விதிக்கப்பட்டன. விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு அல்லது மூன்றில் ஒரு பங்கு நிலவரியாக வசூலிக்கப்பட்டது. இவ்வரி விளைபொருளாகவோ அல்லது பணமாகவோ பெறப்பட்டது. மைய அரசாங்கம் விதிக்கும் வரிகளல்லாது உள்ளாட்சி நிறுவனங்களும் வரிவிதித்து வசூலிக்கும் உரிமை பெற்றிருந்தன.

வருவாய் துறை

வருவாய்த்துறை அதிகாரிகள் (சுநஎநரெந முகஅஎயைடள) வரி வசூலுக்குப் பொறுப்பானவர்கள். சோழர் காலத்தில் வரிகள் மிகச் சரியாகவும், நியாயமாகவும், முறையாகவும் வசூலிக்கப்பட்டன. இறக்குமதியாகும் பொருட்களுக்கு சுங்கவரி பெறப்பட்டது. நில உடைமைகள், நில அமைப்புகள், நில உரிமைகள், நிலவரிகள் மற்றும் பிற வரிகள் பற்றிய ஆவணங்கள் கவனமாகத் தயாரிக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டன. வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு வரி வசூலன்றி மேலும் பல பொறுப்புகள் இருந்தன: கோயில்களின் வரவு-செலவுக் கணக்கு வைத்தல் கிராம மன்றங்கள் சார்பாக நிலத்தை வாங்கல், விற்றல் கிராம மன்றங்களின் நில சம்மந்தப்பட்ட ஆவணங்களுக்குச் சான்று வழங்கள் தேவைப்பட்டால் தலநீதிபதிகளாகச் செயல்படல். சோழர் காலத்திலிருந்து வருவாய்த் துறை அதிகாரிகள் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் அலுவலர்களாகவே இருந்துள்ளனர்.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. அரசர்கள் வாய்வழி உத்தரவுகளை எவ்வாறு ஆவணப்படுத்தினர்?

2. முக்கிய அரசுப் பதவிகள் என்ன என்ன?

குறிப்பு

5.4. கலை-கட்டடக் கலை வளர்ச்சி

பல்லவர் காலமே கட்டடக் கலையின் தொடக்க காலம் எனலாம். அவர்கள் துவக்கிய இக்கலை சோழர் காலத்தில் முழுமை அடைந்தது. சோழர்கள் ஆடம்பரப் பிரியர்கள் விளம்பர விரும்பிகள் பிரம்மாண்டத்தைப் போற்றியவர்கள்! இதன் வெளிப்பாடே சோழர்கள் வாழ்ந்த ஆடம்பர அரண்மனைகள். சோழர் காலத்தில் தலைநகரங்களிலும், துணைத் தலைநகரங்களிலும் அரண்மனைகள் கட்டப்பட்டன. அரண்மனையின் வளாகமே ஒரு நகரம் போல் காட்சி அளித்தது. சோழ மன்னனின் ஆடம்பரம் அரண்மனைகளால் அறியப்பட்டது. ஒவ்வொரு அரண்மனையும் மதிற்சுவர்களாலும், அகழியாலும் சூழப்பட்டிருந்தது. அரண்மனைக்குள் அந்தப்புரம் உள்கூடம், சிற்பக்கூடம் பொழில்கள் நந்தவனம் எழில் மாடங்கள் கலைக் கூடங்கள் அலங்கார விண்ண கரங்கள் ஓவியச் சுவர்கள், தூண்கள் திரைச்சீலைகள் நிலைக் கண்ணாடிகள் போர்களால் திரட்டப்பட்ட செல்வங்களைப் பாதுகாக்கும் அறை அணிகலன்களுக்கான சிறப்பறைகள் படைக்கலங்கள் பாதுகாப்பறை காவலர் விடுதிகள் போன்ற பல்வகை அமைப்புகள் இருந்தன. சுருங்கக்கூறின், அரண்மனை கவின்கலைக் காட்சியகமாகத் திகழ்ந்தது.

5.4.1. கோயில்கள்

சோழர்கால கட்டடக் கலையில் சிகரம் போல் காட்சியளிப்பது கோயில்களாகும். இவர்கள் காலத்தில் கோயில் கட்டடக்கலை உச்சகட்டத்தை எட்டியது. கோயில்களில் கட்டடக் கலையின் முதிர்ச்சி வெளிப்பட்டது. பெரிதே அழகானது" என்ற நோக்கத்தோடு கண்டோர் வியக்கும் கோயில்கள் எழுப்பப்பட்டன. குறிப்பாக, தஞ்சைப் பெருவுடையார் கோயிலும், கங்கைகொண்ட சோழேச்சுரத்திலும் இக்கலை வடிவத்தை முழுமையாகக் காண முடிகிறது.

5.4.2. தஞ்சைப் பெருவுடையார் கோயில்

இராஜராஜேஸ்வரம் என்ற பெருவுடையார் பெரிய கோயில் முதலாம் இராஜராஜன் கற்பனையில் உருவாகி கிரானைட் கற்களால் உருவாக்கப்பட்டது. ஏழாண்டுகளில் கட்டி முடிக்கப்பட்ட இக்கோயில் நன்கு பாதுகாக்கப்பட்ட சுவர்களுக்கிடையே கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. 500 அடி நீளமும் 250 அடி அகலமும் உள்ள அகன்ற இடத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலுக்குள் வியத்தகு விமானம், அர்த்த மண்டபம் மகா மண்டபம், நந்தி மண்டபம் போன்ற கருத்தையும், கவனத்தையும் ஈர்க்கும் பகுதிகள் உள்ளன.

குறிப்பு

கிழக்குப் புறத்தில் இருபெரும் கோபுர வாயில்கள் உள்ளன. உயர்ந்து நிற்கும் விமானமே இக்கோயிலின் சிறப்பான உறுப்பாகக் கருதப்படுகிறது. கருவறையின் சுவர்களில் சோழர் கால ஓவியங்கள் காணப்படுகின்றன. கோயிலுக்குள் உள்ள லிங்கமும், கோயிலுக்கு முன்னே உள்ள நந்தியும் புதுமுறைக் கட்டிடக் கலையின் வெளிப்பாடுகளாகும்.

5.4.3. கங்கைகொண்ட சோழபுரக் கோயில்

இராஜராஜனின் மகனும் வாரிசுமான முதலாம் இராஜேந்திரன் ஆட்சிக் காலத்தில் நன்கு திட்டமிட்டு உருவாக்கப்பட்ட இரண்டாவது தலைநகரம் கங்கைகொண்ட சோழபுரட் கிட்டத்தட்ட 250 ஆண்டு காலம் சோழத் தலைநகராக இருந்துள்ளது. இத்தலைநகரில் எழுப்பப்பட்டது தான் இராஜராஜேஸ்வரம் என்ற சிவன் கோயில். இது தஞ்சைக் கோயிலைவிடப் பெரியது ஆனால் உயரத்தில் குறைவானது. இக்கோயில் தஞ்சைக் கோயிலின் பெண் வடிவமே எனக் கூறுவோரும் உண்டு. இராஜராஜேஸ்வரம் கோயிலின் 186 அடி உயரத்தில் 340க்கு 110 அடி அளவிலான நீண்ட சதுரத்தின் மேல் கோயில் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. இதன் நுழைவாயில் கிழக்குப் பக்கத்தில் அமைந்துள்ளது. இக்கோயில் மகாமண்டபத்தில் 180 தூண்களுக்கு மேல் உள்ளன. ஒவ்வொரு தூணும் நான்கடி உயரமுள்ள பீடத்தின் மீது நிற்கிறது. இந்த கோயிலின் விமானம் தஞ்சைக் கோயிலில் உள்ளதைவிட வேறுபட்டுள்ளது. தஞ்சைக் கோயிலைவிட இக்கோயிலில் அலங்கார வேலைப்பாடுகள் அதிகம். இங்குள்ள சண்டேஸ்வரர் ஆலயம் மூலக்கோயிலின் மறுவடிவமாகும்.

5.4.4. பிற கோயில்கள்

தஞ்சை பெரிய கோயிலையும், கங்கைகொண்ட சோழபுர இராஜராஜேஸ்வரம் கோயிலையும் முன்மாதிரிகளாகக் கொண்டு இரண்டாம் இராஜராஜன் கட்டிய தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோயில் கலைச் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகும். இதேபோன்று மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் திரிபுவனத்தில் கட்டப்பட்ட கம்பகரேஸ்வரர் கோயிலும் கலைச் சிறப்புடையதாகும்.

மதிப்பீடு

சோழப் பேரரசர்கள் எதையும் பெரிய அளவில் செய்வதை, சாதிப்பதை விரும்பினர். அந்த விருப்பத்தின் வெளிப்பாடே அவர்கள் எழுப்பிய பிரம்மாண்டமான கோயில்களாகும். இராஜராஜன் தஞ்சையில் பெருவுடையார் பெரிய கோயிலைக் கட்டினால், அவருடைய வாரிசான இராஜேந்திரன் கங்கைகொண்ட சோழபுரத்தில் இராஜராஜேஸ்வரம் கோயிலை எழுப்பினார். இவர்கள் போர்களைப் போன்று கோயில்களைக் கட்டுவதற்கும் முன்னுரிமை (Priority) கொடுத்தனர். கோயில்களின் தோற்றம், உயரம், அமைப்பு, கட்டுமானம், சிற்பச் சிறப்பு, ஓவிய எழில்

குறிப்பு

போன்றவைப் பார்ப்போரைப் பெரிதும் கவர்ந்தன. சோழப் பேரரசர்கள் இவற்றின் பொருளாதார, சமுதாய விளைவுகளைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. போர்க்கைதிகளைப் பிரதானமாகக் கொண்டு இக்கோயில்கள் கட்டப்பட்டன. கட்டுமானப் பணியின் போது வேலை செய்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும், கலைஞர்களும் கோயில் கட்டி முடிக்கப்பட்டபின் வேலையிழந்தனர். இவர்கள் அனைவருக்கும் எவ்வாறு மறுவாழ்வளிக்கப்பட்டது என்பது ஆய்வுக்குரியது. படையெடுப்புகளின் போது கைப்பற்றப்பட்ட செல்வம், மக்களின் வரிப்பணம், கட்டாய வேலை (Forced Labour) ஆகியவற்றை விலையாகக் கொடுத்து தங்கள் பெருமையையும், புகழையும் பறைசாற்றிக் கொண்டனர் சோழப் பேரரசர்கள். கலைப் படைப்புகள் காலம் கடந்தவை பஞ்சங்கள் தற்காலிகமானவை. சோழர் காலக் கோயில்கள் கட்டடக் கலையின் பரிணாம வளர்ச்சியை அறிய உதவுகின்றன. இக்கோயில் அமைப்பு இந்தியக் கட்டடக் கலை வரலாற்றில் பெருமைக்குரிய திருப்பத்தை ஏற்படுத்தியது.

5.5. சிற்பக்கலை

கோயில் வழிபாட்டுத் தலங்கள் மட்டுமன்றி சிற்பக் கூடங்களாகவும் திகழ்ந்தன. இக்கோயில்களில் தனித்தன்மைமிக்கக் கடவுள் சிலைகளோடு மனிதச் சிலைகளும் வடிக்கப்பட்டுள்ளன. தட்சிணாமூர்த்தி, லிங்கேஸ்வரர், துர்க்கை , சிவன், சிவ-பார்வதி, திரிபுராந்தகர், திரிபுரசுந்தரி போன்ற வடிவங்கள் செம்மரபு சிற்பக் கலைச் சான்றுகள். சிதம்பரம் கோயிலில் காணப்படும் நடராஜர் சிலை சிற்பச் சிகரம். சைவக் கோயில்களில் சிவனடியார்களின் சிலைகள் உள்ளன. வைணவ ஆலயங்களில் திருமாலின் மூவகைக் கோலங்கள் - நின்ற, அமர்ந்த, கிடந்த திருமேனிகள்-காணக் கிடக்கின்றன. கல், வெண்கலம், பொன், வெள்ளி ஆகிய உலோகங்களைக் கொண்டு, படிமக்கலை விதிகளின்படி வடிவமைக்கப்பட்ட சிற்பங்கள் சிற்பக்கலை அற்புதங்கள் சிற்பக் கவிதைகள். பெண் உருவச் சிலைகள் ஆபாசமற்ற அதிசயங்கள். ஊர்வலங்களில் கொண்டு செல்வதற்காக பெரிய வெண்கலச் சிலைகள் வடிக்கப்பட்டன. சிலைகளின் வண்ண உடைகளும், வேலைப்பாடுமிக்க நகைகளும் பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்டன. வெண்கல வார்ப்படக் கலையில் பயிற்சி அளிப்பதற்கென ஒரு பள்ளி இருந்தது குறிப்பிடத்தக்கது.

5.5.1. ஓவியக்கலை

சோழர் காலத்து சிற்பக்கலையைப் போன்றே ஓவியக் கலையும் சிறப்புற்றிருந்தது. குறிப்பாக சுவரோவியங்கள் (குசநளஉழள). இவை கோயிலின் நடைபாதை சுற்றுச் சுவர்களில் காணப்படுகின்றன. தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் கருவறையில் தீட்டப்பட்ட கயிலைக்காட்சி,

குறிப்பு

பல்வகை இன்னிசைக் கருவிகளைக் கொண்டு தேவகணங்கள் இசையெழுப்ப நாட்டிய நங்கையர் நடனமாடும் காட்சி ஓவியக் கலையின் மாட்சியை வெளிப்படுத்துவதாக உள்ளன. தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலன்றி காஞ்சி கைலாசநாதர் கோயில் நார்த்தாமலை விஜயாலய சோழிச்சுரம் மாமண்டூர், திருமெய்யம், மலையடிப்பட்டி, சித்தன்னவாசல் ஆகிய இடங்களில் காணப்படும் ஓவியங்களும் புகழ் பெற்றவை. சோபா கால ஓவியங்கள் பெரும்பாலானவை புராணக் கதைகள் காட்சிகளை சித்தரிப்பனவாய் உள்ளன. இவையாவும் இயற்கைக் காட்சிகளைப் பிரதிபலிக்கும் ஓவியங்களும் சுவரோவியங்களும் ஓவியக்கலைக் கோலங்களாகும். சிற்பக் கலையோடு ஆபரணக கலையும் சிறப்புற்றிருந்தது.

5.5.2. நாடகக் கலை

சங்க காலத்துக்குப் பின்னர் சோழர் காலத்தில் தான் நாடகக் கலையும், நாட்டியம் கலையும் புத்துயிர் பெற்றன. திருவிழாக் காலங்களில் ராஜராஜேஸ்வர நாடகம், ராஜாது விஜயம் போன்ற நாடக நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நாடக அரங்கில் ஆரியக்கூத்து சாக்கைக் கூத்து, தமிழ்க்கூத்து, சாந்திக்கூத்து போன்ற கூத்து நிகழ்ச்சிகள் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன. நாடக நடிகர் உடலசைவுகள், பேச்சு ஒப்பனை, சைகைகள் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தனர். இதற்கென நாடகசாலை இருந்தது.

5.5.3. நாட்டியக்கலை

நாடகக் கலையும் நாட்டியக் கலையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை. திருவிழாக் காலங்களில் நடன நிகழ்ச்சி தவறாமல் நடைபெற்றது. கோயில்களில் நடனத்துக்கென தனியாக ஒருவகைக் கூத்தும் இருந்தது. நிருத்த மண்டபங்கள் நன்கு பராமரிக்கப்பட்டன. நடனத்துக்கென ஆடல் பெண்டிர் அமர்த்தம் பட்டனர். இராஜராஜன் தஞ்சை பெரிய கோயிலுக்கு மட்டும் 400 ஆடலழகிகளை அமர்த்தியதாகச் சாசனச் சான்றுள்ளது. தேவரடியார்கள் தனிச்சேரிப் பெண்டிர்களாக ஆடிப்பாடிக் கலைகளில் சிறந்து விளங்கினர். நடனப் பெண்மணிகள் பூங்கோயில் நாட்டிய தலைக்கோலி போன்ற பட்டங்கள் அளித்து சிறப்பிக்கப்பட்டனர். கோயில்களில் நடிக்கவும், ஆடவும், பாடவும் அளிக்கப்பட்ட நிவந்தங்கள் அல்லது நிலக்கொடைகள் எண்ணற்றவை.

5.5.4. இசைக்கலை

சோழர் காலத்தில் நாடக, நாட்டியக் கலைகளோடு இசைக் கலையும் இணைந்து வளர்ந்தது. பண்டைய பாணர் மரபு புதுப்பிக்கப்பட்டது. நாடகத்துக்கும், நாட்டியத்துக்கும் பின்பாடகர்களும், இசைக் கருவிகளும் இன்றியமையாதவை. தோற்கருவிகளும், துணைக்

குறிப்பு

கருவிகளும், நரம்புக் கருவிகளும் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டன. யாழும், வீனையும் பக்க மேளங்களும் இசைக்கு இசை சேர்த்தன. சைவத்திருமுறைகள் பண்ணுடன் பாடப்பட்டன. நாடக, நடன, இசை நிகழ்ச்சிகளை மன்னரும் மக்களும் கண்டு கேட்டு மகிழ்ந்தனர்.

5.5.5. அறிவியல் நிலை

சோழர் காலப் பேரரசர்களும், பொதுமக்களும் ஆன்மீகத்தில் அக்கறை கொண்ட அளவுக்கு அறிவியலில் நாட்டம் காட்டவில்லை. அறிவின் இடத்தை நம்பிக்கை பற்றிக் கொண்டது. அறிவியல் மனப்பான்மை அரிதாகவே இருந்தது. எனினும் வானியல், மருத்துவம் பற்றி ஓரளவு அறியப்பட்டிருந்தது. வான்மண்டலக் கோள்களின் பெயர்கள் தெரிந்திருந்தது. சித்திரையிலிருந்து பங்குனி வரையிலான பன்னிரெண்டு மாதங்களின் பெயர்கள் பழக்கத்தில் இருந்தன. இருபத்தேழு விண்மீன்கள் கணக்கிடப்பட்டன. சூரிய சந்திர கிரகணங்கள் தெரிந்திருந்தன. இராஜராஜசோழனின் நட்சத்திரம் சதயம். குழந்தை மருத்துவம், பொது மருத்துவம், மிருக மருத்துவம் துவக்க நிலையில் இருந்தன. மருந்து, மருத்துவம், மருத்துவர் பற்றிய தெளிவு காணப்பட்டது.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

3. இராஜராஜேஸ்வரம் என்ற சிவன் கோயில் எங்கு அமைந்துள்ளது?

4. சோழர்கள் காலத்தில் எத்தனை விண்மீன்கள் கணக்கிடப்பட்டன?

5.6. சாளுக்கிய சோழர்கள்

கீழைச் சாளுக்கிய நாட்டில் பிறந்த குலோத்துங்கன் கங்கை கொண்ட சோழபுரத்தில் வளர்ந்தார். எனவே அவருக்குச் சோழ குடும்பத்தினருடன், குறிப்பாக சோழ மன்னர்களுடன் நெருக்கமான தொடர்பு இருந்தது. வீரராஜேந்திரன் (1064-1067) ஆட்சிக் காலத்தில்" நடைபெற்ற கடாரப் படையெடுப்பின் பொறுப்பைக் குலோத்துங்கனிடம் ஒப்படைத்தார். கடாரக் கடற்படையின் வெற்றியால் புகழ் பெற்ற குலோத்துங்கன் சோழப் பேரரசின் தூதுவராக சீனாவின் அரசவைக்கு அனுப்பப்பட்டார். அதன்பின் கீழைச் சாளுக்கிய நாட்டின் வெங்கியின் குறுநில மன்னரானார். வீரராஜேந்திரன் வாரிசின்றி இறந்ததால் சோழ நாட்டில் வாரிசுரிமைப் போராட்டம் வெடித்தது." அப்போராட்டத்தைத் தனக்கு சாதகமாக்கிக் கொண்ட குலோத்துங்கன் கங்கை கொண்ட சோழபுரம் சென்று சோழ மன்னராக முடிசூட்டிக் கொண்டார். தமிழ் நாட்டு மக்கள் இந்நிகழ்வை ஆக்கிரமிப்பாகக் கருதவில்லை. மாறாக, வாரிசின்றி இறந்த வீரராஜேந்திரனின் இயல்பான வாரிசாகவே கருதிக் கொண்டாடினர். வாரிசுரிமைப் போராட்டத்தால் சோழ நாட்டில் ஏற்பட்ட அரசு வாரிசு நெருக்கடி நீங்கியது. பின்னர் தில்லை வாழ் பிராமணர்கள் சிதம்பரம் கோயிலில் குலோத்துங்கனுக்கு வேதவைதீக சம்பிரதாய

குறிப்பு

முறைப்படி முறையாக முடிசூட்டினர். கீழைச் சாளுக்கிய நாடு சோழ நாட்டுடன் இணைந்தது. குலோத்துங்கனும் அவரது வழிவந்தோரும் சாளுக்கிய சோழர்கள் என்று அறியப்பட்டனர்.

5.6.1. முதலாம் குலோத்துங்கன்

குலோத்துங்கன் தனது மூதாதையர்களான இராஜராஜன், இராஜேந்திரன் போன்ற வரலாற்று மாமன்னர். மாபெரும் போர் வீரர் ஆனால் போர் வெறியரல்லர். போரின் பெருமையையும், அமைதியின் பேராற்றலையும் நன்கறிந்தவர். அரசின் அறநெறியும், அரசியல் விவேகமும், நிர்வாகத் திறமையும் ஒருங்கே பெற்றவர். கையில் இருக்கும் ஒரு பறவை கூட்டில் இருக்கும் இரு பறவைகளைவிட சிறந்தது என்ற நடைமுறை உண்மையை உணர்ந்தவர். கிடைத்த வாய்ப்பை செம்மையாகப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தவர். சோழ நாட்டின் பலத்தையும் பலவீனத்தையும் நன்கறிந்த குலோத்துங்கன் தன்னைவிட தன்நாட்டு மக்களின் நலனும், சோழ நாட்டின் பாதுகாப்பும் அமைதியும் மேலானது என்று எண்ணிய குலோத்துங்கன் அதற்கேற்ப தனது குறிக்கோளையும், கொள்கையையும் வகுத்துக் கொண்டார். சமரசத்தின் மூலம் மறுசீரமைப்பு (Policy of Reconciliation and Reconstruction) என்பதே குலோத்துங்கனின் குறிக்கோளாகவும் கொள்கையாகவும் இருந்தது. குலோத்துங்கன் தீர்வு இலங்கை விடுதலை, இலங்கை மன்னர்களும், மக்களும் சோழர் மேலாதிக்கத்தையும், ஆட்சியையும் துவக்கத்திலிருந்தே எதிர்த்து வந்தனர். சோழர் அடக்குமுறைக்கு எதிராகப் போராடினர். வலுவாக எழுந்த விடுதலைப் போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கினார் இராஜேந்திர சோழன். விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க முடியுமேயன்றி ஒழிக்க முடியாது. இராஜேந்திரனுக்குப் பின்னர் சோழ நாட்டில் ஏற்பட்ட அரசு நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்ட இலங்கை மன்னன் விஜயபாகு ஈழத்திலிருந்த சோழப் படையைத் தோற்கடித்து, பொலன்னருவாவைக் கைப்பற்றி, இலங்கையைச் சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்தார். குலோத்துங்கன் ஆட்சிப் பொறுப்பேற்றபின் இலங்கை விடுதலையை ஏற்றுக் கொண்டார். அதுமட்டுமல்ல. அவரது மகள் சுத்தமல்லியை இலங்கை மன்னன் வீரபாகுவுக்கு மணமுடித்து வைத்து இலங்கை-சோழ நாட்டு நல்லுறவை ஏற்படுத்தினார். நெடுங்காலமாக சோழநாட்டு உடலில் குத்திய முள்ளாக இருந்த இருநாட்டு விரோதத்துக்கு முடிவு கட்டப்பட்டது. இந்நிகழ்ச்சி குலோத்துங்கனின் அரசியல் முதிர்ச்சிக்கும், அரச தந்திரத்துக்குமான எடுத்துக்காட்டாகும்.

5.6.2. மேலைச் சாளுக்கியருடன் மோதல்

முதலாம் குலோத்துங்கன் சோழப் பேரரசரானதன் விளைவாக கீழைச் சாளுக்கிய நாடு சோழ நாட்டுடன் இணைந்தது. ஆனால் மேலைச் சாளுக்கியரின் பகை நீடித்தது. அவர்கள் சோழர்களைத் தங்களது பரம்பரைப் பகைவர்களாகவே கருதினர். எனவே, மேலைச் சாளுக்கிய

குறிப்பு

மன்னன் ஆறாம் விக்கிரமாதித்தன் சோழ நாட்டுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆனால் அவரது அண்ணன் இரண்டாம் சோமேஸ்வரன் சோழ நாட்டுடன் நட்புறவோடு இருப்பதையே விரும்பினார். எனினும், நாது நிலையில் பிடிவாதமாக இருந்த ஆறாம் விக்கிரமாதித்தன் சோழ நாட்டுக்கு எதிராகப் படை திரட்டினார். எவ்வித சமரசத்துக்கும் தயாராக இல்லை. குலோத்துங்கன் சோழர்களுடன் இணக்கமாக இருக்க வேண்டும் என்று விரும்பிய இரண்டாம் சோமேஸ்வரனுடன் தொடர்பு கொண்டு சமரசத் தீர்வுக்கு முயற்சி செய்தார். ஆறாம் விக்கிரமாதித்தனுக்குத் தெரிந்த மொழியில் பேசினார். மேலைச் சாளுக்கிய மன்னனுக்குத் தெரிந்த ஒரே மொழி போர்தான். எனவே, தெற்கிலிருந்து குலோத்துங்கனும், வடக்கிலிருந்து சோமேஸ்வரனும் மேலைச் சாளுக்கிய நாட்டைத் தாக்கினர். இக்கூட்டுத் தாக்குதலை எதிர்க்கொள்ள முடியாத விக்கிரமன் தோல்வியைத் தழுவினார். வீழ்ந்த உறவினரைத் தண்டிக்க விரும்பாத குலோத்துங்கன் அவரையே மேலைச் சாளுக்கிய நாட்டை ஆட்சி செய்ய அனுமதித்தார். இதன் மூலம் மேலைச் சாளுக்கியர்--சோழர் உறவு சீரானது. இது குலோத்துங்கனின் அரசியல் விவேகத்துக்குக் கிடைத்த அடுத்த வெற்றியாகும்.

5.6.3. பாண்டியர் பிரச்சனை

இலங்கையைப் போன்றே மதுரைப் பாண்டிய மன்னர்களும், மக்களும் சோழரின் மேலாதிக்கத்தை எதிர்த்தனர் தொடர்ந்து போராடினர். இராஜேந்திர சோழன் இறந்தபின் அவர்களது விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்தது. விடுதலை விரும்பிகளான அவர்கள் பாண்டியர் குலத்தைச் சேர்ந்த ஐவர் பாண்டிய நாட்டை ஐந்து பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு சுயாட்சி செய்தனர். குலோத்துங்கன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, பாண்டியர் எதிர்ப்பை முறியடித்தார். அதன்பின் பாண்டியர் அவரையும் மீண்டும் அவர்களது பகுதிகளை ஆட்சி செய்ய அனுமதிதார். ஐவர் ஆட்சியைக் கலைக்காமல் சோழர் மேலாதிக்கத்தை ஏற்கச் செய்தார். இதன்மூலம் பாண்டியர் சுதந்திரமாக இருக்கவும், பெயரளவில் சோழர் ஆதிக்கத்தை ஏற்கவுமான சமரசத் தீர்வு கண்டார். பாண்டியரின் பரம்பரைப் பகை தணிந்தது. பாண்டியர் பிரச்சனைக்குத் தற்காலிகத் தீர்வு காணப்பட்டது.

5.6.4. சேரர் சவால்

இலங்கைச் சிங்களவர், மதுரைப் பாண்டியர் போன்று கேரளத்து சேரரும் சோழரின் மேலாதிக்கத்தை எதிர்த்துப் போராடி வந்தனர். நீருபூத்த நெருப்பாக இருந்த இப்போராட்டம் குலோத்துங்கன் மன்னரானவுடன் நெருப்பாக வெளிப்பட்டது. கிளர்ச்சித்தீ வேகமாகப் பரவியது. வேணாட்டு மன்னன் இராமர்திருவடியின் தலைமையில் சேரர் விடுதலைப் படை தயாராயிற்று. இப்படையும், சோழர் படையும் கோட்டாற்றில் மோதின. குலோத்துங்கனின் சோழர் படை வெற்றி

குறிப்பு

பெற்றது. இராமர்திருவடி கொல்லத்துக்குத் தப்பிச் சென்றார். அவர் கொல்லத்தில் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட இராமர்திருவடி மீண்டும் சேர நாட்டுக்கு மன்னராக இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார் குலோத்துங்கன். இந்த ஏற்பாடும் குலோத்துங்கனின் சமரசக் கொள்கைக்குக் கிடைத்த மற்றொரு வெற்றியாகும்.

5.6.5. கலிங்கச்சிக்கல்

குலோத்துங்கனுக்குக் கலிங்கம் புதிதல்ல. ஏனெனில் தென் கலிங்கம் வெங்கி நாட்டின் பகுதியாக இருந்தபோது அங்கு வெடித்த கிளர்ச்சியை அடக்கியவர் குலோத்துங்கன். அதன் விளைவாகத் தெற்கு கலிங்கம் வெங்கி நாட்டுடன் இணைக்கப்பட்டது. ஆனால் வடக்கு கலிங்கம் சோழர் ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட மறுத்தது. வடகலிங்க மன்னன் அனந்தவர்மன் திறை செலுத்த மறுத்ததே சோழர் படையெடுப்புக்குக் காரணமாயிற்று. அனந்தவர்மன் சோடகங்கன் குலோத்துங்கனின் மகள் இராஜசுந்தரியின் மகன். குலோத்துங்க சோழனின் தூரத்து உறவினர். எனவே, கலிங்கப் பிரச்சனை சிக்கல்மிக்க பாசப் போராட்டமாக உருவெடுத்தது. கலிங்கச் சிக்கலைத் தீர்க்க குலோத்துங்கன் கலிங்கத்தின் மீது படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றார். அனந்தவர்மன் தோற்கடிக்கப்பட்டார். எனினும் வட கலிங்கத்தைச் சோழ நாட்டுடன் இணைக்காமல் அதே சமயம் சோழர் ஆதிக்கத்தை வடகலிங்கம் ஏற்றுக் கொள்ளுமாறு செய்தார். இந்த சமரசத் தீர்வின் மூலம் குலோத்துங்கனின் புகழ் வானளாவ உயர்ந்தது.

5.6.6. வெளிநாட்டு உறவு

குலோத்துங்கனின் புகழ் வெளிநாடுகளுக்கும் பரவியது. கிழக்காசிய நாடுகளுடன் அரசியல், பண்பாட்டு, வர்த்தக, அரச தந்திரத் தொடர்புகளை மேம்படுத்துவதில் குலோத்துங்கன் சிறப்பு கவனம் செலுத்தினார். குறிப்பாக சீனாவுக்கு சிறப்புத் தூதுவர் அனுப்பப்பட்டார் (1077). அந்நாட்டுடனான வர்த்தகம் பல மடங்கு பெருகியது. மலாய் தீபகற்பம், ஸ்ரீவிஜயம், கம்பூச்சியா, பர்மா ஆகிய நாடுகளுடனான உறவு சிறப்புற்றது.

5.6.7. குலோத்துங்கனின் சாதனைகள்

சோழர் வரலாற்றில் குலோத்துங்கனின் ஆட்சிக் காலம் ஒரு புதிய சகாப்தம் ஆகும். இப்புதிய காலப் பகுதியில் பல சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. குலோத்துங்கன் சோழப் பேரரசின் நோக்கிலும் போக்கிலும் புதிய மாற்றத்தைப் புகுத்தினார். சோழப் பேரரசுக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுத்தார். கங்கை கொண்ட சோழபுரம் தலைநகராக நீடித்தது. காஞ்சிபுரம் சிறப்பிடம் பெற்றது. இவரது சமரச மறுசீரமைப்புக் கொள்கை சோழப் பேரரசை நெருக்கடியிலிருந்து காப்பாற்றியதோடன்றி தேவையான பாதுகாப்பையும், அமைதியையும், சட்டம் ஒழுங்கையும்

குறிப்பு

உறுதிப்படுத்தியது. குலோத்துங்கனின் அறை நூற்றாண்டு கால ஆட்சியில் போரழிவுகளைவிட மக்கள் நலப் பெருக்கமே அதிகமாக இருந்தது. அரசாங்க வருவாய் கண்டோர் வியக்கும் கோயில்களைக் கட்டுவதில் விரயமாக்காமல் மக்கள் நலப் பணிகளில் செலவிடப்பட்டது. சுங்க வரிகளை வெகுவாகக் குறைத்து உள்நாட்டு வர்த்தகத்தையும், வெளிநாட்டு வாணிபத்தையும் ஊக்குவித்தார். அதனால் குலோத்துங்கன் 'சுங்கம் தவிர்த்த சோழன்" என்று நன்றிப் பெருக்கோடு பாராட்டப்பட்டார். சோழ நாடு முழுவதும் நிலங்கள் அளக்கப்பட்டு, நிலத் தீர்வைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு விவசாய வளர்ச்சி உறுதி செய்யப்பட்டது. குலோத்துங்கன் பல்கலை வித்தகர். பன்மொழிப் புலவர். இசை நூலொன்றை இயற்றினார். இயல், இசை, நாடகத் தமிழுக்கு ஊக்கம் தந்து இலக்கிய வளர்ச்சிக்கு உதவினார். இவற்றின் வளர்ச்சிக்கு நிலக் கொடைகள் வழங்கப்பட்டன. சைவராக இருந்தும் பிற சமயங்களை மதித்தார். இவர் நாகையிலும், புதுக்கோட்டையிலும் கட்டிய இரண்டு கோயில்களும் சூரியக் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டவை. குலோத்துங்கனின் சமயம் சாரா ஆட்சி அவரது காலத்தை மீறிய சாதனையாகும். இதுவே இவரது சாதனை களுக்கெல்லாம் பெரிய சாதனை. இலங்கையைத் தவிர இவரது பேரரசு நிலையாக இருந்தது. துங்கபத்திரை ஆறு சோழ நாட்டுக்கும் மேற்கு சாளுக்கிய நாட்டுக்கும் இடையேயான எல்லையாக இருந்தது. வெங்கியும், கலிங்கமும் சோழப் பேரரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. இம்மன்னரின் பெயரால் கட்டப்பட்ட குலோத்துங்க சோழபுரமும் அதன் வீதிகளும் மதுரையை நினைவூட்டுவதாக உள்ளது. குலோத்துங்கனுக்கு மூன்று மனைவியர்: மதுராந்தகி, தியாகவல்லி, ஏழிசை வல்லபி. முதல் மனைவிக்குப் பிறந்தோர் ஏழு பிள்ளைகள். நான்காவது மகன் விக்கிரம சோழன் குலோத்துங்கனின் வாரிசாக அரியணை ஏறினார். குலோத்துங்கனுக்கும் பராந்தவன், குலசேகரன், இராஜகேசரி, பாண்டிய குலாந்தகன், திரிபுவன சக்கரவர்த்தி போன்ற பல பட்டப் பெயர்கள் இருந்தன.

5.6.8. கடைசி காலம்

பல நாடுகளை வெற்றி கொண்ட குலோத்துங்கனால் வயதை வெற்றி கொள்ள முடியவில்லை. மனம் மலைபோல் இருந்தாலும் உடல் இலைபோலாயிற்று. வீரத்தை வியாதி வென்றது. குலோத்துங்கனின் இறுதி ஆண்டுகள் நெருக்கடிகள் நிறைந்தவை. வெங்கி நாட்டு ஆளுநராக இருந்த அவரது நான்காவது மகன் விக்கிரம சோழனை சோழப் பேரரசின் வாரிசாக நியமித்தார் குலோத்துங்கன். வெங்கியிலிருந்து கங்கை கொண்ட சோழபுரம் வந்த விக்கிரம சோழனுக்கு முடிசூட்டுவிழா நடத்தப்பட்டது. விக்கிரம சோழன் வெங்கியை விட்டுச் சென்றதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட மேலைச் சாளுக்கிய மன்னர் ஆறாம் விக்கிரமாதித்தன் வெங்கியைக் கைப்பற்றிக் கொண்டார், வெங்கி வீழ்ந்தது. விஷ்ணுவர்த்தன் ஹொய்சாளர் கங்கவாடியையும், தலக்கோட்டையையும் அபகரித்துக்

கொண்டார். சேர, பாண்டிய நாடுகளின் மீதிருந்த சோழர் ஆதிக்கப் பிடி தளர்ந்தது. குலோத்துங்கனின் வாரிசான விக்கிரம சோழன் இந்நெருக்கடிகளை எதிர்க்கொள்ள வேண்டியதாயிற்று.

குறிப்பு

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. யாரை 'சுங்கம் தவிர்த்த சோழன்" என்று அழைத்தனர்?

2. விக்கிரம சோழனுக்கு முடிசூட்டுவிழா எங்கு நடத்தப்பட்டது?

5.7. விக்கிரம சோழன்

குலோத்துங்கனின் மகன் விக்கிரம சோழன் தந்தையின் ஆட்சிக் காலத்திலேயே பட்டத்து இளவரசராக முடிசூட்டப்பட்டார் (1118). இரண்டாண்டு காலம் தந்தையுடன் சேர்ந்து ஆட்சி செய்து அனுபவம் பெற்றார். இராஜகேசரி குலோத்துங்கனின் மகன் பரகேசரி விக்கிரம சோழன் என்ற பெயரில் தந்தைக்குப் பின் சோழப் பேரரசை ஆட்சி செய்தார். சுயாட்சி உரிமை கோரத் துவங்கினர். சம்புவராயர், காடவராயர், மலயமான், நெல்லூர் தெலுங்கு சோடர்கள் ஆகியோர் தனியாகவும் கூட்டாகவும் வட சோழப் பேரரசில் தனிக்காட்டு இராஜாக்களாகச் செயல்படத் துவங்கினர். வால் நாயை ஆட்டும் நிலை உருவாயிற்று. இதன் விளைவாக சோழப் பேரரசு பலவீனப்பட்டது பேரரசுப் பகுதிகள் விலகிச் செல்லத் தலைப்பட்டன. இரண்டாம் இராஜாதிராஜன் இவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் பூந்தோட்டங்கள் அமைப்பதில் ஆர்வம் காட்டினார்.

5.8. மூன்றாம் குலோத்துங்கன்

இரண்டாம் இராஜாதிராஜன் இறக்குமுன் மூன்றாம் குலோத்துங்கனைத் தனது வாரிசாகத் தேர்ந்தெடுத்தார். குலோத்துங்கன் பல நெருக்கடிகளை எதிர்க்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலையில் இருந்தார். முதலில் சரிவுப் பாதையில் விரைந்து சென்று கொண்டிருந்த சோழப் பேரரசைத் தடுத்து நிறுத்த வேண்டும். அடுத்து பேரரசுக்கு எதிரான நாடுகளை வழிக்குக் கொண்டுவர வேண்டும். இவை மூன்றாம் குலோத்துங்கனின் உடனடி சவால்களாக இருந்தன. எனவே, சோழப் பேரரசுக்கு எதிரான சவால்களை எதிர்க் கொண்டு, பிரிவினை சக்திகளை ஒடுக்கி, பேரரசின் பழம் பெருமையை மீட்க வேண்டிய பொறுப்பு மூன்றாம் குலோத்துங்கனுக்கு இருந்தது.

இரட்டைச் சவால்

மதுரைப் பாண்டியரும், இலங்கை சிங்களவரும் என்றுமே சோழர் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டதில்லை. அவர்கள் சுதந்திரமாக

குறிப்பு

இருப்பதையே விரும்பினர். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் இவ்விரு நாடுகளும் தனியாகவும், கூட்டு சேர்ந்தும் சோழப் பேரரசை எதிர்த்து வந்தன. ஆனால் சோழப் பேரரசர்கள் அவர்களது எதிர்ப்பைத் தேசத் துரோகமாகக் கருதி படை வலிமை கொண்டு அடக்கி ஒடுக்கினர். மூன்றாம் குலோத்துங்கனும் ஏகாதிபத்திய மனப்பான்மையுடன் இந்த இரட்டைச் சவாலை எதிர்க்கொள்ளத் தீர்மானித்தார்.

5.8.1. இலங்கை எதிர்ப்பு

சோழப் பேரரசரின் ஆதரவோடு ஆட்சியில் நீடித்த வீரபாண்டியன் இலங்கை மன்னன் பராக்கிரமபாகுவுடன் சேர்ந்து கொண்டு சோழர் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதற்கான முயற்சியில் முனைப்புடன் ஈடுபட்டார். வீரபாண்டியனுக்கு எதிராகக் குலசேகரப் பாண்டியனுக்கு உறவினரான விக்கிரம பாண்டியன் வாரிசுரிமை கோரினார். இதனால் பாண்டிய நாட்டில் மற்றொரு வாரிசுரிமைப் போராட்டம் வெடிக்கும் நெருக்கடி ஏற்பட்டது. மூன்றாம் குலோத்துங்கன் இந்த நெருக்கடியை வாய்ப்பாகக் கொண்டு, பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து, சிங்கள-பாண்டியப் படையைத் தோற்கடித்து. வீரபாண்டியனை நாடு கடத்தி, விக்கிரம பாண்டியனை மதுரை சிம்மாசனத்தில் அமர்த்தினார் (1182). பாண்டிய நாடு சோழப் பேரரசின் பேராதிக்கத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது.

5.8.2. பாண்டியர் எதிர்ப்பு

நாடு கடத்தப்பட்ட வீரபாண்டியன் சோழ ஆதிக்க எதிர்ப்பாளர்களான இலங்கையையும், வேணாட்டையும் ஒன்று திரட்டி மதுரை அரியணையைக் கைப்பற்றும் முயற்சியில் இறங்கினார். ஆனால் இம்முயற்சியும் நெட்டூர்ப் போர்க்களத்தில் முறியடிக்கப்பட்டது. இவ்விரண்டாம் படையெடுப்பு வெற்றியைக் குறிக்க "மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய" குலோத்துங்கன் என்று பாராட்டப்பட்டார். வீரபாண்டியன் இலங்கைக்குத் தப்பிச் சென்றார். மூன்றாம் குலோத்துங்கனுக்கு மதுரையில் வீராபிஷேகம் நடத்தப்பட்டது. இவ்வெற்றிக்குத் துணையாக இருந்தோர் பாராட்டப்பட்டனர்.

பாண்டியர் தோல்வி

எனினும் மூன்றாம் குலோத்துங்கனின் வெற்றி நெடுங்காலம் நீடிக்கவில்லை. விக்கிரமனுக்குப் பின் பாண்டிய மன்னரான அவரது மகன் சடையவர்மன் குலசேகர பாண்டியன் சோழ நாட்டுக்குக் கீழ்ப்படியவும் திறை செலுத்தவும் மறுத்துவிட்டார். எனவே, மூன்றாம் குலோத்துங்கன் மூன்றாவது முறையாகப் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, மதுரையை முற்றுகையிட்டு, அரண்மனையையும் முடிசூட்டு மண்டபத்தையும் இடித்துத் தள்ளி பெருஞ்சேதம் விளைவித்தார்.

குறிப்பு

இவ்வெற்றியின் நினைவாக மூன்றாம் குலோத்துங்கன் சோழ பாண்டியன் என்ற பட்டப் பெயரை சூட்டி மகிழ்ந்தார்.

பாண்டியர் பகை

தோல்வி கண்ட குலசேகர பாண்டியன் சோழர் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டதால் மீண்டும் அவரே பாண்டிய மன்னராக நீடித்தார். எனினும் பாண்டியர் பகை போகவில்லை. பாண்டியர் சோழ ஆதிக்கத்துக்கெதிராகக் கிளர்ந்தெழ தக்க தருணத்துக்காகக் காத்திருந்தனர். இதற்கிடையே கொங்கு நாடு ஹொய்சாளர்களின் ஊடுறுவலிலிருந்து காப்பாற்றப்பட்டது. இருப்பினும் சோழப் பேரரசின் பலவீனத்தைப் புரிந்து கொண்ட குறுநில மன்னர்கள் சோழர் மேலாதிக்கத்திலிருந்து விடுபடத் துவங்கினர். "அணையப் போகிற விளக்கு சுடர்விட்டு எரிவது போல் குலோத்துங்கன் காலத்துச் சோழப் பேரரசு விளங்கியது".

வேதனை சாதனை

மூன்றாம் குலோத்துங்கன் கங்கைகொண்ட சோழபுரத்தைத் தலைநகராகக் கொண்டே ஆட்சி செய்தார். இச்சோழ மன்னரும் தரைப் படையையும், கடற்படையையும் பலப்படுத்துவதற்குப் பதிலாகக் கோயில்களைக் கட்டுவதிலும், கட்டப்பட்ட கோயில்களின் திருப்பணிகளிலும், பராமரிப்பிலும் அதிக அக்கறை காட்டினார். இவரது ஆட்சிக் காலத்தில் மதுரை, சிதம்பரம், காஞ்சி, திருவாரூர், திருவிடைமருதூர், இராஜராஜபுரம் கோயில்கள் பெரிதும் பயனடைந்தன. திருவொற்றியூரில் ஒரு வியாகரணப் பள்ளி இருந்ததாகக் கூறப்படுகிறது. பாசன வசதிகளும், விவசாயமும் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டதால் சோழ நாட்டில் மீண்டும் இருமுறை பஞ்சம் ஏற்பட்டது (1201-1202). இப்பஞ்சகாலங்களில் அரசாங்கத் துறையைவிட தனியார் அமைப்புகளே பஞ்ச நிவாரணப் பணிகளில் முனைப்புடன் ஈடுபட்டன. மூன்றாம் குலோத்துங்கனின் தனிப்பட்ட திறமைகளே சோழப் பேரரசு வீழ்ச்சியடையாமல் பாதுகாத்தன. மூன்றாம் குலோத்துங்கன்தான் கடைசி சோழ மாமன்னன். இவரது ஆட்சிக் காலம் சோழரது கட்டிடக்கலை மற்றும் கலை வரலாற்றின் கடைசி சகாப்தமாகும். மூன்றாம் குலோத்துங்கனின் வெற்றி வேதனை கலந்த சாதனையாகும். சோழப் பேரரசு வீழாமல் பார்த்துக் கொண்டதே இவரது பங்களிப்பாகும். குலோத்துங்கன் பெருமைபாடிய ஒட்டக்கூத்தர் இம்மன்னனை "கருவீரமேகம்", "காட்டாண்மை வீரன்" என்றெல்லாம் வர்ணித்துள்ளார். மூன்றாம் குலோத்துங்கனுக்கு தியாக வினோதன் என்ற விருதுப் பெயரும் உண்டு.

5.8.3. எழுச்சியும் வீழ்ச்சியும்

தமிழ்நாட்டு வரலாற்றில் சோழரின் எழுச்சியும் வீழ்ச்சியும் எரிமீனை (ஆநவநழச) போன்று எழுந்து, பிரகாசித்து, மறைந்தது.

குறிப்பு

இவர்களது உயர்வும் சரிவும் பல வரலாற்றுப் படிப்பிணைகளைக் கொடுக்கின்றன. சோழ நாட்டை முறையே விஜயலாயன், இராஜராஜன், குலோத்துங்கன் வழிவந்தோர் மாபெரும் பேரரசை உருவாக்கி, விரிவுபடுத்தி, பெருமை சேர்த்தனர். ஐநூறு ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி செய்தனர். விஜயலாயன், இராஜராஜன், இராஜேந்திரன், குலோத்துங்கன் ஆகிய மாமன்னர்கள் தங்களது தொலைநோக்காலும், அறிவாற்றலாலும், வீரத்தாலும் சவால்களை எதிர்க்கொண்டு வெற்றி பெற்றனர். எனினும் விஜயலாயன் உருவாக்கிய சோழப் பேரரசை அவரது வழிவந்த இரண்டாம் பராந்தகன் என்ற சுந்தரசோழன் கட்டிக்காக்க மேற்கொண்ட முயற்சி விழலுக்கிறைத்த நீராயிற்று. இராஜராஜனும், இராஜேந்திரனும் விரிவுபடுத்திய சோழ வல்லரசு ஆதிராஜேந்திரன் ஆட்சிக்காலத்தில் நிலைகுலைந்து போயிற்று. அதேபோன்று குலோத்துங்கன் புதுப்பித்த சோழப் பேரரசு மூன்றாம் இராஜேந்திரன் காலத்தில் முற்றிலும் மூழ்கிப் போயிற்று. ஆக்க ஆற்றல் பெற்ற மன்னர்கள் (ஊசநயவளைந ஆழயெசஉாள) வெற்றி பெறுகிறார்கள் மக்கள் அவர்களைப் பின்பற்றுகின்றனர். ஆனால் திறமையற்ற வாரிசுகளின் கீழ் உட்பகையும் (ஐவெநசயெட ீசழடநவயசயைவ), புறப்பகையும் (நுஒவநசயெட ீசழடநவயசயைவ) புதுப்பலம் பெற்று பேரரசின் வீழ்ச்சிக்கு வழிவகுத்துவிடுகின்றனர்.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

.1 யாருக்கு சோழ பாண்டியன் என்ற பட்டப் பெயரை சூட்டினர்?

2. குலோத்துங்கனை “கருவீரமேகம்“, “காட்டாண்மை வீரன்“ என்றெல்லாம் வர்ணித்த புலவர் யார்?

5.9. இலக்கியம் வளர்ச்சி

இலக்கியம்

பல்லவர் காலத்தில் பக்தி இயக்கத்தின்போது படைக்கப்பட்ட இலக்கியங்கள் யாவும் சோழர் காலத்தில் தொகுக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, சோழர் காலத்தில்தான் நம்பியாண்டார் நம்பி பன்னிரு திருமுறைகளைத் தொகுத்தார். இதேபோன்று. நாதமுனி ஆழ்வார் பாசுரங்களை நாலாயிரத் திவ்யபிரபந்தமாகத் தொகுத்தார். காப்பியங்கள் ஐம்பெரும் காப்பியங்கள் பெருங்காப்பியங்கள் ஐந்து: 1) சிலப்பதிகாரம் 2) மணிமேகலை 3) வளையாபதி 4) சீவக சிந்தாமணி 5) குண்டலகேசி. இவற்றுள் முதல் இரண்டும் சங்கம் மருவிய காலத்தில் இயற்றப்பட்டவை. அடுத்த மூன்றும் சோழர் காலத்தவை. இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் தோன்றிய தண்டியலங்காரம் பெருங்காப்பியம் மற்றும் சிறுகாப்பியம் ஆகியவற்றுக்கு இலக்கணம் கூறுகிறது.

குறிப்பு

ஐஞ்சிறுகாப்பியங்கள்

சிறுகாப்பியங்கள் ஐந்து: 1) சூளாமணி 2) நீலகேசி 3) உதயணகுமார காவியம் 4) யசோதர காவியம் 5) நாககுமார காவியம். இவை ஐந்தும் சமணக் காப்பியங்களாகும். தோலாமொழிப் புலவரால் படைக்கப்பட்ட சூளாமணி (தலையில் சூடும் அணி) மண்ணுலக மன்னன் திவிட்டன் விண்ணுலக மங்கை சுயம்பிரபையைத் திருமணம் செய்து கொண்டதைப் பற்றிக் கூறுகிறது. நீலகேசி சமண சமய தர்க்க நூல் உதயணகுமார காவியத்தின் கதாநாயகன் கௌசாம்பி மன்னன் உதயணன் நளகிரி என்ற யானையை அடக்கி அவந்தி மன்னன் மகள் வாசவதத்தைக்கு யாழ் வாசிக்கக் கற்றுக் கொடுத்து, காதலித்து, மணந்து பின் வாழ்க்கையில் சலிப்புற்று துறவறம் மேற்கொள்வதைப் பற்றிச் சொல்கிறது. வடமொழித் தழுவலான யசோதர காவியம் அதன் காவிய நாயகன் யசோதரன் மூலம் ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்ற நீதியை விளக்குகிறது. படிப்பதற்கு சுவையான கதை. நாககுமாரகாவியம் மகத நாட்டு மன்னன் நாககுமாரனின் கதையைக் கூறுகிறது. இவையன்றி பெருங்கதையும் சமணக் காப்பியமாகும்.

பிற காப்பியங்கள்

சோழர் காலத்துப் பிற காப்பியங்களாவன: விம்பிசார கதை, மேரு மந்திர புராணம் கம்பராமாயணம் பெரிய புராணம் திருவிளையாடல் புராணம் அரிச்சந்திர புராணம் நளவெண்பா நைடதம் வில்லிபுத்தூராழ்வார் பாரதம் ரகுவம்சம் வசு சரித்திரம் நல்லாப் பிள்ளை பாரதம் அஷ்டப் பிரபந்தம் ராமானுஜர் நூற்றந்தாதி தேசிகப் பிரபந்தம் கலிங்கத்துப் பரணி தக்கயாகப் பரணி உலா.

மதிப்பீடு

தமிழ் இலக்கிய வரலாற்றில் சோழர் கால இலக்கியம் பல புதுமைகளைக் கண்டது. இக்கால கட்டத்தில்தான் தமிழ் இலக்கியத்தின் மீது சமஸ்கிருத சாயல் பலமாகப் படிந்தது. தமிழ் இலக்கியப் படைப்புகள் வடமொழி இலக்கண இலக்கிய நூல்களைத் தழுவி எழுந்தன. இதன் விளைவே இலக்கண நூல்களும், நிகண்டுகளும் ஆகும். தமிழ் நாட்டு இலக்கிய நந்தவனத்தில் புதுவகை இலக்கண நூல்கள் பூத்தன. இலக்கணம் படைப்பதில் சமணர்கள் முன்னிலை பெற்றனர். இவற்றோடு தத்துவ இலக்கியங்களும் பல்கிப் பெருகின. பெறு, சிறு காப்பியங்களும், பரணி, பிள்ளைத் தமிழ், கோவை, உலா போன்ற கற்பனைக் களஞ்சியங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. மன்னரது சாசனங்களும் இலக்கிய வடிவம் பெற்றது. உரைநடை நடைபோடத் துவங்கியது. இதன் விளைவாக மணிப்பிரவாள நடை பிறந்தது. இப்புது நடை விரைவில் பிரபலமடைந்தது. சமஸ்கிருத சொற்கள் தமிழை ஆக்கிரமித்தன. பொருள் புறம் தள்ளப்பட்டு சொல்லாட்சி முன்னிலைப்படுத்தப்பட்டது. வடக்கிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கதைகளும் புராண நெடுங்கதைகளும் தமிழ் இலக்கியத்தை

குறிப்பு

ஆட்கொண்டது. இக்காலத்தில்தான் தமிழ் நாட்டில் இராமாயண மகாபாரதக் கதைகள் வேரூன்றி வளர்ந்தன. வடமொழியின் செல்வாக்கு மடைதிறந்த வெள்ளம் போல் பாய்ந்தது. சோழர் காலத்தில் தமிழ் இலக்கண இலக்கிய முகமே மாறிப்போயிற்று. தமிழ் இலக்கிய வரலாற்றில் சோழர் காலம் புதுமை கண்ட காலமாகும்.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. ஐஞ்சிறுகாப்பியங்கள் எத்தனை?

2. நாககுமாரகாவியம் யாருடைய கதையைக் கூறுகிறது?

5.10. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

1. திருமந்திர ஓலை நாயகம் ஓலைச் சுவடிகளில் எழுதினர்.

2. மறையன், ஓலை நாயகம், வரிக்கணக்கு, பிரிவுவரித்திணைக் களம், கண்காணிகள், சாந்துவிக்கிரம், நாடுவகை, நாட்டுக்கண்ட காட்சி ஆகியவை முக்கிய அரசுப் பதவிகள்.

3. கங்கைகொண்ட சோழபுரம்.

4. இருபத்தேழு விண்மீன்கள்.

5. குலோத்துங்கன்.

6. கங்கை கொண்ட சோழபுரம்.

7. மூன்றாம் குலோத்துங்கன்.

8. ஒட்டக்கூத்தர்.

9. ஐந்து

10. மகத நாட்டு மன்னன் நாககுமாரன்

5.11. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

குறுகிய வினாக்கள்

1. சோழர் கால அமைச்சரவையை குறித்து எழுதுக.
2. கிராம நிர்வாகம் குறித்து ஒரு சிறு குறிப்பு எழுதுக
3. முதலாம் குலோத்துங்கனின் வெளிநாட்டு உறவு குறித்து எழுதுக.

விரிவான வினாக்கள்

1. முதலாம் குலோத்துங்கனின் சாதனைகளை குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

2. குட ஓலை முறை குறித்து விவாதி.

குறிப்பு

3. இலக்கிய வளர்ச்சி குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
4. சோழர்கால கலை மற்றும் கட்டிட கலை குறித்து விவாதி

5.12. கூடுதல் வாசிப்புகள்

Subramania N. A History of Tamil Nadu up to 1336

Rajayyan K. History of Tamil Nadu

பிள்ளை கே.கே. தென்னிந்திய வரலாறு

Nilakanda Sastri K.N. A History of South India

Nilakanda Sastri K.N. Cholas

Sathianathair R. History of India

வெங்கடேசன் க. முற்கால தமிழ்நாட்டு வரலாறு

செல்வம் வே. தி. தமிழக: வரலாறும் பண்பாடும்

இராமசாமி அ. தமிழ் நாட்டு வரலாறு

Upinder Singh. A History of Ancient and Early Medieval India: From the Stone Age to the 12th Century

அலகு – 6

பிற்காலப் பாண்டிய பேரரசு

பாட அமைப்பு

6.1. முன்னுரை

6.2. நோக்கங்கள்

6.3. முதலாம் சுந்தரபாண்டியன்

6.3.1. ஒய்சாளர் எதிர்ப்பு

6.4. இரண்டாம் சுந்தரபாண்டியன்

6.5. முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்

6.6. மாறவர்மன் குலசேகர பாண்டியன், 1268-1310

6.7. பாண்டியர் கால வாழ்வியல்

6.7.1. பொருளாதார நிலை

6.7.2. சமுதாய நிலை

6.7.3. வீழ்ச்சிக்கான காரணங்கள்

6.8. பயணிகளின் பார்வையில் பாண்டிய நாடு

6.9. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

6.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

6.11. கூடுதல் வாசிப்புகள்

குறிப்பு

6.1. முன்னுரை

ஒரு நாடு மற்றொரு நாட்டை அடிமைப்படுத்தலாம் ஆனால் நீண்ட காலம் ஆட்சி செய்ய முடியாது. மூன்றாம் குலோத்துங்க சோழன் பாண்டியப் பேரரசை சோழ ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தார். மதுரையை அழித்துப் பாண்டியரை வீழ்த்தினார் எனினும் அவரால் பாண்டியர் மீண்டும் உயிர்ப்பித்து எழுவதைத் தவிர்க்கவோ, தடுக்கவோ இயலவில்லை. மீண்டும் குலசேகரப் பாண்டியரை மதுரை மன்னராக்குவதற்கான சூழ்நிலைக் கட்டாயத்துக்குள்ளானார். திரும்பவும் மதுரை நாட்டுக்கு மன்னரான அவர் பாண்டியரின் விடுதலை வேட்கைக்கான வடிகாலாக இருந்தார். அவரது தம்பி சுந்தரபாண்டியன் பாண்டிய நாட்டு விடுதலைக்கு வழிவகுத்தார். பாண்டியர் மீட்சிக்குக் காரணமாக இருந்த இவர் இரண்டாவது பாண்டியப் பேரரசுக்குத் தலைமை தாங்கினார். பாண்டியரது பாரம்பரியப் பெருமை மீட்கப்பட்டது. பாண்டியப் பேரரசின் அதிகாரமும், ஆட்சியும், ஆதிக்கமும் ஆந்திராவின் கோதாவரிக்கரை வரை சென்றது. இலங்கையின் வடபகுதியிலும் பாண்டியர் கொடி பறந்தது. 12 ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரைத் தமிழ்நாட்டில் பாண்டியரின் இரண்டாம் பேரரசு நீடித்தது.

6.2. நோக்கங்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர் கீழ் கண்டவற்றை அறிய முடியும்

- பிற்காலப் பாண்டிய பேரரசின் எழுச்சி பற்றி விவரிகிறது.
- முதலாம் சுந்தர பாண்டியன் மற்றும் அவரைத்தொடர்ந்து ஆட்சி செய்த மன்னர்களின் சாதனைகள் பற்றி விவாதிகிறது.
- பிற்கால பாண்டிய அரசுகளின் கலை மற்றும் கட்டிடக் கலை வளர்ச்சி பற்றி விளக்குகிறது.
- பாண்டியர்களின் வீழ்ச்சி பற்றி விளக்குகிறது.

குறிப்பு

6.3. முதலாம் சுந்தரபாண்டியன்

சடையவர்மன் குலசேகர பாண்டியனின் தம்பி சுந்தரபாண்டியன். குலசேகா பாண்டியன் மீண்டும் மன்னரானபின் பாண்டியநாடு புத்துயிர் பெற்று இரண்டாவது பேரரசாக உயிர்த்தெழுவதற்கான புதுப்பாதையை வகுத்துக் கொடுத்தார். அப்பாதையில் பயணித்த சுந்தரபாண்டியன் பாண்டிய ஏகாதிபத்திய சகாப்தத்தைத் துவக்கி வைத்தார். இம்மன்னர் ஏற்றிவைத்த பாண்டிய விடுதலை விளக்கு பதிமூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை சுடர்விட்டு எரிந்தது.

பகைப்போர்

தன்னினம் பகைத்த பண்பு தமிழரின் குருதியோடு கலந்துவிட்ட குணமாகும் பழிவாங்கும் போக்கு இவர்களது பரம்பரை சொத்து. பாண்டியப் பேரரசை அழித்த சோழனை அழிக்கத் தீர்மானித்தார் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன். "கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல்" என்பது அவரது கொள்கையாக இருந்தது. எனவே அவர் சோழ நாட்டை மூர்க்கத்தனமாகத் தாக்க முடிவெடுத்தார். அவரது ஆத்திரத்துக்கு இலக்கானவர் மதுரையை நிர்மூலமாக்கிய மூன்றாவது குலோத்துங்க சோழனுக்குப் பின் மன்னரான மூன்றாம் இராஜராஜன் ஆவார். இச்சோழ மன்னர் திறமையின்மைக்கும், அறிவீனத்துக்கும், அரசியல் இயலாமைக்கும் பெயர் போனவர். திறமையான மன்னரின் திறமையற்ற வாரிசு இவர்.

பாண்டியப் பேரரசுக்கு புத்துயிரூட்டிய சுந்தரபாண்டியன் மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக்கால இறுதியில் கண்டை மற்றும் மணப்பாறைப் போர்களில் சோழர் படையைத் தோற்கடித்தார். திருச்சி, ஸ்ரீரங்கம், தஞ்சை பாண்டியர் வசமாயின. எனினும் ஒய்சாளரின் ஆதரவு சோழர் பக்கம் இருந்தமையால் சுந்தரபாண்டியன் தனது வெற்றியை முன்கொண்டு செல்வது எளிதாயில்லை. எனினும் பழிவாங்கும் போக்கால் உந்தப்பட்ட சுந்தர பாண்டியன் மூன்றாம் இராஜராஜனைப் புறங்கண்டார். தஞ்சையும், உறையூரும் தீக்கிரையாக்கப்பட்டன. சுந்தர பாண்டியன் வெற்றிப் பெருமிதப்போடு பழையாறையில் வீராபிஷேகம் செய்து கொண்டார். மதுரை திரும்பும் வழியில் தன்னிடம் சரணடைந்த மூன்றாம் இராஜராஜனை மீண்டும் சோழ சிம்மாசனத்தில் அமரச் செய்தார். சோழ நாடு பாண்டியப் பேரரசின் மேலாதிக்கத்தின்கீழ் கொண்டு வரப்பட்டது.

பாண்டிய மன்னரிடம் தோற்று, சுயாட்சி இழந்து, பாண்டிய மேலாதிக்கத்தின்கீழ் இருக்க விரும்பாத மூன்றாம் இராஜராஜன் ஒய்சாளரின் ஆதரவை எதிர்பார்த்து பாண்டியருக்குத் திறை செலுத்துவதை நிறுத்திவிட்டார். இதை நன்றி கொன்ற செயலாகக் கருதிக் கடுங்கோபம் கொண்ட சுந்தரபாண்டியன் மீண்டும் சோழ நாட்டின் மீது படையெடுத்தார் (1231). பாண்டியப் படையை எதிர்க்கொள்ள முடியாத மூன்றாம் இராஜராஜன் போர்க்களத்திலிருந்து தப்பிச் சென்றார்.

தப்பிச் சென்ற சோழ மன்னன் குறுநில மன்னன் கோப்பெருஞ்சிங்கனால் கைது செய்யப்பட்டு சேந்தமங்கலத்தில் சிறை வைக்கப்பட்டார். வெற்றிவாகை சூடிய மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோணாடு கொண்டருளிய, சோணாடு வழங்கருளிய ஆகிய விருதுப் பெயர்களைப் பெற்றார்.

குறிப்பு

6.3.1. ஒய்சாளர் எதிர்ப்பு

சோழர்களை மீண்டும் தலைதூக்க விடாமல் செய்த சுந்தரபாண்டியன் சோழர்களுக்குத் துணைபோன ஒய்சாளர்களையும் தமிழ்நாட்டிலிருந்து ஒழித்துக்கட்ட முடிவு செய்தார். ஏனெனில் ஒய்சாளர்கள் சோழர்களுக்கு உதவி செய்ததோடு திருச்சி, ஸ்ரீரங்கம் பகுதிகளில் கால் பதித்தனர். சரிவுப் பாதையில் சென்று கொண்டிருந்த சோழர்களைக் கேடயமாகப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் தமிழ் நாட்டில் ஆதிக்கம் செலுத்துவதற்கான ஆபத்து ஏற்பட்டது. எனவே, ஒய்சாளரின் ஆதிக்கச் செடியை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட முடிவு செய்தார் சுந்தரபாண்டியன். சாளுக்கியரைத் தலையெடுக்க விடாமல் செய்து ராணுவ பலத்தால் உருவாக்கப்பட்ட வலிமைமிக்க ஒய்சாளப் பேரரசை எதிர்ப்பது குன்று முட்டிய குருவிக்கதையாகும். எனவே, சுந்தரபாண்டியன் காடவரையர் கோமான் கோப்பெருஞ்சிங்கனின் நட்பையும் ஆதரவையும் பெற்றார். பாண்டியர்-காடவரையர் கூட்டுப் படை மூன்றாம் இராஜராஜனை தெள்ளாறு போர்க்களத்தில் தோற்கடித்தது (1231). மூன்றாம் இராஜராஜன் தோற்கடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இவ்வெற்றிக்கு முக்கியக் காரணமாக இருந்தது கோப்பெருஞ்சிங்கன் சுந்தரபாண்டியனுக்குக் காலத்தே செய்த பேருதவியாகும். ஆனால் இவ்வெற்றி நீடிக்கவில்லை. ஒய்சாளப் பேரரசன் இரண்டாம் நரசிம்மன் சோழ மன்னன் மூன்றாம் இராஜராஜனை விடுவிப்பதற்காக அப்பண்ணா, காசியப்பா ஆகிய இரு தளபதிகளை அனுப்பினார். இவர்கள் தலைமையில் வந்த ஒய்சாளப்படை காடவர் தலைவன் கோப்பெருஞ்சிங்கனை எளிதில் தோற்கடித்தது. மூன்றாம் இராஜராஜன் மீண்டும் சோழ சிம்மாசனத்தில் அமர்த்தப்பட்டார். ஒய்சாளப் பேரரசர் இரண்டாம் நரசிம்மன் தலைமையில் சென்ற மற்றொரு படை சுந்தரபாண்டியனை மகேந்திர மங்கலத்தில் தோற்கடித்தது. வெற்றி பெற்ற ஒய்சாள மன்னன் பாண்டிய அரச குடும்பத்தோடு மண உறவு" கொண்டு பாண்டியர் எதிர்ப்பை முனைமழுங்கச் செய்தார். அதேசமயம் சோழப் பேரரசை பேரழிவிலிருந்து காப்பாற்றி சோழ நாட்டில் தன் ஆதிக்கத்தை நிலை நாட்டினார். இவற்றின் விளைவாகத் தமிழ் நாட்டில் ஒய்சாளர் ஆதிக்கம் சிறிது காலம் புலித்தலைக் கொடி கட்டிப் பறந்தது.

ஒய்சாள அரச குடும்பத்துடன் மண உறவு கொண்டு பாண்டிய-ஒய்சாள எதிர்ப்பைத் தணித்த முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் மக்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தார். கொங்கு நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியைத் தீர்த்து வைத்து அந்நாட்டின் ஒரு பகுதியை பாண்டிய நாட்டுடன் இணைத்தார். சுந்தர பாண்டியன் அரசியல்

குறிப்பு

நல்லுறவு காரணமாகப் பலரை மணந்து கொண்டாலும், அவரது பட்டத்தரசியாகத் திகழ்ந்தவர் உலகமுழுவதுடையாள் ஆகும். கலியுகராமன், அதிசய பாண்டித் தேவன், சோணாடு கொண்டான், சோணாடு கொண்டருளியவன் ஆகியவை சுந்தரபாண்டியனின் விருதுப் பெயர்களாகும். சோழப் பேரரசின் மேலாதிக்கத்தின் கீழ் இருந்த பாண்டிய அரசைப் பேரரசாக்கியதன் மூலம் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் பிற்கால பாண்டிய வரலாற்றில் பெருமைக்குரிய இடத்தைப் பிடித்துள்ளார்.

6.4. இரண்டாம் சுந்தரபாண்டியன்

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்குப் பின் மதுரை மன்னரான இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழர் பகையை எதிர்க்கொள்ள வேண்டியதாயிற்று இப்பாண்டிய மன்னரது சமகாலச் சோழ மன்னர் மூன்றாம் இராஜேந்திரன். விரைவாக வீழ்ந்து கொண்டிருந்த சோழப் பேரரசைக் காப்பாற்றிய இச்சோழ மன்னர் திறமைக்கும். தீரத்துக்கும் தீர்க்கமான அரசியல் விவேகத்துக்கும் பெயர் பெற்றவர். மூன்றாம் இராஜேந்திர சோழன் நெல்லூர்த் தெலுங்கு சோழர்களின் ஆதரவோடு இரண்டாம் சுந்தரபாண்டியனைத் தோற்கடித்தார். இந்த இக்கட்டான நெருக்கடி நேரத்தில் ஒய்சாள மன்னன் வீரசோமேஸ்வரன் பாண்டியர் பக்கம் சேர்ந்து மீண்டும் இரண்டாம் சுந்தரபாண்டியனை மதுரை மன்னராக நீடிக்க உதவினார். அந்த காலகட்டத்தில்தான் பாண்டிய நாடு ஒய்சாளர் தயவில் இருந்தது.

6.5. முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்

இரண்டாம் சுந்தரபாண்டியனுக்குப் பின் அரசுப் பொறுப்பேற்ற முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் பேரரசுப் பெருக்கத்தில் பேரார்வம் கொண்டார். விரிவாக்கவாதியான அவர் தமிழ் நாட்டில் இருந்த பல்வேறு அரசுகளை வென்று தமிழ் நாடு முழுவதையும் பாண்டியர் ஆதிக்கக் குடையின் கீழ்க் கொண்டுவர விரும்பினார். இந்த விருப்பத்தை நிறைவேற்ற அவர் பல போர்களை நிகழ்த்த வேண்டியதாயிற்று.

சேரரைத் தோற்கடித்தல்

தமிழ்நாடு முழுவதையும் பாண்டியர் ஆட்சியின் கீழ்க் கொண்டுவர வேண்டும் என்ற இலட்சியக் கனவோடு களமிறங்கினார் சுந்தரபாண்டியன். இவரது பேரரசுப் பார்வை முதலில் அண்டை நாடான சேர நாட்டின் மீது விழுந்தது. சேர நாட்டின் மீது படையெடுத்துச் சென்று சேர மன்னன் உதயமார்த்தாண்டனைத் தோற்கடித்தார். திருவாங்கூர் மன்னன் போர்க்களத்தில் உயிரிழந்தார். சேரநாடு பாண்டியர் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டது.

குறிப்பு

ஒய்சாளரை வெற்றி கொள்ளல்

சேர நாட்டைப் பணியவைத்த சடையவர்மன் சுந்தரபாண்டியன் தமிழ் நாட்டில் நிலைகொண்டிருந்த ஒய்சாளரை உடலில் குத்திய முள்ளாகக் கருதினார். முள்ளை எடுக்கும் முயற்சியில் முனைப்புடன் இறங்கினார். காவேரிக் கரையில் இருந்த ஒய்சாளர் படை தோற்கடிக்கப்பட்டது. கண்ணனூர்க் கோட்டை கைப்பற்றப்பட்டது. இப்படையெடுப்பின் போது ஒய்சாளர் தளபதிகள் கொல்லப்பட்டனர். ஏராளமான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. யானைகள், குதிரைகள் கவர்ந்து வரப்பட்டன. இத்தோல்விக்குப் பின் தமிழ் நாட்டில் ஒய்சாளர் ஆதிக்கத்தைப் புதுப்பிப்பதற்கு சோமேஸ்வரன் மேற்கொண்ட முயற்சியும் தோற்கடிக்கப்பட்டது. ஒய்சாள மன்னர் போர்க்களத்திலேயே கொல்லப்பட்டார். இதன் விளைவாக ஒய்சாளரின் கன்னடப் பகுதிகள் கைப்பற்றப்பட்டு பாண்டியர் பேரரசுடன் சேர்க்கப்பட்டன. ஜடவர்மன் வீரபாண்டியன் அப்பகுதிகளுக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டார். இத்துடன் தமிழ்நாட்டில் ஒய்சாளர் ஆதிக்கம் முடிவுக்கு வந்தது. பாண்டியப் பேரரசின் பரப்பெல்லை கன்னட நாடு வரை விரிவடைந்தது.

சோழரைப் பணியவைத்தல்

ஒய்சாளரை ஒடுக்கிய முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் சோழரைப் பாண்டியர் ஆதிக்கத்துக்குப் பணிய வைக்கும் முயற்சியை மேற்கொண்டார். அப்போது விரைந்து வீழ்ந்து கொண்டிருந்த சோழப் பேரரசுக்குத் தலைமை தாங்கியவர் திறமையற்ற மூன்றாம் இராஜேந்திரன். வெற்றிப் பாதையில் விரைந்து முன்னேறிக் கொண்டிருந்த சடையவர்மன் சுந்தரபாண்டியனின் எதிர்ப்பை எதிர்க்கொள்ள முடியாத மூன்றாம் இராஜேந்திரன் வேறுவழியின்றி பாண்டியர் ஏகாதிபத்திய மேலாதிக்கத்துக்குப் பணிந்து போக இணங்கினார். இவரோடு சோழப் பேரரசு முடிவுக்கு வந்தது. சோழ நாடு பாண்டிய நாட்டின் பகுதியாயிற்று. பாண்டிய நாட்டை வெற்றி கொண்ட சோழ நாட்டை, பாண்டிய நாடு வெற்றி கொண்டது. வரலாற்றுச் சக்கரம் முழுமையாக ஒரு சுற்று சுற்றியது.

காடவரையரை அடக்கல்

முற்காலத் தமிழ்நாட்டு வரலாற்றில் காடவரையரின் பங்கு குறிப்பிடத்தக்கது. தமிழ் நாட்டில் ஆதிக்கம் செலுத்துவதற்காகப் பாண்டியர், சோழர், ஒய்சாளர் ஆகிய மூன்று வல்லரசுகளுக்கிடையே எழுந்த மும்முனைப் போட்டியில் காடவரையர் முக்கிய பங்கேற்றனர். காடவரையரின் ஈடுயிணையற்றத் தலைவராகத் திகழ்ந்த கோப்பெருங்சிங்கன் பல்லவர் மரபில் வந்தவர். இவர் சேந்தமங்கலத்தைத் தலைநகராகக் கொண்ட காடவக் குறுநில மன்னராயிருந்தார். சோழரின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்ட போதிலும் சுதந்திர வேட்கையை வளர்த்துக் கொண்டிருந்தார். கோப்பெருஞ்சிங்கன் சுந்தரபாண்டியனுடன் சேர்ந்து மூன்றாம் இராஜராஜ சோழரைத் தோற்கடித்து சிறைப்பிடித்ததை

குறிப்பு

முன்னர் குறிப்பிட்டோம். ஒய்சாளரின் குறுக்கீட்டால் கோப்பெருஞ்சிங்கன் மீண்டும் சோழர் ஆதிக்கத்தை ஏற்க வேண்டியதாயிற்று. எனினும் இக்காடவரையர் கோவேந்தன் ஒய்சாளரை திருச்சிக்கருகே பெரம்பலூரில் தோற்கடித்தார் (1252-53). காடவரையரின் எழுச்சியால் பாண்டியப் பேரரசுக்கு வரக்கூடிய அச்சுறுத்தலை அறிந்த சடையவர்மன் சுந்தரபாண்டியன் காடவர் படையைத் தோற்கடித்து, சேந்தமங்கலத்தைக் கைப்பற்றி பாண்டியப் பேரரசுக்கு கீழ்பணிய வைத்தார். காடவநாடு பாண்டிய நாட்டுக்குக் கப்பம் கட்டும் நிலைக்கு அடக்கப்பட்டது. காடவரையரின் விடுதலை வேட்கை நிறைவேறாக் கனவாயிற்று. தமிழ் நாட்டின் நெருக்கடியான நேரத்தில் கோப்பெருஞ்சிங்கன் தனது ஆளுமையையும், அதிகாரத்தையும் அந்தஸ்தையும் நிலைநாட்டியதாகப் புகழாரம் சூட்டினான்.

தெலுங்கு சோழரைத் தோற்கடித்தல்

காடவ மன்னன் கோப்பெருஞ்சிங்கனை அடக்கிய சுந்தரபாண்டியன் காஞ்சியை தெலுங்கு சோழர் விஜயகண்ட கோபனின் பிடியிலிருந்து விடுவிக்கத் தீர்மானித்தார். அத்தீர்மானத்தின்படி பாண்டியர் படை ஆந்திரா பகுதிக்குள் சென்று தெலுங்கு சோழரைத் தோற்கடித்து, காஞ்சி மீட்கப்பட்டது. இவ்வெற்றியைக் கொண்டாடும் பொருட்டு சுந்தரபாண்டியன் வீராபிஷேகம் செய்து கொண்டார். இப்படையெடுப்பின் போது காகதிய மன்னர் இரண்டாம் கணபதியும் தோற்கடிக்கப்பட்டார். காஞ்சி, நெல்லூர், விஜயவாடா பகுதிகள் பாண்டியப் பேரரசுடன் இணைக்கப்பட்டன. இப்பேரரசு கிருஷ்ணா நதியின் தென்பகுதி வரையிலான பகுதிகள் முழுவதும் பாண்டியர் பேராதிக்கத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டன.

இலங்கைப் படையெடுப்பு

இலங்கையில் ஏற்பட்ட வாரிசுரிமைப் போட்டியை வாய்ப்பாகக் கொண்டு சுந்தர பாண்டியன் இலங்கை மீது படையெடுத்துச் சென்றார். வாரிசுரிமை கோரி சிங்கள ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட சந்ரபாகு சுந்தரபாண்டியன் சுமத்திய நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு பாண்டிய நாட்டுக்குத் தவறாமல் கப்பம் கட்ட சம்மதித்ததால் சந்ரபாகு ஆட்சி பீடத்தில் நீடிக்க அனுமதிக்கப்பட்டார். பாண்டியர் ஆதிக்கத்தைத் தமிழ்நாடு பட்டுமன்றி இலங்கையும் ஏற்றுக் கொண்டது.

சாதனைகள்

முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஏகாதிபத்திய விரிவாக்கவாதி. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் பாண்டிய ஏகாதிபத்திய சகாப்தத்தைத் துவக்கி வைத்தவர் என்றால் இப்பாண்டிய மன்னர் அந்த சகாப்தத்தை உறுதி செய்து நிலைப்படுத்தினார். இவரது படையெடுப்புகள் பாண்டியப் பேரரசின் எல்லையைத் தெற்கே கன்னியாகுமரி வரையிலும், வடக்கே நெல்லூர்-கடப்பை வரையிலும் விரிவுபடுத்தின. இவரது ஆட்சிக் காலத்தில் பாண்டியப் பேரரசு

குறிப்பு

பரப்பெல்லையிலும், ஆட்சி முறைச் சாதனைகளிலும், அரசியல் செல்வாக்கிலும் புதிய உச்சத்தைத் தொட்டது. அதேசமயம் ஆதிக்க விரிவாக்கத்தால் வெளிப்புற விரோதிகளின் எதிர்ப்பும் வளர்ந்ததேயன்றி குறையவில்லை. சடையவர்மன் சுந்தரபாண்டியன் போர்களால் கவர்ந்துவரப்பட்ட பெருஞ் செல்வத்தைக் கோயில் திருப்பணிகளில் தாராளமாகச் செலவிட்டார். சிதம்பரம் சிவன் கோயில் மற்றும் ஸ்ரீரங்கம் திருமால் கோயில் கூரைகள் தங்கத்தால் வேயப்பட்டன. சேர, சோழ, பல்லவ, பாண்டியப் பேரரசுப் பெயர்கள் பொறிக்கப்பட்ட ஸ்ரீரங்கம் கோயிலின் நுழைவு வாவில் கட்டப்பட்டது. அரங்கலூர் கோயில் இப்பாண்டிய மன்னரால் எழுப்பப்பட்டதாகும். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் கிழக்குக் கோபுரம் புதிதாகக் கட்டப்பட்டது. சோனேஸ்வரம் கோயில் புதுப்பிக்கப்பட்டது. திருச்சி, தஞ்சை, காஞ்சி கோயில்களுக்கு நிலக்கொடைகள் வழங்கப்பட்டன. கோயில் சார்ந்த பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதால், பொதுநலப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டது. பிறப் பேரரசர்களைப் போன்றே முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனும் கோயில் பொன்வேய்ந்த பெருமாள், மகாராஜாதிராஜா, காஞ்சி கொண்டான், எம்மண்டலமும் கொண்டருளிய, மரகதப் பிருதிவிபிரித், எல்லாத் தலையானான் ஆகிய விருதுப் பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தார்.

6.6. மாறவர்மன் குலசேகர பாண்டியன்

பாண்டிய நாட்டை நாற்பதாண்டுகளுக்கு மேல் ஆட்சி செய்த கடைசிப் பேரரசர் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் மகன் முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் ஆவார். தந்தை விட்டுச் சென்ற பணியை நிறைவு செய்த பெருமை இவருக்கு உண்டு. திருச்சியில் நிலை கொண்டிருந்த ஒய்சாளரைப் போருக்கு இழுத்து வீரசோமேஸ்வரனைப் போர்க்களத்தில் கொன்று திருச்சியை ஒய்சாளர் பிடியினின்றும் விடுவித்தார். தமிழ்நாட்டில் ஒய்சாளர் ஆதிக்கம் ஓய்ந்தது. திருச்சியை ஒய்சாளர் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்ததோடு மட்டுமன்றி பாண்டியர் படை கன்னட நாட்டுக்குள் நுழைந்து கொங்கனக் கடற்கரைப் பகுதி வரை கைப்பற்றியது. கைப்பற்றப்பட்ட கன்னடப் பகுதிக்கு பாண்டிய மன்னனின் மகன் வீரபாண்டியன் ஆட்சியராக நியமிக்கப்பட்டார். அழிவுப் பாதையில் விரைந்து சென்று கொண்டிருந்த சோழப் பேரரசுக்குத் தலைமை தாங்கிய மூன்றாம் இராஜேந்திரன் ஒய்சாளரின் ஆதரவை எதிர்பார்த்து பாண்டியர் ஆதிக்கத்திலிருந்து விடுபட முயற்சித்தார். திருச்சியிலிருந்து ஒய்சாளரை விரட்டிய பாண்டிய மன்னர் தஞ்சையிலும், கும்பகோணத்திலும் தனது நிலையைப் பலப்படுத்திக் கொண்டு கங்கைகொண்ட சோழபுரத்தைக் குறிவைத்தார். ஒய்சாளரின் உதவியை எதிர்பார்த்துப் பாண்டியனுக்கு எதிராகத் துவக்கிய போரில் மூன்றாம் இராஜேந்திரன் தோற்கடிக்கப்பட்டார். ஒய்சாளரால் கைவிடப்பட்ட சோழ மன்னன் தனிமைப்படுத்தப் பட்டார். போர்க்களத்திலிருந்து தப்பிச் சென்ற

மூன்றாம் இராஜேந்திரனோடு சோழப் பேரரசு முடிவுக்கு வந்தது பாண்டியப் பேரரசின் பகுதியாயிற்று.

குறிப்பு

தமிழ்நாட்டைத் தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்த முதலாம் மாறவர்மன் குலசேகரன் இலங்கையை முழுதுமாகப் பாண்டியப் பேரரசின்கீழ்க் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டார். இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட பாண்டிய மன்னன் தனது தளபதி ஆரிய சக்கரவர்த்தியின் கீழ் ஒரு வலிமைமிக்க படையை அனுப்பினார் (1284). இலங்கை மன்னன் மூன்றாம் பராக்கிரமபாகு எளிதில் தோற்கடிக்கப்பட்டார். இலங்கையிலிருந்து கைப்பற்றப்பட்டு மதுரைக்குக் கொண்டுவரப்பட்ட ஏராளமான பொருட்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது புத்தரின் பல் சின்னமாகும். இலங்கை பாண்டியர் மேலாதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டது.

முதலாம் மாறவர்மன் குலசேகரன் ஆட்சிக் காலத்தில் சோழ நாடு, சேர நாடு, கொங்கு நாடு, தொண்டை நாடு, இலங்கை ஆகியவை பேரரசுப் பகுதிகளாக இருந்தன. அதாவது பாண்டியப் பேரரசுக் குடையின் கீழ் தமிழ்நாடு முழுவதும் கொண்டு வரப்பட்டது. இத்தகைய விரிவான பேரரசைக் கட்டிக்காக்க வலிமைமிக்க மைய ஆட்சியும் அரசகுல ஒற்றுமையும் இன்றியமையாதவை. மாறவர்மன் குலசேகரனுக்கு வீரமிருந்த அளவுக்கு விவேகமில்லை.

சூழ்நிலைக் கட்டாயத்தால் பாண்டிய மன்னர் இளவரசர்கள் 1) இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் 2) மாறவர்மன் விக்கிரம பாண்டியன் 3) இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியன் 4) சடையவர்மன் 5) மூன்றாம் சுந்தரபாண்டியன் ஆகிய ஐவரோடும் ஆட்சியைப் பகிர்ந்து கொண்டார். ஐந்து குதிரைகளும் வெவ்வேறு திசைகளில் இழுத்த பாண்டிய ஆட்சி ரதத்தை ஓட்டிச் சென்ற சாரதியாக இருந்தார் மாறவர்மன் குலசேகரன். இந்த அறுவர் ஆட்சியால் நடுவண் அரசு பலவீனப்பட்டுப் போயிற்று.

முதலாம் மாறவர்மன் குலசேகரனுக்கு காதல் கிழத்தியரும், காமக்கிழத்தியரும் பலர். அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளும் பலர். இவர்களுக்குள் அரசு ஆசை இருந்ததில் வியப்பில்லை. சுந்தரபாண்டியன் பட்டத்தரசியின் மகன். வீரபாண்டியன் காமக் கிழத்தியின் மகன். இவ்விருவருள் வீரபாண்டியனைப் பட்டத்து இளவரசராகப் பிரகடனப்படுத்தினார் பாண்டிய மன்னர் (1296). இச்செயல் குளவிக் கூட்டில் கைவிட்ட கதையாயிற்று. பாண்டிய நாட்டில் வாரிசுரிமைப் போராட்டம் துவங்கியது. ஏமாற்றமடைந்த சுந்தரபாண்டியன் தந்தையைக் கொன்றுவிட்டு அரியணையைக் கைப்பற்றிக் கொண்டார் (1310) வீரபாண்டியன் மதுரையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

அலாவுதீன் கில்ஜியின் வலக்கரமான மாலிக்காபூர் தமிழ்நாட்டிற்குள் படையெடுத்து வந்ததைப் பற்றி இவ்விரு சகோதரர்களும் கவலைப்படவில்லை. மதுரையிலிருந்து வெளியேறிய

குறிப்பு

வீரபாண்டியன் வாரிசுரிமைப் போட்டியைப் போராக மாற்றி, சுந்தரபாண்டியனைத் தோற்கடித்து ஆட்சியைப் பிடித்துக் கொண்டார். ஆட்சியை இழந்த சுந்தரபாண்டியன் மாலிக்காபூரின் உதவியை நாடினார். இந்த அழைப்பு மாலிக்காபூர் போன்ற முகலாய ஒட்டகம் பாண்டியப் பேரரசு என்ற கூடாரத்துக்குள் நுழைவதற்கான பொய்ப்பை வழங்கியது. பாண்டிய சகோதரர்களுக்கிடையேயான உட்பகை தமிழ்நாட்டில் முகலாயர் ஆதிக்கம் ஏற்படுவதற்கான நுழைவாயிலைத் திறந்துவிட்டது.

6.7. பாண்டியர் கால வாழ்வியல்

அரசியல் நிலை

பாண்டிய நாட்டிலும் முடியாட்சி முறையே பின்பற்றப்பட்டது. தந்தைக்குப்பின் மூத்த மகனே வாரிசு என்பது மரபு. மூத்த மகன் இருக்கும் போது இளையவனை வாரிசாக நியமிப்பது விதிவிலக்காகும். அரசனின் குடும்பத்தைச் சேர்ந்தோர், குறிப்பாக இளவரசர்கள், நாட்டின் பல பகுதிகளில் ஆளுநராகவோ, ஆட்சித் தலைவராகவோ, படைத் தளபதியாகவோ அல்லது குறுநில பொறுப்பு வகிப்பவராகவோ நியமிக்கப்பட்டனர். பாண்டிய மன்னர்கள் பகட்டுக்கும் படாடோபத்துக்கும் புகழ் பெற்றவர்கள். இவர்கள் பொன்னும், மணியும், முத்தும் மின்னும் விலை மதிப்புமிக்க ஆபரணங்களை அணிந்து கொண்டனர். அரசனின் அரசவையில் பிரபுக்களும், புலவர்களும், வீரர்களும், கலைஞர்களும் இடம் பெற்றிருந்தனர். அந்தப்புரம் காதல் கிழத்தியராலும், காமக் கிழத்தியராலும் நிறைந்திருந்தது. அரண்மனை ஆலோசனை மண்டபமாக மட்டுமன்றி பாவகை நிகழ்ச்சிகள் நடைபெறவும், விழாக்கள் கொண்டாடவும் பயன்பட்டது. அரண்மனை கலைக்காட்சிக் கூடமாகவும் திகழ்ந்தது. பலத்த பாதுகாப்புக்கிடையே மன்னன் அரண்மனையில் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தான். பட்டப் பெயர்களைச் சூட்டிக் கொண்டனர்.

மன்னரவை

பாண்டியர் காலத்தில் அமைச்சரவை என்ற அமைப்பு இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அமைச்சர்கள் இருந்தனர். அவர்கள் அரசரின் ஆலோசகர்களாக செயல்பட்டனர். உத்தம மந்திரிதான் முதலமைச்சர். இவரை ஏகமந்திரி என்றும் அறியப்பட்டார். சேனாபதி படைத் தலைவர் அல்லது தளபதி. அமைச்சர்கள் தவிர பல அலுவலர்கள் இருந்தனர். நிலம் அளப்போர், வரி வசூலிப்போர், வருவாய்த் துறையினர், அரசர் ஆணைகளைப் பதிவு செய்வோர், தர்மோபதசம் செய்வோர், ஆபத்துதவிகள் போன்றோர் அடங்கிய அதிகாரவர்க்கம் இருந்தது. இவர்கள் முறையாக நடந்து கொண்ட போது மக்களால் மதிக்கப்பட்டனர் நெறிதவறி செயல்பட்ட போது மக்களால் வெறுக்கப்பட்டனர்.

குறிப்பு

மத்திய அரசாங்கப் பகுதிகள்

நடுவண் அரசின் நிர்வாக வசதிக்காகப் பாண்டிய நாடு பல ஆட்சிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது இவை இன்றைய மாகாணங்களைப் போன்றவை துவக்கத்தில் பாண்டிய நாடு தென் மாவட்டங்களான-மதுரை, ராமநாதபுரம் திருநெல்வேலி, கன்னியாகுமரி-உள்ளடக்கியதாக இருந்தது. பின்னர் கொல்லம் நெல்லூர் ஆகிய நிலப்பகுதிகளைக் கொண்டு விரிவடைந்தது. தமிழ்நாடு மற்றும் கேரளப் பகுதிகள் மாபார் (ஆயடியச) அல்லது இராஜராஜ வளநாடு என்று அழைக்கப்பட்டது." பாண்டிய பெருநாடு பல மண்டலங்களாகவும், ஒவ்வொரு மண்டலமும் பல நாடுகளாகவும், கூற்றங்களாகவும், கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது.

கிராமக் குடியாட்சி

பாண்டியர்கால உள்ளாட்சி முறை பல்லவர் கால, சோழர் கால கிராமக் குடியாட்சி அமைப்பு முறையைப் பின்பற்றியதாகவே இருந்தது. தமிழ்நாட்டு மரபுவழி வந்த உள்ளாட்சிப் பொதுமன்றம் பல வாரியங்களைக் கொண்ட மகாசபையாகும். ஊராட்சி மன்றங்கள் ஊர் விவகாரங்களைக் கவனித்துக் கொண்டது. இம்மன்றங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவை. வாரியங்களின் உறுப்பினர்களும் மக்களால் தேர்வு செய்யப்பட்டனர். சொத்து, கல்வி, ஒழுக்கம் ஆகியவை வேட்பாளர்களின் தகுதிகளாகக் கருதப்பட்டன. உறுப்பினர்கள் குடிஓலை முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மன்ற நடவடிக்கைகள் ஊர்ப் பொது இடங்களில் நடைபெற்றன. உள்ளாட்சி நிறுவனங்கள் சுதந்திரமாகச் செயல்பட்டன. இவை அதிகாரப் பரவல் முறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

பாண்டியர் படை

பேரரசை விரிவுபடுத்தவும், கட்டுப்படுத்தவும், பாதுகாக்கவும் பெரும்படை இன்றியமையாதது. பாண்டியர் ராணுவம் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை காலாட்படை ஆகிய நான்கு பெரும் அங்கங்களைக் கொண்டிருந்தது. இவையன்றி கோட்டைக் காவல் படைகள் இருந்தன. நாட்டின் முக்கிய இடங்களில் இப்படைகள் நிறுத்தப்பட்டிருந்தன. பெரும்படையார், வலங்கை மகாசேனையர் ஆகியோர் படைப் பிரிவினருள் சிலர். மறவர், கள்வர் போன்ற வகுப்பார் தங்களைப் போர்த் தொழிலுக்கு அர்ப்பணித்துக் கொண்டனர்.

6.7.1. பொருளாதார நிலை

விவசாயம்

பேரரசுப் பராமரிப்புக்கும் பெருக்கத்துக்கும் பொருளே ஆதாரமாகும். நாட்டின் பொருளாதாரம் விவசாயத்தையும், தொழிலையும் பொறுத்துள்ளது. பிற நாடுகளைப் போன்றே பாண்டிய நாடும் விவசாய

குறிப்பு

நாடாகவே இருந்தது. வைகையும், தாமிரபரணியும் விவசாய நீர்வள நரம்பு மண்டலங்களாக இருந்தன. எனினும், பருவமழையே வேளாண்மை வளத்தைத் தீர்மானித்தது. எனவே புன்செய் பயிர்கள் பெரிதும் மழையையே நம்பியிருந்தன. எனவே, நீர்வளத்தைப் பெருக்குவதில் பாண்டிய மன்னர்கள் சிறப்புக் கவனம் செலுத்தினர். ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் ஆகியவற்றை செப்பனிடுவதற்கும், பெருக்குவதற்கும், பாதுகாப்பதற்கும், பாசன நீரை விவசாயத்துக்கு முறையாகப் பயன்படுத்துவதற்குமான தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன் இவற்றுக்கென அதிகாரிகளும், அலுவலர்களும் நியமிக்கப்பட்டனர். கொள்ளடத்தில் வெள்ளத்தடுப்புக்காகக் கரைகளை உயர்த்தி வலுப்படுத்தப்பட்டன. பாசன வசதிகள் பெருகப் பெருக கரம்பு நிலங்களும் விளை நிலங்களாக மாற்றப்பட்டன. நில உடமையும், உரிமையும் நில உடமையும் உரிமையும் தான் விவசாயிகளின் உண்மையான பொருளாதார வாழ்க்கையையும், பாதுகாப்பையும் தீர்மானித்தன. நில உடைமை நான்கு வகைப்பட்டது. 1) பாரம்பரியமாக அனுபவித்து வந்த பெருநிலக்கிழார்களுக்குச் சொந்தமான நிலம். இது வேளாண் வகை என்று அழைக்கப்பட்டது. இந்த நிலத்தை நிலச் சொந்தக்காரர்கள் நேரடியாகவோ அல்லது உழவர்களுக்குக் குத்தகைக்கு விட்டோ சாகுபடி செய்தனர். 2) பிராமணர்களுக்கு இறையிலியாகக் கொடுக்கப்பட்ட செழிப்பான தேவதான, பிரமதான நிலங்கள். இவையாவும் வரிவிலக்கு அளிக்கப்பட்ட நிலங்களாகும். 3) கோயில்களுக்கும், மடங்களுக்கும் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள். இவையாவும் வரிவிலக்கு பெற்ற நிலங்களாகும். 4) படைத் தளபதிகள், உயர் அரசாங்க அதிகாரிகள் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட நிலங்கள். இவர்களும் நிலவரி செலுத்த வேண்டியதில்லை. இவையன்றி அரண்மனை மற்றும் அரசு செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்கள் ஏராளம். சுருங்கக்கூறின், விளைநிலங்கள்யாவும் சலுகை வகுப்பார் வசம் இருந்தன. உழுபவனுக்கே நிலம் என்ற எண்ணம் எழாத காலம் அது.

தொழில்கள்

விவசாயத்தில் ஈடுபட்டோர் தவிர எஞ்சியிருந்தோர் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். பாண்டிய நாட்டின் பிரதான தொழில் முத்துக்குளித்தல். முத்துக் குளித்தலும், சங்கெடுத்தலும் மக்களின் ஏகபோக தொழிலாக இருந்தது. காயல்பட்டினம் இத்தொழில் மையமாகத் திகழ்ந்தது. முத்துக் குளித்தலுக்கு அடுத்தபடியாக மீன்பிடித்தல் முக்கியத் தொழிலாக இருந்தது. கடலோரங்களில் உப்பளத் தொழில் சிறப்புற்றிருந்தது. பாண்டிய நாடு நெசவுத் தொழிலுக்குப் பிரசித்தி பெற்றது. இதேபோன்று செங்காலைத் தொழில் முக்கிய தொழிலாகும். இவையன்றி, தச்சு வேலை, உலோக வேலை, வெல்ல உற்பத்தி, மண்பாண்டம் தயாரித்தல், கட்டட வேலை போன்ற தொழில்களும் முறைசாராத் தொழில்களாக இருந்தன.

குறிப்பு

நகரங்கள் உள்நாட்டு வர்த்தக மையங்களாகத் திகழ்ந்தன. கிராமச் சந்தைகளிலும், நகர்ப்புற அங்காடிகளிலும் பண்டமாற்று வர்த்தகம் பிரபலமாக இருந்தது. பருத்தி மற்றும் பட்டாடைகள், நவமணிகள், ரத்தினக் கற்கள், சந்தனம், சவ்வாது போன்ற நறுமணப் பொருட்கள், ஏலம், இலவங்கம், மிளகு, இஞ்சி போன்ற கறிவகைப் பொருட்கள் மருந்து மூலிகைகள் போன்றவை முக்கிய வர்த்தகப் பொருட்களாகும். இவற்றுக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பிருந்தது. உள்நாட்டு வர்த்தகத்தைக் கவனித்துக் கொள்வதற்காக மணிகிராமம், அஞ்சுவண்ணத்தார், குதிரை வணிகர்கள், நானா தேசிகள் போன்ற தொழில் அமைப்புகள் செயல்பட்டன.

பாண்டிய நாடு உள்நாட்டு வர்த்தகத்தைப் போன்றே வெளிநாட்டு வாணிபத்திலும் புகழ் பெற்றிருந்தது. காயல்பட்டினம் ஏற்றுமதி இறக்குமதி மையமாகத் திகழ்ந்தது. இத்துறைமுகத்தில் உள்நாட்டுக் கப்பல்களும், வெளிநாட்டு நாவாய்களும் சுறுசுறுப்புடன் செயல்பட்டன. குறிப்பாக முத்து, துணி வகைகள், மருந்துப் பொருட்கள் ஆகியவற்றுக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு இருந்தது. பாண்டிய நாட்டு வணிகர்கள் சீனா மற்றும் அரேபிய நாடுகளுடன் நெருங்கிய வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர்.

வரி வருவாய்

பாண்டிய அரசு வரி வருவாயைப் பெரிதும் நம்பியிருந்தது. வரிகளில் முக்கியமானது நிலவரியாகும். இவ்வரியைக் கணக்கிட்டு வசூலிப்பதற்காக நிலங்கள் முறையாக அளக்கப்பட்டு, விளைச்சலுக்கேற்ப வரி விதிக்கப்பட்டது. முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் கொள்ளிடத்தில் வெள்ளத் தடுப்புக்காகக் கரைகளை உயர்த்தி வலுப்படுத்துவதற்காக அருகாமையில் வாழ்ந்த மக்களிடையே சிறப்பு வரி வசூலிக்கப்பட்டது. நிலவரி பொருளாகவோ அல்லது பணமாகவோ வசூலிக்கப்பட்டது. பாசன வரி தனியாக வசூலிக்கப்பட்டது. அச்சுவரி, கரியவரச்சி வெட்டிப்பாட்டம், பஞ்சுப்பிலி, சாந்தி விக்கிரகப் பேறு, வாசல் பேறு, இழனி நாய்ப்பேறு, தறியிறை, செக்கிறை, பாசிப்பட்டம் போன்றவை பிற தொழில் வரிகளாகும். கோயில்களைச் சேர்ந்த தேவரடியார்களிடமிருந்தும் வரி வசூலிக்கப்பட்டதாகத் தெரிகிறது. பிராமணர்களுக்கும், கோயில்களுக்கும், மடங்களுக்கும் அளிக்கப்பட்ட இறையிலி நிலங்கள் வரிவிலக்கு பெற்றன. இதனால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது.

பணப்புழக்கம்

வாணிபக் குழுக்களின் முனைப்பான செயல்பாடுகளால் பாண்டிய நாட்டில் உள்நாட்டு வர்த்தகமும், வெளிநாட்டு வாணிபமும் சிறப்புற்றிருந்தன. அனைத்து வர்த்தகம் பரிமாற்றத்திலும் தங்கமே பிரதான பரிமாற்றப் பொருளாக இருந்தது. நாணயங்கள் புழக்கத்தில்

இருந்தன. இவற்றில் எழுத்துக்களோடு இரட்டைத்தலை கீழ்மீன்கள் காணபட்டன. பலவகைக் காசுகளும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

6.7.2. சமுதாய நிலை

குறிப்பு

சாதீய சிந்தனை

பல்லவர்கள் காலத்தில் வேரூன்றிய சாதீய சமுதாயம் பாண்டியர் காலத்தில் இறுக்கமுற்றது. சாதீய சிந்தனை, சொல், செயல் ஆகியவை தமிழர்களின் மூச்சாகி விட்டன. இவர்களின் வாழ்வியலின் பிரிக்கமுடியாத பகுதியாயிற்று. பாண்டிய சமுதாயக் கூர்முனைக் கோபுர உச்சியில் பிராமணர்கள் இருந்தனர். இவர்கள் பல சலுகைகளோடும், உரிமைகளோடும் தேவதான கிராமங்களிலும், அக்கிரகாரங்களிலும் வாழ்ந்தனர். அவர்களுக்கு அடுத்தபடியாக இருந்த வளமிக்க வணிகர்கள் செழிப்புமிக்க ஆற்றுப் படுகைகளில் வாழ்ந்தனர். உயர் வகுப்பாரின் தொழில் தேவைகளைப் பூர்த்தி செய்த விவசாயிகள், விவசாயத் தொழிலாளிகள், தொழிலாளர்கள் சாதிவாரியாகப் பிரிந்து எவ்வித சலுகைகளுமின்றி பிற்பட்ட வகுப்பினராக இருந்தனர். இவர்களால் புறக்கணிக்கப் பட்டோர் தீண்டத்தகாதவர்களாக சேரிகளில் வசித்தனர். இப்பல்வேறு சாதிகளுக்குள் பிராமணர்களைத் தவிர பிற வகுப்பினர் அனைவரும் உடல் உழைப்பாளிகள் ஆவர்.

சாதி ஏற்றத்தாழ்வுகள்

சாதி ஏற்றத்தாழ்வுகள், சாதிக் கொடுமைகள், சாதீய சமத்துவம் பற்றி சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் நெஞ்சுருகப் பாடினார்களேயன்றி சாதி ஒழிப்புக்கான எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. வேதவைதீக அடிப்படையில் அமைக்கப்பட்ட சாதி அமைப்புமுறை இயல்பாக ஏற்றுக் கொண்ட பாண்டிய மன்னர்களும் பக்தி மார்க்கத்தில் சென்றார்களேயன்றி சாதிய சமத்துவம் பற்றியோ சாதி ஒழிப்பு குறித்தோ கொஞ்சமும் கவலைப்படவில்லை. இப்புறக்கணிப்பின் விளைவாக சமுதாயத்தில் பல நெருக்கடிகள் ஏற்பட்டன. இந்நெருக்கடியின் கூட்டு விளைவே வலங்கை-இடங்கை சாதி மோதல்களாகும்.

சாதி மோதல்கள்

வைதீக சனாதன தர்மம் கற்பித்த நான்கு வர்ண சாதி வேறுபாட்டின் விளைவாக தொழில் வாரியாகப் பிரிந்திருந்த மக்கள் சாதி வாரியாக வேறுபட்டனர். இந்த நான்கு வர்ண இரும்பு வளையத்துக்குள் அனுலோமர், பிரதிலோமர் என்ற இரு கலப்புப் பிரிவுகள் உருவாயின. இதன் காரணமாகப் பாண்டியர் சமுதாயம் வலங்கை சாதியினர், இடங்கை சாதியினர் என இருபெரும் பிரிவுகளாகப் பிளவுபட்டது. பிளவுபட்ட இருபிரிவினர் பல்வேறு சாதிச் சண்டைகளில் ஈடுபட்டனர். இச்சண்டைகளில் பல வன்முறைச் சாதி மோதல்களில் முடிந்தன.

குறிப்பு

தமிழ்நாட்டில் சாதி மனப்பான்மை சாசுவதமாகிவிட்டது. மண்ணின் மைந்தர்களாகவும், உடல் உழைப்பாளிகளாகவுமிருந்த பறையர், பள்ளர், சக்கிலியர் போன்ற மரபு வகுப்பினர் சமுதாயத்தின் சாபக்கேடாக நிந்திக்கப்பட்டு உயர் சாதியினரால் நெருங்கத்தகாத தீண்டத்தகாதோராக ஒதுக்கி வைக்கப்பட்டனர். சூத்திரர் என்ற முத்திரை குத்தப்பட்டு தீண்டாமைப் படுகுழியில் பிறப்புரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள மேற்கொள்ளப்பட்ட சாதிப் போராட்டமே வலங்கை-இடங்கை சாதி மோதல்களாகும்.

பெண்கள் நிலை

பொதுவாக தமிழர் சமுதாயம், பிற சமுதாயங்களைப் போன்றே ஆண் ஆதிக்க சமுதாயமாகும். பெண்களைப் புகழ்ந்து இழிவுபடுத்தும் ஆண்களின் மனநிலையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. வழக்கம்போல் அரச குடும்பப் பெண்களுக்கு ஓரளவு சமுதாய சுதந்திரம் இருந்தது. அவர்களும் கணவன் இறந்தபின் உடன்கட்டை ஏறுவதைக் கற்பாகக் கருதினர், கற்பிக்கப்பட்டனர். கோயில்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தேவரடியார்கள் பல்கலை வல்லவர்களாகவும், சமுதாய சுதந்திரம் பெற்றவர்களாகவும் இருந்தனர் வசதியோடு வாழ்ந்தனர். பிற பெண்கள் அனைவரும் வீட்டில் புறாக்களாக, போகப் பொருட்களாகவே கருதப்பட்டனர் நடத்தப்பட்டனர். பெண்களுக்குக் கல்வி உரிமை முற்றிலுமாக மறுக்கப்பட்டது. கற்புக்கும், காமத்துக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டது. இலக்கியங்களிலும், கோயில் சிற்பங்களிலும், ஓவியங்களிலும் பாலியல் குறிப்புகளும் குறிப்பேடுகளும் கோடிட்டுக் காட்டப்பட்டன. இவற்றைப் படித்து, பார்த்து மக்கள் பரவசப்பட்டனர். சுருங்கக்கூறின் பாண்டியர் காலத்தில் பெண்களின் நிலை போற்றத் தக்கதாயில்லை.

சமயங்களின் நிலை

சாதிகளைப் போன்றே சமயங்களின் நிலையும் தமிழ்நாட்டுக்குப் பொதுவானது. பல்லவர் காலத்தில் எழுந்த பக்தி இயக்கத்தின் தாக்கம் பிற்காலப் பாண்டியர் காலத்திலும் நீடித்தது. பாண்டிய மன்னர்களும் சைவர்கள் சைவத்தைப் போற்றிப் பின்பற்றியவர்கள் சோமசுந்தரப் பெருமாளைக் குலதெய்வமாகக் கொண்டவர்கள் சைவத்தை அரசாங்க சமயமாக ஆக்கியவர்கள் கோயில்களைக் கட்டி வரையாது வழங்கியவர்கள். பாண்டியா காலத்திலும் வைணவ வடகலை, தென்கலைப் பிரிவினரிடையே ஒற்றுமை ஏற்படவில்லை. திருமால் பெயரால் பிரிந்தே செயல்பட்டனர்.

துவக்க காலப் பாண்டிய நாட்டில் சமணம் கொடிகட்டிப் பறந்தது. மதுரை சமணக் கோட்டையாகத் திகழ்ந்தது. குறிப்பாக பாண்டியன் நின்றசீர் நெடுமாறன் காலத்தில் சமணம் செழிப்புற்றிருந்தது. பக்தி இயக்கப் புயலால் பாண்டிய நாட்டில் சமண, புத்த சமயங்களின் செல்வாக்கு சரிந்து வீழ்ந்தது. சமுதாயத்தின் அனைத்துத் துறைகளும்

குறிப்பு

சமயமயமாக்கப்பட்டது. சமயச் சார்பின்மை கடந்தகால சமுதாய நோக்காயிற்று. சமயச் சார்புடைமை தமிழர் பண்பாட்டின் பிரிக்கமுடியாத பகுதியாகிவிட்டது. பகுத்தறிவுக்குப் பதிலாக சமய நம்பிக்கை முன்னிடம் பிடித்தது. மனிதப் பிரச்சனைகளுக்குக் கடவுள் தீர்வுண்டு என்ற எண்ணம் மக்கள் மனதில் ஆழமாகப் பதிக்கப்பட்டது. ஆன்மீக வளர்ச்சியின் மூலம் இறையறிவையும், நிறை பேருண்மையையும் பெறமுடியும் என்ற இறையுணர்வு அல்லது மெய்யுணர்வுக் கோட்பாடு (ஆலளவஉைளஅ) செல்வாக்கு பெற்றது. இக்கோட்பாடு மக்கள் வறுமையைப் பொறுமையோடு ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தை ஏற்படுத்தியது. சுருங்கக்கூறின், வைதீக சனாதன சமயம் சித்தாந்த செயல்வடிவம் பெற்று தமிழர் பண்பாட்டில் பல மாற்றங்களைச் செய்துவிட்டது.

கலையும், கலைப்பாணியும்

பாண்டியர் கட்டடக் கலைப் பங்களிப்பு அவர்கள் பின்பற்றிய கலைப்பாணியே (Architectural Style)யாகும். பாண்டியப் பேரரசர்களின் காலத்தில் கோயிலின் மையப் பகுதியிலிருந்து கோயிலின் வெளிப்புற அமைப்புகளின் மீது அக்கறை அதிகம் செலுத்தப் பட்டது. கோயில் பிரகாரங்கள் பேரழகுபடுத்தப்பட்டன. மதிற்சுவர்கள் கண்ணைக் கவரும் கோபுரங்கள் எழுப்பப்பட்டன. கோபுரங்களில் சிலைகள் வைத்து அழகு செய்யப்பட்டன. இதேபோன்று தூணின் இதழ்களின் ஓரங்கள் சிப்பி வரிபோல் அழகு செய்யப்பட்டன. போதிகைகள் மேலே கவிழ்ந்து தொங்கும் அமைப்பாக உள்ளன. முன்னமேயே கட்டப்பட்ட கோயில்களின் மண்டபங்களும், துணைக் கோயில்களும் கட்டுவதில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

திருவானைக்காவல் உள்ள சிவன் கோயிலின் இரண்டாம் சுற்றில் காணப்படும் கோபுரம் பாண்டியர் கால கட்டிடக்கலைப் பாணிக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். சிதம்பரம் கிழக்குக் கோபுரமும், திருவானைக்காவல் சுந்தரபாண்டியன் கோபுரமும் இக்கலைப் பாணியின் முதிர்ந்த நிலையைப் பிரதிபலிக்கின்றன. இவற்றில் அலங்கார வேலைப்பாடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. பாண்டியர் படைப்புகளில் கலைச்சிறப்புமிக்க கோபுரங்களை மதுரை, சிதம்பரம், கும்பகோணம், திருவானைக்காவல், திருவண்ணாமலை, ஸ்ரீவைகுண்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் பெருங்கோயில்களில் இன்றும் காணலாம்.

பல்லவர்கள், சோழர்களைப் போன்றே பாண்டியப் பேரரசர்களும் கோயில்களைக் கட்டுவதில் பேரார்வம் கொண்டிருந்தனர். ஸ்ரீவில்லிபுத்தூர் வடபத்ரசாயி கோயில், ராதாபுர வரகுணேஸ்வரர் கோயில், அம்பாசமுத்திரம் சிவன் கோயில், திருப்பத்தூர் திருத்தவீஸ்வரர் கோயில், நாங்குநேரி விஜயநாராயணர் கோயில், எரிச்சவுடையார் திருவாமீஸ்வரர் கோயில், சின்னமனூர் இலட்சுமி நாராயணர் கோயில், ஆத்தூர் திருநாராயணப் பெருமாள் கோயில் ஆகியவை பாண்டியப் பேரரசர்களால் எழுப்பப்பட்ட ஆலயங்களாகும். திருநெல்வேலி

குறிப்பு

நெல்லையப்பர் கோயிலும், தென்காசி மற்றும் குற்றாலக் கோயில்கள் பிற்காலப் பாண்டியப் பேரரசர்களால் கட்டப்பட்டவையாகும். அழகர் கோயிலிலுள்ள திருமால் கோயிலும், மதுரை கூடலழகர் கோயிலும் திருப்பணி செய்யப்பட்டன. "பாண்டியர் ஆதிக்கத்தில் தென்னிந்தியக் கலை தனது உயர்ந்த நிலையை எய்தியது".

6.7.3. வீழ்ச்சிக்கான காரணங்கள்

சங்க காலத்துக்குப்பின் களப்பிரரின் பிடியிலிருந்து பாண்டிய நாட்டை மீட்ட பெருமை பாண்டியர்களுக்கு உண்டு. ஆற்றல்மிகு அரசர்கள் முதலாம் பாண்டியப் பேரரசைத் தோற்றுவித்தனர். சோழர்களிடம் நாட்டை இழந்த பாண்டியர்கள் மீண்டும் தலைதூக்கி பேரரசைப் புதுப்பித்தனர். முதலாம் குலசேகரனும், அவரது தம்பி சுந்தர பாண்டியனும் கட்டிய இரண்டாவது பாண்டியக் கற்கோட்டை கடைசியில் மணல் மாளிகை போன்று சரிந்து வீழ்ந்தது. பாண்டியரின் எழுச்சியைப் போன்றே அவர்களது வீழ்ச்சியும் பிரமிக்கத்தக்கது. சுந்தரபாண்டியன் எழுப்பிய பாண்டியப் பேரரசை அவருக்குப்பின் வந்த சடயவர்மன் கட்டிக்காத்த போதிலும் படைப் பெருக்கத்துக்குச் செலுத்த வேண்டிய கவனத்தைக் கோயில்களைக் கட்டுவதில் செலவிட்டார். அவருக்குப்பின் வந்தோரின் ஆட்சிக் காலங்களில் உட்பகை வளரலாயிற்று. உட்பகையோடு தன்னினம் பகைத்த பரம்பரைப் பண்பும் சேர்ந்தது. பாண்டியரும் சோழரும் ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வின்றி ஒருவரையொருவர் அழித்துக் கொள்ளும் போர்களில் ஈடுபட்டனர். மாறவர்மன் குலசேகர பாண்டியனின் விவேகமற்ற முடிவால் அவரது பிள்ளைகளான சுந்தரபாண்டியனுக்கும் வீர பாண்டியனுக்கும் இடையே தற்கொலைக்கொப்பான வாரிசுரிமைப் போட்டியும், போராட்டமும் ஏற்பட்டது. அதுவே பேரரசின் வீழ்ச்சிக்கு வழிவகுத்துவிட்டது. பாண்டிய இளவரசர்கள் தங்களுக்குள் ஒற்றுமையின்றி நாட்டைப் பல பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு ஆட்சி செய்தது பேரரசைப் பலவீனப்படுத்தியது. தரைப்படையும், கடற்படையும் புறக்கணிக்கப்பட்டன.

பாண்டியப் பேரரசு பலவீனப்பட்டமைக்கு வேறுசில சமூக, சமயக் காரணங்களும் இருந்தன. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்கள் தமிழைவிட வடமொழிக்கு ஆக்கமும் ஊக்கமும் ஊட்டினர். வேதவைதீக சனாதன தர்மத்தின் காவலர்களாக இருந்த பிராமணர்களுக்கு சிறப்புச் சலுகைகளும் உரிமைகளும் வழங்கியதால் படிமுறை சாதி அமைப்பு மேலும் இறுக்கமுற்றது. சமுதாய ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்தன. இதன்விளைவாக சாதி மோதல்கள் ஏற்பட்டன. சாதி மோதல்களோடு சமயச் சச்சரவுகளும் சேர்ந்து கொண்டன. நாட்டின் வளங்கள் சீராகச் செலவிடப் படாமையால் பொருளாதாரத் தேக்கமடைந்து பஞ்சங்களால் மக்கள் அவதிப்பட வேண்டியதாயிற்று. அத்தகைய சமுதாய, சமய, பொருளாதாரக் காரணங்களால் பேரரசின் பலம் பாதிக்கப்பட்டது. பாண்டியப் பேரரசு பலவீனப்பட்டமையால் குறுநில மன்னர்களும், சிற்றரசர்களும்

குறிப்பு

சுயேட்சையாக செயல்படலாயினர். அவர்களைக் கட்டுப்படுத்த, அடக்கக்கூடிய ஆற்றல் மிக்க மன்னர்களோ, மத்திய அரசோ இல்லாத நிலை ஏற்பட்டது. உட்பகையாலும், பதவிப் போட்டியாலும் நோயுற்ற பாண்டியப் பேரரசு அன்னிய ஆதிக்க நோய்க்கிருமிகளால் பாதிக்கப்பட்டது. வலிமைமிக்க முகலாயப் படையை வலுவிழந்த பாண்டியப் படையால் எதிர்க் கொள்ள முடியவில்லை. பேரரசர்களாகத் துவங்கிய பாண்டிய மன்னர்கள் சிற்றரசர்களாகி வரலாற்று ஒட்டத்திலிருந்து ஒதுக்கப் பட்டனர். பாண்டியப் பேரரசின் எழுச்சியும் வீழ்ச்சியும் மலை, மலை எலியான கதையாயிற்று.

6.8. பயணிகளின் பார்வையில் பாண்டிய நாடு

மார்க்கோ போலோ

இத்தாலிய பயணி மார்க்கோ போலோ (Marco Polo 1254-1324) மாபாருக்கு வருகை தந்த போது கண்டுகேட்ட தகவல்களைக் கொண்டு பாண்டிய நாட்டைப் பற்றி அவரது பயணக் குறிப்புகளாவன: மாபார் இந்தியாவிலேயே சிறந்த அருமையான, பெருந்தன்மைமிக்க மாநிலங்களில் ஒன்றாகும். குலசேகர பாண்டிய தேவா மாபாரின் மன்னராகத் திகழ்ந்தார். காயல் துறைமுகம் உயரிய, அருமையான நகரமாகும். இதன் துறைமுகத்தில் அரேபிய நாட்டுக் கப்பல்கள் வந்து நின்றன. இந்நகரில் பெரிய அளவில் வாணிபம் நடைபெற்றது. குதிரைகள் ஏடன் மற்றும் அரேபிய நாடுகளிலிருந்து இங்கு விற்பனைக்காகக் கொண்டு வரப்பட்டன. பாண்டிய நாட்டில் உயர்தர முத்துக்கள் கிடைக்கின்றன. மதுரை மன்னரிடம் விலைமதிப்புமிக்க அரும் பொருட் கருவூலம் இருந்தது. அரசர் உடல் முழுவதும் விலை உயர்ந்த ஆபரணங்களால் அலங்கரித்துக் கொண்டிருந்தார். இவர் நாட்டை நடுநிலை தவறாது நேர்மையுடன் ஆட்சி செய்தார். வணிகர்களுக்கும், வெளிநாட்டவருக்கும் பரிசுப் பொருட்கள் கொடுத்துப் பாராட்டப்பட்டமையால் அவர்கள் பாண்டிய நாட்டுக்கு மகிழ்ச்சியுடன் வருகை தந்தனர். அரசருக்கு ஐநூறுக்கும் மேற்பட்ட மனைவியர் இருந்தனர். மக்கள் அரைகுறை ஆடைகளையே உடுத்தி இருந்தனர். மதுரை நாட்டில் தையல்காரர்களே இல்லை. சாதி முறையும், பெண்கள் உடன்கட்டை ஏறும் வழக்கமும் இருந்தன. மக்கள் சகுனங்களிலும், ஜாதகம் பார்ப்பதிலும் நம்பிக்கை வைத்திருந்தனர். நடன மாதர்கள் கோயில்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டனர். இறக்குமதி செய்யப்பட்ட பெரும்பான்மையான குதிரைகள் போதிய பராமரிப்பு, பயிற்சி, போஷாக்கின்மையால் இறந்துவிட்டன. இதனால் அரசுக்கு பெரிய இழப்பு ஏற்பட்டது. படை வீரர்களின் படைக்கலன்கள் தரமின்றி பரிதாபமாக இருந்தன. மார்க்கோ போலோவின் குறிப்புகள் முதல் தர நேரடி ஆவணச் சான்றுகளாகும். எனினும் இக்குறிப்புகள் பிற ஆதாரங்களுடன் சரிபார்த்து, ஒப்பிட்டு, திறனாய்வு செய்த பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

குறிப்பு

வரலாற்றாளர் வாசப் முகமதிய வரலாற்றாளர் வாசப் (Wassaf)பின் குறிப்புகள் வரலாற்று முக்கியத்துவமிக்கவை. குலசேகரப் பாண்டியன் நாற்பதாண்டு காலம் ஆட்சி செய்தார். இவரது ஆட்சிக் காலத்தில் விரோதிகள் எவரும் பாண்டிய நாட்டுக்குள் நுழையவில்லை. இம்மன்னர் நோய்வாய்ப்பட்டு படுக்கவில்லை. இவரது கருவூலம் நிறைந்து காணப்படுகிறது. இதில் 1200 கோடி தங்கம் வைக்கப்பட்டுள்ளது. இதுதவிர விலை மதிப்பற்ற முத்துக்கள், செம்பு (சிவப்புக்கல்), நீலப்பச்சைக் கற்கள், மரகதம், மணிகள் ஏராளமாக உள்ளன. இவற்றைப் பற்றி விவரிக்க வார்த்தைகளே இல்லை. வழக்கமாக இந்திய மன்னர்கள் அறிவாற்றலுக்கும், அரசியல் விவேகத்துக்கும் பெயர் பெற்றவர்கள் என்று அறிந்துள்ளேன். பிறகு ஏன் இந்த குலசேகரப் பாண்டியன் இவரது வாழ்நாளிலேயே மூத்த மகனை நிராகரித்துவிட்டு முறைகேடாகப் பிறந்த இளைய மகனை வாரிசாக நியமிக்க வேண்டும்? இதன்மூலம் மணப்பெண் போன்று காட்சியளிக்கும் இவரது நாட்டின் போக்கையே மாற்றிவிட்டார்.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. யாரை கலியுகராமன், அதிசய பாண்டித் தேவன், சோணாடு கொண்டான், சோணாடு கொண்டருளியவன் இவ்வாறு அழைத்தனர்?

2. ஜடவர்மன் வீரபாண்டியன் எந்தப்பகுதிகளுக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டார்?

3. யாரால் சிதம்பரம் சிவன் கோயில் மற்றும் ஸ்ரீரங்கம் திருமால் கோயில் கூரைகள் தங்கத்தால் மேயப்பட்டன?

4. இலங்கையிலிருந்து கைப்பற்றப்பட்டு மதுரைக்குக் கொண்டுவரப்பட்ட பொருட்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது?

5. உத்தம மந்திரி என்று அழைக்கப்படுவர்?

6. பாண்டிய மன்னர்கள் யாரை குலதெய்வமாகக் கொண்டனர்?

7. திருவானைக்காவல் சிவன் கோயிலின் இரண்டாம் சுற்றில் காணப்படும் கோபுரம் யாருடைய கால கட்டிடக்கலைப் பாணிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது?

6.9. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

1. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்.
2. கன்னடப் பகுதிகள்.
3. முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்.
4. புத்தரின் பல் சின்னம்.

குறிப்பு

5. முதலமைச்சர்.

6. சோமசுந்தரப் பெருமாள்.

7. பாண்டியர் கால.

6.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

குறுகிய வினாக்கள்

1. இரண்டாம் சுந்தர பாண்டியனின் ஒய்சாளர் படையெடுப்பு பற்றி சிறு குறிப்பு வரைக.

2. பிற்கால சோழர்களின் பொருளாதார நிலை குறித்து எழுதுக.

3. பிற்கால சோழர்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள்.

விரிவான வினாக்கள்

1. முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் நிர்வாகத்தை குறித்து கட்டுரை எழுதுக.

2. முதலாம், இரண்டாம் சுந்தர பாண்டியனின் படையெடுப்புகள் பற்றி விவாதி.

3. பிற்கால சோழர்களின் சமுதாயம் மற்றும் கலைகளின் வளர்ச்சி குறித்து விவரி.

6.11. கூடுதல் வாசிப்புகள்

Subramania N. A History of Tamil Nadu up to 1336

Rajayyan K. History of Tamil Nadu

பிள்ளை கே.கே. தென்னிந்திய வரலாறு

Nilakanda Sastri K.N. A History of South India

Nilakanda Sastri K.N. Cholas

Sathianathair R. History of India

வெங்கடேசன் க. முற்கால தமிழ்நாட்டு வரலாறு

செல்வம் வே. தி. தமிழக: வரலாறும் பண்பாடும்

இராமசாமி அ. தமிழ் நாட்டு வரலாறு

Krishnaswamy Aiyyangar S. South India and her Mohammadan Invaders

வானமாமலை, நா. தமிழர் வரலாறும் பண்பாடும்

குறிப்பு

அலகு – 7

தமிழ்நாட்டில் முஸ்லிம் படையெடுப்புகள்

பாட அமைப்பு

7.1. முன்னுரை

7.2. நோக்கங்கள்

7.3. மாலிக்காபூர் படையெடுப்பு

7.4. முகமது துக்ளக் படையெடுப்பு

7.4.1.இணைப்புக் கொள்கை

7.4.2. விளைவுகள்

7.5. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

7.6. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

7.7. கூடுதல் வாசிப்புகள்

7.1. முன்னுரை

14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ்நாட்டு வரலாற்றில் மற்றொரு முக்கிய திருப்புமுனை ஏற்பட்டது. அதற்குக் காரணம் பாண்டிய நாட்டில் இரு சகோதரர்களுக்கு இடையே ஏற்பட்ட வாரிசுரிமைப் போராட்டமேயாகும். இப்போராட்டத்தின் போதுதான் அலாவுதீன் கில்ஜியின் போர்வாளான மாலிக்காபூர் தமிழ் நாட்டின் மீது படையெடுத்தார். அப்போது வாரிசுரிமைப் போட்டியிட்ட மதுரை மன்னன் வீரபாண்டியனின் அழைப்பை ஏற்று பாண்டிய நாட்டின் உள் விவகாரத்தில் குறுக்கிட்ட மாலிக்காபூர் மதுரையைக் கைப்பற்றினார். மாலிக்காபூரின் நோக்கம் பாண்டிய நாட்டின் செல்வத்தை அபகரிப்பதேயாகும். இது போன்ற வரலாற்று நிகழ்வுகளை இந்த அத்தியாயத்தில் காணலாம்

7.2. நோக்கங்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர் கீழ் கண்டவற்றை அறிய முடியும்

- மதுரையில் முஸ்லிம் படையெடுப்பை பற்றி விவரிகிறது.
- மாலிக்காபூர் படையெடுப்பு மற்றும் அதன் தாக்கம் பற்றி விவரிகிறது.
- முகமது துக்ளக் படையெடுப்பு பற்றி விளக்குகிறது.

7.3. மாலிக்காபூர் படையெடுப்பு

குறிப்பு

மாலிக்காபூர் (1296-1316) அலாவுதீன் கில்ஜியின் ராணுவத்தில் அடிமையாகச் சேர்ந்து தளபதியானவர். மாலிக்காபூர் தளபதியானபின் தென்னாட்டின் மீது மூன்றாண்டுகளில் இரண்டு படையெடுப்புகளை மேற்கொண்டார் (1309, 1311). முதலாவது படையெடுப்பு வாரங்கல்லுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது. இரண்டாவது படையெடுப்பு மாபார் (மதுரை) மீது தொடுக்கப்பட்டது. மதுரையைக் கைப்பற்றல் மாலிக்காபூரின் மாபார் படையெடுப்பின் போது பாண்டிய நாட்டில் இரு சகோதரர்களுக்கிடையேயான வாரிசுரிமைப் போட்டி உச்சகட்டத்தை எட்டியது. மாறவர்மன் குலசேகர பாண்டியனின் பிள்ளைகளான சுந்தரபாண்டியனும், வீரபாண்டியனும் மதுரை அரியாசனத்தில் அமரப் போட்டியிட்டனர். முறைவாரிசான சுந்தரபாண்டியனைப் புறம் தள்ளிவிட்டுக் காமக்கிழத்தியரின் மகனான வீரபாண்டியன் வாரிசாக்கப்பட்டார். ஏமாற்றமடைந்த சுந்தரபாண்டியன் தந்தையைக் கொன்றுவிட்டு, வீரபாண்டியனை விரட்டியபின் மதுரை மன்னரானார். விரட்டப்பட்ட வீரபாண்டியன் அரசுக்கெதிராகப் போராடிக் கொண்டிருந்தார். அந்த காலகட்டத்தில்தான் வீரபாண்டியன் மாலிக்காபூரின் உதவியை நாடியதாகக் கூறப்படுகிறது. மாபார் படையெடுப்பில் மும்முரமாக இருந்த மாலிக்காபூர் இந்த வாரிசுரிமைப் போரைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு மதுரை மீது படையெடுத்து அந்நகரைக் கைப்பற்றினார். கைப்பற்றப்பட்ட மதுரையில் ஒரு ராணுவ முகாமை அமைத்துவிட்டு டெல்லி திரும்பினார் மாலிக்காபூர் (1311). அவர் டெல்லி திரும்பும் போது ஏராளமான செல்வத்தை எடுத்துச் சென்றார்.

7.4. முகமது துக்ளக் படையெடுப்பு

அலாவுதீன் கில்ஜிக்குப் பின் டெல்லி சாம்ராஜ்யத்தைக் கைப்பற்றிய முகமது பின் துக்ளக் (1325-1351) தென்னாட்டின் மீதிருந்த முகலாயப் பேரரசின் பிடியை மேலும் பலப்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொண்டார். அலாவுதீன் கில்ஜியைப் போலன்றி முகமது துக்ளக் கைப்பற்றிய தென்னிந்திய பகுதிகளை முகலாயப் பேரரசுடன் இணைத்தார்.

7.4.1.இணைப்புக் கொள்கை

முகமது துக்ளக்கின் இணைப்புக் கொள்கை ழிடஉஉல ழக யுநெஒயவழைஒயின்படி முதலில் வாரங்கல் ஆக்கிரமிக்கப்பட்டு இணைக்கப்பட்டது (1327). துவாரசமுத்திரம் முற்றிலுமாக அழிக்கப்பட்டது. தமிழ் நாட்டைப் படையெடுத்துத் தாக்கிய முகலாயப் படை ஸ்ரீரங்கத்தை சூறையாடியபின் மதுரையைக் கைப்பற்றியது. கைப்பற்றப்பட்ட மதுரைக்கு ஜலாலுதீன் அசன் ஷா ஆளுநராக

நியமிக்கப்பட்டார். பாண்டிய நாடு முகமது துக்ளக்கின் 23 மாநிலங்களில் ஒன்றானது.

குறிப்பு

7.4.2. விளைவுகள்

முகமது துக்ளக்கின் மாபார் படையெடுப்பின் விளைவாக 1) பாண்டிய நாடு மீண்டும் தலைதூக்க முடியாத அளவுக்கு நொறுக்கப்பட்டது. 2) மதுரை டெல்லி சுல்தானிய ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. 3) முகலாயப் பேரரசு 5 பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது: தேவகிரி திலிங் துவாரசமுத்திரம் மதுரை (மாபார்). மதுரையின் ஆளுநராக முகமது துக்ளக்கால் நியமிக்கப்பட்ட ஜலாலுதீன் அசன் ஷா டெல்லிக்கும் மதுரைக்குமிடையேயான தூரத்தையும், முகலாயப் பேரரசின் இயலாமையையும் பயன்படுத்திக் கொண்டு, டெல்லியின் ஆதிக்கப் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு மதுரை சுல்தானியத்தை (ஆயனரசயை ளுரடவயயெவந)த் தோற்றுவித்தார் (1335). மதுரை சுல்தானியத்தின் முதல் சுல்தான் ஜலாலுதீன் அசன் ஷா தான்.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. மாபார் என்றால்?
2. மதுரையில் வாரிசுரிமைப் போரில் ஈடுபட்ட இரு இளவரசர்கள் யார்?
3. முகமது துக்ளக் யாரை மதுரைக்கு ஆளுநராக நியமித்தார்.

7.5. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

1. மதுரை.
2. சுந்தரபாண்டி, வீரபாண்டி.
3. ஜலாலுதீன் அசன் ஷா.

7.6. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

குறுகிய வினாக்கள்

1. முகமது துக்ளக்கின் இணைப்புக் கொள்கை பற்றி எழுதுக.
2. முஸ்லீம் படையெடுப்பின் போது மதுரையின் நிலை குறித்து ஒரு சிறு குறிப்பு எழுதுக.

விரிவான வினாக்கள்

1. மாலிக்காபூரின் படையெடுப்பு பற்றி கட்டுரை எழுதுக.
2. முஸ்லீம் படையெடுப்புகளின் விளைவுகள் பற்றி விளக்குக.

குறிப்பு

7.7. கூடுதல் வாசிப்புகள்

Subramania N. A History of Tamil Nadu up to 1336

Rajayyan K. History of Tamil Nadu

பிள்ளை கே.கே. தென்னிந்திய வரலாறு

Nilakanda Sastri K.N. A History of South India

Sathianathair R. History of India

வெங்கடேசன் க. முற்கால தமிழ்நாட்டு வரலாறு

செல்வம் வே. தி. தமிழக: வரலாறும் பண்பாடும்

இராமசாமி அ. தமிழ் நாட்டு வரலாறு

Krishnaswamy Aiyyangar S. South India and her Mohammadan Invaders

வானமாமலை, நா. தமிழர் வரலாறும் பண்பாடும்

அலகு – 8

மதுரை சுல்தான்கள்- சமூக மற்றும் பொருளாதார நிலை

பாட அமைப்பு

8.1. முன்னுரை

8.2. நோக்கங்கள்

8.3. ஜலாலுதீன் அசன் ஷா

8.4. கியாசுதீன் தாமன் ஷா

8.5. நசீருதீன் முகமது

8.6. சுல்தானியத்தின் சீரழிவு

8.7. மதுரை சுல்தானியத்தின் வீழ்ச்சியும் விளைவும்

8.8. சமூக மற்றும் பொருளாதார நிலை

8.9. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

8.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

8.11. கூடுதல் வாசிப்புகள்

8.1. முன்னுரை

பாண்டியப் பேரரசின் வீழ்ச்சி மதுரை சுல்தானியத்தின் எழுச்சிக்குக் காரணமாயிற்று. இச்சுல்தானியம் நாற்பது ஆண்டுகளுக்கு மேல் (1335-1378) தமிழ்நாட்டை ஆட்சி செய்தது. தமிழ்நாடு மீண்டும்

குறிப்பு

அயலவர் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. தமிழ் மன்னர்களிடையே ஒற்றுமையின்மையே மதுரை சுல்தானியம் உருவாக வழிவகுத்தது. பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முஸ்லீம் படையெடுப்புகளின் கூட்டு விளைவே மதுரை சுல்தானியமாகும். இதைத் தோற்றுவித்தவர் ஜலாலுதீன் அசன் ஷா. இவரே முதல் மதுரை சுல்தான்.

8.2. நோக்கங்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர் கீழ் கண்டவற்றை அறிய முடியும்

- மதுரை சுல்தான்களின் படையெடுப்பை பற்றி விவாதிக்கிறது
- மதுரை சுல்தான்களின் நிர்வாகம் மற்றும் அதன் வீழ்ச்சி குறித்து விளக்குகிறது.
- மதுரை சுல்தான் கால கலை மற்றும் மருத்துவ வளர்ச்சிகளை விளக்குகிறது.

8.3. ஜலாலுதீன் அசன் ஷா

மதுரையின் ஆளுநராக இருந்த ஜலாலுதீன் அசன் ஷா டெல்லி முகலாய மேலாதிக்கத்திலிருந்து விடுபட்டு சுதந்திர மதுரை சுல்தானியத்தைப் பிரகடனம் செய்தார். இவரே மதுரை சுல்தானியத்தின் முதல் சுல்தான். தனது சுயாட்சியை உறுதிப்படுத்தும் பொருட்டு இவரது பெயரால் நாணயங்களை வெளியிட்டார் (1335). மேலும், இவர் தன்னை முகலாயர்களின் தீர்க்கதரிசியான முகமது (சழிாநவ ஆழாயஅஅநன)வின் வழித்தோன்றல் என்று கூறிக்கொண்டார். இதன் காரணமாக இவர் சயித், ஹாசன் அல்லது ுஹசூன், கான் என்றெல்லாம் அழைக்கப்பட்டார். அசன் ஷா, அசன் கான் ஆனார். பெரும் புகழ் பெற்றிருந்த வரலாற்று மேதை இபன் பத்தூதாவுக்குத் தன் மகளைத் திருமணம் செய்து கொடுத்து அவருக்கு மாமனார் என்று பெருமிதத்துடன் கூறிக்கொண்டார்.

துக்ளக்கின் தோல்வி

தன்னால் ஆளுநராக நியமிக்கப்பட்ட ஜலாலுதீன் அசன் ஷா மதுரை சுல்தான் என்று அறிவித்ததால் ஆத்திரமடைந்த முகமது துக்ளக் அவரிடம் கஜானா காப்பாளராகப் பணியாற்றிய ஜலாலுதீனின் மகன் இப்ராஹீமைக் கொன்றுவிட்டார். மேலும், ஜலாலுதீனைத் தண்டித்து மதுரையை மீட்பதற்காகப் படையெடுத்து வந்தார் முகமது துக்ளக். அவர் வரும் வழியில் நோய்வாய்ப்பட்டதால் டெல்லி திரும்ப நேரிட்டது. சில

மாதங்களே மதுரை சுல்தானியத்தை ஆட்சி செய்த ஜலாலுதீன் அசன் ஷா அவரின் கீழிருந்த பிரபுக்கள் ஒருவராலேயே கொல்லப்பட்டார் (1340).

குறிப்பு

8.4. கியாசுதீன் தாமன் ஷா

ஜலாலுதீன் அசன் ஷா கொலை செய்யப்பட்டதால் அலாவுதீன் உதாஜி மதுரை சுல்தானிய மன்னரானார். அவரும் விரைவிலேயே கொலை செய்யப்பட்டார். உடனே அவரது மருமகன் குத்புதீன் பெரோஸ் ஷா மதுரை சுல்தானியத்தைக் கைப்பற்றிக் கொண்டார். இவரும் நாற்பது நாட்களுக்குள் கியாசுதீன் தாமன் ஷா என்பவரால் கொல்லப்பட்டார். கொலை செய்து மதுரை சுல்தானியத்தை அபகரித்துக் கொண்ட கியாசுதீன் தாமன் ஷா இரண்டாவது சுல்தான் ஆனார்.

ஒய்சாளர் சவால்

கியாசுதீன் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அவர் சந்தித்த முதல் சவால் ஒய்சாள மன்னன் மூன்றாம் வீரவல்லாளரின் எதிர்ப்புதான். முதலில் வீரவல்லாளரிடம் தோற்றுப்போன கியாசுதீன் பின்னர் ஒய்சாள நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, கண்ணனூர் கொப்பத்தை முற்றுகையிட்டு, ஒய்சாள மன்னரைத் தோற்கடித்துக் கொன்றுவிட்டார். ஒய்சாளரின் சொத்து முழுவதும் அபகரிக்கப்பட்டது. குணக்கேடர் மதுரை திரும்பிய ஜலாலுதீன் மாலத் தீவுகள் மீது படையெடுக்கத் திட்டமிட்டார். ஆனால் அதற்குமுன் நோய்வாய்ப்பட்டு இறந்தார். அதற்குமுன் அவர் இழைத்த கொடுமைகளுக்கு எல்லையில்லை. மத வெறியரான ஜலாலுதீன் இந்து சிறைக் கைதிகளைச் சித்ரவதை செய்தார். இக்கொடுமைகளைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார் ஆப்பிரிக்கப் பயணி இபின் பதூதா. இம்மன்னனைக் குணக்கேடன், மனித உருவத்தில் வந்த பேய் என்று எழுதியுள்ளார். பாண்டிய இளவரசர்களுக்கிடையேயான விவேகமற்ற வாரிசுரிமைச் சண்டைக்கான விலையை மதுரை மக்கள் கொடுக்க வேண்டியதாயிற்று.

8.5. நசீருதீன் முகமது

கியாசுதீனுக்குப் பிறகு அவரது சகோதரர் மகன் நசீருதீன் முகமது ஷா மதுரை சுல்தான் பொறுப்பேற்றார். டெல்லி முகலாயரிடம் பணியாளராக இருந்த இவர் படிப்படியாக முன்னேறி, பெரும் பொருள் சேர்த்து, சேர்த்த பொருளை வாரி வழங்கி, மதுரை சுல்தானியத்தின் முக்கியமானோரை விலைக்கு வாங்கி ஆட்சியைப் பிடித்தார். ஆட்சியைப் பிடிப்பதற்கு மார்க்கத்தைவிட முடிவே முக்கியமானது என்ற மாக்கியவெல்லியின் வாக்கை மெய்ப்படுத்தினார். இவரது ஆட்சிக்கு எதிராக இருந்தோரையெல்லாம் இருக்கும் இடம் தெரியாமல் செய்தார். மக்களின்

மதிப்பை முற்றிலுமாக இழந்த நசீருதீனின் இரண்டாண்டு ஆட்சிக் காலத்தில் உள்நாட்டுக் கலகமும் குழப்பமும் மேலோங்கியிருந்தன.

குறிப்பு

8.6. சுல்தானியத்தின் சீரழிவு

நசீருதீன் முகமதுவுக்குப் பின்னர் பக்ருதீன் முபாரக் ஷாவும், சிக்கந்தர் ஷாவும் மதுரை சுல்தான்களாக ஆட்சி செய்தனர். விரைவாக சரிந்து கொண்டிருந்த மதுரை சுல்தானியம் இவர்களது ஆட்சிக் காலத்தில் வீழ்ச்சியடைந்தது. மதுரை சுல்தான்களின் அராஜக ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தார் விஜயநகரத்து குமாரகம்பணர். தமிழ்நாடு ஒரு அயலவர் ஆட்சியிலிருந்து மற்றொரு அயலவர் ஆட்சிக்குக் கைமாறியது. 14 ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சியுற்ற மதுரை சுல்தானியம் 17 ஆம் நூற்றாண்டில் புதிய உருப்பெற்று வெளிப்பட்டது.

8.7. மதுரை சுல்தானியத்தின் வீழ்ச்சியும் விளைவும்

மதுரை சுல்தானைப் பற்றிய ஆவண ஆதாரங்கள் விஜய நகரப் படையெடுப்பின் போது அழிக்கப்பட்டுவிட்டதால் சுல்தானியத்தைப் பற்றியோ, சுல்தான்களைக் குறித்தோ கோர்வையாக எழுத முடியாமல் போயிற்று. இவர்கள் கால வரலாற்றில் பல இடைவெளிகள் உள்ளன. மதுரை சுல்தானிய நாணயங்களும் கிடைக்கவில்லை. எனவே, மதுரை சுல்தானியத்தின் 43 ஆண்டு கால வரலாறு (1335-1378) முழுமையாக எழுதப்பெறாமல் உள்ளது.

மூன்று சூழ்நிலைகள்

மதுரை சுல்தானியம் தோன்றுவதற்கு மூன்று சூழ்நிலைகள் சாதகமாக இருந்தன: 1) மதுரை நாட்டுக்காக மாறவர்மன் குலசேகர பாண்டியனின் குமாரர்களான வீரபாண்டியனுக்கும், சுந்தரபாண்டியனுக்குமிடையே ஏற்பட்ட வாரிசுரிமைப் போராட்டம். 2) அலாவுதீன் கில்ஜியின் தளபதி மாலிக்காபூரின் மதுரை (மாபார்) படையெடுப்பு. இப்படையெடுப்பின் போது மதுரை சிம்மாசனத்துக்காகப் போராடி வந்த இரு சகோதரர்களும் ஆபத்தின் ஆழத்தை அறிந்து ஒன்றுபட்டு எதிர்ப்பதற்குப் பதிலாக அப்போது மதுரை மன்னராக இருந்த சுந்தரபாண்டியன் மனைவியரோடு தலைமறைவாகி விட்டார். நாட்டைவிட்டு விரட்டப்பட்ட வீரபாண்டியன் காட்டுக்குச் சென்று, சிறிய படையைத் திரட்டி, மாலிக்காபூரை எதிர்த்துத் தோல்வியடைந்தார். மதுரை கைப்பற்றப்பட்டு சூறையாடப்பட்டது. ஆனால் டெல்லி சுல்தானியத்தோடு இணைக்கப்படவில்லை. 3) முகமது துக்ளக்கின் படையெடுப்பின் விளைவாக மதுரை சுல்தானியம் டெல்லி சுல்தானியத்துடன் இணைக்கப்பட்டது. மதுரை ஆளுநராக நியமிக்கப்பட்ட ஜலாலுதீன் அசன் ஷா முகமது துக்ளக்கின் பிடியிலிருந்து விடுபட்டு சுதந்திர மதுரை

குறிப்பு

சுல்தானியத்தைத் தோற்றுவித்தார். எனவே, மதுரை சுல்தானியம் சூழ்நிலைகளின் கட்டாயத்தால் ஏற்படுத்தப்பட்ட சமயோசித ஏற்பாடேயாகும். மதுரை சுல்தானியம் டில்லி சுல்தான்களால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட அரசல்ல. இது அவர்களது முகலாயப் பேரரசு விரிவாக்கத்தின் கிளை விளைவேயாகும். மாலிக்காபூரின் மாபார் படையெடுப்பின் நோக்கங்கள் இரண்டு: 1) பாண்டிய நாட்டை அலாவுதீன் கில்ஜியின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வருவது 2) பாண்டிய நாட்டில் சேமித்து வைக்கப்பட்ட செல்வத்தை அபகரிப்பது. முகமது துக்ளக்கின் படையெடுப்பு நோக்கங்களும் இரண்டு: 1) பாண்டிய நாட்டை டெல்லி சுல்தானியத்துடன் இணைப்பது 2) இணைக்கப்பட்ட நாட்டின் செல்வத்தைக் கொண்டு முகலாயப் பேரரசைப் பலப்படுத்தல். மதுரை சுல்தான்களின் நோக்கம் எப்படியாவது பதவியில் இருந்து கொண்டு அரச வாழ்க்கையை அனுபவித்தல்.

எதிர்மறை விளைவுகள்

மதுரை சுல்தானியத்தின் விளைவுகள் எதிர்மறையானவை. தமிழ் நாட்டில் நிலையான ஆட்சி இல்லாமல் போயிற்று. மதுரை சுல்தான்கள் காலத்தில் அரசியல் நிலையற்ற நிலை (ழடவைஅையட ளைவயடிடைவைல) நிலவிற்று. தொன்றுதொட்டு வந்த அரசாங்க அமைப்புகள் புறக்கணிக்கப்பட்டன. மதுரை சுல்தான்களுக்கு அலாவுதீன் கில்ஜிக்கு இருந்த ஆட்சித் திறனோ அல்லது முகமது துக்ளக்கிருந்த தொலைநோக்குடன் கூடிய அறிவாற்றலோ இல்லை. எனவே, மதுரை சுல்தானியம் மணல்மேல் கட்டப்பட்ட கோட்டையாயிற்று. உலகப் புகழ் பெற்ற மதுரையின் வர்த்தகமும் வளமும் விரயமாக்கப்பட்டன. விவசாயமும், வாணிபமும், தொழில்களும் நசிந்து போயின. இவர்கள் ஆட்சிக் காலத்தில் பெரும் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டது. மதுரை சுல்தானியத்தின் சமுதாய விளைவு நீண்டகால பாதிப்பை ஏற்படுத்தியது. முகமதியர்களின் புதிய பழக்க வழக்கங்கள் புகுத்தப்பட்டன. இவர்களது பழக்க வழக்கங்களுக்குப் பணிந்து போகாதவர்கள் துன்புறுத்தப்பட்டனர். குறிப்பாக பிராமணர்களின் தேவதான நிலங்களுக்குக் கடுமையான வரி விதிக்கப்பட்டதாலும், இவர்களது வாழ்வியல் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் முற்றிலும் மாறுபட்டிருந்தமையால் மிகுந்த பாதிப்புக்குள்ளாயினர். பிராமணர்கள் சமுதாயத்தின் தலைமை அந்தஸ்தை இழந்தனர். மதுரை சுல்தானிய சமயத்தின் தாக்கம் பேராபத்தைக் கொடுத்தது. கட்டாய மதமாற்றம் மக்களிடையே வெறுப்பை வளர்த்தது. மதமாற்றத்தின் பெயரால் பல கொடுமைகள் நிகழ்த்தப்பட்டன. யாவற்றுக்கும் மேலாக தமிழ் நாட்டில் கொலைவெறி கலாச்சாரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. தென்னை மரங்கள் இருந்த தோப்புகளிளெல்லாம் மனிதத் தலைகளைத் தாங்கிய சூலங்கள் நடப்பட்டன.

மதுரை சுல்தான்களின் ஆட்சியின் கீழ் தமிழ் நாட்டில் கலாச்சாரத் தேக்கம் ஏற்பட்டது. கல்வி, இலக்கியம், கட்டடம், சிற்பம்,

குறிப்பு

சித்திரம், நாட்டியம் போன்ற துறைகளில் வளர்ச்சியில்லை. சமஸ்கிருதத்துக்குப் பதில் உருது-பாரசீக மொழிகள் செல்வாக்கு பெற்றன. பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. தமிழ்-முகலாய கலாச்சார கலப்பு ஏற்பட்டது. பழக்க வழக்கப் பரிமாற்றங்கள் ஏற்பட்டன. சுல்தான்கள் சாதி வேற்றுமைகளைப் பாராட்டாமையால் சாதிச் செல்வாக்கு குறைந்தது. கோயில்களுக்குப் பதில் மசூதிகளும், தர்க்காக்களும் கட்டப்பட்டன. இவற்றின் விளைவாக தமிழர் பண்பாட்டில் மாபெரும் மாற்றம் ஏற்பட்டது.

8.8. சமூக மற்றும் பொருளாதார நிலை

மாலிக்காபூர், முகமது துக்ளக், மதுரை சுல்தான்கள் ஆகியோரின் அழிவு நடவடிக்கைகள் பற்றி விரிவாக எழுதப்பட்டுள்ளன. எனினும் மதுரை சுல்தானிகளின் ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட ஆக்கப்பூர்வமான மாற்றங்கள் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். சகோதர நேயத்தை கருப்பொருளாகக் கொண்ட இஸ்லாம் சமயம் சாதி வேறுபாடுகளாலும், கொடுமைகளாலும், சண்டைகளாலும் சீர்கெட்டுப் போயிருந்த தமிழ்நாட்டு மக்களுக்கு மாற்று மார்க்கமாக அமைந்தது. சாதிப் பாகுபாடுகளைப் பொருட்படுத்தாத இஸ்லாமிய சமயத்தில் பலர் சேர்ந்தனர். குறிப்பாக கீழ்ச்சாதி மக்கள் இப்புது சமயத்தைத் தழுவினர். இதன் மூலம் இவர்கள் வேத வைதீக சனாதன சமய சாதித் தளைகளிலிருந்து விடுபட்டனர். தமிழ் நாட்டில் சாதிக் கொடுமைகள் குறைந்தன.

கலை வளர்ச்சி

முகமதியரின் தொடர்பால் தமிழ் நாட்டில் கலை வளர்ச்சியில் விரும்பத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. தமிழ் நாட்டில் கட்டப்பட்ட மசூதிகளும், பள்ளி வாசல்களும், தர்க்காக்களும் புதிய கட்டடக் கலையை அறிமுகப்படுத்தின. இதேபோன்று பாரம்பரிய இசைக்கலை மரபோடு இஸ்லாமிய இசை மரபும் இணைந்தது. தம்புரா, சிதார் போன்ற புதிய இசைக் கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. தமிழ் மொழியில் உருது, பாரசீக அராபியச் சொற்கள் கலந்தன. இச்சொற்கலப்பால் தமிழ்மொழி மேலும் வளம் பெற்றது. கையெழுத்துக்கலை (ஊயடடபைசயிால) சிறப்புற்றது.

கோட்பாடுகள்

முகமதிய சமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகளான ஒரே கடவுட் கோட்பாடு சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவை தமிழ் நாட்டுச் சிந்தனையாளர்களிடமும், சீர்திருத்தவாதிகளிடையேயும் புரட்சிகரமான மனமாற்றத்தை ஏற்படுத்தியது எனலாம் இதன் விளைவாக பல கடவுள் வழிபாட்டுக்குப் பதில் இறைவனைப் பொது வழிபாட்டுப் பொருளாகக் கருதும் நிலை உருவானது. இராமானுஜரின் விசிஷ்டாதுவைதமும், சாதி

எதிர்ப்புப் போக்கும், அவரது பிரதம சீடரான இராமானந்தர் அனைத்துச் சாதிகளின் மாணவர்களை ஏற்றுக் கொண்டதும், சித்தர்கள் தீவிர சீர்திருத்தவாதிகளாக விளங்கியதும் இஸ்லாம் சமயத் தாக்கத்தின் விளைவுகளே என்று கருதப்படுகிறது.

குறிப்பு

தத்துவம், மருத்துவம்

இஸ்லாமிய இலக்கியங்களும், ஒழுக்க நூல்களும், தர்க்கப் புத்தகங்களும் பொது ஒழுக்கம், கட்டுப்பாடு, அறநெறி பற்றி வலியுறுத்தின. முகமதிய தத்துவம் கருத்தாழமிக்கது. இவற்றின் வழியாகத் தமிழர்கள் இஸ்லாமியரின் வரலாற்றையும், சமயச் சிறப்பையும், சமுதாய சமத்துவத்தையும், வாழ்க்கை ஒழுக்க வழக்கங்களையும், தனிமனித கட்டுப்பாடுகள் பற்றியும் அறிந்து கொள்ள முடிந்தது. மேலும், யுனானி மருத்துவ முறை தமிழ்நாட்டு முகமதியரின் சிறப்புக்குரிய பங்களிப்பாகும். எனவே தமிழ் நாட்டின் மொழி, இலக்கியம், சமுதாயம், சமயம், கலைகள், மருத்துவம் போன்ற பல துறைகளிலும் இஸ்லாமியரின் பணிகளும், பங்களிப்புகளும் பெருமைக்கும், பாராட்டுக்குமுரியவை.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. மதுரை சுல்தானியத்தின் முதல் சுல்தான் யார்?

2. மதுரை சுல்தானியத்தை அபகரித்துக் கொண்ட இரண்டாவது சுல்தான் யார்?

3. ஆப்பிரிக்கப் பயணி இபின் பதூதா யாரை குணக்கேடன் என்று எழுதியுள்ளார்?

4. சமஸ்கிருதத்துக்குப் பதில் எந்த மொழிகள் செல்வாக்கு பெற்றன?

5. முகமதியரின் காலத்தில் எந்த புதிய இசைக் கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டன?

6. எது தமிழ்நாட்டு முகமதியரின் சிறப்புக்குரிய மருத்துவ முறை?

8.9. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

1. ஜலாலுதீன் அசன் ஷா

2. கியாசுதீன் தாமன் ஷா

3. ஜலாலுதீன்

4. உருது-பாரசீக

குறிப்பு

5. தம்புரா, சிதார்

6. யுனானி மருத்துவ முறை

8.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

குறுகிய வினாக்கள்

1. ஜலாலுதீன் அசன் ஷா பற்றி சுருக்கமாக எழுதுக.

2. நசீருதீன் முகமது பற்றி விளக்குக.

3. மதுரை சுல்தானியத்தின் கலை வளர்ச்சி குறித்து எழுதுக

விரிவான வினாக்கள்

1. கியாசுதீன் தாமன் ஷா பற்றி கட்டுரை எழுதுக.

2. மதுரை சுல்தானியத்தின் வீழ்ச்சியும் விளைவும் பற்றி விவாதி.

8.11. கூடுதல் வாசிப்புகள்

Subramania N. A History of Tamil Nadu up to 1336

Rajayyan K. History of Tamil Nadu

பிள்ளை கே.கே. தென்னிந்திய வரலாறு

Nilakanda Sastri K.N. A History of South India

Sathianathair R. History of India

வெங்கடேசன் க. முற்கால தமிழ்நாட்டு வரலாறு

செல்வம் வே. தி. தமிழக: வரலாறும் பண்பாடும்

இராமசாமி அ. தமிழ் நாட்டு வரலாறு

Krishnaswamy Aiyyangar S. South India and her Mohammadan Invaders

Briggs John. History of the Rise of the Mahomedan Power in India: Till the year AD 1612

வானமாமலை, நா. தமிழர் வரலாறும் பண்பாடும்

அலகு - 9

மதுரை நாயக்கர்கள்

குறிப்பு

பாட அமைப்பு

9.1. முன்னுரை

9.2. நோக்கங்கள்

9.3. நாகம நாயக்கர்

9.4. விசுவநாத நாயக்கர்

9.4.1. பாண்டியர் கிளர்ச்சி

9.4.2. மதுரை நாயக்கம்

9.5. குமார கிருஷ்ணப்ப நாயக்கர், 1563-1573

9.5.1. பாளையக்காரர் கிளர்ச்சி

9.5.2. இலங்கைப் படையெடுப்பு

9.6. வீரப்ப நாயக்கர்

9.6.1.மதுரை மிஷன்

9.6.2. சமயப்பணி

9.7. இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர்

9.8. மூன்றாம் கிருஷ்ணப்ப நாயக்கர்

9.8.1. இராபர்ட் நொபிலி

9.8.2. கல்விச் சிறப்பு

9.9. இரண்டாம் வீரப்ப நாயக்கர்

9.10. திருமலை நாயக்கர்

9.10.1. இராமநாதபுரப் பிரிவினை

9.10.2. மூக்கறுப்புப் போர்

9.11. சொக்கநாத நாயக்கர்

9.12. முத்து வீரப்ப நாயக்கர்

9.13. இராணி மங்கம்மாள்

9.13.1. ஆக்கப்பணிகள் மக்கள் நலத்திட்டங்கள்

9.14. விஜயரங்க சொக்கநாதர்

9.15. இராணி மீனாட்சி

9.16. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

9.17. கூடுதல் வாசிப்புகள்

குறிப்பு

9.1. முன்னுரை

மதுரையை விஜயநகரம் கைப்பற்றுவதற்குமுன் பாணத் தலைவர்கள் ஆட்சி செய்து வந்தனர். அவர்கள் சோழர்களுக்கும், பாண்டியர்களுக்கும் முறையே கட்டுப்பட்டு குறுநில அரசர்களாக ஆட்சி செய்து வந்தனர். 13-ஆம் நூற்றாண்டில் சுந்தர பாண்டியனுக்கும் குலோத்துங்க சோழனுக்குமிடையே ஏற்பட்ட போரில் பாணர் தலைவன் பாண்டியருக்குத் துணையாக இருந்தமையால் சோழ நாட்டின் ஒருபகுதியை அவருக்குப் பரிசாக வழங்கினார். 14-ஆம் நூற்றாண்டில் மதுரை விஜயநகர ஆட்சியின்கீழ் வந்தபிறகு மதுரையும் பாணர் பகுதி உட்பட பிற சுற்றுப்பகுதிகளும் விஜயநகரப் பேரரசர் வசம் வந்தன. இப்பகுதிகளை நிர்வகிப்பதற்காக விஜயநகரப் பேரரசர் பல நாயக்கர்களை நியமித்தார். அவர்களுள் மிகவும் முக்கியமான இவர் நாகம நாயக்கர், அவரது மகன் விசுவநாத நாயக்கர் ஆவர். விசுவநாத நாயக்கர் வழிவந்தோர் மதுரை நாயக்கர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். கிருஷ்ணதேவராயர் ஆட்சிக்கால இறுதியில் மதுரை நாயக்கம் (Nayakship of Madurai) தோற்றுவிக்கப்பட்டது. இதைத் தோற்றுவித்தவர் நாகம நாயக்கரின் மகன் விசுவநாத நாயக்கர். இவரை தொடர்ந்து ஆட்சி செய்யத நாயக்கர்களின் ஆட்சியையும் அவர்களின் வீழ்ச்சியையும் இந்த அத்தியாயத்தில் காணலாம்.

9.2. நோக்கங்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர் கீழ் கண்டவற்றை அறிய முடியும்

- நாயக்கர்களின் வளர்ச்சி மற்றும் வீழ்ச்சி குறித்து அறிய உதவுகிறது.
- விஜய நகரப் பேரரசின் கீழ் மதுரை நாயக்கர்கள் எவ்வாறு ஆட்சி செய்தன என்பதை தெரிந்து கொள்ள முடியும்.
- திருமலை நாயக்கர் மற்றும் இராணி மங்கம்மாள் போற்ற நிர்வாக திறமை கொட்ட மன்னர்களின் வரலாறையும் காண முடியும்.

9.3. நாகம நாயக்கர்

நாகம நாயக்கரின் ஆட்சியின் போது விஜயநகரப் பேராதிக்கத்துக்கு உட்பட்டிருந்த வீரசேகர சோழருக்கும் சந்திரசேகர பாண்டியருக்குமிடையே ஏற்பட்ட போரின்போது தோல்வியடைந்த பாண்டியர் விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயரிடம் முறையிட்டார். பேரரசர் இத்தகராறைத் தீர்த்துவைக்குமாறு நாகம நாயக்கருக்குக்

குறிப்பு

கட்டளை பிறப்பித்தார். நாகம நாயக்கர் சோழ மன்னர் பாண்டியரிடமிருந்து ஆக்கிரமித்த பகுதிகளைப் பாண்டியரிடம் ஒப்படைக்காமல் தன் மேலாண்மையின்கீழ் வைத்துக் கொண்டார். மேலும், விஜயநகர ஆட்சியிலிருந்து விடுபடுவதாகவும் அறிவித்தார் நாகமர். நாகம நாயக்கரின் கீழ்ப்பணியாமை கண்டு கிருஷ்ணதேவராயர் கோபம் கொண்டார். எனவே அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமான விசுவநாத நாயக்கரை மதுரைக்கு அனுப்பி கிளர்ச்சிக்காரர் நாகம நாயக்கரை கைது செய்யுமாறு ஆணையிட்டார். பேரரசரின் பரம விசுவாசியான விசுவநாத நாயக்கர் பலமிக்கப் படையுடன் மதுரைக்கு வந்து தந்தை நாகம நாயக்கரைக் கைது செய்து தனது கடமையை நிறைவேற்றினார். இந்த இராஜவிசுவாசத்தைப் பாராட்டி விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயர் விசுவநாத நாயக்கரை மதுரை நாயக்கராக நியமித்தார் (1529). தந்தையைக் கைது செய்து மதுரையின் முதல் நாயக்கரானார் விசுவநாத நாயக்கர்.

9.4. விசுவநாத நாயக்கர்

கிருஷ்ணதேவராயரால் மதுரை நாட்டு நாயக்கராக நியமிக்கப்பட்ட விசுவநாத நாயக்கர் அவருக்குப்பின் வந்த அச்சுதராயரால் முறையாக முடிசூட்டப்பட்டார். முறையாக மதுரையின் முதல் நாயக்க மன்னராகப் பிரகடனப்படுத்தப்பட்ட விசுவநாத நாயக்கர் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார். முதலில் தலைநகரை பலப்படுத்தினார். தனது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின் நிர்வாகத்தைத் திருத்தி அமைத்தார். விசுவநாத நாயக்கரின் நிர்வாகச் சீர்திருத்தங்களுக்கு அவரது நம்பிக்கைக்குரிய வலக்கரத் தளபதியான அரியநாத முதலியார் தோன்றாத் துணையாக இருந்தார் அவரது நிழலாகச் செயல்பட்டார். அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டதாகவும் கூறப்படுகிறது.

9.4.1. பாண்டியர் கிளர்ச்சி

விசுவநாதர் மதுரை நாயக்கரானதைப் பாண்டியர் ஏற்றுக் கொள்ளவில்லை. தென்பாண்டிப் பாண்டியர் மதுரை நாயக்கர் ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். இக்கிளர்ச்சியை முளையிலேயே கிள்ளி எறியும் முயற்சியை மேற்கொண்டார் விசுவநாதர். பாண்டியர் கிளர்ச்சியை முறியடிக்க விசுவநாத நாயக்கர் அவரது போர்வாளான அரியநாத முதலியாரை அனுப்பினார். அவர் பாண்டியக் கிளர்ச்சிக்காரர்களைத் தோற்கடித்து அவர்களது கோட்டையையும், அகழியையும் தகர்த்துவிட்டார். விசுவநாத நாயக்கர் பாண்டியர் கோட்டை இருந்த இடத்தில் இரண்டு சுவர்களைக் கொண்ட விரிவான கோட்டையை எழுப்பினார். அதை 72 படைப் பிரிவுகள் பாதுகாத்தன. மேலும், வைகை ஆற்றின் மேற்குப் பகுதியில் வாய்க்கால்களை வெட்டி, அவற்றின் வழியாக வைகை நீரைப் பாசனத்துக்குப் பயன்படுத்தினார். இக்கால்வாய்த் திட்டமே பின்னர் பேரணையாகவும், சிற்றணையாகவும்

குறிப்பு

சிறப்புற்றது. விசுவநாத நாயக்கரின் ஆட்சிக் காலத்தில் திருவாங்கூர் மன்னர் விஜயநகரப் பேரரசுக்குக் கப்பம் கட்ட மறுத்துவிட்டார். பேரரசர் அச்சுதராயர் திருவாங்கூர் மன்னரைப் பணியவைக்கும் பொருட்டு படையெடுத்து வந்து ஸ்ரீரங்கத்தில் முகாமிட்டிருந்தார். அப்போது விசுவநாத நாயக்கர் பேரரசருக்குப் படை உதவியும், பொருள் உதவியும் செய்தார். காலத்தே செய்த விசுவநாதரின் உதவியுடன் தாமிரபரணி ஆற்றங்கரையில் நடைபெற்ற போரில் திருவாங்கூர் மன்னர் தோற்கடிக்கப்பட்டார் திறை செலுத்த சம்மதித்தார். விசுவநாத நாயக்கர் விஜயநகரப் பேரரசர் அச்சுதராயருக்குச் செலுத்திய நன்றிக்கடன் இது.

9.4.2. மதுரை நாயக்கம்

விசுவநாத நாயக்கர் தோற்றுவித்த மதுரை நாயக்கம் தனித்தன்மையுடையது. இது செஞ்சி, தஞ்சை, நாயக்கங்களிலிருந்து வேறுபட்டது. அதற்குக் காரணங்கள் மூன்று: 1) நாயக்கர் ஆட்சிக்குப் பாண்டியர் தொடர்ந்து காட்டிய எதிர்ப்பு 2) மதுரைக்கு அண்மையில் இருந்த திருவாங்கூர் மன்னரின் பேரரசுக்கு எதிரான போக்கு 3) பேரரசின் தலைநகருக்கும் மதுரைக்கும் இடைப்பட்ட தூரம். இம்மூன்று சூழ்நிலைகளும் மதுரை நாயக்கம் தனித்தன்மையுடன் உருவாகக் காரணமாக இருந்தன. எனவே, விசுவநாத நாயக்கரின் நிலை பிற நாயக்கர்களின் நிலையைவிட உயர்வாக இருந்தது.

விசுவநாத நாயக்கர் விஜயநகரப் பேரரசின் விசுவாசி அரசியல் விவேகி தெளிவான தீர்க்கதரிசனமுடையவர் பிறர் திறமையை நன்கு பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தவர் புதுமைகளைப் புகுத்தும் நேர்மையான நிர்வாகி நாயக்கத்தை மையப்படுத்தி மக்கள் நலத் திட்டங்களை வகுக்கத் தெரிந்த மதியூகி மனித வளத்தை முறையாக நெறிப்படுத்திய மேலாளர். விசுவநாத நாயக்கர் அறிமுகப்படுத்திய பாளையப்பட்டு முறை (ழுடபையசன ளுலளவநஅ) காலத்தை வென்று நின்றது. இவரது நிலையான நிர்வாகச் சீர்திருத்தமாகக் கருதப்படுகிறது.

9.5. குமார கிருஷ்ணப்ப நாயக்கர்

விசுவநாத நாயக்கருக்குப்பின் மதுரை அரியணையேறிய அவரது மகன் கிருஷ்ணப்பர் முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் என்று அழைக்கப்படுகிறார். இவருடைய ஆட்சிக்காலத்திலும் அரியநாத முதலியார் இவருக்குப் பக்கபலமாக இருந்தார். அரியநாதர் தலைக்கோட்டைப் போரில் (1565) பங்கேற்கச் சென்றிருந்தபோது, பாளையக்காரர் கிளர்ச்சி ஏற்பட்டது. நாயக்கர் ஆட்சியை அவருக்குக் கீழிருந்த பாளையக்காரர்களே ஏற்க மறுத்தனர். நாயக்கரைப் போன்றே அவர்களும் சுதந்திரமாகச் செயல்பட விரும்பினர்.

குறிப்பு

9.5.1. பாளையக்காரர் கிளர்ச்சி

தும்பச்சி நாயக்கர் என்ற பாளையக்காரர் பிற பாளையக்காரர்களுடன் சேர்ந்து கொண்டு மதுரை நாயக்கருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார். கிளர்ச்சிக்காரர்கள் பரமக்குடியைக் கைப்பற்றிக் கொண்டனர். கிளர்ச்சி வெள்ளம் தலைக்குமேல் செல்வதற்கு முன் அதைத் தடுக்க முற்பட்டார் கிருஷ்ணப்ப நாயக்கர். தளபதி அரியநாதர் தலைக்கோட்டைப் போரில் பங்கேற்றமையால் அவருக்குப் பதில் பெத்து கேசவப்ப நாயக்கர் தலைமையில் ஒரு படையை அனுப்பினார் விஜயநகரப் பேரரசர். ஆனால் கேசவப்ப நாயக்கர் படை கிளர்ச்சிக்காரர்களால் தோற்கடிக்கப்பட்டது கேசவப்பரும் கொல்லப்பட்டார். எனவே கேசவப்பரின் மகன் சின்ன கேசவப்பன் தலைமையில் ஒரு பெரும்படை அனுப்பப்பட்டது. இப்படை பாளையக்காரர் கிளர்ச்சியை முறியடித்தது. தும்பிச்சி நாயக்கர் கொல்லப்பட்டார். கிளர்ச்சிக்காரர்களின் பகுதிகள் கைப்பற்றப்பட்டன.

9.5.2. இலங்கைப் படையெடுப்பு

விஜயநகரப் பேரரசின் ஆதிக்கம் இலங்கை வரை சென்றிருந்தது. இலங்கை விஜயநகரத்துக்குக் கப்பம் கட்டிக் கொண்டிருந்தது. மதுரை நாயக்கம் ஏற்பட்டபின் இக்கப்பத்தை மதுரை நாயக்கர்கள் வசூலித்து வந்தனர். தும்பிச்சி நாயக்கரின் நண்பரான இலங்கையின் கண்டி மன்னர் திறை செலுத்துவதை நிறுத்திவிட்டார். எனவே கிருஷ்ணப்ப நாயக்கர் இலங்கை மீது படையெடுத்துச் சென்று கண்டி மன்னரைத் தோற்கடித்தார். கண்டி கொள்ளையடிக்கப்பட்டது. கண்டி மன்னர் கப்பம் கட்ட சம்மதித்ததால் இந்த வெற்றிகரமான படையெடுப்பு விலக்கிக் கொள்ளப்பட்டது.

கலைப்பணி

கிருஷ்ணப்ப நாயக்கரின் கலைப்பணி குறிப்பிடத்தக்கது. இவரது ஆட்சிக் காலத்தில் பாளையங்கோட்டைக்கருகே கிருஷ்ணாபுரம் என்ற நகர் எழுப்பப்பட்டது. அந்நகரில் ஆலயம் ஒன்றும் கட்டப்பட்டது. இத்தகைய ஒரு நகர் கடையத்திலும் உருவாக்கப்பட்டது. இவ்விரண்டில் பாளையங்கோட்டை கிருஷ்ணாபுரத்து திருவேங்கடநாதர் ஆலயம் சிற்பக்கலைக்குப் பெயர் பெற்றது. இக்கோயிலின் சிற்பங்கள் நாயக்கர் காலத்து கலைக்கு விளக்கமளிக்கின்றன. இம்மன்னர் மதுரை மீனாட்சிக் கோயிலுக்கும் திருப்பணிகள் செய்துள்ளார். ஆலயப் பராமரிப்புக்காக பல சிற்றூர்களை இறையிலியாக வழங்கினார். கிருஷ்ணப்ப நாயக்கரின் விஜயநகர விசுவாசமும், போர் வெற்றிகளும், கலைத் தொண்டும் மக்களிடையே மிகுந்த பாராட்டைப் பெற்றன. மக்களின் மகத்தான மதிப்பைப் பெற்ற மதுரை நாயக்கர்களில் ஒருவர் கிருஷ்ணப்ப நாயக்கர்.

குறிப்பு

9.6. வீரப்ப நாயக்கர்

கிருஷ்ணப்ப நாயக்கருக்குப் பிறகு அவரது இரண்டு மகன்களும்-வீரப்பன், விசுவநாதன்-கூட்டாக ஆட்சி செய்ததாகக் கூறப்படுகிறது. எனினும் வீரப்ப நாயக்கரே மதுரை மன்னராகவும், அவருக்குத் துணையாக அவரது இளவலும் இருந்தனர். அரியநாத முதலியார் தொடர்ந்து வீரப்ப நாயக்கருக்கு வலக்கரமாகவே விசுவாசத்துடன் நீடித்தார் பிரதானியாகவும், தளவாயாகவும் செயல்பட்டார். வீரப்ப நாயக்கரும் விஜயநகர விசுவாசியாகவே இருந்தார். பெணு கொண்டாவைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த முதலாம் ஸ்ரீரங்கருக்கு நன்றியுணர்வோடு இருந்தார். இருப்பினும் வீரப்பநாயக்கர் பேரரசர் முதலாம் ஸ்ரீரங்கருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ததாகவும் (1583), திறைசெலுத்த மறுத்ததாகவும், விஜயநகரப் பேரரசர் தஞ்சை நாயக்கரின் உதவியோடு வீரப்பரை வல்லத்தில் தோற்கடித்ததாகவும் கூறப்படுகிறது.

9.6.1.மதுரை மிஷன்

வீரப்ப நாயக்கரின் ஆட்சிக்கால இறுதியில் பெர்ணாண்டஸ் பாதிரியார் தலைமையில் புகழ்பெற்ற மதுரை மிஷன் (துநளரவை ஆளைளழைெ) தோற்றுவிக்கப்பட்டது. வீரப்பர் இதைத் தடை செய்யவில்லை. மதுரை மிஷனின் சமயப் பிரச்சாரப் பணி பின்னர் வந்த இராபர்ட் நொபிலி (சுழடிநசவ னந ழேடிடைை, 1606) மகத்தான வெற்றி பெறுவதற்கு வழிவகுத்தார்.

9.6.2. சமயப்பணி

வீரப்பரின் சமயப்பணி சிறப்பானது. வீரப்பர் தனக்கு முதலாம் ஸ்ரீரங்கரால் அளிக்கப்பட்ட அமரநாயக கிராமத்தை கிருஷ்ணாபுரம் திருவேங்கடநாதர் கோயிலுக்கு அர்ப்பணித்துவிட்டார். இவரது ஆட்சியின் போது சிதம்பரம் நடராஜர் கோயிலில் வெள்ளையம்பலமும், வடக்குக் கோயில் ஆயிரங்கால் மண்டபமும், மதுரை மீனாட்சிக் கோயில் தூண்களும் தங்கக் கலசங்கள் அமைக்கப்பட்டன. தில்லை ஆலயத்தைச் சுற்றி அரண் எழுப்பப்பட்டது. வேதியர் குலத்தவருக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இவற்றோடு அருப்புக்கோட்டைக்கு அரணும், திருச்சிக்கோட்டை சீரமைப்பும் நடைபெற்றன.

9.7. இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர்

வீரப்ப நாயக்கரைத் தொடர்ந்து மதுரை மன்னரான இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் விஜயநகரப் பேரரசர் முதலாம் வெங்கடரிடம் இவருக்கு முன்பிருந்த நாயக்கரைவிட அதிக விசுவாசத்துடன் இருந்தார். எனினும் இவரது ஆட்சிக்கால இறுதிக் கட்டத்தில் தமிழ்நாட்டில்

குறிப்பு

பொதுவாக அனைத்து நாயக்கர்களுமே கிளர்ச்சி செய்தனர். இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் விதிவிலக்கல்ல. தஞ்சை அச்சுதப்ப நாயக்கரைப் போன்றே இவரும் திறை செலுத்துவதை நிறுத்திவிட்டார். இவர்களைப் போன்றே செஞ்சி, வேலூர் நாயக்கர்களும் கப்பம் கட்டவில்லை. இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆட்சிக் காலத்தில் மதுரை, தஞ்சை, செஞ்சி நாயக்கங்களில் சுற்றுப்பயணம் செய்த பேராயர் பிமைன்டா (Father Pimenta) பேரரசர் முதலாம் வெங்கடர் மதுரை நாயக்கருடன் போரில் ஈடுபட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார் (1599). எச்சம நாயக்கர் உத்திரமேரூரை முற்றுகையிட்டார். இக்கிளர்ச்சிகளை அடக்க முதலாம் வெங்கடர் மத்வா ஆனந்தா தலைமையில் ஒரு பெரும் படையைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பினார். அவருடன் அவரது மகன்கள் வெங்கடநாதரும், தமேர்வா சென்னா பிறரும் வந்தனர். இப்படை தஞ்சை நாயக்கர் படையை கூடலாத்தூரிலும், காவேரியைக் கடந்து சென்று மதுரை நாயக்கரையும் தோற்கடித்தது. மதுரை நாயக்கர் கப்பம் கட்ட சம்மதித்தார். பின்னர் செஞ்சி, வேலூர் நாயக்கர்களும் தோற்கடிக்கப்பட்டனர். தமிழ்நாட்டு நாயக்கர்கள் அனைவரும் விஜயநகரப் பேரரசர் முதலாம் வெங்கடரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டு திறை செலுத்தினர். இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆட்சிக்கால இறுதியில் அரியநாத முதலியார் இயற்கை எய்தினார் (1601).

9.8. மூன்றாம் கிருஷ்ணப்ப நாயக்கர்

இரண்டாம் கிருஷ்ணப்பரைத் தொடர்ந்து மதுரை மன்னரான அவரது தம்பி மூன்றாம் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆட்சிக் காலத்தில்தான் சேதுபதிகள் தலைமையில் முறையாக அமைக்கப்பட்டது. இது ஒரு வரலாற்று முக்கியத்துவமிக்க நிகழ்ச்சியாகும். சேதுபதி" என்றால் "சேதுவின் காவலன்" என்று பொருள். அதாவது சேதுபதியின் கடமை இராமேஸ்வரம் போகும் பாதையைக் காப்பதாகும். குறிப்பாக இராமேஸ்வரத்துக்கு வரும் பயணிகளைப் பாதுகாப்பது சேதுபதியின் பொறுப்பாகும். போகலூர் அதிபதி சடையத்தேவ உடையார் சேதுபதியாக நியமிக்கப்பட்டார் (1605). இவர்தான் முதல் சேதுபதி. இவர் மறவர் வாழ்ந்த பகுதிக்குத் தலைவரானார். சேது நாட்டின் காவலர். இவர் சேதுபதியாக்கப்பட்டதால் மூன்றாம் கிருஷ்ணப்ப நாயக்கருக்கு மூன்று நன்மைகள் விளைந்தன: 1) இராமநாதபுரம் மாவட்டத்தில் திருடர் தொல்லை தவிர்க்கப்பட்டது 2) கடற்கரைப் பகுதியில் விரைவாகப் பரவிவந்த போர்ச்சுக்கீசியரது ஆதிக்கம் தடுக்கப்பட்டது 3) இராமேஸ்வரம் யாத்ரீகர்களுக்குப் பாதுகாப்பு கிடைத்தது. மதுரை மண்டலத்தில் அமைதி நிலவியது.

9.8.1. இராபர்ட் நொபிலி

இராமநாதபுரத்தில் சடையக்கதேவர் சேதுபதியாக நியமிக்கப்பட்ட அடுத்த ஆண்டு (1606) இத்தாலிய சமயப்பரப்பாளர், கத்தோலிக்கப் பாதிரியார்

குறிப்பு

இராபர்ட் நோபிலி (சுழடிநசவ னந ழேடிடைை) அவரது அரும் பணியைத் துவக்கினார். நொபிலி தமிழ், தெலுங்கு, வடமொழிகளில் புலமை பெற்றவர். தமிழைப் பழுதறப் பயின்று மணிப்பிரவாள நடையில் சரளமாக எழுதினார். தமிழ் உரைநடையின் முன்னோடி. இவர் தமிழில் எழுதிய நூல்கள் பல.

9.8.2. கல்விச் சிறப்பு

மூன்றாம் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆட்சியின் கீழ் இருந்த கல்வி நிலை பற்றி ஜெஸ்யூட் பாதிரியார்களின் கடிதங்களிலிருந்து ஓரளவு அறிந்து கொள்ள முடிகிறது. மதுரையிலிருந்த கல்விக் கூடங்களில் 10,000 மாணவர்கள் கல்வி கற்றார்கள். இவர்கள் அனைவரும் பிராமணர்கள். மாணவர்கள் வகுப்புவாரியாகப் பிரிக்கப்பட்டு கற்பிக்கப் பட்டனர். ஒவ்வொரு வகுப்பிலும் 200லிருந்து 300 மாணவர்கள் வரை இருந்தனர். இப்பள்ளிகளைப் பராமரிப்பதற்கும், ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கவும், ஆசிரியர்களும் மாணவர்களும் உறையுலும், உண்டியும் இலவசமாக வழங்குவதற்கும் தேவையான வசதிகளையும் விஜயநகரப் பேரரசரும், நாயக்கரும் செய்து கொடுத்திருந்தனர்."

பரதவரின் பாதுகாவலர்

மூன்றாம் கிருஷ்ணப்ப நாயக்கர் கடற்கரைப் பகுதியில் மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டிருந்த பரதவர்களை வெளிநாட்டவர் செல்வாக்கிலிருந்து மீட்டு தனது கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வந்தார். கன்னியாகுமரி பகவதி கோயிலுக்கு நிலக்கொடை அளித்தார்.

9.9. இரண்டாம் வீரப்ப நாயக்கர்

மூன்றாம் கிருஷ்ணப்ப நாயக்கரின் மகன் இரண்டாம் வீரப்ப நாயக்கர் ஆட்சிக் காலத்தில் இரண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகள் நடைபெற்றன: முதலாவதாக, விஜயநகரப் பேரரசின் வாரிசுரிமைப் போராட்டத்தில் தலையிட்டது. இரண்டாம் ஸ்ரீரங்கர் அரண்மனைப் புரட்சி"யில் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து பேரரசர் வெங்கடரின் மைத்துனர் ஜக்கராமருக்கும், ஸ்ரீரங்கரின் மகன் இராமதேவருக்கும் இடையே வாரிசுரிமைப் போராட்டம் நடைபெற்றது. இப்போராட்டத்தில் இரண்டாம் வீரப்ப நாயக்கர் ஜக்கராமரை ஆதரித்தார். ஆனால் இப்போராட்டத்தில் வெற்றி பெற்ற இராமதேவர் பேரரசராக முடிசூட்டிக் கொண்டார். எனவே, புதிய பேரரசர் இராமதேவருக்கும் இரண்டாம் வீரப்ப நாயக்கருக்கும் இடையேயான தொடர்பில் விரிசல் ஏற்பட்டது.

குறிப்பு

தலைநகர் மாற்றம்

இரண்டாவதாக, இரண்டாம் வீரப்ப நாயக்கர் தலைநகரை மதுரையிலிருந்து திருச்சிக்கு மாற்றினார் (1616). தலைநகரைத் திருச்சிக்கு ஏன் மாற்ற வேண்டும்? இத்தலைநகர் மாற்றத்துக்குக் காரணம் மதுரை-தஞ்சை நாயக்கர்களுக்கிடையே நடைபெற்ற போராகும். இப்போரை வெற்றிகரமாக முடிப்பதற்கான அரசியல் உத்தியே தலைநகர் மாற்றம். இந்த மாற்றத்துக்குப் பேருதவியாக இருந்தவர் தென்காசிப் பாண்டியர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கிறித்துவ பிராமணர்

இவரது ஆட்சிக் காலத்தில் இராபர்ட் நொபிலி மதுரைக்கு வந்து இந்து சந்நியாசியைப் போன்று காவி உடை அணிந்து, மொட்டையடித்துக் கொண்டு, குடுமி வைத்துக் கொண்டு, பூணூல் அணிந்து, நெற்றியில் சந்தனப் பொட்டிட்டு, ஒரு கையில் தண்டத்தையும், மறுகையில் கமண்டலத்தையும் வைத்துக் கொண்டு கிறித்துவப் பிராமணராகி சமயச் பிரச்சாரம் செய்தார். மதுரை நாயக்கர் சமயப்பொறை காத்தார்.

9.10. திருமலை நாயக்கர்

திருமலை நாயக்கர் மதுரை நாயக்கர்களுடன் மேருவெனத் திகழ்ந்தார். இவர் சிறந்த வீரர், விவேகி, தொலைநோக்குடைய கிளர்ச்சிக்காரர். இவர் முத்துகிருஷ்ணப்ப நாயக்கரின் இரண்டாவது மகன். முத்து வீரப்ப நாயக்கர் இவரது அண்ணன். அண்ணணுக்குத் துணையாக இருந்து நிர்வாக அனுபவம் பெற்றார். இரண்டாம் வீரப்பர் இறந்தவுடன் மதுரை மன்னரானார்.

தலைநகர் மாற்றம்

திருமலை மதுரை மன்னரானவுடன் மேற்கொண்ட முதல் காரியம் தலைநகரைத் திருச்சியிலிருந்து மீண்டும் மதுரைக்கு மாற்றியதேயாகும் (1634). பதினெட்டு ஆண்டுகளுக்குப்பின் இத்தலைநகர் மாற்றம் ஏற்பட்டது. இத்தலைநகர் மாற்றம் திருமலை நாயக்கரின் தொலைப் நோக்குப் பார்வையோடு தெளிவாக முடிவெடுக்கும் திறமைக்கான எடுத்துக்காட்டாகும். இம்முக்கிய முடிவுக்கான காரணங்கள் இரண்டு: 1) மதுரையின் புராதனப் புனிதத்தைப் புதுப்பித்தல் 2) வடக்கிலிருந்து வந்த நெருக்கடிகள் குறைந்தன.

திண்டுக்கல் மீட்பு

தமிழ்நாட்டை ஆங்கிலேயர் ஆட்சி செய்த போது நிகழ்ந்த முதல் மைசூர் போரின் போது மைசூர் மன்னன் சாமராஜ உடையார் மதுரையைத் தாக்கினார். மைசூர் படை திண்டுக்கல்லை

குறிப்பு

முற்றுகையிட்டது. திருமலை நாயக்கர் சதுர்வேதிமங்கல கிராமப்பய்யன் தலைமையில் ஒரு படையை அனுப்பி, மைசூர்ப் படையைத் தோற்கடித்து, திண்டுக்கல்லை மீட்டார். திண்டுக்கல் மைசூர் ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றப்பட்டது (1634).

திருவாங்கூரைப் பணிய வைத்தல்

தவறாது கப்பம் கட்டிவந்த திருவாங்கூர் மன்னன் உன்னி கேரளவர்மன் திருமலை நாயக்கரின் ஆட்சிக் காலத்தில் திறை செலுத்த மறுத்துக் கிளர்ச்சியில் ஈடுபட்டார். திருமலை நாயக்கர் இராமப்பய்யனின் தலைமையில் படையை அனுப்பி திருவாங்கூர் மன்னனுக்குத் தக்க பாடம் கற்பித்தார். சரணடைந்த திருவாங்கூர் மன்னன் திறை செலுத்த சம்மதித்தார்.

9.10.1. இராமநாதபுரப் பிரிவினை

இராமநாதபுரம் சேதுபதிகள் சுயமரியாதை மிக்கவர்கள். ஆனால் தங்களுக்குள் ஒற்றுமையற்றவர்கள். மண்ணின் மைந்தர்களுக்கேயுரிய இப்பண்பு இவர்களிடமும் இருந்தது. மூன்றாவது சேதுபதியான இரண்டாம் சடையக்கத் தேவரும் தம்பி என்பவரும் வாரிசுரிமைக்காகப் போட்டியிட்டனர். போட்டி, போராட்டமாகி, போராட்டம் போர் என்ற நிலையை எட்டியது. தம்பி திருமலை நாயக்கரின் உதவியை நாடினார். வலிய வந்த இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்ட திருமலை நாயக்கர் இராயப்பன் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். சடையத் தேவர் தோற்கடிக்கப்பட்டார். தம்பி சேதுபதியாக்கப்பட்டார் (1637). இராமநாதபுரம் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட இராமநாதபுரம், சிவகங்கை, திருவாடானை ஆகிய மூன்று தனிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. பிரிக்கப்பட்ட இராமநாதபுரம் இரகுநாதருக்கும், சிவகங்கை தம்பிக்கும், திருவாடானை தக்கதேவருக்கும் கொடுக்கப்பட்டன. ஒன்றாக இருந்த இராமநாதபுரம் மூன்றாகப் பங்கிடப்பட்டது. ஒற்றுமையின்மைக்காக சேதுபதிகள் கொடுத்த விலை இது. இப்பிரிவினை பிரித்து ஆட்சி செய்யும் (னுஎைனைந யனெ சுரடந) அரசியல் கலைக்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். இது திருமலை நாயக்கரின் அரசியல் சாணக்கியத்துக்கான சான்றாகும்.

பேரரசுக்கெதிரான கிளர்ச்சி

தன்னைப் பலப்படுத்திக் கொண்ட திருமலை நாயக்கர் விஜயநகரப் பேரரசிலிருந்து விடுபடுவதற்கான தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்தார். அந்த வாய்ப்பும் வலிய வந்தது. வேலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வந்த மூன்றாம் ஸ்ரீரங்கர் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ளவும், விரைந்து வலிமை பெற்றுவந்த திருமலை நாயக்கரை அடக்கவும் படையெடுத்தார். இப்படையெடுப்பைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட திருமலை நாயக்கர் கோல்கொண்டா சுல்தானின் உதவியுடன்

குறிப்பு

ஸ்ரீரங்கரைத் தோற்கடித்தார் (1646). தோல்வியடைந்த பேரரசர் ஸ்ரீரங்கன் மைசூருக்குச் சென்றுவிட்டார். மதுரை காப்பாற்றப்பட்டது. ஆனால் கோல்கொண்டா சுல்தான் வழியாக முகலாய ஒட்டகம் தமிழ்நாட்டுக் கூடாரத்துக்குள் நுழைந்தது. திருமலை சூழ்ச்சியால் தனது தலைநகரைக் காப்பாற்றினார் என்றாலும் ஒரு பொது அபாயத்தைத் தமிழகத்துக்கு வரவழைத்த தவறைச் செய்தார்.

கோல்கொண்டா சுல்தானின் உதவியுடன் விஜயநகரப் பேரரசர் ஸ்ரீரங்கரை வெற்றி கொண்டதற்கான விலையை விரைவிலேயே கொடுக்க வேண்டியதாயிற்று. தமிழ் நாட்டுக்குள் நுழைந்த கோல்கொண்டா முகலாயப் படை வேலூரைக் கைப்பற்றிக் கொண்டு செஞ்சியை நோக்கி முன்னேறியது. செஞ்சியைக் காப்பாற்றுவதற்காக திருமலை நாயக்கர் பீஜப்பூர் சுல்தானின் உதவியை நாடினார். தமிழ்நாட்டுக்கு வந்த பீஜப்பூர் படை கோல்கொண்டா படையுடன் சேர்ந்து கொண்டு செஞ்சியை சூறையாடின் அங்கு சேர்த்து வைக்கப்பட்டிருந்த செல்வம் அனைத்தும் முகமதியர் வசம் வந்தது. செஞ்சியைக் கைப்பற்றிய கோல்கொண்டா-பீஜப்பூர் கூட்டுப்படை தஞ்சை வழியாக மதுரைக்கு முன்னேறியது. மதுரை தாக்கப்பட்டது. திருமலை நாயக்கர் சுல்தான்களைத் திருப்தி செய்து மதுரையைக் காப்பாற்றினார்.

9.10.2. மூக்கறுப்புப் போர்

திருமலை நாயக்கரிடம் தோல்வியுற்று மைசூர் சென்ற விஜயநகரப் பேரரசர் ஸ்ரீரங்கருக்கு அடைக்கலம் கொடுத்த மைசூர் மன்னன் உடையார் கந்தர்வ நரசராஜா மதுரை நாயக்கரைத் தண்டிப்பதற்காக ஒரு பழிவாங்கும் படையை அனுப்பினார். அப்படை விரைந்து வந்து சத்தியமங்கலத்தைக் கைப்பற்றியது (1656). மைசூர் படையினர் கிராமங்களைக் கொள்ளையடித்தனர் வீடுகளை எரித்தனர் தப்பியோடியோரின் மூக்குகளை அறுத்துக் கொடுமைப்படுத்தினர். பேரழிவை ஏற்படுத்திய மைசூர் படை மதுரையை நோக்கி முன்னேறியது. இந்த நெருக்கடியான நேரத்தில் திருமலை நாயக்கர் இராமநாதபுரம் சேதுபதி இரகுநாதரின் ஆதரவுடன் திண்டுக்கல்லில் முகாமிட்டிருந்த மைசூர் படையை மூர்க்கத்துடன் தாக்கினார். தோற்று ஓடிய மைசூர்ப் படையினரின் மூக்கறுத்துப் பழிக்குப் பழி வாங்கினார். இப்படையெடுப்பின் போது மூக்கறுப்பு முக்கிய இடத்தைப் பிடித்தமையால் மூக்கறுப்புப் போர் என்று வர்ணிக்கப்படுகிறது. இவ்வியத்தகு வெற்றிக்குப் பெரிதும் காரணமான இரகுநாதருக்கு திருமலை சேதுபதி என்று பட்டப் பெயரிட்டுப் பாராட்டினார் திருமலை நாயக்கர்.

சாதனைகள்

மதுரையை ஆட்சி செய்த நாயக்க மன்னர்களுக்குள் திருமலை நாயக்கருக்கு நிலையான இடம் உண்டு. இவரது சாதனைகள் பல: 1) இவர் விஜயநகரப் பேரரசின் ஆதிக்கத்திலிருந்து முற்றிலுமாக விடுபட்டு

குறிப்பு

சுதந்திர ஆட்சியை அமைத்த முதல் மதுரை நாயக்க மன்னர். 2) தொலைநோக்குடன் தலைநகரை திருச்சியிலிருந்து மதுரைக்கு மாற்றினார். 3) பல்வேறு உட்புற, வெளிப்புற நெருக்கடிகளுக்குள்ளான மதுரை நாயக்கத்தைப் பாதுகாத்து அதன் பலத்தையும், புகழையும், பெருமையையும் உயர்த்தினார். 4) போர் நாயகரான இவர் போர்களின் மூலம் கிளர்ச்சிக்காரர்களை அடக்கி மதுரை நாயக்கத்தைக் கட்டுக்குலையாமல் காத்தார். இதற்காக இவர் எந்த வழியையும் கையாளத் தவறவில்லை. 5) இராஜதந்திரமும், சாணக்கியமும், சந்தர்ப்ப சாமர்த்தியமும் இவரது வெளியுறவுக் கொள்கை வெற்றிபெற உதவின. 6) இவர் காலத்தில் கட்டப்பட்ட அரண்மனை, புதுமண்டபம், தமுக்கம் அரண்மனை, தெப்பக்குளம், சத்திரங்கள், நெடுஞ்சாலைகள், ஆலயத் திருப்பணிகள் ஆகியவை இவரது கலை ஆர்வத்துக்கும், மக்கள் நல நாட்டத்துக்குமான எடுத்துக்காட்டுகளாகும். திருமலை நாயக்கர் சமஸ்கிருத மேதை நீலகண்ட தீட்சிதரின் புரவலர் என்பது நினைவு கூறத்தக்கது.

மதிப்பீடு

திருமலை நாயக்கர் பல பரிமாண மதுரை மன்னர். இவர் அடிப்படையிலேயே போர் வீரர் கிளர்ச்சிக்காரர். இவரது படையெடுப்புகள் அனைத்தும் மதுரை நாயக்கத்தைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டவையாகும். இவர் நிகழ்த்திய போர்கள் இவர் இடர்பாடுகளைச் சமாளிக்கும் மனப்பான்மைக்கும், மனத்திண்மைக்குமான சான்றுகளாகும். சேதுபதிகளை இவரது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளப் பயன்படுத்திக் கொண்டார். திருமலை தன்னைக் காத்துக் கொள்வதற்காகப் பேரரசையும் எதிர்க்கத் தயங்கவில்லை. மூக்கறுப்புப் போர் இவரது பழிவாங்கும் போக்குக்கான எடுத்துக்காட்டாகும். மனிதனின் மிருக உணர்ச்சியின் வெளிப்பாடாகும். திருமலை நாயக்கர் டச்சுக்காரர்களைவிட போர்ச்சுக்கீசியருக்கே ஆதரவாக இருந்தார். இவரது ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் கிறித்துவ சமயம் பரவியது. இவர் கோல்கொண்டா, பீஜப்பூல் சுல்தான்களின் உதவியை நாடியது சந்தர்ப்பவாத அரசியலாகும். இது இவரது அரசியல் விவேகத்தின் மீது படிந்த களங்கமாகும். இதேபோன்று இவரது ஒழுக்கக்கேடுகள் இவரது நடத்தை மீது படிந்த கரையாகும். இவரது சுயநலமும், துரோகமும் மறைக்க முடியாதவை. எனினும் திருமலை நாயக்கர் எழுப்பிய கட்டிடங்களும், மக்கள் நலப் பெருக்கத்துக்காக மேற்கொண்ட திட்டங்களும் வரலாற்றுப் பாறை மீது செதுக்கப்பட்ட கல்வெட்டுகளாகும். எந்த அளவுகோலைக் கொண்டு மதிப்பிட்டாலும் திருமலை நாயக்கர் மதுரை நாயக்கர்களிலேயே தனித்து ஒளிரக்கூடியவர் என்பதில் ஐயமில்லை.

9.11. சொக்கநாத நாயக்கர்

குறிப்பு

திருமலை நாயக்கருக்குப்பின் மதுரை அரியணையேறிய அவரது பேரன் சொக்கநாதர் தாத்தா செய்த தவறைத் திருத்த முற்பட்டு பல நெருக்கடிகளுக்கு உள்ளானார். திருமலை நாயக்கர் விஜயநகரப் பேரரசருக்கு விசுவாசமில்லாது, அவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தது பெரிய தவறு என்று கருதினார் சொக்கநாதர். இளவயதில் மன்னரான இவர் தாத்தாவின் கொள்கையைப் புறக்கணித்து விஜயநகரப் பேரரசர் மூன்றாவது ஸ்ரீரங்கனரின் மேலாண்மையை விசுவாசத்துடன் ஏற்றுக் கொண்டார். மீண்டும் மதுரை நாயக்கம் விஜயநகரப் பேரரசின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டது. மதுரை நாயக்கம் அதன் சுதந்திரத்தை இழந்தது.

திருச்சி முற்றுகை

பீஜப்பூர் வசமிருந்தது செஞ்சி. செஞ்சியின் ஆளுநர் ஷாஜி திருச்சி மீது படையெடுத்துச் சென்று முற்றுகையிட்டார். அவருக்குத் துணைபோனார் தஞ்சை நாயக்கர். சொக்கநாதர் தக்க தருணத்தில் தலையிட்டு இக்கூட்டு முற்றுகையை முறியடித்தார். ஷாஜி செஞ்சிக்குத் தப்பிச் சென்றார். மதுரை நாயக்கர் சொக்கநாதருக்குக் கிடைத்த முதல் வெற்றி இதுவாகும்.

தஞ்சைப் படையெடுப்பு

திருச்சி முற்றுகைக்குத் துணைபோன தஞ்சை நாயக்கரைத் தண்டிக்கத் தீர்மானித்த சொக்கநாதர், தஞ்சை மீது படையெடுத்தார். இப்படையெடுப்பின் போது தஞ்சை விஜயராகவ நாயக்கர் கொல்லப்பட்டார். தஞ்சை மதுரையுடன் இணைக்கப்பட்டது. அழகிரி நாயக்கர் தஞ்சை ஆளுநராக நியமிக்கப்பட்டார். அழகிரி சொக்கநாதரின் வளர்ப்புச் சகோதரன் (சின்னம்மாவின் மகன்). இத்தஞ்சை வெற்றி சொக்கநாதர் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற நினைவுகூறத்தக்க நிகழ்ச்சியாகும்.

சேதுபதியின் கிளர்ச்சி

மறவர் நாட்டு திருமலை சேதுபதி மதுரை நாயக்கத்துக்குக் கீழ்ப்பணிய மறுத்துக் கிளர்ச்சி செய்தார். நெருக்கடியான நேரத்தில் சொக்கநாதருக்கு உதவி செய்ய மறுத்தார். எனவே சேதுபதியைப் பணிய வைப்பதற்காக சொக்கநாதர் மறவர் நாட்டின் மீது படையெடுத்துச் சென்றார். திருப்பத்தூர், புதுக்கோட்டை, மானாமதுரை, காளையார் கோயில் கோட்டைகள் கைப்பற்றப்பட்டன. எனினும் இறுதியில் நாயக்கர் படை தோல்வியைத் தழுவியது.

குறிப்பு

தலைநகர் மாற்றம்

தாத்தா திருமலை நாயக்கர் தலைநகரைத் திருச்சியிலிருந்து மதுரைக்கு மாற்றினார். பேரன் சொக்கநாத நாயக்கர் தலைநகரை மீண்டும் திருச்சிக்கே மாற்றினார் இத்தலைநகர் மாற்றம் எதற்காக? வடவர் படையெடுப்புகளிலிருந்து மதுரை நாயக்கத்தைப் பாதுகாக்கும் பொருட்டே இத்தலைநகர் மாற்றம் செய்ததாகக் கருதப்படுகிறது. குறிப்பாக மைசூர் படையெடுப்பைத் தடுக்கவே இம்மாற்றமாகும்.

ஈரோட்டுப் போர்

விஜயநகரப் பேரரசரைத் தன் மேலாளராக ஏற்றுக்கொண்ட சொக்கநாதர் செஞ்சி நாயக்கத்தை முகமதியர் பிடியிலிருந்து விடுவித்து விஜயநகர ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்! இம்முயற்சியின் முதல் கட்டமாக சொக்கநாதர் தமிழ்நாட்டில் மைசூரின் ஆதிக்கத்தை அகற்ற முடிவு செய்தார். இதற்கென ஒரு கூட்டமைப்பை உருவாக்கினார். இக்கூட்டமைப்பை தஞ்சை நாயக்கரும், தாமெர்லா அய்யப்பாவும், பீஜப்பூர் தளபதியும் ஆதரித்தனர். இக்கூட்டமைப்புப் படையும் மைசூர் படையும் ஈரோட்டில் மோதின. இப்போரில் இக்கேரி நாயக்கரும் பங்கேற்றதாகக் கருதப்படுகிறது. ஈரோட்டுப் போரில் சொக்கநாதரின் கூட்டுப்படை தோற்றது. இத்தோல்வியின் விளைவாக விஜயநகரப் பேரரசர் மூன்றாம் ஸ்ரீரங்கர் இக்கேரியில் தஞ்சம் அடைந்தார். தமிழ்நாட்டில் விஜயநகரப் பேரரசின் ஆதிக்கம் முழுதுமாக அகற்றப்பட்டது. சொக்கநாத நாயக்கரின் விசுவாச ஆசை நிராசையாயிற்று.

மராத்தியர் நுழைவு

சொக்கப்பரால் தஞ்சை ஆளுநராக நியமிக்கப்பட்ட அழகிரி நன்றி கொன்று மதுரை நாயக்கருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார். கப்பம் கட்ட மறுத்தார். சுயேட்சையாக செயல்படத் துவங்கினார். சொக்கநாதருக்கும் அழகிரிக்குமிடையே மோதல் ஏற்படும் சூழ்நிலை உருவாயிற்று. இச்சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்ட அழகிரியின் முன்னாள் இராயசம் ஆட்சியைக் கைப்பற்ற சூழ்ச்சி செய்தார். அழகிரி தஞ்சையிலிருந்து துரத்தப்பட்டார். அழகிரிக்குப் பதிலாக விஜயராகவ நாயக்கரின் மகன் செங்கமலதாசை அரியணையில் அமர்த்த பீஜப்பூர் சுல்தானின் உதவியை நாடினார் வெங்கண்ணா. தேடிவந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட பீஜப்பூர் சுல்தான் ஏகோஜி என்ற வெங்காஜி என்ற மராத்திய தளபதியின் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். தஞ்சைக்கு வந்த வெங்காஜி வெங்கண்ணாவுக்கு உதவாமல் தஞ்சையைக் கைப்பற்றிக் கொண்டார். தஞ்சையில் நாயக்கர் ஆட்சி முடிந்து மராத்தியர் ஆட்சி துவங்கியது.

குறிப்பு

சொக்கநாதரின் சோகம்

சொக்கநாத நாயக்கர் ஆட்சியின் இறுதிக்கட்டம் சோகப்படலமாகும். சொக்கநாதரின் நடவடிக்கைகளால் கருவூலம் காலியாயிற்று. மதுரை நாயக்கியம் பொருளாதார நெருக்கடியில் சிக்கியது. தஞ்சை வெங்காஜி வசமாயிற்று. மதுரை குழப்பக் காடாயிற்று. இக்குழப்பத்துக்கிடையே ருசுதும்கான் என்ற குதிரை வீரன் திருச்சி அரண்மனையைக் கைப்பற்றிக் கொண்டார். இரண்டாண்டு காலம் ஆட்சி செய்தார். மைசூர் படை திருச்சியை முற்றுகையிட்டது (1680). அடுக்கடுக்காக ஏற்பட்ட நெருக்கடிகளை எதிர்க்கொள்வதிலேயே சொக்கநாதரின் கடைசி காலம் கழிந்தது. மதுரை நாயக்கராட்சி வலிவும் பொலிவும் இழந்தது. சோகத்தில் ஆழ்ந்த சொக்கநாதரை அவரது இளவல் முத்துலிங்க நாயக்கர் அரியணையை விட்டு அகற்றினார் (1678). ருஸ்தம்கான் என்ற முஸ்லீம் தளபதி முத்துலிங்கத்தை விரட்டிவிட்டு சொக்கநாதரை மீண்டும் மதுரை மன்னராக்கிவிட்டு ஆட்சிப் பொறுப்பை தன்னிடம் வைத்துக் கொண்டார். செயல்படா நாயக்கராக செயல்பட்ட சொக்கநாதர் 1682 ஆம் ஆண்டு மாரடைப்பால் மரணமடைந்தார்.

மதிப்பீடு

சொக்கநாத நாயக்கரின் எழுச்சியும் வீழ்ச்சியும் அவருக்குப்பின் வந்தோருக்குப் பல பாடங்களைக் கற்பிக்கக் கூடியவையாய் இருந்தது. சொக்கநாதர் ஆட்சியின் முற்பகுதி வெற்றியில் துவங்கினாலும் பிற்பகுதி தோல்வியில் முடிந்தது. சொக்கநாதர் அவரது தாத்தா போட்டுக்கொடுத்த சுதந்திரப் பாதையிலிருந்து விலகிச் சென்றது அவர் செய்த தலையாய தவறாகும். இத்தவறின் விளைவுகளை சொக்கநாதர் அவர் வாழ்நாள் முழுவதும் எதிர்க்கொள்ள வேண்டியதாயிற்று. மதுரை மராத்தியர் வசமாயிற்று. இராமநாதபுரத்தில் கிழவன் சேதுபதி தன் நிலையைப் பலப்படுத்திக் கொண்டார். தமிழ்நாட்டில் கிறித்துவ சமயம் விரைந்து பரவியது. மதுரை நாயக்கர் தஞ்சை நாயக்கரின் மறுபதிப்பாக மாறிவிட்டார். வீரமும் விசுவாசமும் இவருக்குக் கைகொடுக்கவில்லை. புலியாக வாழ வேண்டியவர் எலியாகத் தாழ்ந்தார். மக்களின் மதிப்பை இழந்த சொக்கநாத நாயக்கர் சூழ்நிலைக் கைதியானார்.

9.12. முத்து வீரப்ப நாயக்கர்

இருபத்தி மூன்றாண்டுகால சொக்கநாத நாயக்கரின் கொந்தளிப்புமிக்க ஆட்சிக்குப் பிறகு அவரது மகன் முத்து வீரப்பர் மதுரை நாயக்கரானார். சொக்கநாதருக்கும் மங்கம்மாளுக்கும் பிறந்தவர் முத்து வீரப்பர். இவர் சொக்கநாதர் விட்டுச் சென்ற பிரச்சனைகளோடு போராடினார். தமிழ்நாட்டின் வடபகுதி மைசூர் மன்னனின் கட்டுப்பாட்டில் இருந்தது. தஞ்சை மராத்திய மன்னன் சாம்பாஜியின் ஆதிக்கத்தின் கீழ்

குறிப்பு

வந்தது. மதுரையைக் கைப்பற்ற மைசூர் மன்னனும், தஞ்சை மன்னனும் போட்டி போட்டனர்.

அமைதியான ஆட்சி

முதலில் மைசூர் படை மதுரையை நோக்கி முன்னேறியது. இதை அறிந்த தஞ்சை மராத்திய மன்னன் சாம்பாஜி மைசூரைத் தாக்கினார். மதுரையிலிருந்த மைசூர் படை மைசூருக்குப் பின்வாங்கிச் சென்றது. மதுரைக்கு மலைபோல் வந்த ஆபத்து பனிபோல் மறைந்தது. எதிர்பாராத இத்திருப்பத்தால் மதுரையில் அமைதி நிலவியது. அந்த அமைதியைக் குலைக்கும் வகையில் கிழவன் சேதுபதி மதுரையைக் கைப்பற்ற முயற்சித்தார். ஆனால் அம்முயற்சி முறியடிக்கப்பட்டது. நெருக்கடியிலிருந்து விடுபட்ட முத்து வீரப்ப நாயக்கர் உள்நாட்டு விவகாரங்களில் அக்கறை கொண்டார். புயலுக்குப் பின் அமைதி என்று கூறுவதைப் போல அமைதியாக ஆட்சி செய்து அமரரானார் முத்து வீரப்ப நாயக்கர்.

9.13. இராணி மங்கம்மாள்

சொக்கநாத நாயக்கர் இறந்த போது அவரது வாரிசு மகன் விஜயரங்க சொக்கநாதனுக்கு வயது மூன்று மாதம். மூன்று மாதக் குழந்தையை முறைப்படி மதுரை நாயக்கராக்கிவிட்டு அவருக்குப் பதிலாட்சியராகப் (Regent) பொறுப்பேற்றார் அக்குழந்தையின் பாட்டி மங்கம்மாள். பதினேழாண்டுகள் மதுரை நாயக்கத்தை ஆட்சி செய்து புதிய சகாப்தம் படைத்துச் சிறப்புச் சாதனை செய்தார் மாதர் மேதை மங்கம்மாள். திருச்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார்.

இராணி மங்கம்மாள் முகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பின் (1658-1707) சமகாலத்தவர். வயதில் மூத்தவரும் ஆட்சி அனுபவத்திலும் போராற்றலிலும் சிறப்புற்ற முகலாயப் பேரரசர் தக்காணத்தை அவரது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்தார். அந்த காலகட்டத்தில் அவர் அவரது தளபதி சுல்பிகர்கானை தமிழ்நாட்டுக்கு அனுப்பினார். தமிழ்நாட்டுக்கு வந்த தளபதி செஞ்சியையும், தஞ்சையையும் எளிதில் கைப்பற்றினார். வினை வலியும், தன் வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச் செயல் பேடத் தெரிந்த இராணி மங்கம்மாள் முகலாயத் தளபதியை விலை உயர்ந்த பொருட்களை அன்பளிப்பாகக் கொடுத்து, உபசரித்து, வரவேற்பளித்தார். முகலாயப் பேரரசர் ஔரங்கசீப்புக்குக் கப்பம் கட்ட சம்மதித்தார். பதிலுக்கு மராத்தியரிடம் இழந்த பகுதிகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டார். பெண் சாணக்கியர் வெற்றி பெற்றார். பெருமைப் பண்பு எக்காலத்திலும் பணிந்து நடக்கும்.

திருவாங்கூர் படையெடுப்பு

குறிப்பு

இராணி மங்கம்மாளின் ஆட்சியின் போது மதுரை நாயக்கத்தைச் சுற்றிலும் விரோதிகள். அவர்களில் ஒருவர் திருவாங்கூர் மன்னர். மங்கம்மாளின் திறமையைக் குறைத்து மதிப்பிட்ட அவர் திறை செலுத்த மறுத்துவிட்டார். அவருக்குத் தக்க பாடம் கற்பிக்கத் தீர்மானித்த மங்கம்மாள் அவரது போர்க்கரமாக இருந்த நரசப்பய்யனின் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். அப்படையிடம் தோல்வியடைந்த திருவாங்கூர் மன்னர் மங்கம்மாளின் மேலான்மையை நிபந்தனையின்றி ஏற்றுக் கொண்டு திறை செலுத்த சம்மதித்தார். மேலும், தளவாய் நரசப்பய்யனிடம் ஏராளமான பொன்னையும், பொருட்களையும், பீரங்கிகளையும் ஒப்படைத்தார். திருவாங்கூரிலிருந்து கொண்டு வரப்பட்ட பீரங்கிகளைக் கொண்டு மதுரை, திருச்சி காப்பரண்களைப் பலப்படுத்தினார் இராணி மங்கம்மாள்.

தஞ்சைப் படையெடுப்பு

தஞ்சையை ஆட்சி செய்த மராத்திய மன்னன் ஷாஜி மதுரை நாயக்கத்தின் உடலில் குத்திய முள்ளாகவே இருந்தார். பகைமை பாராட்டி வந்தார். மதுரைக்குச் சொந்தமான பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார். அப்பகுதிகளை மீட்கும் பொருட்டு இராணி மங்கம்மாள் நரசப்பய்யன் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். அப்படை மராத்தியப் படையை தலைநகருக்கருகே தோற்கடித்தது. இத்திடீர்த் தாக்குதலால் நிலைகுலைந்து போன மராத்திய மன்னன் ஷாஜி ஏராளமான பொருட்களைக் கொடுத்து சமாதானம் செய்து கொண்டார்.

மைசூருடன் மோதல்

மைசூர் மன்னர்களும் மதுரை நாயக்கர்களும் நெடுங்காலப் பகைவர்கள். ஆண்டுக்காண்டு பகை பெருகியதேயன்றி குறையவில்லை. மங்கம்மாள் தஞ்சை மீது படையெடுத்த நேரம் பார்த்து மைசூர் மன்னன் சிக்கதேவராயர் அனுப்பிய படை தமிழ் நாட்டின் மீது படையெடுத்து வந்து சேலம், கோவை, திருச்சி ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டு மதுரை நோக்கி முன்னேறியது. எனினும் மதுரையை முற்றுகையிட்ட மைசூர் படை தோற்கடிக்கப்பட்டது. தோல்வியைத் தழுவிய மைசூர் மன்னன் காவேரி ஆற்றுக்குக் குறுக்கே ஒரு அணையைக் கட்டி தஞ்சைக்கும் மதுரைக்கும் நீர் நெருக்கடியைக் கொடுத்தார். தஞ்சை மன்னருடன் சமாதானம் செய்து கொண்டிருந்த இராணி மங்கம்மாள் மதுரை-தஞ்சை கூட்டுப்படையை மைசூர் மன்னன் சிக்கதேவராயருக்கு எதிராக அனுப்பினார். ஆனால் அப்படை மைசூரை அடைவதற்குமுன் பேய்மழை பெய்து மைசூர் மன்னன் கட்டிய அணை அடித்துச் செல்லப்பட்டது. மைசூர் படையெடுப்புக்கு அவசியமில்லாமல் போனமையால் அப்படையெடுப்பு கைவிடப்பட்டது. சேதுபதியுடன் மோதல், 1702 தன்மானமிக்க சேதுபதிகள் துவக்கத்திலிருந்தே மதுரை நாயக்கியத்துக்குக் கீழ்ப்பணிந்திருப்பதை விரும்பவில்லை. காலத்தின் கட்டாயத்தால் மதுரையின் மேலாண்மையைப் பொறுத்துக் கொண்டனர்.

குறிப்பு

வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் கிளர்ச்சி செய்தனர். இராணி மங்கம்மாளின் ஆட்சிக்கால இறுதியில் மறவர் நாட்டு கிழவன் சேதுபதி என்று அழைக்கப்பட்ட இரகுநாத சேதுபதி முழு சுயாட்சிகோரி கப்பம் கட்ட மறுத்துவிட்டார். அதுமட்டுமல்ல. மங்கம்மாள் தஞ்சை மீது படையெடுத்தபோது கிழவன் சேதுபதி தஞ்சை மராத்திய மன்னனை ஆதரித்தார். இவற்றால் ஆத்திரமடைந்த இராணி மங்கம்மாள் வழக்கம் போல் தளவாய் நரசப்பய்யனின் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். மதுரைப் படை மறவர் படையிடம் படுதோல்வி அடைந்தது. தளபதி நரசப்பய்யன் போர்க்களத்தில் உயிரிழந்தார். கிழவன் சேதுபதி மதுரை நாயக்கத்தின் பிடியிலிருந்து விடுபட்டார். ஆத்திரக்காரருக்குப் புத்தி மட்டு என்ற பேருண்மையை இராணி மங்கம்மாள் புரிந்து கொண்டார். மங்கம்மாள் நடத்திய இறுதிப் போர் இதுதான்.

9.13.1. ஆக்கப்பணிகள் மக்கள் நலத்திட்டங்கள்

இராணி மங்கம்மாள் மக்கள் நலப் பணிகளில் நாட்டம் கொண்ட திறமையான நிர்வாகி. நல்ல உழைப்பாளி. அவர் மக்கள் மேம்பாட்டுக்கும், விவசாய வளர்ச்சிக்கும், வர்த்தக விரிவாக்கத்துக்கும், தொழில் பெருக்கத்துக்கும், நீர்வள வசதிக்கும், செய்தித் தொடர்புக்கும், உட்கட்டுமானத்துக்கும் மேற்கொண்ட நடவடிக்கைகள் பல் பாராட்டுக்குரியவை.

சாதனைகள்

மதுரை அரசி மங்கம்மாள் விவசாயத்துக்கு முன்னுரிமை கொடுத்தார். நீர் நிலைகள் சீரமைக்கப்பட்டன. நிழல் தரும் மரங்களோடு சாலைகள் போடப்பட்டன. குமரி முனையிலிருந்து அமைக்கப்பட்ட நெடுஞ்சாலை மங்கம்மாள் சாலை என்று மக்களால் அழைக்கப்பட்டது. இவரது ஆட்சிக் காலத்தில் மக்கள் வசதிக்காகக் கட்டப்பட்ட கட்டிடங்கள் பல. அவற்றுள் மக்களின் மனதைக் கொள்ளை கொண்டது மங்கம்மாள் சத்திரம் ஆகும். மதுரை, திருநெல்வேலி மற்றும் தமிழ்நாட்டின் சிற்றூர்களில் காணப்படும் பொதுக் கட்டிடங்கள் அனைத்தும் மங்கம்மாவால் கட்டப்பட்டவையாகும் என்று மக்கள் கருதுகின்றனர். நெடுஞ்சாலைப் பயணிகளுக்காக வசதியான சத்திரங்கள் கட்டப்பட்டன. வழிப்போக்கர்களுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. இதற்கென உருவாக்கப்பட்ட காப்பகத்துக்கு மானியம் வழங்கப்பட்டது (1701). யாவற்றுக்கும் மேலாக இராணி மங்கம்மாள் எழுப்பிய அவரது அரண்மனை வளாகத்தில் அமைந்திருத்த தழுக்கம் மைதானத்தில் யானைப் போர் போன்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடைபெற்றன் விழாக்கள் கொண்டாடப்பட்டன.

சமய சமத்துவம்

இராணி மங்கம்மாளின் மதமனப்பான்மை வியப்புக்குரியது. சமய சமத்துவத்துக்கான சான்று அவர். சமயப் பொறை பற்றி அரசியின்

குறிப்பு

வார்த்தைகளில் கூறுவதாயின் சிலர் சாதம் சாப்பிடுகின்றனர் சிலர் மாமிசம் உண்கின்றனர் அதேபோன்று ஒவ்வொருவம் அவருக்குப் பிடித்த சமயத்தைத் தேர்ந்தெடுப்பதும், பின்பற்றுவதும் சட்டப்படி சரியானதாகும். இந்த மனப்பான்மை இருந்தமையால்தான் ராணி மங்கம்மாள் கிறித்துவப் பாதிரியார்களை ஆர்வமுடன் ஆதரித்தார். அடைக்கலம் தேடிவந்த கிறித்துவர்களுக்குப் புகலிடம் கொடுத்தார். மேலும், திருச்சி தர்க்காவுக்கு கிராமங்களைத் தானமாகக் கொடுத்தார். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குக் கணிசமான நகைகளையும், பல்லக்குகளையும் கொடுத்தார். ஒவ்வொரு ஆண்டும் ஆனி மாதத்தில் மதுரையில் கொண்டாடப்படும் ஊஞ்சல் திருவிழா இவரால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். எண்ணிறந்த கோயில்களுக்கும் அறக்கொடைகள் அளித்தார். சுருங்கக்கூறின் இராணி மங்கம்மாள் சமய சமத்துவத்தின் மனித அவதாரமாகக் காட்சியளித்தார்.

மர்ம மரணம்

வெளிப்படையாக ஆட்சி செய்த இராணி மங்கம்மாவின் மரணம் மர்மமாக உள்ளது. இவரது மரணம் அவிழ்க்கப்படாத வரலாற்று முடிச்சுகளில் ஒன்றாக உள்ளது. வயதுக்கு வந்த இராணியின் பேரன் விஜயரங்க சொக்கநாதனிடம் ஆட்சியை ஒப்படைக்காமையே இவரது சாவுக்குக் காரணம் என்று கூறப்படுவது சான்றற்றக் குற்றச்சாட்டாகும். இராணி மங்கம்மாளுக்குப்பின் மதுரை நாயக்கம் வீழ்ச்சிப் பாதையில் விரைந்து சென்றது.

மதிப்பீடு

இராணி மங்கம்மாள் தமிழ்நாட்டு வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றுள்ள பெண்ணரசி ஆவார். இவர் திருமலை நாயக்கரை முன்மாதிரியாகக் கொண்டு ஆட்சி செய்தார். மங்கம்மாள் மதுரை நாயக்கத்தை விஜயநகர ஆதிக்கத்திலிருந்து விடுவித்து சுதந்திரமாக அரசை நடத்தினார். போரின் எல்லையை நன்கறிந்த இவர் இராஜதந்திரத்தைக் கையாண்டார். லட்சியக் கனவு காணாமல் நடைமுறை சாத்தியமான நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஔரங்கசீப்பின் ஆதிக்கத்துக்கு வளைந்து கொடுத்து மதுரை நாயக்கத்தின் நலனைக் காப்பாற்றியது இவரது அணுகுமுறைக்கான எடுத்துக்காட்டாகும். இராணி மங்கம்மாள் மனத்தின்மையும், இரக்க குணமும், மக்கள் நல நாட்டமும் உடையவர். இவரது பொதுப்பணிகள் இக்குணங்களுக்கு சாட்சியங்களாக உள்ளன. இவரது பெண்ணுள்ளம் ஏழை எளியோரின் பக்கம் சென்றது. இவரது பரந்த மனப்பான்மை சமய சமத்துவத்தை நாடியது. இவரது பதினேழாண்டு கால ஆட்சியில் இவர் செய்த தவறு கிழவன் சேதுபதிக்கு எதிராக மேற்கொண்ட ஆத்திர நடவடிக்கையாகும். இதன் மூலம் அவசரப்பட்டு முடிவெடுத்தால் நிதானமாக வருத்தப்பட வேண்டும் என்ற வரலாற்று உண்மையை அறிந்து கொண்டார். இவருக்கு எதிராக எழுப்பப்படும் சில

குறிப்பு

குற்றச்சாட்டுகள் சுவையாக இருக்கலாம் ஆனால் ஆதாரமற்றவை. இராணி மங்கம்மாவின் ஆக்கப் பணிகளே இவருக்கு வரலாற்றில் நிலையான இடத்தைத் தேடித்தந்துள்ளன. திருமலை நாயக்கருக்குப்பின் ஆட்சி புரிந்த நாயக்கர்களுள் மிகப் புகழ் பெற்றவர் மங்கம்மாள் என்பதற்கு ஐயமில்லை. ஒரு பெண்ணால் சிறப்பாக ஆட்சி செய்ய முடியாது என்ற மனப்பான்மையைப் பொய்ப்பித்தார்.

9.14. விஜயரங்க சொக்கநாதர்

இராணி மங்கம்மாளுக்குப்பின் மதுரை அரியணையேறிய அவரது பதினேழு வயது பேரன் விஜயரங்க சொக்கநாதர் திறமையான அரசியை அடுத்து வந்த திறமையற்ற அரசர். இரண்டாம் சொக்கநாதர் அவரது பாட்டியிடமிருந்து எந்தப் பாடத்தையும் கற்கவுமில்லை மறக்கவுமில்லை பிஞ்சில் பழுத்த பழமான சொக்கநாதர் ஆட்சியை புறக்கணித்து சமயத்தில் சரணடைந்தார். சமயவாதி ஒருநாளும் ஆட்சியாளராக முடியாது என்ற வரலாற்று உண்மையை இவர் அறிந்தாரில்லை.

விஜயரங்க சொக்கநாதரின் பலவீனத்தைப் புரிந்து கொண்ட தளவாய் கஸ்தூரி ரெங்கையாவும், பிரதானி வெங்கிட கிருஷ்ணய்யாவும் ஆட்சியைத் தங்கள் வசமாக்கிக் கொண்டு அரசாங்க வருவாயில் தங்களது சொந்த நலன்களைப் பெருக்கிக் கொண்டனர். மதுரை நாயக்கத்தில் வால் நாயை ஆட்டும் நிலை உருவாயிற்று. அமைச்சர் அராஜகம் கட்டவிழ்ந்து விடப்பட்டது. சொக்கநாதர் கொடுமைகளின் குவிமையமானார். மக்கள் சொல்லொனாத் துன்பங்களுக்குள்ளாயினர். சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து மதுரை நாயக்கம் குழப்பக்காடாயிற்று. சுருங்கக்கூறின் விஜயரங்க சொக்கநாதரின் இருபத்தாறாண்டு கால ஆட்சி வீணாக்கப்பட்ட வாய்ப்பாகும். மதுரை நாயக்கம் வீழ்ச்சிப் பாதையில் பயணித்தது.

9.15. இராணி மீனாட்சி

விஜயரங்க சொக்கநாதர் வாரிசின்றி இறந்தமையால் அவரது விதவை மனைவி மீனாட்சி ஆட்சிப் பொறுப்பேற்றார். பதினாறாண்டுகால அவல ஆட்சிக்குப்பின் வந்த மீனாட்சி திருமலை நாயக்கருக்கு உறவினரான பங்காரு திருமலை என்பவரது மகன் விஜயகுமாரனை தத்து எடுத்துக் கொண்டார். மீனாட்சி இத்தத்துப்பிள்ளையின் சார்பாக ஆட்சி செய்தார். இராணி மங்கம்மாளுக்கு இருந்த மனத்தின்மையும், தன்னம்பிக்கையும், எதிர்கொள்ளும் ஆற்றலும் இவருக்கின்மையால் மீனாட்சி சூழ்ச்சி வலையில் சிக்கிக் கொண்டார். பேராசை பிடித்த பங்காரு திருமலை மீனாட்சியை அகற்றிவிட்டு, தன் மகனைக் கேடயமாகக் கொண்டு ஆட்சி செய்யத் திட்டமிட்டார். இத்திட்டத்தை நிறைவேற்ற ஆர்க்காடு நவாபு தோஸ்த் அலியின் உதவியை நாடினார்.

குறிப்பு

வலிய வந்த வாய்ப்பை நழுவவிட விரும்பாத ஆர்க்காடு நவாபு சந்தாசாகிபின் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். தலைநகர் திருச்சிக்கு வந்த சந்தாசாகிபைச் சாமர்த்தியத்தால் தன் பக்கம் இழுத்துக் கொண்ட மீனாட்சி பங்காரு திருமலையின் சூழ்ச்சியை முறியடித்தார். பங்காரு திருமலையின் சூழ்ச்சியை முறியடித்த இராணி மீனாட்சி சந்தாசாகிபின் சூழ்ச்சியில் சிக்கிக் கொண்டார். திண்டுக்கல்லுக்கருகே அம்மையநாயக்கனூரில் நடந்த போரில் பங்காரு திருமலையைக் கொன்றுவிட்ட சந்தாசாகிபு மீனாட்சியிடம் வந்து ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். ஆனால் சந்தாசாகிபே இந்த உடன்படிக்கையை மீறி மீனாட்சியைக் கைது செய்து சிறையிட்டார். அவமானம் பொறுக்காமல் இராணி மீனாட்சி தற்கொலை செய்து கொண்டார். மீனாட்சியோடு மதுரை நாயக்கம் முடிவுற்றது.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. மதுரையின் முதல் நாயக்கர் யார்?
2. யாரால் பாளையங்கோட்டைக்கருகே கிருஷ்ணாபுரம் என்ற நகர் எழுப்பப்பட்டது?
3. யாருடைய ஆட்சிக்கால இறுதியில் மதுரை மிஷன் (துநளரவை ஆளைளழெ) தோற்றுவிக்கப்பட்டது?
4. முதல் சேதுபதி யார்?
5. திருமலை நாயக்கர் யாருடைய உதவியுடன் ஸ்ரீரங்கரைத் தோற்கடித்தார்?
6. விஜயநகரப் பேரரசின் ஆதிக்கத்திலிருந்து முற்றிலுமாக விடுபட்டு சுதந்திர ஆட்சியை அமைத்த முதல் மதுரை நாயக்க மன்னர் யார்?
7. குமரி முனையிலிருந்து அமைக்கப்பட்ட நெடுஞ்சாலை எவ்வாறு மக்களால் அழைக்கப்பட்டது?

9.16. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

1. விசுவநாத நாயக்கர்.
2. குமார கிருஷ்ணப்ப நாயக்கர்.
3. வீரப்ப நாயக்கர்.
4. போகலூர் அதிபதி சடையத்தேவ உடையார்.
5. கோல்கொண்டா சுல்தான்.
6. திருமலை நாயக்கர்.
7. மங்கம்மாள் சாலை.

சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

குறுகிய வினாக்கள்

1. நாகம நாயக்கர் பற்றி சிறு குறிப்பு எழுதுக.
2. வீரப்ப நாயக்கரின் சமயப்பணி குறித்து சுருக்கமாக எழுதுக.

குறிப்பு

3. நாயக்கர்களின் வீழ்ச்சி குறித்து எழுதுக.

விரிவான வினாக்கள்

1. விசுவநாத நாயக்கர் ஆட்சி குறித்து கட்டுரை எழுதுக.
2. குமார கிருஷ்ணப்ப நாயக்கர் படையெடுப்பை விவரி.
3. இராணி மங்கம்மாளின் நிர்வாக திறமை குறித்து கட்டுரை எழுதுக

9.17. கூடுதல் வாசிப்புகள்

Subramania N. A History of Tamil Nadu up to 1336

Rajayyan K. History of Tamil Nadu

பிள்ளை கே.கே. தென்னிந்திய வரலாறு

Nilakanda Sastri K.N. A History of South India

Sathianathair R. History of India

வெங்கடேசன் க. முற்கால தமிழ்நாட்டு வரலாறு

செல்வம் வே. தி. தமிழக: வரலாறும் பண்பாடும்

இராமசாமி அ. தமிழ் நாட்டு வரலாறு

Krishnaswamy Aiyyangar S. South India and her Mohammadan Invaders

அலகு - 10

செஞ்சி, தஞ்சை நாயக்கர்கள்- பாளையக்காரர்களின் நிர்வாகம்

பாட அமைப்பு

10.1. முன்னுரை

10.2. நோக்கங்கள்

10.3. செஞ்சி நாயக்கர்கள்

10.3.1. வையப்ப நாயக்கர்

10.3.2. மகா நாயக்கர்

10.3.3. துபாகி கிருஷ்ணப்ப நாயக்கர்

10.3.4. சூரப்ப நாயக்கர்

10.3.5. முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர்

10.3.6. இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர்

10.3.6.1.உள்நாட்டுப் போர்

குறிப்பு

10.4. செஞ்சி நாயக்கர்களின் வீழ்ச்சி
10.4.1. வீழ்ச்சியின் விளைவு
10.5. தஞ்சை நாயக்கர்கள்
10.6. செவப்ப நாயக்கர்
10.7. அச்சுதப்ப நாயக்கர்
10.8. இரகுநாத நாயக்கர்
10.9. விஜயராகவ நாயக்கர்
10.10. தஞ்சையின் வீழ்ச்சி
10.11. பாளையக்காரர்களின் நிர்வாகம்
10.12. பாளையக்காரர்
10.12.1. பாளையக்காரர் ஆட்சி முறை
10.12.2. குறிப்பிடத்தக்க பாளையக்காரர்கள்
10.12.3. ஆர்க்காட்டு நவாபுகளின் கீழ் பாளையக்காரர்கள்
10.13. போராளி பூலித்தேவன்
10.13.1. ஆங்கிலேயரின் எதிர்த்திட்டம்
10.14. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்
10.15. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
10.16. கூடுதல் வாசிப்புகள்

10.1. முன்னுரை

அரிகரன், புக்கன் ஆகிய சங்கம சகோதரர்களால் 1336 ஆம் ஆண்டு விஜய நகரம் தோற்றுவிக்கப்பட்டது. விஜய நகரத்தை சங்கம, சாளுவ, துளுவ அரச குலங்களைச் சேர்ந்த மன்னர்கள் ஆட்சி செய்தனர். இவர்கள் காலத்தில் விஜயநகரம் வளர்ந்து, பேரரசாக விரிவடைந்து, புகழ்யடைந்தது. துளுவ சதாசிவராயன் ஆட்சிக் காலத்தில் (1542-1570) நடைபெற்ற தலைக்கோட்டைப் போரு (1565)க்குப்பின் விஜயநகரம் வீழ்ச்சியடைந்தது. வீழ்ச்சியடைந்த விஜயநகரப் பேரரசை அரவீடு அரச குலத்தினர் சுவீகரித்துக்கொண்டு ஆட்சி செய்தனர். அரவீடு அரசர்கள் காலத்தில் தான் செஞ்சி, தஞ்சை, மதுரை நாயக்கர்கள் விஜயநகர மேலாதிக்கத்துக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து சுயாட்சி பெற்றனர். விசுவநாத நாயக்கர் ஆட்சிக் காலத்தில் (1529-1564) அவரது தளவாய் அரியநாத முதலியாரால் உருவாக்கப்பட்ட 72 பாளையங்கள் மதுரை நாயக்கர்கள் காலத்துக்குப் பின்னரும் நீடித்தன. துவக்கத்தில் பெரும்பான்மையான பாளையக்காரர்கள் ஆந்திராவிலிருந்து வந்த இராணுவத் தலைவர்களாக இருந்தனர். 16 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் விஜய நகரப் பேரரசு பலவீனப்பட்ட போது

குறிப்பு

இப்பாளையக்காரர்கள் சுதந்திரமாகச் செயல்பட்டனர். இவர்கள் தங்களது சுதந்திரத்தில் ஆர்க்காட்டு நவாபுகளும் ஆங்கிலேயரும் தலையிட்டதை விரும்பவில்லை எதிர்த்தனர். இந்த அத்தியாமானது செஞ்சி, தஞ்சை நாயக்கர்கள்- மற்றும் பாளையக்காரர்களின் நிர்வாகம் குறித்து விளக்குகிறது .

10.2. நோக்கங்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர் கீழ் கண்டவற்றை அறிய முடியும்

- செஞ்சி நாயக்கர்கள் மற்றும் அவர்களின் நிர்வாகம் பற்றி அறிய உதவுகிறது.
- தஞ்சை நாயக்கர்கள் மற்றும் அவர்களின் நிர்வாகம் பற்றி விவாதிக்கிறது.
- பாளையக்காரர்களின் நிர்வாகம் பற்றி விவரிக்கிறது.

10.3. செஞ்சி நாயக்கர்கள்

10.3.1. வையப்ப நாயக்கர்

செஞ்சி தொண்டை மண்டலத்தின் ராணுவ முக்கியத்துவமுடைய காவல் கோட்டமாகத் திகழ்ந்தது. சோழர்களுக்குச் சொந்தமான இந்த இடத்தில் விஜயரங்க நாயக்கர் என்பவர் ஒரு கோட்டையைக் கட்டியதாகக் கூறப்படுகிறது. குமாரகம்பணர் காலத்திலிருந்து செஞ்சி தொண்டை மண்டலத்தின் தலைமையகமாக இருந்து வந்தது. விருப்பண்ண உடையார் என்பவர் இதன் மகாமண்டலேஸ்வரராக இருந்தார். இராணுவ முக்கியத்துவமிக்க செஞ்சி கிருஷ்ணதேவராயரின் கவனத்தைக் கவர்ந்தது. அவரது ஆட்சிக் காலத்தில் தொண்டை மண்டலம் பல குறுநிலப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அரச குலத்தைச் சேர்ந்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால் அவர்கள் கிருஷ்ணதேவராயரின் மேலாண்மையை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். ஆத்திரமடைந்த அவர் வையப்ப நாயக்கர், துபாகி கிருஷ்ணப்ப நாயக்கர், விஜயராகவ நாயக்கர், வெங்கடப்ப நாயக்கர் ஆகிய நால்வரது தலைமையின் கீழ் ஒரு வலிமையான படையைத் தொண்டை மண்டலத்துக்கு அனுப்பினார். இப்பெரும்படை வேலூரில் முகாமிட்டது. இதையறிந்த கிளர்ச்சித் தலைவர்கள் கிருஷ்ணதேவராயரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டு, கப்பம் செலுத்த ஒப்புக் கொண்டனர். வையப்ப நாயக்கர் இவர்கள் செலுத்த வேண்டிய திறையைத் தீர்மானித்தார்.

குறிப்பு

மூன்று மண்டலங்கள்

அதன்பின் விஜயநகரப் படை வேலூரிலிருந்து செஞ்சி சென்று முகாமிட்டது. அப்போது சோழ மண்டலக் குறுநிலத் தலைவர்கள் செலுத்த வேண்டிய கப்பத்தொகை முடிவு செய்யப்பட்டது. அதுமட்டுமல்ல. தமிழ்நாடு முழுவதும் மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஆளுநர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த மூன்று மண்டலங்களாவன: 1) செஞ்சி மண்டலம். இப்பகுதி கொள்ளிடத்திலிருந்து நெல்லூர் வரை இருந்தது 2) தஞ்சை மண்டலம். நீர்வளமிக்க பகுதி 3) மதுரை மண்டலம்.. சின்ன திம்மய்ய நாயக்கரின் மகனான வையப்ப நாயக்கர் செஞ்சி மண்டலத்துக்கு நாயக்கராக நியமிக்கப்பட்டார். எனவே கிருஷ்ணதேவராயரால் நியமிக்கப்பட்ட வையப்ப நாயக்கரே செஞ்சி மண்டலத்தின் முதல் நாயக்கர் ஆவார்.

10.3.2. மகா நாயக்கர்

வையப்ப நாயக்கர் செஞ்சியிலேயே தங்கி ஐந்தாண்டு காலம் ஆட்சி செய்தார். தன்னை செஞ்சி நாயக்கராக்கிய கிருஷ்ணதேவராயருக்கு நன்றிக்கடன்பட்டு விசுவாசத்தோடு வேலை செய்தார். இவரது ஆட்சிக் காலத்தில் செஞ்சி நாயக்கம் நிலை பெற்றது புகழ் பெற்றது. வையப்ப நாயக்கர் ஜம்பை சிவன் கோயிலுக்கு மானியம் வழங்கினார் (1530). வடஆர்க்காடு மாவட்ட மாதிரிமங்கலத்தில் பிராமணர்களுக்கு ஒரு அக்கிரகாரத்தை ஏற்படுத்தினார் (1532). வையப்ப நாயக்கரின் கீழ் பணியாற்றிய வேலூர் பொம்மு நாயக்கரை வரியில்லா நிலத்தைத் திருக்கோவிலூர் தாலுக்காவிலிருந்த பள்ளிச்சந்தல் கோயிலுக்குத் தானமாகக் கொடுக்க ஆணையிட்டார். வசவப்ப நாயக்கர் என்பவர் வையப்ப நாயக்கர் பெயரில் இரு கிராமங்களைக் கொடையாகக் கொடுத்தார் (1538). வையப்ப நாயக்கர் வலயத்தூர் ஆலயத்துக்கு இரண்டு கிராமங்களை மானியமாக வழங்கினார் (1541). இவர் மகாநாயக்கர் என்று புகழ் பெற்றார். வையப்ப நாயக்கர் கிருஷ்ணதேவராயருக்கும், அவருக்குப்பின் வந்த அச்சுதருக்கும் நன்றி விசுவாசத்தோடு நடந்து கொண்டார்.

10.3.3. துபாகி கிருஷ்ணப்ப நாயக்கர்

வையப்ப நாயக்கர் செஞ்சி நாயகத்தைத் தோற்றுவித்து அதன் முதல் நாயக்கராக ஐந்தாண்டு காலம் ஆட்சி செய்தபின் அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமான கிருஷ்ணப்ப நாயக்கரை செஞ்சியின் ஆட்சியராக நியமித்தார். கிருஷ்ணப்ப நாயக்கர் வையப்ப நாயக்கருக்கு அடுத்த நிலை இராணுவத் தலைவராக இருந்தவர். இவர் துபாகி கிருஷ்ணப்ப நாயக்கர் என்று அழைக்கப்பட்டார். இவரது பெயருக்குப்பின் உள்ள முற்சேர்க்கை (சநகஎை)யான துபாகி என்பது பட்டப்பெயர். இவர் பெத்த கிருஷ்ணப்ப நாயக்கர் என்றும் அழைக்கப்பட்டார். இவர் விஜயநகர மன்னர் அரவீடு அரிய இராமராயரின் சமகாலத்தவர்.

குறிப்பு

பெயர் மாற்றம்

துபாகி கிருஷ்ணப்ப நாயக்கர் கோனேரி செட்டியின் மகனாகக் கருதப்படுகிறார் செட்டி குலத்தைச் சேர்ந்த இவரது பதிமூன்றாண்டு கால ஆட்சியில் செஞ்சி நாயக்கம் பலம் பெற்று விரிவடைந்தது. செஞ்சி அரசு வடதமிழ் நாட்டின் சென்னை, பாண்டிச்சேரி, நெல்லூரின் பெரும்பகுதி, சித்தூர், வேலூர், சந்திரகிரி ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது. இதன் தென் எல்லை கொள்ளிடக் கரை வரை சென்றது. இந்த எல்லையே செஞ்சி மண்டலத்தைத் தஞ்சை, மதுரை மண்டலங்களின் எல்லைப் பகுதியாக இருந்தது. கிருஷ்ணப்ப நாயக்கர் செஞ்சிக் கோட்டையை மேலும் பலப்படுத்தி ஆனந்தகிரி என்ற பெயரை இராஜகிரி என்று மாற்றினார்.

வாரிசு

கிருஷ்ணப்ப நாயக்கருக்கு லட்சுமாம்பா, வெங்கலாம்பா என்று இரண்டு மனைவியர் இருந்தனர். லட்சுமாம்பாவின் மகன் முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர். வெங்கலாம்பாவின் பிள்ளைகள் மூவர்: 1) சூரப்ப நாயக்கர் 2) திவாகரன் 3) பைரவன். இம்மூவருள் சூரப்ப நாயக்கர் துபாகி கிருஷ்ணப்ப நாயக்கரின் வாரிசாக அரியணையேறினார்.

10.3.4. சூரப்ப நாயக்கர்

சூரப்ப நாயக்கர் துபாகி கிருஷ்ணப்ப நாயக்கரின் இரண்டாவது மனைவி வெங்கலாம்பாவுக்குப் பிறந்தவர். முதல் மனைவி லட்சுமாம்பாவுக்குப் பிறந்த கிருஷ்ணப்பா இளவயதினராக இருந்தமையால் சூரப்ப நாயக்கர் செஞ்சியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார் இதை விஜயநகரப் பேரரசர் சதாசிவராயர் (1542-1570) அங்கீகரித்தார். எனவே சூரப்பர் சதாசிவராயருக்கு நன்றியுணர்வோடு பணியாற்றினார். பின்னர் இவரது மாற்றாந்தாய் மகனான கிருஷ்ணப்ப நாயக்கருடன் இணைந்து செஞ்சியை ஆட்சி செய்தார். இருவரும் சதாசிவராயருக்கு விசுவாசத்துடன் இருந்தனர்.

அங்கீகாரம்

தலைக்கோட்டைப் போரின் போது (1565) சூரப்ப நாயக்கர் சதாசிவராயருக்குப் படையுதவி செய்தார். அதன் காரணமாக பவனபுருஷோத்தமன் சூரப்பருக்கு கர்நாடக சிம்மாசன பிரதீஷ்டபாணாச்சாரியா என்ற பட்டத்தை வழங்கிப் பெருமைப்படுத்தினார். இது அவர் தலைக்கோட்டைப் போரின் போது விஜயநகரப் பேரரசுக்குச் செய்த உதவிக்குச் கிடைத்த அங்கீகாரமாகும். சூரப்ப நாயக்கர் கலாரசிகர் கலைஞர்களின் புரவலர். இவர் காலத்தில் வாழ்ந்த பிரபல இரத்னகேட்டா ஸ்ரீனிவாச தீட்சிதரை ஆதரித்தார். தீட்சிதர் பதினெட்டு நாடகங்களையும், அறுபது பாடல்களையும் படைத்தவர். இவர் எழுதிய

பவனாபுருஷோத்தமா என்ற நாடகத்தை அவருக்குப் புரவலராக இருந்த சூரப்ப நாயக்கருக்கு அர்ப்பணித்தார்.

10.3.5. முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர்

குறிப்பு

சூரப்பருக்குப்பின் அவரது மாற்றாந்தாய் மகனும் சகோதரனுமான கிருஷ்ணப்ப நாயக்கர் ஆட்சிக்கு வந்தார். இவரைப் பற்றிய குறிப்புகள் இரண்டு கல்வெட்டுகளில் (1546, 1575) காணப்படுகின்றன. ஆனால் இவை இவரது ஆட்சிக் காலத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்குப் பயன்படுவதாயில்லை. வட ஆர்க்காட்டில் கிடைத்த மற்றொரு கல்வெட்டும் (1570) சிதைந்த நிலையில் உள்ளது. மிகுந்த முயற்சியோடு இக்கல்வெட்டை ஆராய்ந்தோர் ஒரு தகவலைத் தருகின்றனர். அதாவது முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் பச்சமகன் என்பவருக்கு நிலத்தை உதிரப்பட்டியாகக் கொடுத்தார். போரில் பங்கேற்றமைக்காகக் கொடுக்கப்படுவது உதிரப்பட்டி நிலமாகும். தலைக்கோட்டைப் போரில் சிறப்பாகப் பங்கேற்றமைக்காக கிருஷ்ணப்ப நாயக்கர் பஞ்சமகனுக்கு நிலக்கொடை கொடுத்து பெருமை செய்தார் என்று கருதப்படுகிறது.

10.3.6. இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர்

இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் வைய்யப்ப கிருஷ்ணப்ப தொண்டம் நாயக்கர் என்று கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகிறார். இதன் மூலம் இவர் முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கரின் மகனாகவும், வையப்ப நாயக்கரின் பேரனாகவும் இருக்கலாம் என்று ஊகிக்கப் படுகிறது. இவர் ஆரவீடு முதலாம் ஸ்ரீரங்கர் (1586-1614), இரண்டாவது வெங்கடர் (1614) ஆகிய விஜயநகர மன்னர்களின் சமகாலத்தவர். கிருஷ்ணப்ப நாயக்கர் அரவீடு விஜயநகர மன்னர் வெங்கடரின் மேலாண்மையை ஏற்க மறுத்தார். கப்பம் கட்டாமல் கிளர்ச்சி செய்தார். இக்கிளர்ச்சியை முறியடிக்கும் பொருட்டு வெங்கடர் ஒரு படையை அனுப்பினார். அப்படை கிருஷ்ணப்பரைத் தோற்கடித்து, கைது செய்து, சிறையில் அடைத்தது. பின்னர் தஞ்சை நாயக்கர் இரகுநாதர் தலையிட்டு இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கரை சிறையிலிருந்து விடுவித்தார்.

எதிர்ப்பை எதிர்கொண்டார்

இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் தீவிர வைணவர். எண்ணியதை முடிக்கும் மனத்திண்மை பெற்றவர். இவர் சிதம்பரம் கோவிந்தராஜப் பெருமாள் கோயிலைப் புதுப்பிப்பதற்கான முயற்சியை மேற்கொண்டார். ஆனால் அதற்கு சிதம்பரம் கோயில் தீட்சிதர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர் தீவிரமாக எதிர்த்தனர். இந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் புனரமைப்புப் பணியைத் தொடர்ந்தார் கிருஷ்ணப்ப நாயக்கர். தீட்சிதர்கள் வன்முறையில் இறங்கினர். தற்கொலை செய்து கொள்ளப்போவதாக மிரட்டினர். அவர்களது மிரட்டல்களுக்கு நாயக்கர் செவிசாய்க்கவில்லை. ஒரு பெண் உட்பட சில எதிர்ப்பாளர்கள் தீக்குளிக்க முயன்றனர். பொறுமையிழந்த கிருஷ்ணப்ப நாயக்கர்

குறிப்பு

துப்பாக்கிச்சூடு நடத்தி நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தார். இத்துப்பாக்கிச் சூட்டில் சிலர் மாண்டனர். கோவிந்தராஜர் ஆலயத் திருப்பணி வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது.

சமய சுதந்திரம்

இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் வெள்ளாற்றின் முகத்துவாரத்தில் கிருஷ்ணபட்டினம் என்ற துறைமுகப் பட்டினத்தைத் தோற்றுவித்தார். அதுவே பின்னர் போர்டோ நோவோ (புதுச்சேரி) என்று அழைக்கப்பட்டது. இவரது ஆட்சிக் காலத்தில் போர்ச்சுக்கீசிய சமயப் பரப்பாளர்களான ஜெஸ்யூட்கள் (துநளரவைள) சமயப் பணியாற்றி வந்தனர். கிருஷ்ணப்ப நாயக்கர் தீவிரமான வைணவராக இருந்த போதிலும் கிறித்துவ மதப் பிரச்சாரத்தைத் தடை செய்யவில்லை. சமயப் பொறையைக் கடைப்பிடித்தார்.

மக்களின் செல்வாக்கு

இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் மக்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தார். வேலூர் நாயக்கர் உட்பட பல துணை நாயக்கர்கள் இவருக்கு ஆதரவாகவும் இவரது ஆட்சிக்குக் கட்டுப்பட்டும் இருந்தனர். இதைக் கண்டு பொறாத ஆரவீடு விஜயநகர மன்னர் வெங்கடர் கிருஷ்ணப்ப நாயக்கரைக் கீழ்பணிய வைக்கத் தீர்மானித்தார். அதன்படி ஒரு படையை அனுப்பி செஞ்சி நாயக்கரைப் பணிய வைத்தார் (1607-1608). அதுமட்டுமல்ல. கிருஷ்ணப்ப நாயக்கர் டச்சுக்காரர்கள் கடலூரில் ஒரு தொழிற்கூடத்தைக் கட்டிக் கொள்வதற்காகக் கொடுத்த உத்தரவையும் திரும்பப் பெறச் செய்தார். விஜயநகர மன்னரின் இச்செயல் கிருஷ்ணப்ப நாயக்கருக்கு மிகுந்த ஏமாற்றத்தையும், மனவருத்தத்தையும், டச்சுக்காரர்களுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் போனதால் அவமரியாதையையும் கொடுத்தது. மன்னருக்கும் நாயக்கருக்கும் இடையேயான இடைவெளி அதிகரித்தது.

10.3.6.1.உள்நாட்டுப் போர்

வெங்கடருக்குப் பிறகு இரண்டாம் ஸ்ரீரங்கர் விஜயநகர மன்னரானார் (1614-1632). இவர் காலத்தில் உள்நாட்டுப் போர் (Civil War) எழுந்தது. செஞ்சி நாயக்கர் இரண்டாம் கிருஷ்ணப்பர் கப்பம் கட்ட மறுத்துவிட்டார். இவரின் ஆளுகைக்குட்பட்ட வேலூர் சங்கர நாயக்கர் ஸ்ரீரங்கருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார். இக்கிளர்ச்சியை செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கரும், மதுரை முத்து வீரப்ப நாயக்கரும் ஆதரித்தனர். விஜய நகர மன்னர் சார்பாக எச்சம நாயக்கரும் தஞ்சை இரகுநாத நாயக்கரும் இப்போரில் பங்கேற்றனர். இந்த உள்நாட்டுப் போர் மூன்றாண்டுகள் நடைபெற்றது. இறுதியில் 1616 ஆம் ஆண்டு திருச்சிக்கருகே தோப்பூரில் நடைபெற்ற போரில் வேலூர் சங்கர நாயக்கர் தோற்கடிக்கப்பட்டார். பின்னர் சிதம்பரத்துக்கருகே நடைபெற்ற போரிலும் கிளர்ச்சிப்படை தோற்கடிக்கப்பட்டது. இந்த இரட்டைத் தோல்வி

குறிப்பு

கிருஷ்ணப்ப நாயக்கருக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. கிருஷ்ணப்ப நாயக்கர் பின்வாங்கிச் சென்று செஞ்சிக் கோட்டையைத் தக்க வைத்துக் கொண்டார். இறுதியில் கிருஷ்ணப்ப நாயக்கரும் தோற்கடிக்கப்பட்டு, மன்னிக்கப்பட்டு, மீண்டும் செஞ்சி நாயக்கராக நியமிக்கப்பட்டார். இந்த உள்நாட்டுப் போரில் கிளர்ச்சிக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டாலும், விஜயநகரப் பேரரசின் பலவீனமும் சரிவும் தெளிவாகத் தெரிந்தன. பேரரசின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு செஞ்சி, தஞ்சை, மதுரை நாயக்கர்கள் போர்க்கொடி உயர்த்தத் தொடங்கினர்.

10.4. செஞ்சி நாயக்கர்களின் வீழ்ச்சி

பீஜப்பூர், கோல்கொண்டா சுல்தானியங்கள் விஜயநகரப் பேரரசுக்கு நிரந்தர சவால்களாக இருந்தன. ஆரவீடு விஜயநகர அரசர்களின் அக்கறையெல்லாம் இவர்களது ஆக்கிரமிப்பிலிருந்து பேரரசைக் காப்பாற்றுவதிலேயே இருந்தது. ஆங்கிலேயரது ஆட்சிக் காலத்தில் விஜய நகரப் பேரரசுக்கு எதிராக மதுரை திருமலை நாயக்கர் தஞ்சை, செஞ்சி நாயக்கர்களுடன் சேர்ந்து கொண்டு விஜயநகரப் பேரரசுக்கு எதிராகக் கூட்டுச் சதியில் ஈடுபட்டார். ஆனால் இச்சதியை தஞ்சை விஜயநாயக்கர் விஜயநகரப் பேரரசர் ஸ்ரீரங்கருக்குத் தெரிவித்துவிட்டார்.

சுல்தானிடம் சரண்

விஜயநகரப் பேரரசர் ஸ்ரீரங்கர் செஞ்சி மீது படையெடுத்துச் சென்று (1645) செஞ்சிப் படையையும், மதுரைப் படையையும் தோற்கடித்தார். வேறுவழியின்றி மதுரை, செஞ்சி நாயக்கர்கள் கோல்கொண்டா, பீஜப்பூர் சுல்தான்களின் உதவியை நாடினர். இதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட கோல்கொண்டா சுல்தான் கடற்கரை வழியாகப் படையெடுத்துச் சென்று டச்சுக்காரர் வசமிருந்த புலிக்காட்டையும் கைப்பற்றிக் கொண்டார் (1646). அதேபோன்று பீஜப்பூர் சுல்தானின் படை வேலூரையும், செஞ்சியையும் கைப்பற்றிக் கொண்டது (1649). இப்பீஜப்பூர் படையெடுப்பு செஞ்சி நாயக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

10.4.1. வீழ்ச்சியின் விளைவு

செஞ்சி நாயக்கத்தின் வீழ்ச்சி தமிழ்நாட்டு வரலாற்றில் விபரீத விளைவுகளை ஏற்படுத்தியது. செஞ்சியைக் கைப்பற்றிய பீஜப்பூர் படை செஞ்சிக் கோட்டையில் சேமித்து வைக்கப்பட்ட பொருட்களையும், செல்வத்தையும் கைப்பற்றிக் கொண்டது. பலகோடி ரூபாய் ரொக்கமும் கணக்கிலடங்கா தங்கமும், நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டன. அதுமட்டுமல்ல. செஞ்சி நாயக்க மக்கள் கொடுமைகளுக்குள்ளாயினர். மக்கள் கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டனர். மசூதிகள் கட்டப்பட்டன. அதுமட்டுமல்ல. பீஜப்பூர் படை தெற்கு நோக்கிச் சென்று தஞ்சையையும்,

குறிப்பு

மதுரையையும் சூறையாடி பணியச் செய்தது. தமிழ்நாடு பீஜப்பூர், கோல்கொண்டா தயவில் இருந்தது. முகமதியர் ஆதிக்கம் கொடிகட்டிப் பறந்தது. இவற்றின் கூட்டு விளைவாகத் தமிழ்நாட்டில் தெலுங்கர் செல்வாக்கு பலவீனமடைந்தது.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. யார் மகாநாயக்கர் என்று புகழ் பெற்றார்?

2. யார் ஆனந்தகிரி என்ற பெயரை இராஜகிரி என்று மாற்றினார்?

3. வெள்ளாற்றின் முகத்துவாரத்தில் கிருஷ்ணபட்டினம் என்ற துறைமுகப் பட்டினத்தைத் தோற்றுவித்தவர் யார்?

10.5. தஞ்சை நாயக்கர்கள்

13-ஆம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் சோழர் பேரரசின் வீழ்ச்சிக்குப்பிறகு தஞ்சாவூர் தாழ்ச்சியுற்றது. அங்கு நிலையான ஆட்சி இல்லை. பாண்டியப் பேரரசின் பிடிக்குள் சிக்கியது சோழ நாடு. அதன்பிறகு மதுரை சுல்தான்களின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. மதுரை சுல்தானியத்தை வீழ்த்திய விஜயநகர் சோழநாட்டை விஜயநகரப் பேரரசின் பகுதியாக்கிவிட்டது. கிருஷ்ணதேவராயர் காலத்தில் (1509-1530) சோழ நாடு மதுரை நாயக்கத்தின் பகுதியாக இருந்தது. அவரது வாரிசான அச்சுதராயர் காலத்தில் (1530-1542) சோழ நாடு மதுரை நாயக்கத்திலிருந்து பிரிக்கப்பட்டு தஞ்சை நாயக்கமாக்கப்பட்டது.

10.6. செவப்ப நாயக்கர்

தஞ்சை நாயக்கத்தைத் தோற்றுவித்தவர் செவப்ப நாயக்கர். அவரே அதன் முதல் நாயக்கர். திம்மப்ப நாயக்கரின் மகன் செவப்ப நாயக்கர். திம்மப்ப நாயக்கர் வட ஆர்க்காடு நெடுங்குன்றத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர். அவர் கிருஷ்ண தேவராயரின் வாயில் காப்பாளராகவும், தளவாயாகவும் விசுவாசத்துடன் பணியாற்றியவர். திம்மப்ப நாயக்கருக்கும் பயாம்பிகைக்கும் மகனாகப் பிறந்தவர் செவப்ப நாயக்கர்.

உழைப்பால் உயர்ந்தவர்

செவப்ப நாயக்கர் கிருஷ்ணதேவராயர், அச்சுதராயர் ஆகிய பேரரசர்களின் கீழ்ப் பணியாற்றியவர். அவர்களின் நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற்றவர். அறிவுத் திறமையாலும், நேர்மையாலும், அயரா உழைப்பாலும் உயர்ந்தவர். அச்சுதராயரின் மைத்துனி மூர்த்திமாம்பாவைத் திருமணம் செய்து கொண்டதன் மூலம் அரச

குறிப்பு

குடும்பத்துடன் உறவை ஏற்படுத்திக் கொண்டார். விஜயநகரப் பேரரசர் அச்சுதராயர் அவரது சகலை செவப்பனரை தஞ்சை நாயக்கராக நியமித்தார் (1532). செவப்ப நாயக்கர் தஞ்சை மண்டல நாயக்கரானதன் மூலம் தஞ்சை நாயக்க வம்சாவளியைத் தோற்றுவித்தார். தஞ்சை நாயக்கம் தஞ்சாவூர், தென் ஆர்க்காடு மாவட்டத்தின் பகுதி, திருச்சி ஆகியவற்றை உள்ளடக்கியது.

செய்த சேவைகள்

செவப்ப நாயக்கர் சிறந்த நிர்வாகி, அரசியல் விவேகி, பொதுநல நாட்ட முடையவர். இவரது ஆட்சிக் காலத்தில் பல பொதுநலப் பணிகளை மேற்கொண்டார். குறிப்பாக நீர்ப்பாசன வசதியைப் பெருக்குவதற்காகத் தஞ்சையில் பெரிய குளம் ஒன்றை வெட்டச் செய்தார். அதற்கு சிவப்பனேரி என்று பெயரிடப்பட்டது. இவர் சமய சகிப்புத் தன்மையைக் கடைப்பிடித்தார். முஸ்லீம் அருட்தொண்டர்களை ஆதரித்து அவர்களுக்குத் தானங்கள் கொடுத்தார். அதேபோன்று செவப்ப நாயக்கர் போர்ச்சுக்கீரியரின் நடவடிக்கைகளை ஊக்குவித்தார். அவர்கள் நாகையில் குடியிருப்புகளை அமைத்துக் கொள்ள வேண்டிய உதவிகளைச் செய்தார். நாகைத் துறைமுகத்தைச் செப்பனிட்டார். டச்சுக்காரர்களுடனும் நட்புறவோடு இருந்தார். தஞ்சைக் கோட்டை கட்டப்பட்டது. கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆலயங்களுக்குப் பல கிராமங்கள் தானமாக அளிக்கப்பட்டன. செவப்ப நாயக்கர் இலக்கிய நாட்டமுடையவர். தத்துவ சிந்தனையாளர். பிரபல இலக்கியப்புலமை படைத்த தத்துவர் மத்வா குரு விஜயின்திர தீர்த்தர் இவரது அரசவையை அலங்கரித்தார். சுருங்கக்கூறின், செவப்ப நாயக்கர் தஞ்சை நாயக்கத்தைத் தோற்றுவித்து, பலப்படுத்தி, புகழ் பெறச் செய்தார்.

10.7. அச்சுதப்ப நாயக்கர்

செவப்ப நாயக்கரைப் போன்றே அவருக்குப்பின் தஞ்சை நாயக்கரான அச்சுதப்பரும் விஜயநகர விசுவாசி. விஜய நகரப் பேரரசர் அச்சுதப்பராயரின் நினைவாக இவருக்கு இப்பெயர் சூட்டப்பட்டது. செவப்ப நாயக்கர் ஆட்சிக் காலத்திலேயே இவர் பட்டத்து இளவரசராயிருந்து நிர்வாக அனுபவம் பெற்றார். தலைக்கோட்டைப் போரின் போது (1565) அச்சுதப்பர் விஜயநகரத்துக்குப் படை உதவியும், பொருள் உதவியும் செய்தார். பின்னர் வல்லத்தில் மதுரை-செஞ்சி கிளர்ச்சிக் கூட்டுப் படைக்கும் விஜயநகரப் படைக்கும் போர் மூண்ட போது அச்சுதப்ப நாயக்கர் விஜயநகர் பேரரசருக்குத் துணையாக இருந்தார். இதுவே மதுரை-தஞ்சை நாயக்கர்களுக்கிடையே தீரா விரோதத்திற்கு வித்திட்டது. இலங்கைக்கும் போர்ச்சுக்கீசியருக்குமிடையே நடைபெற்ற போரில் இவர்

குறிப்பு

இலங்கையை ஆதரித்தார். இப்போரில் தோல்வியுற்ற இலங்கை மன்னருக்கு தஞ்சையில் அடைக்கலம் கொடுத்தார்.

அறப் பணிகள்

அச்சுதப்ப நாயக்கரின் பிரதம அமைச்சராக இருந்தவர் கோவிந்த தீட்சிதர், சிறந்த அறிவாளி. அறிவுக்கூர்மைமிக்க நிர்வாகி. அச்சுதப்பரிடம் போர்த் திறமையும் சமயப் பற்றும் ஒருங்கே அமைந்திருந்தன. இவரது ஆட்சிக் காலத்தில் கும்பகோணம் மகாமக குளம் தூர்வாரப்பட்டது. பல கோயில்களின் உட்கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன் தானங்கள் தாராளமாக வழங்கப்பட்டன. குறிப்பாக ஸ்ரீரங்கம் கோயில். தந்தையைப் போன்றே இவரும் நீர்ப்பாசனப் பெருக்கத்துக்குச் சிறப்பிடம் கொடுத்தார். அச்சுதப்ப நாயக்கர் திருவாடிக்கருகே காவேரிக்குக் குறுக்கே கட்டிய அணை குறிப்பிடத்தக்கது. பிராமணர்களுக்குப் பல அக்கிரகாரங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இவரது மகன் இரகுநாத நாயக்கர் யுவராஜாவாக இருந்து அச்சுதப்பருக்கு உதவியாக இருந்தார். எனினும் அச்சுதப்ப நாயக்கரின் கடைசி காலத்தில் அடிக்கடி போர்களும் குழப்பங்களும் ஏற்பட்டன. சந்திரகிரியிலும், வேலூரிலும் இருந்த நாயக்கர்கள் தஞ்சைக்கு வாரிசுரிமை கோரியதால் இக்குழப்பங்கள் ஏற்பட்டன.

10.8. இரகுநாத நாயக்கர்

இரகுநாத நாயக்கர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தந்தை அச்சுதப்ப நாயக்கர் விட்டுச் சென்ற அரச பாரத்தை சுமக்க வேண்டியதாயிற்று. இவர் ஆட்சிக் காலத்தில் உள்நாட்டுப் போர் துவங்கிற்று. வேலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த விஜயநகரப் பேரரசுக்கான வாரிசுரிமைப் போராட்டம் போரில் முடிந்தது. இப்போரில் விஜயநகர விசுவாசியான இரகுநாத நாயக்கர் பங்கேற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இப்போராட்டத்தில் பேரரசின் சார்பாகப் போட்டியிட்ட எச்சம நாயக்கரை ஆதரித்தார் தஞ்சை நாயக்கர். எச்சம நாயக்கரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜக்கராயரை மதுரை, செஞ்சி நாயக்கர்கள் ஆதரித்தனர். இவ்விரு தரப்பினருக்குமிடையே தோப்பூரில் நடைபெற்ற போரில் (1616) ரகுநாத நாயக்கரின் உதவியுடன் பேரரசுப் படை வெற்றி பெற்றது.

போரின் விளைவு

தோப்பூர் போரின் விளைவாக இரகுநாத நாயக்கருக்குப் பெரிய பயன் ஏதும் கிடைக்கவில்லை. தோப்பூர் போர் விஜயநகரப் பேரரசை மேலும் பலவீனப்படுத்தியதே யன்றி இரகுநாத நாயக்கரின் நிலையை உயர்த்தவில்லை. தஞ்சை நாயக்கருக்கும் மதுரை நாயக்கருக்கும் இடையேயான விரோதமும் குரோதமும் அதிகரித்தனவேயன்றி குறையவில்லை. தமிழ்நாட்டில் இருபெரும் நாயக்கியங்களின்

தலைவர்களாயிருந்த நாயக்கர்கள் தெலுங்கர்களாக இருந்தபோதிலும் இவர்களுக்கிடையே கடுமையான பொறாமைப் போட்டி நிலவியது.

பல்கலை வல்லவர்

குறிப்பு

இரகுநாத நாயக்கர் பல்கலை வல்லவர். இவர் சமஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் புலமைமிக்கவர். இவரது அரசவை புலவர்களாலும் இலக்கியப் படைப்பாளிகளாலும் நிறைந்திருந்தது. இரகுநாதர் இசைஞானி. இவர் புதிய இராகங்களையும், தாளங்களையும், மேளங்களையும் உருவாக்கினார். இவரது சங்கீத சுதா இசை பற்றிய வடமொழி நூலாகும். இவரது மனைவி பத்ராம்பா சிறந்த கவிஞர். இரகுநாதரின் இசை மற்றும் இலக்கியப் படைப்புகள் பல. கோவிந்த தீட்சிதரின் மகன் யஞ்னநாராயணா அவரது சாகித்ய இரத்னாகரா என்ற நூலில் இரகுநாதரின் ஆட்சிச் சிறப்பைப் பற்றி விவரித்துள்ளார். இரகுநாதர் மத்துவ மேதைகளான சுதின்ரா, இராகவேந்ரா ஆகியோருக்குப் புரவலர். இவரது அரண்மனை நூலகமே பின்னர் சரஸ்வதி மகால் நூலகமாக விரிவுபடுத்தப்பட்டது. இரகுநாதர் திறமைமிக்க வாள் வீச்சாளரும்கூட. குதிரை சவாரியில் வல்லவர். தரங்கம்பாடியில் டேனிஷ் குடியிருப்பு உருவாக உதவியவர் (1620). இதுவே பின்னர் ஆங்கிலேயர் தஞ்சை நாயக்கர்களிடம் வர்த்தக உதவிகோர வழிவகுத்தது. இரகுநாத நாயக்கர் தஞ்சை நாயக்கர்களில் தலைசிறந்தவர் என்பதில் ஐயமில்லை.

10.9. விஜயராகவ நாயக்கர்

இரகுநாத நாயக்கரையடுத்து தஞ்சை நாயக்கரான விஜயராகவ நாயக்கர் விஜயநகரப் பேரரசுக்கு விசுவாசமாக இருந்து விரோதியானவர். பழிபாபத்துக்கு அஞ்சாதவர். விஜயநகரப் பேரரசர் மூன்றாம் ஸ்ரீரங்கர் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டும் பொருட்டு தமிழ்நாட்டின் மீது படையெடுத்து வந்த போது மதுரை, செஞ்சி நாயக்கர்கள் கடுமையாக எதிர்த்தனர். ஆனால் விஜயராகவர் பேரரசரை ஆதரித்தார். அப்போது மதுரையை ஆட்சி செய்த திருமலை நாயக்கர் கோல்கொண்டா சுல்தானின் உதவியோரு ஸ்ரீரங்கரைத் தோற்கடித்தார். ஸ்ரீரங்கர் தோல்வியடைந்ததை அறிந்த விஜயராகவ நாயக்கர் மனதை மாற்றிக் கொண்டார். தோல்வியுற்று அடைக்கலம் கேட்டு வந்த ஸ்ரீரங்கரின் வேண்டுகோளை நிராகரித்துவிட்டார் விஜயராகவர். எனவே, ஸ்ரீரங்கர் மைசூரில் அடைக்கலம் கேட்டு செல்லவேண்டியதாயிற்று.

விஜயராகவ நாயக்கரின் இயலாமையைப் பயன்படுத்திக் கொண்ட பீஜப்பூர் கோல்கொண்டா சுல்தான்கள் தஞ்சை மீது படையெடுத்தனர். முதலில் படையெடுத்து வந்த கோல்கொண்டா சுல்தானிடம் சரணடைந்தார் விஜயராக நாயக்கர். அதன்பின் படையெடுத்துவந்த பீஜப்பூர் சுல்தானுக்குப் பயந்து காட்டுக்குள் சென்றுவிட்டார். பீஜப்பூர் படை தஞ்சை, மன்னார்குடி, வல்லம் ஆகிய இடங்களைக் கைப்பற்றியது.

சேமித்து வைத்திருந்த செல்வமெல்லாம் சூறையாடப்பட்டது. தொற்று நோய்க்கு அஞ்சிய பீஜப்பூர் படை பின்வாங்கிச் சென்றது.

குறிப்பு

பாதுகாப்பு புறக்கணிப்பு

பீஜப்பூர் படை பின்வாங்கிச் சென்றபின் வனவாசத்திலிருந்து திரும்பிய விஜயராகவ நாயக்கர் பூஜை செய்தால் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று நம்பினார். பெரும் பொருட்செலவில் நவராத்திரி பூஜை நடத்தப்பட்டது. பிராமணர்களின் வழிகாட்டுதலின் பேரில் சமயச் சடங்குகளில் கஜானாவைக் காலி செய்தார். அரசியல் பிரச்சனைக்கு சமயத்தீர்வு எதுவுமில்லை என்பதை அறியாத விஜயராகவர் பாதுகாப்பைப் புறக்கணித்தார். அதற்கான விலையை விரைவிலேயே கொடுக்க நேரிட்டது.

10.10. தஞ்சையின் வீழ்ச்சி

விஜயநகரப் பேரரசர் மூன்றாம் ஸ்ரீரங்கர் தமிழ்நாட்டின் மீது படையெடுத்து வந்த போது மதுரை திருமலை நாயக்கருக்கு எதிராகப் பேரரசரை ஆதரிக்காததை மறக்கவோ மன்னிக்கவோ தயாராயில்லை. விஜயராகவரைத் தண்டிக்கும் பொருட்டு மதுரை சொக்கநாத நாயக்கர் தஞ்சைமீது படையெடுத்தார். விஜயராகவ நாயக்கர் போர்க்களத்திலேயே கொல்லப்பட்டார். தஞ்சை நாயக்கம் மதுரை நாயக்கத்துடன் இணைக்கப்பட்டது. மதுரை சொக்கநாத நாயக்கரின் சகோதரர் அழகிரி தஞ்சை ஆளுநராக நியமிக்கப்பட்டார். தஞ்சை நாயக்கம் முடிவுக்கு வந்தது. அதன்பின் தஞ்சை மராத்தியர் வசமாயிற்று.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

4. தஞ்சை நாயக்கத்தைத் தோற்றுவித்தவர் யார்?
5. அச்சுதப்ப நாயக்கரின் பிரதம அமைச்சராக இருந்தவர் யார்?
6. சங்கீத சுதா இசை பற்றிய வடமொழி நூலை எழுதியவர் யார்.

10.11. பாளையக்காரர்களின் நிர்வாகம்

தமிழ் நாடு விஜய நகரப் பேரரசின் பகுதியாக இருந்த போது இராணுவ ஆளுநர்களின் கீழ் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஆளுநர்கள் அமரநாயக்கர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் ஆட்சி செய்த பகுதிகள் அமரநாயக்கதானங்கள் என்று பெயர் பெற்றன. விசுவநாத நாயக்கர் ஆட்சிக் காலத்தில் (1529-1564) அவரது தளவாய் அரியநாத முதலியாரால் உருவாக்கப்பட்ட 72 பாளையங்கள் மதுரை நாயக்கர்கள் காலத்துக்குப் பின்னரும் நீடித்தன. செஞ்சி நாயக்கர்களும் இந்த பாளையப்பட்டு முறையையே பின்பற்றினர். இத்தகைய நிலப்பாகுபாட்டு முறை தமிழ் நாட்டுக்குப் புதிது பாளையக்காரர்களும்

குறிப்பு

புதியவர். துவக்கத்தில் பெரும்பான்மையான பாளையக்காரர்கள் ஆந்திராவிலிருந்து வந்த இராணுவத் தலைவர்களாக இருந்தனர். 16-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் விஜய நகரப் பேரரசு பலவீனப்பட்ட போது இப்பாளையக்காரர்கள் சுதந்திரமாகச் செயல்படலாயினர். இவர்கள் தங்களது சுதந்திரத்தில் ஆர்க்காட்டு நவாபுகளும் ஆங்கிலேயரும் தலையிட்டதை விரும்பவில்லை எதிர்த்தனர்.

பாளையம்

ஆந்திர நாயக்கர்கள் ஆட்சி செய்வதற்கு வசதியாகத் தமிழ் நாடு பல பாளையங்களாகப் பிரிக்கப்பட்டது. பாலமு என்று தெலுங்கிலும், பாளையம் என்று தமிழிலும் கையாளப்படும் இச்சொல் துவக்கத்தில் இராணுவ முகாமைக் குறித்தது. பின்னர் மாவட்டத்துக்கு இணையான இப்பாளையங்கள் ஆள் நிலப் பகுதியைக் குறிப்பதாயிற்று. பாளையங்கள் நன்கு பாதுகாக்கப்பட்ட நிர்வாக மையங்களாகத் திகழ்ந்தன. இவை புதிய அரசியல் அமைப்புகளாக (Political Units) உருப்பெற்றன. இராமநாதபுரம், சிவகங்கை, உடையார்பளையம், அரியலூர், பாஞ்சாலம்குறிச்சி ஆகியவை வலிமைமிக்க முக்கிய பாளையங்களாகும். பொதுவாக இவற்றைத் தெலுங்கு பாளையங்கள், தமிழ் பாளையங்கள் என்று பிரிப்பதுண்டு. நெல்கட்டும்செவல், சிவகிரி, சாத்தூர், அழகாபுரி போன்ற மேற்குப் பாளையங்களை தமிழ் பேசும் பாளையக்காரர்கள் ஆட்சி செய்தனர். மாறாக, எட்டயபுரம், பாஞ்சாலங்குறிச்சி, கடல்குடி போன்ற கிழக்குப் பாளையங்கள் தெலுங்கு பேசும் பாளையக்காரர்களின் ஆட்சியின் கீழ் இருந்தன.

10.12. பாளையக்காரர்

பாளையத்தின் சொந்தக்காரத் தலைவர் பாளையக்காரர் என்று அழைக்கப் பட்டார். இவர்கள் பாளையங்கள் மீது பரம்பரை உரிமை பெற்றிருந்தனர் கோட்டைகளைக் கட்டிக் கொண்டு பாதுகாப்புடன் இருந்தனர். எடுத்துக்காட்டாக மதுரையை ஆட்சி செய்த விசுவநாத நாயக்கர் மதுரையை மறுசீரமைத்த போது மீனாட்சி அம்மன் கோயில் உள்ளிட்ட நகரைச் சுற்றி அகழிகளுடன் கூடிய இரட்டைச் சுவர்களுடன் கோட்டையைக் கட்டினார். கோட்டையைச் சுற்றி பாளையக்காரர்களின் அலுவலகங்களுக்காக 72 இரட்டை அடுக்குக் கட்டடங்களையும் கட்டினார். 1841 இல் பிரிட்டிஷ் கலெக்டர் பிளாக் பெர்ன் (Black Burn) மதுரை நகரை விரிவுபடுத்துவதற்காக இக்கோட்டை அரண்களை அகற்றிவிட்டார். பளையக்காரர்கள் நாயக்கரின் பிரதிநிதிகளாக செயல்பட்டனர். அவர்கள் தங்களது நடவடிக்கைகளுக்கு நாயக்களுக்குப் பொறுப்பானவர்கள். பாளையக்காரர்களின் பிரதான பணி வரி வசூலித்தல் ஆகும். வசூலித்த வரித்தொகையில் மூன்றில் ஒரு பங்கை நாயக்கருக்கு திறையாகச் செலுத்திவிட்டு எஞ்சிய பங்கைக் கொண்டு பாதுகாவல் படையைப் பராமரித்து சொந்த செலவுக்கும் வைத்துக் கொள்ள

குறிப்பு

வேண்டும். பாளையத்தை நிர்வகித்தல், மக்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டல், நீதி வழங்கல், நாயக்கருக்குத் தேவைப்படும்போது படை வீரர்களை அனுப்புதல் போன்றவை பாளையக்காரரின் பிற பொறுப்புகளாகும்.

10.12.1. பாளையக்காரர் ஆட்சி முறை

ஒவ்வொரு பாளையமும் கிராமங்களின் தொகுப்பாகும். பாளையத்தின் அதிபரான பாளையக்காரர் தனக்கு உதவி செய்ய அமைச்சர்களையும், அதிகாரிகளையும் நியமித்துக் கொண்டார். அமைச்சர்கள் சேனாதிபதிகளாகவும் இருந்தனர். தளவாய் சேனாதிபதிகளுக்குத் தலைவர். பாளையக்காரர் தளவாய் மூலமாக நாயக்கருடன் தொடர்பு கொண்டார். நடைமுறையில் ஒவ்வொரு பாளையக்காரரும் தர்பாரில் அமர்ந்து காட்சியளித்து ஒரு மன்னரைப் போன்று தன்னிச்சையாக படாடோபமாக நடந்து கொண்டார். பாளையக்காரர் ஆட்சி முறை ஒரு வகையான இராணுவ முடியாட்சி என்று கூறலாம்.

நிலமானிய முறை

பாளையக்காரர் ஆட்சி நிலமானிய முறை (குநரனயடளைஅ)யை மையமாகக் கொண்டு சுழன்றது. விளை நிலம் தான் வருவாயின் ஊற்று வாழ்க்கையின் ஆதாரம் அரசாங்கத்தின் உயிர் மூச்சு. எனவே, பாளையக்காரர் வளமிக்க நிலத்தைத் தன் சொந்த உபயோகத்துக்கு வைத்துக் கொண்டு எஞ்சியவற்றைப் பிற பிரமுகர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார். பிரமுகர் குத்தகைதாரர்கள் இருவேறு கடமைகளைச் செய்ய வேண்டும்: 1) அரசாங்கத்துக்கு நிலவரி செலுத்த வேண்டும் 2) நெருக்கடி நேரத்தில் நாயக்கருக்கு இராணுவ உதவி செய்ய வேண்டும். எனவே, ஒவ்வொரு விவசாயியும் ஒரு போர் வீரராகவும் இருக்க வேண்டும். பாளையக்காரர் நிலத்துக்குச் சொந்தக்காரர் ஆயினும் உழவர்களே விளைச்சலுக்குக் காரணமாக இருந்தனர். பயிர் சாகுபடி இவர்களின் உழைப்பைப் பொறுத்தே இருந்தது. உழவர்கள்தான் நிலத்தை உழுது, விதைத்து, பயிரை வளர்த்துப் பாதுகாத்து, சாகுபடி செய்து, விளைச்சலை ஒப்படைப்பவர்கள். எனினும் இவர்கள் வசிப்பதற்குத் தேவையான குறைந்தபட்ச விளைபொருளை ஊதியமாகக் கொடுத்து விட்டு மீதியைப் பாளையக்காரர் பெற்றுக் கொள்வார். குடும்பத் தேவைகளுக்கு உழவர்கள் பாளையக்காரரிடமிருந்து பணமாகவோ அல்லது பொருளாகவோ கடன் பெற்று, வாங்கிய கடனைக் கொடுக்க முடியாமல் கொத்தடிமைகளாக வாழ்க்கையின் விளிம்பிலேயே இருந்தனர். சுருங்கக்கூறின், உழவர்கள் கடனில் பிறந்து, கடனில் வசித்து, கடனைத் தன் வாரிசுகளுக்கு விட்டுச் சென்றனர்.

குறிப்பு

நிறை குறை

விளைநிலம் விளைச்சலைப் பொறுத்து கரிசல், செம்மண், பொட்டல், களிமண் பூமி என்று வகைப்படுத்தப்பட்டது. பொதுவாக விளைச்சலில் பாதி பாளையக்காரரின் பங்காக இருந்தது. இப்பங்கு பொதுச் செலவு என்று அழைக்கப்பட்டது. அதாவது பொதுக் காரியங்களுக்காகப் பெறப்பட்ட பங்காகக் கருதப்பட்டது. சரியான விளைச்சல் மதிப்பீட்டு முறையும், முறையான மாமூல்" அளவும் இல்லாமையால் பாளையக்காரர் தன் தேவைக்கேற்ப தன் பங்கை யதேச்சையாகத் தீர்மானித்துக் கொண்டார். இதனால் விவசாயிகளும், உழவர்களும் பல்வேறு முறைகேடுகளுக்குப் பலியாயினர். இச்சுரண்டலிலிருந்து தப்பிக்க அவர்கள் விளைச்சலைப் பற்றிய தவறான தகவல்களைத் தந்தனர் பொய்க் கணக்கைக் கொடுத்தனர். இதனால் வரி ஏய்ப்பு வழக்கமாகிவிட்டது. இது ஏமாற்றுவோருக்கும் ஏமாற்றப்படுவோருக்குமான போட்டியாக இருந்தது.

ஊர்க்காவல் முறை

ஊர்க்காவல் முறை தமிழ் நாட்டின் பாரம்பரிய உள்ளூர் பாதுகாப்பு முறையாகும். காவல்காரர்கள் ஊர்ப் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்தனர். எனினும், தமிழ்நாடு விஜய நகரப் பேரரசின் நேரடி ஆட்சியின் கீழ் இருந்தவரை ஊர்க்காவல் முறை பின்பற்றப்பட வில்லை. பின்னர் நாயக்கர்கள் சுதந்திரமாகச் செயல்படத் துவங்கிய போது இப்பாரம்பரியப் பாதுகாவல் முறை புதுப்பிக்கப்பட்டு பின்பற்றப்பட்டது. காவல்களுக்கான ஊதியம் பணமாகவோ பொருளாகவோ கொடுக்கப்பட்டது. ஊர்க்காவல் முறை தலக்காவல் என்ற பெயரில் செயல்பட்டது. இக்காவல் முறையின் காரணமாக கிராம மக்கள் அச்சமின்றி இருந்தனர் பயிர்கள் பாதுகாக்கப்பட்டன் கிராமங்கள் திருடர்களின் தாக்குதலினின்றும் விடுவிக்கப்பட்டன.

தற்காப்புப் படை

பாளையக்காரர்கள் தங்களது பாதுகாப்புக்காகவும், பகட்டு வாழ்க்கைக்கும், சமூக அந்தஸ்துக்காகவும் சொந்த தற்காப்புப் படையை வைத்திருந்தனர். பாளையக்காரர் எங்கு சென்றாலும் இப்படையின் ஒரு பிரிவினர் அவருடன் செல்வர். தற்காப்புப் படையில் மூன்று பிரிவினர் இருந்தனர்: 1) அமரும் பணியாளர்கள். இவர்கள் பாளையக்காரர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள். கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருபவர்கள். இவர்களுக்கு நிலம் மானியமாக வழங்கப்பட்டது. 2) கட்டுப்படி பணியாளர்கள். இவர்கள் பாளையக்காரர்களுக்குப் போர்த் தளவாடங்களைத் தயாரித்துக் கொடுப்பவர்கள். இவர்களுக்கும் நிலம் மானியமாகக் கொடுக்கப்பட்டது. 3) கைக் கூலிகள். இவர்கள் அவசரத்துக்குப் பயன்படக்கூடியவர்கள் ஆயுதம் ஏந்தி போரிடக் கூடியவர்கள். இவர்கள் கூலிக்கு மாரடிப்பவர்கள்". இவர்களுக்கு வேலை

குறிப்பு

பாதுகாப்பு இன்மையால், வேலையின்றி இருக்கும் போது கொலை, கொள்ளை, திருட்டு போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

போர் முறை

பாளையக்காரர்கள் பெயரளவுக்கு நாயக்கருக்குக் கட்டுப்பட்டவர்களேயன்றி நடைமுறையில் இவர்கள் சுதந்திரமாகச் செயல்பட்டனர். இவர்களது சொல்லே சட்டமாக இருந்தது. பாளையக்காரர்கள் அரண்களோடு கூடிய கோட்டைகளைக் கட்டிக் கொண்டு எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொண்டனர். பெரும் தாக்குதல்களையும் கோட்டைக்குள் இருந்து கொண்டே எதிர்கொண்டனர். கோட்டைகளைத் தாண்டிச் சென்று இவர்களை வெல்வது கடினம். பாளையக்காரர்கள் பல்வேறு போர்க் கருவிகளைப் பயன்படுத்தினர். நாட்டுத் துப்பாக்கிகளும், வேல் கம்பு, ஈட்டிகளும் இவர்களது பிரதான ஆயுதங்கள். இவற்றோடு பீரங்கி, கைத்துப்பாக்கி, போர் வாள், குத்து வாள், கேடயம், கூர்ங்கோல், வில்-அம்பு, கவண், ஈட்டி, உந்துவாணம், தாக்கித் திரும்பும் வாள்தடி போன்ற ஆயுதங்களையும் கையாண்டனர்.

பாளையக்காரர்கள் பொதுவாக எதிரிகளை நேரடியாகவோ அல்லது மறைந்திருந்து தாக்கும் போர் உத்திகளைப் பின்பற்றினர். அடர்ந்த காடுகளைப் பதுங்கிக் கொண்டு எதிரிகள் மீது எதிர்பாரா நேரத்தில் பாய்ந்து தாக்கிப் பேரழிவை ஏற்படுத்துவர். எதிரியின் குதிரைப் படையை இவர்களது கூர்ங்கோல் வீரர்கள் சுற்றி வளைத்துத் திடீர்த் தாக்குதல் நடத்திச் செயலிழக்கச் செய்வர். இவர்களுக்குத் துணையாகப் பீரங்கிப் படையினரும், துப்பாக்கி ஏந்திகளும் போரில் கலந்து கொள்வர். படைப் பிரிவினர் அனைவரும் கூட்டுத் தாக்குதல் நடத்தி எதிரிகளின் படைகளைத் திக்குமுக்காடச் செய்வர்.

தனிக்காட்டு இராஜாக்கள்

கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேல் (1650-1760) பாளையக்காரர்கள் தமிழ் நாட்டில் தனிக்காட்டு இராஜாக்களாகச் செயல்பட்டு வந்தனர். பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றி இவர்களது தனித்தன்மையையும், சுதந்திரத்தையும், செல்வத்தையும், செல்வாக்கையும் பெருக்கிக் கொண்டனர். இவர்கள் பயத்தாலும், நயத்தாலும், வீரதீர பராக்கிரமச் செயல்களாலும் பாளைய மக்களின் ஆதரவைப் பெற்றிருந்தனர். நாயக்கர் ஆட்சி பலவீனமாக இருக்கும் போது பாளையக்காரர்கள் அரசாங்க கிராமங்களை ஆக்கிரமித்துக் கொண்டனர். உள்ளாட்சி நிர்வாகிகளைப் பயமுறுத்திப் பணியவைத்து அவர்களிடமிருந்து மாமூல்களைப் பெற்றுக் கொண்டனர். அரசாங்கத்துக்கு இராணுவ உதவி செய்து அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றனர். அரசாங்க ஆதரவுடன் பாளையங்களை விரிவுபடுத்தினர் படையைப் பெருக்கிக் கொண்டனர். கிராமங்களை இராணுவ முகாம்களாக

உருமாற்றம் செய்தனர். அரசாங்கம் நெருக்கடியில் இருக்கும் போது எதிர்க்கவும் செய்தனர்.

குறிப்பு

10.12.2. குறிப்பிடத்தக்க பாளையக்காரர்கள்

தமிழ் நாட்டில் நூற்றுக்கணக்கான பாளையக்காரர்கள் இருந்தனர். மதுரை நாட்டில் மட்டும் 72 பாளையங்கள் இருந்தன. விஜய நகர ஆட்சியின் போது மட்டும் 200க்கும் மேற்பட்ட பாளையக்காரர்கள் இருந்தனர். மதுரை நாயக்கர்கள் காலத்தில் (1549-1736) மதுரை, திருச்சி, தஞ்சை, செஞ்சி ஆகிய பகுதிகளில் பாளையக்காரர்கள் இருந்தனர். பின்னர் இவர்கள் தமிழ் நாட்டின் நான்கு திக்குகளிலும் தங்களது ஆட்சியை அமைத்துக் கொண்டனர். கொங்கு நாட்டில் மட்டும் 10 பலமிக்க கவுண்டர் பாளையக்காரர்கள் இருந்தனர். தென்னிந்தியாவிலேயே கொங்கு நாட்டில் தான் அதிக எண்ணிக்கையில் பாளையங்கள் இருந்தன. நெல்கட்டும்செவல் (மதுரை) பாஞ்சாலங்குறிச்சி, எட்டயபுரம் (மதுரை-திருநெல்வேலி) சிங்கம்பட்டி (திருநெல்வேலி) கன்னிவாடி, விருப்பாட்டி (மதுரை-திண்டுக்கல்) காளகதி (சந்திரகிரி) மதுராந்தகம் (சந்திரகிரி-வேலூர்) பாளையக்காரர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

10.12.3. ஆர்க்காட்டு நவாபுகளின் கீழ் பாளையக்காரர்கள்

1736-ஆம் ஆண்டு மதுரை நாயக்கர் ஆட்சி வீழ்ச்சி அடைந்த பின்னர் பாளையங்கள் குழப்பக் காடுகளாயின. 1690-களில் மதுரை நாயக்கர் நாடு ஆர்க்காடு நவாபுகளின் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. நாயக்கர்களுக்குப் பதில் நவாபுகள் பாளையக்காரர்களின் மேலதிகாரிகளாயினர். பாளையக்காரர்கள் நவாபுகளுக்குக் கப்பம் கட்டும் கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டனர். இந்த ஆட்சி மாற்றத்தைப் பாளையக்காரர்கள் விரும்பவில்லை வேறு வழியின்றி ஏற்றுக் கொண்டனர். 1750-களில் ஆர்க்காட்டு நவாபுகள் ஆங்கிலேயரின் ஆதிக்கக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தபோது அவர்கள் பாளையக்காரர்களின் புது மேலாண்மைக்கு ஒரு மேல்நிலக்கழாராயினர். ஆங்கிலேயர் வரி வசூலைத் தீவிரப்படுத்திய போது அவர்களுக்கும் பாளையக்காரர்களுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டன் இந்த மோதல்கள் கிளர்ச்சிகளாக மாறின.

10.13. போராளி பூலித்தேவன்

1715 செப்டம்பர் முதல் தேதி திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோயிலுக்கு அருகாமையில் உள்ள ஆவுடையார்புரம் என்ற கிராமத்தில் சித்திரபுத்திர தேவருக்கும், சிவஞான நாச்சியாருக்கும் மகனாகப் பிறந்தார் பூலித்தேவன். இவருக்கு இளமையிலேயே தமிழார்வமும், கவிதைப்பாடும் திறனும், சுயமரியாதையும், சுதந்திர

குறிப்பு

உணர்வும் இயல்பாகவே அமைந்திருந்தன. வீரமிக்க பூலித்தேவன் புலியைக் கொன்றதால் இவருக்குப் புலித்தேவன் என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். இவருக்கு இயற்பெயரைவிட காரணப் பெயரான புலித்தேவன் என்ற பெயரே மக்கள் மனதில் நிலைத்துவிட்டது அதுவே மரபுவழிப் பட்டப்பெயராகவும் பயன்படுத்தப்பட்டது.

நெல்கட்டான் செவல்

பூலித்தேவன் பிறந்த ஆவுடையார்புரத்து மக்கள் மதுரை நாயக்க மன்னர்களுக்கு நெல்லைக் கப்பமாகக் கட்டி வந்தமையால் அந்த ஊர் நெல்கட்டும் செவல் என்று அழைக்கப்பட்டது. பூலித்தேவன் நெல்கட்டும் செவல் பாளையக்காரர் பொறுப்பேற்ற பிறகும் தம் மக்கள் கப்பக்காணிக்கை செலுத்துவதை விரும்பவில்லை. எனவே, ஆர்க்காட்டு நவாபு முகமது அலி ஆங்கிலேயரின் துணைகொண்டு நிலவரி வசூலைத் தீவிரப்படுத்திய போது பூலித்தேவன் வரி செலுத்த மறுத்தார். இவர் நெல்லைக் கப்பமாகக் கட்ட மறுத்தமையால் நெல்கட்டும் செவல் நெல்கட்டான் செவல் ஆயிற்று. இப்பெயர் மாற்றம் பூலித்தேவனின் போராட்ட உணர்வின் சின்னமாகத் திகழ்ந்தது.

முதல் மோதல்

ஆற்காட்டு நவாபு முகமது அலி மதுரையை கர்நாடகத்துடன் இணைத்துக் கொண்ட பிறகு (1736) ஆங்கிலக் கம்பெனியின் ஆதரவோடு ஆதிக்கம் செலுத்த முற்பட்டபோது தென்கோடி தமிழ் நாட்டுப் பாளையக்காரர்கள் அம்முயற்சியை எதிர்த்தனர். அந்த எதிர்ப்பை ஒருமுகப்படுத்தி வடிவம் கொடுத்தார், துணிந்து நவாப்-ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்தார் பூலித்தேவன். அவர் ஒத்த மனப்பான்மையுடைய பிற பாளையக்காரர்களின் துணை கொண்டு சவாலை எதிர்க்கொள்ளத் தீர்மானித்தார். மேற்குப்புறப் பாளையக்காரர்களைக் கொண்ட மேற்குக் கூட்டமைப்பை (Western Confederacy) உருவாக்கினார். ஆர்க்காட்டு நவாபின் மகன் மாப கான் தலைமையிலான படையை பூலித்தேவனின் கூட்டணி தோற்கடித்தது. பூலித்தேவனின் முதல் மோதல் வெற்றி பெற்றது. இதன் மூலம் ஆங்கிலேயரின் ஆதரவோடு தோற்றுவிக்கப்பட்ட நவாபின் ஆதிக்க முயற்சியை முறியடிக்க முடியும் என்பதை நிரூபித்தார் பூலித்தேவன்.

முற்றுகை முறியடிப்பு

மாப கான் பூலித்தேவனின் கூட்டணிப் படையிடம் தோல்வியடைந்த பின் ஆர்க்காடு நவாபு ஆங்கிலேயரின் உதவியை நாடினார். நவாபின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்ட ஆங்கிலக் கம்பெனி திருச்சிக்கும் கன்னியாகுமரிக்கும் இடைப்பட்ட பாளையங்களைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் நோக்குடன் ஹெரான் (ர்நசழெ) தலைமையில் ஒரு படையை அனுப்பியது. அப்படை பல பாளையங்களைப் பணிய வைத்துவிட்டுத்

குறிப்பு

திரும்பும் வழியில் ஹெரான் நவாபின் மேலாதிக்கத்துக்குப் பணிய மறுத்த பூலித்தேவனுக்குப் பாடம் கற்பிக்க முடிவு செய்தார். நெல்கட்டான் செவல் முற்றுகையிடப்பட்டது. இந்த முற்றுகையைப் பற்றி முன்கூட்டியே ஒற்றர் மூலம் அறிந்திருந்த பூலித்தேவன் தக்க முன்னேற்பாட்டுடன் ஹெரானின் தாக்குதலை எதிர்க்கொண்டார். ஆங்கிலப் படைக்குத் தேவையான பொருட்கள் கிடைக்காமல் செய்தார். நெல்கட்டான்செவல் முற்றுகை முறியடிக்கப்பட்டது. ஹெரான் புறமுதுகிட்டுப் பின்வாங்கினார். ஆங்கிலப் படை பூலித்தேவனிடம் தோற்றது. பூலித்தேவனின் அர்ப்பணிப்புப் படை, தீர்க்கமான தலைமை, இராஜதந்திரம் இவ்வெற்றிக்குக் கைகொடுத்தன.

களக்காடு முற்றுகை

பூலித்தேவனிடம் தோல்விகண்ட மாப கான் மீண்டும் தன் அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் நோக்கத்தோடு மீண்டும் பாளையப் படையுடன் மோதும் முயற்சியில் ஈடுபட்டார். மாப கான் திட்டத்தை முன்கூட்டியே அறிந்த பூலித்தேவன் ஆர்க்காடு நவாபின் பணியிலிருந்த திறமைமிக்க முடேமியா (Mudemiah), மியான் (Mian), நபிகான் (Nabi Khan) போன்றோரைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டார். மேலும், திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மாவிடம் பேச்சுவார்த்தை நடத்தி 4000 போர் வீரர்களை வரவழைத்தார் பூலித்தேவன். வழக்கம்போல மறவர் படை அவருக்குத் துணை நின்றது. பூலித்தேவனின் கூட்டணிப் படை மாப கானின் குதிரைப் படையை இடைநிறுத்தி நிலைகுலையச் செய்தது. மாப கான் வசமிருந்த களக்காடு கோட்டையை முற்றுகையிட்டார். அந்நிலையில் திருவிதாங்கூரில் வெடித்த கிளர்ச்சியை அடக்குவதற்காக தன் வீரர்களை விலக்கிக் கொண்டார் மார்த்தாண்டவர்மா. எனினும் மாப கான் களக்காடு கோட்டையைத் திரும்பப் பெற முடியாமல் தடுத்துவிட்டார் பூலித்தேவன். களக்காடு முற்றுகை பூலித்தேவரின் பெருமையை மேலும் உயர்த்தியது.

மீண்டும் முற்றுகை

மாப கான் களக்காட்டை பூலித்தேவரிடமிருந்து மீட்கத் தீர்மானித்தார். அவரது வேண்டுகோளுக்கிணங்க ஆர்க்காடு நவாபும் ஆங்கிலேயரின் ராணுவ உதவியைப் பெற்றுத் தந்தார். இம்முறை தேவையான உணவுப் பொருள்களையும், கூடுதல் படையுடனும் மாப கான் களக்காடு நோக்கி வந்தார். இதை முன்கூட்டியே அறிந்த பூலித்தேவன் மாப கான் படைமீது திடீர்த் தாக்குதலை நடத்தினார் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. இத்திடீர்த் தாக்குதல் நவாபுக்கும் ஆங்கிலேயருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது. மாப கான் களக்காட்டை முற்றுகையிட்டுக் கைப்பற்றும் முயற்சியைக் கைவிட்டு திருநெல்வேலி முகாமுக்குத் திரும்பினார்.

செவலுக்குச் சவால்

பூலித்தேவனின் கோட்டையான நெல்கட்டான்செவலைக் கைப்பற்றிவிட்டால் பூலித்தேவனைப் பணிய வைத்துவிடலாம் என்று

குறிப்பு

எண்ணிய மாப கான் மீண்டும் அதை முற்றுகையிட்டார். பூலித்தேவன் கூடுதல் படையினருடன் நெல்கட்டான்செவல் கோட்டையைப் பலப்படுத்தியிருந்தமையால் மாப கானின் முயற்சி இம்முறையும் வெற்றி பெறவில்லை. அந்த ஆத்திரத்தில் நவாபின் நிலங்களை சூறையாடிய கள்ளர் படையினரை மூர்க்கமாகத் தாக்கிச் சிதறடித்தார் மாப கான். இதனால் பூலித்தேவனின் படைபலம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

ஸ்ரீவில்லிபுத்தூர் முற்றுகை

பாளையக்காரர்கள் மதுரை அரச பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்றும், ஆர்க்காட்டு நவாபுகள் மதுரையை ஆக்கிரமித்தவர்கள் என்றும் கருதிய பூலித்தேவன் மதுரையை மீட்க முடிவு செய்தார். மேலும் பல மேற்குப் பக்கம் பாளையக்காரர்களைத் தன் கூட்டமைப்பில் சேர்த்துக் கொண்டார். கிழக்கத்திய பாளையக்காரர்கள் நவாபின் அடக்கு முறைக்கு அஞ்சி பூலித்தேவனுடன் சேரத் தயங்கினாலும், பாளையக்காரர்கள் கர்நாடக நவாபு-ஆங்கிலேயக் கூட்டாதிக்கத்துக்கு எதிராக ஒத்துழைக்க ஒப்புதல் அளித்தனர். அதேபோன்று, மதுரைப் பாளையக்காரர்களும் பூலித்தேவனுக்கு நேசக்கரம் நீட்டினர். தொடர் வெற்றிகளால் பெரிதும் ஊக்குவிக்கப்பட்ட பூலித்தேவன் விரிவுபடுத்தப்பட்ட பாளையக்காரர் கூட்டமைப்புக்குத் தலைமைப் பொறுப்பேற்றார்.

பூலித்தேவன் ஸ்ரீவில்லிபுத்தூர் வழியாகச் சென்று மதுரையை நவாபிடமிருந்து கைப்பற்றத் திட்டமிட்டார். அத்திட்டத்தின்படி அவர் கூட்டமைப்புப் படையினருடன் ஸ்ரீவில்லிபுத்தூரை அடைந்து அக்கோயில் நகரக் கோட்டையை அப்துல் இரகீமின் பிடியினின்றும் கைப்பற்றினார். எந்த இடத்திலும் எதிரிப் படையுடன் மோதாமல் மறைந்திருந்து தாக்கி அவர்களை ஆச்சர்யத்தில் வீழ்த்தினார் பூலித்தேவன். நவாபின் வீரர்கள் நிலைகுலைந்தனர் பலர் கோட்டைக்குள் சரணடைந்தனர் மேலும் பலர் தப்பிச் சென்றனர். இவ்வீரமிகு வெற்றி பூலித்தேவனின் புகழைப் பன்மடங்கு பெருக்கிற்று. மதில்மேல் பூனைகளாக இருந்த பாளையக்காரர்களும் பூலித்தேவன் பக்கம் சேர முன்வந்தனர். சுருங்கக்கூறின், ஸ்ரீவில்லிபுத்தூர் வெற்றி பூலித்தேவனின் தலைமைக்குக் கிடைத்த மணி மகுடமாகும்.

10.13.1. ஆங்கிலேயரின் எதிர்த்திட்டம்

பூலித்தேவனின் மின்னல்வேக முன்னேற்றத்தைக் கண்ட ஆர்க்காட்டு நவாபும், ஆங்கிலேயரும் கலக்கமுற்றனர். இலட்சிய வெறியோடு, திட்டமிட்டு முன்னேறும் பூலித்தேவனைத் தடுத்து நிறுத்த முடிவு செய்தனர். அதற்கேற்ப இராணுவ உத்திகளை வகுத்தனர். இம்முறை இராணுவத் தாக்குதல் பொறுப்பை ஆங்கிலேயர் ஏற்றுக் கொண்டனர். மாப கானின் திறமையின்மையை உறுதி செய்து கொண்ட ஆங்கிலேயர் பல்திறன்மிக்க கான்சாகிபை தளபதியாக நியமித்து பாளையக்காரர்களுக்கு எதிராக அனுப்பினர். கான்சாகிபு திருநெல்வேலி சென்று முகாமிட்டு பாளையக்காரர் எதிர்ப்பை எதிர்க்கொள்ளத்

குறிப்பு

திட்டமிட்டார். இதன் மூலம் ஆங்கிலேயர் பாளையக்காரர்கள் சம்மந்தமாக நேரடியாகத் தலையிட்டனர். அதாவது கான்சாகிபைக் கருவியாகக் கொண்டு, தென் தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, வரி வசூலை நேரடியாக மேற்கொள்ளத் திட்டமிட்டனர் ஆங்கிலேயர்.

திருநெல்வேலி தாக்குதல்

மதுரையைக் கைப்பற்றுவது உறுதியாகிவிட்ட நிலையில் கூட்டமைப்புப் படைத் தலைவர்கள் சிலர் நவாபின் இராணுவ முகாமான திருநெல்வேலியைக் கைப்பற்றிவிட்டால் மதுரையை மீட்பது எளிது என்ற மாற்றுத் திட்டத்தை முன்வைத்தனர். தெற்கே திருநெல்வேலியையும், மேற்கே மதுரையையும் கைப்பற்றிய பின்னர் நவாபையும் ஆங்கிலேயரையும் ஒருசேர விரட்டுவது எளிதாகிவிடும் என்று அவர்கள் வாதிட்டனர். கூட்டமைப்புத் தலைவர்களின் கருத்துக்கு மதிப்பளித்த பூலித்தேவன் திருநெல்வேலியைக் கைப்பற்றும் நோக்குடன் கூட்டுப்படையை வழிநடத்திச் சென்றார். பூலித்தேவனின் திடீர்ப் போர்த்திட்ட மாற்றத்தை அறிந்த கான்சாகிபு கிழக்குப் பகுதிப் பாளையக்காரர்களுள் சிலரை தன்பக்கம் சேர்த்துக் கொண்டு திருநெல்வேலியில் தன் நிலையைப் பலப்படுத்திக் கொண்டார். இந்நிலையில் பூலித்தேவனின் படை திருநெல்வேலியைத் தாக்கியது. 1756 மார்ச் 21 ஆம் தேதி துவங்கிய திருநெல்வேலி போரில் பூலித்தேவனின் கூட்டுப் படைக்கு பின்னடைவு ஏற்பட்டது. கூட்டுப் படையினர் பிரிந்து பின்வாங்கத் துவங்கினர். பேரழிவை சந்திக்க விரும்பாத பூலித்தேவன் தன் படை வீரர்களுடன் நெல்கட்டான் செவலுக்குத் திரும்பினார்.

திருநெல்வேலியைக் கைப்பற்றுதல்

திருநெல்வேலித் தாக்குதல் தோல்வியிலிருந்து நெல்கட்டான் செவலுக்குத் திரும்பிய பூலித்தேவன் புதிய போர்க் கொள்கையை வகுத்தார். அதன்படி நவாப்-ஆங்கிலேயருடன் சமரசப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டு அவர்களுக்குச் சொந்தமான பகுதிகளைத் தாக்கிச் சீரழிப்பது. இந்த இருமுனைக் கொள்கையின்படி மதுரையில் புதிதாக நியமிக்கப்பட்டிருந்த தீர்த்தாரப்ப முதலியுடன் கப்பம் கட்டத் தயாராக இருப்பதாகப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டே நவாபின் நிலங்களைச் சூறையாட கள்ளர்களை அனுமதித்தார் பூலித்தேவன். பின்வாங்கிப் போன பாளையக்காரர்களை ஊக்கப்படுத்தி மீண்டும் கூட்டமைப்பைப் புதுப்பித்தார். கிழக்குப் பகுதிப் பாளையக்காரர்கள் சிலர் அனுப்பிய படைவீரர்களையும் சேர்த்துக் கொண்டு, காட்டு வழியாகச் சென்று திருநெல்வேலி மீது திடீர்த் தாக்குதல் நடத்தினார் பூலித்தேவன். அதிர்ச்சிக்குள்ளான எதிரிப் படையினர் செயலிழந்தனர். திருநெல்வேலி கைப்பற்றப்பட்டது.

குறிப்பு

பாளையங்கோட்டை முற்றுகை

திருநெல்வேலியைக் கைப்பற்றி வலுவான நிலையில் இருந்த பூலித்தேவனின் கவனத்தைத் திசை திருப்பும் பொருட்டு ஆங்கிலப் படைத் தளபதி கான்சாகிபு பாளையங்கோட்டைக்கு விரைந்து சென்று கோட்டையைக் கைப்பற்றினார். இதை அறிந்த பூலித்தேவன் பாளையம்கோட்டைக்கு விரைந்து சென்று கோட்டையைச் சுற்றி வளைத்துக் கொண்டார். கோட்டைக்குள்ளிருந்த எதிரிப் படையினருக்கு உணவுப் பொருட்கள் செல்வதைத் தடுத்து நிறுத்தினார். பின்னர் அவரது படைவீரர்கள் கோட்டையின் மீது ஏற முற்பட்டபோது ஆங்கிலப் படையின் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காயினர். வேறுவழியின்றி பூலித்தேவன் பாளையங்கோட்டையிலிருந்து பின்வாங்க நேரிட்டது.

மீண்டும் திருநெல்வேலி முற்றுகை

பாளையங்கோட்டையிலிருந்து தப்பி காட்டுக்குள் சென்ற பூலித்தேவன் மதுரையை மீட்கும் இலட்சியத்தோடு செயல்பட்டார். திருநெல்வேலியில் எஞ்சியிருந்த மைசூர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இராணுவ உதவியை நாடினார். மாப காணையும் அவரது ஊழல் அதிகாரிகளையும் பொருளாசை காட்டித் தன்பக்கம் இழுத்துக் கொண்டார். மீண்டும் பாளையக்காரர் கூட்டமைப்பைப் புதுப்பித்தார். திருநெல்வேலியைக் கைப்பற்றிய பின்னர் மதுரையை மீட்க வேண்டும் என்ற திட்டப்படி திருநெல்வேலி மீது படையெடுத்தார் பூலித்தேவன். இதற்கிடையே கான்சாகிபு களக்காடு, பாப்பான்குளம், ஆழ்வார்க்குறிச்சி, பிரமதேசம், தரன்குறிச்சி ஆகிய பகுதிகளைக் கைப்பற்றி பூலித்தேவனின் கூட்டமைப்புப் படை பலத்தைப் பலவீனப் படுத்தினார். எனவே, பூலித்தேவன் திருநெல்வேலியைக் கைப்பற்றும் முயற்சியைக் கைவிட்டுத் திரும்பினார்.

இறுதிப் போராட்டம்

பூலித்தேவனைப் புறங்காண்பது எளிதல்ல என்பதைப் புரிந்து கொண்ட கான்சாகிபு அவரை சூழ்ச்சித் திறனால் வீழ்த்த முடிவு செய்தார். பல பாளையக்காரர்களை கூட்டமைப்பிலிருந்து பிரித்தார். சபலமனமுடைய மாப கானை விலைக்கு வாங்கினார். திருவிதாங்கூர் மன்னரின் இராணுவ உதவியைப் பெற்றார். இத்தகைய நடவடிக்கைகள் மூலம் பூலித்தேவனை தனிமைப்படுத்தினார் கான்சாகிபு. அதன் பின்னர் கான்சாகிபு பூலித்தேவனின் பலமிக்க வாசுதேவநல்லூர் கோட்டையை முற்றுகையிட்டு ஒருமாத கால போராட்டத்துக்குப் பின் கைப்பற்றினார்.

சாத்தூர் கோட்டைக்குள் முகாமிட்டிருந்த பூலித்தேவனைத் தன் சூழ்ச்சித் திறனால் கோட்டையை விட்டு வெளியேறச் செய்தார் கான்சாகிபு. கோட்டையை விட்டு வெளியேறிய பூலித்தேவன் எதிரியின் இராணுவ முகாம்களைத் தாக்கி பேரழிவை ஏற்படுத்தினார். ஊத்துமலைக் கோட்டையைக் கைப்பற்றினார். இவற்றால் ஊக்குவிக்கப்பட்ட பூலித்தேவன் பாளையம்கோட்டையையும், திருநெல்வேலியையும் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் பூலித்தேவனின் இறுதி

முயற்சியை முறியடித்தார் கான்சாகிபு. 1761 இல் நெல்கட்டான் செவல் கோட்டையைக் கைப்பற்றினார். காட்டுக்குள் தப்பிச் சென்ற பூலித்தேவனின் மறைவு இன்று வரை அவிழ்க்கப்படாத வரலாற்று முடிச்சாகவே உள்ளது. இதுபற்றி வரலாற்று ஆதாரமற்ற பல கதைகள் கற்பிக்கப்பட்டுள்ளன.

மதிப்பீடு

பாளையக்காரர்களின் இராணுவ ஆட்சியின் கீழ் நிலமானிய முறை வழக்கத்துக்கு வந்தது. அதன் தாக்கத்தால் தமிழர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். குறிப்பாக, உழவர்களும் உழைப்பாளிகளும் பன்முனைச் சுரண்டலுக்கு இலக்காயினர். பாளையக்காரர்கள் தங்களது தனித்தன்மையையும், சுதந்திரத்தையும் இழக்கத் தயாராக இல்லை. மதுரை நாயக்க மன்னர்களின் வாரிசுகளாகக் கருதிக் கொண்ட இவர்கள் ஆர்க்காட்டு நவாபுகளை அந்நியராகவும், தங்களது மரபுரிமையைப் பறித்துக் கொண்டவர்களாகவும் கருதி எதிர்த்து வந்தனர். நவாபுகளை ஆதரித்த ஆங்கிலேயரையும் அயலார்களாகவே எண்ணி எதிர்த்தனர். இந்த எதிர்ப்புக்கு ஒரு இலக்கையும், வடிவத்தையும் கொடுத்து நவாபு-ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டப் பாதையைப் போட்டுக் கொடுத்தவர் பூலித்தேவன். இலட்சியக் கனவுடன் அந்நிய ஆதிக்கத்துக்கு எதிராக நெல்லிக்காய்களாக இருந்த பாளையக்காரர்களை ஒன்று சேர்த்து, ஒரு கூட்டமைப்பின் கீழ்க் கொண்டு வந்து, அதற்குத் தலைமைதாங்கி, போராட்டம் நடத்திய முதல் விடுதலைப் போராளி பூலித்தேவன். இவர் பிற போராளிகளுக்கு முன்னோடியாக இருந்தார். இவரது தோல்வி இவருக்குப் பின் வந்தோருக்கு வரலாற்றுப் பாடமாயிற்று.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

7. அமரநாயக்கர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்.
8. பாலமு என்றால் என்ன?
9. மதுரை நாட்டில் எத்தனை பாளையங்கள் இருந்தன.

10.14. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

1. வையப்ப நாயக்கர்
2. கிருஷ்ணப்ப நாயக்கர்
3. இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர்
4. செவப்ப நாயக்கர்
5. கோவிந்த தீட்சிதர்
6. இரகுநாத நாயக்கர்
7. ஆளுநர்
8. பாளையம்
9. 72 பாளையங்கள்

குறிப்பு

குறிப்பு

10.15. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

குறுகிய வினாக்கள்

1. செஞ்சி நாயக்கர்கள் குறித்து சிறு குறிப்பு எழுதுக.
2. தஞ்சை நாயக்கர்களின் வீழ்ச்சியை எழுதுக.
3. பாளையத்தின் வளர்ச்சியை எழுதுக.

விரிவான வினாக்கள்

1. மதுரையின் வளர்ச்சியில் நாயக்கர்களின் பங்கு பற்றி விவாதி.
2. செஞ்சி நாயக்கர்களின் வளர்ச்சி மற்றும் வீழ்ச்சியை எழுதுக.
3. பூலித்தேவனின் நிர்வாகம் குறித்து கட்டுரை எழுதுக.

10.16. கூடுதல் வாசிப்புகள்

Subramania N. A History of Tamil Nadu up to 1336

Rajayyan K. History of Tamil Nadu

பிள்ளை கே.கே. தென்னிந்திய வரலாறு

Nilakanda Sastri K.N. A History of South India

Sathianathair R. History of India

வெங்கடேசன் க. முற்கால தமிழ்நாட்டு வரலாறு

வெங்கடேசன் க. தற்கால தமிழ்நாட்டு வரலாறு

செல்வம் வே. தி. தமிழக: வரலாறும் பண்பாடும்

இராமசாமி அ. தமிழ் நாட்டு வரலாறு

அலகு – 11

ஐரோப்பிய செல்வாக்கின் ஆரம்பம் - போர்ச்சுக்கீசியர்- டச்சுக்காரர்கள் - டேனியர்கள் - ஆங்கிலேயர் - பிரெஞ்சுக்காரர்கள் - ஆங்கிலோ - பிரஞ்சு போட்டி - ஆங்கிலோ மைசூர் போர்கள்.

பாட அமைப்பு

11.1. முன்னுரை
11.2. நோக்கங்கள்
11.3. போர்ச்சுக்கீசியர்
    11.3.1. வர்த்தக விரிவாக்கம்
    11.3.2. புனித தாமஸ்

குறிப்பு

11.4. டச்சுக்காரர்கள்
11.4.1. வர்த்தக வல்லுநர்கள்
11.5. டேனியர்கள்
11.5.1.கல்விப் பணி
11.5.2. சமுதாயப்பணி
11.6. ஆங்கிலேயர்கள்
11.7. பிரெஞ்சுக்காரர்கள்
11.8. ஆங்கிலோ- மைசூர் போர்கள்
11.8.1. முதல் மைசூர் போர், 1767-1769
11.8.2. போரின் போக்கு
11.8.2.1. கர்நாடகப் படையெடுப்பு
11.8.2.2. அமைதி உடன்படிக்கை
11.8.2.3. உடன்படிக்கை விதிகள்
11.8.2.4. தோல்விக்காரன காரணங்கள்
11.8.3. இரண்டாம் மைசூர் போர், 1780-1784
11.8.3.1. போரின் போக்கு
11.8.3.2. மங்களூர் உடன்படிக்கை
11.8.3.2.1. மங்களூர் உடன்படிக்கை விளைவுகள்
11.8.4. மூன்றாம் மைசூர் போர், 1790-1792
11.8.4.1. போரின் போக்கு
11.8.4.2. முதல் கட்டப் போர்
11.8.4.3. இரண்டாம் கட்டப் போர்
11.8.4.4. மூன்றாம் கட்டப் போர்
11.8.4.4.1. ஸ்ரீரங்கப்பட்டனம் உடன்படிக்கை
11.8.4.4.2. விளைவுகள்
11.8.5. நான்காம் மைசூர் போர், 1799
11.8.5.1.போரின் போக்கு
11.8.5.2. விளைவுகள்
11.9. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்
11.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
11.11. கூடுதல் வாசிப்புகள்

11.1. முன்னுரை

17-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர் தமிழ் நாட்டுக்கு வந்தபோது தமிழ் நாட்டைத் தமிழர்கள் ஆட்சி செய்யவில்லை. அப்போது தமிழ் நாட்டை ஆட்சி செய்தவர்கள் வர்த்தக உறவுக்காக வந்த வெளிநாட்டவருக்குக் கதவுகளைத் தாராளமாகத் திறந்து விட்டனர். போதிய ஆதரவளித்தனர். இத்தாராள மனப்பான்மையைப் பயன்படுத்திக் கொண்ட போர்ச்சுக்கீசியர்கள் மதமாற்றத்தில் ஈடுபட்டனர். டச்சுக்காரர்கள் வர்த்தகத்தைப் பெருக்கிக் கொண்டனர். டேனியர்கள் சேர்ந்த செல்வத்தைச் செலவிட்டு தரங்கம்பாடியை அவர்களது பண்பாட்டு

குறிப்பு

நகரமாக்கினர். பிரெஞ்சுக்காரர்கள் ஆதிக்கப் போட்டியில் அதிக அக்கறை காட்டினாலும் பாண்டிச்சேரியை மாதிரி நகரமாக மாற்றினர். ஆங்கிலேயருக்குத் தெளிவான குறிக்கோளும், தீர்க்கமான அணுகுமுறையும், பணபலமும், வர்த்தக வெற்றியும் அவர்கள் பிற ஐரோப்பியப் போட்டியாளர்களை இறுதியில் வெற்றி பெற முடிந்தது. அனைத்து முக்கிய ஐரோப்பிய நாடுகளும் தமிழ் நாட்டில் வர்த்தக-அரசியலில் அக்கறை கொண்டிருந்தனர் என்றும், அதன் காரணமாகத் தமிழ் நாடு இராணுவ முக்கியத்துவமுடைய பகுதியாக விளக்கியது. இந்த அத்தியாமானது ஐரோப்பியர்கள் தமிழகத்தில் ஏற்படுத்திய செல்வாக்கினையும் அவர்களுக்குள் நிகழ்ந்த போர்களையும் விளக்குகிறது

11.2. நோக்கங்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர் கீழ் கண்டவற்றை அறிய முடியும்

- ஐரோப்பியர்களின் வருகை மற்றும் அவர்களின் ஆக்கப்பணிகள் பற்றி அறிய உதவுகிறது.
- ஐரோப்பியர்களின் வர்த்தகப் போட்டியை விவரிக்கிறது.
- ஐரோப்பியர்கள் மற்றும் தென்னிந்திய மன்னர்களுடன் ஏற்பட்ட போர்கள் மற்றும் அதன் தாக்கம் குறித்து விவாதிக்கிறது.

11.3. போர்ச்சுக்கீசியர்

கள்ளிக்கோட்டையில் காலூன்றிய போர்ச்சுக்கீசியர் (1498), கோவாவைத் தங்களது தலைமையகமாகக் கொண்டு (1510), 1522 ஆம் ஆண்டு தமிழ் நாட்டின் வடமேற்குப் பகுதியில் செல்வச் செழிப்போடிருந்த மைலாப்பூரில் உள்ள சாந்தோமில் தங்களது குடியிருப்பை அமைத்தனர். சாந்தோம் போர்ச்சுக்கீசியர்கள் வர்த்தகத்துக்கும், மதப் பிரச்சாரத்துக்குமான முக்கிய மையமாக இருந்தது.

11.3.1. வர்த்தக விரிவாக்கம்

தமிழ் நாட்டுக்கு வந்த போர்ச்சுக்கீசியர் வர்த்தக விரிவாக்கத்தில் ஊக்கத்துடன் செயல்பட்டனர். அவர்கள் செஞ்சியில் ஒரு வர்த்தகக் குடியிருப்பை ஏற்படுத்தினர். போர்ட்டோநோவோவைத் துறைமுக நகராக மாற்றினர். தஞ்சை செவப்ப நாயக்கரின் (1532-1580) ஆட்சிக் காலத்தில் போர்ச்சுக்கீசியர் நாகப்பட்டினத்தில் குடியேறி அதை ஒரு வர்த்தக நகரமாக விரிவுபடுத்தினர். நாகை, சீனா, மலாக்கா போன்ற நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தனர். வர்த்தக விரிவாக்கமும், சமயப்

குறிப்பு

பிரச்சாரமும் போர்ச்சுக்கீரியரின் இரட்டைக் குறிக்கோள்களாகும். அவர்கள் வர்த்தகப் பெருக்கத்தைவிட மதமாற்றத்தில் அதிக அக்கறை காட்டினர். அவர்கள் சாந்தோமில் குடியேறியவுடன் அங்கு ஒரு தேவாலயத்தைக் கட்டினர். அதுவே அவர்களது சமயப் பிரச்சாரக் கேந்திரமாயிற்று. மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் சமயப் பிரச்சாரத்தை மேற்கொண்டு அங்கிருந்த மீனவர்களை மதமாற்றம் செய்தனர். சோழ மண்டலமும், தூத்துக்குடியும் போர்ச்சுக்கீசியரின் மதமாற்ற வட்டத்துக்குள் வந்தன. தூத்துக்குடிப் பரவர்கள் (Paravas) விஜய நகரப் பேரரசின் விசுவாசிகள். எனினும், அப்பேரரசு அவர்களுக்குப் போதிய சமுதாயப் பாதுகாப்பு அளிக்கவில்லை. மேலும், அவர்கள் நாயக்கர்களின் கொடுமைகளுக்கு இலக்காயினர். அதனால் வெறுப்படைந்த பரவர்கள் போர்ச்சுக்கீசியரின் உதவியை நாடினர். மதமாற்றத்தில் பேரார்வமிக்க போர்ச்சுக்கீசியர் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு 1583 ஆம் ஆண்டு பரவர்களுடன் தங்கி, அவர்களுடைய நம்பிக்கையைப் பெற்று, அவர்களுடைய சம்மதத்துடன் மதமாற்றம் செய்தனர். ஒரே நாளில் நூற்றுக்கணக்கானோருக்கு தீச்சை (Baptism) செய்து வைக்கப்பட்டது. "விஜய நகரப் பேரரசின் அலட்சியப் போக்கும், நாயக்கர்களின் கொடுங்கோன்மையும் பரவர்களின் மதமாற்றத்துக்குக் காரணம் என்று கூறுகிறார்" கே.ராஜய்யன். மதமாற்றத்தின் காரணமாக தூத்துக்குடி போர்ச்சுக்கீசியரின் செல்வாக்கு மையமாயிற்று எனக் கருதுகிறார் சி.எ.சீனிவாசாச்சாரி. மதமாற்றத்தின் காரணமாக பல்லாயிரக்கணக்கான பிற்படுத்தப் பட்ட, தீண்டத்தகாதோர் என்று புறக்கணிக்கப்பட்ட, பல்வேறு சமூகக் கொடுமைகளுக்கு உள்ளான குடும்பங்கள் புதுவாழ்வு பெற்றனர் அவர்களுக்கு சமூக அங்கீகாரமும், அடையாளமும் கிடைத்தது.

11.3.2. புனித தாமஸ்

காவலன் புனித தாமஸ் (St.Thomas) போர்ச்சுக்கீசியரின் முதல் சமயப் பிரச்சாரகராகக் கருதப்படுகிறார். ரோமன் கத்தோலிக்கரான இவர் கி.பி.52-ல் பாலதீனத்திலிருந்து கேரளாவில் உள்ள கொடுங்கலூருக்கு வந்ததாகவும், அங்கு அவர் 20 ஆண்டுகள் (கி.பி.52-72) சமயத் தொண்டு செய்து வந்ததாகவும், அவர் இந்துக்களை மதமாற்றம் செய்தார் என்று ஆத்திரமடைந்த சனாதன சமயவாதிகள் தாமசைக் கொலை செய்ய முயன்றதாகவும், அக்கொலை முயற்சியிலிருந்து தப்பிய அவர் மைலாப்பூர் மலைமுகட்டுக்கு வந்து அங்கு ஒரு தேவாலயத்தைக் கட்டினார் என்பதும் வழக்காறு. கி.பி.72 ஆம் ஆண்டு புனித தாம ஒரு கல் மீது அமர்ந்து பிரார்த்தனையில் ஆழ்ந்திருந்த போது சமய வெறியர்களால் குத்திக் கொல்லப்பட்டார். அவரது உடல் அவரால் கட்டப்பட்டதாகக் கருதப்படும் தேவாலயத்துக்குள்ளேயே ஒரு கல்லறையில் (sepulcher) நல்லடக்கம் செய்யப்பட்டது. பின்னர் இத்தேவாலயம் ஆங்கிலேயர்களால் கோதிக் (Gothic) கட்டிடக்கலை

பாணியில் புதுப்பிக்கப்பட்டது. இன்றும் இந்தத் "தேவாலயம் புனிதமான யாத்ரீகத் தலமாகக் கருதப்படுகிறது.

குறிப்பு

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. போர்ச்சுக்கீசியரின் தலைநகர் எது?
2. சாந்தோம் எங்கு அமைந்துள்ளது?

11.4. டச்சுக்காரர்கள்

டச்சுக்காரர்கள் போர்ச்சுக்கீசியரிடமிந்து முற்றிலும் மாறுபட்டவர்கள். இவர்கள் சமய நோக்கம் எதுவுமின்றி வர்த்தக விரிவாக்கத்தில் மட்டுமே கவனம் செலுத்தினர். இவர்களது நான்கு வர்த்தகக் கப்பல்கள் 1595 ஆம் ஆண்டு மலபார் கடற்கரையை வந்தடைந்தன. அங்கிருந்து அவர்கள் கிழக்குக் கடற்கரைக்கு வந்தனர். 1602-ல் பல டச்சு வர்த்தக நிறுவனங்கள் ஒருங்கிணைந்து வலிமையான ஐக்கிய கிழக்கிந்திய கம்பெனியை உருவாக்கினர். டச்சு அரசாங்கமும் அம்முயற்சிக்கு முழு ஆதரவை அளித்தது. ஐக்கிய கிழக்கிந்திய கம்பெனியின் சார்பாக இந்தியாவுக்கு வந்த டச்சுக்காரர்கள் 1605 ஆம் ஆண்டு கிழக்குக் கடற்கரையில் மசூலிப்பட்டினத்தில் மையம் கொண்டனர். கோல்கொண்டாவை ஒரு துறைமுக நகரமாக்கினர். அதன் பின்னர் அவர்கள் படிப்படியாக தமிழக சோழ மண்டலத்தில் தங்களது வர்த்தகக் குடியிருப்புகளை ஏற்படுத்தினர். 1608 ஆம் ஆண்டு டச்சு வர்த்தகர்கள் செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கரின் அனுமதியோடு தேவனாம்பட்டினத்தில் தங்களது குடியிருப்பை அமைத்தனர். இதுவே பின்னர் ஆங்கிலேயரின் புனித டேவிட் கோட்டை (Fort St.David) ஆகப் பெயர் மாற்றம் பெற்றது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் (1608-1610) டச்சுக்காரர்கள் உள்ளூர் நாயக்கரிடமிருந்து புலிக்கோட்டையைப் (Pulicat) பெற்றுக் கொண்டு அதைத் தங்களது அரண்காப்பு மையமாக மாற்றிக் கொண்டனர். அதன்பின் அவர்கள் போர்ச்சுக்கீசியரிடமிருந்து தரங்கம்பாடியையும் (1620), தூத்துக்குடியையும் (1658), நாகப்பட்டினத்தையும் (1659) கைப்பற்றிக் கொண்டனர். இவற்றுள் நாகப்பட்டினம் டச்சுக்காரர்களின் வர்த்தகத் தலைநகரமாகத் திகழ்ந்தது. இவர்களது குடியிருப்புகள் அனைத்தும் அரண்காப்புகளால் வலிமைப்படுத்தப்பட்டன.

11.4.1. வர்த்தக வல்லுநர்கள்

டச்சுக்காரர்கள் வர்த்தக வல்லுநர்கள் மட்டுமல்லாது திறமையான நிதி நிபுணர்களாகவும் இருந்தனர். சங்க காலத் தமிழர்களைப் போன்று திரைகடலோடி திரவியம் சேர்ந்து பெரும் பொருள் ஈட்டினர். சேர்த்த செல்வத்தை வர்த்தக விரிவாக்கத்துக்கே செலவிட்டனர். வர்த்தகத்தில் நாட்டம் கொண்ட டச்சுக்காரர்கள் மதமாற்றத்தைத் தவிர்த்தனர். தமிழக ஆட்சியாளர்களின் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை. டச்சு

வர்த்தகர்களுக்குக் கிடைத்த தாய்நாட்டு ஆதரவும், தேசிய குணமும், தெளிவான குறிக்கோளும், தீர்க்கமான முறைகளும் இவர்களது வெற்றிக்குக் காரணம். டச்சுக்காரர்கள் மதமாற்றத்தில் அக்கறை கொள்ளாவிட்டாலும், அடிமை வியாபாரத்தில் ஆர்வம் காட்டியதால் அவர்களுக்கு மக்கள் செல்வாக்கு குறையலாயிற்று. மேலும் அவர்களால் ஆங்கிலேயரின் வர்த்தகச் சவாலை சமாளிக்க முடியவில்லை. எனவே, டச்சுக்காரர்கள் தமிழ் நாட்டைவிட்டு வெளியேற வேண்டியதாயிற்று.

குறிப்பு

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

3. யார் அனுமதியோடு தேவனாம்பட்டினத்தில் டச்சுக்காரர்கள் குடியிருப்பை அமைத்தனர்?
4. டச்சுக்காரர்களின் வர்த்தகத் தலைநகரம் எது?

11.5. டேனியர்கள்

1616-ஆம் ஆண்டு டென்மார்க் கிழக்கிந்திய கம்பெனி மன்னர் நான்காவது கிறிடியனது பேராதரவுடன் துவக்கப்பட்டது. நான்காண்டுகளுக்குப் பிறகு 1620-ல் மன்னர் கிரேப் (Grape) தலைமையில் சில வணிகர்களைத் தஞ்சாவூருக்கு அனுப்பினார். தஞ்சாவூருக்கு வந்த வர்த்தகர்கள் தஞ்சை இரகுநாத நாயக்கருடன் (1600-1640) பேச்சுவார்த்தை நடத்தி அவருடைய ஆதரவோடு தரங்கம்பாடியில் தங்களது வர்த்தகக் குடியிருப்பை அமைத்துக் கொண்டனர் (1620). இரகுநாத நாயக்கர் டேனியர்களின் குடியேற்றத்தை விரும்பி வரவேற்றதாகக் குறிப்பிடுகிறார் பேராசிரியர் ஆர்.சத்தியநாதய்யர். டேனியர்கள் திறமைமிக்க வர்த்தகர்கள். அவர்கள் தேயிலையை பெரிய அளவில் இறக்குமதி செய்து, அதில் பெரும்பகுதியை பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்து அதிக லாபத்திற்கு விற்றனர். அதேபோன்று, டச்சுக் கம்பெனி தமிழகப் பொருள்களை மலாய் தீவுக் கூட்டத்துக்குக் கொண்டு சென்று விற்பனை செய்தனர் திரும்பும் போது வாசனை திரவியங்களைக் கொண்டு வந்து வியாபாரம் செய்தனர். டேனியர்கள் தரங்கம்பாடியைப் பெரிதும் நேசித்தனர். தரங்கம்பாடி என்றால் இசை பாடும் அலைகளைக் கொண்ட இடம் என்று பொருள். அவர்கள் தரங்கம்பாடியை டேனி போர்க் (Danesborg) என்று அழைத்தனர். இந்தக் கவிதை பாடும் கடலோரக் கரையில் டேனிய தளபதி ஒவே ஜேடே (Ove Gjedde) ஒரு கோட்டையைக் கட்டினார். துவக்கத்தில் அக்கோட்டையை ஆளுநரும், அவரது அதிகாரிகளும் பயன்படுத்தினர் அவர்களுக்கென குடியிருப்பும் கட்டப்பட்டது.

1620-ஆம் ஆண்டு டேனியர்கள் தரங்கம்பாடிக்கு வந்த போது அங்கிருந்த ஒரு அழகான சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய மாசிலாமணிநாதர் ஆலயம் இருப்பதைக் கண்டு அதிசயித்தனர். அக்கோயில் கி.பி.1305-ல் மாறவர்ம சுந்தர பாண்டிய மன்னரால்

குறிப்பு

கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது. அந்தக் கோயிலுக்கு எந்த இடையூறுமின்றி டேனியர்கள் ஒரு சியோன் தேவாலயத்தைக் (Zion Church) கட்டினர் (1701). பின்னர் அங்கு ஆளுநர் அரண்மனையும் (1782), நுழைவாயிலும் (1792) கட்டப்பட்டன. குடியிருப்பைச் சுற்றி ஐரோப்பிய பாணியில் உயரமான மதில் சுவர் எழுப்பப்பட்டது. சுருங்கக்கூறின், தரங்கம்பாடி ஒரு எழில் கொஞ்சும் பண்பாட்டுப் பட்டினமாகத் திகழ்ந்தது.

1729 ஆம் ஆண்டு டென்மார்க் கிழக்கிந்திய கம்பெனி புதுப்பிக்கப்பட்டு ஆசியக் கம்பெனி (யுளையெவழைம முழஅசநபனை) என்ற பெயரில் மேலும் 40 ஆண்டு காலம் ஏகபோக வர்த்தக உரிமை பெற்றது. எனினும் அக்கம்பெனியால் எதிர்பார்த்த வர்த்தக வெற்றியைப் பெறமுடியவில்லை. பிரிட்டனால் தோற்கடிக்கப்பட்ட டென்மார்க் தனது இந்திய வர்த்தகக் கேந்திரங்கள் அனைத்தையும் பிரிட்டனுக்கு விற்றுவிட்டது (1845). தரங்கம்பாடி லூதரன் மிஷன் சீகன்பால்க், 1682-1719 சமயப் பரப்பூழியர். பார்த்தலோமியோ சீகன்பால்க் (Bartholomeau Zie Genbalg) ஒரு ஜெர்மானியர். இவர் ஜெர்மனி சாக்சனியில் உள்ள புல் நீட் என்ற சிற்றூரில் 1683 ஜூன் 24 ஆம் தேதி ஒரு ஏழை வைதீகக் கிறி தவக் குடும்பத்தில் பிறந்தார். இவர் இளமைப் பருவத்திலேயே வயதுக்கு மீறிய அறிவாற்றலைக் கொண்டிருந்தார். இசையில் நாட்டமுடையவராகக் காணப்பட்டார். ஹாலே பல்கலைக்கழகத்தில் சீகன்பால்க் லூதரிச சித்தாந்தத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்றார். இவரது அறிவாற்றலையும் சேவை மனப்பான்மையையும் பற்றிக் கேள்வியுற்ற டென்மார்க் மன்னர் நான்காம் பிரெடெரிக் இவரை சமயப் பரப்பூழியராகத் தேர்வு செய்து தரங்கம்பாடிக்கு அனுப்பினார். அதுமட்டுமல்ல. சீகன்பால்க் மீது வைத்திருந்த மரியாதையின் காரணமாக மன்னரே துறைமுகத்துக்கு நேரில் வந்து வழியனுப்பினார். சீகன்பால்க்தான் இந்தியாவுக்கு வந்த லூதர் அமைப்பைச் சேர்ந்த முதல் மறுப்பியக்க சமயப்பரப்பூழியர் (Protestant Missionary) ஆவார்.

11.5.1.கல்விப் பணி

தரங்கம்பாடிக்கு வந்த சீகன்பால்க் செய்த முதல் காரியம் அங்கிருந்த தாழ்த்தப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, தீண்டத்தகாதோர் என்று ஒதுக்கப்பட்ட மக்களில் ஒருவராக அவர்களுடன் தங்கியதுதான். அடுத்து அவர்களது முன்னேற்றத்துக்காக சீகன்பால்க் மேற்கொண்ட முயற்சிகள். கல்வியின் மூலமாகத் தான் மக்களை முன்னேற்ற முடியும் என்பதை நன்கறிந்த அவர் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான ஒரு பயிற்சிப் பள்ளியை (Seminary) தோற்றுவித்தார். மக்களின் மொழியை நன்கு கற்றுக் கொண்ட சீகன்பால்க் தமிழை இப்பள்ளியின் பயிற்சி மொழியாக்கினார் (1707). பெண் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த சீகன்பால்க் பெண்களுக்கென பிரத்யேகமாக ஒரு பள்ளியை நிறுவினார். சாதி, சமய, நிற வேறுபாடின்றி அப்பள்ளியில் பெண்கள் சேர்த்துக்

கொள்ளப்பட்டனர். அந்தப் பள்ளியை நிர்வாகிக்கும் பொறுப்பை ஒரு விதவையர் குழுவிடம் ஒப்படைத்தார்.

11.5.2. சமுதாயப்பணி

குறிப்பு

தரங்கம்பாடி மக்களிடையே பன்னெடுங்காலமாக நிலவி வந்த சாதி வேறுபாடுகளைப் போக்கும் சமுதாயப் பணியில் சீகன்பால்க் முனைப்புடன் ஈடுபட்டார். சமுதாயத்தில் ஒரு பிரிவினரை ஒதுக்கி வைத்து, அவர்களுக்குக் கல்வி அளிக்காமல் புறக்கணித்து, தீண்டத்தகாதவர்களாக்கிய பிராமணர்களைக் கடுமையாகக் கண்டித்தார். அதனால் ஆத்திரமடைந்த சில அடிப்படைவாதிகள் சீகன் பால்கைக் கொலை செய்ய சதி செய்தனர். அதைப் பொருட்படுத்தாமல் சீகன்பால்க் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" எனக் கருதி சமூக சேவையில் ஆர்வத்துடன் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். மக்கள் இவரது பணியால் பெரிதும் கவரப்பட்டனர்.

சமயப்பணி

சீகன்பால்க்கின் சமயச் செய்திகள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதற்காக பல சமயத் தொண்டர்களுக்குத் தமிழிலேயே பயிற்சி அளித்தார். 1718 - அக்டோபர் 11 ஆம் தேதி புதிய ஜெரூசலேம் தேவாலயத்தை நிறுவி அதை மக்களுக்கு அர்ப்பணித்தார். அந்த தேவாலயத்தில் மக்கள் தங்கள் கலாச்சாரத்துக்கேற்ப தமிழில் வழிபட வழிவகுத்தார். ஆலயத்தில் தமிழில் வழிபாடு. அதுமட்டுமல்ல, பல்வேறு சமயங்களைச் சேர்ந்த தலைவர்களை அழைத்து சர்வ சமய உரையாடலுக்கு ஏற்பாடு செய்தார். சமயங்களை சமமாகக் கருதினார். இவர் எழுதிய தென்னிந்தியக் கடவுள்களின் குடிவழிப் பட்டியல் (The Genealogy of South Indian Gods), இவரது சிறந்த படைப்பாகும்.

மனம் தமிழ்ப் பணி

சீகன்பால்க் மக்கள் மொழியான தமிழில் பேசவும், எழுதவும் கற்றுக் கொண்டார். தமிழ்ப் பேச்சு மொழியையும், இலக்கிய மொழியையும் தனித்தனியே பயின்றார். தமிழிலேயே சமய விளக்கப் பேருரைகளாற்றினார். உலக நீதி, கொன்றை வேந்தன், நீதிவெண்பா ஆகிய தமிழ் நீதி நூல்களை மொழி பெயர்த்து உலகறியச் செய்தார். ஐரோப்பியரின் உபயோகத்திற்காக தமிழ் அகராதியையும், தமிழ் சொற்களஞ்சியத்தையும் தயாரித்தார். புதிய ஏற்பாட்டை (New Testament) தமிழில் மொழி பெயர்த்தார். சீகன்பால்க் ஒரு நடமாடும் நூலகமாகத் திகழ்ந்தார்.

பதிப்பகப் பணி

சீகன்பால்க் புத்தகப் பதிப்பகத்தின் முன்னோடி. ஆசியாவிலேயே முதல் முறையாக அச்சுக் கூடத்தை (Printing Press) நிறுவிய பெருமை இவருடையது. இதற்கான அச்சு இயந்திரம், காகிதம், மை போன்றவை ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இதில் சிறப்பு

குறிப்பு

என்னவென்றால் அச்சுக் கோப்புக்கான தமிழ் அச்சுக்களை ஜெர்மனியிலேயே தயாரித்துக் கொண்டு வந்ததாகும். இது அக்காலகட்டத்தில் எவராலும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அரிய சாதனையாகும். தரங்கம்பாடியிலிருந்த பலர் இம்முயற்சியைப் பைத்தியக்காரத் தனமானது எனக் கருதினர். இது உண்மையிலேயே ஒரு பைத்தியக்கார சாதனைதான். இந்த அச்சகத்தில் தமிழ் நீதி நூல்கள், மொழி பெயர்ப்புகள், நாள்காட்டிகள், துதிப்பாடல்கள், புதிய ஏற்பாடு போன்றவை அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. சுருங்கக் கூறின், சீகன்பால்க் எழுத்தாளராகவும், பதிப்பாளராகவும், வெளியீட்டாளராகவும் விளங்கினார்.

இறுதி நாட்கள்

சீகன்பால்க் இறுதிவரை ஓயாது உழைத்தார். கடைசி காலத்தில்கூட தமிழில் ஜெர்மானியப் புலமையை நிலையாகக் கொடுக்க வேண்டும் என்பதற்கான அடிப்படையை அமைப்பதில் கவனம் செலுத்தினார். விவிலியத்தின் பழைய ஏற்பாட்டைத் தமிழில் மொழி பெயர்ப்பதில் நேரத்தைச் செலவிட்டார். இந்நூல் பின்னர் சென்னையிலும், ஐரோப்பாவிலும் வெளியிடப்பட்டது. சீகன்பால்க் உடல்நலக் குறைவால் தனது 37வது வயதில் 1719 பிப்ரவரி மாதம் 23 ஆம் நாள் தரங்கம்பாடியில் உயிர் நீத்தார். தமிழர்களுக்காக, தமிழுக்காகத் தன் வாழ்நாளைச் செலவிட்ட சீகன்பால்க் தமிழ் மண்ணிலேயே மடிந்தார்.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

5. டேனியர்கள் தங்களது வர்த்தகக் குடியிருப்பை எங்கு அமைத்தனர்?
6. தென்னிந்தியக் கடவுள்களின் குடிவழிப் பட்டியல் என்ற நூலை எழுதியது யார்?

11.6. ஆங்கிலேயர்கள்

1600-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் தேதி துவக்கப்பட்ட ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவில் ஐரோப்பியப் போட்டிக் கம்பெனிகளின் கடுமையான எதிர்ப்பை எதிர்க்கொள்ள வேண்டியிருந்தது. இப்போட்டிகளைச் சமாளிக்க ஆங்கிலேயர் கொங்கணத்தையும், மலபார் கடற்கரை மற்றும் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்தனர். இவற்றுள் இவர்களின் தேவைகளுக்கான வாய்ப்பையும், வசதியையும் தமிழ்நாடு தந்தது. தமிழ்நாடு அப்போது விஜய நகரப் பேரரசின் பகுதியாக இருந்தது. பிரான்சி டே (Francis Day) என்ற ஆங்கிலேயர் பூந்தமல்லி நாயக் தமரில்லா வெங்கடப்பாவிடமிருந்து 1639 ஆம் ஆண்டு 22 ஆம் தேதி மதராஸ பட்டினத்தில் ஒரு குடியிருப்பையும், கோட்டையையும் கட்டிக் கொள்வதற்கான அனுமதியைப் பெற்றார். இந்த அனுமதியை விஜய நகரப் பேரரசர் இரண்டாவது வெங்கடா உறுதி செய்தார்.

குறிப்பு

சென்னைப்பட்டனம்

பேரரசர் வெங்கடாவின் தந்தையின் பெயர் சென்னா. எனவே, அவர் தனது தந்தையின் நினைவாக அந்த இடத்துக்கு சென்னப்பட்டனம் என்று பெயரிட்டார். சென்னப்பட்டனத்தை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்? அங்கிருந்து தேவையான துணியை குறைந்த விலைக்குப் பெறலாம் என்று கூறுகிறார் சி.எ .சீனிவாசாச்சாரி. பிரான்சிஸ் டே சாந்தோமிலிருந்த தன் காதலியை அடிக்கடி சந்திக்கலாம் என்ற நோக்கத்தோடு சென்னைப்பட்டினத்தைத் தேர்ந்தெடுத்ததாகக் கருதுகிறார் இந்தியாவில் பிரிட்டிசாரின் சமூக வாழ்க்கையைப் பற்றி எழுதியுள்ள டெனி கின்கெய்டு வர்த்தகக் கப்பல்களை நிறுத்த வசதியான இடம் என்பது மற்றொரு காரணம். சென்னைப்பட்டினம் என்ற மீனவர் குப்பம்தான் பின்னர் புனித ஜார்ஜ் கோட்டையாக உருமாற்றம் பெற்றது. பிரான்சிஸ் டே திட்டமிட்டபடி சென்னைப்பட்டினத்தில் ஒரு குடியிருப்பும், கோட்டையும், துறைமுகமும் கட்டப்பட்டன. 1641 ஏப்ரல் 23-ம் நாள் கட்டி முடிக்கப்பட்ட கோட்டைக்கு இங்கிலாந்து புரவலர் புனிதர் (Patron Saint) ஜார்ஜின் பெயர் சூட்டப்பட்டது. இக்கோட்டை துவக்கத்தில் ஆங்கிலேயரின் வர்த்தகக் கேந்திரமாகத் திகழ்ந்தது. விரைவில் இந்த இடத்தைச் சுற்றி, ஜார்ஜ் டவுன் உருப்பெற்று, சென்னை நகரமாயிற்று. 1653 ஆம் ஆண்டு புனித ஜார்ஜ் கோட்டை தனி மாநிலமாக்கப்பட்டது. ஆரான் பேக்கர் (Aaron Baker) அதன் முதல் ஆளுநராக நியமிக்கப்பட்டார். பின்னர் 1654-ல் சோழ மண்டலத்தின் தலைமையகமாயிற்று. அதுவே ஆங்கிலேயர் இந்தியாவில் பெற்ற முதல் உரிமையாளர் உடைமை (Proprietary Holding) ஆகும். அடுத்த ஆறு ஆண்டுகளில் சென்னை ஆங்கிலேயரின் கிழக்கிந்திய நாடுகளின் பிரதான வர்த்தகக் கேந்திரமாயிற்று. 1670-ல் சென்னையின் மக்கள் தொகை 40,000 ஆக இருந்தது.

1681-ஆம் ஆண்டு ஆங்கிலேயர் கடலூரிலும், போர்ட்டோநோவோவிலும் தங்களது குடியிருப்புகளை ஏற்படுத்தினர். சென்னை ஆளுநர் சென்னை அதிபர் மற்றும் ஆளுநர் (President and Governor) என்று அழைக்கப்பட்டார். விரைவிலேயே சென்னை நகராட்சி ஆயிற்று (1688). நகராட்சியை மேயரும், 12 ஆல்டர்மென்களும் நிர்வகித்தனர். 1690-ஆம் ஆண்டு சென்னை புனித ஜார்ஜ் கோட்டையின் ஆளுநராயிருந்த தாமஸ் யேல் (Thomas Yale) செஞ்சி மராத்திய ஆட்சியாளர் இராஜாராமுடன் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தி புனித டேவிட் கோட்டையைப் (Fort St. David) பெற்றுக் கொண்டனர். கோட்டையையும், கடலூரையும் பராமரிப்பதற்கான மானியமும் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. புனித டேவிட் கோட்டை பாண்டிச்சேரிக்கு அருகாமையில் அமைந்திருந்ததால் ஒரு வளமையான ஆங்கிலக் குடியிருப்பாக வளர்ந்தது. வர்த்தக வளர்ச்சியோடு ஆங்கிலேயரின் அரசியல் ஆசைகளும் வளரலாயின.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

குறிப்பு

7. எப்போது ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி துவக்கப்பட்டது?
8. புனித ஜார்ஜ் கோட்டை யாரால் கட்டப்பட்டது?

1.7. பிரெஞ்சுக்காரர்கள்

பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி

பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் தங்களது அரசியல் செல்வாக்கை நிலைநாட்ட வேண்டும் என்ற உறுதியான நோக்கத்தோடு வந்தனர். பிரான்சின் மன்னர் பதினான்காம் லூயியின் நிதி அமைச்சர் கால்பர்ட் (Jean-Baptiote Colbert)டின் முயற்சியால் 1664 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனிக்கு கீழை நாடுகளுடன் 50 ஆண்டுகளுக்குத் தடையற்ற வணிப ஏகபோக உரிமையும், நிலத்தை ஆக்கிரமித்து கையகப்படுத்திக் கொள்வதற்கான சிறப்புரிமையும் வழங்கப்பட்டது. இந்த இரட்டை உரிமைகள் பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் ஒரு அதிகார ஆதிக்க சக்தியாக உருவெடுக்கக் காரணமாக இருந்தது.

பாண்டிச்சேரி

பாண்டிச்சேரி சோழ மண்டலக் கடற்கரையில் அமைந்துள்ள ஒரு புராதன ஊர். கி.பி. முதல் நூற்றாண்டில் பெரிபிளஸ் (Periplus A.D.81-96) எழுதிய நூலில் இவ்வூர் இடம் பெற்றுள்ளது. பாண்டிச்சேரிக்கு அருகாமையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட ரோமானிய வர்த்தக மையம் பாண்டிச்சேரியின் வர்த்தகத் தொன்மைக்கு வலிமை சேர்ப்பதாக உள்ளது. பண்டைக் காலத்தில் இவ்வூர் புதுவை என்று அழைக்கப்பட்டது. 11, 12 ஆம் நூற்றாண்டுகளில் ஒட்டக்கூத்தரும், கம்பரும் இந்த ஊரைப் புதுவை என்றே குறிப்பிட்டுள்ளனர். பிரான்சின் நிதி அமைச்சர் கால்பர்ட் 1667 ஆம் ஆண்டு பிரான்சிஸ் கரான் (Francois Caron) என்பவரை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார். இவர் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியில் பணியாற்றிய அனுபவம் பெற்றவர். கரான் சூரத்திலும் (1668), மசூலிப்பட்டினத்திலும் (1669) தொழில்பேட்டைகளை அமைத்தார். அவரது சென்னை சாந்தோமைக் கைப்பற்றும் முயற்சியை டச்சுக்காரர்கள் முறியடித்துவிட்டனர் (1674). கரோனுக்குப் பின் பிரெஞ்சு நிர்வாகப் பொறுப்பேற்ற பிரான்சிஸ் மார்ட்டின் (Francois Martin) பீஜப்பூர் சுல்தான் ஷெர்கான் லோடியிடமிருந்து பெற்ற நிலத்தில் பாண்டிச்சேரி நகரை உருவாக்கினார். அந்நகரே பிரெஞ்சுக்காரர்களின் இந்தியத் தலைநகராகத் திகழ்ந்தது.

பிரான்சிஸ் மார்ட்டின் தாய் நாட்டுப் பற்று மிக்கவர். வர்த்தக விரிவாக்கத்தை விட ஆதிக்கப் பெருக்கத்தில் அதிக அக்கறை

குறிப்பு

கொண்டவர். அரசியல் இராஜதந்திரி. சோழ மண்டலத்தில் சிவாஜிக்கும் ஷெர்கானுக்குமிடையே மோதல் ஏற்பட்டபோது மார்ட்டின் நடுநிலை வகித்தார். மார்ட்டின் நிலையாக விட்டுச் சென்ற நன்கொடை அவர் பண்டைய புதுவையை நவீன பாண்டிச்சேரி நகரமாக மாற்றியதுதான். அங்கு ஒரு அழகான புனித லூயிஸ் கோட்டை (Fort St.Louis)யைக் கட்டினார். பாண்டிச்சேரி நேர்ப் பாதைகளைக் கொண்ட நன்கு திட்டமிடப்பட்ட நவீன நகரமாக உருமாற்றம் பெற்றது. வர்த்தக இலாபத்தைக் கொண்டே இந்த நகரை நிர்மாணித்தார். தாய் நாட்டு ஆதரவு இல்லாத போதிலும், பல நெருக்கடிகளுக்கிடையே பாண்டிச்சேரியை செல்வச் செழிப்பான பிரெஞ்சுத் தலைமையகமாக மாற்றிய பெருமை மார்ட்டினையே சேரும். பிரெஞ்சு நாட்டுக்காகக் கிட்டத்தட்ட நாற்பதாண்டுகள் உழைத்த பிரான்சிஸ் மார்ட்டின் 1706 ஆம் ஆண்டு உயிர் நீத்தார். இவரது சாதனையை இவருக்குப் பின் டூப்ளே (Dupleix) முன் கொண்டு சென்றார்.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

9. பிரெஞ்சுக்காரர்களின் இந்தியத் தலைநகரம் எது?

11.8. ஆங்கிலோ- மைசூர் போர்கள்

18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்னிந்தியாவில் எங்கு போர் நடைபெற்றாலும் அதன் தாக்கம் தமிழ் நாட்டைப் பாதித்தது. பாதிப்பு குறைவாக இருந்தாலும் அதைக் குறைத்து மதிப்பிட முடியாது. மைசூர் போர்கள் ஐதர் அலி-திப்பு சுல்தான், ஐதராபாத் நிஜாம், மராத்தியர் ஆகியோருக்கிடையே ஏற்பட்ட முத்தரப்பு ஆதிக்கப் போராட்டமாகும். இம்முக்கோணப் போராட்டத்தில் ஆற்காட்டு நவாபும், ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் பங்கேற்க வேண்டியது காலத்தின் கட்டாயமாயிற்று.

11.8.1. முதல் மைசூர் போர், 1767-1769

முதல் மைசூர் போருக்காண காரணங்கள் பல. முதலாவதாக ஐதர் அலியின் அசாதாரண எழுச்சி ஆங்கிலேயருக்கும் மராத்தியருக்கும் அச்சுறுத்தலாக இருந்தது. இரண்டாவதாக, ஐதர் அலிக்கும் பிரெஞ்சுக்காரருக்குமிடையே இருந்த தொடர்பு ஆற்காட்டு நவாப் முகமது அலிக்குச் சவாலாக இருந்தது. மூன்றாவதாக, எதிரியின் நண்பன் எதிரி என்பதற்கேற்ப பிரெஞ்சுக்காரர்கள் நண்பரான ஐதர் அலி நவாப் முகமது அலியை ஆதரித்த ஆங்கிலேயருக்கு எதிரியானார். நான்காவதாக, ஐதராபாத் நிஜாம் மதில் மேல் பூனையாக இருந்தமையால் ஆங்கிலேயர் அவருடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டனர் (1766). அதன்படி நிஜாமுக்கும் ஐதர் அலிக்குமிடையே மோதல் ஏற்பட்டால் ஆங்கிலேயர் நிஜாமுக்கு ஆதரவாக இருப்பர். இந்த உடன்படிக்கை ஐதர் அலிக்கும்

குறிப்பு

ஆங்கிலேயருக்குமிடையே இருந்த அவநம்பிக்கையையும் விரோதத்தையும் அதிகரித்தது. ஐந்தாவதாக, ஆற்காட்டு நவாபு முகமது அலியுடன் இருந்த நிலத் தகராறுகளைத் தீர்த்துக் கொள்வதற்கான தருணத்தை எதிர்பார்த்திருந்தார் ஐதர் அலி. ஆறாவதாக, ஐதராபாத் நிஜாம் ஆங்கிலேயருடன் செய்து கொண்ட உடன்படிக்கையை மீறி ஐதர் அலியுடன் சேர்ந்து கொண்டதும், அவ்விருவரும் சேர்ந்து கர்நாடகத்தின் மீது படையெடுத்ததும் முதல் மைசூர் போருக்கு உடனடிக் காரணமாயிற்று.

11.8.2. போரின் போக்கு

11.8.2.1. கர்நாடகப் படையெடுப்பு

ஐதர் அலியும் கட்சி மாறிய நிஜாம் முகமது அலியும் கர்நாடகத்தின் மீது படையெடுத்தனர் (1767). இப்படையெடுப்பை எதிர்பார்த்த ஆற்காடு நவாபும், ஆங்கிலேயரும் அச்சவாலை எதிர்கொள்ளத் தயாராக இருந்தனர். ஆங்கிலப் படைத் தளபதிகளான ஸ்மித் (Colonel Joseph Smith)தும், உட்டும் (Colonel Wood) ஐதர் அலி-நிஜாம் கூட்டுப் படையை முறையே வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள சங்கமாவிலும், திருவண்ணாமலையிலும் தோற்கடித்தனர். ஆங்கிலப் படையால் கொங்கு நாட்டுப் பகுதிகளை அழிக்க முடிந்ததேயன்றி அபகரிக்க முடியவில்லை. சென்னையை நோக்கி விரைந்த ஐதர் அலியின் மகன் திப்பு சுல்தான் இப்பின்னடைவை அறிந்து பின்வாங்கிவிட்டார். ஆம்பூரைக் கைப்பற்றும் ஐதரின் முயற்சியும் தோல்வி அடைந்தது. வங்காளத்திலிருந்து வந்த ஒரு ஆங்கிலப் படைப் பிரிவு நிஜாமின் நிலப் பகுதியின் மீது படையெடுத்தது. அதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த நிஜாம் மீண்டும் கட்சி மாறி ஆங்கிலேயர் பக்கம் வந்தார். முன்னமேயே ஆங்கிலேயருடன் செய்து கொண்ட உடன்படிக்கையைப் பின்பற்ற உடன்பட்டார். தோல்வி கண்டு துவண்டு போகாத ஐதர் அலி 1768 நவம்பர் மாதம் கோடை இடியெனப் படையெடுத்துச் சென்று சேலத்துக்கு வடகிழக்கே உள்ள பரமஹால் என்றழைக்கப்பட்ட 12 மஹால்களைக் கைப்பற்றினார். மேலும் பல இடங்களை ஆக்கிரமித்த பின்னர் கரூரைப் பிடித்தார். ஆங்கிலத் தளபதி நிக்சனைத் தோற்கடித்து ஈரோட்டைக் கையகப்படுத்தினார் (1769). கரூர் சூறையாடப்பட்டது. பசலுல்லாகான் தலைமையில் ஐதரின் மற்றொரு படைப் பிரிவு மதுரை மற்றும் திருநெல்வேலி நோக்கி விரைந்தது. ஐதர் அலி தஞ்சாவூர் மீது படையெடுத்தபின் கடலூருக்குச் சென்றார்.

11.8.2.2. அமைதி உடன்படிக்கை

ஐதர் அலியின் சூறாவளிப் படையெடுப்புகளால் ஆங்கிலேயர் அதிர்ந்து போயினர். கெஞ்சினால் மிஞ்சும், மிஞ்சினால் கெஞ்சும் ஆங்கிலேயர் ஐதர் அலியுடன் சமரசப் பேச்சுக்கும் சமாதானத்துக்கும் வர சம்மதித்தனர். அதற்கென தளபதி புரூக் (Captain Brooke) என்பவரை

குறிப்பு

ஐதர் அலியிடம் தூது அனுப்பினர். நவாப் முகமது அலியுடன் பேச விரும்பாத ஐதர் அலி சென்னை சென்று ஆங்கிலேயரிடம் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் விளைவாக இருசாராருக்குமிடையே அமைதி உடன்பாடு ஏற்பட்டது (1769 ஏப்ரல்).

11.8.2.3. உடன்படிக்கை விதிகள்

ஐதர் அலியின் கை மேலோங்கி இருந்தமையால் அவரே அமைதி உடன்படிக்கையின் விதிகளைத் தீர்மானித்தார். அதன்படி 1) இருசாராரும் கைப்பற்றிய இடங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் 2) விதிவிலக்காக ஐதர் அலி கைப்பற்றிய கரூரை அவரே தக்கவைத்துக் கொள்ளலாம் 3) தற்காப்புப் போரின்போது ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவி செய்து கொள்ளல். இந்த விதியின்படி ஐதர் மராத்தியருடன் போரிட நேர்ந்தால் ஆங்கிலேயர் அவரை ஆதரிக்க வேண்டும் என்பதை உறுதி செய்து கொண்டார். ஐதர் அலி ஆங்கிலேயருடன் செய்து கொண்ட அமைதி உடன்படிக்கை அவரது நியாய உணர்வுக்கும், பெருந்தன்மைக்கும், இராஜதந்திரத்துக்குமான எடுத்துக்காட்டாகக் கருதப்படுகிறது. ஆங்கிலேயர் ஐதர் அலியுடன் தோல்வி அடைந்தது அவர்களது இராணுவ வலிமையைப் பெரிதும் பாதித்து விட்டது. சுயநலத்துக்காக திறமையற்ற ஆற்காடு நவாபைத் தொடர்ந்து ஆதரித்தமைக்காக ஆங்கிலேயர் கொடுத்த விலையே இத்தோல்வியாகும்.

11.8.2.4. தோல்விக்காரன காரணங்கள்

ஆங்கிலேயர் ஐதர் அலியுடன் தோல்வியடைந்ததற்கான காரணங்கள்: 1) ஆங்கிலேயரிடம் விரைந்து செல்லக்கூடிய குதிரைப்டை இல்லை 2) தளபதிகள் மித்தும், உட்டும் ஒருங்கிணைந்து செயல்படவில்லை 3) சென்னை கவுன்சிலின் குறுக்கீடு 4) சென்னை அரசாங்கத்தின் குறுகிய கண்ணோட்டம், நிலையான கொள்கை இன்மை 5) ஆங்கிலேயர் நவாப் முகமது அலியுடன் வைத்துக் கொண்ட சந்தர்ப்பவாத கூடாநட்பு 6) ஐதர் அலியின் வலிமைமிக்க விரைந்து செல்லக்கூடிய குதிரைப்படை மற்றும் அவருடைய தெளிவான திட்டம், இராணுவ உத்தி, மதிநுட்பம்.

11.8.3. இரண்டாம் மைசூர் போர், 1780-1784

காரணம்

முதல் மைசூர் போர் 1769-ம் ஆண்டு ஐதர் அலிக்கும் ஆங்கிலேயருக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட "அமைதி உடன்படிக்கை"யின்படி முடிவுக்கு வந்தாலும் அந்த உடன்பாடே அடுத்த போருக்கான விதைகளைத் தாங்கிக் கொண்டிருந்தது. இரண்டாம் மைசூர் போருக்கான காரணங்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம். 1) ஐதர் அலி ஆங்கிலேயருடன் உடன்பாட்டுக்கு வந்தாலும் அவர்களின் நேர்மை, நாணயத்தின் மீது அவருக்கு நம்பிக்கை இல்லை. உடன்படிக்கை

குறிப்பு

செய்து கொண்ட அடுத்த ஆண்டே (1770) மைசூர் மராத்தியரால் தாக்கப்பட்ட போது ஆங்கிலேயர் அவருக்கு உதவவில்லை. ஐதரின் இந்த அவநம்பிக்கையே இரண்டாம் மைசூர் போருக்கான அடிப்படைக் காரணம். 2) 1770ல் சென்னை ஆளுநராகப் பொறுப்பேற்ற சர் ஜான் லிண்ட்சே (Sir John Lindsay) நவாப் முகமது அலியின் ஆலோசனைப்படி ஐதரின் நண்பரான ஐதராபாத் நிஜாமுக்கு எதிராக மராத்தியருடன் உடன்பாட்டுக்கு வந்தது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியதைப் போல் ஆயிற்று. 3) ஐதர் பாண்டிச்சேரி ஆளுநர் பெல்லிகோம்பே (Bellecombe) மூலமாக பிரான்சுடன் தொடர்பு கொண்டு உடன்பாட்டுக்கு வந்தது ஆங்கிலேயரை ஆத்திரமடையச் செய்தது. 4) ஐதர் அலி அவருக்குச் சொந்தமான நிலப்பகுதிகள் வழியாக ஆங்கிலப் படைகள் செல்லக்கூடாது என்று தடை செய்தது எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றியதைப்போல் ஆயிற்று. 5) ஐதர் அலி மாஹி வழியாக ஐரோப்பாவிலிருந்து போர்த் தளவாடங்கள் பெற்றது ஆங்கிலேயர் விரோத நடவடிக்கையாகக் கருதப்பட்டது. 6) ஐதர் அலி தரங்கம்பாடியிலிருந்த ஜெர்மன் சமயப் பரப்பூழியர் சுவாட்சு (Schwartz)டன் நெருங்கிய தொடர்பு கொண்டது ஆங்கிலேயருக்குப் பிடிக்கவில்லை. 7) சென்னை அரசாங்கம் தூதுவர் கிரே (Crey) மூலம் அனுப்பிய அன்பளிப்பை ஐதர் ஏற்க மறுத்து விட்டார். 8) யாவற்றுக்கும் மேலாக ஐதர் அலி ஆங்கிலேயருக்கு எதிராக நிசாமுடனும், மராத்தியரோடும் முத்தரப்பு கூட்டு சேர்ந்தது (1780) இரண்டாம் மைசூர் போருக்கான உடனடிக் காரணமாயிற்று.

11.8.3.1. போரின் போக்கு

ஐதர் அலியின் அசாதாரண அரச தந்திரத்தால் தமிழ் நாட்டில் ஆங்கிலேயரைத் தனிமைப்படுத்திவிட்டார். அவர் நிஜாம் மற்றும் மராத்தியரின் உதவியோடு கர்நாடகத்தின் மீது படையெடுத்தார். ஐதர் தரைவழியாகவும், பிரெஞ்சுப் படை கடல் வழியாகவும் இருமுனைத் தாக்குதலைத் துவக்கினர். ஆங்கிலேயர் மீது இருந்த ஆத்திரத்தால் ஐதர் அலி தமிழ் நாட்டின் மீது சூறாவளி போல் சுழன்றடித்தும் பேரழிவை ஏற்படுத்தினார். ஐதரின் படை திறமைமிக்க பிரெஞ்சுத் தளபதிகளால் வழி நடத்தப்பட்டது. படைப் பிரிவுகள் கட்டுப்பாட்டுடன் அமைக்கப்பட்டிருந்தன. உளவுத் துறை ஐதரின் நிதி அமைச்சர் பூர்ணய்யாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஐதரின் கூட்டுப் படையை எதிர்கொள்வதற்காக ஆங்கிலத் தளபதி சர் ஹெக்டர் மன்றோ (Sir Hector Munro) காஞ்சிபுரத்துக்கு அணிவகுத்துச் சென்றார். ஐதர் அவரை போலிலூர் என்ற இடத்தில் தோற்கடித்துக் காயப்படுத்தினார். மன்றோ சென்னைக்குத் திரும்பிவிட்டார். ஐதர் அலி ஆற்காட்டைக் கைப்பற்றினார் (1780 நவம்பர்). தோல்வியை சந்தித்த ஆங்கிலேயர் அவசர உதவி கோரி கல்கத்தா அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டனர். ஆங்கிலேயரின் வேண்டுகோளுக்கிணங்க ஆளுநர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங் (Warran Hastings) சர் ஐயர்கூட் (Sir Eyre

குறிப்பு

Goote) என்ற திறமையும் அனுபவமுமிக்க தளபதியை அனுப்பி வைத்தார். விரைந்து வந்த கூட் வந்தவாசி உள்ளிட்ட பல இடங்களை மீட்ட பின்னர் பாண்டிச்சேரி நோக்கி விரைந்தார். ஐதர் அலி ஆங்கிலேயருடன் நேரடிப் போரைத் தவிர்த்து அவர்களுக்குப் பொருட்கள் செல்வதைத் தடுத்து நிறுத்தினர். தஞ்சாவூரைச் சூறையாடினர். ஐதரைத் துரத்திச் சென்ற கூட்டத்தை சிதம்பரத்தில் தோல்வி கண்டார். ஆனால் ஐதரைப் போர்ட்நோவோவில் தோற்கடித்தார் (1781 ஜூலை). ஐதர் பலத்த இழப்போடு தப்பிச் சென்றார். 1781 ஆகஸ்டு மாதம் போலிலூரில் நடைபெற்ற சண்டை வெற்றிதோல்வியின்றி முடிந்தது. ஐதர் வேலூரை முற்றுகையிட்டார். சோலிங்கநல்லூர் சண்டையில் கூட் ஐதர் படையைத் தோற்கடித்தார். ஆங்கிலேயர் தளபதி மன்றோவின் தலைமையில் நாகப்பட்டினத்தைக் கைப்பற்றினார் (1781 நவம்பர்). எனினும் தளபதி பிரெத்வெயிட் (Colonel Braithwaite) கும்பகோணத்தில் திப்பு சுல்தானிடம் தோல்வி அடைந்தார் அவரைத் திப்பு கைது செய்தார்.

1782 எப்ரல் மாதம் பிரெஞ்சு தளபதி புஸி கடலூர் வந்தடைந்தார். தளபதி சப்ரென் (Admiral Sufbrein) ஆங்கிலேயரை ஐந்து முறை சோழமண்டலக் கடல் பகுதியில் எதிர் கொண்டார் (1782 பிப்ரவரி, ஏப்ரல், ஜூலை, செப்டம்பர் 1783 ஜூன்). ஐதர் அலி பிரெஞ்சுத் துணையுடன் கடலூரைக் கைப்பற்றினார். சென்னை கடுமையான பஞ்சத்தின் பிடியில் சிக்கியிருந்தது (1782 அக்டோபர்). ஐதரின் உதவிக்கு வந்த திப்புவை ஆங்கிலேயர் தெற்கு மலபாரில் உள்ள பொன்னேரியில் தோற்கடித்தனர். 1782 நவம்பர் துவக்கத்தில் ஆற்காட்டுக்கு மேற்கே முகாமிட்டிருந்த ஐதர் அலி புற்று நோயால் இறந்தார். அவரது இறப்பு இரகசியமாகக் காக்கப்பட்டது.

11.8.3.2. மங்களூர் உடன்படிக்கை

1783-ஆம் ஆண்டு பம்பாயிலிருந்து வந்த ஆங்கிலத் தளபதி மாத்யூ (General Mathews) மங்களூரைக் கைப்பற்றினார். பெட்னூர் சரணடைந்தது (1783 பிப்ரவரி). பிரெஞ்சு தளபதி புஸி கடலூர் வந்தடைந்தார் (ஏப்ரல்). அவரை எதிர்க்கொள்ள ஆங்கிலத் தளபதி ஸ்டூவர்ட் (Stuart) கடலூர் விரைந்தார். இம்மோதல்களில் இருதரப்பினருக்கும் வெற்றி தோல்வியின்றி இழுபறியில் இருந்தது. இதற்கிடையே இங்கிலாந்துக்கும் பிரான்சுக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட பாரிஸ் அமைதி உடன்படிக்கையால் (Peace Treaty of Paris) இந்தியாவில் ஆங்கில-பிரெஞ்சுப் போராட்டம் முடிவுக்கு வந்தது (1783 ஜூலை). பாண்டிச்சேரி பிரெஞ்சுக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டது. திப்பு கர்நாடகத்தைக் கைவிட்டு அவரது கவனத்தை மேற்கு கடற்கரைப் பகுதி மீது திருப்பினார். இறுதியில் 1784 மார்ச் மாதம் செய்து கொள்ளப்பட்ட மங்களூர் உடன்படிக்கை (Treaty of Mangalore)யின்படி இரண்டாம் மைசூர் போர் முடிவுக்கு வந்தது. இப்போரை மூன்றரை

குறிப்பு

ஆண்டுகால பயனற்ற பொருளற்ற போர்" என்று குறிப்பிட்டுள்ளார் பென்டெரல் மூன் (Penderel Moon).

11.8.3.2.1. மங்களூர் உடன்படிக்கை விளைவுகள்

மங்களூர் உடன்படிக்கையின் விளைவுகளாவன : 1) மங்களூர் உடன்படிக்கையால் நான்காண்டுகள் நடைபெற்ற இரண்டாம் மைசூர் போர் முடிவுக்கு வந்தது. 2) அவரவர் கைப்பற்றிய இடங்களையும், கைதிகளையும் திரும்ப ஒப்படைத்து விடவேண்டும். இதன் மூலம் இருசாராரும் போர் துவங்குவதற்கு முன்பிருந்த நிலைக்கே திரும்பினர். ஆங்கிலேயர்கள் கைப்பற்றிய கோயமுத்தூர், கரூர், தாராபுரம் போன்ற பகுதிகளைத் திருப்பிக் கொடுக்க வேண்டியதாயிற்று. 3) பிரான்ஸ் திப்புவின் உதவியோடு தென்னிந்தியாவை வெற்றி கொள்ளும் வாய்ப்பை இழந்தது. 4) அதேபோன்று ஆங்கிலேயரும் கர்நாடகத்தைத் தங்கள் வசம் கொண்டுவர முடியாமல் போயிற்று. 5) திப்பு மேற்குக் கடற்கரைப் பகுதியில் சில வெற்றிகளைப் பெற்றாலும் அவரது படைபலம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. 6) திப்புவுக்கு ஆங்கிலேயர் மீதிருந்த கோபமும், வெறுப்பும், காழ்ப்புணர்ச்சியும் பன்மடங்கு அதிகரித்தது. அதுவே அடுத்த போருக்கான அடிப்படை ஆயிற்று.

11.8.4. மூன்றாம் மைசூர் போர், 1790-1792

இரண்டாம் மைசூர் போர் முடிந்த ஆறாண்டுகளில் மூன்றாம் மைசூர் போர் துவக்கப்பட்டது. அதற்கான காரணங்கள் வருமாறு: 1) அரைகுறையாக செய்து கொள்ளப்பட்ட மங்களூர் உடன்படிக்கை (1784) குறிப்பாக ஆங்கிலேயருக்குத் திருப்தி அளிக்கவில்லை. 2) 1785 ஆம் ஆண்டு கவர்னர் ஜெனரலாகவும், தலைமைத் தளபதியாகவும் பொறுப்பேற்ற காரன்வாலிஸ் பிரபு (Lord Cornwallis) மங்களூர் உடன்படிக்கையை மதிக்காமல் திப்பு சுல்தானின் ஆட்சிக்கு முடிவுகட்டத் தீர்மானித்தார். 3) மங்களூர் உடன்படிக்கைக்குப்பின் திப்புவின் நடவடிக்கைகள் அவரது அகந்தையின் வெளிப்பாடாக இருந்தன. அவர் சுல்தான் பட்டத்தைச் சூட்டிக் கொண்டார் (1786). திப்பு தன்னை தேவதூதன் என்று கூறிக்கொண்டு மலபாரில் கட்டாய மதமாற்றத்தில் தீவிரமாக ஈடுபட்டார். இந்துக்களை அவமதித்தார். கோயில்களை இடித்துத் தள்ளினார். சமயப் பொறையின்மையும், இறுமாப்பும், தான்தோன்றித்தனமும் திப்புவின் கண்களை மறைத்து கருத்தைக் குருடாக்கிவிட்டன. எனவே, அவரது நடவடிக்கைகள் நிதானமின்றி இருந்தன. 4) ஆங்கிலேயரை வலுச்சண்டைக்கு இழுத்து அவர்களை இந்தியாவைவிட்டே துரத்தத் திட்டமிட்டார் திப்பு. அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இது சம்பந்தமாக கான்ஸ்டாண்டிநோபிளுக்கும் (1785), பாரீசுக்கும் (1787) தூது அனுப்பினார். 5) முன்னமேயே மைசூருடன் இணைக்கப்பட்ட துங்கபத்ராவுக்கும் கிருஷ்ணாவுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதிகளை மேலும் விரிவுபடுத்த முனைப்புடன் செயல்பட்டார். 6) திப்புவின்

திட்டங்களையும், நடவடிக்கைகளையும் கூர்ந்து கவனித்து வந்த கவர்னர் ஜெனரல் காரன்வாலிஸ் தேவையான தடுப்பு ஏற்பாடுகளைச் செய்தார். இக்காரணங்களின் கூட்டு விளைவே மூன்றாம் மைசூர் போராகும்.

குறிப்பு

11.8.4.1. போரின் போக்கு

கவர்னர் ஜெனரல் காரன்வாலிஸ் நிசாம் அலியுடன் புதிய ஒப்பந்தம் செய்து கொண்டதன் (1788) மூலம் திப்பு சுல்தானை ஆத்திரமடையச் செய்தார். ஆத்திரத்தில் நிதானமிழந்த ஐதர் திருவனந்தபுரத்தைத் தாக்கினார். திருவனந்தபுரத் தாக்குதல் ஆங்கிலேயருக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட போர் என்று அறிவித்த காரன்வாலிஸ் போருக்குத் தயாராகுமாறு சென்னை அரசாங்கத்துக்குக் கட்டளையிட்டார்.

11.8.4.2. முதல் கட்டப் போர்

1790 மே மாதம் திப்புவுக்கும் ஆங்கிலேயருக்குமிடையே முதல் கட்டப் போர் துவங்கியது. ஆங்கிலேயர்-நிசாம்-மராத்தியரிடையே முத்தரப்பு கூட்டணி (Triple Alliance) அமைத்தார் காரன்வாலிஸ். தளபதி மெடோஸ் (Medows) கோயமுத்தூர், திண்டுக்கல் மற்றும் பாலக்காட்டைக் கைப்பற்றினார் (செப்டம்பர்). தளபதி மாக்ஸ்வெல் (Maxwell) தலைமையில் சென்னை-வங்காளப் படைப் பிரிவுகள் ஒருங்கிணைக்கப்பட்டன. எனினும் திப்பு சுல்தானின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை. அவர் கர்நாடகத்தைக் கொள்ளையடித்துச் சூறையாடினார். திருவண்ணாமலையைக் கைப்பற்றினார்.

11.8.4.3. இரண்டாம் கட்டப் போர்

திப்பு-ஆங்கிலேயருக்கிடையேயான இரண்டாம் கட்டப் போர் 1791 ஆம் ஆண்டு துவங்கியது. இப்போரை சென்னைக்கு வந்த கவர்னர் ஜெனரல் காரன்வாலிசே தலைமையேற்று நடத்தினார். அவர் வேலூருக்கு அணிவகுத்துச் சென்று பின்னர் பெங்களூரைக் கைப்பற்றினார் (1791 மார்ச்). செரிங்கப்பட்டினம் (ஸ்ரீரங்கப்பட்டினம்) செல்லும் வழியில் அவரை எதிர்த்த திப்புவைத் தோற்கடித்தார் (மே). காரன்வாலி பாரமஹால் கோட்டைகளைப் பணியவைத்தார்.

11.8.4.4. மூன்றாம் கட்டப் போர்

இருசாராருக்குமிடையேயான மூன்றாம் கட்டப் போர் 1792-ல் துவங்கிற்று. இம்முறை காரன்வாலிஸ் கூட்டணிப் படையுடன் சென்று செரிங்கப்பட்டினத்தை முற்றுகையிட்டார். அபர்குரோம்பே (Abercromby) இக்கூட்டுப் படையினருக்குத் தேவையான பொருட்களோடும், பண்டங்களோடும் வந்து சேர்ந்தார். திப்பு வேறு வழியின்றி காரன்வாலிஸ்

விதித்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டார். காரன்வாலிஸ் பிரபு முன்னின்று நடத்திய மூன்றாம் மைசூர் போர் முடிவுக்கு வந்தது.

குறிப்பு

11.8.4.4.1. ஸ்ரீரங்கப்பட்டனம் உடன்படிக்கை

ஸ்ரீரங்கப்பட்டினத்தை இழக்க விரும்பாத திப்பு சுல்தான் ஒருதலைப்பட்சமான உடன்படிக்கைக்கு உடன்பட்டார். இந்த ஒப்பந்தத்தின்படி 1) திப்பு தனது ஆள்நிலப் பகுதியில் பாதியை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்துவிட வேண்டும் 2) மூன்று கோடி ரூபாயை இழப்பீட்டுத் தொகையாகச் செலுத்த வேண்டும் 3) இத்தொகை முழுவதுமாக செலுத்தப்படும்வரை திப்புவின் இரண்டு மகன்களையும் பணயக் கைதிகளாக ஒப்படைக்க வேண்டும் 4) முத்தரப்பு அணிக் கூட்டாளியான நிசாமுக்கு கடப்பா உள்ளிட்ட மேற்கு மைசூர்ப்பகுதியையும், இழப்பீட்டுத் தொகையில் பாதியையும் கொடுக்க வேண்டும் 5) மற்றொரு கூட்டாளியான மராத்தியருக்கு மைசூரின் வடமேற்குப் பகுதிகள் கொடுக்கப் படவேண்டும். 6) கூர்க் அரசர் ஆங்கிலக் கம்பெனிக்குக் கப்பம் கட்ட வேண்டும்.

11.8.4.4.2. விளைவுகள்

இந்த ஒப்பந்தத்தின் விளைவாக ஆங்கிலேயருக்குத் தமிழ் நாட்டில் கோயமுத்தூர், திண்டுக்கல், தர்மபுரி முதலிய மாவட்டங்கள் கிடைத்தன. அதாவது திண்டுக்கல்லும் பாரமகால் பகுதியும் ஆங்கிலேயர் வசமாயிற்று. அதாவது ஆங்கிலேயர் மங்களூர் உடன்படிக்கையால் ஒப்படைத்த கொங்கு நாட்டுப் பகுதிகளை மீண்டும் கைவரப் பெற்றனர். இதன் மூலம் இப்பகுதிகள் வழியாக மைசூர் கர்நாடகத்தின் மீது படையெடுக்க முடியாது. அதேபோன்று மைசூர் ஆட்சியாளர் கூர்க் மூலம் மேற்குப் பகுதிக்குள் நுழைய முடியாது. அதாவது மைசூரின் படையெடுப்புப் பாதைகள் அனைத்தும் அடைக்கப்பட்டு விட்டன. இனி மைசூர் மேற்குக் கடற்கரை மூலம் கடல் தொடர்பும் கொள்ள முடியாது. ஸ்ரீரெங்கப்பட்டின உடன்படிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றித் தென்னிந்தியாவில் அதிகாரச் சமநிலை (Balance of Power)யை ஏற்படுத்திய கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்ஸ், மார்குவிஸ் (Marque's) பட்டம் கொடுத்து கவுரவிக்கப்பட்டார். இந்திய ஆட்சியாளர்களிடையே ஆங்கிலேயரின் அந்தஸ்து பன்மடங்கு உயர்ந்தது. 1794-இல் திப்பு சுல்தான் இழப்பீட்டுத் தொகையைச் செலுத்தி தனது இரு மகன்களையும் மீட்டுக் கொண்டார்.

11.8.5. நான்காம் மைசூர் போர், 1799

கவர்னர் ஜெனரல் காரன்வாலிஸ் திப்பு சுல்தானைத் தனிமைப்படுத்தி, அதிகாரப் பல்லைப் பிடுங்கி, பலவீனப்படுத்திவிட்டதால் மைசூர் புலி அடங்கிவிடும் என்று எதிர்பார்த்தார். ஆனால் அடிபட்ட புலி மீண்டும் எழுந்து ஆங்கிலேயரை அழித்துவிடத் தீர்மானித்தது. அவமதிக்கப்பட்ட திப்புவுக்கு ஆங்கிலேயர் மீதிருந்த வெறுப்பும்,

குறிப்பு

கோபமும் அதிகரிக்கவே செய்தது. தன் வசமிருந்த மங்களூரை மையமாகக் கொண்டு பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்பு கொண்டார் திப்பு. குறிப்பாக நெப்போலியனுடன் தொடர்பு கொண்டு அவரிடமிருந்து நட்புக் கடிதமும் பெற்றார். சில பிரெஞ்சு அதிகாரிகளையும் வரவேற்று உபசரித்தார். திப்பு ஆப்கானிஸ்தான் அதிபர் சமான் ஷாவை அணுகி இந்தியா மீது படையெடுக்குமாறு கேட்டுக் கொண்டார். ஆங்கிலேயருக்கு எதிராக பரிசியா, அரேபியா, மொரீஷிய போன்ற நாடுகளின் அதிபர்களுக்குக் கடிதங்கள் எழுதினார். யாவற்றுக்கும் மேலாக இந்தியத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு பிரிட்டிஷ் எதிர்ப்புக் கூட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். ஆங்கிலேயர் மீதிருந்த வெறுப்பு மிகுதியால் அவர்களை 'மனித குலத்தின் கொடுங்கோலர்கள்" என்று வர்ணித்தார். திப்புவின் வேண்டுகோளுக்கு இணங்க பிரான்சும் "நூறு தொண்டர்களை'' அனுப்பி வைத்தது (1799 ஏப்ரல்). திப்புவின் போர் முயற்சியை முறியடிக்க ஆங்கிலேயர் முடிவு செய்தனர். புதிதாக கவர்னர் ஜெனரல் பொறுப்பேற்ற வெல்லெஸ்லி (Richard Colley Wellesley) திப்புவின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து தக்க முன்னேற்பாடுகளை மேற்கொண்டார். நிசாமுடன் ஒரு துணை உடன்படிக்கை செய்து கொண்டார் (1798 செப்டம்பர்). 1790 இல் செய்து கொள்ளப்பட்ட முத்தரப்புக் கூட்டணியைப் புதுப்பித்தார். அதன்பின் ஆங்கிலேயருடன் உடன்பாட்டுக்கு வருமாறு திப்பு சுல்தானுக்குக் கடிதங்கள் எழுதினார் வெல்லெஸ்லி. அக்கடிதங்களுக்குப் பலனேதுமின்மையால் வெல்லெஸ்லி நேரடியாக சென்னைக்கே வந்தார் (1798). வெல்லெஸ்லியின் சென்னை வருகையால் நான்காம் மைசூர் போர் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

11.8.5.1.போரின் போக்கு

ஆங்கிலேயர் நன்கு திட்டமிட்டு மைசூர் தாக்குதலைத் துவக்கினர். மைசூர் இருமுனைத் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டது. தளபதி ஹாரிஸ் (General Harris) ஒரு படைப் பிரிவு மேற்கிலிருந்து தாக்கியது. கவர்னர் ஜெனரலின் சகோதரர் ஆர்தர் வெல்லெஸ்லி (Arthur Wellesley) பிரதான படையை முன்னின்று நடத்தினார். இவர்களோடு நிசாம் படையும் பங்கேற்றது. திப்பு கூர்க் எல்லையிலிருந்து பின்வாங்கி வந்தார். ஆர்தர் வெல்லெஸ்லி நிசாம் படை உதவியுடன் திப்புவை மைசூரில் மாலவல்லி என்ற இடத்தில் தோற்கடித்தார். ஹாரிசின் சென்னைப் படை காவேரியைக் கடந்து சென்று தலைநகர் ஸ்ரீரங்கப்பட்டனத்தை முற்றுகையிட்டது (ஏப்ரல்). திப்பு வேறுவழியின்றி சமரசத்துக்கு வந்தார். ஆங்கிலேயர் இரண்டு நிபந்தனைகளை விதித்தனர்: 1) திப்புவுக்குச் சொந்தமான நிலத்தில் பாதியை ஒப்படைக்க வேண்டும் 2) தண்டத் தொகையாக இரண்டு கோடி ரூபாய் கொடுக்க வேண்டும். இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதைவிட போரிட்டு மடிவதே மேல் என்று எண்ணிய திப்பு போரைத் தொடர்ந்தார். ஸ்ரீரெங்கப்பட்டினம் கடும் தாக்குதலுக்குள்ளாயிற்று (மே). படுகாயமடைந்த திப்புவை ஒரு

குறிப்பு

படைவீரன் சுட்டுக் கொன்றான். பிணக்குவியலில் காணப்பட்ட திப்புவின் உடலை எடுத்துத் துப்பாக்கிமுனை ஈட்டியால் குதறிக் கிழித்து, இருமுறை சுட்ட பிறகு இடுப்பில் அணிந்திருந்த மாணிக்கக் கற்கள் பதிக்கப்பட்ட போர் வாள் பட்டையைத் திருடி விட்டனர் என்றும் கூறப்படுகிறது. ஸ்ரீரங்கப்பட்டினம் கைப்பற்றப்பட்டது. இரண்டு மாத நான்காம் மைசூர் போர் முடிவுக்கு வந்தது.

11.8.5.2. விளைவுகள்

திப்புவின் வீழ்ச்சிக்குப் பின் மைசூர் வெல்லெஸ்லியின் காலடியில் கிடந்ததாகக் குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் ஆர்.சத்தியநாதய்யர். காலடியில் கிடந்த மைசூரை ஆங்கிலேயரும் அவரது கூட்டாளிகளும் பங்கிட்டுக் கொண்டனர். நான்காம் மைசூர் போரின் விளைவுகள் பல: 1) ஆங்கிலேயர் வடக்கு-தெற்கு கன்னட மாவட்டங்கள் மலபார் மாவட்ட வைநாடு கோயம்புத்தூர், தாராபுரம் உள்ளிட்ட கொங்கு நாடு செரிங்கப்பட்டனம் மைசூரின் கிழக்குப் பகுதிகள் ஆகியவற்றைக் கையக்கப்படுத்திக் கொண்டனர் மைசூர் வசமிருந்த கொங்கு நாட்டை கையகப்படுத்திக் கொண்டதன் மூலம் ஆங்கிலேயர் தமிழ் நாட்டின் முக்கிய பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். 2) நிசாமுக்கு மைசூருக்கு வடகிழக்கில் அநந்தபூர், சித்தூர், சித்தல்ர்க் மாவட்டங்களில் சில பகுதிகள் கொடுக்கப்பட்டன் 3) மூன்றாம் கிருஷ்ணராஜா உடையார் என்ற ஐந்து வயது சிறுவன் அரியணையில் அமர்த்தப்பட்டான். இதன் மூலம் பரம்பரை முடியாட்சி மீட்கப்பட்டது. முன்னாள் அமைச்சர் பூர்ணய்யா மீண்டும் திவான் பொறுப்பேற்றார். அவரே குழந்தை மன்னருக்குக் காப்பாளராக இருந்தார். 4) மைசூர் கர்நாடக மாநிலத்தின் தலைநகராகி, 1610 இல் இழந்த தரவரிசை அந்தஸ்தைப் பெற்றது. 5) தளபதி பாரி (Barry) மைசூரின் துணைக் காப்பாளர் (சுநளனைநயவ)ராக நியமிக்கப்பட்டார். 6) மைசூருடன் ஆங்கிலேயர் ஒரு துணை உடன்படிக்கை செய்து கொண்டனர். அதன்படி மைசூர் ஆங்கிலக் கம்பெனியின் சார்பு மாநிலமாக்கப்பட்டது. மேலும் நெருக்கடி நேரத்தில் கம்பெனி மைசூரின் முழு நிர்வாகத்தையும் தன் பொறுப்பில் எடுத்துக் கொள்ளும். 7) திப்புவின் குடும்பத்தினர் வேலூரில் தங்க வைக்கப்பட்டனர். 8) திப்புவை வீழ்த்தி, மைசூரின் "இந்து" முடியரசை மீட்டு, மைசூரைப் பிரித்து மறுசீரமைத்தமையால் ஆர்தல் வெல்லெஸ்லி உண்மையான கதாநாயகர்" ஆனார். பிரிட்டிஷ் அரசாங்கம் அவருக்கு மார்குயஸ் (Marques) என்ற பட்டத்தை வழங்கிப் பெருமை சேர்த்தது. சுருங்கக்கூறின், ஆங்கிலேயர் தென்னிந்திய கடற்பகுதி முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, பிரெஞ்சு ஆதிக்கத்தை அழித்து, பிரிட்டிஷ் பேரரசின் பாதுகாப்பை உறுதி செய்தனர். இந்த ஏற்பாட்டின் விளைவாக பிரிட்டிசார் தென்னிந்தியாவில் போட்டிக்கு இடமில்லா எதிர்ப்பாரற்ற ஆட்சியாளர் ஆயினர் எனக் குறிப்பிட்டுள்ளார் வரலாற்றாசிரியர் ஜான் கே (John Keay). சீரங்கப்பட்டினத் தாக்குதல் அட்டிலா (Attila)வைத் தலைகுனிய

வைத்திருக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார் அவர். ஹூணர் தலைவன் அட்டிலா (A.D.406-453) ரோமாபுரியைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கியவர்.

குறிப்பு

மதிப்பீடு

ஐரோப்பாவில் ஏழாண்டுப் போர் துவங்கிய போது (1756) தமிழ் நாட்டில் சென்னை பிரெஞ்சுக்காரரால் ஆக்கிரமிக்கப்படக்கூடிய ஆபத்து இருந்தது. அந்த ஆபத்து பாரிஸ் உடன்படிக்கையால் (1763) நீங்கியது. பிரெஞ்சு ஆபத்து நீங்கினாலும் மைசூரில் ஐதர் அலியும் அவரது மகன் திப்பு சுல்தானும் ஆங்கிலேயரின் பரம எதிரிகளாயினர். அவர்களுடைய பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பு மூர்க்கத்தனமாகவும், முரட்டுத்தனமாகவும், முனைப்பார்வைமிக்கதாகவும் இருந்தது. கர்நாடகத்தில் ஆங்கிலேயருக்கு ஐதர்திப்பு விட்ட நேரடி சவால் அது. ஆங்கிலேயர் நான்கு மைசூர் போர்களின் மூலம் போராட்டப் புலிகளைத் தோற்கடிக்க வேண்டியதாயிற்று.

முதல் மைசூர் போரில் முதன் முறையாக ஆங்கிலக் கம்பெனியின் ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்தினார் ஐதர் அலி. இரண்டாம் மைசூர் போர் ஐதரின் ஆர்க்காட்டு ஆசையை நிராசையாக்கியது. மூன்றாம் மைசூர் போர் திப்பு சுல்தானின் ஆங்கில எதிர்ப்பை முறியடித்தது. நான்காம் மைசூர் போர் திப்புவின் சுதந்திரக் கனவைக் கலைத்து ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை உறுதி செய்தது. காரன்வாலிஸ் துவக்கிய ஆங்கில ஆதிக்க முயற்சியை ரிச்சர்டு வெல்லெஸ்லி விரிவுபடுத்தினார். நான்காம் மைசூர் போர் வெல்லெஸ்லி பொறுப்பேற்று நடத்திய போர். மைசூர் உள்ளிட்ட தென்னிந்தியா ஆங்கில ஆதிக்க வட்டத்துக்குள் கொண்டு வரப்பட்டது. ஜான் கேயின் வார்த்தைகளில் கூறவேண்டுமாயின் "தென்னிந்திய தீபகற்பத்தில் பிரிட்டிசார் எதிர்ப்பின்றி விடப்பட்டனர்". சுருங்கக்கூறின், ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கான அடித்தளம் தென்னிந்தியாவில் போடப்பட்டது.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

10. ஐதர் அலி எவ்வாறு இறந்தார்?
11. ஸ்ரீரங்கப்பட்டனம் உடன்படிக்கை யார் யாருக்கு நடந்தது?

11.9. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

1. கோவா
2. மைலாப்பூர்
3. செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கர்
4. நாகப்பட்டினம்
5. தரங்கம்பாடி
6. சீகன்பால்க்

குறிப்பு

7. 1600 டிசம்பர் 31
8. பிரான்சிஸ் டே
9. பாண்டிச்சேரி
10. புற்று நோயால்
11. திப்பு சுல்தானுக்கும் மற்றும் ஆங்கிலேயக்கும்

11.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

குறுகிய வினாக்கள்

1. போர்ச்சுகீசியர்களின் வருகை குறித்து சிறு குறிப்பு எழுதுக.
2. டேனியர்களின் தமிழகத்தில் கல்விப்பணி குறித்து எழுதுக.
3. டச்சுக்காரர்களின் வீழ்ச்சியை எழுதுக

விரிவான வினாக்கள்

1. ஐரோப்பியர்களின் வர்த்தக செயல்பாடுகளை குறித்து கட்டுரை எழுதுக.
2. பிரெஞ்சுக்காரர்களின் வளர்ச்சி மற்றும் வீழ்ச்சியை விவாதி.
3. மைசூர் போர்கள் மற்றும் அதன் விளைவுகளை குறித்து கட்டுரை எழுதுக.

11.11. கூடுதல் வாசிப்புகள்

Subramania N. A History of Tamil Nadu up to 1336

Rajayyan K. History of Tamil Nadu

பிள்ளை கே.கே. தென்னிந்திய வரலாறு

Nilakanda Sastri K.N. A History of South India

Sathianathair R. History of India

வெங்கடேசன் க. முற்கால தமிழ்நாட்டு வரலாறு

வெங்கடேசன் க. தற்கால தமிழ்நாட்டு வரலாறு

செல்வம் வே. தி. தமிழக: வரலாறும் பண்பாடும்

இராமசாமி அ. தமிழ் நாட்டு வரலாறு

அலகு – 12

நவாபுகளின் நிர்வாகம்- கம்பெனிக்கு எதிராகக் கிளர்ச்சி- பாளையக்காரர் கிளர்ச்சி: வீரபாண்டிய கட்டபொம்மன்- தென்னிந்தியக் கிளர்ச்சி- கிளர்ச்சிக்கான காரணங்கள்- கிளர்ச்சியின் போக்கு- கிளர்ச்சியின் வீழ்ச்சி- வேலூர்க் கிளர்ச்சி

குறிப்பு

பாட அமைப்பு

12.1. முன்னுரை
12.2. நோக்கங்கள்
12.3. ஆர்க்காட்டு நவாபுகள்
12.4. நெவாயத்து நவாபுகள்
12.5. வாலாஜா நவாபுகள் (Wallajahs)
    12.5.1. அன்வருதீன்கான்
    12.5.2. முகமது அலி
12.6. நவாபுகளின் நிர்வாகம்
    12.6.1. நவாபி அரசாங்கம்
    12.6.2. நிதி நிர்வாகம்
12.7. கான்சாகிபு
12.8. கம்பெனிக்கு எதிராகக் கிளர்ச்சி
12.9.பாளையக்காரர் கிளர்ச்சி
    12.9.1. வீரபாண்டிய கட்டபொம்மன்
        12.9.1.1. பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர்
        12.9.1.2. கட்டபொம்மனும் ஜாக்சனும்
    12.9.2. ஊமைத்துரை
        12.9.2.1. காளையார்கோவில் கிளர்ச்சி
    12.9.3. வேலு நாச்சியார்
    12.9.4. மாவீரன் தீரன் சின்ன மலை
    12.9.5. சுவர்னகிரி வீரன் சுந்தரலிங்கம்
    12.9.6. மாமன்னர் மருதுபாண்டியன்
12.10. தென்னிந்தியக் கிளர்ச்சி
    12.10.1.கிளர்ச்சிக்கான காரணங்கள்
    12.10.2. கிளர்ச்சியின் போக்கு
    12.10.3. கிளர்ச்சியின் வீழ்ச்சி
        12.10.3.1. வீழ்ச்சிக்கான காரணங்கள்
12.11. வேலூர்க் கிளர்ச்சி, 1806
    12.11.1. கிளர்ச்சிக்கான காரணங்கள்
    12.11.2. கிளர்ச்சியின் போக்கு
    12.11.3. தோல்விக்கான காரணங்கள்
    12.11.4. விளைவுகள்

12.12. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்
12.13. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
12.14. கூடுதல் வாசிப்புகள்

குறிப்பு

12.1. முன்னுரை

முகலாயப் பேரரசர் அவுரங்கசீப் இறந்த பின் (1707) ஐதராபாத்தின் ஆளுநராக இருந்த அசப்ஜா முகலாயப் பேரரசின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டார். 1719 லிருந்து ஐதராபாத்திலிருந்து தக்காணத்தை ஆட்சி செய்த அசப்ஜா குலத்தைச் சேர்ந்தவர்கள் நிஜாம்கள் என்று அழைக்கப்பட்டனர்.. இவர்களது மேலாதிக்கத்தின் கீழ் ஆட்சி செய்தவர்கள் நவாபுகள். அவர்களின் நிர்வாகம், மேலும் இந்த அத்தியாயத்தில் கம்பெனிக்கு எதிராகக் கிளர்ச்சி, பாளையக்காரர் கிளர்ச்சி: வீரபாண்டிய கட்டபொம்மன், தென்னிந்தியக் கிளர்ச்சி, கிளர்ச்சிக்கான காரணங்கள், கிளர்ச்சியின் போக்கு, கிளர்ச்சியின் வீழ்ச்சி மற்றும் வேலூர்க் கிளர்ச்சி பற்றி விவரிக்கப்பட்டுள்ளது.

12.2. நோக்கங்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர் கீழ் கண்டவற்றை அறிய முடியும்

- நவாபுகள் நிர்வாகம் பற்றி தெரிந்துகொள்ள உதவுகிறது
- வீரபாண்டிய கட்டபொம்மனின் வளர்ச்சி மற்றும் வீழ்ச்சி குறித்து விவாதிக்கிறது.
- மருது சகோதரர்களின் போர் திறமை பற்றி அறிந்து கொள்ள உதவுகிறது
- தென்னிந்தியக் கிளர்ச்சிக்களை பற்றி விவரிக்கிறது.
- வேலூர்க் கிளர்ச்சி பற்றி விளக்குகிறது.

12.3. ஆர்க்காட்டு நவாபுகள்

ஆர்க்காட்டைத் தலைமையகமாகக் கொண்டு ஆட்சி செய்த நவாபுகள் ஆர்க்காட்டு நவாபுகள் ஆவர். ஐதராபாத் நிஜாம் முகலாயப் பேரரசின் பிரதிநிதியாகப் பெயரளவில் இருந்ததைப் போன்றே ஆர்க்காட்டு நவாபுகள் நிஜாமின் மேலாதிக்கத்துக்கு உட்பட்டிருந்தனர். ஆங்கிலேயர் தமிழ் நாட்டில் காலூன்றிய போது ஆர்க்காட்டு நவாபுகள் கர்நாடகத்தை ஆட்சி செய்து கொண்டிருந்தனர். எனவே, இவர்கள் கர்நாடக நவாபுகள் என்றும் அறியப்பட்டனர். அன்றைய கர்நாடகம் கிருஷ்ணாவிலிருந்து கன்னியாகுமரி வரை விரிவடைந்திருந்தது. சென்னை, தஞ்சை, திருச்சி,

மதுரை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய கர்நாடகம் கிழக்குத் தொடர்ச்சி மலையிலிருந்து சோழ மண்டலக் கடற்கரை வரையிலும், மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து பாலக்காடு மற்றும் பிடார் வரையிலும் விரிந்து பரந்திருந்தது.

குறிப்பு

12.4. நெவாயத்து நவாபுகள்

முதல் ஆர்க்காட்டு நவாப் சுல்பிகர் அலிகான். இவர் முகலாயப் பேரரசர் அவுரங்கசீப்பால் 1692 ஆம் ஆண்டு நவாபாக நியமிக்கப்பட்டார். மராத்தியரை வெற்றிகண்டமைக்காக முகலாயப் பேரரசர் அலிக்குக் கொடுத்த பரிசே ஆர்க்காட்டு ஆகும். சுல்பிகர் அலி கான் செஞ்சியிலிருந்து ஆட்சி செய்தார் (1692-1710). இவருக்குப் பின் வந்த நவாப் சதத்துல்லாகான் (1710-1732). இவர் தலைநகரை செஞ்சியிலிருந்து ஆர்க்காட்டுக்கு மாற்றினார். எனவே, ஆர்க்காட்டைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சியைத் துவக்கிய முதல் நவாப் சதத்துல்லாகான் ஆவார். மேலும், இவர் நெவாயத் குலத்தைச் சேர்ந்தவராதலால் இவரும் இவருக்குப் பின் வந்தோரும் நெவாயத்துகள் என்று அழைக்கப்பட்டனர். நெவாயத் பரம்பரையைத் தோற்றுவித்தவர் சதத்துல்லாகான் என்று குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் கே.இராஜய்யன்.

சதத்துல்லாகானின் வாரிசான தோஸ்து அலி (1732-1740) அண்டைப் பகுதிகளை ஆக்கிரமிப்பதில் ஆர்வம் காட்டினார். இவரது 'இணைப்புக் கொள்கை" (Policy of Annexation) விளைவாக மதுரை இவரது ஆட்சிப் பகுதியோடு இணைக்கப்பட்டது (1736). இவரது மகன் சப்தர் அலி மருமகன் சந்தாசாகெப். தோஸ்து அலியைத் தொடர்ந்து சப்தர் அலி (1740-1742)யும், இரண்டாம் சதத்துல்லாகானும் (1742-1744) நவாபானார்கள். நெவாயத் நவாபுகளின் ஆட்சிக் காலத்தில் இவர்களது செல்வாக்கை மதுரை மற்றும் தஞ்சை வரை விரிவுபடுத்தினார்.

12.5. வாலாஜா நவாபுகள் (Wallajahs)

இரண்டாம் சதகத்துல்லா சிறுவனாக இருந்தமையால் ஐதராபாத் நிஜாம் அவரது தளபதி அன்வருதீனை நவாபின் பாதுகாப்பாளராக நியமித்தார். பேராசையின் பிறப்பிடமான அன்வருதீன் சிறுவன் நவாபைக் கொன்று விட்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். இக்கொலையைக் கண்டுகொள்ளாத நிஜாம் வாலாஜா குலத்தைச் சேர்ந்த அன்வருதீனை ஆர்க்காட்டு நவாபாக நியமித்தார். எனவே, அன்வருதீனும் அவரது வாரிசுகளும் வாலாஜாக்கள் என்று அழைக்கப்பட்டனர். சூழ்ச்சிக் கொலையால் கைப்பற்றப்பட்ட ஆட்சி மாற்றத்தால் வாலாஜாக்களுக்கும் புறம் தள்ளப்பட்ட நெவாயத்துக்களுக்குமிடையே அதிகாரப் போட்டி

தொடர்ந்தது. இப்பரம்பரைப் போட்டி ஆங்கிலேயரின் தலையீட்டுக்கு நல்ல களத்தை உருவாக்கிக் கொடுத்தது.

குறிப்பு

12.5.1. அன்வருதீன்கான்

தகாத முறையில் ஆட்சியைக் கைப்பற்றிய அன்வருதீன் ஒரு ஆதிக்கவாதி அவரது ஆதிக்கத்தைத் தமிழ்நாடு முழுவதுக்கும் விரிவுபடுத்த விரும்பினார். அதன் மூலம் வாலாஜாக்களின் செல்வாக்கையும், விரிவாக்கத்தையும் நிலைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். முதல் காரியமாக அவரது ஆதிக்கத்தை மதுரை மீது செலுத்தினார். அவருக்கு எதிராக எழுந்த பாளையக்காரர்களின் எதிர்ப்பை முறியடித்தார். தஞ்சாவூரின் பகுதிகளை ஆக்கிரமித்தார். திருச்சிக்கு இவர் வணங்கிய புனித சயித் ஹுத்ரத்நாதர் வாவியின் பெயரில் நாதன் நகர் என்று பெயர் சூட்டினார். திருச்சி கோட்டையைப் பலப்படுத்தினார். மஜித்-இ-முகமது என்ற பள்ளி வாசலைக் கட்டினார். இவரது ஆட்சிக் காலத்தில்தான் பிரெஞ்சுக்காரர் சென்னையைக் கைப்பற்றினர். சாந்தோம் சண்டை நடைபெற்றது பாண்டிச்சேரி முற்றுகையிடப்பட்டது (1746) முதலாவது கர்நாடகப் போர் (1746-1748) நிகழ்ந்தது. இறுதியில் அன்வருதீன் வடஆர்க்காடு ஆம்பூர்ப் போரில் கொல்லப்பட்டார் (1749).

12.5.2. முகமது அலி

ஆம்பூர்ப் போரின் போது திருச்சிக்குத் தப்பிச் சென்ற முகமது அலி, அவரது தந்தை அன்வருதீன் இறந்த பின் எட்டாவது நவாபாக ஆட்சிப் பொறுப்பேற்றார். தந்தையைப் போன்றே இவரும் ஆதிக்கப் பிரியர். முகமது அலி வாலாஜா ஐதராபாத் நிஜாமின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துக் கொண்டு சுதந்திர ஆர்க்காட்டு நவாப் ஆனார். முகமது அலி ஆதிக்க விரிவாக்கத்துக்கும், ஆடம்பரச் செலவுகளுக்கும் ஆங்கிலேயரைப் பயன்படுத்திக் கொள்ளத் தீர்மானித்தார். அதேபோன்று முகமது அலியின் திறமையின்மையையும், பேராசையையும், ஊதாரித்தனத்தையும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர் ஆங்கிலேயர். இந்த போட்டியின் இறுதியில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்.

முகமது அலியின் ஆட்சிக் காலம் இரண்டாவது கர்நாடகப் போருடன் துவங்கியது (1749-1754). தஞ்சை-ஆர்க்காடு-ஐதராபாத் நிஜாம் வாரிசுரிமைப் பிரச்சனைகள், நாசிர் ஜங்கின் நடவடிக்கைகள், திருச்சி முற்றுகை (1751-1754) போன்ற முக்கிய நிகழ்வுகள் இவரது ஆட்சிக் காலத்தில் நடைபெற்றன. அத்துமீறிய போர்ச் செலவு மற்றும் அரண்மனை ஆடம்பரச் செலவுகள் இவரது கடன் சுமையை பன்மடங்கு அதிகரித்தது. கடன் பட்டார் நெஞ்சம் போல் கொஞ்சம் கூடக் கலங்காமல் கடனுக்கு மேல் கடன் வாங்கி கர்நாடகத்தை ஆங்கிலேயரிடம் அடகு வைத்தார் முகமது அலி.

குறிப்பு

முகமது அலியைத் தொடர்ந்து அவரது மகன் உம்தத்-உல்-உமாரா (17951801) ஆர்க்காட்டு நவாபானார். இவர் முகமது அலியின் இரண்டாவது மகன். கடனிலேயே பிறந்து கடனிலேயே வாழ்ந்த இவரது இயலாமையைப் பயன்படுத்திக் கொண்ட ஆங்கிலேயர் ஆர்க்காட்டு நவாபின் வாரிசைத் தீர்மானிக்கும் பொறுப்பை ஏற்று அதன் மூலம் ஆர்க்காட்டை நிர்வகிக்கும் அதிகாரத்தையும் பெற்றனர். 19 ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் கவர்னர்-ஜெனரல் டல்ஹௌசியின் (Dalhousie) வாரிசிலிக் கொள்கை (Doctrine of Lapse)யின்படி நவாப் பதவி நீக்கப்பட்டது (1855). உமாரா பெயரளவுக்கு நவாபாக நீடித்தார். நடைமுறையில் ஆர்க்காடு ஆங்கிலேயர் வசம் வந்தது. பிரிட்டிஷார் கர்நாடகத்தை அபரித்துக் கொண்டது அவர்களது உதவி செய்து உறவாடி நில அபகரிப்பு செய்யும் கொள்கையின் இயல்பான உச்சகட்டமாகும். கர்நாடகத்தைக் கைவசப்படுத்திக் கொண்டதன் மூலம் தமிழ் நாட்டின் பெரும் பகுதியை ஆங்கிலேயர் தங்களது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்தனர். பின்னர் விக்டோரியா மகாராணியின் அறிவிப்புக்குப் பிறகு ஆர்க்காட்டு நவாபுகள் அரசாங்க ஓய்வூதியச் சலுகைகளுடன் பாரம்பரியப் பெருமையுடன் வாழ்ந்து வந்தனர். இந்நிலை இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னரும் நீடிக்கிறது.

12.6. நவாபுகளின் நிர்வாகம்

அவுரங்கசீப்பின் மறைவுக்குப் பின் (1707) முகலாயப் பேரரசின் தக்காணப் பிரதிநிதியாக இருந்தவர் ஐதராபாத் நிஜாம் ஆவார். அவருடைய மேலாதிக்கத்தின் கீழ் இயங்கியவர்கள் ஆர்க்காட்டு நவாபுகள். இவர்கள் நெவாயத் நவாபுகள், வாலாஜா நவாபுகள் என்ற இரு குலங்களைச் சார்ந்தவர்கள். நெவாயத் நவாபுகள் 1710 லிருந்து 1743 வரையிலும், வாலாஜா நவாபுகள் 1743 லிருந்து 1801 வரையிலும் தமிழ் நாட்டை ஆட்சி செய்தனர். அதாவது, தமிழ் நாடு முகலாய முஸ்லீம்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. நவாபுகளின் ஆள்நிலப் பகுதி நெல்லூர், செங்கல்பட்டு, ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களைக் கொண்ட ஆர்க்காடு சுபா என்றும், திருச்சி, திருநெல்வேலி மாவட்டங்கள் உள்ளிட்ட திருச்சி சுபா என்று இரு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவை கர்நாடக, தஞ்சை, இராமநாதபுரம், சிவகங்கை சம தானங்கள் என்றும் அறியப்பட்டன. இவர்களின் கீழ் செயல்பட்ட பாளையக்காரர்கள் தனிக்காட்டு இராஜாக்களாக நடைமுறை சுதந்திரத்தோடு குறுநில மன்னர்களைப் போன்று ஆட்சி செய்து வந்தனர். தமிழ் நாட்டின் மேற்குப் பகுதியான கொங்கு நாடு மைசூர் வசம் இருந்தது. எனவே, தமிழ் நாட்டின் பெரும் பகுதி நவாபுகளின் ஆட்சியின் பிடிக்குள் இருந்தது.

12.6.1. நவாபி அரசாங்கம்

மத்திய அரசாங்கம்

குறிப்பு

18-ஆம் நூற்றாண்டு இந்தியாவில் மத்திய அரசாங்கம் என்று எதுவுமில்லை. முகலாயப் பேரரசு வாரிசு நாடுகள் (Successor States- அவத், வங்காளம், ஐதராபாத்) சுதந்திர நாடுகள் (Independent States - மைசூர், இராஜபுட்டானா) புதிய நாடுகள் (New States - மராத்தியர், சீக்கியர், ஜாட்டுகள்) என்று முப்பெரும் பகுதிகளாகப் பிரிந்து விட்டன. முகலாயப் பேரரசு பெயரளவில் மத்திய அரசாங்கமாக இருந்தது. அது ஒரு நிழல் அரசாங்கம் மட்டுமே ஆகும்.

மாகாண அரசாங்கம்

கொள்கை அளவில் தமிழ் நாடு நிஜாமின் மேலாதிக்கத்துக்கு உட்பட்டிருந்தாலும், நடைமுறையில் ஆர்க்காட்டு நவாபின் கீழ் ஒரு மாகாணமாக செயல்பட்டது. மாகாணம் பல சமஸ்தானங்களாகவும், பாளையங்களாகவும், கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பாளையமும் சில கிராமங்களின் தொகுப்பாகும்.

மாவட்ட நிர்வாகம்

நவாபுகளின் நிர்வாகத்தின் கீழ் தமிழ்நாடு பல உட்பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தன. இவை பல்வேறு பெயர்களில் அறியப்பட்டன. இவை நவாப் மற்றும் மறவர் நிலப் பகுதியில் தாலூக்காக்கள் என்றும், தஞ்சாவூரில் சுபாக்கள் என்றும், புதுக்கோட்டையில் வலநாடுகள் என்றும், கள்ளர் நிலப் பகுதியில் நாடுகள் என்றும் அழைக்கப்பட்டன. இந்த உட்பிரிவுகள் இன்றைய மாவட்டங்களுக்கு இணையானவை. மாவட்டத் தலைமை நிர்வாகி தாலுகாதார், கிலேதார், சுபேதார் போன்ற பெயர்களால் அறியப்பட்டனர். பாளையங்கள் நாட்டார் என்ற முதியோர் குழுவால் நிர்வகிக்கப்பட்டது.

கிராம நிர்வாகம்

கிராமங்கள் நவாப் நிர்வாகக் கூர்முனைக் கோபுரத்தின் அடித்தளமாக இருந்தன. நிர்வாகத்தின் நாடி நரம்புகள் கிராமங்கள். ஒவ்வொரு கிராமமும் பல வார்டுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மூத்தோர் அவையான பஞ்சாயத்து கிராமத்தை நிர்வகித்தது. பஞ்சாயத்துத் தலைவர் மக்காடம் என்று அழைக்கப்பட்டார். வழக்கமாக இவர் கிராமப் பஞ்சாயத்தால் நியமிக்கப்பட்டார். விதிவிலக்காக சில கிராமங்களில் இவர் பாரம்பரிய வாரிசாக இப்பதவியில் இருப்பதுண்டு. பட்டேல் என்ற அதிகாரி கிராமப் பஞ்சாயத்தை அமைக்கவும், பஞ்சாயத்தைக் கூட்டவும் பொறுப்பாக இருந்தார். இவரே நிலவரி வசூலிப்பாராகவும், தல நீதிபதியாகவும் செயல்பட்டார். இவருக்கு உதவியாக இருந்தவர் கர்ணம் அல்லது பட்வாரி. இவர்தான் கிராமத்துக் கணக்குப் பிள்ளை. இவர் கிராமத்தைப் பற்றிய அனைத்து தகவல்களையும் கொண்ட பதிவேட்டைப் பராமரித்தார். நிலவரி நிர்வாகத்தின் அச்சாணி கர்ணம் தான். இவர் மூலம் தான் கிராமத்தார் அவர்களது நில உரிமைகள் பற்றியும், அரசாங்க உத்தரவுகள் குறித்தும் அறிந்து கொண்டனர்.

குறிப்பு

கிராமக் காவல்காரர்கள் கிராமப் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள். சட்டம் ஒழுங்கு இவர்களால் பராமரிக்கப்பட்டது. இவர்கள் இராக்காவல் செய்ததோடு, கிராமத்துக்கு அயலார் வந்து செல்வதையும், சந்தேகத்துக்கு உரியவர்களின் நடவடிக்கைகளைக் கவனித்துப் பட்டேலுக்குத் தெரிவித்தனர் திருட்டு விசாரணையின் போது உதவினர் திருட்டுப் போன பொருட்கள் மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. கிராமத்துப் பெரியவர்கள் முறை மன்றக் காவலர்களாக, அறங்கூறத்து அவையோராகச் (Jury) செயல்பட்டனர். இவர்கள் கிராம சம்மந்தமான அனைத்து வழக்குகளையும், குறிப்பாக நில உரிமைகள் பற்றிய வழக்குகளை, மரத்தடியில் அமர்ந்து கேட்டு நன்கு விசாரித்து, விவாதித்துத் தீர்ப்பு வழங்கினர். 18 ஆம் நூற்றாண்டுத் தமிழகத்தில் நிலவிய நிலையற்ற அரசியல் குழப்பத்திலிருந்து விடுபட்டு நிலையாக செயல்பட்ட அமைப்புகள் உள்ளாட்சி நிறுவனங்களே ஆகும். இந்தப் பாரம்பரிய புல்லிதழ் மக்களாட்சி அமைப்புகள் நவாபுகளின் நிர்வாகத்தின் முதுகெலும்பாகத் திகழ்ந்தன. இவை தமிழர்களின் பரம்பரைச் சொத்து கிராமத் தன்னாட்சி தமிழ் நாட்டின் மரபுரிமைச் செல்வமாகும். 19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் தமிழ் நாட்டுக் கிராமப் பஞ்சாயத்து முறையைப் போற்றிப் பாதுகாத்தனர்.

12.6.2. நிதி நிர்வாகம்

பொது வருவாய் (Public Income)

ஒரு ஆட்சியின் பெருமையும், சிறுமையும் நிதி நிர்வாகத்தைப் பொறுத்தே உள்ளது ஆட்சியின் நிலைத்தன்மை பொது வருவாயைச் சார்ந்துள்ளது. ஆர்க்காட்டு நவாபுகளின் பொது வருவாய் பெரிதும் நில வருவாயை நம்பியே இருந்தது. நில வருவாய் விவசாய மகசூல் வரி தரிசு நிலப் பயன்பாட்டு வரி கிராம வரி கரும்பு, வாழை, வெற்றிலைப் பயிர்களுக்கான சிறப்பு வரி மேய்ச்சல் வரி வீட்டு வரி போன்றவற்றை உள்ளடக்கியது. இவையன்றி உப்பு, மீன் போன்ற பொருட்களின் பரிமாற்றத்தின் போது விதிக்கப்பட்ட தீர்வை வரி மதுபான வரி லேவா தேவிக்காரர்களிடமிருந்து வசூலிக்கப் பட்ட கட்டணம் கட்டாய நன்கொடைகள் அன்பளிப்புகள் இதர சில்லரை வசூல்கள் ஆகியவை பிற பொது வருவாய்க் கூறுகளாகும்.

வரி வசூல் (Revenue Collection)

நில வரி உடைமை உரிமையைப் பொறுத்துத் தீர்மானிக்கப்பட்டது. நில வரி மதிப்பீடு இடத்துக்கு இடம், காலத்துக்குக் காலம் மாறுபட்டது. பொருளாதார, அரசியல் காரணங்களை மனதில் கொண்டு இவ்வரியும் இவ்வரிக்கான சலுகைகளும் முடிவு செய்யப்பட்டன. பொதுவாக வரிகள் நேரடியாகவோ அல்லது குத்தகைதாரர் மூலமாகவோ வசூலிக்கப்பட்டன. அமல்தார் வசூலித்த வரிப் பணத்தை நேரடியாகக் கருவூலத்தில் கட்டிவிடுவார். மாறாக, குத்தகைதாரர் வசூலித்த வரிப் பணத்தில் குறிப்பிட்ட தொகையைக் கருவூலத்தில் செலுத்திவிட்டு

எஞ்சிய தொகையைத் தன் செலவுக்கு வைத்துக் கொண்டார். வரி செலுத்தியது போக விவசாயிகளுக்கு மீதமிருந்தது மிகக் குறைவாகவே இருந்தது.

குறிப்பு

நவாபுகளின் கடன் சுமைகளுக்கேற்ப வரிகளும் கட்டுப்பாடின்றி வசூலிக்கப் பட்டன. ஊழல் மலிந்திருந்ததால் அமுல்தாரர்களும், குத்தகைதாரர்களும் நவாபுகளின் பலவீனத்தைப் புரிந்து கொண்டு அவரவர் பேராசைக்கேற்ப வரிகளை முறையோ, கட்டுப்பாடோயின்றி வசூலித்தனர். இவர்கள் நவாபின் பெயரால் ஏழை விவசாயிகளை ஏமாற்றி, வஞ்சித்து, மோசம் செய்தனர். வரி வசூல் ஊழலின் ஊற்றாயிற்று. வரிகள் நியாயமாக இருந்தால் மக்கள் மனக்கசப்பின்றிக் கொடுத்தனர். இவை கட்டுப்பாடின்றி, மனம் போன போக்கில், யதேச்சாதிகாரமாக வசூலிக்கப்பட்ட போது பொது மக்களும் விவசாயிகளும் எதிர்த்தனர். இந்த எதிர்ப்பு கள்ளக் கணக்கு, வரி ஏய்ப்பு, வரி கொடாமை மூலம் வெளிப்பட்டது. இதை அநியாயமாக வரி வசூலிப்போருக்கும், வரி ஏய்ப்போர்களுக்கும் இடையேயான போராட்டம் எனக் கூறியுள்ளார் பேராசிரியர் கே.ராஜய்யன். நவாபுகள் ஆங்கிலேயரின் துணையுடன் அதீத நிலத் தீர்வை வசூலிக்க முற்பட்ட போது பாளையக்காரர்கள் கிளர்ச்சி செய்தனர். அதாவது, கட்டாய வரி வசூல் கிளர்ச்சிக்கு வழி வகுத்தது.

பொதுச் செலவு (Public Expenditure)

சிறு சிறு துளிகளாக மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட வரிகள் பெருவெள்ளப் பொதுச் செலவாகக் கணக்கிடப்பட்டது. ஆட்சியாளர்கள் கோட்டை கொத்தளங்கள் கட்டுவதிலும், இராணுவத்தைப் பெருக்கிப் பலப்படுத்துவதிலும், ஆடம்பரச் செலவுகள் செய்வதிலும் செலவிட்டனர். கோயில்களையும், பிராமணர் குடியிருப்புகளையும், சத்திரங்களையும் பராமரிப்பதற்காகப் பெரும் பொருள் செலவிடப்பட்டது. பல்வேறு வகையிலும் மக்களைக் கசக்கிப் பிழிந்து வசூலிக்கப்பட்ட வரிகள் மக்களின் கல்வி வளர்ச்சிக்கோ, பொது சுகாதாரத்துக்கோ அல்லது நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கவோ முன்னுரிமை கொடுத்து செலவிடப்படவில்லை. ஆர்க்காட்டு நவாபுகளுக்கும், தஞ்சை மன்னர்களுக்கும், பளையக்காரர்களுக்கும் பொதுப் பணத்தைச் செலவு செய்யத் தெரிந்த அளவுக்கு ஆக்கப்பூர்வமான புதிய வழிகள் மூலம் பொது வருவாயைப் பெருக்கத் தெரியவில்லை. எனவே, நவாபுகள் கட்டாய வரி வசூலோடு கட்டுக்கடங்கா கடன்களை வாங்கி மக்களையும் கொடுமைப்படுத்தித் தாங்களும் கெட்டனர். குழம்பிய குட்டையில் மீன் பிடித்த ஆங்கிலேயர் படிப்படியாக அதிகாரத்தை நவாபுகளிடமிருந்தும், அரசர்களிடமிருந்தும், பாளையக்காரர்களிடமிருந்தும் பற்றிக் கொண்டனர்.

நீதி நிர்வாகம் (Judicial Administration)

நவாபுகளின் ஆட்சிக் காலத்தில் ஆட்சியாளர்களும், நீதிபதிகளும் கூறுவதே நீதியாக இருந்தது. சட்டவியல் வளர்ச்சி அடையாத நிலையில் சட்டத்துக்குட்பட்ட ஆட்சியோ, சட்டத்தின் ஆட்சியோ அல்லது

சட்டத்துக்கு முன் அனைவரும் சமம் என்ற கோட்பாடோ சட்டக் காவலர்கள் அறியாதவை. எனவே, நீதி நிர்வாகம் சமுதாய அமைப்புக்கேற்ப நடைபெற்றது. குவாசிகள் (Quazis) முஸ்லீம்கள் சம்மந்தப்பட்ட வழக்குகளை விசாரித்து அவர்கள் வழக்கப்படித் தீர்ப்புக் கூறினார். அமுல்தாரர்கள் இந்துக்கள் சம்மந்தப்பட்ட வழக்குகளை சாஸ்திர சம்பிரதாயப்படி விசாரணை செய்து தீர்ப்பு கூறினார். சில சமயங்களில் பண்டிதர்களின் உதவியோடு வழக்குகள் விசாரிக்கப்பட்டன. அவசியமாயின் மொழி பெயர்ப்பாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். நவாபுகளின் ஆட்சிக்குட்பட்ட நிலப் பகுதிகளில் பௌஜ்தார்கள் (Foujdars) நீதி வழங்கினர். நவாபுகள் மேல் முறையீடுகளை விசாரித்து இறுதித் தீர்ப்பளித்தனர்.

நீதி நிர்வாகம் செல்வமும், செல்வாக்கும், சாதிச் சலுகைகளைப் பெற்றோருக்கும் சாதகமாக இருந்தது. உயர்குடி மக்களும், அமுல்தாரர்களின் உறவினர்களும், அதிகாரிகளும், ஜாகிர்தாரர்களும், குத்தகைதாரர்களும், கடன் கொடுத்தோரும், நீதி நிர்வாகத்தின் பலன்களைப் பெற்றனர். பெரும்பான்மையான வழக்குகள் பழிவாங்கும்" வழக்குகளாகவே இருந்தன. சட்டப் பயிற்சி பெறாத நீதிபதிகளின் கையில் சமூக நீதி சிக்கித் தவித்தது. வழக்கத்துக்கு மாறாக, நடுநிலையோடு தீர்ப்பு வழங்கப்பட்டால் நீதிபதிகள் பாதிக்கப்பட்டோரின் சீற்றத்துக்கு உள்ளாயினர். சாதிவாரி சமுதாயத்தில் சமனற்ற நீதியே நடைமுறையில் இருந்தது. சுருங்கக்கூறின், நீதி நிர்வாகம் ஆட்சியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும், சலுகை வகுப்பாருக்கும் சாதகமாக இருந்தது எனலாம்.

சமுதாயத் தாக்கம் நவாபுகளின் ஆட்சிக் காலத்தில் பாரம்பரிய சமனற்ற படிமுறை சாதி அமைப்பு முறை நீடித்தது. முஸ்லீம்களின் பழக்கவழக்கங்கள் தனித்தன்மையுடன் பின்பற்றப்பட்டன. அனைத்துத் துறைகளிலும், குறிப்பாக அரசாங்கத் துறைகளில், உருதுச் சொற்கள் செல்வாக்கு பெற்றன. உருது மொழியால் தமிழின் தொன்மையோ அல்லது தன்மையோ பாதிக்கப்படவில்லை. தமிழ்நாடு பல மொழிகள் பேசுவோரின் பாடகசாலை போன்று இருந்தது. ஆர்க்காட்டு நவாபுகளில் முகமது அலிக்கு சிறப்பிடம் உண்டு. அவர் கழுத்தளவுக்குக் கடன் கடலில் மூழ்கியிருந்த போதும் கலைக்காகவும், கலாச்சாரத்துக்காகவும் செய்த பணிகள் பல. அவர் ஒரு சர்வ சமயச் சார்பாளர். அவரது நீண்ட ஆட்சியின் போது மதவேறுபாடின்றி அனைத்து சமயங்களையும் ஆதரித்தார். திருவல்லிக்கேணியில் பெரிய மசூதியைக் கட்டிய முகமது அலி, திருச்சி ஸ்ரீரங்கம் கோயிலுக்குத் தாராளமாக நன்கொடைகள் அளித்தார். தாமஸ் வில்லிங் (Thomas Willing)கின் புகழ்பெற்ற ஏசுவின் இறுதி இரவு உணவு (Last Supper) பற்றிய ஓவியத்தை புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள புனித மேரி தேவாலயத்துக்கு அன்பளிப்பாக அளித்தவர் முகமது அலி. மைலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில், காஞ்சி வரதராஜபெருமாள் கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில்

குறிப்பு

போன்ற தமிழ்நாட்டு இந்து ஆலயங்கள் முகமது அலியின் ஆதரவைப் பெற்றிருந்தன. இவர் பல கோயில்களுக்கு யானைகளைப் பாகர்களுடன் நன்கொடையாக வழங்கியது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு

12.7. கான்சாகிபு

நவாப் முகமது அலியின் ஆட்சிக் காலத்தில் மிகவும் பிரபலமாக இருந்த தலைவர் கான்சாகிபு என்று அழைக்கப்பட்ட மருதநாயகம் பிள்ளை . மருதநாயகம் 1725 ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பனையூர் என்ற கிராமத்தில் வைதீக வேளாளர் பிள்ளை சாதியில் பிறந்தார். இளம் வயதிலேயே அறிவுக் கூர்மையோடும், நடைமுறை அறிவாற்றலோடும் இருந்த மருதநாயகம் சொந்த கிராமத்தை விட்டுப் பாண்டிச்சேரிக்குச் சென்றார். அங்கு அவர் முகமதிய மதத்துக்கு மாறி, முகமது யூசுப்கான் என்று தனது பெயரை மாற்றிக் கொண்டார். பின்னர் யூசுப்கான் கான்சாகிபு என்று பெயர் மாற்றம் பெற்று மக்களிடையேயும் ஆங்கிலேயரிடையேயும் மிகுந்த செல்வாக்கு பெற்றார்.

உதவியாளர்

மருதநாயகம் பிள்ளை பாண்டிச்சேரியில் இருந்தபோது ஆளுநர் லா (Jacques Law)வின் இல்லத்தில் உதவியாளராகச் சேர்ந்தார். அப்போது ஆளுநரை சந்திக்கவந்த வணிகர்கள் மற்றும் பிற பிரமுகர்களுடன் தொடர்பு கொண்டு தன் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டார் கான்சாகிபு. பாண்டிச்சேரியில் செல்வாக்கு பெற்றிருந்த யூசுப்கான் என்ற மருதநாயகம் பிள்ளை தஞ்சாவூருக்குச் சென்றார். அங்கு அவர் இராணுவத்தில் சிப்பாய் அல்லது காலாப்படையினராகச் சேர்ந்தார். மருதநாயகத்தின் திறமையால் கவரப்பட்ட ஆங்கிலத் தளபதி பிரண்டன் (டீசரவெழெ) அவருக்கு இராணுவப் பயிற்சியோடு பல மொழிகளைக் கற்றுக் கொடுத்தார்.

'நெல்லூர் சுபேதார்"

இராணுவப் பயிற்சியும், பன்மொழிப் புலமையும் பெற்ற யூசுப்கான் என்ற மருதநாயகம் தஞ்சையை விட்டு ஆந்திராவிலுள்ள நெல்லூர் சென்றார். அங்கு அவர் இராணுவத்தில் பணியாற்றிக் கொண்டே மருத்துவத்தில் தேர்ச்சி பெற்றார். தன் தளராத உழைப்பாலும், அயராத முயற்சியாலும் தண்டல் நாயகராகி (வரி வசூலிப்பவர்), அவில்தாராகிப் பின்னர் சுபேதாராகப் படிப்படியாகப் பதவி உயர்வு பெற்றார் மருதநாயகம். யூசுப்கான் என்ற மருதநாயகம் அரசாங்க ஆவணங்களில் நெல்லூர் சுபேதார்" என்றே குறிப்பிடப்பட்டுள்ளார். "நெல்லூர்" என்றாலே யூசுப்கான் என்று அறியப்படும் அளவுக்கு மருதநாயகம் பிரபலமானார்.

குறிப்பு

ஆங்கிலப் படையில் கான்சாகிபு

யூசுப்கான் என்ற மருதநாயகத்தின் அருமை பெருமைகளைப் பற்றி அறிந்த ஆர்க்காட்டு நவாப் போட்டியாளர் சந்தா சாகிபு அவரைத் தனது இராணுவத்தில் சேர்த்துக் கொண்டார். ஆர்க்காட்டில் இராணுவப் பணியில் இருந்த போது யூசுப்கான் போர்ச்சுக்கீசிய கிறித்துவப் பெண் மாசா (ஆயயளய)வை மணந்து கொண்டார். இந்துவான மருதநாயகம் மதம் மாறி யூசுப்கானாகி, கிறித்துவ மாசாவை மணந்து கொண்டார். 1751 இல் முகமது அலிக்கும் சந்தா சாகிபுக்கும் இடையே நடைபெற்ற வாரிசுரிமைப் போராட்டத்தில் யூசுப்கான் சந்தா சாகிபுடன் இருந்தமையால் முகமது அலிக்கும் இவருக்குமிடையே தீராப் பகை ஏற்பட்டது. இப்போராட்டத்தின் போது யூசுப்கானின் போர்த் திறமையைக் கண்டு வியந்த இராபர்ட் கிளைவ் அவரைத் தனது நெல்லூர்ப் படைப் பிரிவில் சேர்த்துக் கொண்டார் (1752). திருச்சி முற்றுகையில் (1752-1754) பங்கேற்றார். தளபதி லாரன்ஸ் இவரைப் பிறவிப் போர் வீரர் என்று பாராட்டினார். யூசுப்கான் கான்சாகிப் என்று பெயர் மாற்றம் பெற்றுப் பிரபலமானார். ஆங்கில இராணுவத்தில் சேர்ந்த கான்சாகிபுக்கு தளபதி லாரன்ஸ் (Major Stringer Lawrence) ஐரோப்பிய இராணுவ முறைகளில் பயிற்சி அளித்தார். கான்சாகிபின் இயல்பான இராணுவத் திறமை முழுமையாக வெளிப்படுவதற்கு இந்த இராணுவப் பயிற்சி சிறந்த வாய்ப்பை அளித்தது. மேலும் இப்பயிற்சிக் காலத்தில் கான்சாகிபு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசக் கற்றுக் கொண்டார். ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கு மிடையே நடைபெற்ற பல போர்களில் கான்சாகிபு கொரில்லா போர் உத்திகளை (Guerilla Tactics)க் கையாண்டு விரோதிகளைச் செயலிழக்கச் செய்தார்.

கான்சாகிபின் திறமையைப் பிரிட்டிஷ் அரசாங்கம் அவருக்கு "கம்பெனி சிப்பாய்களின் தளபதி" என்ற இராணுவத் தரவரிசைப் பெருமையை அளித்தது. இவரது புகழும், பெருமையும், செல்வாக்கும் மேலும் அதிகரித்தது. அப்போது சென்னையின் ஆளுநராக இருந்த ஜார்ஜ் பிகாட் (George Pigot) கான்சாகிபை மைசூர் ஐதர் அலியைப் போன்று போர் உத்தியில் வல்லவராகக் கருதினார். நவாப் முகமது அலியின் ஒப்புதலுடன் மதுரையின் ஆளுநராக நியமிக்கப்பட்டார் கான்சாகிபு (1756).

மதுரை ஆளுநர்

கான்சாகிபு மதுரைக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் நோக்கங்கள் இரண்டு: 1) சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி அமைதி காத்தல் 2) கம்பெனியிடம் கடன் வாங்கியிருந்த நவாப் முகமது அலிக்குச் சேரவேண்டிய கடன் பாக்கியை வசூலித்துக் கம்பெனியிடம் ஒப்படைத்தல். மதுரை சென்ற கான்சாகிபு அக்கோயில் நகரம் மைசூர் ஐதர் அலியின் ஆதரவோடு பர்கத்துல்லாவின் கட்டுப்பாட்டில் இருப்பதை அறிந்தார். பர்கத்துல்லா மதுரை மீனாட்சி கோயில் வளாகத்தில் ஒரு தர்கா கட்டப் போவதாக அறிவித்ததால் மக்கள் ஆத்திரமடைந்தனர்.

குறிப்பு

இவற்றுக்கெல்லாம் காரணம் தென் தமிழ் நாட்டின் நவாபுக்குச் சொந்தமான பகுதிகளுக்குப் பொறுப்பளிக்கப்பட்ட நவாப் முகமது அலியின் சகோதரர் மாப கானின் திறமையின்மையே என்பதையும் விரைவிலேயே அறிந்து கொண்டார் கான்சாகிபு. மதுரையின் நிலைமையை நன்கு மதிப்பீடு செய்த கான்சாகிபு தன் படை வீரர்களைக் கொண்டு மீனாட்சி அம்மன் கோயில் வளாகத்தைத் தன்வசம் கொண்டு வந்தார் பர்கத்துல்லாவின் தர்க்கா கட்டும் திட்டத்தை முறியடித்தார். கான்சாகிபுடன் தோல்வி கண்ட பர்க்கத்துல்லா சிவகங்கை ஜமீனில் தஞ்சமடைந்தார். மதுரை மைசூரின் பிடியிலிருந்து மீட்கப்பட்டது. கான்சாகிபின் வெற்றி கண்டு அஞ்சிய நவாப் முகமது அலி கம்பெனியைக் கட்டாயப்படுத்தி அவரை திரும்பப் பெறச் செய்தார். 1757 அக்டோபர் மாதம் சோழவந்தானை ஐதர் அலியிடமிருந்து மீட்டார். லாலி சென்னையை முற்றுகையிட்ட போது (1758-59) யூசுப்கான் எதிரிகளுக்கு எல்லையில்லாத தொல்லை கொடுத்தார். அதற்காக அவர் வைர மோதிரம் அணிவிக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டார்.

கான்சாகிபு திரும்பியவுடன் மதுரை மீண்டும் குழப்பக்காடாயிற்று சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தது மக்கள் பாதுகாப்பின்றித் தவித்தனர். மாப கான் மதுரையின் தெற்குப் பகுதியையும், கள்ளர்கள் மேற்குப் பகுதியையும், பாளையக்காரர்கள் தங்கள் பகுதிகளையும் அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொண்டு காட்டாட்சி செய்து வந்தனர். மதுரைக் கோயிலுக்குச் சொந்தமான நிலம் ஆக்கிரமிக்கப்பட்டது. "தடி எடுத்தவன் தண்டல்காரன்" என்ற நிலை நீடித்தது. இந்நிலையில் வரிவசூல் முடங்கிப் போய்விட்டது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் கம்பெனி நவாப் முகமது அலியைக் கலந்து கொள்ளாமல் தன்னிச்சையாக கான்சாகிபைக் கூடுதல் அதிகாரங்களோடு மீண்டும் மதுரை ஆளுநராக அனுப்பி வைத்தது. மதுரை-திருநெல்வேலி பகுதிகளில் வரி வசூல் செய்யும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மீண்டும் மதுரைக்கு வந்த கான்சாகிபு செய்த முதல் காரியம் மீனாட்சி கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டது தான். கேடு விளைவித்த குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, சிறையில் வைத்துக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். பாளையக்காரர்கள் வரம்பு மீறாமல் பார்த்துக் கொள்ளப்பட்டனர். எஞ்சியிருந்த ஐதர் அலியின் படை வீரர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு நிலைநாட்டப்பட்டன. மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர் 1759 இல் கான்சாகிபு மதுரையின் முடிசூடா மன்னராகக் காட்சியளித்தார். மதுரையின் ஆளுநர் மக்கள் தலைவரானார்.

நலத்திட்டங்கள்

மதுரை மக்களின் பேராதரவைப் பெற்ற கான்சாகிபு நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்திப் பல மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றினார். கோட்டைகள் கேடயங்களாயின. குளங்கள்

குறிப்பு

புதுப்பிக்கப்பட்டு நன்கு பராமரிக்கப்பட்டன. விவசாய வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. விவசாயிகள் ஊக்கம் பெற்றனர். புறக்கணிக்கப்பட்ட கிராமங்கள் புத்துயிர் பெற்றன. வாணிகம் பெருகிற்று. வர்த்தகர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தங்கும் விடுதிகள் கட்டிக் கொடுக்கப்பட்டு பாதுகாப்பு அளிக்கப்பட்டது. நெசவாளிகளுக்குத் தேவையான கடன் வழங்கப்பட்டதால் நெசவுத் தொழில் புத்துயிர் பெற்றது நெசவாளிகளுக்குப் புது வாழ்வு கிடைத்தது. மக்களுக்குத் துப்பாக்கி மருந்து மற்றும் போர்த் தளவாடப் பயிற்சி அளிக்கப்பட்டது. குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டு பாரபட்சமின்றி நீதி வழங்கப்பட்டது. சுருங்கக்கூறின், கான்சாகிபுவின் திறமையான நிர்வாகமும், பாதுகாப்பு நடவடிக்கைகளும், நலத் திட்டங்களும் மக்களிடையே மிகுந்த செல்வாக்கைப் பெற்றன.

எழுச்சி எதிர்ப்பு

மதுரை மக்களின் மதிப்பைப் பெற்ற கான்சாகிபு கம்பெனி சார்பாக வரி வசூல் செய்ய முற்பட்டபோது பாளையக்காரர்களின் எதிர்ப்பை சந்திக்க வேண்டியதாயிற்று. எடுத்துக்காட்டாக, 1761 இல் வரி வசூலைக் கடுமையாக எதிர்த்த பூலித்தேவரைத் தோற்கடித்து அவரது கோட்டைகளைக் கைப்பற்றியது பிற பாளையக்காரர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியது. அதன் விளைவாக அவர்கள் கிளர்ச்சி செய்ய வேண்டியதாயிற்று.

திருவிதாங்கூர் போர்

கான்சாகிபுவின் எழுச்சி கண்டு பொறாத திருவிதாங்கூர், சிவகிரி, வடகரா மற்றும் பாஞ்சாலங்குறிச்சி ஆட்சியாளர்கள் அவருக்கு எதிராக ஒன்று சேர்ந்தனர் எதிர்த்தனர். திருவிதாங்கூர் அரசர் திருநெல்வேலி மீது படையெடுத்தார். பாளையக்காரர்கள் அவருக்கு ஆதரவாக இருந்தனர். கான்சாகிபு மறவர்களின் துணை கொண்டு திருவிதாங்கூர் படையைத் தோற்கடித்தார். திருவிதாங்கூர் மன்னர் கான்சாகிபுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார் (1763 பிப்ரவரி 21). எனினும் திருவிதாங்கூர் போர்" கம்பெனி மற்றும் நவாபின் சம்மதமின்றி மேற்கொள்ளப் பட்டமையால் அவர்களுக்குக் கான்சாகிபுவின் மீது சந்தேகம் எழுந்தது.

கம்பெனியின் கட்டளை

இந்த சந்தேகத்தைப் பெரிதுபடுத்திய ஆர்க்காட்டு நவாப் முகமது அலி கம்பெனியினரை கான்காகிபுக்கு எதிராகத் திருப்பி விட்டார். அதிகார போதையில் கான்சாகிபு நத்தம் என்ற இடத்தில் அனுமதியின்றி கோட்டைகளைக் கட்டுவதாகவும் மறவர்கள், தஞ்சை மன்னர், டேனிஷ்-டச்சு-பிரெஞ்சுக்காரரின் உதவியோடு கம்பெனி மற்றும் நவாபுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் திட்டமிட்டிருப்பதாகவும் முகமது அலி சென்னை ஆளுநர் பிகாட் பிரபு (Lord Pigot)வுக்குக் கடிதங்கள் எழுதினார். நவாபைப் பகைத்துக் கொள்ள விரும்பாத ஆளுநர் வசூலிக்கும் வரியை நவாபிடம் நேரடியாகச் செலுத்த வேண்டும் என்று

குறிப்பு

கன்சாகிபுக்கு கட்டளையிட்டார். இக்கட்டளையின் மூலம் நவாபின் கீழ்ப் பணியாளராக்கியதைக் கான்சாகிப் தனக்கிழைத்த அநீதியாகக் கருதினார். நவாபுக்காகக் கம்பெனி அதன் முடிவை மாற்றிக் கொண்டது கான்சாகிபுக்குப் பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்தது. ஆளுநரின் கட்டளையால் மனக்கசப்படைந்த கான்சாகிபு நவாபுக்குக் கீழ்ப்பணியப் போவதில்லை என்று தீர்மானித்தார்.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. முதல் ஆர்க்காட்டு நவாப் யார்?
2. ஆர்க்காட்டு நவாபுகள் இரு குலங்களைச் சார்ந்தவர்கள் அவை என்ன குலங்கள்?
3. யாருடைய ஒப்புதலுடன் மதுரையின் ஆளுநராக நியமிக்கப்பட்டார் கான்சாகிபு?

12.8. கம்பெனிக்கு எதிராகக் கிளர்ச்சி

கம்பெனியின் கட்டளையை மீறி கான்சாகிபு செயல்பட்டார். வரியை நவாபுக்கு செலுத்த மறுத்துவிட்டார். எனவே, ஆளுநர் பிகாட் அவரை சென்னைக்கே திரும்ப உத்தரவிட்டார். கம்பெனியின் முடிவுக்குக் கட்டுப்பட மறுத்த கான்சாகிபு மதுரை திருநெல்வேலி பகுதிகளில் தனது நடவடிக்கைகளைத் தொடர்ந்தார். எனவே, ஆளுநர் பிகாட் மதுரையை கான்சாகிபின் பிடியிலிருந்து மீட்கும் முயற்சியில் ஈடுபட்டார். கான்சாகிபும் திருவிதாங்கூர் மன்னரின் ஆதரவோடு கம்பெனியை எதிர்க்கத் துணிந்தார்.

கம்பெனியை எதிர்க்கத் தீர்மானித்த கான்சாகிபு மக்களின் ஆதரவைப் பெற பல வாக்குறுதிகளை அளித்தார். புதிதாகப் படைவீரர்களை சேர்த்தார். கோட்டைகளைப் பலப்படுத்தினார். இராமநாதபுரம் மற்றும் சிவகிரி ஆட்சியாளர்களின் ஆதரவைக் கோரிப் பெற்றார். ஐதர் அலி, நிஜாம், பிரெஞ்சுக்காரர்களுடன் கடிதத் தொடர்பு கொண்டார். கான்சாகிபும் ஐதர் அலியும் கூட்டு சேர்ந்து ஒரே நேரத்தில் ஆர்க்காட்டையும், திருச்சியையும் தாக்கத் தீர்மானித்தனர் கான்சாகிபு பிரெஞ்சு நாட்டுக் கொடியை மதுரைக் கோட்டைகளில் பறக்கவிட்டார் (1763 மார்ச்). இச்செயல் கம்பெனிக்கு எதிரான கிளர்ச்சியாகக் கருதப்பட்டது.

கிளர்ச்சியின் போக்கு

மதுரைக் கோட்டைகளின் மீது பிரெஞ்சுக் கொடிகளைப் பறக்கவிட்ட ஐந்து மாதங்களில் கிளர்ச்சிக்கார கான்சாகிபு பல எதிர்பாராப் பின்னடைவுகளைச் சந்திக்க வேண்டியதாயிற்று. ஐரோப்பாவில் பிரான்சுக்கு பாரீஸ் உடன்படிக்கையால் ஏற்பட்ட தோல்வியால் பிரெஞ்சுக்காரர் கான்சாகிபுக்கு அளிக்கவிருந்த ஆதரவை விலக்கிக் கொண்டனர். அதேபோன்று, மைசூரில் நிலைமை மோசமடைந்ததால் ஐதர் அலியால் வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லை. சிவகங்கையின்

மீது படையெடுத்ததன் மூலம் (1763 ஜூன்) மறவர்களை விரோதித்துக் கொண்டார் கான்சாகிபு. தனிமையாக்கப்பட்ட கான்சாகிபு நவாபு-கம்பெனியின் இருமுனைத் தாக்குதலை எதிர்க்கொள்ள வேண்டியதாயிற்று.

குறிப்பு

விளைவு

1763 ஆகஸ்டு மாதம் தளபதி மான்சென் (Col.Monson) தலைமையில் ஆங்கிலப் படை மதுரைக்குள் நுழைந்தது. நவாபின் படை நத்தம் சென்று மைசூருடனான தொடர்பைத் துண்டித்தது. கூட்டுப் படையினர் மதுரைக் கோட்டையை முற்றுகையிட்டனர் (1763 செப்டம்பர் 2). மேஜர் பிரெஸ்டன் (Major Preston) தலைமையில் வந்த ஆங்கிலப் படை ஸ்ரீவில்லிபுத்தூரைக் கைப்பற்றியது (1764 ஏப்ரல்). புதிதாகப் படைப் பொறுப்பேற்ற மேஜர் டொனால்டு காம்பெல் (Major Donald Camphele) மதுரை முற்றுகையைத் தீவிரப்படுத்தினார். முகமது அலி கோட்டைக்குள் நுழைந்து அவரது கொடியைப் பறக்கவிட்டார் (அக்டோபர் 14). கான்சாகிபின் படை வீரர்கள் சிதறி ஓடித் தப்பித்தனர். இறுதி வரை சரணடைய மறுத்த கிளர்ச்சிக்கார கான்சாகிபு காலதாமதமின்றித் தூக்கிலிடப்பட்டார் (அக்டோபர் 15). கான்சாகிபின் கிளர்ச்சி முறியடிக்கப்பட்டதன் மூலம் நவாப் முகமது அலி தனது பதவியைத் தக்கவைத்துக் கொண்டார். அவருக்கு உதவி செய்ததன் மூலம் ஆங்கிலேயர் அவரைத் தங்களது கைப்பாவையாக்கிக் கொண்டனர். தமிழ் நாட்டில் ஆங்கிலேயரின் ஆட்சி துவங்கியது.

போராளியான விசுவாசி

பல கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்த மருதநாயகம் நகரத்தில் உதவியாளராகத் தன் பணியைத் துவங்கி, அறிவாற்றலாலும், விடா முயற்சியாலும், தளராத உழைப்பாலும் இராணுவத்தில் படிப்படியாக உயர்ந்து, ஆங்கிலேயரின் நம்பிக்கைக்கு உரியவராகி, மதுரை ஆளுநராகப் பதவிப் பொறுப்பேற்று, மக்களின் பேராதரவைப் பெற்று, கம்பெனியின் ஆதிக்கப் போக்கை எதிர்த்து கிளர்த்தெழுந்து உரிமைக்காக உயிர் விட்டவர். இவர் மதச் சுவர்களையும், தடைகளையும் தகர்த்தவர். மருதநாயகம் பிள்ளை யூசுப்கான் ஆகிப் பின்னர் கான்சாகிப்பாகப் பெரும் புகழ் பெற்றவர். இவரது நிர்வாகத் திறன், நீதி உணர்வு, விவேகம், நேர்மை, நாணயம், மக்கள் நல மனப்பான்மை பற்றிய குறிப்புகள் அரசாங்க ஆவணங்களில் காணக் கிடக்கின்றன. கான்சாகிபின் உரிமை உணர்வும், நியாயத்துக்காகப் போராடும் மனப்பான்மையும், சுதந்திரதாகமும் இவரை ஆங்கிலேயருக்கு எதிரான போராளியாக்கின. அவர்களை ஆதிக்கத்தால் அடக்க முடியாது என்பதற்கு இவரது வாழ்க்கை வரலாறு ஒரு எடுத்துக்காட்டு.

மதிப்பீடு

முகலாயப் பேரரசு சிதறுண்டு போனதன் விளைவாகத் தமிழ் நாட்டில் ஆர்க்காட்டு நவாபுகள் சுதந்திரப் பறவைகளாயினர். நெவாயத்து நவாபுகள் தங்களது அதிகார எல்லையை விரிவாக்கினர். வாலாஜா

குறிப்பு

நவாபுகள், குறிப்பாக முகமது அலி, வாய் கொள்வதற்கு மேல் விழுங்கி ஏப்பமிட விரும்பினர். அவர்களது பேராசை பேரிழப்பாயிற்று. தஞ்சாவூரையும், மறவர் நாடுகளையும் ஆக்கிரமித்தது இதற்கான எடுத்துக்காட்டுகளாகும். ஆங்கிலக் கம்பெனியின் ஆதரவோடும், உதவியோடும் இவற்றைச் செய்த முகமது அலியால் ஆங்கிலேயர் பின்னிய சிலந்தி வலையிலிருந்து விடுபட முடியவில்லை. கர்நாடகம் வாலாஜாக்களிடமிருந்து ஆங்கிலேயருக்குக் கைமாறியது. நெவாயத்துக்களுக்கும் வாலாஜாக்களுக்கும் இடையேயான போட்டிகளும், போராட்டங்களும் அவர்களின் நிர்வாகத் திறமையை வெகுவாகப் பாதித்தன. மக்களைக் கசக்கிப் பிழிந்து வசூலிக்கப்பட்ட வருவாய் போர்களிலும், படாடோப வாழ்க்கையிலும் விரயமாக்கப்பட்டது. கம்பெனியிடமிருந்து கடன் மேல் கடன் வாங்கிக் கெட்டனர். நவாபுகளின் அடக்கு முறையும், திறமையின்மையும், ஊழல் நிர்வாகக் கெடுபிடிகளும் பாளையக்காரர்களின் கிளர்ச்சிகளைத் தோற்றுவித்தன. ஆங்கில விசுவாசியாக இருந்த கான்சாகிபுகூட நவாபு-ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிரான போராளியானார்.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

4. பிரெஞ்சு நாட்டுக் கொடியை மதுரைக் கோட்டைகளில் பறக்கவிட்டவர் யார்?

5. யாருடைய தலைமையில் ஆங்கிலப் படை மதுரைக்குள் நுழைந்தது?

12.9.பாளையக்காரர் கிளர்ச்சி

12.9.1. வீரபாண்டிய கட்டபொம்மன்

1760 ஜனவரி 3 ஆம் தேதி வீரபாண்டியபுரம் பாளையக்காரர் ஜகவீரபாண்டியக் கட்டபொம்முவுக்கும் சண்முகக்கனியம்மாளுக்கும் தலைமகனாகப் பிறந்தார். கட்டபொம்மு என்பது மூலப்பெயர். வீரபாண்டிய கட்டபொம்முவின் இளைய சகோதரர்கள் இருவர் : 1) ஊமைத்துரை என்று அழைக்கப்பட்ட குமாரசாமி 2) துரைசிங்கம் என்ற செவத்தையா. வீரஜக்கதேவி கட்டபொம்மு குடும்பக் குலக்கடவுள்.

மூதாதையர்

வீரபாண்டிய கட்டபொம்மனின் மூதாதையர் விஜய நகரப் பேரரசு ஆட்சியின் போது தமிழ் நாட்டுக்கு வந்து குடியேறியவர்கள். அவர்களுள் வீரதீரமிக்கவர் பொம்மு. இவர் தெலுங்கில் கெட்டிபொம்மு என்று அழைக்கப்பட்டார். இப்பெயரே காலப்போக்கில் தமிழில் கட்டபொம்மன் என்றாயிற்று. கெட்டிபொம்முவுக்கு வாரிசின்மையால் ஜெகவீரபாண்டியன் வீரபாண்டியபுரத்துக்கு (தற்போதைய ஓட்டப்பிடாரம்)ப் பாளையக்காரர்

ஆனார். இவரே முதல் அல்லது ஆதிகட்டபொம்மன் என்ற பெருமை பெற்றார்.

12.9.1.1. பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர்

குறிப்பு

அழகிய பாண்டியபுரத்து அருகாமையிலிருந்த சாலிகுளத்தில் ஒரு கட்டபொம்மன் வேட்டையாடிக் கொண்டிருந்த போது ஒரு முயல் ஏழு வேட்டை நாய்களை எதிர்த்து விரட்டியதைக் கண்டதாகவும், அந்த நிலம் வீரமிக்கது என்று எண்ணி, அங்கு ஒரு கோட்டையைக் கட்டி அதற்கு பாஞ்சாலங்குறிச்சி என்று பெயரிட்டதாகவும் மரபுவழிக் கதை கூறுகிறது. 1790 பிப்ரவரி 2 ஆம் தேதி வீரபாண்டிய கட்டபொம்மன் தனது 30வது வயதில் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்துக்கு ஆட்சிப் பொறுப்பேற்றார். இவர் 47வது பாளையக்காரர் என்றும், கட்டபொம்ம குலத்தில் 5வது ஆட்சியாளர் என்றும் கூறப்படுகிறது.

கம்பெனியின் கட்டாயம்

வீரபாண்டிய கட்டபொம்மன் மதுரை நாயக்கரின் பாளையக்காரராக இருந்தார். பின்னர் மதுரை ஆர்க்காட்டு நவாபின் ஆட்சியின் கீழ் வந்தது. 1792 இல் நவாபு ஆங்கிலேயருடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி பாளையக்காரர்களிடமிருந்து கப்பம் வசூலிக்கும் உரிமை கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆங்கிலக் கம்பெனி படை பலத்தாலும், பணபலத்தாலும் பாளையக்காரர்களிடமிருந்து கப்பத்தையும், கப்ப நிலுவையையும் வற்புறுத்திக் கட்டாயமாக வசூலிக்க முற்பட்டபோது பல பாளையக்காராகள் கம்பெனியின் கட்டாயத்துக்குக் கட்டுப்பட்டனர். ஆனால், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள் போன்றோர் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்தனர். இந்த எதிர்ப்பு கிளர்ச்சியாக மாறியது.

கர்நாடக ஒப்பந்தம்

1792 இல் ஆர்க்காடு நவாப் முகமது அலியும் ஆங்கிலக் கம்பெனியும் செய்து கொண்ட ஒப்பந்தம் பாளையக்காரர் கிளர்ச்சிக்கான மூலகாரணம் என்று கருதப்படுகிறது. இப்புதிய ஒப்பந்தத்தின்படி, பாளையக்காரர்களின் விவகாரங்களில் நேரடியாகத் தலையிட்டு வரி வசூல் செய்யும் உரிமை கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டது. மேலும், வழக்கமான கப்பத்தொகையோடு கம்பெனிக்குச் சன்மானங்களும் வழங்க வேண்டுமென பாளையக்காரர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். யாவற்றுக்கும் மேலாக, ஆங்கில அதிகாரிகளின் வீடுகளுக்குத் தேவையான பொருட்களை வழங்க வேண்டுமென்று பாளையக்காரர்கள் வற்புறுத்தப்பட்டனர். சுருங்கக்கூறின், கர்நாடக ஒப்பந்தம் பல வழிகளிலும் தவறாகப் பயன்படுத்தப்பட்டது. ஒழுங்காகத் திரை செலுத்திவந்த வீரபாண்டிய கட்டபொம்மன் இந்த அத்துமீறல்களுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தினார். இதுவே அவரது கிளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருந்தது. இக்கண்ணோட்டத்தோடு பார்க்கும் போது 1792

குறிப்பு

கர்நாடக ஒப்பந்தம் தற்காலத் தமிழ் நாட்டு வரலாற்றில் முக்கிய திருப்பு முனையை ஏற்படுத்தியது எனலாம்.

12.9.1.2. கட்டபொம்மனும் ஜாக்சனும்

வீரபாண்டிய கட்டபொம்மன் மேலதிகாரிகளின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டவர். சட்டங்களையும் சம்பிரதாயங்களையும் மதிக்கத் தெரிந்தவர். நவாபுக்கோ, கம்பெனிக்கோ கட்டவேண்டிய கப்பத்தைத் தவறாது காலத்தே கட்டி வந்தவர். அதனால் வீரபாண்டிய கட்டபொம்மன் மீது கம்பெனி மேலதிகாரிகளிடம் நல்ல மதிப்பும் மரியாதையும் இருந்தது. வானம் பொய்த்ததால் விளைச்சல் வெகுவாகக் குறைந்தது. பாஞ்சாலங்குறிச்சி பஞ்சத்தின் பிடியில் சிக்குண்டது. எனவே, வீரபாண்டியனால் வழக்கம் போல பாளைய மக்களிடமிருந்து வரி வசூல் செய்து உரிய நேரத்தில் கப்பம் செலுத்த முடியாமலே போயிற்று. இராமநாத மாவட்ட கலெக்டர் காலின் ஜாக்சன் (ஊழடடனை துயஉமளழெ) உண்மை நிலைமையை அறியாமல், வீரபாண்டியனை சரியாகப் புரிந்து கொள்ளாமல், கம்பெனியையும் கலந்து ஆலோசிக்காமல் அவசரப்பட்டு கட்டபொம்மனைத் தண்டிக்கும் பொருட்டு ஒரு படையை அனுப்ப ஏற்பாடு செய்தார். இதை அறிந்த கம்பெனி நிர்வாகம் ஜாக்சனின் நடவடிக்கைக்கு சம்மதிக்கவில்லை. மாறாக, வீரபாண்டிய கட்டபொம்மனை இராமநாதபுரத்துக்கு அழைத்து பிரச்சனையைப் பேசித் தீர்த்துக் கொள்ளுமாறு கலெக்டர் ஜாக்சன் அறிவுறுத்தப்பட்டார்.

கம்பெனியின் கட்டளைப்படி கலெக்டர் ஜாக்சன் 1798 ஆகஸ்டு 18 ஆம் தேதியிட்ட கடிதத்தில் இரண்டு வாரங்களில் இராமநாதபுரத்தில் தன்னை வந்து சந்திக்குமாறு வீரபாண்டியனுக்குத் தெரிவித்தார். கடிதத்தை அனுப்பிவிட்டு கலெக்டர் திருநெல்வேலி சுற்றுப் பயணம் சென்றுவிட்டார். இதை அறிந்த வீரபாண்டியன் கலெக்டர் ஜாக்சனை நேரில் சந்திப்பதற்காகக் குற்றாலத்தில் காத்திருந்தார் (ஆகஸ்டு 27). ஆனால் குற்றாலம் வந்த ஜாக்சன் வீரபாண்டியனை சந்திக்க மறுத்து விட்டார். அவரை இராமநாதபுரத்தில் சந்திக்க வேண்டும் என்று வீரபாண்டியனிடம் கூறப்பட்டது. எனினும் எப்படியும் கலெக்டரை சந்தித்து பிரச்சனைக்குத் தீர்வுகாண விரும்பிய கட்டபொம்மன் ஜாக்சனைத் தொடர்ந்து சொக்கம்பட்டி, சிவகிரி, சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், பேரையூர், கமுதி ஆகிய இடங்களுக்குப் பின் தொடர்ந்து சென்றார். எனினும் ஜாக்சன் வீரபாண்டியனை சந்திக்க மறுத்து ஆகஸ்டு 31 ஆம் தேதி தன்னை இராமநாதபுரத்தில் சந்திக்க அனுமதி வழங்கினார்.

குறிப்பிட்ட நாளன்று வீரபாண்டிய கட்டபொம்மன் கலெக்டர் ஜாக்சனை இராமநாதபுரம் சேதுபதியின் அரண்மனை "இராமலிங்க விலாச"த்தில் சந்தித்தார். கட்டபொம்மனுடன் அவரது அமைச்சர் சிவசுப்பிரமணிய பிள்ளையும் உடனிருந்தார். கப்பக் கணக்கை சரிபார்த்த போது கட்டபொம்மன் ஒழுங்காகக் கப்பம் கட்டி வந்திருப்பது

குறிப்பு

உறுதியாயிற்று. ஆனால் பஞ்சத்தால் தான் உரிய காலத்தே கப்பம் கட்ட முடியவில்லை என்று கட்டபொம்மன் கூறிய காரணத்தை கலெக்டர் ஜாக்சன் ஏற்க மறுத்தார். மேலும், வீரபாண்டிய கட்டபொம்மனையும் அவரது அமைச்சர் சிவசுப்பிரமணிய பிள்ளையையும் நிற்க வைத்தே பேசியதை அவமரியாதையாகக் கருதினார் கட்டபொம்மன். மேலும் வீரபாண்டியன் அரண்மனையை விட்டுச் செல்லக் கூடாது என்ற கலெக்டரின் எச்சரிக்கையை ஏற்க மறுத்தார் கட்டபொம்மன். கலெக்டரின் சிப்பாய்கள் வீரபாண்டிய கட்டபொம்மனைக் கைது செய்ய முற்பட்ட போது அவர்களைப் புறம்தள்ளிவிட்டு வீரபாண்டியனும் அவரது அமைச்சரும் வெளியேறினர். அரண்மனைக்கு வெளியே மறைவிடத்திலிருந்து இதைக் கண்ட ஊமைத்துரையும் அவரது வீரர்களும் கட்டபொம்மனின் உதவிக்கு வந்தனர். அங்கு நடந்த கைகலப்பால் ஆங்கிலேயர் கிளார்க் (Clarke) குத்திக் கொல்லப்பட்டார். இந்த அமளியில் வீரபாண்டியன் தப்பிச் சென்றுவிட்டார். அவரது அமைச்சர் கைது செய்யப்பட்டார். ஊமைத்துரையும் அவரது வீரர்களும் மாயமாய் மறைந்து விட்டனர்.

பாஞ்சாலம்குறிச்சி திரும்பிய வீரபாண்டிய கட்டபொம்மன் இராமநாதபுரம் சந்திப்பின்போது நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி கம்பெனிக்கு விரிவாகக் கடிதம் அனுப்பி வைத்தார். அக்கடிதத்தில் கைது செய்யப்பட்ட அவரது அமைச்சர் சிவசுப்பிரமணிய பிள்ளையை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டார். கட்டபொம்மனின் கடிதத்தைப் பரிசீலித்த ஆளுநர் எட்வர்டு கிளைவ் (Edward Clive) பின்வரும் உத்தரவுகளைப் பிறப்பித்தார்: 1) கட்டபொம்மன் சரணடைய வேண்டும் 2) இராமநாதபுரம் நிகழ்ச்சி பற்றி நீதி விசாரணை செய்யப்படும் 3) இராமநாதபுரம் கலெக்டர் கோலின் ஜாக்சன் பணியிடை நீக்கம் செய்யப்படுவார் அமைச்சர் சிவசுப்பிரமணியபிள்ளை விடுவிக்கப்படுவார். இராமநாதபுரம் நிகழ்ச்சி பற்றி விசாரிக்க வில்லியம் பிரௌன் (William Brown), வில்லியம் ஓர்ம் (William Orm), ஜான் காஸ்மேயர் (John Casmayor) ஆகியோரைக் கொண்ட விசாரனைக் கமிஷன் நியமிக்கப்பட்டது. இக்கமிஷன் சமர்ப்பித்த அறிக்கையில் பின்வரும் முடிவுகள் தெளிவாயிருந்தன: 1) பாளையக்காரர் வீரபாண்டிய கட்டபொம்மன் கீழ்பணிய மறுத்தார். ஆனால் கலகம் செய்தார் என்பதற்கான எவ்வித ஆதாரங்களும் இல்லை 2) கலெக்டர் காலின் ஜாக்சனின் நடத்தை கண்டிக்கத்தக்கது 3) கலெக்டரின் கட்டளையை கட்டபொம்மன் நிறைவேற்றியதில் காலதாமதம் எதுவுமில்லை 4) பேட்டி கொடுக்காமல் 23 நாட்கள் அலையவிட்டதால் வீரபாண்டியன் அவமதிக்கப்பட்டார் 5) இராமநாதபுரம் அரண்மனையில் கடுமையாக நடத்தப்பட்டதால் தான் கட்டபொம்மன் பாதுகாப்பு கருதி வெளியேற நேரிட்டது 6) கலவரத்தில் குத்தப்பட்டு உயிரிழந்த கிளார்க்கின் குடும்பத்துக்கு உரிய இழப்பீட்டை வீரபாண்டிய கட்டபொம்மன் ஏற்க வேண்டும். சுருங்கக் கூறின், விசாரணைக் குழு கட்டபொம்மனை நிரபராதி

குறிப்பு

என்று தீர்ப்பளித்தது. இராமநாதபுர மாவட்ட ஆட்சியர் ஜாக்சனுக்குப் பதில் எ.ஆர்.லஷ்ஷிங்டன் (S.R.Lushington) நியமிக்கப்பட்டார்.

கம்பெனி விரோத நடவடிக்கைகள்

வீரபாண்டிய கட்டபொம்மன் சம்மந்தமாக ஆங்கிலக் கம்பெனி நியாயமாக நடந்து கொண்டாலும், இராமநாதபுரம் ஆட்சியர் ஜாக்சனால் தனக்கு ஏற்பட்ட அவமானத்தை அவரால் மறக்க முடியவில்லை. கம்பெனியை நம்பினாலும் கம்பெனி அதிகாரியை நம்ப முடியாது என்ற முடிவுக்கு வந்தார் கட்டபொம்மன். ஆங்கிலேயரின் ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டும் என்று தீர்மானித்த அவர் சிவகங்கை மருதுபாண்டியன் ஆங்கிலேயருக்கு எதிராக உருவாக்கிய கூட்டமைப்பில் ஆர்வத்துடன் பங்கேற்றார். 1799 ஜூன் முதல் தேதி கட்டபொம்மன் தனது வீரர்களுடன் மருதுபாண்டியனை சந்திக்க சிவகங்கை புறப்பட்டார். இருவரும் சந்தித்துப் பேசிய பின் (ஜூன் 5) மருது பாண்டியன் அனுப்பிய வீரர்களுடன் வீரபாண்டியன் பாஞ்சாலங்குறிச்சி திரும்பினார். கட்டபொம்மனின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வந்த இராமநாதபுரம் ஆட்சியர் கம்பெனிக்கு அவரது அறிக்கையை அனுப்பினார். கட்டபொம்மனின் கம்பெனி விரோத நடவடிக்கைகள் ஆங்கிலேயரை விழிப்படையச் செய்தன.

சிவகிரி படையெடுப்பு

பிரிட்டிஷ் படைகள் மைசூர் போரில் ஈடுபட்டிருந்ததைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தனது படைபலத்தையும் செல்வாக்கையும் பெருக்கிக் கொள்ளும் முயற்சியில் தீவிரமாகச் செயல்பட்டார் கட்டபொம்மன். பாஞ்சாலங்குறிச்சி கோட்டை சமவெளியில் இருந்தமையால் அது எதிரியின் தாக்குதலைத் தாங்காது என்பதை அறிந்த கட்டபொம்மன் பலமிக்க சிவகிரி கோட்டையைக் கைப்பற்றத் தீர்மானித்தார். சிவகிரி பாளையக்காரர் ஆங்கிலேயரின் ஆதரவாளர். ஆனால் அவரது மகனும் மருமகனும் கம்பெனிக்கு எதிரானவர்கள். எனவே, வீரபாண்டியன் அவர்களது துணையுடன், தளவாய் குமாரசாமி நாயக்கர் தலைமையில் ஒரு படையை சிவகிரிக்கு அனுப்பி வைத்தார் கட்டபொம்மன். கட்டபொம்மனின் சிவகிரி படையெடுப்பு ஆங்கிலேயருக்கு விடப்பட்ட சவாலாகக் கருதப்பட்டது.

பாஞ்சாலங்குறிச்சிப் போர்

வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு சாதகமாக இருந்த சூழ்நிலை நான்காம் மைசூர் போரின் முடிவில் பாதகமாய்ப் போயிற்று. இப்போரில் வெற்றிவாகை சூடிய கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லி பிரபு (Governor General Lord Wellesley) கட்டபொம்மனின் எதிர்ப்பை முறியடிக்கத் தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்தார். "கட்டபொம்மனின் கிளர்ச்சி நடத்தை"க்கு இராணுவத் தீர்வு காணத் தீர்மானித்தார். அதன்படி, கட்டபொம்மன் கம்பெனியின் விரோதிகளுடன் கூட்டு சேராமல் பார்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டார் (1799, மார்ச் 16). திருச்சி, தஞ்சை, மதுரையிலிருந்த படைகள் திருநெல்வேலிக்கு விரையுமாறு

குறிப்பு

உத்தரவிட்டார் (மே). இவர்களுடன் திருவிதாங்கூர் மன்னரின் படையினரும் சேர்ந்து கொண்டனர். பாளையக்கார முறையை ஒழிப்பதன் மூலம் பாளையக்காரர்களின் கிளர்ச்சியை முறியடித்து விடலாம் என்பது வெல்லெஸ்லியின் திட்டம். நான்காம் மைசூர் போர் ஆங்கிலேயருக்கு சார்பாக முடிந்ததற்கும், கட்டபொம்மன் சிவகிரி மீது படையெடுத்ததும் வெல்லெஸ்லி பிரபு எதிர்பார்த்த சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. பழுத்துக் காய்ச்சிய இரும்பை அடிப்பதைப் போன்று கட்டபொம்மனைக் களையெடுக்க மேஜர் பானர்மனை (Major Bannerman) கூடுதல் அதிகாரங்களோடும், பலமிக்கப் படையோடும் அனுப்பினார்.

மேஜர் பானர்மன் தலைமையில் சென்ற ஆங்கிலப் படை இராமநாதபுரம் வழியாக திருநெல்வேலி சென்றது. அங்கிருந்து கொண்டு தன்னை 1799 செப்டம்பர் 4 ஆம் தேதி பாளையங்கோட்டையில் வந்து சந்திக்குமாறு கட்டபொம்மனுக்கு இறுதி எச்சரிக்கை அனுப்பினார் (செப்டம்பர் 1). குறிப்பிட்ட தேதியில் பானர்மனை சந்திப்பது சாத்தியமில்லை என்று கட்டபொம்மன் பதில் அனுப்பியதால் ஆங்கிலத் தளபதி இராணுவ நடவடிக்கை மேற்கொண்டார். அவரது படை கட்டபொம்மன் தன் வீரர்களுடன் இருந்த பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைச் சூழ்ந்து கொண்டது. கட்டபொம்மனைக் காப்பாற்ற அண்டைக் கிராமங்களிலிருந்து வந்தோர் விரட்டியடிக்கப்பட்டனர். வலுவான நிலையில் இருந்த பானர்மன் இராமலிங்க முதலியாரை கோட்டைக்குள் அனுப்பி கட்டபொம்மனைச் சந்தித்துப் பேசி சரணடையச் சொல்லச் செய்தார். ஆனால் கட்டபொம்மன் பானர்மனின் கோரிக்கையை நிராகரித்தார்.

கோட்டையின் பலவீனத்தைப் பற்றி இராமலிங்க முதலியார் கொடுத்த தகவலின் பேரில் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் தெற்கு நுழைவாயிலில் பீரங்கிகள் கொண்டு தகர்க்கப்பட்டது. எட்டயபுரம் மற்றும் திருவிதாங்கூர் படைகள் மேற்கு வாயிலைத் தாக்கின. உள்ளே நுழைந்த ஆங்கிலப் படையை எதிர்க்கொண்ட ஊமைத்துரையின் வீரர்கள் பேரழிவை ஏற்படுத்தினர். தளபதி காலின் கொல்லப்பட்டார். பானர்மன் எதிர்பார்த்தபடி கட்டபொம்மனை எளிதில் தோற்கடிக்க முடியவில்லை. எனவே கூடுதல் படையைப் பாளையங்கோட்டையிலிருந்து வரவழைத்துப் பன்முனைத் தாக்குதல் நடத்தப்பட்டது. கிளர்ச்சிக்காரர்கள் கோட்டையை விட்டு வெளியேறி காடல்குடி நோக்கி விரைந்தனர். காடல்குடியில் அவர்களுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டது. சிவசுப்பிரமணிய பிள்ளை கைது செய்யப்பட்டார். கட்டபொம்மன் தப்பிச் சென்று விட்டார். காடல்குடியிலிருந்து தப்பிச் சென்ற வீரபாண்டிய கட்டபொம்மனை புதுக்கோட்டை மன்னர் விஜயரகுநாத தொண்டைமான் களப்பூர் காட்டிலிருந்து பிடித்துத் தளபதி பானர்மனிடம் ஒப்படைத்தார். கட்டபொம்மனின் படைவீரர்கள் சிவகங்கை வழியாக திண்டுக்கல் தப்பிச் சென்று மருதுபாண்டியரும் கோபால நாயக்கரும் தங்கியிருந்த ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு முகாமில் சேர்ந்தனர்.

குறிப்பு

கைது செய்யப்பட்டோர் அனைவரும் ஆங்கிலேயர் ஆதரவுப் பாளையக்காரர் களைக் கொண்ட மன்றத்தின் முன் நிறுத்தப்பட்டனர். இம்மன்றத்தில் எட்டயபுரம், சிவகிரி பாளையக்காரர்கள் இடம் பெற்றிருந்தனர். விசாரணைக்குப்பின் கிளர்ச்சித் தலைவர்கள் அனைவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. அதன்பின் 1799 செப்டம்பர் 13 ஆம் தேதி நாகலாபுரம் சுந்தரபாண்டியன் கோபாலபுரத்திலும், சிவசுப்பிரமணிய பிள்ளை நாகலாபுரத்திலும் தூக்கிலிடப்பட்டனர். மூன்று நாட்களுக்குப் பின்னர் (செப்.16) கட்டபொம்மன் தனியாக பாளையக்காரர் மன்றத்தினரால் விசாரிக்கப்பட்டார். கட்டபொம்மன் தன்மீது சுமத்தப்பட்ட குற்றங்களை மனக்கலக்கமின்றி ஒத்துக் கொண்டார். 1799 செப்டம்பர் 17 ஆம் தேதி வீரபாண்டிய கட்டபொம்மன் கயத்தாற்றில் தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டார். இறுதி மூச்சு உள்ளவரை கட்டபொம்மன் தளரா மனஉறுதியுடனும், இறுமாப்புச் செருக்குடனும் கணப்பட்டார் என்று மேஜர் பானர்மன் குறிப்பிட்டுள்ளார். வீரபாண்டியன் தன் வாழ்நாளின் இறுதி நாட்களை ஒரு மாவீரனுக்குரிய இறுமாப்புடன் எதிர்கொண்டார்" என்று புகழாரம் சூட்டியுள்ளார் பேராசிரியர் கே.ராஜய்யன்.

மதிப்பீடு

வீரபாண்டிய கட்டபொம்மன் இயல்பாகவே அமைதியானவர் அமைதியை விரும்பியவர். சட்டத்தை மதித்துத் தவறாமல் கப்பம் கட்டி வந்தவர். வாடிய பயிரைக் கண்டு வாடிய வள்ளலார் போன்று பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பாஞ்சாலங்குறிச்சி மக்களின் துயர் துடைக்கப் பாடுபட்டவர். கம்பெனி உயர் அதிகாரிகளின் மதிப்பைப் பெற்றிருந்தவர். சத்தியத்தையும் சமாதானத்தையும் கட்டிக் காத்தவர். அப்படிப்பட்ட அகிம்சா மூர்த்தியை இராமநாதபுர மாவட்ட ஆட்சியர் அவமதித்தார், உதாசீனப்படுத்தினார். அதன் காரணமாக கட்டபொம்மன் ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடத் துணிந்தார். எண்ணித் துணிந்த வீரபாண்டியன் தன் முடிவிலிருந்து பின்வாங்கவில்லை.

கிளர்ச்சிக்கார கட்டபொம்மன் மருது பாண்டியன் உருவாக்கிய ஆங்கில எதிர்ப்புக் கூட்டணியில் தன்னை இணைத்துக் கொண்டார். திருநெல்வேலி கிளர்ச்சிக்கார பாளையக்காரர்களுக்குத் தலைமை தாங்கினார். ஆங்கிலேயரை ஆதரித்த சிவகிரி மீது படையெடுத்தார். ஒற்றர் மூலம் எதிரிகளின் நடமாட்டங்களைக் கண்காணித்தார். நெருக்கடியான நேரத்திலும் ஆங்கிலேயரிடம் அடிபணிய மறுத்தார். உயிர் மூச்சு உள்ளவரை ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய கட்டபொம்மன் சக பாளையக்காரர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். சாகும் போதும் செருக்கோடு செத்தார். வீரபாண்டிய கட்டபொம்மன் பிறவிப் போராளி அல்லர் சூழ்நிலைக் கட்டாயத்தால் கிளர்ச்சிக்காரரானவர்.

12.9.2. ஊமைத்துரை

குறிப்பு

வீரபாண்டியன், ஊமைத்துரை, குமாரசாமி ஆகிய மூவரும் உடன்பிறந்த சகோதரர்கள். இம்மூவரும் பாளையப்பற்றுமிக்க வீரர்கள். இவர்கள் வீரபாண்டிய கட்டபொம்மனுக்குத் தோன்றாத் துணையாக இருந்தார்கள். குறிப்பாக, ஊமைத்துரை ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிரான பாளையக்காரப் போரில் பிரதான பங்கேற்றார். 1798 இல் இராமநாதபுரம் சேதுபதியின் அரண்மனையில் கட்டபொம்மனின் உயிருக்கு ஊறுநேரவிருந்த நேரத்தில் ஆங்கில பாதுகாவலர் வீரர்களுடன் போரிட்டு கட்டபொம்மன் தப்பிச் செல்லக் காரணமாக இருந்தார். பின்னர் 1799 இல் மேஜர் பானர்மன் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை மீது பீரங்கித் தாக்குதல் நடத்தி உள்ளே நுழைந்த போது அவர்களை தீரத்துடன் எதிர்க்கொண்டு போராடி அவர்களது தாக்குதலை தடுத்து நிறுத்தினார். கோட்டையைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் ஊமைத்துரையைக் கைது செய்து பாளையம்கோட்டை சிறையில் அடைத்தனர். 1801 பிப்ரவரி மாதம் சிறையிலிருந்து தப்பிய ஊமைத்துரை கட்டபொம்மன் விட்டுச் சென்ற ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்தார்.

தூத்துக்குடி தாக்குதல்

பாளையங்கோட்டையிலிருந்து தப்பிய ஊமைத்துரை பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைப் புதுப்பித்துக் கட்டினார். பிற பாளையக்காரர்களை ஒன்று திரட்டி, ஒருங்கிணைத்து, மற்றொரு கூட்டமைப்பை உருவாக்கும் முயற்சியை மேற்கொண்டார். எட்டையபுரம், ஊத்துமலை பாளையக்காரர்களைத் தவிர பிற திருநெல்வேலி பாளையக்காரர்கள் ஊமைத்துரையோடு சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராகப் போராட ஆதரவளித்தனர். சிவகங்கை மருதுபாண்டியன் அனுப்பிய படை வீரர்களையும் சேர்த்துக் கொண்டு ஊமைத்துரை 1801 மார்ச் 3 ஆம் தேதி தூத்துக்குடியைத் தாக்கிக் கைப்பற்றினார். இது ஊமைத்துரையின் தலைமையில் செயல்பட்ட கூட்டுப்படைக்குக் கிடைத்த குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.

முற்றுகை முறியடிப்பு

ஆங்கிலேயர் பாஞ்சாலங்குறிச்சியைக் கைப்பற்றும் முயற்சியைக் கைவிட வில்லை. அவர்கள் திருவிதாங்கூர் மன்னர் அனுப்பிய படையின் துணை கொண்டு தளபதி காலின் மெக்காலே தலைமையில் 1801 மார்ச் 13 ஆம் தேதி பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை முற்றுகையிட்டனர். ஊமைத்துரையும், அவரது சகோதரர் தளவாய் குமாரசாமியும் அவர்களது வீரர்களும் ஆங்கிலேயரின் தாக்குதலை உறுதியுடன் எதிர்க் கொண்டனர். இந்த வாழ்வா-சாவா போராட்டத்தில் ஆங்கிலேயர் பலர் உயிரிழந்தனர். ஆங்கிலேயர் படை பின்வாங்கியது. ஆங்கிலேயர் முற்றுகை முறியடிக்கப்பட்டது. இந்த இரண்டாவது வெற்றியால் ஊமைத்துரையின் வீரக்கரம் மேலோங்கி நின்றது.

குறிப்பு

மீண்டும் முற்றுகை

பாஞ்சாலங்குறிச்சி கோட்டை முற்றுகைத் தோல்வி தளபதி காலின் மெக்காலேக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. எனினும், அவர் மீண்டும் முற்றுகையிட்டு அக்கோட்டையைக் கைப்பற்றத் திட்டமிட்டார். மெக்காலே சென்னை, ஆர்க்காடு, திண்டுக்கல், திருச்சி, மலபார் பகுதிகளிலிருந்து படைகளைத் திரட்டினார். தஞ்சை மன்னர் சரபோஜியும், புதுக்கோட்டை தொண்டைமானும் ஆங்கிலேயருக்கு ஆதரவாக இருந்தனர். 1801 மே 24 ஆம் தேதி லெப்டினன்ட் கர்னல் அக்னியூ (Lt.Colonel Agnew) தலைமையில் ஆங்கிலேயரின் கூட்டுப்படை பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை முற்றுகையிட்டது. 53 நாட்கள் தொடர்ந்து கோட்டை மீது பீரங்கித் தாக்குதல் நடத்தப் பட்டது. இரு தரப்பிலும் பலத்த சேதம் ஏற்பட்டது. இறுதியில் கோட்டை கைப்பற்றப்பட்டது. ஊமைத்துரை பலத்த காயங்களுடன் உயிர் தப்பினார்.

12.9.2.1. காளையார்கோவில் கிளர்ச்சி

பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து தப்பிச் சென்ற ஊமைத்துரை காளையார்கோவில் காட்டுக்குள் மருது சகோதரர்களை சந்தித்து அவர்களுடன் சேர்ந்து கொண்டு ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடினார். மருது சகோதரர்கள் துவக்கிய ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு தென்னிந்திய கிளர்ச்சியில் பேரார்வத்துடன் பங்கேற்றார் ஊமைத்துரை. காளையார்கோவில் கிளர்ச்சிக் கேந்திரமாயிற்று. தளபதி மெக்னீன் (Lieutenant Maclean) தலைமையில் காரைக்குடி வந்த ஆங்கிலப் படையை ஊமைத்துரையின் தலைமையின் கீழ் வந்த படை சுற்றிச் சூழ்ந்து கொண்டு தாக்கியது. இத்தாக்குதலை எதிர்க்கொள்ள முடியாத மெக்னீன் படை பின்வாங்க நேரிட்டது. பின்வாங்கிய ஆங்கிலப் படை திருச்சி, திருவிதாங்கூர், புதுக்கோட்டை, இலங்கை ஆகிய இடங்களிலிருந்து வந்த உதவிப் படையுடன் கர்னல் அக்னியூ (Lt.Colonel Agnew)வின் தலைமையில் 1801 செப்டம்பர் மாதம் காளையார் கோயிலைத் தாக்கினார். சிவகங்கையின் பல பகுதிகள் கைப்பற்றப்பட்டன. இன்ஸ் (Innes), பிளாக்பர்ன் (Blackburne), மெக்காலே (Macaulay) தலைமையில் காளையார் கோயில் மீது மும்முனைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலைத் தீரத்துடன் எதிர்க்கொண்ட ஊமைத்துரை காளையார்கோயில் ஆங்கிலப் படையால் கைப்பற்றப்பட்ட பிறகு திண்டுக்கல்லுக்குத் தப்பிச்சென்றார் (அக்டோபர்1).

திண்டுக்கல் தாக்குதல்

திண்டுக்கல்லுக்குத் தப்பிச் சென்ற ஊமைத்துரை மூன்று நாட்களுக்குள் சில ஆயுதம் தாங்கிய வீரர்களைத் திரட்டினார். பின்னர் விருப்பாட்சியைக் கைப்பற்றி அதன் அடர்ந்த காடுகளுக்குச் சென்று ஊமைத்துரை போராட்டத்தைத் தொடர்ந்தார். பின்னர், திண்டுக்கல்லில் ஜோன்ஸ் (துழநெள) தலைமையிலான படையைத் தோற்கடித்தார். ஊமைத்துரையின் படை வீரர்கள் எதிரிகளை விருப்பாட்சியிலும்,

சேத்ரம்பட்டியிலும் இடை மறித்துத் தாக்கினர். தோல்வியடைந்த ஊமைத்துரையும் அவரது படை வீரர்களும் திண்டுக்கல் பள்ளத்தாக்கில் பதுங்கினர். ஆங்கிலப் படை அவர்களைத் துரத்திச் சென்று தாக்கியது. மூன்று நாட்கள் உணவின்றி வாடிய கிளர்ச்சிக்காரர்கள் கைது செய்யப் பட்டனர். கைது செய்யப்பட்ட கிளர்ச்சித் தலைவர்கள் கொடூரமாகத் தண்டிக்கப்பட்டனர். 1801 நவம்பர் 16 ஆம் தேதி ஊமைத்துரையும் அவரது இளைய சகோதரர் செவத்தையாவும் சிரச்சேதம் செய்யப்பட்டதாக ஜேம்ஸ் வெல்ஷ் (James Welsh) தனது இராணுவ நினைவுக் குறிப்புகளில் (Military Reminicences) குறிப்பிட்டுள்ளார்.

மதிப்பீடு

வீரபாண்டிய கட்டபொம்மனும் ஊமைத்துரையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவர்கள். இவ்விருவரும் பாஞ்சாலங்குறிச்சி பாளையத்தின் சுதந்திரத்துக்காக ஆர்க்காட்டு நவாபு-ஆங்கிலக் கம்பெனி ஆதிக்கத்தை எதிர்த்து இரட்டைக் குழல் துப்பாக்கியாக இருந்து போராடியவர்கள். அண்ணன் விட்டுச் சென்ற பணியை தம்பி தலைமேற்கொண்டு தொடர்ந்தார். பாளையங்கோட்டை சிறையிலிருந்து தப்பி வந்த ஊமைத்துரை பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைப் புதுப்பித்துப் பலப்படுத்தினார் தூத்துக்குடித் தாக்குதலை வெற்றிகரமாக நடத்தினார் பாஞ்சாலங்குறிச்சி முற்றுகையிலிருந்து ஆங்கிலப் படையைப் பின்வாங்கச் செய்தார் பாஞ்சாலங்குறிச்சி மீண்டும் தாக்கப்பட்டபோது தீரத்துடன் எதிர்கொண்டார். காளையார்கோவில் கிளர்ச்சியின் போதும், திண்டுக்கல் தாக்குதல் போதும் எதிரிகளைத் திணறச்செய்தார்.

ஊமைத்துரையும் அவரது இளவல் துரைசிங்கம் செவத்தையாவும் மருது சகோதரர்களுடன் சேர்ந்து விரிவான ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றனர். ஊமைத்துரை துறைபோதிய இராஜதந்திரி போர் முறைகளையும், நுட்பங்களையும், உத்திகளையும் கைவரக் கற்றவர் பிற பாளையக்காரப் போராளிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படக்கூடிய தலைமைத் திறன்மிக்கவர். ஆங்கில ஆதிக்கத்தை இறுதிவரை எதிர்த்துப் போராடி உயிர்த் தியாகம் செய்தவர். தற்காலத் தமிழ் நாட்டு வரலாற்றின் போராளிகள் பட்டியலில் இடம் பெறத்தக்கவர் ஊமைத்துரை என்பதில் ஐயமில்லை.

12.9.3. வேலு நாச்சியார்

வேலு நாச்சியார் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்த முதல் பெண் அரசி என்ற பெருமைக்குரியவர். இவர் சிவகங்கைச் சீமையை ஆட்சி செய்த முத்து வடுகநாதரின் மனைவி ஆவார். தாண்டவராயபிள்ளை அமைச்சராயிருந்த போது வேலு நாச்சியார் அவரது கணவர் முத்து வடுகநாதருக்கு நல்ல மனைவியாகவும், நண்பராகவும், ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் இருந்தார். முத்து வடுகநாதர் டச்சுக்காரர்களுக்கு வர்த்தக வசதிகள் செய்து கொடுத்தமையால் ஆங்கிலேயர் இருமுறை சிவகங்கை மீது படையெடுத்து, காளையார்கோயிலைக்

குறிப்பு

குறிப்பு

கைப்பற்றியபோது வடுகநாதர் வீரத்துடன் போரிட்டு மடிந்தார் (1772 ஜூன் 21). கணவருடன் போர்க்களத்திலிருந்து போரில் பங்கேற்ற வேலுநாச்சியாரின் செயல் பிரமிக்கத்தக்கது பாராட்டுக்குரியது. கணவர் முத்து வடுகநாதரின் வீர மரணத்துக்குப் பின் விதவை வேலு நாச்சியார் அவரது மகள் வேலாச்சி நாச்சியார், அமைச்சர் தாண்டவராய பிள்ளை ஆகியோருடன் விருப்பாட்சிக்குத் தப்பிச் சென்றனர். அங்கு அவர்கள் எட்டு ஆண்டு காலம் ஐதர் அலியின் பாதுகாப்புப் பராமரிப்பில் இருந்தனர். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு வேலு நாச்சியார் ஒரு படையைத் திரட்டி, ஐதர் அலி மற்றும் கோபால நாயக்கருடன் சேர்ந்து ஆங்கிலேயரைத் தாக்கத் திட்டமிட்டார். அதன்படி, 1780 இல் இக்கூட்டுப்படை சிவகங்கையில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டது. இப்போரின் போது மருது சகோரர்கள் தளபதிகளாகச் செயல்பட்டனர். இப்போருக்குப் பின் சிவகங்கை வேலுநாச்சியார் வசம் வந்தது அவர் சிவகங்கை அரசியானார்.

அரசி வேலு நாச்சியார்

சிவகங்கையின் ஆட்சிப் பொறுப்பேற்ற வேலுநாச்சியார் பத்தாண்டு காலம் நல்லாட்சி செய்தார். ஐதர் அலியும், கோபால நாயக்கரும் அவருக்குத் தொடர்ந்து ஆதரவு அளித்தனர். சின்ன மருது அரசியின் அமைச்சராகவும், பெரிய மருது தலைமைத் தளபதியாகவும் நியமிக்கப்பட்டனர். இவ்விருவரும் அரசியின் நம்பிக்கைக்குரியவர்களாக இருந்து அவரது பத்தாண்டுகால ஆட்சியில் பங்கேற்றனர். அரசி வேலு நாச்சியார் ஆட்சிப் பொறுப்பை மருது சகோதரர்களிடம் ஒப்படைத்து விட்டு சில ஆண்டுகளுக்குப் பின் இறந்தார் (1790).

12.9.4. மாவீரன் தீரன் சின்ன மலை

தீரன் சின்னமலை பாளையம்கோட்டை பட்டக்காரர் அரச பரம்பரையைச் சேர்ந்தவர். இவர் 1756 ஏப்ரல் 17 ஆம் தேதி மேலபாளையத்தில் இரத்னசாமிக்கும் பெரியாத்தாளுக்கும் பிறந்தார். இவரது இயற்பெயர் தீர்த்தகிரி கவுண்டர். பின்னர் மாவீரன் தீரன் சின்னமலை என்று அழைக்கப்பட்டார். மைசூரின் அதிபரான ஐதர் அலி கொங்கு நாட்டை அபகரிக்கத் தீர்மானித்தார். அவரது திவான் முகமது அலி கொங்கு நாட்டில் தீர்த்தகிரி குடும்பத்துக்குச் சொந்தமான பகுதிகளைக் கையகப்படுத்தி, மக்களைக் கொடுமைப்படுத்திக் கட்டாய வரிவசூல் செய்தார். தீர்த்தகிரியும் அவரது இரு சகோதரர்களும் முகமது அலியை சிவன் மலை மற்றும் சென்னிமலையில் இடைமறித்து சந்தித்து வரிப் பணத்தை மீட்டு கொங்கு நாட்டு உரிமையை நிலைநாட்டினர். தீர்த்தகிரியின் தீரச் செயல் மக்களிடையே விரைந்து பரவியது.

தீர்த்தகிரி சின்னமலை

அவமதிக்கப்பட்ட மைசூர் திவான் முகமது அலி சங்ககிரியிலிருந்து ஒரு படையை அனுப்பினார். தீர்த்தகிரி அப்படை காங்கேயத்தை அடைவதற்கு முன் நொய்யல் ஆற்றங்கரையில்

குறிப்பு

இடைமறித்துத் தோற்கடித்தார். இதுவே தீர்த்தகிரி பெற்ற முதல் வெற்றியாகும். மைசூர் சுல்தான் ஐதர் அலி பழிவாங்கும் நோக்குடன் தாக்கக்கூடும் என்று எண்ணிய தீர்த்தகிரி சின்னமலை கொங்கு நாட்டு கிராமங்களிலிருந்து இளைஞர்களைத் தெரிவு செய்து, அவர்களுக்குப் போர்ப் பயிற்சி கொடுத்து, ஒரு படையை உருவாக்கினார். இதன் மூலம் தீரன் சின்னமலை கொங்கு நாட்டு மக்களின் உள்ளங்களை கொள்ளை கொண்டார்.

தீரனும் திப்புவும்

ஐதர் அலி இறந்தபின் (1782 ஜூலை 12) அவரது வாரிசான திப்பு சுல்தான் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்க்க மாவீரன் தீரன் சின்னமலையின் ஆதரவையும், உதவியையும் வேண்டினார். சின்னமலை திப்பு சுல்தானுடன் சேர்ந்து பொது எதிரியான ஆங்கிலேயரை எதிர்க்க ஒப்புதல் அளித்தார். கூட்டுப் படைக்கு பிரெஞ்சுப் போர் வல்லுநர்கள் பயிற்சி அளித்தனர். நான்காம் மைசூர் போரின் போது (1799) தீரன் சின்னமலையின் வீரர்கள் திப்பு சுல்தானின் தலைமையின் கீழ் மாலவல்லிப் போர் முனையில் ஆங்கிலப் படையை எதிர்த்துப் போரிட்டனர். இப்போரில் திப்புசுல்தான் கொல்லப்பட்டார் (1799 ஏப்ரல் 5).

ஓடநிலா வெற்றி

திப்பு சுல்தான் இறந்த பின்னர் தீரன் சின்னமலையும் அவரது வீரர்களும் கொங்கு நாடு திரும்பினர். ஆங்கிலேயரை எதிர்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டார் சின்னமலை. ஓடநிலா என்ற வலிமைமிக்க அரண்மனையை எழுப்பினார். அங்கு ஒரு படைக்கலச் சாலை (ழுசனயெஉந குயஉவழசல)யைக் கட்டினார் பீரங்கிகளும், துப்பாக்கிகளும் தயாரிக்கப்பட்டன. தீரன் சின்னமலையின் கொங்கு நாட்டுப் பற்றும், ஆங்கில ஆதிக்க எதிர்ப்பும் பக்கத்துப் பாளையக்காரர்களையும் பற்றிக் கொண்டது. ஆங்கிலேயருக்கு எதிராகக் கூட்டமைப்பு அமைத்துப் போராட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர்.

பெரும் பின்னடைவு

கொங்கு நாட்டைத் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற நோக்குடன் ஆங்கியேலர் ஒருவரை தூது அனுப்பி கொங்கு நாட்டின் மீது ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டை ஏற்றுக் கொண்டு கப்பம் செலுத்துமாறு அறிவுறுத்தினர். ஆனால் தீரன் சின்னமலை ஆங்கிலேயரின் சவாலை எதிர்த்து கொங்கு நாட்டின் இறையான்மையை நிலைநாட்டத் துணிந்தார். தீரன் சின்னமலையின் துணிவையும் அறைகூவலையும் கண்டு அதிர்ந்து போன ஆங்கிலேயர் தளபதி மாகிஸ்கான் (Col.Makiskan) தலைமையில் சின்னமலையைக் கைது செய்ய அனுப்பினர். தீரன் சின்னமலை எதிரிப் படையை நொய்யல் ஆற்றங்கரையில் தோற்கடித்தார். தளபதி மாகிஸ்கான் கொல்லப்பட்டார்.

குறிப்பு

வீர மரணம்

ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட பெரும் பின்னடைவைப் பொறுத்துக் கொள்ள முடியாத ஆங்கிலக் கம்பெனி தளபதி ஹாரிஸ் (ஊயிவயஎை ர்யசசளை) தலைமையில் ஒரு குதிரைப் படையை அனுப்பியது. ஓடநிலாவை அடைந்த குதிரைப் படையை தீடீர்த் தாக்குதல் நடத்தி நிலைகுலையச் செய்தார் தீரன் சின்னமலை. இத்தாக்குதலை சமாளிக்க முடியாத தளபதி ஹாரிஸ் பின்வாங்க நேரிட்டது (1802). அதன்பின் ஆங்கிலேயர் ஒரு பலமிக்க பீரங்கிப் படையை அனுப்பியது. அதை அறிந்த சின்னமலையும் அவரது குடும்பத்தினரும் கருமலைக்குச் சென்றுவிட்டனர். ஆங்கிலேயரின் பீரங்கிப் படை ஓட நிலா அரண்மனையைத் தரைமட்டமாக்கிற்று. நல்லப்பன் என்ற சமையல்காரனால் காட்டிக் கொடுக்கப்பட்ட சின்னமலையும் அவரது சகோதரர்களும் கைது செய்யப்பட்டு சங்ககிரி சிறையில் அடைக்கப்பட்டனர். கொங்கு நாட்டின் மீது ஆங்கிலேயரின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டால் சின்னமலையை மன்னிக்கத் தயாராக இருப்பதாகக் கூறியது கம்பெனி. ஆனால் தீரன் சின்னமலை எந்த நிபந்தனையையும் ஏற்க மறுத்துவிட்டார். எனவே, 1805 ஜூலை 31 ஆம் தேதி மாவீரன் சின்னமலையும் அவரது சகோதரர்களும் தூக்கிலிடப்பட்டனர்.

12.9.5. சுவர்னகிரி வீரன் சுந்தரலிங்கம்

சுந்தரலிங்கம் பாஞ்சாலங்குறிச்சிக்குப் பக்கத்தில் உள்ள சுவர்னகிரியில் 1771 ஆம் ஆண்டு கட்டக் கருப்பணத் தேவேந்திரருக்கும் முத்தம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். இவரது மனைவி சண்முகவடிவு. சுந்தரலிங்கம் வீரபாண்டிய கட்டபொம்மனின் நம்பிக்கைக்குப் பாத்திரமான தளபதிகளில் ஒருவராக உடனிருந்தார். நதிநீர்ப் பங்கீடு சம்பந்தமாக பாஞ்சாலங்குறிச்சிக்கும் எட்டயபுரத்துக்குமிடையே ஏற்பட்ட தகறாரில் சுந்தரலிங்கம் தலையிட்டுத் தீர்த்து வைத்ததிலிருந்து இவரது அரசியல் வரலாறு துவங்கியது எனலாம். அதன்பின் அவர் கட்டபொம்மனின் படைப் பிரிவில் சேர்க்கப்பட்டு, படிப்படியாக தளபதி அளவுக்கு உயர்ந்தார். வீரபாண்டிய கட்டபொம்மன் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் ஜாக்சனை சந்திக்கச் சென்ற போது சுந்தரலிங்கமும் ஊமைத்துரையும் அவருடன் சென்றனர். கோட்டை வாயிலில் நடந்த கைகலப்பில் சுந்தரலிங்கம் ஆங்கிலத் தளபதி கிளார்க்கைக் வெட்டிக் கொன்றதாகக் கூறப்படுகிறது. கட்டபொம்மன் தப்பிச் செல்ல சுந்தரலிங்கமும் ஊமைத்துரையும் பேருதவி செய்தனர். 1799 செப்டம்பர் 5 ஆம் தேதி பாஞ்சாலங்குறிச்சி கோட்டை ஆங்கிலேயரால் முற்றுகையிடப்பட்டபோது சுந்தரலிங்கம் துணைத் தளபதிகளுடன் எதிரிப் படையினரை எதிர்கொண்டு பலத்த சேதத்தை விளைவித்தார். கட்டபொம்மனும், ஊமைத்துரையும் கோட்டையை விட்டு வெளியேற சுந்தரலிங்கம் உதவி செய்தார். அவர்களைத் தொடர்ந்து சுந்தரலிங்கமும் தலைமறைவானார்.

குறிப்பு

ஊமைத்துரைக்கு உறுதுணை

கட்டபொம்மனுக்குப் பிறகு ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திய ஊமைத்துரைக்குத் தோன்றாத் துணையாக இருந்தார் சுந்தரலிங்கம். கோல்வார்பட்டிச் சண்டையின் போது (1799 செப்டம்பர் 9) தலைமறைவான சுந்தரலிங்கம் சுவர்னகிரி, பசுவந்தானை, பட்டணமருதூர் முதலான இடங்களுக்குச் சென்று இளைஞர்களைத் திரட்டி, போர்ப் பயிற்சி கொடுத்தார் சிறு படையை உருவாக்கினார். அப்படையைக் கொண்டு பாளையங்கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த ஊமைத்துரையை விடுவித்தார் (1801 ஜனவரி 2). பாளையங்கோட்டையிலிருந்து பாஞ்சாலங்குறிச்சி திரும்பிய சுந்தரலிங்கமும் ஊமைத்துரையும் சிதைந்து போன கோட்டையை விரைந்து கட்டினர். இருவரும் இணைந்து ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கூட்டமைப்பைப் புதுப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். பாஞ்சாலங்கோட்டை ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்ட பின்னர் சுந்தரலிங்கம் ஊமைத்துரையுடன் தப்பிச் சென்று மருது சகோதரர்களுடன் இணைந்து ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடினர். அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தமைக்காக ஆங்கிலேயர் சிவகங்கை மீது படையெடுத்து, மருது சகோதரர்களைக் கைது செய்து தூக்கிலிட்டனர். அதேபோன்று, சுந்தரலிங்கமும், ஊமைத்துரையும் விருப்பாட்சியில் கைது செய்யப்பட்டு பாஞ்சாலங்குறிச்சி பீரங்கிமேட்டில் ஒரே நாளில் ஒரே இடத்தில் தூக்கிலிடப்பட்டனர் (1801 நவம்பர் 16). சுந்தரலிங்கமும் ஊமைத்துரையும் ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிராக ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளைப் போன்று இணை பிரியாதிருந்து இறுதிவரை போராடிய சயாமிய இரட்டையர்கள் (ளுயைஅநளந வுறளெ).

12.9.6. மாமன்னர் மருதுபாண்டியன்

மருதுபாண்டியன் 1748 டிசம்பர் 15 ஆம் தேதி மூக்கைய பழனியப்பனுக்கும் பொன்னாத்தாளுக்கும் சிவகங்கையில் அருப்புக்கோட்டைக்கு அருகே உள்ள நரிக்குடி என்ற கிராமத்தில் பிறந்தார். அவரது இளவல் சின்னமருது 1753 இல் பிறந்தார். உடையார் சேர்வை இராமநாதபுரம் மன்னரின் இராணுவத்தின் தளபதியாக இருந்த போது அவரது குடும்பத்தை நரிக்குடியிலிருந்து விருதுநகருக்கு மாற்றினார்.

மருது சகோதரர்கள்

மருது சகோதரர்கள் என்று அழைக்கப்பட்ட பெரிய மருதுவும், சின்ன மருதுவும் சூரன் கோட்டையின் போர்க் கலையில் பயிற்சி பெற்றனர். இருவரும் வலாரி (Boomerang) எறிவதில் அசகாய சூரர்கள் அதை ஆற்றல்மிக்கப் போர்க் கருவியாகப் பயன்படுத்தினர். இராமநாதபுரம் மன்னர் முத்து விஜய ரகுநாத சேதுபதி இவர்களுக்குப்

குறிப்பு

பாண்டியர்கள்“ என்று பெயர் சூட்டிப் பெருமைப்படுத்தினார். சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதர் மருது சகோதரர்களின் வீரதீரச் செயல்களைப் பற்றிக் கேள்விப்பட்டு இச்சகோதரர்களைக் கேட்டுப் பெற்று தனது இராணுவத்தில் தளபதிகளாகச் சேர்த்துக் கொண்டார். பெரிய மருதுவும், சின்ன மருதுவும் இணை பிரியா இரட்டையர்களாக இருந்து ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடினர். 1772 இல் ஆங்கிலத் தளபதி பான் ஜோர் (Lt.Col.Bon Jour) காளையார் கோயிலைத் தாக்கிய போது சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதர் உயிரிழந்தார். அந்த நெருக்கடியான நேரத்தில் மருது சகோதரர்கள் இராணி வேலுநாச்சியாரைப் பாதுகாப்புடன் மைசூர் சுல்தான் ஐதர் அலியின் கட்டுப்பாட்டில் இருந்த திண்டுக்கல்லுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவர்கள் மைசூர் சுல்தானின் பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் இருந்தனர்.

கள்ளர்குடி வெற்றி

வேலுநாச்சியார் ஆர்க்காடு நவாபின் ஆதரவோடு சிவகங்கை அரசியானார். அதற்குக் கைமாறாக எட்டு ஆண்டு காலமாகக் கட்டப்படாமல் இருந்த கப்பத்தைக் கட்ட வேண்டும் என்று நிபந்தனை விதித்தார். அரசி அந்த நிபந்தனையை நிராகரித்தார். மருது பாண்டியர்கள் நவாபுக்குச் சொந்தமான பகுதிகளைச் சூறையாடினர். எனவே, ஆற்காடு நவாபு ஆங்கிலேயரின் இராணுவ உதவியோடு கள்ளர்குடியைத் தாக்கினார். மருது பாண்டியர்கள் அத்தாக்குதலை முறியடித்தனர். கள்ளர்குடி வெற்றி அவர்களது இராணுவத் தலைமையைப் பறைசாற்றியது.

கட்டபொம்மனும் மருது பாண்டியர்களும்

மருது பாண்டியர்கள் பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மனோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அவருடைய ஆலோசனையைப் பெற்று வந்தனர். கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட பின்னர் (1799 அக்டோபர் 9) மருது சகோதரர்கள் ஊமைத்துரை சகோதரர்களுக்கு அடைக்கலம் கொடுத்து ஆதரித்தனர். அடைக்கலமடைந்த அவர்களை ஒப்படைக்க மறுத்ததால் ஆங்கிலேயர் சிவகங்கையைத் தாக்கினர் (1801). மருது பாண்டியர்கள் அத்தாக்குதலை முறியடித்து ஆங்கிலேயருக்குச் சொந்தமான மூன்று மாவட்டங்களைக் கைப்பற்றினர்.

காளையார்கோயில் போர்

மருது பாண்டியர்கள் ஆங்கிலேயர் ஆதிக்கத்தைத் தீவிரமாக எதிர்த்து வந்தனர். இந்த எதிர்ப்புக்கு இராமநாதபுரம், தஞ்சை, மதுரைப் பகுதித் தலைவர்கள் ஆதரவளித்தனர். நான்காம் மைசூர் போரின் போது (1799) மருது பாண்டியன் ஆதரவாளர்கள் ஆங்கிலேயரின் காவல் நிலையங்களைத் தாக்கி ஆயுதங்களைக் கைப்பற்றினர். ஆங்கிலேயரை எதிர்க்கத் துணிந்த அனைவரையும் ஊக்குவித்து ஓரணியில் கொண்டு வந்தனர். 1801 ஜூன் மாதம் வரலாற்று முக்கியத்துவமிக்க சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டார். மருது பாண்டியனின் ஆங்கிலேயர் ஆதிக்க

குறிப்பு

எதிர்ப்பை முடிவுக்குக் கொண்டு வரத் தீர்மானித்த கம்பெனி வலிமைமிக்க படையை அனுப்பி சிறுவயலைத் தாக்கி (ஜூலை 30), காளையார்கோயிலைக் கைப்பற்றினர் (அக்டோபர்). ஆங்கிலேயரின் பிடியிலிருந்து தப்பிய மருது பாண்டியர்கள் சிங்கம்புணரி காடுகளுக்குத் தப்பிச் சென்றனர். அவர்களைத் துரத்திச் சென்ற எதிரிப் படையினர் சோழபுரத்தில் கைது செய்தனர் (அக்டோபர் 19). 1801 அக்டோபர் 24 ஆம் தேதி மருது பாண்டியர்கள் திருப்பத்தூர் கோட்டையில் தூக்கிலிடப்பட்டனர். மருது பாண்டியர்கள் பிறவிப் போராளிகள். அவர்களது ஆங்கிலேய ஆதிக்க எதிர்ப்பு இயல்பானது, தீர்க்கமானது. இவர்கள் ஆங்கிலேயருக்கு எதிரான பாளையக்காரர் கிளர்ச்சியை மக்கள் விடுதலை இயக்கமாக மாற்றினர். மருது பாண்டியனின் சுதந்திரப் பிரகடனம் சாதி, மத, நிற, இன, பிராந்திய வேறுபாடின்றி மக்கள் சார்பாக ஆங்கியேலர் ஆதிக்கத்துக்கு எதிராக விடப்பட்ட அறைகூவலாகும். மருது பாண்டியர்களின் விடுதலை உணர்வும், வீரமும், நாட்டுப் பற்றும் பாளைய எல்லை கடந்தவை தன்னலமற்றவை அப்பழுக்கற்றவை. 1813 இல் ஜே.கோர்லே என்ற ஆங்கில ஆராய்ச்சியாளர் மருது பாண்டியர் பற்றி எழுதிய நூலில் (Maradu An Indian Story of the Beginning of the Nineteenth Century) மருது பாண்டியர்களின் போர்ப் பிரகடனம் கி.பி.85 ஆம் ஆண்டில் ரோமானிய ஆதிக்கத்தை எதிர்த்து நிகழ்த்திய பிரிட்டானிய தளபதி கால்காகஸ் (Calgacus) பேருரைக்கு இணையானது என்று குறிப்பிட்டுள்ளார். சுருங்கக்கூறின், மருது பாண்டியர்கள் முன்னின்று நடத்திய போராட்டம் அதன்பின் வந்த போராட்டங்களுக்கு முன்னோடியாக அமைந்தது எனில் மிகையாகாது. மக்கள் நாயகனாகத் திகழ்ந்த மருது பாண்டியன் ஆங்கிலேயப் புயலுக்கு முன் ஏற்றி வைத்த அகல் விளக்கு போன்றது என்று குறிப்பிட்டுள்ளார் தமிழ் நாட்டு வரலாற்று ஆசிரியர் அ.இராமசாமி. 1800-1801 ஆம் ஆண்டில் மாமன்னர் மருது பாண்டியர்கள் தலைமையிலும், வழிகாட்டுதலிலும் உருவான போராட்டங்கள் ஆங்கிலேயருக்கு எதிரான ஆயுதம் ஏந்திய மக்கள் புரட்சி என்று கருதுகிறார் பொன்.முத்துராமலிங்கம். மருது பாண்டியர்களின் தலைமையில் நடைபெற்ற தென்னிந்திய கிளர்ச்சி இந்திய விடுதலைப் போராட்டப் பயணத்தின் தனித்தன்மை வாய்ந்த மாமுயற்சியின் துவக்கமாகும் என்று குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் கே.ராஜய்யன்.

மதிப்பீடு

ஆங்கிலேயர் கம்பெனி நாயக்கர்களின் ஆதரவோடும், நவாபுகளின் இயலாமையாலும் தமிழ் நாட்டில் காலூன்றி, வேர் விட்டு வளர்ந்தது வளர்க்கப்பட்டது. வர்த்தகம் செய்ய வந்த வியாபாரிகள் ஆட்சியாளர் ஆயினர். அவர்கள் தங்களது பலமிக்க கடற்படையாலும், தரைப்படையாலும், நவீன அறிவியல் ரீதியான அணுகுமுறையாலும், நிர்வாகக் கட்டுப்பாட்டாலும், தமிழ் நாட்டு ஆட்சியாளர்களோடு கூட்டு சேர்ந்து படிப்படியாகத் தங்களது அதிகார ஆதிக்க எல்லையை விரிவுபடுத்தினர். குரங்கு தன் குட்டியின் வாலைவிட்டு வெள்ளத்தின்

குறிப்பு

ஆழத்தை அறிந்து கொள்வதைப் போன்று ஆங்கிலேயர் நவாபுகளைக் கொண்டு தமிழ் நாட்டு அரசியல் ஆழத்தைக் கணக்கிட்டு ஆட்சியைப் பிடித்தனர். இதற்காக அவர்கள் பாளையக்காரர் கிளர்ச்சிகளை முறியடிக்க வேண்டியதாயிற்று. அரசாங்க அதிகாரப் பிரயோகம் அத்துமீறப்படும் போது பாதிக்கப் படுவோர் கிளர்ந்தெழுவர். அதைத் தான் பாளையக்காரர்கள் செய்தனர். ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடினர். அவர்களது ஆங்கில எதிர்ப்புப் போராட்டம் பின் வந்த இந்திய விடுதலைப் போராளிகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தது. தமிழ்நாடு இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தோற்றுவாய் என்றால் மிகையாகாது.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

6. வீரபாண்டிய கட்டபொம்மன் எந்த வயதில் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்துக்கு ஆட்சிப் பொறுப்பேற்றார்?
7. ஓடநிலா என்ற அரண்மனையை கட்டியது யார்?

12.10. தென்னிந்தியக் கிளர்ச்சி, 1800-1801

ஆர்க்காடு நவாபு முகமது அலி ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியின் ஆதரவோடு மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் தனது அதிகார ஆதிக்கத்தை விரிவுபடுத்த முற்பட்ட போது பாளையக்காரர்கள் கிளர்ச்சி செய்தனர். நெல்கட்டும்செவலை நெல்கட்டான் செவலாக்கிய பூலித்தேவன் (1715-1767) மேற்குப் பாளையக்காரர்களை ஊக்குவித்து, ஒருங்கிணைத்து, போராட்டக் கூட்டமைப்புக் குடையின் கீழ்க் கொண்டு வந்து நவாப்-ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து உயிர்த்தியாகம் செய்தார். 18 ஆம் நூற்றாண்டுத் துவக்கத்தில் பாளைய சுதந்திரத்துக்காகப் போராடிய முதல் தமிழ்ப் போராளி பூலித்தேவன் ஆவார். பூலித்தேவனுக்குப் பின் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர் வீரபாண்டிய கட்டபொம்மன் (1760-1799) கிழக்குப் பாளையக்காரர்களை உற்சாகப்படுத்தி, ஒன்று சேர்த்து, ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கூட்டணி அமைத்துப் போராடியதால் தூக்கிலிடப் பட்டார். பூலித்தேவனும், கட்டபொம்மனும் நவாப்-ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்த முதல் போராட்டக்காரர்கள் ஆவர். இவர்களது கிளர்ச்சிகளை இந்திய விடுதலைப் போராட்டத்தின் முதல் கட்ட கன்னி முயற்சி எனலாம்.

அடுத்தகட்ட முயற்சி

வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட பின்னர் (1799) அவரது வலக்கரப் போராளியான ஊமைத்துரை ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தை முன்கொண்டு சென்றார். திருநெல்வேலியில் மூட்டப்பட்ட பாளைய சுதந்திரப் போராட்ட நெருப்பு காட்டுத்தீ போன்று

குறிப்பு

மதுரைக்கும், சிவகங்கைக்கும் பரவியது. சிவகங்கை மருது சகோதரர்களான வெள்ளை மருதுவும், சின்ன மருதுவும் ஊமைத்துரையைத் தங்களுடன் இணைத்துக் கொண்டு ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கிளர்ச்சியை தென்னிந்திய அளவுக்கு விரிவுபடுத்தினர். தமிழ் நாட்டைக் களமாகக் கொண்டு அவர்கள் ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சியை அகல் விரிவாக்கினர். காளையார்கோயிலை மையமாகக் கொண்டு இப்போராளிகள் மருது பாண்டியர்களின் தலைமையில் இராமநாதபுரம், திண்டுக்கல், மலபார்-கோயமுத்தூர் பிராந்தியக் கூட்டமைப்புகளை (சுநபழையெட டுநயபரநள) உருவாக்கி, அவைகளை ஒன்று சேர்த்து தென்னிந்திய கூட்டிணைப்பாக (நளைரெடயச ஊழகெநனநசயஉல) விரிவுபடுத்தி, தெளிவான குறிக்கோளுடன், திட்டமிட்டு ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிரான பரவலான வன்முறைக் கிளர்ச்சியைத் துவக்கினர். 1799-லிருந்து 1801 வரை நீடித்த இக்கிளர்ச்சியைப் பற்றி ஆழ்ந்து ஆராய்ச்சி செய்த பேராசிரியர் கே.இராஜய்யன் இப்போராட்டம் இந்திய ஆட்சியாளர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு அடிபணிவதற்கு எதிரானது என்றும், பிரிட்டிஷ் மேலாதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்ட தீர்மானமான பரவலான வன்முறைக் கிளர்ச்சி என்றும் குறிப்பிட்டுள்ளார். தென்னிந்திய கிளர்ச்சியே முதல் இந்திய விடுதலைப் போராட்டம் என்று ஆவண ஆதாரங்களுடன் நிலைநாட்டியுள்ளார்.

12.10.1.கிளர்ச்சிக்கான காரணங்கள்

அரசியல் காரணங்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே துவக்கப்பட்டதே தென்னிந்தியக் கிளர்ச்சியாகும். முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் தென்னிந்தியா குழப்பத்துக்கும், கொந்தளிப்புக்கும் உள்ளாயிற்று. எனினும், அரசர்களும், பாளையக்காரர்களும் கிராமக் குடியாட்சி முறையும் அரசியல் கட்டுக்கோப்பும் குலையாது சமநிலையைப் பாதுகாத்தனர். அந்த அமைப்பு முறை ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு இலக்கான போது எதிர்ப்பு ஏற்பட்டது. ஆற்காட்டு நவாப் சந்தா சாகேப், தஞ்சாவூர் பிரதாப் சிங், மதுரை கான்சாகிப் ஆகியோர் கம்பெனி ஆதிக்கத்துக்கு அடிபணிந்தனர். மைசூர் மன்னர்களான ஹைதர் அலியும், திப்பு சுல்தானும் அவ்வாதிக்கத்தை எதிர்த்து மடிந்தனர். கம்பெனியோடு உடன்படிக்கை செய்து கொண்ட மன்னர்கள் ஆங்கிலேய நிர்வாகத்தின் கருவிகளாக இருந்து கொண்டு மக்களைச் சுரண்டினர், கொடுமைப்படுத்தினர். அரசர்கள் கம்பெனிக்கு அடங்கி மக்களை அடக்கியமையால் மக்களிடையே மனக்கசப்பு வளரலாயிற்று.

அரசர்களை அடக்கியது போன்று கம்பெனியால் பாளையக்காரர்களை அடிபணிய வைக்க முடியவில்லை. கர்நாடகத்திலும், மலபாரிலும், தமிழகத்திலும் கம்பெனி பல்வேறு உத்திகளைக் கையாண்டு பலவீனப்படுத்திற்று. எனினும், உறுதியான பாளையக்காரர்கள் ஒன்று சேர்ந்து கம்பெனி ஆட்சியை எதிர்க்கத்

குறிப்பு

துணிந்தனர். கிராமங்களின் கேடயமாக இருந்த அவர்கள் தங்களது பாரம்பரிய உரிமைகளும் சலுகைகளும் பறிபோவதைக் கொஞ்சமும் விரும்பவில்லை. வழிவழியாக இருந்து வந்த கிராமப் பணிகளைக் கம்பெனி நிர்வாகம் மேற்கொண்டதால் கிராமக் குடியாட்சி முறை நிலை குலைந்தது. கிராம மக்கள் பாளையங்களிலும் பணியாற்ற முடியவில்லை. கிராம நிர்வாகத்திலும் பங்கேற்க இயலவில்லை. பரம்பரைப் பழக்கவழக்கங்களைப் புனிதமாகக் கருதிய கிராம மக்கள் கம்பெனி கொண்டு வந்த மாற்றங்களால் ஏமாற்றமடைந்தனர். அரசியல், உரிமைப் பறிப்பையும், சுயாட்சி இழப்பையும் மக்கள் தலைவர்கள் எதிர்த்தனர். பிரான்சிலிருந்து மைசூருக்கு வந்த புரட்சியாளர்கள் தென்னிந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்று ஆங்கிலேயருக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தார்கள். இவற்றின் கூட்டு விளைவாகத் தென்னிந்தியாவில் கிளர்ச்சி ஏற்படுவதற்கான அரசியல் சூழ்நிலை உருவாயிற்று.

பொருளாதாரக் காரணங்கள்

அரசியல் அடக்குமுறையைப் போன்றே பொருளாதாரச் சுரண்டலும் தென்னிந்தியக் கிளர்ச்சிக்குக் காரணமாயிற்று. மக்கள் நலனைப் பேணுவதைவிடக் கம்பெனி தனது வருவாயைப் பெருக்குவதிலேயே குறியாக இருந்தது. வரிகளை வரம்பின்றி உயர்த்தியது. உதாரணமாக, திண்டுக்கல்லில் திப்புசுல்தான் வசூலித்ததற்கு மேலாக இருபத்தி ஐந்து விழுக்காட்டுக்கு அதிகமாக வரி வசூலிக்கப்பட்டது. கன்னடப் பகுதி, சூன்டா, சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் தொண்ணூறு விழுக்காட்டுக்கு அதிகமாக வரி வசூல் செய்யப்பட்டது. தன்னிச்சைப்படி உயர்த்தப்பட்ட வரிகளால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அதுமட்டுமல்ல, அவர்கள் அனுபவித்த வந்த பல சலுகைகள் பறிக்கப்பட்டன. விவசாய நிலங்களுக்கு விதிக்கப்பட்ட தீர்வை மிகவும் அதிகமாக இருந்தது. பல நேரங்களில் விளைச்சலைவிடத் தீர்வையே அதிகமாக இருந்தது. இவற்றை எதிர்த்தோர் நிலங்களிலிந்து வெளியேற்றப்பட்டனர். பலர் வரியைக் கட்ட முடியாது தங்களது நிலங்களை விற்றுவிட்டுக் கிராமங்களை விட்டே வெளியேறினர். வரிகள் கடுமையாகவும், கொடுமையாகவும் வசூலிக்கப்பட்டன. இடைத்தரகர்களும் வருவாய்த்துறை ஊழியர்களும் மக்களைக் கசக்கிப் பிழிந்து வரி வசூலித்தனர். நிலத் தீர்வையை நிர்ணயிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் விசாரணைகளும் மக்களிடையே அச்சத்தை அதிகரிக்கவே செய்தன. அரசர்கள் கம்பெனிக்குச் செலுத்த வேண்டிய தொகையையும் மக்களிடமிருந்தே வசூலித்தனர். அவ்வசூலுக்காக நியமிக்கப்பட்டவர்கள் கொடுத்த நிர்பந்தங்களும் மக்களைத் துன்புறுத்தின. அரசர்கள் ஆங்கிலேயரிடமிருந்து அதிக வட்டிக்குக் கடன்கள் வாங்கினர். தங்களுக்குச் சேர வேண்டிய நில வரியை வசூலித்து கடனுக்குப் பதில் செலுத்தும் பொறுப்பைக் காரியக்காரர்களிடம் (Assignees) ஒப்படைத்தனர். அவர்கள் கம்பெனி ஊழியர்களுக்கு மேலாகத்

குறிப்பு

தங்களைக் கருதிக் கொண்டு மக்களிடமிருந்து நிலுவைகளை ஈவிரக்கமின்றி வசூலித்தனர்.

அடிக்கடி கம்பெனி மேற்கொண்ட போர்களாலும், இராணுவ நடவடிக்கையாலும் வர்த்தகமும் தொழிலும் பெரிதும் பாதிக்கப்பட்டன. கம்பெனியின் கப்பல்களின் போட்டிக்கு முன் நாட்டுப் படகுகளால் ஈடுகொடுக்க முடியவில்லை. கம்பெனியின் வர்த்தகப் போட்டி, கம்பெனி ஊழியர்களின் சொந்த வியாபாரம், இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் ஆகியவை தென்னிந்தியாவின் கிராமக் குடிசைக் கைத்தொழில்களை நசித்து விட்டன. அதனால் பல்லாயிரக்கணக்கான கைவினைஞர்கள் வேலை இழந்தனர். 1798-ல் ஏற்பட்ட கடுமையான பஞ்சத்தைப் பயன்படுத்திக் கொண்டு கம்பெனிக் காரியக்காரர்களும் நிர்வாகிகளும் உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்துக் கொண்டு, அவைகளின் விலையை பன்மடங்கு உயர்த்தி விற்றுக் கொள்ளை இலாபம் பெற்றனர். இவற்றால் மனம் நொந்து போன மக்கள் தங்களுடைய வெறுப்பை வெளிப்படுத்துவதற்கான தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்தனர்.

மருது பாண்டியன் கூறிய காரணம்

சிவகங்கை மருது பாண்டியன் தென்னிந்தியாவின் தாழ்ச்சிக்குரிய காரணத்தை அறிவுப்பூர்வமாக ஆய்ந்தறிந்து கூறினார். அவரின் ஆய்வின்படி அரசர்களின் அரசியல் சாதுர்யமற்ற கொள்கை, குழு கோஷ்டி மனப்பான்மை, ஆங்கிலேயரின் வஞ்சகத்தன்மை, மக்களின் ஒரு பகுதியினரின் அந்நிய அதிகாரத்துக்கு அடிபணியும் வழக்கமான போக்கு ஆகியவையே தென்னிந்தியரின் அரசியல் பலவீனத்துக்கான காரணங்களாகும். அரசர்கள் ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்து கொண்டு தன்மானக் குறைவான தாழ்ந்த நிலையை அடைந்ததை அவர் வன்மையாகக் கண்டித்தார். தென்னிந்தியர்களிடையே உள்ள ஒற்றுமையின்மையை ஆங்கிலேயர்களுக்கிடையே இருந்த ஒற்றுமையோடு ஒப்பிட்டுக் காட்டினார். ஹைதராபாத்தில் நாஸிர் ஜங்கும், முஸபர் ஜங்கும், கர்நாடகத்தில் சந்தா சாகிப்பும், முகமது அலியும், தஞ்சாவூரில் பிரதாப் சிங்கும், சரபோஜியும், பரஸ்பர பொறாமையால் மோதிக் கொண்டதைக் கோடிட்டுக் காட்டினார் மருதுபாண்டியர். ஆங்கிலேயரின் ஆணைகளைச் சிரமேற்கொண்டு நிறைவேற்றி அவர்களின் ஆட்சியை உரமிட்டு வளர்த்த மக்களின் ஒரு பிரிவினரின் போக்கு கண்டு அவர் கவலையுற்றார். தற்கொலைக்கொப்பான அந்நிலை நீடித்தால் இந்தியா முழுவதும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின் கீழ் வந்து விடும் என்று அவர் எச்சரித்தார். தமிழ் நாட்டுக்கு ஒரு வால்டேர், ஒரு ரூஸோ, ஒரு மண்டேஸ்கு இல்லாத குறையைத் தீர்த்து வைத்தவர் மருது பாண்டியர் என்றால் மிகையாகாது.

பிராந்தியக் கூட்டமைப்புகள் (Regional Leagues)

ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியின் விளைவாக தென்னிந்தியாவில் அரசியல் அடக்குமுறை, பொருளாதாரச் சுரண்டல்,

குறிப்பு

நிர்வாகக் கெடுபிடி போன்றவை அதிகரிக்கலாயிற்று. மக்கள் சொல்லொணா இன்னல்களுக்கு ஆட்பட்டனர். எதிர்ப்புணர்ச்சியே கிளர்ச்சிக்கு ஆணிவேர். ஆனால் வடிவமற்ற எதிர்ப்புணர்ச்சி வீண் முயற்சியாகும். எனவே, மக்களின் எதிர்ப்புணர்ச்சிக்குப் பாதிக்கப்பட்ட பாளையக்காரர்களும் மக்கள் தலைவர்களும் உரிய வடிவம் கொடுத்தனர். அவ்வடிவம் முதலில் பிராந்தியக் கூட்டமைப்புகளாக உருவெடுத்தது. 1795-லிருந்து 1799 வரை இராமநாதபுரம், திருநெல்வேலி, திண்டுக்கல், மலபார்-கோயமுத்தூர் ஆகிய நான்கு பிராந்திய கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

இராமநாதபுரம் கூட்டமைப்பு

இக்கூட்டமைப்பின் கர்த்தா சிவகங்கை வெள்ளை மருதுபாண்டியன் ஆவார். இவரது இளவல் சின்னமருது. மருது சகோதரர்கள் சிவகங்கை மன்னரான முத்து வடுகநாதத் தேவரிடம் சாதாரண ஊழியர்களாகத் தங்களது பணியைத் துவக்கினர். தங்களது பயன் கருதாப் பணியாலும், நேர்மைத் திறத்தாலும், எஜமான் பக்தி விசுவாசத்தாலும், கடுமையான உழைப்பாலும் உயர்ந்தனர். அமைச்சர்களாயினர். அரசரின் மறைவுக்குப் பிறகு அரச குடும்பத்தைக் காத்த பெருமை இவர்களுக்குண்டு. சிவகங்கைக்கு அடுக்கடுக்காக வந்த சோதனைகளைச் சமாளித்தனர். ஆங்கிலேய ஆட்சியை அகற்றப் பிற பாளையக்காரர்களோடு கூட்டு சேர வேண்டிய இன்றியமையாமையை உணர்ந்தவர் மருதுபாண்டியன். மக்கள் ஒன்று சேர்ந்து அந்நிய ஆட்சிக்கெதிராகப் போரிட வேண்டுமென்றார் அவர். பக்கத்துப் பாளையங்களுக்கு உளவாளிகளை அனுப்பித் தன்முயற்சிக்கு ஆதரவு தேடினார் மருதுபாண்டியன். இராமநாதபுரத்தின் பிரமுகர்களான மேலப்பன், சிங்கம் செட்டி, முத்து கருப்பதேவர் ஆகியோர் மருதுபாண்டியனின் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தனர். தஞ்சாவூர் ஞானமுத்துவும் சிவகிரி மாப்பிள்ளை வன்னியனும் மதுரைக் கள்ளர்களும் மருது பாண்டியன் அமைத்த இராமநாதபுரம் கூட்டமைப்புக்கு ஆதரவளித்தனர். மருது பாண்டியனது தலைமையில் இக்கூட்டமைப்பு செயல்பட்டது.

திருநெல்வேலி கூட்டமைப்பு

மருது பாண்டியனால் ஊக்குவிக்கப்பட்டு நாகலாபுரம், மன்னர்கோட்டை, போவாலி, கோலார்பட்டி, சென்னால்குடி பாளையக்காரர்கள் சேர்ந்து உருவாக்கியது தான் திருநெல்வேலிக் கூட்டமைப்பு. இக்கூட்டமைப்பில் சேர்ந்து அதற்கு புதுப் பொலிவையும் வலிவையும் கொடுத்தார் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரரான வீரபாண்டிய கட்டபொம்மன். மருது பாண்டியனால் கவரப்பட்டு, அவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டு, அவரையே முன்மாதிரியாகக் கொண்டு செயல்பட்டார் கட்டபொம்மன். அவர் சாப்டூர், ஏழாயிரம்பண்ணை, காடல்குடி, குளத்தூர் பாளையக்காரர்களையும் கூட்டு சேர்த்துக் கொண்டு திருநெல்வேலிக் கூட்டமைப்பைப் பலப்படுத்தினார். செவத்தையா, வீரபாண்டிய நாயக்கர், வீரபத்திரபிள்ளை ஆகியோரை அனுப்பி மதுரைக் கள்ளர்களின் ஆதரவையும் பெற்றார் அந்த பாஞ்சாலங்குறிச்சிப்

குறிப்பு

பாளையக்காரர். திருநெல்வேலி கூட்டமைப்புக்கு அவரே தலைமையேற்றார். ஆனால் தென்னிந்தியக் கிளர்ச்சியில் பங்கேற்கும் பேறு அவருக்குக் கிட்டவில்லை. கிளர்ச்சி துவங்குவதற்கு ஓராண்டுக்கு முன்னரே கட்டபொம்மன் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டார்.

திண்டுக்கல் கூட்டமைப்பு

திண்டுக்கல் கூட்டமைப்பை உருவாக்கியவர் கோபால நாயக்கர் ஆவார். விருப்பாட்சிப் பாளையக்காரரான கோபால நாயக்கர் சிறந்த இராஜதந்திரி. போர்க்களங்கள் பல கண்டவர். திறமையான அமைப்பாளர். அந்நிய அடக்குமுறை ஆதிக்கத்திடமிருந்து விடுபட எண்ணியோருக்கு அவரது தலைமை கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தது. திண்டுக்கல், மணப்பாறை, கள்ளர்நாடு, கோயமுத்தூர், சேலம் ஆகிய இடங்களுக்குத் தனது தூதுவர்களை அனுப்பி ஆதரவு தேடினார் கோபால நாயக்கர். மணப்பாறை இலட்சுமி நாயக்கர், டில்லி (Delhi) யாதுல் நாயக்கர் ஆகியோரோடு நெருங்கிய அரசியல் தொடர்பு கொண்டிருந்தார் அவர். யாதுல் நாயக்கர் மூலம் மங்களம் பாளையக்காரரின் ஆதரவைப் பெற்றார் கோபால நாயக்கர். பிற பாளையக்காரர்களும் கோபால நாயக்கரின் முயற்சிக்கு ஊக்கமளித்தனர். இராமநாதபுரம், திருநெல்வேலி, திண்டுக்கல் கூட்டமைப்புகள் கூடும் கேந்திரமாகக் கள்ளர்நாடு திகழ்ந்தது.

மலபார்-கோயமுத்தூர் கூட்டமைப்பு

இந்த அமைப்பு ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவர் கேரளவர்மா ஆவார். மக்கள் செல்வாக்கு மிகப் பெற்றவர் இவர். பிற கூட்டமைப்புகள் உருவாகிக் கொண்டிருக்கையில் கம்பெனிப் படையோடு கடுமையாகப் போராடிக் கொண்டிருந்தவர் கேரள வர்மா. விவசாயிகளின் பக்கபலம் அவருக்கு எப்போதும் இருந்தது. கேரள வர்மா பிற பாளையக்காரர்களுக்கு அனுப்பிய ஓலைச் சுவடி கடிதங்கள் நல்ல பலனளித்தன் அவர்களின் ஆதரவு கிடைத்தது. வைநாடு, கோட்டயாட்டு, குரும்பரநாடு, பரப்பநாடு ஆகியவற்றின் தலைவர்களும், இருவி நாட்டு நம்பூதிரிகளும், சமோரின் குடும்பத்தினரும், மலபார் மாப்பிள்ளைகளும் கேரள வர்மாவை ஆதரித்தனர். ஆங்கிலேயர்களின் நோக்கும் போக்கும் பிடிக்காத கோயமுத்தூர் கவுண்டர்களும் மலபார் கிளர்ச்சிக்காரர்களோடு சேர்ந்து கொண்டனர். மலபார், திண்டுக்கல் கூட்டமைப்புகள் கூடும் மையமாக விளங்கியது கோயமுத்தூர்.

தென்னிந்திய கூட்டமைப்பு (Peninsular Confederacy)

பிராந்தியக் கூட்டமைப்புகள் காலத்தின் கட்டாயத்தால் தன்னிச்சையாகத் தோன்றியவையாகும். இவ்வமைப்புகளின் இணைப்புப் பாலமாக விளங்கியவர் மருதுபாண்டியன். நான்கு கூட்டமைப்புகளுக்கும் பொதுவான குறிக்கோள் இருந்தது. இவை தென்னிந்தியாவின் பரந்த நிலப்பகுதியில் செயல்பட்டன. அதைத் தங்களது செல்வாக்கின் கீழ் வைத்திருந்தன. திண்டுக்கல் மலபார் கூட்டமைப்புகள் மைசூர் திப்பு சுல்தானுடன் உடன்பாடு கொண்டிருந்தன. ஆனால் 1799-ல் திப்பு

குறிப்பு

சுல்தான் வீழ்ச்சிக்குப் பின்னர் பிராந்திய கூட்டமைப்புகள் பலமிழந்தன. கேரளவர்மா கிளர்ச்சிப் பாதையினின்றும் விலகிக் கொண்டதால் மலபார் கோயமுத்தூர் கூட்டமைப்பு வலுவிழந்தது. கட்டபொம்மன் கொல்லப்பட்டதால் திருநெல்வேலி கூட்டமைப்பு முன்னரேயே பலமிழந்திருந்தது. அத்தகைய நெருக்கடியான நேரத்தில் மருது பாண்டியன் முனைப்புடன் முன்வந்து சீர்குலைந்து போய்க் கொண்டிருந்த கூட்டமைப்பு முறையைக் காப்பாற்றினார். காப்பாற்றியது மட்டுமல்ல, அதை இன்னும் விரிவுபடுத்தித் தென்னிந்திய கூட்டிணைப்பாக மாற்றினார். கன்னட-மராத்தியப் பகுதித் தலைவரான தூண்டாஜி வாக்கோடு (னுழழனெயதை றுயரப) கூட்டுச் சேர்ந்து அக்கூட்டிணைப்பை உருவாக்கினார் மருதுபாண்டியன். வேலூர் கோட்டையில் சிறைபட்டிருந்த திப்பு சுல்தானின் மூத்த மகன் பட்டே ஹைதர் மைசூர் கிளர்ச்சிக்காரர்களுடன் இரகசியத் தொடர்பு கொண்டு அவர்களைத் தென்னிந்தியக் கூட்டிணைப்பில் சேருமாறு ஊக்கப்படுத்தினார். மலபார், கன்னட, பெல் நாட்டு மக்களும் இப்புதிய முயற்சிக்கு ஆதரவளித்தனர். கேரளவர்மா மீண்டும் மலபார் கிளர்ச்சிக்காரர்களின் தலைவரானார். மருது பாண்டியனும், தூண்டாஜி வாக்கும் தென்னிந்திய கூட்டிணைப்பின் முன்னணித் தலைவர்களாகத் திகழ்ந்தனர். கோபால நாயக்கர், கான்-இ-ஜஹான், கேரள வர்மா, கிருஷ்ணப்ப நாயக்கர் ஆகியோர் இரண்டாம் வரிசைத் தலைவர்களாக இருந்தனர். மக்களின் பக்கபலத்தோடு தென்னிந்தியக் கூட்டிணைப்பு ஆங்கிலேய ஆதிக்கத்துக்கெதிராகத் திட்டமிட்டு செயல்படத் துவங்கியது.

12.10.2. கிளர்ச்சியின் போக்கு

ஆங்கிலேயரது ஆட்சியை அகற்றி, நாட்டை அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பதே தென்னிந்தியக் கூட்டிணைப்பின் குறிக்கோளாகும். இக்குறிக்கோளை நிறைவேற்றுவதற்கான திட்டத்தைத் தீட்டும் பொருட்டு கூட்டிணைப்புத் தலைவர்கள் விருப்பாட்சியில் கூடி சதியாலோசனை செய்தனர் (1800 ஏப்ரல்). விரிவான ஆலோசனைக்குப் பின்னர் அவர்கள் மூன்று முக்கிய முடிவுகளை மேற்கொண்டனர்: 1) ஒரே சமயத்தில் பல பகுதிகளில் கிளர்ச்சியைத் துவக்குவது 2) கிளர்ச்சிக்காரர்கள் ஒற்றுமையாக இருந்து போராடுவது 3) ஆங்கிலேயப் படையோடு நேரடியாக மோதாமல், மறைந்திருந்து தாக்கும் கொரில்லா முறையைப் பின்பற்றல். மருது பாண்டியன் மதுரைப் பகுதியிலும், கோபால நாயக்கர் திண்டுக்கல், திருச்சி பகுதியிலும், கான்-இ-ஜஹான் கோயமுத்தூர்-சேலம் பகுதியிலும், கேரளவர்மா மலபார் பகுதியிலும், கிருஷ்ணப்ப நாயக்கர் மேற்கு மைசூர் பகுதியிலும், தூண்டாஜி வாக் கன்னட நாட்டின் வடக்குப் பகுதியிலும் கிளர்ச்சிக்குப் பொறுப்பேற்பது என்று முடிவாயிற்று. கோபால நாயக்கர் தலைமையில் கூடிய இக்கூட்டத்தில் 1800 ஜூன் மாதம் 3 ஆம் தேதி கோயம்புத்தூரைத் தாக்கிக் கைப்பற்றுவதென்றும், இங்கு லெப்டினென்ட் கர்னல் கே.மக்காஸ்லிஸ்டர் தலைமையில் உள்ள குதிரைப் படையை அழித்து

விடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. தெளிவான திட்டம் தீட்டப்பட்டு விட்டது. கிளர்ச்சிக்கான தேதியும், குறிப்பிடப்பட்டு விட்டது.

குறிப்பு

கிளர்ச்சித் துவக்கம்

விருப்பாட்சி சதித் திட்டத்தைப் பற்றி ஏதும் அறியாத கம்பெனிப் படை கிருஷ்ணப்ப நாயக்கரின் கேந்திர மையமான பெல்லம் (Bellum) என்ற இடத்தைக் கைப்பற்ற முயன்றது (1800 மார்ச் 30). பொறுமை இழந்த தூண்டாஜி வாக் தனது படையினரை பெல்லத்துக்கு அனுப்பினார். அதோடு நிற்கவில்லை. அவரே கிளர்ச்சியைத் துவக்கிவிட்டார். அவரோடு அவரது சகாக்களும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். கிளர்ச்சி திட்டமிட்டதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே துவக்கப்பட்டு விட்டது. மே மாதத் துவக்கத்தில் கிளர்ச்சிக்காரர்கள் கோயமுத்தூரை நெருங்கினர். நரசிங்கராவின் தலைமையில் கோயமுத்தூர் வாசிகள் கிளர்ச்சிக்காரர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். அதையறிந்த கோயமுத்தூர் தாசில்தார் இராணுவத்தை உஷார் படுத்தினார். கிளர்ச்சிக்காரர்கள் கோயமுத்தூரைத் தாக்குமுன்பே தாக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்டனர். கிளர்ச்சி துவங்கும் முன்னரே முறியடிக்கப்பட்டுவிட்டது. கிளர்ச்சித் தலைவர்களில் பலர் கொல்லப்பட்டனர். பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். எஞ்சியோர் தப்பிச் சென்றனர்.

தீரர்களின் வீர மரணம்

திட்டமிட்டதற்கு முன்னதாகவே கிளர்ச்சியில் இறங்கிய தூண்டாஜி வாக்கும், திம்ம நாயக்கரும் மைசூர் பகுதிகளில் பல வெற்றிகளைப் பெற்றனர். ஆனால் இராமன் நாயரால் காட்டிக் கொடுக்கப்பட்ட திம்ம நாயக்கர் பிடிபட்டுக் கொல்லப்பட்டார். கொனகல் என்ற இடத்தில் கர்னல் வெல்லெஸ்லியிடம் தோல்வியுற்று வீர மரணமடைந்தார் தூண்டாஜி வாக் (செப்டம்பர் 10). மலபாரில் கேரளவர்மா, கிராமவாசிகள், மாப்பிள்ளைகள் ஆகியோரது துணை கொண்டு ஆங்கிலேயரை ஆட்டிப் படைத்தார். எனினும், அவரது நெருங்கிய நண்பர்களான ஏமன் நாயர், சட்டு நாயர் ஆகியோரால் காட்டிக் கொடுக்கப் பட்டதால் கேரளவர்மாவின் முயற்சி தோல்வியுற்றது. பல கிளர்ச்சிக்காரர்கள் பலியாயினர். தப்பிச் சென்ற கேரள வர்மா கிளர்ச்சிக்காரராகவே இருந்து 1805 நவம்பர் 30 ஆம் நாள் கொல்லப்பட்டார்.

பாஞ்சாலங்குறிச்சிப் போர்கள்

200 கிளர்ச்சிக்காரர்கள் திருச்செந்தூர் செல்லும் பக்தர்கள் போன்று வேடமிட்டுச் சென்று பாளையங்கோட்டையில் சிறைப்பட்டிருந்த செவத்தையா, ஊமைத்துரை உள்ளிட்ட பலரை விடுவித்தனர். அவர்கள் மலைநாடு மலை வழியாகப் பாஞ்சாலங்குறிச்சியை அடைந்தனர். பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை புதிதாகக் கட்டப்பட்டது. மருது பாண்டியன் அனுப்பிய 30,000 கிளர்ச்சிக்காரர்கள் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். மறவர்களும், பரவர்களும், நாடார்களும், தோட்டியான்களும் அவர்களுக்குக் கைகொடுத்தனர். ஊமைத்துரையின் தலைமையில்

குறிப்பு

கிளர்ச்சிக்காரர்கள் செயல்பட்டனர். பாஞ்சாலங்குறிச்சிக்கும் ஸ்ரீவைகுண்டம் ஆழ்வார் திருநகரிக்கும் இடைப்பட்ட பகுதிகளை அவர்கள் ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றினர். வலிமைமிக்க கோமேரிக் கோட்டை கிளர்ச்சிக்காரர்கள் கைவசமாயிற்று. மேலப்பன் பல இடங்களை மீட்டார். சிவகங்கையிலிருந்து வந்த கிளர்ச்சிக்காரர்கள் நெட்டூரில் கம்பெனிப் படையைச் சிதறடித்தனர். எனினும் காலின் மெக்காலேயும் கர்னர் அக்னுவும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை முற்றுகையிட்டனர். இரண்டாவது பாஞ்சாலங்குறிச்சிப் போரில் அக்கோட்டை வீழ்ந்தது. 1050 கிளர்ச்சிக்காரர்கள் உயிரிழந்தனர். பலர் பிடிபட்டுக் கொல்லப்பட்டனர் (1801 மே 24). எஞ்சிய கிளர்ச்சிக்காரர்கள் சிவகங்கைக்கும், இராமநாதபுரத்துக்கும் தப்பிச் சென்றனர். காயமுற்ற ஊமைத்துரை, கிராமத்துக் கிழவி ஒருத்தியால் காப்பாற்றப்பட்டு, மருது பாண்டியனின் ஆதரவுடனும் அரவணைப்புடனும் சிறுவயலில் தங்கினார்.

காளையார் கோவில் கிளர்ச்சி

பாஞ்சாலங்குறிச்சியின் வீழ்ச்சிக்குப் பின்னர் சிவகங்கை காளையார்கோவில் காடு கிளர்ச்சி மையமாயிற்று. திருப்பத்தூர், நட்டம், திரும்வேலூர், மேலூர், வெரப்பூர் ஆகிய இடங்களில் கம்பெனிப் படை கடுந்தாக்குதலுக்கு இலக்காயிற்று. பொம்ம நாயக்கர் வெரப்பூரிலிருந்து கம்பெனிப் படையினரை விரட்டினார். ஊமைத்துரை பழைய நாட்டை விடுவித்தார். கள்ளர்கள் மதுரையின் மேற்குப் பகுதியை விடுவித்தனர். காளையார் கோவில் கிளர்ச்சிக்காரர்கள் வசமாயிற்று.

தஞ்சையில் கிளர்ச்சி

கிளர்ச்சி இராமநாதபுரத்திலிருந்து தஞ்சாவூருக்குப் பரவியது. செவத்த தம்பியின் தலைமையில் தஞ்சை மக்கள் கிளர்ந்தெழுந்தனர். புதுக்கோட்டை சுபா விடுவிக்கப்பட்டது. அறந்தாங்கியிலும், அரியக்குடியிலும் பாசறைகள் அமைக்கப்பட்டன. மாங்குடி கைப்பற்றப்பட்டது. கிளர்ச்சிக்காரர்கள் நாகூர் கடற்கரை வழியாகச் சென்று சீர்காழி, உடையார்பாளையம், அரியலூர் ஆகிய இடங்களில் நிலை கொண்டனர். அப்பகுதிகளிலிருந்து வருவாய்த்துறை ஊழியர்கள் விரட்டப்பட்டனர். கும்பகோணம் ஆட்சித் தலைவர் ஹாரி உயிருக்குப் பயந்து தப்பிச் சென்றார். கூட்டிணைப்புப் படையினர் கொள்ளிடத்தைக் கடந்து அதன் வடகரையைக் கைப்பற்றினர்.

திருச்சிப் பிரகடனம்

தென்னிந்தியக் கூட்டிணைப்புப் படையினர் வெற்றி வாகை சூடிக் கொண்டிருந்த சமயத்தில் தான் மருது பாண்டியன் தனது வரலாற்று முக்கியத்துவம் மிக்க திருச்சிப் பிரகடனத்தை (Trichy Proclamtion) வெளியிட்டார். அப்பிரகடனம் திருச்சிக் கோட்டை நுழைவாய்ச் சுவற்றிலும், ஸ்ரீரங்கம் பெரிய கோவில் சுவற்றிலும் ஒட்டப்பட்டிருந்தது. சாதி, சமய, இன வேறுபாடின்றி இந்தியாவிலுள்ள அனைத்து மக்களுக்கும், அறைகூவல் விடுத்தது அந்தப் பிரகடனம். அது மக்களுக்குத் தன்னம்பிக்கையை அளித்தது அவர்களின் ஆதரவைக்

குறிப்பு

கோரியது தேசிய உணர்வைப் பிரதிபலித்தது அகில இந்தியக் கண்ணோட்டத்தில் அமைந்திருந்தது. அதில் எண்ணங்களும், விபரங்களும் இழையோடியிருந்தன. மன்னனின் மைந்தர்களிடையே காழ்ப்புணர்ச்சியும், பரஸ்பரப் பொறாமையும், விரோத மனப்பான்மையும் நீடித்தால் இந்தியா முழுவதும் ஆங்கிலேயரது ஆட்சிக்கு எளிதில் இரையாகிவிடும் என்று அந்தப் பிரகடனம் எச்சரித்தது. கம்பெனியுடன் கூட்டு சேர்ந்தமைக்காக முகமது அலியையும், கர்நாடக நவாபையும் அது கண்டித்தது பொது மக்களின் அலட்சிய மனப்பான்மையைக் கண்டித்தது ஆங்கிலேயரின் வஞ்சகத்தையும் ஆணவத்தையும் சாடியது. திருச்சிப் பிரகடனம் அன்றைய யதார்த்த நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டிற்று. மருது பாண்டியரின் அரசியல் தீர்க்கதரிசனத்தின் சின்னமே திருச்சிப் பிரகடனமாகும்.

12.10.3. கிளர்ச்சியின் வீழ்ச்சி

கிளர்ச்சியை முறியடிக்க லெப்டினென்ட் கர்னர் அக்னியூ ஒரு மும்முனைத் தாக்குதல் திட்டத்தை வகுத்தார். இதன்படி, தென்கிழக்கே திருநெல்வேலியிலிருந்தும், வடமேற்கே திண்டுக்கல்லிலிருந்தும், வடகிழக்கே தஞ்சாவூரிலிருந்தும் கிளர்ச்சிக் கேந்திரங்களைத் தாக்கத் திட்டமிடப்பட்டது. 1801 மே 28 அன்று அக்னியூ நாகலாபுரம் சென்று பின்னர் பரமக்குடியைக் கைப்பற்றினார் (ஜூன் 11). அதன்பின் திருப்பத்தூர் அவர் வசமாயிற்று (ஜூலை 24). இதற்கிடையே தஞ்சாவூரில் அறந்தாங்கி, அடியார்குடி ஆகிய இடங்களில் நடந்த போர்களில் கிளர்ச்சிக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டனர். அக்னுவோடு கர்னல் இன் ஸீம் சேர்ந்து கொண்டார். அவர்களது கூட்டுப்படை ஒக்கூர் வழியாகச் சென்று மருது பாண்டியனின் கிளர்ச்சி மையமான சிறுவயலை அடைந்தனர் (ஜூலை 27). கிளர்ச்சிக்காரர்கள் காளையார் கோவில் காட்டுக்குள் சென்றுவிட்டதால் சிறுவயல் எளிதில் வீழ்ந்தது. தொண்டி குடாக்கடலில் கிளர்ச்சிக்காரர்களின் கடற்படை அழிக்கப்பட்டது. புதுக்கோட்டை, எட்டையாபுரத்திலிருந்து வந்த படைகளோடு கம்பெனிப் படையும் சேர்ந்து காளையார்கோயிலை வளைத்துக் கொண்டனர் (செப்டம்பர் 30). கோவில் கடுந்தாக்குதலுக்கு இலக்காயிற்று. கிளர்ச்சிக்காரர்களில் பலர் உயிரிழந்தனர். மருது பாண்டியனும் பிறரும் பல திக்குகளிலும் சிதறிச் சென்றனர். காளையார்கோவில் வீழ்ச்சியால் கிளர்ச்சியின் முதுகெலும்பு முறிந்தது எனலாம். சிதறிச் சென்ற கிளாச்சிக்காரர்கள் தளவாய் பிள்ளையின் தலைமையில் ஒன்று சேர்ந்தனர். களநாடு மறவர்கள் இராமத்தேவரின் தலைமையில் அவர்களோடு சேர்ந்து கொண்டனர். ஆனால் அவர்கள் அனைவரும் ஆட்சித் தலைவர் லூஷிங்டனால் தோற்கடிக்கப்பட்டனர். ஊமைத்துரை கர்னல் இன்ஸால் தோற்கடிக்கப்பட்டார் (அக்டோபர் 14). விருப்பாட்சி வீழ்ந்தது (அக்டோபர் 16). மேஜர் டெலிடன் பிரான்மலையைக் கைப்பற்றினார் (அக்.17). மலைகுலைந்தாலும் நிலைகுலையாத ஊமைத்துரை கிளர்ச்சிக்காரர்களுக்குத் தலைமை தாங்கி திண்டுக்கல் பள்ளத்தாக்கை

குறிப்பு

அடைந்தார். வத்தலக்குண்டில் நடந்த உக்கிரமான போரில் ஊமைத்துரையும், அவரோடு அறுபத்தைந்து கிளர்ச்சிக்காரர்களும் விழுப்புண் பட்டு வீரமரணடைந்தனர். தப்பிய கிளர்ச்சித் தலைவர்களும் பிறரும் கம்பெனியால் கொடூரமாகத் தண்டிக்கப்பட்டனர்.

12.10.3.1. வீழ்ச்சிக்கான காரணங்கள்

தென்னிந்தியக் கிளர்ச்சியின் வீழ்ச்சிக்குப் பல காரணங்கள் இருந்தன. அவை: 1. கிளர்ச்சித் திட்டம் செவ்வனே தீட்டப்பட்டாலும், அது திட்டமிட்டபடி செயல்படுத்தப் படவில்லை. தூண்டாஜிவாக் இரண்டு மாதங்களுக்கு முன்னரே கிளர்ச்சியைத் துவக்கிவிட்டார். 2. கிளர்ச்சி பல இடங்களில் ஒரே நேரத்தில் துவக்கப்படவில்லை. பல பகுதிகள் கிளர்ச்சியில் தீவிரமாக ஈடுபடவில்லை. 3. பல சமயங்களில் கொரில்லா போர்" முறையைப் பின்பற்றாமல் நேரடி மோதலில் ஈடுபட்டனர். 4. தூண்டாஜிவாக்கின் அகால மரணத்தால் பல மராத்தியத் தலைவர்களின் ஆதரவைக் கிளர்ச்சிக்காரர்கள் பெற முடியாது போயிற்று. 5. புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாங்கூர், மைசூர் மன்னர்கள், ஹைதராபாத் நிஜாம், பூனாவின் பேஷ்வா ஆகியோர் கம்பெனியின் ஆதரவாளர்களாக இருந்தனர். 6. ஏமன் நாயர், சட்டு நாயர், இராமன் நாயர் போன்ற கருங்காலிகள் கிளர்ச்சித் தலைவர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டனர். 7. கிளர்ச்சித் தலைவர்களிடம் போதிய போர்த்தளவாடங்கள் இல்லை. அவர்களது போர் உத்திகளும் சிறப்பாயில்லை. 8. போராட்டத் தலைவர்களிடம் ஒற்றுமை இருந்தாலும், கிளர்ச்சிக்காரர்களிடையே ஒற்றுமை இல்லை. 9. பொதுமக்களின் ஆதரவு பூரணமாகக் கிடைக்கவில்லை. 10. யாவற்றுக்கும் மேலாக கம்பெனியின் வலிமைமிக்க இராணுவம், நன்கு பயிற்சி பெற்ற திறமைமிக்கத் தளபதிகள், சிறப்பான போர் உத்திகள், ஆதார வசதிகள், கட்டுப்பாடான வீரர்கள், வலிமையான கடற்படை, தென்னிந்திய அரசர்களின் ஆதரவு ஆகியவை கிளர்ச்சியை வீழ்ச்சியடையச் செய்ய உதவின.

வரலாற்றுச் சிறப்பு

தென்னிந்தியக் கிளர்ச்சி ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே மேற்கொள்ளப்பட்ட போராட்டமாகும். அது அந்நிய ஆட்சியை அகற்றுவதென்ற திடமான, தீர்க்கமான, தீவிரமான உறுதிமிக்க எதிர்ப்பு முயற்சி. பின்வரும் போராட்டங்களுக்கு முன்மாதிரியாக அமைந்த நிகழ்ச்சி அது. அக்கிளர்ச்சியில் பிராந்தியத் தலைவர்களோடு பொதுமக்களும் பங்கு கொண்டனர். இராமநாதபுரம் மறவர்கள், மலபார் குறிச்சியர்கள், இந்துக்கள், முஸ்லீம்கள், தமிழர்கள், தெலுங்கர்கள், மலையாளிகள், கன்னடியர்கள், மராத்தியர்கள் ஆகியோர் இப்போராட்டத்தில் பங்கேற்றனர். கிளர்ச்சிக்காரர்கள் பெரிதும் காடுகளில் இருந்து கொண்டு, கொரில்லா" போரிட்டனர். பிராந்தியக் கூட்டமைப்புகளும் தென்னிந்திய கூட்டிணைப்பும் இக்கிளர்ச்சியின் சிறப்புக் கூறுகளாகும். தென்னிந்தியக் கிளர்ச்சியில் சிவகங்கை மருது சகோதரர்கள், பாஞ்சாலங்குறிச்சி

ஊமைத்துரை, திண்டுக்கல் கோபால நாயக்கர், கொங்கு நாட்டுக் கான்-இ-ஜஹான், மலபார் கேரள வர்மா, கர்நாடக தூண்டாஜிவாக், மைசூர் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆகியோர் முழு மூச்சுடன் ஈடுபட்டனர். கிளர்ச்சித் தலைவர்கள் ஆதரவற்ற ஆங்கிலேயக் குடும்பத்தினருக்குக் கருணை காட்டினர். வீழ்ந்தோரிடம் மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டனர். கிளர்ச்சிக்குப் பின் கம்பெனி பல சீர்திருத்தங்களை மேற்கொண்டது. தென்னிந்தியாவில் சுதேசி ஆட்சிக்குப் பதில் கம்பெனி ஆட்சி நிலைநாட்டப்பட்டது. புதிதாக சென்னை இராஜதானி உருவாக்கப்பட்டது அது கம்பெனியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

குறிப்பு

மதிப்பீடு

தென்னிந்தியக் கிளர்ச்சி எதிர்பாராமல் சுழன்றடித்த சூறாவளி அல்ல. மாறாக, இப்போராட்டம் பல ஆண்டு காலமாகக் குமுறிக் கொண்டிருந்த எதிர்ப்பு எரிமலை வெடித்துச் சிதறியதைப் போன்றது. பூலித்தேவனும், கட்டபொம்மனும் ஆங்கில ஆதிக்கத்தைத் தனித்து நின்று போராடாமல் பாளையக்காரர் கூட்டமைப்பை உருவாக்கிக் கிளர்ச்சி செய்தனர். இவர்களுக்குப்பின் மருது பாண்டியர்கள் ஊமைத்துரையின் ஆங்கில ஆதிக்க எதிர்ப்புணர்வையும், விடுதலைப் போராட்ட அனுபவத்தையும் பயன்படுத்திக் கொண்டு தீர்க்கமான குறிக்கோளோடும், தெளிவான திட்டத்தோடும் தென்னிந்திய சுதந்திரப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கி நடத்தினர்.

ஆங்கில ஏகாதிபத்தியத்தை அடியோடு அகற்றி தென்னிந்திய தீபகற்பத்தை விடுவிப்பதே மருதுபாண்டியர்களின் இலட்சியமாகும். ஆங்கில ஆதிபத்திய ஆதிக்கத்தை அகற்றினால்தான் "மக்கள் கண்ணீர் சிந்தாமல் மகிழ்ச்சியுடன் இருப்பர்"" என்று மருதுபாண்டியன் வெளியிட்ட சுதந்திரப் பிரகடனம் தெளிவாக அறிவித்தது. இப்பிரகடனம் இந்தியாவில் முதல் முறையாக ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிராக பகிரங்கமாக வெளியிடப்பட்ட பொது ஆவணப் பிரகடனமாகும். இந்த அறிவிப்பு ஜெர்மனியின் சமயக் கிளர்ச்சிக்காரர் மார்ட்டின் லூதர் (Martin Luther) 1517 அக்டோபர் 21 ஆம் தேதி விட்டன்பர்க் (றுவைவநடிநசப) தேவாலயத்தில் வெளியிட்ட 95 விளக்க வாசகங்களுக்கு (றைவெல-குளைந வுாநளநள) இணையானதாகும். இலக்கை அடைவதற்காக கோவையில் துவக்கப்பட்ட இக்கிளர்ச்சி (1800 ஜூன் 3) தெற்கே நாங்குநேரியிலிருந்து வடக்கே ஷோலாப்பூர் வரை பரவியது. நாட்டுப்பற்றுமிக்க மருது பாண்டியர்களின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட தென்னிந்தியக் கிளர்ச்சியில் மக்கள் தலைவர்களும், விவசாயிகளும், பிறரும், சாதி, இன, வகுப்பு நிற, மொழி, மத, பிராந்திய வேறுபாடின்றிப் பங்கேற்றனர். கிளர்ச்சியாகத் தோன்றிய இப்போராட்டம் மக்கள் இயக்கமாக மாறியது. இம்மாபெரும் விடுதலைப் போராட்டத்தில் தமிழர்களின் பங்களிப்பு பெருமைக்குரியது என்று பாராட்டியுள்ளார் கே. இராஜய்யன்.

குறிப்பு

தென்னிந்தியக் கிளர்ச்சியை மதிப்பீடு செய்வது எளிதல்ல. ஒரு பக்கம் இக்கிளர்ச்சி முதல் இந்திய விடுதலைப் போர்" என்று வர்ணிக்கப்படுகிறது. மறுபக்கம் இதை பாளையக்காரர்களின் 'தன்னல தற்காப்புப் போர்" என்று ஒதுக்கப்படுகிறது. சுதந்திரமாக செயல்பட்டு வந்த பாளையக்காரர்கள் மக்கள் உரிமைகளை மதித்து, மக்கள் நலனைப் பேணி, நாட்டின் சுதந்திரத்துக்காக உழைத்தவர்கள் என்று கூற இயலாது. இவர்களுடைய நிலமானிய உரிமைகளும், செல்வாக்கும், சலுகைகளும் பறிபோய்விடும் என்ற நெருக்கடி நிலை ஏற்பட்ட போது ஆங்கில ஆதிக்கத்தை எதிர்க்கத் துணிந்தனர் கிளர்ச்சி செய்தனர். அவர்கள் தேசிய உணர்வோடு அகில இந்தியக் கண்ணோட்டத் துடன் போராடவில்லை. மருது பாண்டியனின் திருச்சிப் பிரகடனம் டில்லியில் எதிரொலிக்க வில்லை. எனவே, தென்னிந்தியக் கிளர்ச்சியை முதல் விடுதலைப் போராட்டம் என்றோ அல்லது "இந்திய விடுதலைப் போராட்டத்தின் துவக்கம்" என்றோ கூற இயலாது. அதேசமயம் இக்கிளர்ச்சியை வெறும் பாளையக்காரர்களின் தற்காப்புப் போர் என்று புறக்கணிக்கவும் முடியாது. தெளிவான இலக்கு, தீர்க்கமான திட்டம், விரிவான கூட்டமைப்பு, அந்நிய ஆட்சியை அகற்றுவதில் காட்டிய தீவிரம் ஆகியவற்றைக் கொண்டு பார்க்கும் போது தமிழ் நாட்டில் துவங்கிய தென்னிந்தியக் கிளர்ச்சி ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகத் துவக்கப்பட்ட முதல் பெரிய, பரவலான, வலிமைமிக்க, வன்முறைப் போராட்டம் என்பதில் ஐயமில்லை.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

8. எந்த நூற்றாண்டில் தென்னிந்தியக் கிளர்ச்சி துவக்கப்பட்டது?
9. திம்ம நாயக்கரை காட்டிக் கொடுத்தவர் யார்?

12.11. வேலூர்க் கிளர்ச்சி, 1806

வேலூர் வரலாற்றுச் சிறப்புமிக்க நகரம். இவ்வூர் சங்க காலத்தில் ஒளிர்ந்திருந்தது. வேலூர் வேல்களின் ஊர் (வேல்ஊர்). சங்க கால மக்கள் வழிபட்ட முருகனின் ஆயுதம் வேல். எனவே, முருகனின் ஊர் வேலூர் என்று கூறுவோரும் உண்டு. பண்டைக் காலத்திலிருந்து வேலூர் போர்க்களமாகப் பயன்பட்டுள்ளது. இவ்வூரில் எப்போதும் வேல்கள் குவிக்கப்பட்டிருந்தமையால் வேலூர் என்று அழைக்கப்பட்டதாகவும் கூறுவர். வேல் என்று அழைக்கப்பட்ட அரிய கூழாங்கற்கள் இங்கு நிறையக் காணப்பட்டதால் வேலூர் என்று அறியப்பட்டதாகவும் கருதுவர். சுருங்கக்கூறின், போர் மரபும் திராவிடக் கலாச்சாரமும் கைகோர்த்துச் செல்லும் நகரம் வேலூர் ஆகும்.

வேலூர்க் கோட்டை

வேலூர்க்கோட்டை 1606 லிருந்து 1672 வரை விஜய நகரப் பேரரசின் தலைநகரமாகத் திகழ்ந்தது. சின்ன பொம்பி நாயக் வேலூர்க்

குறிப்பு

கோட்டையைக் கட்டியதாகக் கருதப்படுகிறது. கட்டுமானக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகக் கூறப்படும் இக்கோட்டையில் பல மதில் காப்பான்களும் (சுயஅியசவள), கோட்டையைச் சுற்றி அகலமாக அகழிகளும் (Mofes) இருந்தன. அகழிகளில் முதலைகள் விடப்பட்டிருந்தன. மிகுந்த பலமும் பாதுகாப்புமிக்க வேலூர்க்கோட்டையிலிருந்துதான் விஜய நகரப் பேரரசர்கள் ஒருகால கட்டத்தில் ஆட்சி புரிந்தனர். பின்னர் வேலூர்க் கோட்டை முறையே பீஜப்பூர் சுல்தான்கள், மராத்தியர், கர்நாடக நவாபுகள், ஆங்கிலேயர் ஆகியோருக்குச் சொந்தமாயிற்று. மைசூர் போர்களின் போது வேலூர் மாவட்டத்தில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்குமிடையே ஆம்பூர் (1751), வந்தவாசி (1760)ப் போர்கள் நடைபெற்றன. அப்போது திப்பு சுல்தான் தன் குடும்பத்தினருடன் வேலூர்க் கோட்டைக்கு வந்து தங்குவதுண்டு. அவர் தங்கிய இடம் 'திப்பு மகால்" என்று அழைக்கப்பகிறது. வேலூர்க் கோட்டை 1768 இல் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. 1806 வேலூர்க் கிளர்ச்சியின் போது இக்கோட்டையை 69-வது படை வகுப்பணி (சுநபஅநவெ)யின் ஒரு பிரிவும், 19-வது படை வகுப்பணியின் மற்றொரு பிரிவும் பாதுகாத்தனர். மொத்தம் 1500 சிப்பாய்களும், 370 ஆங்கிலப் படை வீரர்களும் இப்பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். வேலூர்க்கோட்டை தென்னிந்தியாவின் இராணுவக் கட்டமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது.

சென்னை இராணுவம்

பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் இராணுவப் பிரிவு கம்பெனியின் வர்த்தக நலன்களையும், விரிவாக்கத்தையும் காப்பாற்றுவதற்காக உருவாக்கப்பட்டது. இராணுவத்தின் பிரதான பிரிவில் ஆங்கிலப் படை வீரர்களும், துணைப் பிரிவில் தமிழ் நாட்டு சிப்பாய்களும் இருந்தனர். சிப்பாய்கள் பயிற்சி பெறாத பாதுகாப்பாளர்கள் இவர்களுள் சிலர் மட்டுமே ஆயுதம் ஏந்தியவர்கள். 1746 இல் பிரெஞ்சுப் படை சென்னையைத் தாக்கிக் கைப்பற்றிய பின்னர் ஆங்கிலேயர் இராணுவப் பிரிவைப் பயன்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தினர். தமிழ் நாட்டில் பாரம்பரியப் போர்க்கலையில் திறமையுடையோர் பலர் சிப்பாய்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களுக்குத் தக்க பயிற்சி அளிக்கப்பட்டது. மதுரை முத்து நாயக்கர் போன்ற நிலச்சுவான்தார்கள் சிப்பாய்களுக்கு அதிகாரிகளாக இருந்தனர். இவர்களைக் கொண்டே வந்தவாசிப் போர் (1760) நிகழ்த்தப்பட்டது. இராபர்ட் கிளைவ் வங்காளம் சென்ற போது இவர்களுள் பலரை உடன் கொண்டு சென்றார். அவர் பிளாசிப் போரில் (1757) வெற்றி பெற தமிழ்நாட்டு சிப்பாய்கள் பெரிதும் காரணமாக இருந்தார்கள்.

வேலூர்க் கிளர்ச்சியின் போது கோட்டைக் காவல் படை பெரும்பாலும் தென்னிந்திய கிளர்ச்சிக்குப் பின் திருநெல்வேலியில் திரட்டப்பட்ட வீரர்களைக் கொண்டிருந்தது. இவர்கள் பெரும்பாலோர் தென்னிந்திய கிளர்ச்சி ஒடுக்கப்பட்டதால் பாதிக்கப்பட்டவர்கள் போராட்ட

குறிப்பு

உணர்வு கொண்டோர். இப்படை வீரர்கள் வேலூர் கோட்டையில் இருந்த போது அங்கிருந்த திப்பு சுல்தானின் முன்னள் ஆதரவுப் படை வீரர்களுடன் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிரான சதியில் ஈடுபட்டனர். இதன் மூலம் ஆங்கிலேயர் வேலூர்க் கோட்டைக்குள் ட்ரோஜன் குதிரை (Trojan Horse)யை நுழைய விட்டதாகக் குறிப்பிட்டுள்ளார் கே.ராஜய்யன். வேலூருக்கு வந்த சிப்பாய்களும், குடியேறிய தென்னிந்திய கிளர்ச்சிக்காரர்களும் மைசூரிலிருந்து வந்த சிப்பாய்களும் மற்றும் முன்னாள் போராட்டக்காரர்களும் சேர்ந்து வேலூர்க் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த திப்புவின் மகன் பட்டே ஐதருடன் சேர்ந்து ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிராக சதி செய்தனர். இவர்கள் ஆங்கிலேயர் கொண்டு வந்த புதிய இராணுவ கட்டுப்பாட்டு முறைகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஆங்கில ஆட்சியை அகற்றுவதற்கான திட்டத்தைத் தீட்டினர்.

இராணுவக் கட்டுப்பாடுகள்

சிப்பாய்கள் மிடுக்குடனும், துடிப்புடனும், ஒரே சீராகக் காணப்படுவதற்காகவும் சென்னை தளபதித் தலைவர் (Commander-in-Chief) சர் ஜான் கிரடோக் (Sir John Cradock) சென்னை ஆளுநராக இருந்த வில்லியம் பெண்டிங் பிரபு (டுழசன றுடைடயைஅ டீநவெஎைஒம)வின் சம்மதத்தோடு சில நவீன மாற்றங்களைச் செய்தார் இவை இராணுவக் கட்டுப்பாடுகளாக (Military Regulations)க் கருதப்பட்டன. அவையாவன: 1) சிப்பாய்கள் ஐரோப்பியப் படை வீரர்களைப் போன்று தலைப்பாகையை அணிய வேண்டும் 2) பணியில் இருக்கும் போது அவர்கள் சாதி, மதச் சின்னங்களாக நெற்றியில் திருநீறு அல்லது நாமம் போட்டுக் கொள்வதோ, காதணிகளை அணிவதோ கூடாது 3) முகத்தை நன்கு மழித்துக் கொள்ள வேண்டும் 4) மீசையை ஒரே சீராக நறுக்கி முறுக்கி விடவேண்டும் 5) ஒரே மாதிரியான காலுறையைப் பயன்படுத்த வேண்டும் 6) ஒரே வடிவிலான சின்னத்தைக் (வுரசளெஉசநற) கொண்ட கழுத்துப் பட்டையை அணிய வேண்டும்.

12.11.1. கிளர்ச்சிக்கான காரணங்கள்

வேலூர்க் கிளர்ச்சிக்கான காரணங்களைப் பற்றி வரலாற்றாளர்களிடையே ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. ஒன்றுக்கொன்று மாறுபட்ட, முரண்பட்ட காரணங்கள் கூறப்படுகின்றன. எனவே, வேலூர்க் கிளர்ச்சி வெடித்ததற்கான பின்வரும் விளக்கங்களைக் கூறலாம்: 1) தென்னிந்திய கிளர்ச்சி தோற்கடிக்கப்பட்டபின் பல கிளர்ச்சிக்காரர்கள் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டனர். எஞ்சித் தப்பிய பலர் கம்பெனி இராணுவத்தில் சேர்ந்தனர் பலர் வேலூரிலும், வேலூரைச் சுற்றியும் குடியேறினர். அவர்கள் அவ்வப்போது சந்தித்து இரகசியமாகக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டு, மீண்டும் ஒரு கிளர்ச்சி செய்து ஆங்கிலேயர் ஆட்சியை அகற்ற முடிவு செய்தனர். கே.ராஜய்யன் இந்தக் காரணத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார். 2)

குறிப்பு

மைசூர் முடியாட்சியை மீட்க வேண்டும் என்று திப்பு சுல்தானின் வாரிசுகள் முடிவு செய்து சதித் திட்டம் தீட்டினர். திப்பு இறந்த பின் அவரது 12 மகன்களும், 6 மகள்களும் வேலூர் சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்குப் பல சிறப்புச் சலுகைகள் அளிக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு திப்புவின் மூத்த மகன் பட்டே ஐதர் பிறரது துணையுடன் கிளர்ச்சி செய்யத் திட்டமிட்டார். அவரது ஆதரவுடன் கிட்டத்தட்ட 3000 கன்னடக் கிளர்ச்சிக்காரர்கள் வேலூரைச் சுற்றிக் குடியேறினர். முஸ்லீம் முடியாட்சியை மீட்பதே வேலூர்க் கிளர்ச்சியின் முக்கிய நோக்கமாக இருந்தது என்பதை வலியுறுத்தினார் கம்பெனி படைத்தளபதி ஜே.எப்.சிரடோக் (J.F.Cradock). 3) சமகால மக்கள், அவர்களது பழக்கவழக்கங்களைப் பற்றி நன்கு அறிந்த சர் தாமஸ் மன்றோ (Sir Thomas Munro) "குல்லாய் பற்றிய மனக்குறை" தான் வேலூர்க் கிளர்ச்சிக்கான ஒரே காரணம் என்று கூறினார். துணைத் தளபதி அக்னியூ (Adjutant General Agnew) வடிவமைத்து அறிமுகப்படுத்தியதால் இக்குல்லாய் "அக்னியூ குல்லாய்" என்று அழைக்கப்பட்டது. சிப்பாய்கள் இக்குல்லாயை அணிவதை அவமரியாதையாகக் கருதினார். அக்குல்லாயை அணிந்த சிப்பாய்கள் மக்களின் கேலிக்கும், கிண்டலுக்கும் உள்ளாயினர். இதனால் சிப்பாய்களிடையே மாறா மனக்கசப்பு ஏற்பட்டது. இம்மனக்கசப்பின் வெளிப்பாடே வேலூர்க் கிளர்ச்சி. 4) ஆங்கிலேயரது அக்கிரமிப்புக் கொள்கையால் தன்னுடைய சுதந்திரத்தை இழந்த ஐதராபாத் நிஜாம் மீண்டும் தனது ஆட்சி நிலை நாட்ட நாட்டம் கொண்டிருந்தார். ஐதராபாத், சிக்தாகோல் மக்களும் நிஜாமுக்கு ஆதரவாகப் போராடத் தயாராக இருந்தனர். வேலூரிலிருந்த கிளர்ச்சிக்காரர்கள் ஐதராபாத் கிளர்ச்சிக்காரர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். வேலூர்க் கிளர்ச்சி துவக்கப்பட்டவுடன் ஐதராபாத் நிஜாம் அச்சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு கிளர்ச்சி செய்து ஆட்சியை மீட்க முன்வந்தார். 5) கம்பெனிப் படையில் சிப்பாய்களுக்கு இராணுவக் கட்டுப்பாடுகள், விதிமுறைகள், புதிய பழக்கவழக்கங்கள் ஆகிய அனைத்தும் புதுமையாயிருந்தன. அவற்றுக்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. அதுமட்டுமல்ல. அவர்கள் ஆங்கிலப் படைவீரர்களுக்கு சமமாக நடத்தப்படவில்லை. இருசாராருக்கு மிடையே ஊதிய மற்றும் சலுகை வேறுபாடுகள் அதிகமாக இருந்தன. சிப்பாய்கள் குடும்பத்தினருடன் வசிக்க ஆங்கில அதிகாரிகளின் அனுமதி பெற வேண்டியிருந்தது. மேலும் சிப்பாய்கள் ஆங்கில அதிகாரிகளுக்கு குற்றேவல் செய்ய கட்டாயப்படுத்தப் பட்டனர். கருப்பு கமாண்டர்கள்" என்ற உயர் பதவிகள் சிப்பாய்களுக்கு மறுக்கப்பட்டன. இவற்றால் ஏமாற்றமும், ஆத்திரமும் அடைந்த சிப்பாய்கள் கிளர்ச்சி செய்யத் துடித்துக் கொண்டிருந்தனர். 6) யாவற்றுக்கும் மேலாக, 1805-1806 ஆண்டு ஆங்கிலக் கம்பெனி அறிமுகப்படுத்திய இராணுவக் கட்டுப்பாடுகள்' கிளர்ச்சிக்காரர்களுக்குத் தேவையான வாய்ப்பைக் கொடுத்தன. இச்சீர்திருத்தங்கள் பழைமைப் பழக்கவழக்கங்களில் ஊறிப் போன சிப்பாய்களுக்கு ஆத்திரமூட்டக்கூடிய

குறிப்பு

கால் விலங்குகளாகக் காட்சியளித்தன. குறிப்பாக சாதிச் சின்னங்களை அகற்ற வேண்டும் என்பதால் இந்து சிப்பாய்களும், தாடி வைத்துக் கொள்ளக் கூடாது என்பதால் முஸ்லீம்களும், பிற கட்டுப்பாடுகளால் அனைத்து சிப்பாய்களும் அதிருப்தி அடைந்திருந்தனர். அவர்களுக்குக் கிளர்ச்சிக் களம் தயாராக இருந்தது.

12.11.2. கிளர்ச்சியின் போக்கு

வேலூர் கிளர்ச்சி வெடிப்பதற்கு சில மாதங்களுக்கு முன் மைசூரிலிருந்து வந்த பக்கிரிகள் (Pakris) நகரின் தெருக்களிலும், கடை வீதிகளிலும் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்தனர். இவர்கள் மராத்தியப் படைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்கள். இப்பக்கிரிகள் ஆங்கிலேயருக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தனர். எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பினர். பக்கிரிகள் பிரச்சாரத்தின் மூலமாக மக்களைத் தூண்டிவிட்டனர். இவர்கள் உள் உளவாளிகளாகச் செயல்பட்டனர்.

பொம்மலாட்டப் பிரச்சாரம்

திப்பு சுல்தானோடு நெருங்கிப் பழகிய அப்துல்லாகான், பீர்சாடா போன்றோரின் தலைமையில் வேலூரில் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளை நடத்தினர். இந்நிகழ்ச்சிகளில் பொம்மலாட்டக்காரர்கள் ஆங்கிலேயரை வசைப் பாடல்கள் மூலம் தாக்கினர். விரைவிலேயே அவர்களுடைய ஆட்சி அழியப் போகிறது என்று ஆரூடம் கூறினர். முஸ்லீம்களைக் கிறிஸ்த்துவ மதத்துக்கு மாற்றப் போவதாகப் பிரச்சாரம் செய்தனர். பொம்மலாட்டக்காரர்களின் பிரச்சாரத்தால் முஸ்லீம்கள் ஆத்திரமடைந்தனர்.

பொதுமக்களின் பரிகாசம்

1806 ஜூன் 9 ஆம் தேதியிலிருந்து 14-வது படைப்பிரிவின் 40 சிப்பாய்கள் எவ்வித எதிர்ப்புமின்றி "அக்னியூ குல்லாய்"களை அணிந்து கொண்டு படை அணிவகுப்பில் கலந்து கொண்டனர். இதைப் பார்த்த பொது மக்களில் பலர் அவர்களைக் கேலி செய்தனர் அசிங்கமான வார்த்தைகளால் திட்டினர் எள்ளி நகைத்து ஏளனம் செய்தனர். பொது மக்களின் இந்த ஏளனத்தைக் கேட்டு கூனிக்குறுகிப் போன பல சிப்பாய்கள் தலைப் பாகையைக் கழற்றி எறிந்தனர். இதைக் கண்ட அதிகாரிகள் கேலி செய்த கும்பலைக் கலைத்தனர்.

சவுக்கடி தண்டனை

மாயா குப்தா (Maya Gupta) இலண்டனில் உள்ள இந்திய அலுவலக நூலகத்தில் (Indian Office Library) வேலூர் கிளர்ச்சி பற்றிய ஆவணங்களை ஆய்வு செய்து சில அரிய தகவல்களைத் திரட்டினார். அவரது கூற்றுப்படி 1806 மே 6 ஆம் தேதி நான்காவது ரெஜிமெண்டின் இரண்டாவது படைப்பிரிவைச் சேர்ந்த 29 சிப்பாய்கள் புதிய குல்லாய்களை அணிய மறுத்துவிட்டனர். அதற்கு பதில் அவர்கள் நெற்றியைச் சுற்றி கைக்குட்டையைக் கட்டிக் கொண்டு அதிகாரிகள்

குறிப்பு

உத்தரவுக்குக் கீழ்ப்பணிய மறுத்து விட்டனர். கீழ்ப் பணியாதது மட்டுமல்லாது அவர்கள் ஆங்கில அதிகாரிகள் "நாய்கள்" என்று திட்டினர். கீழ்ப்பணிய மறுத்த சிப்பாய்கள் படைதுறை முறை மன்றத்தைக் கொண்டு (Court-martial) விசாரணை செய்யப்பட்டனர். விசாரணையின் போது மன்னிப்பு கேட்டோர் தண்டனையிலிருந்து தப்பினர். கடைசி வரை மன்னிப்பு கேட்க மறுத்துவிட்ட ஒரு இந்துவும் ஒரு முஸ்லீமும் தலா 900 சவுக்கடி தண்டனை பெற்றனர். இச்செய்தி அறிந்த சிப்பாய்கள் மேலும் ஆத்திரமடைந்தனர். இந்நிகழ்ச்சி நடைபெற்ற அடுத்த மாதமே (ஜூன்) வேலூருக்கு அருகே வாலாஜாவில் தலைப்பாகை எதிர்ப்புப் போராட்டம் எழுந்தது.

தெளிவான திட்டம்

வேலூர் சிறையில் இருந்த திப்பு சுல்தானின் மைந்தர்களின் வழிகாட்டுதலின் பேரில் கிளர்ச்சிக்காரர்களும், சிப்பாய்களும் கிளர்ச்சி பற்றித் திட்டமிட்டனர். இத்திட்ட மிடப்பட்ட சதியின் போது ஆட்சி எதிர்ப்பாளர்களை ஒன்று சேர்ப்பது என்றும் மைசூர், ஆர்க்காடு, ஐதராபாத் போன்ற பகுதிகளில் மன்னராட்சியை மீட்பது என்றும் பலதரப்பு மக்களிடமிருந்தும் ஆதரவு கோருவது என்றும் 1806 ஜூலை 13 ஆம் தேதி அதிகாலை வேலூர் கோட்டையைக் கைப்பற்றுவது என்றும் அதைத் தொடர்ந்து மைசூரிலும், ஐதராபாத்திலும் கிளர்ச்சியை விரிவுபடுத்துவது என்றும் திட்டமிட்டனர்.

திட்டத்துக்கு ஆதரவு

கிளர்ச்சித் திட்டத்துக்கு பள்ளிகொண்டா மக்களும், வாலாஜாபாத்திலும், சித்தூரில் இருந்த சிப்பாய்களும் ஆதரவளித்தனர். பொது எதிரியான ஆங்கிலேயரை எதிர்த்துக் கிளர்ச்சி செய்வது பற்றி வேலூரில் இருந்த கிளர்ச்சிக்காரர்கள் ஆர்க்காட்டு மக்களோடு ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர். கிளர்ச்சி துவங்கப்பட்டவுடன் மைசூரிலிருந்து போராளிகள் வேலூருக்கு வந்து சேர்வதென்று முடிவு செய்யப்பட்டது. கர்நாடகம், ஆந்திரா, தமிழ்நாடு போராட்டக்காரர்களையும், சிப்பாய்களையும் ஒருங்கிணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. இரகசிய கூட்டங்கள் நடைபெற்றன. ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பதற்கான சூளுரைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. கம்பெனியின் ஆதரவாளரான ஆர்க்காடு நவாபுக்கு கிளர்ச்சித் திட்டம் தெரிந்திருந்தும் அவர் ஆங்கில அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவில்லை. அதேபோன்று சிப்பாய்களின் ஆத்திரத்தை நேரில் கண்டறிந்த தளபதி தலைவர் ஜான் கிரடோக் புதிய இராணுவ உத்தரவுகளை உடனடியாக விலக்கிக் கொள்ளுமாறு சென்னை ஆளுநர் பெண்டிங்கைக் கேட்டுக் கொண்டார். ஆனால் ஆளுநர் அப்பரிந்துரைக்கு செவிசாய்க்க வில்லை. கம்பெனியின் அலட்சியப் போக்கு கிளர்ச்சிக்காரர்களுக்கான ஆதரவு மேலும் அதிகரிக்க உதவியது.

குறிப்பு

திட்டமிடாத் தாக்குதல்

1806 ஜூலை மாதம் 13 ஆம் தேதி வேலூர்க் கோட்டைக்குள் இருந்த துணைப்படை சிப்பாய்கள் கிளர்ச்சி செய்து, வேலூரைக் கைப்பற்றி, கருவூலத்தைச் சூறையாடி, ஆங்கிலப் படையை வீழ்த்தி, திப்புவின் மகன் பட்டே ஐதரை மைசூர் மன்னராக அறிவித்து, ஐதராபாத் நிஜாமின் ஆட்சியை மீட்பதென்றும் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் இத்திட்டத்துக்கு மாறாக ஜூலை 9 ஆம் தேதியன்று கணிசமான குதிரைப் படை வீரர்கள் தங்களது பணியாளர்களுடன் வேலூர் வீதிகளில் காணப்பட்டனர். பொறுமை இழந்த ஒரு "குடிகார ஜமீன்தார்" ஜூலை 10 ஆம் தேதியே கிளர்ச்சியைத் துவக்கிவிட்டார். இத்திட்டமிடாத் தாக்குதல் வேலூர்க் கிளர்ச்சியின் போக்கையே மாற்றிவிட்டது.

கோட்டை கைப்பற்றப்படல்

இத்திட்டமிடாத் திடீர்க் கிளர்ச்சியின் போது வேலூர்க் கோட்டைக்குள்ளிருந்த கிளர்ச்சிக்கார துணைப் படை சிப்பாய்கள் கோட்டையைக் கைப்பற்றி, அங்கிருந்த ஆங்கில அதிகாரிகளையும், ஆங்கிலப் படை வீரர்களையும் சராமரியாகச் சுட்டுக் கொன்றனர். அதன்பின் ஆங்கிலேயர் குடியிருப்புப் பகுதியை நோக்கிச் சுட்டனர். இத்துப்பாக்கிச் சூட்டில் தளபதி கர்னல் பென்கோர்ட் (Col.Fercourt) கொல்லப்பட்டார். அவரன்றி இராணுவ அதிகாரிகளான மைக்காரசும், மேஜர் ஆம் ட்ராங்கும் சுட்டுக் கொல்லப் பட்டனர். இவர்களன்றி ராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஆங்கில நோயாளிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர். சம்பளம் பட்டுவாடா செய்யும் அலுவலகம் சூறையாடப்பட்டது. கோட்டையின் பிரதான நுழைவாயிலில் இருந்த பல ஆங்கிலப் படை வீரர்களைக் கொன்று குவித்தனர். வெடிமருந்துக் கிடங்கு காவலரும் சுட்டுக் கொல்லப்பட்டார். அங்கிருந்த போர்த்தளவாடங்கள் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட கோட்டையில் பறந்து கொண்டிருந்த பிரிட்டிஷ் தேசியக் கொடி இறக்கப்பட்டு அதற்குப் பதில் சிகப்புப் பின்னணியில் பச்சைக் கோடுகள் போடப்பட்டு, மத்தியில் சூரியன் வடிவம் பொறிக்கப்பட்ட திப்பு சுல்தானது கொடி ஏற்றப்பட்டது. திப்புவின் மகன் பட்டே ஐதர் மைசூர் மன்னர் என்று அறிவிக்கப்பட்டார்.

கிளர்ச்சி ஒடுக்கப்படல்

கிளர்ச்சி பற்றிய தகவல் அறிந்த கர்னல் கில்லெஸ்பி (Col.Gillespie) வலிமைமிக்க மீட்புப் படையுடன் ஆர்க்காட்டிலிருந்து வேலூருக்கு விரைந்து வந்தார். அவருடன் சென்னையிலிருந்து வந்த குதிரைப் படையும் சேர்ந்து கொண்டது. கில்லெஸ்பியின் தலைமையிலான மீட்புப் படை எதிர்த் தாக்குதல் நடத்தி கோட்டைக்குள் நுழைந்தார். அங்கு 69 படைப் பிரிவைச் சேர்ந்த படையினரும், சில இராணுவ துணை மருத்துவர்களும் கோட்டையைப் பாதுகாக்கும் முயற்சியில் போராடிக் கொண்டிருந்தனர். அவர்களைக் காப்பாற்றியபின் மீட்புப் படை கோட்டைக்குள் இருந்த கிளர்ச்சி சிப்பாய்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். அரண்மனைக்குள் அடைக்கலம் தேடிச் சென்ற சிப்பாய்கள் இழுத்து வரப்பட்டு, சுவற்றோடு சுவராக நிறுத்தப்பட்டு சுட்டுக்

குறிப்பு

கொல்லப் பட்டனர். இத்தாக்குதலில் நூற்றுக்கு மேற்பட்ட ஆங்கிலேயர் உயிரிழந்தனர் 350-லிருந்து 800 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் அதே எண்ணிக்கையில் சிப்பாய்கள் படுகாயம் அடைந்தனர். 500-க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். ஆங்கிலேயர் அடக்குமுறையால் வஞ்சம் தீர்த்துக் கொண்டனர். வன்முறைக் கிளர்ச்சி வன்முறையால் வீழ்த்தப்பட்டது.

12.11.3. தோல்விக்கான காரணங்கள்

வேலூர்க் கிளர்ச்சியின் தோல்விக்கான காரணங்கள் பல. அவற்றுள் முக்கியமானவை வருமாறு: 1) கிளர்ச்சிக்கான பொதுக்குறிக்கோள் எதுவுமில்லை. இழந்த முடியாட்சியை மீட்பதைத் தவிர வேறு இலட்சியம் இல்லை. 2) கிளர்ச்சி தொலை நோக்குடன் தீர்க்கமாகக் கணிக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டு, வழிநடத்தப்படவில்லை 3) கிளர்ச்சிக்காரர்களுக்குத் தலைமை தாங்க மருது பாண்டியன் போன்ற மாவீரன் இராஜதந்திரி கிடைக்கவில்லை. சிறைபட்டிருந்த பட்டே ஐதரால் தக்க தலைமையைக் கொடுக்க முடியவில்லை. 4) கிளர்ச்சி குறிப்பிட்ட தேதிக்கு முன்னதாகவே துவக்கப் பட்டுவிட்டது. வேலூர்க் கோட்டை கைப்பற்றப்பட்ட பின்னர் கிளர்ச்சி திசை மாறிச் சென்று விட்டது. சிப்பாய்களின் கவனம் பொருட்களைச் சூறையாடுவதில் சென்றுவிட்டது. இக்கொள்ளையில் ஊர் மக்கள் சிலரும் பங்கேற்றனர். 5) கிளர்ச்சிக்கு மக்கள் செல்வாக்கில்லை. அக்னு குல்லாய் அணிந்த சிப்பாய்களைக் கேலி செய்த கூட்டத்தைத் தவிர மக்கள் இக்கிளர்ச்சியில் பங்கேற்கவில்லை. அதேபோன்று, பல சிப்பாய்களும் இக்கலகத்தில் கலந்து கொள்ளவில்லை. 6) யாவற்றுக்கும் மேலாக கில்லெஸ்பியின் கொடூரத் தாக்குதலை கிளர்ச்சிக்கார சிப்பாய்களால் சமாளிக்க முடியவில்லை. சிப்பாய்கள் துப்பாக்கிகளைத் தாறுமாறாகப் பயன்படுத்தியதால் அவர்களிடமிருந்த வெடிமருந்தும், படைத்தளவாடமும் தீர்ந்து போயின. கில்லெஸ்பிக்கு வலுவிழந்த போராளிகளை வெற்றி கொள்வது எளிதாயிற்று. தோல்வியுற்ற சிப்பாய்கள் சரணடைந்தனர்.

கிளர்ச்சியின் தன்மை

வேலூர்க் கிளர்ச்சியின் தன்மை பற்றிப் பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன: 1) சென்னை ஆளுநராக இருந்த வில்லியம் பெண்டிங் விசாரணை நடத்தியபின் தலைக் குல்லாய் அணிவதற்கு எதிராக இந்து சமயத்திலோ அல்லது இஸ்லாமிய சமயத்திலோ எவ்வித ஆதாரமும் இல்லை என்ற முடிவுக்கு வந்தார். 2) ஹார்கோர்ட் (G.Harcourt) கில்லெஸ்பி (R.Gillespie), கென்னடி (ஐ.முநநெனல) ஆகியோரைக் கொண்ட மூவர் ஆய்வுக்குழு வேலூரில் சிறை வைக்கப்பட்டிருந்த திப்பு சுல்தானின் மைந்தர்களும், அவர்களது ஆதரவாளர்களும் தான் கிளர்ச்சியைத் தூண்டி விட்டார்கள் என்று கூறியது. 3) மேஜர் ஜெனரல் பேட்டர் (Major General Pater) தலைமையிலான சிறப்பு விசாரணைக் குழு புதிதாகப் புகுத்தப்பட்ட இராணுவச் சீர்திருத்தங்களும் திப்பு

குறிப்பு

குடும்பத்தாரின் செல்வாக்குமே ஆங்கிலேயருக்கு எதிரான சதியைத் தோற்றுவித்தது என்ற முடிவுக்கு வந்தது. 5) முகலாய ஆட்சியை மீட்பதே வேலூர்க் கிளர்ச்சிக்கான உந்து சக்தியாக இருந்ததாகக் கூறினார் கே.எப்.கிரடோக். மதமாற்ற பயத்தால் தான் சிப்பாய்கள் கிளர்ச்சி செய்ததாகக் கருத்து தெரிவித்தார் சர்.தாமஸ் மன்றோ. இந்து-முஸ்லீம்களின் மத உணர்ச்சி புண்பட்டதால் தான் சிப்பாய்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள் என்பது வில்லியம் பெண்டிங் பிரபுவின் கணிப்பு. 6) பல்வேறு கருத்துக்களையும் பரிசீலனை செய்த இயக்குநர்கள் மன்றம் (Court of Directors) புதிய இராணுவக் கட்டுப்பாடுகளால் சிப்பாய்கள் அதிருப்தி அடைந்தனர் அதை வேலூர் சிறையில் இருந்த திப்பு சுல்தானின் புதல்வர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர் என்ற முடிவுக்கு வந்தது.

12.11.4. விளைவுகள்

வேலூர்க் கிளர்ச்சியின் விளைவாகப் பல உடனடி மாற்றங்கள் செய்யப்பட்டன: 1) சென்னை ஆளுநர் வில்லியம் பெண்டிங் பிரபுவும், சென்னை தளபதி சர் ஜான் கீட்டோக்கும் பதவி நீக்கம் செய்யப்பட்டனர் (1807). 2) புதிதாகப் புகுத்தப்பட்ட "இராணுவக் கட்டுப்பாடுகள்" விலக்கிக் கொள்ளப்பட்டன. 3) வேலூர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த திப்பு சுல்தானின் குடும்பத்தினர் வங்காளத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். 4) புதிதாக சென்னை ஆளுநர் பொறுப்பேற்ற சர் ஜார்ஜ் பார்லோ (ளுசை புநழசபந டீயசடழற) மக்களின் சாதி-சமய உணர்வுகளைப் புரிந்து கொண்டு செயல்பட்டார் சமயப் பரப்பாளர்களின் நடவடிக்கைகளை நெறிப்படுத்தினார். 5) கம்பெனி அதிகாரிகள் மத சம்மந்தமான நடவடிக்கைகளில் அக்கறை காட்டுவது கணிசமாகக் குறைந்தது. 6) கிளர்ச்சி தோற்றாலும் இதன் பாதிப்பு தென்னகத்தின் பல பகுதிகளில் பிரதிபலித்தது. ஐதராபாத், பெங்களூர், வாலாஜாபாத், காரைக்கால் போன்ற இடங்களில் கலகங்கள் தோன்றி உடனடியாக அடக்கப்பட்டன. கம்பெனி இராணுவத்தில் சிப்பாய்களின் எண்ணிக்கையைக் குறைத்து ஆங்கிலப் போர் வீரர்களின் எண்ணிக்கையை அதிகரித்து இராணுவ அமைப்பை மறுசீரமைத்தனர். இதன் மூலம் கம்பெனியின் கட்டுப்பாடு அதிகரிக்கப்பட்டு வலுவாக்கப்பட்டது. கிளர்ச்சியின் போது கோட்டையைக் காப்பாற்றப் போராடிய 69-வது ரெஜிமெண்டாருக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது.

மதிப்பீடு

வேலூர்க் கிளர்ச்சி ஒரு நாள் நிகழ்ச்சி. வேலூர்க் கோட்டைக்குள் 1806 ஜூலை 10 ஆம் தேதி நள்ளிரவுக்குப் பின் துவக்கப்பட்ட இக்கிளர்ச்சி மறுநாள் நண்பகலுக்குள் முறியடிக்கப்பட்டது. முதல் முறையாக ஆவணப்படுத்தப்பட்ட ஆங்கிலேயருக்கு எதிரான நிகழ்ச்சி வேலூர்க் கிளர்ச்சிதான் என்பது குறிப்பிடத்தக்கது. வேலூர்க் கிளர்ச்சி கம்பெனி ஆட்சிக்கு எதிரான சிப்பாய்க் கலகமே என்கிறார் பேராசிரியர் ஜோசப்திவியன். இந்தக் கிளர்ச்சி 1857 கிளர்ச்சிக்கான ஒத்திகை என்று

குறிப்பு

எழுதியுள்ளார் வி.டி.சவார்க்கர். தென்னிந்தியக் கிளர்ச்சியால் ஊக்குவிக்கப்பட்ட கிளர்ச்சிக்காரர்கள் மேற்கொண்ட இறுதி விடுதலைப் போராட்ட முயற்சியே வேலூர்க் கிளர்ச்சி என்பது கே.ராஜய்யனின் வாதம். வேலூர் நிகழ்ச்சி தேசியம் சார்ந்த (proto-nationalism) எழுச்சி என்று கருதுகிறார் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகப் பேராசிரியர் கே.ஏ.மணிக்குமார். வடஇந்திய வரலாற்றாளர்கள் வேலூர்க் கிளர்ச்சியை வெறும் சிப்பாய்க் கலகம் என்று கருதி ஒதுக்கிவிட்டதாக வருத்தம் தெரிவித்துள்ளார் ஏ.ஆர்.வெங்கடாசலபதி.

மக்கள் பங்கேற்காத வேலூர்க் கிளர்ச்சியை முதல் விடுதலைப் போராட்டம் எனக் கருதுவது பொருந்தாக் கூற்றாகும். பூலித்தேவன், வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை, மருது பாண்டியர்கள் துவக்கிய ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சிகளின் இயல்பான வளர்ச்சியே வேலூர்க் கிளர்ச்சியாகும். இக்கிளர்ச்சி பல வகையிலும் 1857 கிளர்ச்சிக்கான முன்னோடியாகும். வேலூர்க் கிளர்ச்சியை சாதாரண சிப்பாய்க் கலகம், விளைவுகளற்ற வீழ்ச்சி, கோப்பையில் எழுந்த கொந்தளிப்பு எனக் கூறுவது அதன் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடுவதாகும்.

முதல் விடுதலைப் போராட்டமா?

தமிழ் நாட்டு வேலூர்க் கிளர்ச்சியை (1806) வடநாட்டுக் கிளர்ச்சி (1857)யோடு ஒப்பிட்டுப் பார்ப்பது வழக்கமாகிவிட்டது. அதற்குக் காரணம் இரு கிளர்ச்சிகளையும் சிப்பாய்கள் முன்னின்று நடத்தியதேயாகும். காரல் மார்க்ஸ் (Karl Marx) நியூயார்க் டிரிபூன் (நேற லுழசம வுசஷைரநெ, 1857) பத்திரிகையில் முதன் முறையாக 1857 கிளர்ச்சியை முதல் இந்திய விடுதலைப் போராட்டம் என்று குறிப்பிட்டார். பின்னர் 1909 இல் வி.டி.சவார்க்கர், இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு என்ற நூலை மராத்தி மொழியில் எழுதினார். அவருக்குப் பின் கே. இராஜய்யன் தென்னிந்திய கிளர்ச்சியை முதல் விடுதலைப் போராட்டம் என்று வாதிட்டார். வேலூர்க் கிளர்ச்சியை முதல் விடுதலைப் போராட்டம் என்று கருதுவோரும் உண்டு. பஞ்சாபியர் முதல் சீக்கியப் போரை (1845-1846) முதல் விடுதலைப் போர் என்று வாதிட்டனர். 1857 கிளர்ச்சியை முதல் விடுதலைப் போர் என்று குறிப்பிடுவதை எதிர்த்து சில தென்னிந்திய வரலாற்றாளர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். 2007 இல் இந்திய அரசு 1857 கிளர்ச்சியின் 150வது நினைவு விழாவைக் கொண்டாடியது. 2006-ல் மத்திய அரசு வேலூர் கிளர்ச்சியின் நினைவு அஞ்சல் முத்திரையை வெளியிட்ட போது தமிழ் நாட்டு அரசாங்கம் வேலூர் கிளர்ச்சிதான் முதல் விடுதலைப் போராட்டம் என்பது அங்கீகரிக்கப்பட்டதாக அறிவித்தது. தேசிய உணர்வின்றி, மக்களின் பிரதான பங்கின்றி மேற்கொள்ளப்பட்ட 1806 வேலூர்க் கிளர்ச்சியையும், 1857 கிளர்ச்சியையும் முதல் இந்திய விடுதலைப் போராட்டம் என்று வர்ணிப்பது வரலாற்றுத் திரிபு ஆகும்.

குறிப்பு

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

10. வேலூர்க் கிளர்ச்சியின் போது சென்னை ஆளுநராக இருந்தவர் யார்?

11. "குல்லாய் பற்றிய மனக்குறை" தான் வேலூர்க் கிளர்ச்சிக்கான ஒரே காரணம் என்று கூறியது யார்?

12.12. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

1. சுல்பிகர் அலிகான்
2. நெவாயத் நவாபுகள், வாலாஜா நவாபுகள்
3. நவாப் முகமது அலி
4. கான்சாகிபு
5. தளபதி மான்சென்
6. 30-வது
7. தீரன் சின்னமலை
8. பத்தொன்பதாம் நூற்றாண்டின்
9. இராமன் நாயக்கர்
10. வில்லியம் பெண்டிங் பிரபு
11. சர் தாமஸ் மன்றோ

12.13. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

குறுகிய வினாக்கள்

1. ஆர்க்காட்டு நவாபுகள் குறித்து சிறு குறிப்பு எழுதுக.
2. கான்சாகிப்பின் சாதனைகளை எழுதுக.
3. கம்பெனிக்கு எதிரானக் கிளர்ச்சி குறித்து சிறு குறிப்பு எழுதுக.
4. வேலு நாச்சியாரின் ஆட்சி குறித்து எழுதுக.
5. திருச்சிப் பிரகடனம் குறித்து விளக்குக.

விரிவான வினாக்கள்

1. நவாபுகள் நிர்வாகம் குறித்து கட்டுரை எழுதுக.
2. வீரபாண்டிய கட்டபொம்மனின் வளர்ச்சி மற்றும் வீழ்ச்சி குறித்து விவாதி.
3. மருது சகோதரர்களின் போர் திறமை குறித்து விவரி.

4. தென்னிந்தியக் கிளர்ச்சிக்கான காரணங்களை கூறுக.
5. வேலூர்க் கிளர்ச்சி குறித்து கட்டுரை எழுதுக.

குறிப்பு

12.14. கூடுதல் வாசிப்புகள்

Rajayyan K. History of Tamil Nadu

பிள்ளை கே.கே. தென்னிந்திய வரலாறு

Nilakanda Sastri K.N. A History of South India

Sathianathair R. History of India

வெங்கடேசன் க. தற்கால தமிழ்நாட்டு வரலாறு

இராமசாமி அ. தமிழ் நாட்டு வரலாறு

CHINNIAN P. The Vellore Mutiny 1806: The First Uprising Against the British Kindle Edition

அலகு - 13

பிரிட்டிஷ் நிர்வாகம் - ஆங்கிலக் கல்வி அறிமுகம் - தமிழ் வளர்ச்சி - அரசியல் கட்சிகளின் எழுச்சி - நீதிக்கட்சியின் எழுச்சி மற்றும் தோல்வி - சுயமரியாதை இயக்கம்

பாட அமைப்பு

13.1. முன்னுரை
13.2. நோக்கங்கள்
13.3. ஆங்கிலேயர் நிர்வாகம்
    13.3.1. மாநில நிர்வாகம்
    13.3.2. மாவட்ட நிர்வாகம்
    13.3.3. கிராம நிர்வாகம்
    13.3.4. நீதி மன்ற நிர்வாகம்
    13.3.5. காவல்துறை நிர்வாகம்
    13.3.6. சிறைச்சாலை நிர்வாகம்
13.4. ஆங்கிலக் கல்வி அறிமுகம்
    13.4.1. மெக்காலே தீர்வு

குறிப்பு

13.4.2. தாம்சான் திட்டம்
13.4.3. ஸ்டான்லியின் கல்விக் குறிப்பு
13.4.4. உட்டின் கல்வித் திட்டம், 1854
13.4.5. கல்விச் சீர்திருத்தம்
13.4.6. மன்றோவின் கல்விக் கொள்கை
13.5. தமிழ் வளர்ச்சி
13.6. அரசியல் கட்சிகளின் எழுச்சி
13.6.1. நீதிக்கட்சி
13.6.2. சுயராஜ்யக் கட்சி
13.6.3. ஆதிதிராவிடர் ஜனசபை
13.6.4. சென்னை பிராமணரல்லாதார் சங்கம்
13.6.5. சென்னை திராவிடர் சங்க
13.6.6. தேர்தல் திருப்புமுனை
13.7. நீதிக்கட்சியின் தோற்றம்
13.7.1. பிராமணரல்லாதார் பிரகடனம்
13.7.2. நீதிக்கட்சி ஆட்சி, 1920-1937
13.7.3. சட்டச் சாதனைகள்
13.7.4.ஆட்சியின் வீழ்ச்சி
13.7.5. நீதிக்கட்சியின் சாதனைகள்
13.8. சுயமரியாதை இயக்கம்
13.8.1. பெரியார் ஈ.வெ. இராமசாமி (1879-1973)
13.8.2. இயக்கத்தின் குறிக்கோள்கள்
13.8.3. சுயமரியாதை இயக்கத்தின் சாதனைகள்
13.9.உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்
13.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
13.11. கூடுதல் வாசிப்புகள்

13.1. முன்னுரை

1600 டிசம்பர் 31 ஆம் தேதி பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி துவக்கப்பட்டது. அதன் பின் பிரான்சிஸ் டே சென்னை மீனவர் குப்பத்தை வாங்கி (1639) பின்னர் அங்கு புனித ஜார்ஜ் கோட்டை கட்டப்பட்டதிலிருந்து (1641) ஆங்கிலேயர் தமிழ் நாட்டில் நிலை கொண்டனர். 17 ஆம் நூற்றாண்டில் காலூன்றிய ஆங்கிலேயர் 18 ஆம் நூற்றாண்டில் தங்கள் ஆதிக்கத்தைத் தமிழ் நாட்டில் விரிவுபடுத்தி, 19

குறிப்பு

ஆம் நூற்றாண்டுத் துவக்கத்தில் தமிழ் நாட்டுக்குச் சொந்தக்காரர்கள் ஆகிவிட்டனர். தமிழ் நாட்டு ஆட்சியாளர்களிடையே நிலவிய உட்பகையும், போட்டி பொறாமையும், பேராசையும் ஆங்கிலேயர் தமிழ் நாட்டை அபகரித்துக் கொள்வதற்கான வாய்ப்பைக் கொடுத்தது. வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட ஆங்கில வர்த்தகக் கம்பெனி தமிழ் நாட்டின் ஆட்சி அமைத்தது. சென்னை இராஜதானி (Madras Presidency) புனித ஜார்ஜ் கோட்டை என்றும் அழைக்கப்பட்டது. அன்றைய சென்னை இராஜதானி கிட்டத்தட்ட இன்றைய தென்னிந்தியாவை உள்ளடக்கி இருந்தது. அது தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகள் பேசிய கலப்பட மாநிலமாகத் திகழ்ந்தது. இந்த ஒருங்கிணைந்த இராஜதானி (Composite Presidency) ஆங்கில ஆளுநரால் (Governor) ஆட்சி செய்யப்பட்டது. வில்லியம் பெண்டிங் பிரபு (டுழசன றுடைடயைஅ டீநவெஎைஒம) சென்னையின் ஆளுநர் பொறுப்பேற்றார் (1803-1806). இந்த பின்னணியில் இந்த அத்தியாயத்தை காணலாம்.

13.2. நோக்கங்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர் கீழ் கண்டவற்றை அறிய முடியும்

- ஆங்கிலேயர் கால நிர்வாகம் பற்றி விளக்குகிறது.
- தமிழகத்தின் கல்வி வளர்ச்சியில் ஆங்கிலேயரின் அர்ப்பணிப்பை பற்றி தெரிய உதவுகிறது.
- அரசியல் கட்சிகளின் எழுச்சி மற்றும் அதன் சாதனைகளை விவரிக்கிறது.
- நீதிக்கட்சியின் வளர்ச்சி குறித்து விளக்குகிறது.
- தமிழகத்தில் சுயமரியாதை இயக்கத்தின் தாக்கம் பற்றி விவாதிக்கிறது.

13.3. ஆங்கிலேயர் நிர்வாகம்

13.3.1. மாநில நிர்வாகம்

ஆளுநர் சென்னை இராஜதானியின் ஆட்சித் தலைவர் (Executive Head). இவர் இராஜதானி சம்மந்தப்பட்ட அனைத்து அதிகாரங்களையும் பெற்றிருந்தார். எனவே, இவர் சுதந்திரமாகவும், தன்னிச்சையாகவும் செயல்பட்டார். ஆளுநருக்கு ஆலோசனை கூற ஒரு அவை இருந்தது. இந்த அமைப்பு ஆளுநர் அவை (Governor's Council) என்று அழைக்கப்பட்டது. துவக்கத்தில் இந்த அவையில் ஆங்கிலேயர் மட்டுமே உறுப்பினர்களாக இருந்தனர். இதன் மூலம் சட்டமியற்றும் அதிகாரமும், சட்டத்தைச் செயல்படுத்தும் அதிகாரமும் ஆளுநரிடம் குவிக்கப்பட்டிருந்தது. 1773 இல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில்

குறிப்பு

இயற்றப்பட்ட ஒழுங்குமுறை சட்டத்தின் (Regulating Act 1773) மூலம் மாநில ஆளுநர் வங்காளத்திலிருந்து செயல்பட்ட ஆளுநர் அதிபரின் (Governor General) அதிகாரக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டார். 1833 இல் கொண்டு வரப்பட்ட பட்டயச் சட்டம் (Charter Act, 1833) ஆளுநரின் சட்டமியற்றும் அதிகாரத்தைப் பறித்துக் கொண்டது. பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டங்கள் (1861, 1909, 1919, 1935) படிப்படியாக ஆளுநரின் அதிகாரங்களை சட்டமன்றத்திடம் (Legislative) ஒப்படைத்தன. ஆளுநர் அவை தனிப் பெரும் அதிகாரத்தைக் கொண்ட சட்டமன்ற மாயிற்று. அதுவரை ஆளுநரும் அவரது அவையினரும் மாநில நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டனர்.

தலைமைச் செயலகம் துவக்கம்

புனித ஜார்ஜ் கோட்டையைத் தலைமையகமாகக் கொண்டு சென்னை இராஜதானி உருவாக்கப்பட்டது (1654). அதன் தலைமைச் செயலகம் (Secretariat) புனித ஜார்ஜ் கோட்டையில் 1670 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. முதலில் பொதுத் துறை (Public Department) துவக்கப்பட்டது. சென்னை இராஜதானியின் தலைமைச் செயலகம் என்று அழைக்கப்பட்ட இத்துறை அரசாங்கத்தின் அனைத்து விவகாரங்களையும் கவனித்துக் கொண்டது. போர்கள் மற்றும் கூட்டமைப்புகள் மூலம் கம்பெனியின் நிலப்பரப்பு வெகுவாக விரிவடைந்தவுடன் புதிய துறைகள் உருவாக்கப் பட்டன. 1752 இல் இராணுவத் துறை (Military Department)யும், 1774இல் வருவாய் துறை (Revenue Department)யும் துவக்கப்பட்டன. வருவாய் துறை ஆரம்பிக்கப்பட்டபின் இரு செயலர் முறை நடைமுறைக்கு வந்தது. ஒரு செயலர் அரசியல், இராணுவ மற்றும் செயலக விவகாரங்களையும், மற்றொருவர் பொது மற்றும் வருவாய்த் துறைகளைக் கவனித்துக் கொண்டார்.

நான்கு மாற்றங்கள்

1786-ஆம் ஆண்டு தலைமைச் செயலகம் சீரமைக்கப்பட்டு நான்கு மன்றங்கள் (டீழயசனள) உருவாக்கப்பட்டன: 1) வருவாய் மன்றம் 2) வர்த்தக மன்றம் 3) இராணுவ மன்றம் 4) மருத்துவ மற்றும் வணிகக் கடற்படை. இம்மன்றங்களுக்கு உதவி செய்யத் துணைமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1769 இல் அரசாங்க இரகசியங்களைக் காப்பாற்ற இரகசிய துறை (Secret Department) உருவாக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1798 இல் நீதித்துறை (Judicial Department) துவக்கப்பட்டது. 1800 இல் தலைமைச் செயலகத்தில் மாபெரும் மாற்றம் செய்யப்பட்டது. ஒரு தலைமைச் செயலர் (Chief Secretary) பதவியும், 3 செயலர்கள் (Secretaries) பதவியும் புதிதாக உருவாக்கப்பட்டன. இவற்றோடு அரசியல் துறை (Political Department)யும் அமைக்கப் பட்டது.

புதிய துறைகள்

1811-க்கும் 1818-க்கும் இடைப்பட்ட காலத்தில் 5 புதிய துறைகள் சேர்க்கப்பட்டன: 1) நிதி (Finance, 1811) 2) வர்த்தகம் (Commerce,

குறிப்பு

1815) 3) சட்டம் (Law, 1815) 4) வெளி விவகாரம் (Foreign, 1816) 5) கோயில்கள் (Ecclesiastical, 1818). 1831 இல் துறைகளை மாற்றாமல் தலைமைச் செயலகம் மாற்றி அமைக்கப்பட்டது. 1838-1853-க்குள் 3 புதிய துறைகள் உருவாக்கப்பட்டன: 1) கடல் வாணிபம் (Marine, 1838) 2) பொதுப்பணி (Public Works, 1843) 3) இரயில்வே (Railway, 1853). நிர்வாக வசதி கருதி 1855 இல் தலைமைச் செயலகம் மறுசீரமைக்கப்பட்டது. இந்த திருத்தி அமைக்கப்பட்ட தலைமைச் செயலகம் 1855 லிருந்து 1857 இல் கம்பெனி ஆட்சிக்குப் பதில் பிரிட்டிஷ் ஆட்சி நடைமுறைக்கு வந்த வரை நீடித்தது.

13.3.2. மாவட்ட நிர்வாகம்

ஆட்சியர்

சென்னை இராஜதானி பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு ஆட்சியர் (Collector) பொறுப்பாக்கப்பட்டார். மாவட்ட ஆட்சியர் பதவி பிரிட்டிஷார் விட்டுச் சென்ற நிலையான நன்கொடைகளில் ஒன்றாகும். 1773 இல் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி நிலவரி நிர்வாகத்தை நேரடியாக மேற்கொள்வது என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவை எடுத்தது. நிலவரியை வசூலிக்க மாவட்ட ஆட்சியரை (District Collector) நியமித்தது. காலப்போக்கில் இவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் அவதார புருஷர்களாகிவிட்டனர். ஆட்சியர் மாவட்ட நிர்வாகத்தின் அச்சாணி போன்றவர் இவரைச் சுற்றியே மாவட்ட நிர்வாகம் சுழன்றது. இவரன்றி மாவட்டத்தில் எதுவும் அசையாது, நகராது என்ற நிலை ஏற்பட்டது. அதற்குக் காரணம் மாவட்ட ஆட்சியரின் நிலவரி வசூலிக்கும் அதிகாரத்தோடு மாவட்டத்தின் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்கான அதிகாரமும், நீதி வழங்கும் அதிகாரமும் சேர்ந்து கொண்டதாகும். இதன் மூலம் மாவட்டத்தில் செயல்பட்ட பிற அதிகாரிகளும் இவருக்குப் பொறுப்பானார்கள். அதனால் தான் மாவட்ட ஆட்சியர் 'மாவட்டத்தின் தந்தை தாய்" என்றும் "அரசாங்கத்தின் அவதாரம்" என்றும் வர்ணிக்கப்பட்டார். ஜி.டபிள்யு. ஸ்டீவன்ஸ் (G.W.Stevens) மேலும் ஒருபடி சென்று மாவட்ட ஆட்சியரை "சர்வவியாமி" (Omnipotence) என்றே குறிப்பிட்டார்.

13.3.3. கிராம நிர்வாகம்

தமிழ்நாடு ஆங்கிலக் கம்பெனியின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்ட போது கிராம நிர்வாகத்தின் நிலை மிகவும் மோசமாக இருந்தது. தமிழ்நாடு குழப்பக் காடாகக் காட்சி அளித்தது. நாயக்கர்களும், நவாபுகளும், மராத்தியரும் தமிழ் நாட்டை, குறிப்பாக கிராமங்களை, போட்டி போட்டுக் கொண்டு சுரண்டிக் கொண்டிருந்தனர். கிராமப்புற சர்வாதிகாரிகளான பாளையக்காரர்கள் கிராம மக்களை, குறிப்பாக விவசாயிகளை வரிச்சுமையால் சொல்லொணா

துன்பங்களுக்குள்ளாயினர். கிராமப் பஞ்சாயத்துக்கள் இருக்கும் இடம் தெரியாமல் இருந்தன.

குறிப்பு

ஆங்கிலேயரின் அரிய சாதனை

1775-லிருந்து ஆங்கிலேயர் தமிழ் நாட்டின் மூன்று தீமைகளுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்தனர்: 1) தலத் தலைவர்களின் கீழ்ப்பணியாமை 2) முறையாகத் தொகுக்கப்பட்ட சட்டங்கள், நீதிமன்றங்களோ இல்லாமை 3) நிலவரி மதிப்பீடு மற்றும் நிலவரி முறை பற்றிய நிலையற்ற தன்மை. 1794 இல் சென்னை ஆளுநராக இருந்த ஹோபார்ட் பிரபு (Lord Hobart) பாளையக்காரர்களுக்குப் பதில் மாவட்ட ஆட்சியர்களை (District Collector) நியமித்தார். இப்புதிய அரசாங்க அதிகாரிகள் காட்டு தர்பார் நடத்திக் கொண்டிருந்த தலத் தலைவர்களை (Local Chieftains) அடங்கி, அவிழ்க்கப்டாமலிருந்த மர்ம முடிச்சுகளை அவிர்த்து, பாரம்பரிய உள்ளாட்சி நிறுவனங்களை மீட்டு, புதுப்பித்து, சீர்திருத்தி நடைமுறைக்குக் கொண்டு வரமுடியும் என்பதைக் கண்டுபிடித்தனர்.

மீட்பு முயற்சி

தமிழ் நாட்டின் பாரம்பரிய பஞ்சாயத்து முறையை மீட்கும் பணியில் லியோனல் பிளேஸ் (Leonel Place), கர்னர் அலெக்சாண்டர் ரீட் (Col.Alexander Read), ஜான் ஹாஹ்சன் (John Hogson), சர் தாமஸ் மன்றோ (Sir Thomas Munro) போன்றோர் முழு மூச்சுடன் ஈடுபட்டனர். கம்பெனி ஜாகீர்களின் ஆட்சியராக இருந்த வியோனல் பிளே (1794-1798) அவரது ஆட்சிக்குட்பட்ட கிராமங்களைப் பற்றிய விவரங்களை அறிந்தார். கிராம ஆட்சி முறையை, குறிப்பாகக் கிராமக் கணக்கு முறையைப் புதுப்பித்து அதன் திறமையை அதிகரித்தார். அதேபோன்று, பாரமகாலின் ஆட்சியராக இருந்த கர்னல் அலெக்சாந்தர் ரீட் ஒவ்வொரு விவசாயியும் அதிகாரிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு யதார்த்த நிலையை அறிந்து அதற்கேற்ப கிராம நிர்வாகத்தை மாற்றி அமைத்தார். ஆங்கிலக் கம்பெனி திண்டுக்கல்லையும், பாரமகாலையும் பெற்ற பின்னர் தான் தமிழ் நாட்டில் திறமையான நிர்வாகம் துவங்குகிறது எனக் குறிப்பிட்டுள்ளார் ஏ.பி.கீத் (A.B.Keith). வருவாய் மன்ற (Board of Revenue) பிரதான உறுப்பினராக இருந்த ஜான் ஹாக்சன் தஞ்சாவூரில் கிராம நிர்வாக முறை திறமையாக செயல்பட்டு வருவதைக் கண்டறிந்தார். அங்கு மிராசுதாரர்களும், கிராமத் தலையாரிகளும் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தினாலும் கிராமக் கூட்டுப் பொறுப்போடு கிராம நிர்வாகம் செயல்பட்டு வருவதை அறிந்து மேலதிகாரிகளுக்குத் தெரிவித்தார். யாவற்றுக்கும் மேலாக சென்னை ஆளுநராக இருந்த சர் தாமஸ் மன்றோ (1761-1827) பாரம்பரிய கிராமப் பஞ்சாயத்து முறைக்கு உயிரூட்டினார்.

குறிப்பு

13.3.4. நீதி மன்ற நிர்வாகம்

பிரான்சிஸ் டே (Francis Dey) சென்னப்பட்டினத்தில் வாங்கிய நிலத்தில் புனித ஜார்ஜ் கோட்டை (Fort St.George) கட்டப்பட்டது (1640). கோட்டைக்கு உள்ளே ஆங்கிலேயர் வசித்த பகுதி வெள்ளை நகர் (White Town) என்றும், கோட்டைக்கு வெளியே உள்ளூர்வாசிகள் வசித்த இடம் கருப்பு நகர் (Block Town) என்றும் அழைக்கப்பட்டது. இந்த இரு நகர்களும் சேர்ந்த பகுதிதான் சென்னை (Madras) அப்போது சென்னை தான் முதல் இராஜதானி நகர் (Presidency Town) ஆகும். கம்பெனியின் முகவர் (Agent) சென்னையின் ஆட்சித் தலைவராக இருந்தார்.

சத்திர நீதிமன்றம்

1600 டிசம்பர் 31 ஆம் தேதி இங்கிலாந்தின் எலிசபெத் இராணி (Queen Elizebeth) வழங்கிய அரசு பட்டயம் (Royal Charter) பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனிக்கு குற்றவாளிகளைத் தண்டிக்கும் அதிகாரத்தை அளித்தது. சென்னையின் ஆட்சித் தலைவராக இருந்த கம்பெனி முகவர் உள்ளூர் பாரம்பரிய நீதி முறையில் தலையிட விரும்பவில்லை. எனவே அவர் கருப்பு நகரின் தலைவரி (Headman)டம் நீதி வழங்கும் பொறுப்பைக் கொடுத்தார். இவர் நீதி நிர்வாகத்தை வழக்கப்படி நடத்தி வந்தார். இது சத்திர நீதிமன்ற (Choultry Court) முறை என்று அழைக்கப்பட்டது. இது தமிழ் நாட்டின் கிராமப் பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்பட்ட மாற்றுப் பெயர் எனக் கருதலாம். கண்ணப்பா என்பவர் 1644-லிருந்து 1648 வரை சத்திர நீதிமன்ற நீதிபதியாக இருந்தார் என்று கூறப்படுகிறது.

சத்திர நீதிமன்றத்துக்கு வந்த வழக்குகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தன. முகவர் அல்லது உள்ளூர் தலைவர் இந்த மன்றத்துக்கு தலைமை தாங்கினர். 1644 ஆம் ஆண்டு பிராட்போர்டு (Bradford) என்ற காவல்படை வீரர் (Sergeant) கருப்பு நகரைச் சேர்ந்த ஒருவரைக் கொன்றுவிட்டார். கம்பெனி முகவர் இந்த கொலை வழக்கைத் தான் விசாரிக்காமல் கருப்பு நகர் தலைவரிடம் விட்டுவிட்டார். அவர் இக்கொலை தற்செயலாக நடந்தது என்று கூறி வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார். முகவருக்கும், கருப்பு நகர் தலைவருக்கும் சட்ட கல்வித் தகுதி இன்மையால் பல சட்டச் சிக்கல்கள் ஏற்பட்டன. சிக்கலான வழக்குகள் இங்கிலாந்தில் இருந்த மேலதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதனால் வழக்கு விசாரணைக்கு அசாதாரண காலதாமதம் ஆயிற்று. எனவே, சத்திர நீதிமன்றம் திருப்திகரமாக செயல்படவில்லை.

கப்பல் துறை நீதிமன்றம்

1683 ஆகஸ்டு 9 ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட பட்டயப்படி (Charter of 1683) குற்றம் சாரா (Civil) சட்டத்தில் பயிற்சி பெற்ற

குறிப்பு

ஒருவரையும், இரண்டு அனுபவமிக்க வணிகர்களையும் கொண்ட கப்பல்துறை நீதிமன்றம் (Court of Admiralty) அமைக்கப்பட்டது. இந்த நீதிமன்றம் வணிகக் குற்றங்கள், எல்லை மீறல், காயமேற்படுத்தல், தவறிழைத்தல் பற்றிய வழக்குகளை விசாரித்தது. இம்மன்றம் பற்றிய மேலும் இரு பட்டயங்கள் பிறப்பிக்கப்பட்டன (1686 ஏப்ரல் 12 ஜூலை 10). 1687 இல் இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்ட குற்றம்சாரா சட்டத்தில் (Civil Law) பயிற்சியும், அனுபவமுமிக்க சர் ஜான் பிக்ஸ் (Sir John Biggs) இந்த நீதிமன்றத்தின் முதல் நீதிபதி-வழக்கறிஞராக (Judge-Advocate) நியமிக்கப்பட்டார். இந்த நீதிமன்றம் குற்றம்சாரா, குற்றம் சார்ந்த, வணிகம் சம்மந்தப்பட்ட அனைத்து வழக்குகளையும் விசாரித்தது. குற்ற வழக்குகளை (Criminal Cases) வழக்குகளை விசாரிக்கும் போது மட்டும் நடுவர்களை (Jury)க் கலந்து கொண்டது. இந்த நீதிமன்றம் அமைக்கப்பட்டபின் சென்னை ஆளுநருக்கு இருந்த நீதித்துறை அதிகாரம் நீக்கப்பட்டது. அதன் விளைவாக, நிர்வாகத் துறை (Executive)யும், சட்டத்துறை (Judiciary)யும் தனித்தனி துறைகளாயின. இதன் மூலம் சென்னை இராஜதானி பிற இராஜதானிகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தது.

1692 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் கம்பெனி ஜான் டோல்பென் (John Dolben) என்ற சட்ட நிபுணரை சென்னை கப்பல் துறை நீதிமன்றத்தின் நீதிபதி-வழக்கறிஞராக நியமித்தது. ஆனால் அவர் 1694 இல் ஊழல் குற்றச்சாட்டுக்கு இலக்காகி பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவருக்குப் பதில் வில்லியம் பிரேசர் (William Fraser) என்பவர் இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்டார். அவருக்குப் பின் ஒரு வணிகர் வந்தார். அவர் பதவி விலகியதால் நீதிமன்ற பதிவாளர் (Court Registrar) அந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 1704 இல் அவரும் இங்கிலாந்துக்குச் சென்று விட்டதால் கப்பல்துறை நீதிமன்றம் சரியாக செயல்படவில்லை .

மேயர் நீதிமன்றம்

1686 ஆம் ஆண்டு சென்னை அரசாங்கம் சென்னை மக்கள் மீது வீட்டு வரி (House Tax) விதித்தது. ஆனால் சென்னைவாசிகள் அந்த வரியைக் கட்ட மறுத்து விட்டனர். இப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்காக ஆங்கிலேயரையும் இந்தியரையும் உள்ளடக்கிய ஒரு அமைப்பை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி 1686 செப்டம்பர் 29 ஆம் தேதி இங்கிலாந்தில் இருந்ததைப் போன்று சென்னையில் ஒரு மாநகராட்சி (Corporation) துவக்கப்பட்டது. அம்மன்றத் தலைவர் (Mayor). இவர் ஆங்கிலேயராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. முதல் சென்னை மாநகராட்சியில் 3 ஆங்கிலேயர் 3 இந்துக்கள் 3 யூதர்கள், ஆர்மீனியர்கள், 2 போர்ச்சுக்கீசியர்கள், 1 பிரெஞ்சுக்காரர் இடம் பெற்றிருந்தார்.

சென்னை மாநகராட்சி உறுப்பினர்களோடு 3 மூத்த நகராட்சிப் பிரதிநிதிகளைக் கொண்ட பதிவேட்டு நீதிமன்றம் (Court of Record)

குறிப்பு

உருவாக்கப்பட்டது. இதுவே மேயர் நீதிமன்றம் (Mayor's Court) என்று அழைக்கப்பட்டது. இந்த நீதிமன்றம் குற்றம்சாரா (Civil) குற்றம் சார்ந்த (Criminal) வழக்குகளை விசாரித்தது. மேயர் நீதிமன்றம் அபராதம், சிறை தண்டனை, கசையடி போன்ற தண்டனைகளைக் கொடுக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தது. இம்மன்றத் தீர்ப்புக்கு எதிரான மேல் முறையீடுகளை கப்பல் துறை நீதிமன்றம் விசாரித்தது. மேயருக்கும் மாநகராட்சி உறுப்பினர்களுக்கும் சட்ட ஆலோசனை கூற நீதிமன்றப் பதிவேட்டாளர் (Recorder of the Court) நியமிக்கப்பட்டார். சர் தாமஸ் ஸ்டேன்ஜ் (Sir Thomas Strange) முதல் பதிவேட்டாளராகப் பொறுப்பேற்றார். 1712 இல் மேயர் நீதிமன்றம் சுதேசிகளுக்கு மரண தண்டனை வழங்கும் அதிகாரத்தைப் பெற்றது.

சென்னை உயர்நீதிமன்றம்

1801 செப்டம்பர் 4 ஆம் தேதி சென்னை உச்ச நீதிமன்றம் (Supreme Court of Madras) உருவாக்கப்பட்டது. 1861 ஆகஸ்டு 6 ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட இந்திய உயர்நீதிமன்ற சட்டத்தின்படி (Indian High Court Act, 1861) சென்னை உச்ச நீதிமன்றம், உயர்நீதிமன்றமாக மாற்றப்பட்டது. 1862 ஜூன் 26 ஆம் தேதி விக்டோரியா இராணி (Queen Victoria)யால் பிறப்பிக்கப்பட்ட ஆணையால் (Letter of Patent) சென்னை உயர்நீதிமன்றம் துவக்கப்பட்டு 1862 ஆகஸ்டு 15 ஆம் தேதி முறையாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு சரியாக 85 ஆண்டுகளுக்குப் பின் இந்தியா விடுதலை அடைந்தது.

மாவட்ட நீதிமன்றங்கள்

1802 ஆம் ஆண்டு கவனர்-ஜெனரல் பிறப்பித்த உத்திரவின் (Regulations, 1802)படி மாவட்ட நீதிமன்றங்கள் (Zilla Courts) அமைக்கப்பட்டன. இம்மாவட்ட நீதிமன்றங்கள் சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதி-நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டன. மாவட்ட நீதிமன்றங்கள் வருவாய் சம்மந்தப்பட்ட வழக்குகளை விரைந்து விசாரிக்க பயன்படுத்தப்பட்டன. அரசாங்கம்-நிலச் சுவான்தாரர்கள்-விவசாயிகள் ஆகியோருக்கிடையேயான வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குவதில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது. அதற்கேற்ப மாவட்ட நீதி நிர்வாகத்தில் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மாவட்ட நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு எதிரான மேல்முறையீடுகளை விசாரிப்பதற்காக மாநில மேல்முறையீட்டு மன்றம் (Provincial Court of Appeal) உருவாக்கப்பட்டது. ஆனால் இம்மன்றம் 1843 இல் நீக்கப்பட்டது.

கிராம நீதிமன்றங்கள் மன்றோ கமிஷன்

நீதி நிர்வாகத்தில் காணப்பட்ட குறைபாடுகளைக் களைவதற்காக 1812 ஆம் ஆண்டு தாமஸ் மன்றோவின் தலைமையின் கீழ் ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. அக்குழு நீதித்துறையின் செயல்பாட்டை மதிப்பீடு செய்து அதன் அறிக்கையை அரசாங்கத்துக்கு அளித்தது. 1816-இல் மன்றோ சென்னை ஆளுனரானபின் அவர் பின்வரும்

குறிப்பு

பரிந்துரைத்த சீர்திருத்தங்களை செயல்படுத்தினார்: 1) இந்தியர்களுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்க மாவட்ட முன்சீப்கள் நியமிக்கப்பட்டனர் 2) மாஜிஸ்ட்ரேட் அலுவலகம் மாவட்ட ஆட்சியருக்கு மாற்றப்பட்டது 3) மாவட்ட நீதிபதிகள் குற்ற வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் பெற்றனர் 4) யாவற்றுக்கும் மேலாக வழக்குகளை விசாரித்து தீர்ப்பளிக்கும் அதிகாரம் கிராம முன்சீப்களுக்கு வழங்கப்பட்டது. தாமஸ் மன்றோவின் பரிந்துரைகளின்படி 1816 ஆம் ஆண்டு கிராம நீதி நிர்வாக முறை மாற்றி அமைக்கப்பட்டது. பஞ்சாயத்துக்கள் கிராம முன்சீப் மன்றங்கள் என்று அழைக்கப்பட்டன. கிராமத் தலைவர் கிராம முன்சீப் ஆனார். இவர் குறிப்பிட்ட மதிப்புடைய வழக்குகளை விசாரித்தார். கட்சிக்காரர்களின் ஒப்புதலோடு இவர் அதிக மதிப்புடைய சொத்து சம்மந்தமான வழக்குகளையும் விசாரித்தார். யாவற்றுக்கும் மேலாக கிராம முன்சீப் வழக்குகளை விசாரிக்க ஐவர் கொண்ட கிராமப் பஞ்சாயத்தைக் கூட்டுவதற்கு வழி வகுக்கப்பட்டது. இதன் மூலம் தமிழ் நாட்டின் பாரம்பரிய பஞ்சாயத்து நீதி முறையும் நவீன நீதிமன்ற முறையும் முன்கவனத்தோடு இணைக்கப்பட்டன. பாரம்பரிய நீதி முறைக்கு மதிப்பும் முக்கியத்துவமும் கொடுத்து நீதித்துறையை மாற்றி அமைத்தார் மன்றோ என்று புகழாரம் சூட்டுகிறார் கே.ராஜய்யன்.

13.3.5. காவல்துறை நிர்வாகம்

சென்னை இராஜதானியில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும், நீதித்துறை திறமையுடன் செயல்படவும் முறையாக அமைக்கப்பட்ட காவல்துறை (Police) இன்றியமையாதது. தமிழ் நாட்டில் பரம்பரையாக கிராமங்களில் தலையாரிகளும், நகரங்களில் கொத்வால்களும் காவல் பொறுப்பை மேற்கொண்டிருந்தனர். இப்பாரம்பரிய முறையில் தக்க மாற்றங்களைச் செய்வது பற்றி பரிசீலிப்பதற்காக அமைக்கப்பட்ட மன்றோ கமிஷனின் (1816) பரிந்துரையின்படி சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பு மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டுகளிடம் (District Magistrates), தாசில்தார்கள் (Thasildars), கிராமத் தலையாரிகள் ஆகியோரிடையே கொடுக்கப்பட்டது. இவர்களுக்கு உதவி செய்ய பணியாளர்கள் (Peons) நியமிக்கப்பட்டனர். எனினும், இவர்களிடம் வரி வசூலும், நீதி நிர்வாகமும் இணைந்து இருந்தமையால் இவர்கள் வரி வசூலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நீதி நிர்வாகத்தைப் புறக்கணித்துவிட்டனர். காவல்துறை சீர்திருத்தங்களால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. காவல்துறை அடக்கு முறைக்கும், திறமை யின்மைக்கும், ஊழலுக்கும் அவப்பெயர் பெற்றது. குற்றங்கள் கட்டுப்பாடின்றி அதிகரித்தன. திருட்டுக் கும்பல் மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்தது. எனவே, ஆங்கிலக் கம்பெனி திருட்டைத் தடுப்பதற்கான முயற்சியை மேற்கொண்டது (1856).

சென்னை ஆளுநர் ஹாரிஸ் பிரபு (Lord Harris) பின்வரும் பாதுகாவல் சீர்திருத்தங்களைச் செய்தார்: 1) பாதுகாவலர் படை ஒரு

குறிப்பு

தலைமையின் கீழ் கொண்டு வரவேண்டும் 2) பாதுகாவலர்களிடையே ஒரே மாதிரியான கட்டுப்பாட்டு முறை இருக்க வேண்டும் 3) பொது அமைதியை ஏற்படுத்தி, பொது மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் 4) குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுதல் வேண்டும் 5) மக்களின் உணர்வு, குற்றவாளிகளின் நடமாட்டம், இராஜதானியின் பாதுகாப்பு நிலைபற்றிய திட்பநுட்பமான தகவல்களை சேகரித்தல் 6) காவல் நிலையங்களை ஒருங்கிணைத்துக் கண்காணித்தல். பாதுகாவலர்களின் கடமைகளும், பொறுப்புகளும் வரையறுக்கப்படல்.

ஹாரிசின் சீர்திருத்தங்களை இயக்குநர்கள் மன்றம் (Court of Directors) ஏற்றுக் கொண்டது. டபிள்யு.இராபின்சன் (W.Robinson) காவல்துறை கமிஷனராக நியமிக்கப்பட்டார் (1858). சென்னை காவல்படை கமிஷனர் (Commissioner) கண்காணிப்பாளர்கள் (Superintendents) ஆய்வாளர்கள் (ஐளெிநஉவழசள) தலைமைக் காவலர்கள் (Head Constables) காவலர்கள் (Constables) ஆகியோர் அடங்கிய முறையான படிமுறை அமைப்பாயிற்று. கிராமக் காவல் முறைக்கு கிராமக் காவல் ஆய்வாளர் (Village Police Inspector) பொறுப்பாக்கப்பட்டார். காவலர் கட்டுப்பாட்டுக்கும், பயிற்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இச்சீர்திருத்தங்களின் மூலம் தமிழ்நாட்டு காவல் துறை நிர்வாகத்துக்குப் புதிய அமைப்பும், நோக்கும், போக்கும் கிடைத்தன. திறமையான காவல் படைக்கான பலமிக்க அடிப்படை அமைக்கப்பட்டது.

13.3.6. சிறைச்சாலை நிர்வாகம்

ஒழுங்கான, முறையான, திறமையான சிறைச்சாலை நிர்வாகம் இன்மையால் கைதிகள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டனர் விசாரணையின்றி சத்திரங்களிலும், கோயில்களிலும், பராமரிப்பற்ற கட்டடங்களிலும் சரியான உணவு, கட்டுமான, காற்றோட்ட வசதிகளின்றி விலங்குகள் போன்று அடைத்து வைக்கப்பட்டனர். சிறைச்சாலை நிர்வாகம் காவல்துறை சீரமைப்பின் பகுதியாகக் கருதப்பட்டு சிறைச்சாலை அமைப்பில் அடிப்படை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. சிறைச்சாலைகளைப் போதிய அடிப்படை வசதிகளோடு கட்டுதல் கைதிகளை முறையாக விசாரணை செய்து, தண்டித்தபின் சிறையில் அடைத்தல் அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதி செய்து கொடுத்தல் குற்றவாளிகளின் நடத்தை மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் பற்றிய விரிவான விதிகள் வகுக்கப்பட்டன. இருப்பினும் பல குறைபாடுகள் இருக்கவே செய்தன.

மதிப்பீடு

தமிழ் நாட்டைக் கைப்பற்றிய ஆங்கிலக் கம்பெனி நாட்டு நிர்வாகத்தை மாற்றி அமைப்பதில் முனைப்புடன் செயல்பட்டது. முதல் முறையாக தமிழ் நாட்டை ஒரு ஆட்சிக் குடையின்கீழ்க் கொண்டு

குறிப்பு

வந்தது கம்பெனி. தமிழ் நாட்டை மாவட்டங்களாகப் பிரித்து, அவற்றை மாவட்ட ஆட்சியரின் நிர்வாகத்துக்கு உட்படுத்தி, சென்னை இராஜதானிக்குத் தெளிவான உருவமும், வடிவமும் கொடுக்கப்பட்டது. தமிழ் நாட்டின் மாநில, மாவட்ட, கிராம நிர்வாக முறை மறுசீரமைக்கப்பட்டது. நீதி, காவல், சிறைச்சாலைத் துறைகள் நவீனமயமாக்கப்பட்டன. தமிழ் நாட்டின் வளர்ச்சிக்குக் கம்பெனி ஆட்சிக்கு அப்பாற்பட்டு செயல்பட்ட ஆங்கில மனிதாபிமானிகளின் (Humanists) பங்களிப்பு பாராட்டுக்குரியது.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. 1644-லிருந்து 1648 வரை சத்திர நீதிமன்ற நீதிபதியாக இருந்தவர் யார்?
2. கப்பல்துறை நீதிமன்றத்தின் முதல் நீதிபதி-வழக்கறிஞராக (Judge-Advocate) நியமிக்கப்பட்டார் யார்?
3. எப்போது மேயர் நீதிமன்றம் சுதேசிகளுக்கு மரண தண்டனை வழங்கும் அதிகாரத்தைப் பெற்றது.

13.4. ஆங்கிலக் கல்வி அறிமுகம்

நவீனமயமாதல்

அறிவையும், அறிவியலையும் அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுவதே தற்கால சமுதாயமாகும் (Modern Society). அறிவு சார்ந்த கல்வியே தற்கால சமுதாயத்தின் திறவுகோல். இத்தகைய நவீன கல்வியே மனிதனிடம் மறைந்து கிடக்கும் ஆற்றலை வெளிக்கொண்டு வருதல் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவது பொருளாதார உற்பத்தித் திறனைப் பெருக்குவது சமனற்ற சம்பிரதாயப் பிற்போக்குக் கல்வி முறைக்கு மாற்று வழியைக் கண்டுபிடிப்பது தடையற்ற அறிவு விரிவாக்கம் முற்போக்கு மனப்பான்மை வாழ்க்கை உயர்வுக்குத் தேவையான திறமைகள் சமுதாயப் பொறுப்பு தாராள சிந்தனை சமயம் சாரா நடுநிலைப் போக்கு பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் திறன் போன்றவை தற்காலமாதலின் அல்லது நவீனமாதலின் அடையாளங்கள் ஆகும். பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி பாரம்பரிய கல்வி முறையில் அடிப்படை மாற்றங்களைச் செய்து தமிழ் நாட்டில் கல்விப் புரட்சியைச் செய்தது.

தமிழ் நாட்டுக் கல்வி முறை

தமிழ் நாட்டில் சங்க காலக் கல்வி முறை சமுதாய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட சமயம் சாராக் கல்வி முறையாகும். "உற்றுழி உதவி"யும், "உறுபொருள் கொடுத்தும்" அனைத்துப் பிரிவினரும் சமச்சீர் கல்வி பெறுவதற்கு ஊக்குவிக்கப் பட்டனர். இப்பகுத்தறிவு சார்ந்த கல்வி முறை களப்பிரர் காலத்தில் சமயச்

குறிப்பு

சூறாவளியில் அடித்துச் செல்லப்பட்டது. பல்லவர் ஆட்சிக் காலத்தில் தமிழ் மொழிக் கல்வி மீட்கப்பட்டாலும், பாலியும், பிராகிருதமும், சமஸ்கிருதமும் மேலோங்கி அதன் சமுதாயப் பொதுமையை தலைதூக்க முடியாமல் செய்துவிட்டது. சோழர்களின் ஆட்சிக் காலத்தில் போர்களுக்கும், கோயில்கள் கட்டுவதற்கும், வணிக விரிவாக்கத்துக்கும் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் வாழ்க்கைக் கல்விக்குக் கொடுக்கப்படவில்லை. சமஸ்கிருதத்தின் செல்வாக்கு அதிகரித்தது. வேதங்களுக்கும், தர்ம சாஸ்திரங்களுக்கும், புராணங்களுக்கும் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. முகமதியர் படையெடுப்புக்குப் பின் தமிழ் நாட்டை ஆட்சி செய்த நாயக்கர்கள், நவாபுகள், மராத்தியர் காலங்களில் சமச்சீரற்றக் கல்வி முறையே நீடித்தது. ஆங்கிலேயர் வருகைக்குப் பின்னர் தமிழ் நாட்டுக் கல்வி முறை நவீனமயமாதலை நோக்கிப் பயணிக்கத் துவங்கியது.

ஆங்கில ஆதரவாளர்கள்

பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவுடன் வர்த்தகம் செய்வதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பாகும். அக்கம்பெனி துவக்கத்தில் வர்த்தக விரிவாக்கத்தில் மட்டுமே கவனம் செலுத்திப் பின்னர் மக்களை ஆட்சி செய்யும் நிர்வாக இயந்திரமாக உருமாற்றமடைந்தது. இதற்கிடையே வாரன் ஹேஸ்டிங், வில்லியம் ஜோன்ஸ் , ஜோனத்தான் டன்கன், வெல்லெஸ்லி பிரபு, சார்ல கிராண்ட், டேவிட் ஹேர், தாமஸ் மன்றோ போன்றோர் மக்களுக்கு முறையான, தரமான, வாழ்க்கைக்குத் தேவையான கல்வி முறையை உருவாக்குவதில் முனைப்புடன் ஈடுபட்டனர். இவர்களுள் சென்னை ஆளுநராக இருந்த (1820-1827) தாமஸ் மன்றோ தமிழ் நாட்டு மக்களுக்கு ஆற்றிய கல்வித் தொண்டு பாராட்டுக்குரியது நினைவு கூறத்தக்கது.

பட்டயம், 1813

19-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் வெளியிட்ட ஒரு பட்டயத்தை (The Charter of the East India Company, 1813) வெளியிட்டது. 1813 பட்டயச் சட்டம் ஒரு வரலாற்று முக்கியத்துவமிக்க அடிப்படை ஆவணமாகும். அந்த ஆவணத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் பின்வரும் முடிவுகளை அறிவித்தது: 1) பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய மக்களின் கல்விக்காக ஆண்டுதோறும் ஒரு இலட்சம் ரூபாயை ஒதுக்க வேண்டும் 2) இத்தொகையைக் கம்பெனியின் நில வருவாய் உபரிப் பணத்திலிருந்து செலவிட வேண்டும் 3) அரசாங்கம் செலவிடும் பணம் இந்திய இலக்கியங்களை மீட்கவும், கல்வி அறிவைப் பெருக்கவும் பயன்படுத்தப்பட வேண்டும் 4) கம்பெனியின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் மக்கள் அனைவருக்கும் அறிவியல் அறிவை அறிமுகப்படுத்த வேண்டும் 5) கல்வி அறிவுள்ள சுதேசிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும் 6) 1813 பட்டயம் 20 ஆண்டுகளுக்கு ஒரு முறை பரிசீலிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட வேண்டும். சுருங்கக் கூறின், இப்பட்டயம் கல்வி வளர்ச்சிக்கான அரசாங்கப் பொறுப்பு, மானியத்

குறிப்பு

தொகை, கல்வியின் நோக்கம், கல்வித் திட்டம் போன்றவற்றை சந்தேகத்துக்கு இடமின்றித் தெளிவுபடுத்தியது. 1813 பட்டயத்தின் அடிப்படையில் தமிழ் நாட்டுக் கல்வி முறை வகுக்கப்பட்டு, பின்பற்றப்பட்டது. இப்பட்டயத்தின் அடிப்படையிலேயே தாமஸ் மன்றோ தனது கல்விக் கொள்கையை வகுத்தார். மன்றோவின் பரிந்துரைப்படி 1822 இல் பொதுக் கல்வி போர்டு (Board of Public Instruction) உருவாக்கப்பட்டது. தாய் மொழிக் கல்விப் பள்ளிகள் துவக்கப்பட்டன. 1827 இல் சென்னையில் மருத்துவப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது.

புதிய பரிசோதனை

1833 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் (1813) புதுப்பிக்கப்பட்டது. அதன்பின் பல அமெரிக்க, ஜெர்மானிய சமயப்பரப்பூழியர்களும், சங்கங்களும் இந்தியாவுக்கு வந்தனர். இக்காலகட்டத்தில் அலெக்சாண்டர் டப் (Alexander Duff) என்ற ஒரு சமயப் பரப்பாளர் ஒரு கருத்தைக் கூறினார். அதாவது, அனைவருக்கும் கிறித்துவக் கல்வி அளிப்பது இயலாத காரியம். எனவே, மேல்தட்டு மக்களுக்கு மேலைநாட்டுக் கல்வியைக் கொடுத்தால் அவர்கள் மூலம் கல்வியின் பயன் கீழ்த்தட்டு மக்களைச் சென்றடையும். இது கீழ்நோக்கிப் பரவும் கோட்பாடு (Downward Filtration Theory) என்று அழைக்கப்பட்டது. இப்புதிய கோட்பாட்டின்படி திருநெல்வேலியில் மட்டும் 107 பள்ளிகள் துவக்கப்பட்டன் இவற்றில் 2,882 மாணவர்கள் சேர்ந்தனர். இங்கிலாந்தின் சமயப் பரப்பு சங்கம் (Religious Teaching Society of England) சார்பாக கௌ (Gough) என்பவர் சென்னையில் பள்ளிகளைத் துவங்கினார். அதேபோன்று ஆன்டர்சனும் பிரைட்வுட்டும் (Anderson and Braidwood) சென்னையில் துவங்கிய பள்ளியே பின்னர் சென்னை கிறித்துவக் கல்லூரி (Madras Christian College)யாக விரிவடைந்தது. சேலம், கோவை, கடப்பா, பெல்லாரி போன்ற நகர்களிலும் இதுபோன்ற பள்ளிகள் துவக்கப்பட்டன. இப்பள்ளிகள் அனைத்தும் அரசாங்க ஆதரவின்றி துவக்கப்பட்டவையாகும். 1830-க்கும் 1875-க்கும் இடைப்பட்ட காலத்தை சமயப் பரப்புப் பள்ளி காலம் (Age of Mission School) என்று அழைக்கலாம் என்று கூறுகிறார் கல்வி ஆராய்ச்சியாளர் பத்மா இராமச்சந்திரன்.

13.4.1. மெக்காலே தீர்வு

கம்பெனி கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கும் தொகையை எவ்வாறு செலவு செய்வது என்பது பற்றி அதிகாரிகள் மற்றும் கல்வி ஆர்வலர்களுக்கிடையே ஒருமித்த கருத்து உருவாகவில்லை. அவர்களிடையே மூன்று வேறுபட்ட கருத்துக்கள் நிலவின: 1) சமஸ்கிருதம், அராபிய, பாரசீய மொழிகளில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் 2) மேற்கத்திய அறிவியல் கல்வியை ஆங்கில வழி கற்பிக்க வேண்டும் 3) நவீன கல்வியைத் தாய்மொழி மூலம் கற்பிக்க வேண்டும்.

இந்த சர்ச்சைக்குத் தீர்வு காண்பதற்காக தாமஸ் பாபிங்டன் மெக்காலே (Thomas Babington Macaulay) கேட்டுக் கொள்ளப்பட்டார்.

குறிப்பு

மெக்காலே கவர்னர் ஜெனரல் அவையில் சட்ட உறுப்பினராகவும், பொதுக் கல்விக் குழுவின் தலைவராகவும் இருந்தார். அக்கால அறிவு மேதைகளில் அவர் ஒருவராகத் திகழ்ந்தார். மெக்காலேயின் வரலாற்றுச் சிறப்புமிக்க கல்விக் குறிப்பில் (Macaulay's Minute, 1835) கல்விப் பயிற்சி மொழி பற்றிய சர்ச்சைக்கு ஒரு தீர்வைக் கொடுத்தார். மேற்கத்திய அறிவியல் கல்வியைக் கொடுப்பதற்கேற்ப இந்திய மொழி எதுவும் வளர்ச்சியடையவில்லை என்பதால் நவீன கல்வியை ஆங்கில வழி சொல்வதே சிறந்தது என்பதே மெக்காலேயின் தீர்வாகும்.

முக்கிய முடிவு

மெக்காலேயின் பரிந்துரையை ஏற்றுக் கொண்ட கவர்னர் ஜெனரல் பெண்டிங் பிரபு (Lord Bentinck) பின்வரும் முக்கிய முடிவை அறிவித்தார்: 1) தாய் மொழியில் கற்பிக்கும் கல்விக் கூடங்கள் வழக்கம் போல் செயல்படலாம் 2) பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நோக்கம் மக்களுக்கு அறிவியல் மற்றும் இலக்கியக் கல்வியை ஆங்கிலத்தின் மூலம் கொடுப்பதேயாகும் 3) அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் கல்வி நிதி ஆங்கிலக் கல்விக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும். சென்னையில் 1835 இல் மருத்துவக் கல்லூரியும், 1841 ஆம் ஆண்டு 67 மாணவர்களுடன் மாநிலக் கல்லூரி (Presidency College)யும் துவக்கப்பட்டன.

13.4.2. தாம்சான் திட்டம்

ஜேம்ஸ் தாம்சான் வடமேற்கு மாகாணங்களின் துணை ஆளுநராக (Lieutenant Governor of North-Western Provinces) 10 ஆண்டுகள் (1843-1853) பணியாற்றியவர். கல்வி நிபுணர். இவர் தயாரித்த கல்வித் திட்டத்தில் பெண் கல்விக்குப் பிரதான இடத்தைக் கொடுத்தார். இந்தியரின் திறமைகளை வெகுவாக ஊக்குவிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்ற இலக்கோடு கவர்னர்-ஜெனரலாகப் பொறுப்பேற்ற டல்ஹௌசி பிரபு (Lord Dalhousie) தாம்சான் கல்வித் திட்டத்துக்கு முழு ஆதரவையும் அளித்தார். அதுமட்டுமல்ல. கவர்னர் ஜெனரல் அவையின் உறுப்பினரும், கல்விக் குழுவின் தலைவருமான பெத்யூன் (Bethuine) பெண் கல்விக்கு சிறப்பிடம் கொடுத்து விரிவுபடுத்துவதில் ஊக்கத்துடன் செயல்பட்டார். பெண்களைப் படிக்க வைத்தால் திருமணமானவுடன் விதவைகளாகி விடுவர் என்ற மூட நம்பிக்கையுடைய வங்காளத்தில் பெத்யூன் ஒரு பெண்கள் பள்ளியைத் துவக்கினார். இப்புரட்சிகரமான முயற்சியை முன்மாதிரியாகக் கொண்டு சென்னை ஆளுநராக இருந்த தாமஸ் மன்றோ பெண் கல்விக்கு சாதகமான கல்விக் கொள்கையை வகுத்தார். இக்கொள்கை சமுதாயத் தீமைகளிலிருந்து பெண்களை விடுவிக்க பெண் கல்வி இன்றியமையாதது என்ற மன்றோவின் லட்சியத்தின்

அடிப்படையில் உருவாக்கப்பட்டது. மன்றோவின் பெண் கல்விக் கொள்கை, தற்காலத் தமிழ் நாட்டு கல்வி வளர்ச்சி வரலாற்றில் முற்போக்கு நடவடிக்கையாகும்.

குறிப்பு

தொழில் கல்வி

தாம்சான் கல்வித் திட்டத்தின் மற்றொரு முக்கியக்கூறு தொழில் கல்வி (Technical Education) ஆகும். இந்தியாவில் பாதைகளும், பாலங்களும், ஆறுகளும் பிற உள்கட்டுமான வசதிகளும் பெருக வேண்டுமாயின் சிவில் பொறியாளர்களும் (Civil Engineers) பிற கீழ்நிலை தொழில்நுட்ப அலுவலர்களும் ஆயிரக்கணக்கில் தேவைப்படுவர் என்பதை நன்கறிந்த தாம்சான் ரூர்கியில் (Roorkee) ஒரு சிவில் பொறியியல் கல்லூரியைத் துவக்கினார். அவரது இம்முயற்சிக்கும் கவர்னர் ஜெனரல் டல்ஹௌசி பிரபு முழு ஆதரவையும் நல்கினார். தாம்சானின் தொழில் நுட்பக் கல்வித் திட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு மேஜர் மெயிட்லாந்து (Major Maitland) சென்னையில் ஒரு தொழில் நுட்பப் பள்ளியைத் துவக்கினார். அப்பள்ளி மாபெரும் வெற்றியடைந்தது. சென்னைத் தொழில்நுட்பப் பள்ளியை முன்மாதிரியாகக் கொண்டு டல்ஹௌசி பிரபு வங்காளத்தில் பல தொழில்நுட்பப் பள்ளிகளைத் துவக்கத் திட்டமிட்டார்.

13.4.3. ஸ்டான்லியின் கல்விக் குறிப்பு

அரசாங்கத் திட்டங்களால் அடித்தட்டு மக்களுக்கு கல்வியின் பயன் சென்றடையவில்லை என்பது தெரிய வந்தது. எனவே, அவர்களுக்குத் துவக்கக் கல்வியும், வாழ்க்கைக்குத் தேவையான தொழில் கல்வியும் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை அரசாங்கம் உணர்ந்தது. துவக்கப் பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், தொழில் கல்வி நிறுவனங்களைத் துவக்குவதற்குமான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எனினும், கம்பெனி அதிகாரிகள் துவக்கப் பள்ளிகளுக்குத் தொடர்ந்து முன்னுரிமை அளிக்காமல் உயர்நிலைக் கல்வியை ஊக்குவித்தனர். அதன் விளைவாக துவக்கக் கல்வி துவண்டு போயிற்று. இக்குறையைக் களைவதற்காக 1850 ஆம் ஆண்டு ஸ்டான்லி பிரபு (Lord Stanley) ஒரு கல்விக் குறிப்பை (Stanley's Despatch)த் தயார் செய்தார். இக்குறிப்பில் கம்பெனியின் அரசாங்கமே துவக்கக் கல்விக்கான பொறுப்பை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. இதற்கான செலவை சரிக்கட்ட அரசாங்கம் தல வரிகளை (Local Taxes) விதிக்கலாம் என்ற ஆலோசனை கூறப்பட்டது. அதன்பின் துவக்கக் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. 1882 இல் அமைக்கப்பட்ட இந்தியக் கல்விக் குழு (Indian Education Commission) துவக்கக் கல்விக்கான பொறுப்பை உள்ளாட்சி நிறுவனங்களிடம் ஒப்படைத்தது குறிப்பிடத்தக்கது.

13.4.4. உட்டின் கல்வித் திட்டம், 1854

குறிப்பு

சிறப்பு அம்சங்கள்

சர் சார்லஸ் உட் (Sir Charles Wood) கட்டுப்பாட்டுக் குழு (Board of Control)வின் தலைவராக இருந்தார். கவர்னர் ஜெனரல் டல்ஹௌசி பிரபுவின் வேண்டுகோளுக்கு இணங்கி சார்லஸ் உட் ஒரு அகல் விரிவான கல்வித் திட்டத்தைத் தயாரித்தார் (Wood's Despatch, 1854). உட் திட்டத்தின் சிறப்புக் கூறுகளாவன: 1) தாய்மொழி வழி கற்பிக்கும் கல்விக் கூடங்கள் தொடர்ந்து செயல்படலாம் அவை வாழ்க்கைக்குப் பயன்படக் கூடியவாறு செயல்பட வேண்டும் 2) அரசாங்க ஆதரவு பெறும் கல்வி நிறுவனங்களில் அறிவியல்கள், ஐரோப்பிய இலக்கியம், கலைப்பாடங்கள் கற்பிக்கப் படுதல் வேண்டும் 3) இக்கல்வித் திட்டத்தை நிறைவேற்ற ஒவ்வொரு இராஜதானியிலும் ஒரு பொது கல்வித் துறை (Department of Public Instruction) துவக்கப்பட வேண்டும் 4) கல்விக்காக ஒதுக்கப்படும் தொகை துவக்கக் கல்விக்காக செலவிடப்பட வேண்டும் 5) கல்வியின் பயன் அடித்தட்டு மக்களை சென்றடைய வேண்டும் என்பதற்காக தனியார் பள்ளிகளுக்கும் கல்வி மானியம் (Grant-in-Aid) வழங்க வேண்டும் 6) அதேபோன்று, சமயச் சார்பற்ற கல்வி (Secular Education) அளிக்கும் பள்ளிகளுக்கும் மானியம் வழங்கலாம் 7) ஆசிரியர்களுக்கு உரிய பயிற்சி அளிக்க வேண்டும் 8) தரமான பாடப் புத்தகங்கள் வெளியிடப்பட வேண்டும் 9) பெண் கல்வி வளர்ச்சிக்கு அரசாங்கம் வெளிப்படையான இதயபூர்வமான ஆதரவை அளிக்கும் 10) இலண்டன் பல்கலைக்கழகத்தை முன் மாதிரியாகக் கொண்டு சென்னை, கல்கத்தா, பம்பாய் ஆகிய நகரங்களில் தலா ஒரு பல்கலைக் கழகம் துவக்கப்பட வேண்டும்.

பொதுக் கல்வித் துறை

உட்டின் கல்வித் திட்டத்தின் கீழ் சென்னையில் ஒரு பொதுக் கல்வித் துறை துவக்கப்பட்டது (1855). இத்துறைக்கு ஒரு முறையான நிர்வாகத் தலைமை இயக்குநர் (Director) நியமிக்கப்பட்டார். இவருக்கு உதவியாக பல ஆய்வாளர்கள் (Inspectors) நியமிக்கப்பட்டனர். இவர்கள் பள்ளிகளுக்குச் சென்று, அவை எவ்வாறு செயல்படுகின்றன என்பதைக் கண்டறிந்து கல்வித் துறை இயக்குநருக்கு ஆண்டு அறிக்கை அளித்தனர். 1856 இல் சென்னை சைதாப்பேட்டையில் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி துவக்கப்பட்டது.

1857 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ஆம் தேதி சென்னை பல்கலைக் கழகம் (University of Madras) துவக்கப்பட்டது. இதோடு கல்லூரிகள் இணைக்கப்பட்டன. ஆரம்பத்தில் சென்னை பல்கலைக் கழகம் கல்லூரிகளுக்குத் தேர்வு நடத்திப் பட்டம் வழங்கும் அமைப்பாக மட்டுமே இருந்தது. பட்டப் படிப்புக்கான பாடங்கள் கல்லூரிகளில் மட்டுமே கற்பிக்கப்பட்டன. சென்னைப் பல்கலைக் கழகம் இலண்டன் பல்கலைக் கழகத்தை முன்மாதிரியாகக் கொண்டு துவக்கப்பட்டது

குறிப்பு

என்பது குறிப்பிடத்தக்கது. சி.டபிள்யு. தாமோதரம் பிள்ளையும், கரோல்.வி.விஸ்வநாத பிள்ளையும் இப்பல்கலைக் கழகத்தின் முதல் பட்டதாரிகள் ஆவர். சர்.எ .சுப்ரமணிய ஐயர் இப்பல்கலைக் கழகத்தின் முதல் துணை வேந்தர்.

13.4.5. கல்விச் சீர்திருத்தம்

தாமஸ் மன்றோ

தாமஸ் மன்றோ, தமிழ் நாட்டில் கல்விச் சீர்திருத்தம் செய்வதற்கு முன்னால் சென்னை இராஜதானியில் நடைமுறையில் இருந்த கல்வி முறை பற்றிய ஒரு ஆய்வை (Survey) மேற்கொண்டார் (1822). மாவட்ட ஆட்சியாளர்களைக் கொண்டு திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஆய்வறிக்கை பின்வரும் கல்வி நிலைப்பாட்டைக் காட்டியது: 1) தமிழ் நாட்டின் பல மாவட்டங்களில் பள்ளிகள் செயல்பட்டுக் கொண்டிருந்தன 2) இப்பள்ளிகளின் பயனைப் பிராமணர்களும், பிற உயர் சாதி மக்கள் மட்டுமே பெற்று வந்தனர் 3) தாழ்த்தப்பட்ட மக்களும், பிற பிற்படுத்தப்பட்டோருக்கும் கல்வி மறுக்கப்பட்டது 4) அரசாங்கத்துக்கும் கல்வி வளர்ச்சிக்கும் தொடர்பில்லாமல் இருந்தது 5) அளிக்கப்பட்ட கல்வியும் ஒரு சீராக இல்லை · 6) 12,850,941 மக்கள் தொகை கொண்ட சென்னை இராஜதானியில் 12,498 பள்ளிகள் மட்டுமே இருந்தன. தமிழ் நாட்டில் முதல் முறையாக அறிவியல் ரீதியாக மேற்கொள்ளப்பட்ட கல்வி ஆய்வு இதுவேயாகும்.

13.4.6. மன்றோவின் கல்விக் கொள்கை

சென்னை இராஜதானியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் தாமஸ் மன்றோ ஒரு குறிப்பைத் தயார் செய்தார் (Minute of 10 March 1826). அக்குறிப்பில் மன்றோ மூன்று முக்கிய பரிந்துரைகளைக் கூறினார்: 1) ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் (சுநஎநரெந னுளைவசஎைவ) இரண்டு பள்ளிகளைத் துவக்க வேண்டும் 2) அதேபோன்று, ஒவ்வொரு தாலூக்காவிலும் ஒரு பள்ளியை ஆரம்பிக்க வேண்டும் 3) இப்பள்ளிகளின் வளர்ச்சிக்காக அரசாங்கம் ஆண்டுதோறும் ரூ.50,000 நிதி ஒதுக்க வேண்டும். இப்படி நிதி ஒதுக்குவதன் மூலம் மக்களுக்குக் கல்வி அளிக்க வேண்டியதன் பொறுப்பை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தினார் மன்றோ.

மன்றோவின் கல்வித் திட்டத்தை கம்பெனி ஏற்றுக் கொண்டது (1828). ஆனால் அத்திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்துவதற்கு முன்பே தாமஸ் மன்றோ அகால மரணமடைந்தார் (1827). மன்றோவுக்குப் பின் அவரது திட்டத்தை முன்னின்று நடத்தக் கூடியவர்கள் இன்மையால் கல்வி முற்போக்கு முயற்சி முடங்கிப் போயிற்று. கல்விக்காக ஒதுக்கப்பட்ட பணம், சரியாகச் செலவிடப்படவில்லை. துவக்கப்பட்ட

பள்ளிகள் நலிவுற்றன. எனினும், தாமஸ் மன்றோ வகுத்துக் கொடுத்த கல்விக் கொள்கை பின்வந்தோருக்கு முன்மாதிரியாக அமைந்தது.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

குறிப்பு

4. இந்திய மக்களின் கல்விக்காக ஆண்டுதோறும் ஒரு இலட்சம் ரூபாயை ஒதுக்க வேண்டும் என எந்த ஆண்டு பட்டயச்சட்டம் கூறியது?
5. யாருடைய தொழில் நுட்பக் கல்வித் திட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு மேஜர் மெயிட்லாந்து சென்னையில் ஒரு தொழில் நுட்பப் பள்ளியைத் துவக்கினார்?

13.5. தமிழ் வளர்ச்சி

"தமிழில் பிறமொழிக் கலப்பை ஒதுக்கித் தள்ளுங்கள். தமிழின் சுவையை மாற்றாதீர்கள் வல்லோசைகளைப் பெருக்காதீர்கள்" மறைமலை அடிகளார். தமிழ் மொழியிலேயே எண்ணற்ற சொற்கள் இருக்க, வடமொழிச் சொற்கள் தமிழின் இடத்தைப் பிடித்துக் கொள்ள எப்படி முடிந்தது? எதனால் இப்படி நடந்தது? தமிழில் சொற்களுக்குப் பஞ்சமா? பஞ்சம் இல்லை. தமிழ் மொழியை அதன் அழகிய வடிவத்துடன் காக்க வேண்டும் என்ற எண்ணத்துக்குத்தான் பஞ்சம் இருந்தது. இப்படியாகத் தனித்தமிழ் பற்றிய பல்வேறு ஐயங்கங்கள் தமிழரிடையே நிலவி வருகின்றன. குறிப்பாக, தமிழ் கற்றோர், கற்பிப்போரிடையே இத்தகைய ஐயப்பாடுகள் நிலவி வருகிறது. தமிழ்மொழியைப் படிப்பிக்கும் ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், கல்வியாளர்கள் மற்றும் பாடநூலாசிரியர்கள், எழுத்தாளர்கள், பாவலர்கள், ஊடகவியலாளர்கள், மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரும் 'தனித்தமிழ்' என்பதைப் பெரும்பாலும் தவறாகவே கணித்து வைத்துள்ளனர்.

தமிழுடன் சமக்கிருத மொழியைக் கலந்து பேசிய மணிப்பிரவாள நடை கொடிகட்டிப் பறந்த காலம் ஒன்றுண்டு. அதனால் தமிழ்ச் சொற்கள் மெல்ல மெல்லச் சிதைந்து வேற்று மொழிச் சொற்கள் தமிழ்ச் சொற்களின் இடத்தை வலுவாகப் பிடித்துக் கொண்டபோது அதனை மாற்றியமைக்க முனைந்த பலருள் மறைமலை அடிகளார் மிகவும் முக்கியமானவர் ஆவார். மொழியை அவரவர் விருப்பபடியெல்லாம் மாற்றிக்கொள்ளும்படியான நிலை இருக்கக்கூடாது. அதற்கென்று ஒரு கட்டுப்பாடு வேண்டும் என்று அடிகளார் வலியுறுத்தினார். அப்படி 1916 ஆம் ஆண்டு தோன்றியதுதான் தனித்தமிழ் இயக்கம். மறைமலை அடிகளாரின் மகள் நீலாம்பிகை அம்மையார் அவரது தந்தை வழி நின்று தமிழ் மொழி தனது தனித்துவத்தை, ஆளுமையை இழக்காமல் இருக்க பிறமொழிச் சொற்கள், நடை, எழுத்துக்கள் தமிழில் மிகுந்து கலப்பதை எதிர்த்துத் தனித்தமிழைப் பரப்பினார்.

குறிப்பு

தனித்தமிழ் இயக்கத்தை தோற்றுவித்த போது கடுமையான கண்டனத்துக்கும் எதிர்ப்புக்கும் ஆளானார். தனித்து இயங்கக் கூடிய ஆற்றல் தமிழ்மொழிக்கு உண்டு என்பதனாலேயே "தனித்தமிழ்" என்றார் அடிகள். ஆனால் இதை எதிர்த்த சிலர், தனித்தமிழ் என்பது தனித்து அமிழ்கின்ற அதாவது மூழ்கிப்போகிற மொழி என்றே பொருள் தருவதாக உள்ளது. அப்படியென்றால் தமிழ் தனித்து செயலாற்றினால் மூழ்கிப் போய்விடுமா? என்று ஏளனம் செய்தனர். ஆனால் அடிகள் தன் சீரிய செயல்பாட்டினால் எள்ளி நகைத்தவரின் கூற்றுக்களை பொய்யாக்கிக் காட்டினார். இலக்கியம், மறைபொருளியல், மருத்துவம், சங்க இலக்கிய ஆய்வு, புதினம், பாடல், நாடகம், கடிதம், கட்டுரை, தத்துவம், வரலாறு, சமூகவியல் எனப் பலவகைகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்து தமிழுலகுக்கு அளித்துள்ளார், அடிகளார். திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தோன்றுவதற்கு இவரே காரணமாக இருந்தார். தன் வாழ்நாளில் சேகரித்த நான்காயிரம் நூல்களைக் கொண்டு "மணிமொழி நூல் நிலையம்" என்ற பெயரில் நூல் நிலையம் ஒன்றைத் தோற்றுவித்தார். தனித் தமிழ் இயக்கம் தோன்றியதன் காரணமாக வட மொழிச் சொற்கள் களையப்பட்டு அதற்கு ஈடான இனிய தமிழ்ச் சொற்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. தனித்தமிழ் என்பது தனியான ஒரு தமிழ் அல்ல் தனித்தமிழ் என்பது தமிழ்தான் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். பிற மொழிக் கலப்புத் தமிழ் மொழியில் ஏற்பட்டு மொழியும் பேச்சும் சிதைந்து போகின்ற சூழல் ஏற்பட்டுவிடாமல், மொழியின் தனித்தன்மை குன்றாது தமது எழுத்தைக் காத்துக் கொள்ளும் தமிழை தனித்தமிழ் எனலாம்.

செந்தமிழ்க்காப்பியம் தோன்றிய சேரநாட்டில், தொல்காப்பியம் தோன்றிய சேரநாட்டில், திருக்குறள் தோன்றிய நாஞ்சில்நாட்டருகே உள்ள சேரநாட்டில், பிறமொழிக் கலப்பு கங்கு கரையின்றி ஏற்பட்டதாலும், அதைத் தடுத்து நிறுத்த அப்போதைக்கு ஏலாததாலும், அரசியல் மீது ஏறிப் பிறமொழி நுழைந்ததாலும் தமிழின் தனித்தன்மை சேரநாட்டில் குன்றியது, அதன்விளைவு மலையாளம் என்ற மொழி தோன்றியது 1100 ஆண்டுகளுக்கு முன்னர். ஏறத்தாழ கிபி 1300 க்குப் பின்னர் அது தனி நாடாகவும் ஆகிப்போனது. தனித்தமிழ் இயக்கம் தோன்றியிருக்கா விட்டால் தமிழ்நாடு என்பது வரலாற்றில் கரைந்திருக்கும். இன்றைக்கு இந்த அளவு கூட தமிழ் இருந்திருக்காது. இன்றைய தமிழ்நாடு கேரளம் போல் மணிப்பிரவாள மாநிலதாக மாறியிருக்கும்.

"அடிகளின் தனித் தமிழ் இயக்கம் தமிழ்த் தாயின் நெஞ்சு புரையோடாமல் காத்தது. பாடநூல்கள் தமிழ் வடிவில் வெளிவந்தன. குடிநீரைத் தூய நீராகக் காத்தல் போல தமிழைத் தூயதாகக் காத்திட வழிகாட்டினார். அதற்காக இளைஞர் படையை ஏற்படுத்தினார். கலப்பு மிகுதியிருந்தாலும் பல நாளிதழ்கள் தமிழை முடிந்த அளவு பயன்படுத்தி

குறிப்பு

வருகின்றன. வாழ்த்துக்கள், வரவேற்புகள், அழைப்பிதழ்கள் அனைத்தும் தமிழில் மிளிர்கின்றன. இம்மாற்றங்களையெல்லாம் மறைமலையடிகளைப் பெற்றமையால் தமிழ்த் தாய் பெற்றாள்"—என்று அறிஞர் வ.சுப.மாணிக்கம் மதிப்பீடு வழங்கியுள்ளார். மறைமலை என்றொரு மனிதர் மட்டும் தோன்றியிருக்காவிட்டால் இன்றைய தமிழின் வடிவம் எப்படி இருந்திருக்கும்? என்ற கேள்வியை கேட்க முடியாமல் செய்த அவரை தமிழ் உலகம் என்றென்றும் போற்றிப் புகழும் என்பதில் ஐயமில்லை.

13.6. அரசியல் கட்சிகளின் எழுச்சி

தமிழ் நாட்டில் 1892-லேயே ஆதிதிராவிடர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. 20ம் நூற்றாண்டின் துவக்கத்தில் டாக்டர் டி.எம்.நாயர், தியாகராஜ செட்டியார், கேசவப் பிள்ளை, நடேச முதலியார் போன்றோர் பிராமணர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து, பிராமணர் அல்லாதோரின் உரிமைகளைக் கோரிப்பெற முயற்சித்தனர். சென்னையில் ஒரு திராவிடர் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. 1916ல் தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் உருவாக்கப்பட்டது. அதுவே பின்னர் நீதிக்கட்சி என்ற பெயருடன் செயல்பட்டது.

13.6.1. நீதிக்கட்சி

நீதிக்கட்சி இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்காமல் பிராமணர் அல்லாதார் நலன் காக்கும் இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. அதற்குக் காரணம் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்தால் ஆட்சி ஆங்கிலேயரிடமிருந்து பிராமணர்களுக்கு மாறுமேயன்றி முழு மக்களாட்சியாகாது என்று அக்கட்சி கருதியதேயாகும். மாண்டேகு-செம்ஸ் போர்டு சீர்திருத்தம் கொண்டு வந்த இரட்டை ஆட்சி முறையை காங்கிரஸ் நிராகரித்தது. ஆனால் நீதிக்கட்சி அதை வரவேற்று பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆதரவு அளித்தது.

1920ல் நடைபெற்ற தேர்தலில் பிராமணர் பிடியிலிருந்த ஹோம்ரூல் லீக்கைத் தோற்கடித்து வலிமையான பெரும்பான்மை பலத்தைப் பெற்றது நீதிக்கட்சி. காங்கிரஸ் தேர்தலைப் புறக்கணித்தது. 1920லிருந்து 1937 வரை நீதிக்கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. சுப்பராயலு ரெட்டியார் தலைமையில் அமைச்சரவை பதவி ஏற்றது (1920). அதன்பின் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி சுயராஜ்யக் கட்சியை வென்று பனகல் அரசரின் தலைமையில் ஆட்சி அமைத்தது (1923). உட்கட்சிப் பூசலால் 1926ல் நடந்த தேர்தலில் நீதிக்கட்சி தோற்றது. சுயேட்சையாகப் போட்டியிட்ட கருப்புக் குதிரை (Dark Horse) சுப்பராயன் சுயராஜ்யக் கட்சி ஆதரவுடன் ஆட்சிப் பொறுப்பேற்றார். 1927 முதல் நீதிக்கட்சி மாநில சுயாட்சிக் கோரிக்கையை எழுப்பியது. 1930ல் நடைபெற்ற தேர்தலில் பிற கட்சிகள் பங்கேற்காததால், நீதிக்கட்சி எளிதில் வெற்றி பெற்று, முனுசாமி நாயுடு தலைமையில் ஆட்சியில்

குறிப்பு

அமர்ந்தது. இந்தியா சட்டமறுப்பு இயக்கத்தை சந்தித்துக் கொண்டிருந்த போது பொப்பிலி அரசர் முதலமைச்சரானார் (1932). 1935 இந்திய அரசியல் சட்டம் கொண்டு வந்த மாநில சுயாட்சித் திட்டத்தின்படி நடைபெற்ற தேர்தலில் (1937) காங்கிரஸ் நீதிக்கட்சியைத் தோற்கடித்து சி. இராஜகோபாலாச்சாரியார் தலைமையில் ஆட்சியைக் கைப்பற்றியது.

ஒத்துழையாமை இயக்கம்

1920-1922 மனம் தமிழ் நாட்டில் ஒத்துழையாமை இயக்கம் (Non-cooperation Movement) சி.இராஜகோபாலாச்சாரியின் தலைமையில் ஆர்வத்துடன் நடத்தப்பட்டது. சென்னை பச்சையப்பன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த அவரது மகன் இரா.இராமசாமியையும் மாநிலக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த மற்றொரு மகன் இரா.கிருஷ்ணசாமியையும் அக்கல்லூரியிலிருந்து வெளியேறச் செய்து, அவர்களை கதர்த் தொண்டில் ஈடுபடுவதற்காக சேலத்துக்கு அனுப்பி வைத்தார் அவர். பாரிஸ்டர்" பட்டம் பெற்றிருந்த வழக்கறிஞர் ஜார்ஜ் ஜோசப் தனது தொழிலைத் துறந்து ஒத்துழையமை இயக்கத்தில் சேர்ந்தார். எ .சீனிவாச ஐய்யங்கார் தனது அட்வகேட் ஜெனரல் பதவியையும், சி.ஐ.ஈ" என்ற பட்டத்தையும் துறந்தார். வ.உ.சிதம்பரம் பிள்ளை ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரிக்காவிட்டாலும் கூட தனது வக்கீல் தொழிலைத் துறந்து இலக்கிய பணியில் ஈடுபட்டார். சென்னை என்.எ .வரதாச்சாரி, எ. இராமநாதன் ஆகிய இளம் வழக்கறிஞர்கள் நீதிமன்றம் செல்வதை நிறுத்திவிட்டனர். முஸ்லீம்களில் சிலர் தாங்கள் வகித்த மாஜிஸ்ரேட் உத்தியோகங்களை உதறித் தள்ளினர்.

1920 இறுதியில் நடக்கவிருந்த மாநில சட்டமன்றப் புறக்கணிப்புப் பிரச்சாரத்தில் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் காரர்கள் தீவிரமாக ஈடுபட்டனர். தேர்தலில் போட்டியிட வேண்டாமென்று வேட்பாளர்களையும், மீறிப் போட்டியிடுவோருக்கு ஆதரவளிக்க வேண்டாம் என்று வாக்காளர்களையும் அவர்கள் வேண்டிக் கொண்டனர். இராஜகோபாலாச்சாரியும், இராஜனும் திருச்சி, கோயமுத்தூர், சேலம் மாவட்டங்களில் சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்தனர். சென்னையிலும் திருச்சியிலும் காங்கிரஸ் கிலாபத் தொண்டர்கள் தேர்தல் புறக்கணிப்பு முயற்சியில் இறங்கினர். அதன் விளைவாக 24 தேசியவாதிகள் தேர்தலிலிருந்து விலகிக் கொண்டனர். எனினும் 1920 நவம்பர் 30 ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில் சென்னை மாநில சட்ட மன்றத்துக்கான 98 இடங்களில் 63ஐக் கைப்பற்றியது நீதிக்கட்சி. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சட்டமன்றப் புறக்கணிப்பு வெற்றி பெறவில்லை. நீதிக்கட்சி தேசிய நீரோட்டத்திலிருந்து விலகிச் சென்று அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்று ஒத்துழையாமை இயக்கத்தை ஒதுக்கிவிட்டு மக்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி ஆட்சியை எளிதில் கைப்பற்றியது.

1921 ஜனவரி 10 ஆம் தேதி சென்னைக்கு வருகை தந்த கானாட் கோமகனைப் புறக்கணித்தனர் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் காரர்கள். சென்னை நகரின் மூலை முடுக்குகளிலெல்லாம் கோமகன் புறக்கணிப்புப்

குறிப்பு

பிரச்சாரம் மும்முரமாக நடைபெற்றது. நகரில் பூரண அர்த்தால் கடைப்பிடிக்கப்பட்டது. அன்று மாலை சென்னை கடற்கரை கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு கானாட் கோமகனது வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். கடற்கரையின் மற்றொரு பகுதியில் நீதிக்கட்சியின் செல்வாக்கின் கீழிருந்த சென்னை மாநகராட்சியின் சார்பாகக் கானாட் கோமகனுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. இரண்டு நாட்களுக்குப் பின்னர் சென்னை மாநில புதிய சட்டமன்றக் கூட்டத்தைத் துவக்கி வைத்து உரையாற்றினார் கோமகன். எனினும் இராஜகோபாலாச்சாரியின் தலைமையில் செயல்பட்ட தமிழ்நாடு காங்கிரஸ் கானாட் கோமகனது சென்னை வருகையை வெற்றிகரமாகப் புறக்கணித்தது என்றே கூற வேண்டும். ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். சென்னை தொழிலாளர் யூனியன் சார்பாக பக்கிங்காம் தொழிற்சாலை தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். மீண்டும் வேலையில் சேரச் சென்ற 800க்கும் மேற்பட்ட ஆதிதிராவிடத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டனர் அவர்களது குப்பங்கள் தீக்கிரையாக்கப்பட்டது (1921 ஜூன் 27). தமிழ் நாட்டின் பல பகுதிகளில் கள்ளுக்கடைகள் பகிஷ்கரிக்கப்பட்டன. கோயமுத்தூர், சேலம், தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் கள்ளுக்கடை மறியல் தீவிரமாக நடைபெற்றது. மறியலில் பலாத்காரமும் பயன்படுத்தப்பட்டது. தடை உத்தரவை மீறியதால் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

காந்தியடிகள் துவக்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் இராஜபாளையம் பெரும் பங்கேற்றது. சுயாட்சி இயக்கத்தில் பங்கேற்ற நகரத் தலைவர்கள் ஒத்துழையாமை இயக்கத்திலும் தீவிரமாக ஈடுபட்டனர். திருச்சியில் நடைபெற்ற 25வது சென்னை மாகாண காங்கிர மாநாட்டில் பல பிரதிநிதிகள் இவ்வூரிலிருந்து சென்று கலந்து கொண்டனர். சண்டமாருதப் பிரசங்க எ .சத்தியமூர்த்தியின் வருகை இந்நகர் மக்களிடையே உற்சாகம் பிரவாகத்தை ஏற்படுத்தியது. ஐ.பி.அரங்கசாமி இராஜா, பி.எ .சின்ன வெங்கட்ராஜா, பெருமாள் ராஜா, டி.எ.கே.அழகுராஜா ஆகியோர் நாக்பூர் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டனர் (1920). அம்மாநாட்டில் கலந்து கொண்டு திரும்பியோர் இந்நகரில் காங்கிரஸ் இயக்கத்தைப் பலப்படுத்தினர். ஐ.பி.அரங்கசாமி ராஜா வரலாற்று சிறப்புமிக்க கதர் இயக்கத்துக்கு இராஜபாளையத்தில் உறுதியான அடித்தளம் அமைத்துக் கொடுத்தார். அதற்காக அவர் சிறைத்தண்டனை பெற்றார். அவரும் அவரது சகாக்களும் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக இராஜபாளையம் கை சர்க்கா நூல் நூற்கும் தொழிற்சாலை" துவக்கப்பட்டது. கதரின் பெருமை பற்றிய பிரச்சாரம் செய்யப்பட்டது. இப்பிரச்சாரப் பிரசுரங்கள் விடுதலை இயக்க நீரோட்டத்தில் கலந்தது. பி.எ .குமாரசாமி ராஜா துவக்கிய விவசாயிகள் சங்கம்" கிராமங்களில் தேசிய உணர்வைப் பரப்பியது. திருவில்லிபுத்தூர் தாலுக்காவில் நடைபெற்ற அரசியல் மாநாடு கிராமங்களில் காங்கிர கமிட்டிகள் அமையக் காரணமாயிருந்தது. 1922 மார்ச் 18ம் தேதி

குறிப்பு

காந்தியடிகள் கைது செய்யப் பட்டதையடுத்து இராஜபாளையத்தில் அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்டது. எ.ஸ்ரீனிவாச ஐய்யங்கார் இராஜபாளையத்தை சுய இராஜபாளையம் என்று வர்ணித்ததில் வியப்பில்லை.

ஒத்துயைாமை இயக்கத்தின் போது மலபாரில் நிகழ்ந்த மாப்பிள்ளைகள் கிளர்ச்சி தமிழ் நாட்டில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியது. அதனால் தமிழ் நாட்டில கிலாபத், ஒத்துழையாமை இயக்கங்கள் வலுவிழந்து போயின. முஸ்லீம்களின் வன்முறைக்கு அஞ்சிய தமிழ்நாட்டு இந்துக்கள் ஒத்துழையாமை இயக்கத்தினின்றும் ஒதுங்கிக் கொள்ளத் துவங்கினர். திருச்சியில் பலப்பட்டிருந்த இந்து முஸ்லீம் ஒற்றுமை பலமற்றுப் போயிற்று. மதுரை மாநகராட்சி உறுப்பினர்கள் காந்திக்குக் கொடுக்கவிருந்த வரவேற்பைக் கைவிட்டனர். வேலூரில் முஸ்லீம்களிடையே பதட்டநிலை ஏற்பட்டது. மாப்பிள்ளைகள் கிளர்ச்சியில் களங்கப்பட்டு போன ஒத்துழையாமை இயக்கத்தை மேலும் தொடர வேண்டுமாவென இராஜகோபாலாச்சாரி சந்தேகித்தார். 1921 செப்டம்பர் மாதம் தமிழ்நாட்டுக்கு வருகை தந்த காந்தி இந்து முஸ்லீம் ஒற்றுமை கேள்விக்குறியாக இருந்ததையும் காணத் தவறவில்லை. இயக்கம் எவ்வாறு உருவெடுக்குமோ என்ற அச்சம் மக்களிடையே பரவலாகக் காணப்பட்டதாகக் குறிப்பிட்டார் காந்தி.

மலபார் மாப்பிள்ளைகள் கிளர்ச்சியைத் தொடர்ந்து ஒத்துழையாமை இயக்கத்தை ஒடுக்க தீர்மனித்தது சென்னை அரசாங்கம். யாகூப் ஹாசன் கைது செய்யப்பட்டார். அப்துல் மஜித்ஷார் "தமிழ்நாடு" பத்திரிக்கை ஆசிரியர் வரதராஜுலு நாயுடு, "தேசபக்தன்" ஆசிரியர் குழுவினர் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். 1921 நவம்பர் 4 ஆம் தேதி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, தனிநபர்கள் சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபடலாம் என்று எடுத்த முடிவை, திருச்சியில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஆதரித்தது (நவ.20). அதன்படி தடை உத்தரவை மீறிய இராஜகோபாலாச்சாரியும், எம்.வி.சுப்பிரமணிய சாஸ்திரியும் கைது செய்யப்பட்டனர். கோயமுத்தூரில் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்ட ஈ.வே. இராமசாமி நாயக்கரும் கைதானார். வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வருகை தந்த போது (1922 ஜன.14) நகரில் பூரண அர்த்தால் நடைபெற்றது. ஆனால் வன்முறையும் துப்பாக்கிச் சூடும் தமிழ்நாட்டில் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்துக்கு அவப்பெயரைத் தேடித்தந்தன. வரிகொடா இயக்கத்துக்குத் தமிழ்நாட்டில் ஆதரவில்லை. தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கத்தின் முதுகெலும்பாக இருந்த இராஜகோபாலாச்சாரி சிறையில் அடைக்கப்பட்டதாலும், காங்கிரசுக்குள்ளேயே பலருக்கு ஒத்துழையாமை இயக்கத்தில் நம்பிக்கையின்மையாலும், நீதிக்கட்சி பொது மக்களிடையே செல்வாக்கு பெற்று ஆட்சியைக் கைப்பற்றி அரசாங்கத்தை ஆதரித்ததாலும் தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கம் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி பெறவில்லை. சௌரி சௌரா வன்முறை நிகழ்ச்சியை

(1922 பிப்ரவரி 4) அடுத்து காந்தியே ஒத்துழையாமை இயக்கத்தை விலக்கிக் கொண்டார்.

குறிப்பு

13.6.2. சுயராஜ்யக் கட்சி

ஒத்துழையாமை இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்ட போதிலும் தேசத் தலைவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. இந்திய விடுதலைப் போராட்டம் தேக்க நிலையில் இருந்த போது சுயராஜ்யக் கட்சியினர் சட்டமன்றத்துக்குள் ஒத்துழையாமை இயக்கத்தை துவக்குவதென முடிவு செய்தனர். தமிழ்நாட்டில் கஸ்தூரிரங்க ஐய்யங்கர், சீனிவாச ஐய்யங்கார், வரதராஜுலு நாயுடு, விஜயராகவாச்சாரியார், ஏ. இரங்கசாமி ஐய்யங்கார் ஆகியோர் சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து சட்டமன்ற நுழைவை ஆதரித்தனர். 1923 நவம்பர் 13 ஆம் தேதி நடைபெற்ற மத்திய சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுயராஜ்யக் கட்சியினருள் சத்தியமூர்த்தி, ஏ.இரங்கசாமி அய்யங்கார், ஆர்.கே.ஷண்முகம் செட்டியார், என்.சீனிவாச அய்யங்கார் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். சென்னை மாநில சட்டமன்றத் தேர்தலில் சுயராஜ்யக் கட்சி 41 இடங்களைப் பெற்றாலும்கூட அமைச்சரவையை அமைக்க மறுத்துவிட்டது. அதனால் டாக்டர் பி.சுப்பராயன் தலைமையில் சுயேட்சை அமைச்சரவை அமைக்கப்பட்டது. சுயராஜ்யக் கட்சியும், நீதிக்கட்சியும் எதிர்க்கட்சிகளாக செயல்பட வேண்டியதாயிற்று. இரட்டை ஆட்சியைத் தோற்கடிக்கும் நோக்கத்தோடு சுயராஜ்யக் கட்சி நீதிக்கட்சியுடன் சேர்ந்து சுயேட்சை அமைச்சரவையைக் கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபட்டது. தமிழ்நாட்டில் சுயராஜ்யக் கட்சியினரால் இரட்டை ஆட்சியின் தீமைகளை எடுத்துக்காட்ட முடிந்ததேயொழிய அதை செயலிழக்கச் செய்ய முடியவில்லை. இரட்டை ஆட்சியின் முரண்பாடுகளுக்குள் இந்திய சுயராஜ்யக் கட்சியினர் புயலில் சிக்கிய படகென திசைதப்பித் தமிழ்நாட்டு அரசியலிலிருந்து மறைந்தனர்.

நீல் சிலை அறப்போராட்டம்

சென்னை இராணுவப் பிரிவின் தலைவராக இருந்த கர்னல் நீல் 1857 பெருங்கிளர்ச்சியை ஒடுக்குவதில் தனித்தீவிரம் காட்டியவர். அவருடைய சேவையைப் பாராட்டி பிரிட்டிஷ் அரசாங்கம் சென்னையின் பிரதான பகுதியில் நீலின் சிலையை வைத்தது. விடுதலைப் போராட்டத்தின் போது அந்த "அவமானச் சின்னத்தை" அகற்றுவதற்காக நெல்லை ந.சோமயாஜுலுவின் தலைமையில் சத்தியாக்கிரகக்குழு துவக்கப்பட்டது. மதுரை சீனிவாசநாத ஐய்யங்கார், அவரது மனைவி பத்மாசனி அம்மாள், ரெ.சிதம்பரபாரதி, டாக்டர் பி.வரதராஜுலு ஆகியோர் அச்சத்தியாகிரகத்தில் பெரும் பங்கேற்றனர். 1927 ஆகஸ்டு 11 ஆம் தேதி துவங்கிய அப்போராட்டத்துக்கு சுப்பராயலு நாயுடுவும், முகமது சாலியா இராவுத்தரும் தலைமை தாங்க நீலின் சிலையை உடைத்து சேதப்படுத்தினர். அவர்கள் கைது செய்யப்பட்டு ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை பெற்றனர். ஆகஸ்டு மாதம் துவக்கப்பட்ட நீல் சிலை சத்தியாக்கிரகம் டிசம்பர் வரை தொடர்ந்து நடைபெற்றது. தமிழ்நாட்டின்

குறிப்பு

பல மாவட்டங்களிலிருந்தும் தொண்டர்கள் சென்னைக்கு வந்து அப்போராட்டத்தில் கலந்து கொண்டனர். சோமயாஜுலு, குடியாத்தம் சாமிநாத முதலியார், பண்ருட்டி எஸ்.ஏ.தேவநாயக ஐயா ஆகியோர் முறையே தளபதிகளாயிருந்து நீல் சிலை சத்தியாகிரகத்தை நடத்தி கைதாகி கடுந்தண்டனையைப் பெற்றனர். 'நாகபுரியில் நடைபெற்ற தேசியக் கொடிப்போர், பர்டோலியில் நடைபெற்ற வரிகொடா இயக்கம், கேரளத்தில் நடைபெற்ற வைக்கம் சத்தியாக்கிரகம் ஆகியவற்றுக்கு இணையானதாக இருந்தது சென்னையில் நடைபெற்ற நீல் சிலைச் சத்தியாக்கிரகம்" எனப் புகழாரம் சூட்டியுள்ளார் ம.பொ.சிவஞானம்.

சைமன் குழு புறக்கணிப்பு, 1927-1929

1928 பிப்ரவரி 3 ஆம் தேதி சைமன் குழு (Simon Commission) பம்பாயில் வந்திறங்கிய போது அதை எதிர்த்து இந்தியாயெங்கிலும் அர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. சென்னையில் நடைபெற்ற பிரமாண்டமான ஆர்ப்பாட்டத்தைக் கலைக்கப் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்று பேர் மாண்டனர். பிரகாசம், முத்துரங்க முதலியார், பக்தவத்சலம் ஆகியோர் தடியடிக்கு ஆளாயினர். திருவல்லிக்கேணி ஜார்ஜ் டவுனில் நிலைமையை சமாளிக்க இராணுவம் அழைக்கப்பட்டது. சைமன் குழு சென்னைக்கு வந்த போது "சைமனே திரும்பிப் போ" என்ற முழக்கம் எழுந்தது. அக்குழுவுக்கெதிராகக் கருப்புக் கொடி காட்டப்பட்டது. கண்டன ஊர்வலமும் கடற்கரைக் கூட்டமும் நடைபெற்றன. சைமன் குழுவுக்கு அளிக்கப்பட்ட அரசாங்க வரவேற்பில் டாக்டர் பி.சுப்பராயன் கலந்து கொண்டதைக் கண்டித்து அவரது அமைச்சரவையிலிருந்து இரங்கநாத முதலியாரும், ஆரோக்கியசாமி முதலியாரும் பதவி விலகினர். சைமன் குழு மீண்டும் சென்னை வந்த போது (1930 பிப்ரவரி 29) தீவிரமாகப் புறக்கணிக்கப்பட்டது. சைமன் குழு வருகையால் தமிழ் நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சி மீதிருந்த அதிருப்தியும் வெறுப்புணர்ச்சியும் அதிகரிக்கவே செய்தன.

பூரண சுதந்திர சபதம்

1927 சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் தான் முதன் முறையாகப் பூரண சுதந்திரமே இந்தியாவின் குறிக்கோள் என அறிவிக்கப் பட்டது. அடுத்த ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் மக்கள் பூரண சுதந்திரப் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டுமென்றும், 1929 இறுதிக்குள் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படாவிடில் காங்கிரஸ் பூரண சுதந்திரம் கோரிப் போராடலாமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாட்டில் இராஜகோபாலாச்சாரி மீண்டும் அரசியலில் தீவிரமாக ஈடுபடலானார். தொடக்கப்படவிருந்த போராட்டத்துக்கு மக்களைத் தயார்படுத்த தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார் அவர். 1930 ஜனவரி 26 ஆம் தேதி தேசமெங்கும் பூரண சுதந்திர நாள் கொண்டாடப்பட்ட போது

தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஊர்தோறும் அந்நாள் கொண்டாடப்பட வேண்டும்

நீதிக்கட்சி, 1916-1920 முன்னோடி முயற்சிகள்

19 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆங்கில அரசாங்கம் ஒரு ஆணையைப் பிறப்பித்தது: 1854 நிலை ஆணை (Standing Order No.128(2), 1854). இந்த ஆணைப்படி 1) அரசாங்க கீழ்நிலைப் பதவிகளுக்கான நியமனங்கள் ஒருசில செல்வாக்குமிக்க குடும்பங்களின் ஏகபோக உரிமையாக இருக்கக்கூடாது 2) ஒவ்வொரு மாவட்டத்துக்கான பதவிகள் அம்மாவட்டத்தில் உள்ள பிரதான சமூகத்தினருக்குக் கிடைக்குமாறு பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்று தெளிவாக்கப்பட்டது.

1871 ஆம் ஆண்டு மக்கள் கணக்கீட்டு மேற்பார்வையாளர் கோர்னிஷ் (Cornish, Superintendent W.R.Cornish, Census of Madras Presidency, Vol.l, p.197) பின்வரும் பரிந்துரையைச் செய்தார்: 1) ஒவ்வொரு பிரச்சனையும் பிராமணக் கண்ணாடி மூலம் பார்ப்பது அரசாங்க அரசியலுக்கு நல்லதல்ல் 2) மிக அதிகமாக உள்ள இந்துக்கள், முஸ்லீம்கள் ஆகியோரின் எண்ணிக்கைக்கு ஏற்ப அரசாங்கப் பதவிகளுக்கு வரம்பு விதிக்க வேண்டும் 3) எந்தவொரு குறிப்பிட்ட சாதியினருக்கும் முதல் முக்கியத்துவம் கொடுக்காதவாறு அரசின் கொள்கைகள் இருக்க வேண்டும். சுருங்கக்கூறின், 1854 நிலை ஆணையும், 1871 பரிந்துரையும் நீதிக்கட்சி தோன்றி, வேர்விட்டு வளர்வதற்கான விதைகளைத் தாங்கி இருந்தன என்பதில் ஐயமில்லை.

13.6.3. ஆதிதிராவிடர் ஜனசபை

20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சென்னை இராஜதானியில் பிராமணர் அல்லாதார் சார்பில் துவக்கப்பட்ட மிகப் பெரிய பிராந்திய அரசியல் அமைப்பு (Regional Political Party) நீதிக்கட்சி ஆகும். இக்கட்சி உருவாக்கப்படுவதற்கு முன்பாக இத்திசை நோக்கிப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் முதன்மையானது ஆதிதிராவிட ஜனசபை (Adi Dravidar Jana Saba) ஆகும். ஆதிதிராவிடர் முதல் முறையாக "திராவிடர்" என்ற பட்டப்பெயரைப் போட்டுக் கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார் ஆர்.கண்ணன். ஆதிதிராவிடர் ஜனசபை அமைக்கப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு 1895 ஆம் ஆண்டில் இரண்டு துண்டு பிரசுரங்கள் வெளியிடப்பட்டன: 1) பிராமணரல்லாதோர் இனங்களும் இந்திய பொதுப்பணியும் (The Non-Brahmin) Races and Indian Public Service) 2) பிராமணரல்லாதார் இனங்களை சீர் செய்வதற்கான வழிவகைகள் (The Ways and Means for the Amelioration of Non-Brahmin Races). இவ்விரு வெளியீடுகளும் நடுநிலையாளர் (Fair Play) என்ற புனைப் பெயரில் எழுதப்பட்டவை. இந்த வெளியீடுகள் அரசுப் பணிகளில் பிராமணர்கள் ஆதிக்கம் செலுத்துவதாகவும், இப்பணிகளில் அனைத்து வகுப்பினரையும் சேர்த்துக்

குறிப்பு

குறிப்பு

கொள்ள வேண்டும் என்றும் கோரப்பட்டிருந்தன. இவ்வெளியீடுகள் முதல் முறையாக பிராமணரல்லாதார் பற்றிய பிரச்சனையை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தன. மேலும் இந்த பிரசுரங்களில் "பிராமணரல்லாதார் இனங்கள்", "இந்தியப் பொதுப்பணி" ஆகிய சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டு வெளியீடுகளும் தேசிய கண்ணோட்டத்தோடு எழுதப்பட்டவையாகும்.

சி.சங்கரன்நாயர்

சி.சங்கரன் நாயர் நீதிபதி ஆவதற்கு முன் பிரிட்டிஷார் போற்றும் சமத்துவம், சகோதரத்துவம் போன்ற கருத்துக்கள் சாதி முறைக்கு முற்றிலும் மாறுபட்டது என்று பேசினார் (1904). சென்னைப் பல்கலைக்கழகம் பட்டதாரிகளுக்கு உரையாற்றிய நீதிபதி சங்கரன் நாயர் வர்ண-ஜாதி முறை அகற்றப்படாத வரை அரசியல் முன்னேற்றம் சாத்தியமில்லை என்றார் (1908).

13.6.4. சென்னை பிராமணரல்லாதார் சங்கம்

1909 ஆம் ஆண்டு பி.சுப்ரமணியம், எம்.புருஷோத்தம நாயுடு ஆகிய இரண்டு பிராமணரல்லாத வழக்குரைஞர்கள் சென்னை பிராமணரல்லாதார் சங்கம் (Madras Non-Brahmin Association) என்ற அமைப்பைத் துவக்கினர். இந்த அமைப்பின் நோக்கம் பிராமரல்லாதோரிடையே கல்வியைப் பரப்புவதாகும். மேலும் இச்சங்கத்தில் ஓராயிரம் உறுப்பினர்களைச் சேர்க்கத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் அப்போதிருந்த பிராமணரல்லாத பிரமுகர்கள் இம்முயற்சிக்கு ஆதரவளிக்க முன்வரவில்லை. காலம் கனிவதற்கு முன்பே துவக்கப்பட்ட இச்சங்கம் செயல்பட முடியாமல் போயிற்று. சென்னை பிராமணரல்லாதார் சங்கம் தான் 20 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதல் அமைப்பாகும்.

சென்னை கூட்டமைப்புக் குழு, 1912

சென்னை பிராமணரல்லாதார் சங்கம் துவக்கப்பட்ட மூன்றாண்டுகளில் சென்னை கூட்டமைப்புக் குழு (Madras United League, 1912) துவக்கப்பட்டது. இக்குழு பிராமணரல்லாத அரசாங்க அலுவலர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அரசாங்க நிர்வாகத்தில் பிராமணர் ஆதிக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட சரவண பிள்ளை, ஜி.வீராசாமி நாயுடு, துரைசாமி நாயுடு போன்றோர் இக்குழு தோன்ற மூலகாரணமாக இருந்தனர். அரசியல் சாராத இந்த அமைப்பு சமுதாய நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. சென்னை கூட்டமைப்புக் குழுவே பின்னர் சென்னை திராவிடர் சங்கம் (Madras Dravidian Association) என்று பெயர் மாற்றம் பெற்றது (1912 அக்டோபர் 1). அப்போது மருத்துவ மாணவராக இருந்த சி.நடேச முதலியார் இச்சங்கத்தின் செயலாளராகவும் பணியாற்றினார்.

13.6.5. சென்னை திராவிடர் சங்க

குறிப்பு

திராவிடர் சங்கம் துவக்கப்பட்டபின் சில குறிப்பிடத்தக்க சாதனைகளைச் செய்தது: 1) சென்னையில் இச்சங்கத்தின் கிளைகள் திறக்கப்பட்டன் 2) சென்னையில் தங்கியிருந்த பிராமணரல்லாத மாணவர்களுக்கென்றே பிரத்யேக விடுதி (Hostel) துவங்கப்பட்டது 3) சென்னையிலிருந்த பிராமணரல்லாதார் பட்டதாரிகளை ஆண்டுதோறும் அழைத்து அவர்களுக்கு இச்சங்கத்தின் நோக்கம் மற்றும் நடவடிக்கைகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது அவர்கள் கவுரவிக்கப்பட்டனர் 4) சங்கக் கோரிக்கைகளை உள்ளடக்கிய இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டன. சென்னை திராவிடர் சங்கத்தின் நடவடிக்கைகள் படித்த பிராமணரல்லாதோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அதுமட்டுமல்ல. வெளி மாவட்டங்களிலிருந்து சென்னையில் பல இடர்பாடுகளுக்கு இடையே கல்வி பயின்று வந்த பிராமணரல்லாத மாணவர்களுக்கென தனியாக ஒரு விடுதியைத் துவக்கியது சமுதாய மாற்றத்துக்கான அடிப்படை முக்கியத்துவமான நிகழ்ச்சியாகும்.

இராயல் கமிஷன்

1912 ஆம் ஆண்டு அரசாங்கப் பணிகளுக்கான இராயல் கமிஷன் (Royal Commission on Public Services) அமைக்கப்பட்டது. அப்போது சென்னை சட்டமன்ற உறுப்பினராக இருந்த பி.தியாகராய செட்டி அக்கமிஷனை சந்தித்து மாகாண அரசாங்கப் பதவிகளை பிராமணர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புள்ளி விவரங்களுடன் விளக்கினார். கமிஷன் 42 சாட்சிகளை விசாரித்தது. அவர்களில் ஒருவரான வருவாய் கோட்ட அதிகாரி பாலாஜி ராவ் நாயுடு பிராமணரல்லாதார் நலனைப் பாதுகாப்பதற்கான ஒரு வழி சாதிவாரியான விகிதாச்சார பிரதிநிதித்துவம் தான் என்பதை வலியுறுத்தினார்.

கடிதக் கிளர்ச்சி

1915 ஆம் ஆண்டு 21 கடிதங்களை உள்ளடக்கிய நூல் வெளியிடப்பட்டது. பிராமணரல்லாத சி.சங்கரன் நாயரால் எழுதப்பட்ட இக்கடிதங்கள் அனைவரது கவனத்தையும் கவர்ந்தன. இந்த கடிதங்கள் பட்டும் படாமலிருந்த பிராமணரல்லாத தலைவர்கள் அனைவரையும் சிந்திக்க வைத்தன. உள்ளாய்வு செய்தோர் ஊக்கமுற்றனர். திராவிட மகாசபை (Dravida Maha Sabha) என்ற அரசியல் அமைப்பை உருவாக்கி அதன் கிளைகளை மாவட்டங்களிலும், கிராமங்களிலும் துவக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. இக்கடிதங்கள் அடங்கிய நூல் வெளியிடப்பட்ட அதே ஆண்டில் (1915) சி.சங்கரன்நாயர் எழுதிய திராவிட பிரபலங்கள் (Dravidian Worthies) என்ற நூலும் வெளியிடப்பட்டது. இந்த இரண்டு நூல்களும் நல்ல வரவேற்பைப் பெற்றன. இவை பிராமணரல்லாதோரிடையே சிந்தனைக் கிளர்ச்சியை ஏற்படுத்தின. அப்போது சி.சங்கரன் நாயர் காங்கி கட்சித் தலைவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு

13.6.6. தேர்தல் திருப்புமுனை

தேர்தல் தோல்வி

1916 ஆம் ஆண்டு இம்பீரியல் சட்டமன்ற (Imperial Legislative Assembly) த்துக்கான தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில் போட்டியிட்ட பிராமணரல்லாத பிரபல வேட்பாளர்களான டி.எம்.நாயரும், பி. இராமராயரும் முறையே பிராமண வேட்பாளர்களான பி.எ .ஸ்ரீனிவாச சாஸ்திரி, கே.வி. இரங்கசாமி ஐயங்கார் ஆகியோரால் தோற்கடிக்கப்பட்டனர். அதேபோன்று, பிட்டி தியாகராய செட்டியும், குமார வெங்கடரெட்டி நாயுடுவும் அன்னிபெசண்ட் அம்மையாரின் சுயாட்சி சங்க (Home Rule League)த்தின் ஆதரவு பெற்ற பிராமண வேட்பாளர்களால் தோற்கடிக்கப்பட்டனர். அனைத்து வேட்பாளர்களும் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சுயசிந்தனை

மிகச் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த பிராமண வேட்பாளர்கள் மிகப் பெரும்பான்மைச் சமூகங்களைச் சேர்ந்த செல்வமும் செல்வாக்கும்மிக்க வேட்பாளர்களை எளிதில் தோற்கடித்தது பிராமணரல்லாத பிரபலங்களுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. இத்தேர்தல் தோல்விகள் பிராமணர்-பிராமணரல்லாதார் ஆகியோருக்கு இடையே இருந்த இடைவெளியை மேலும் விரிவுபடுத்திவிட்டது. குறிப்பாக பிராமணரல்லாத வாக்காளர்கள் பிராமண வேட்பாளர்களுகு ஆதரவாக வாக்களித்து வெற்றி பெறச் செய்தது பிராமணரல்லாத தலைவர்களிடையே சுயசிந்தனையைத் தூண்டிவிட்டது. அதன் விளைவே நீதிக்கட்சியின் எழுச்சியாகும்.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

6. தனித்தமிழ் இயக்கத்தை தோற்றுவித்தவர்?
7. எந்த ஆண்டு தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் உருவாக்கப்பட்டது?
8. எந்த ஆண்டு ஆதிதிராவிடர் ஜனசபை துவங்கப்பட்டது?

13.7. நீதிக்கட்சியின் தோற்றம்

இம்பீரியல் சட்டமன்றத் தேர்தலில் தோல்வியைத் தழுவிய பிட்டி தியாகராய செட்டியும், எம்.நாயரும் அவர்களுடைய ஆதரவாளர்களுடன் 1916 நவம்பர் 20 ஆம் நாள் சென்னை விக்டோரியா பொது மண்டபத்தில் (Victoria Public Hall) கூடி வரலாற்று முக்கியத்துவமுடைய இரண்டு முடிவுகளை எடுத்தனர்: 1) தென்னிந்திய மக்கள் சங்கம் (South Indian People's Association) என்ற பெயரில் ஒரு அமைப்பைத் துவக்குவது 2)

அதேபோன்று, தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (South Indian Liberal Federation) என்ற அமைப்பையும் உருவாக்கவது.

குறிப்பு

தென்னிந்திய மக்கள் சங்கம்

தென்னிந்திய மக்கள் சங்கம் ஒரு கூட்டுப் பங்குக் கழக (Joint-Stock Company)த்தைப் போன்று வர்த்தக அமைப்பாகும். அதன் நோக்கம் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் செய்தித்தாள்களைத் துவக்கி, அவற்றின் மூலம் பிராமணரல்லாதாரின் குறைகளை வெளியிடுவதாகும். அதாவது, இந்த சங்கம் ஒரு பிரச்சார சாதனமாக இயங்கும். தியாகராய செட்டி இதன் செயலராக இருந்தார்.

தென்னிந்திய நல உரிமை சங்கம்

இரண்டாவது நிறுவனமான தென்னிந்திய நல உரிமை சங்கம் அரசியல் கட்சியாகும். இதன் நோக்கங்கள்: 1) பிராமணரல்லாதார் உரிமைக்காகவும், நலனுக் காகவும் குரல் கொடுப்பது 2) அரசாங்க அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இவை பற்றி எடுத்துரைப்பது 3) பிராமணரல்லாதவர்களுக்கான திட்டங்களைத் தீட்டி செயல் படுத்துவது இக்கட்சி நீதி (Justice), திராவிடன் (Dravidan), ஆந்திர பிரகாசா (Andhra Prakasa) ஆகிய நாளேடுகளை முறையே ஆங்கிலத்திலும், தமிழிலும், தெலுங்கிலும் வெளியிடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. அதன்படியே கட்சியும், பத்திரிகைகளும் துவக்கப்பட்டன. ஆங்கில நாளேடான "நீதி" செல்வாக்கு பெற்றமையால் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் நீதிக்கட்சி (justic Party) என்ற பெயர் மாற்றம் பெற்றது. தனித்தனியே செயல்பட்டு வந்த சென்னை திராவிடர் சங்கமும், தென்னிந்திய மக்கள் சங்கமும் நீதிக்கட்சியுடன் இணைந்தன.

ஒன்று சேர்ந்த துருவங்கள்

சென்னை மாநகராட்சியில் இரு துருவங்களாக செயல்பட்டு வந்த பிட்டி தியாகராய செட்டிக்கும் நாயருக்குமிடையே இருந்த கருத்து வேறுபாடுகளைப் போக்கி, இருவரையும் ஒன்று சேர்த்து நீதிக்கட்சிக்கு கொண்டு வந்த பெருமை சி.நடேச முதலியாரைச் சேரும். இவர்தான் பின்னர் பிரதிநிதித்துவம் இன்றேல் வரியில்லை" (No taxation without representation) என்ற கோஷத்தை சென்னை சட்டமன்றத்தில் எழுப்பினார். இவர்களுடன் மு.ஏ.ரெட்டி, பனகல் அரசர், போப்பிலி அரசர் போன்றோரும் காங்கிரசை விட்டு வெளியேறி நீதிக்கட்சியில் சேர்ந்தனர். இதனால் நீதிக்கட்சிக்கு மக்களிடையே அங்கீகாரமும் மதிப்பும் அதிகரித்தது.

13.7.1. பிராமணரல்லாதார் பிரகடனம்

1916 டிசம்பர் மாதம் தியாகராய செட்டி வரலாற்றுச் சிறப்புமிக்க பிராமணரல்லாதார் பிரகடன (Non-Brahmin Manifesto)த்தை வெளியிட்டார். இப்பிரகடனத்தின் முக்கிய அம்சங்களாவன: 1) இந்தியர்கள் இன்னும் சுயாட்சிக்குத் தயாராகவில்லை 2) இந்நிலையில்

குறிப்பு

பிரிட்டிஷார் இந்தியர்களுக்கு சுயாட்சி வழங்கினால் அது பிராமணர்கள் பிறர்மீது ஆதிக்கம் செலுத்துவதில் தான் முடியும் 3) சென்னை இராஜதானியின் மக்கள் தொகையில் பிராமணர்கள் 3% மட்டுமே உள்ளனர் ஆனால் அவர்கள் அரசாங்க அதிகாரவர்க்கம் (Bureaucracy), சட்டம், மருத்துவம் போன்ற துறைகள், இந்திய தேசிய காங்கிரசின் முக்கிய பதவிகள் ஆகியவற்றில் அளவுக்கு மீறி அதிக இடங்களைப் பிடித்துள்ளனர். 4) மிகப் பெரும்பான்மையில் உள்ள பிராமணரல்லாதோர் அரசாங்கத்துக்கு வரி செலுத்துகின்றனர் ஆனால் அவர்களுக்கு அரசாங்க வேலையிலும் கல்வியிலும் உரிய இடம் கொடுக்கப்படவில்லை 5) இந்த நிலை நீடித்தால் பிராமணர்கள் அரசாங்கப் பணிகள் மற்றும் பிற பிரதிநிதித்துவ அமைப்புகள் அனைத்தையும் ஆக்கிரமித்துக்கொள்வர் 6) செட்டி, கோமுட்டி, முதலியார், நாயுடு, நாயர் போன்ற சமுதாயத்தினர் சென்னை இராஜதானியின் பொருள் மற்றும் ஒழுக்க மேம்பாட்டு முன்னேற்றத்துக்குப் பங்களிப்பு செய்திருப்பினும் இவர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே மக்கள் சுயாட்சி பெறுவதற்கு முன்பாக சாதி வேடுபாடுகள் நீக்கப்படுதல் வேண்டும். இதற்காக நீதிக்கட்சி பிரிட்டிஷ் ஆட்சிக்கு விசுவாசத்துடன் நன்றிக்கடன் பட்டிருக்கும். பிராமணரல்லாதார் பிரகடனம் நீதிக்கட்சியின் குறிக்கோள், கொள்கை, திட்டங்கள் பற்றிய அடிப்படை ஆவணமாகும். இப்பிரகடனம் சென்னை இராஜதானி வாழ் பிராமணரல்லாதாரின் மாக்னா கார்டா (Magna Carta) என்று வர்ணித்துள்ளார் சிதம்பரம் குடியரசு.

கண்டனக் குரல்

பிராமணரல்லாதார் பிரகடனம் அடையாள அரசியல் (Identify Politics) அறிவிப்பாகவும் அழைப்பாகவும் இருந்தது. இந்த அறிவிப்பு பிராமணரல்லாதோருக்கு தனிப்பட்ட அடையாளத்தைக் கொடுத்தது. இது தற்கால தமிழ்நாட்டு அரசியலுக்குப் புதிய வடிவத்தைத் தந்து, புதிய பாதையையும் போட்டுக் கொடுத்தது. எனவே, பிராமணரல்லாதார் என்ற அடையாளத்தை வலிமைப்படுத்த இச்சொல் பிரகடனத்தில் 13 இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனினும் தேசிய பத்திரிகைகள் இப்பிரகடனத்தை சர்ச்சைக்குரிய ஆவணமாகவே பார்த்தன் இதற்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்பின. எடுத்துக் காட்டாக இந்து பத்திரிகை இந்த பிரகடனத்தை மிகுந்த வேதனையோடும், வியப்போடும் பரிசீலித்ததாகவும், இதில் காணப்படும் பல விஷயங்கள் நியாயமற்றதாகவும், திரித்துக் கூறப்பட்டிருப்பதாகவும், பெருமைக்குரிய இந்திய சமூகத்தாரிடையே இந்த அறிவிப்பு கசப்புணர்வை ஏற்படுத்துவதைத் தவிர வேறு எந்த நோக்கத்தையும் நிறைவேற்றப் போவதில்லை என்றும் எழுதியது (1916 டிசம்பர் 20).

இந்து நேசன் பத்திரிகை இப்புதிய சங்கம் துவக்கப்பட்டதைப் பற்றிய சந்தேகத்தைக் கிளப்பியது. அன்னிபெசண்ட்டின் நியூ ஏஜ் (New Age) இப்பிரகடனமும் நீதிக்கட்சியும் அகால மரணமடையும் என்று ஆரூடம் கூறியது. இது செட்டியாரின் பிரகடனம்“ என்று வர்ணித்த

குறிப்பு

டைம்ஸ் ஆப் இந்தியா (வுஅைநள ழக ஐனெயை) ஒன்று சேர்ந்து செயல்படக்கூடிய ஒருமித்த பிராமணரல்லாதார் என்ற வகுப்பார் யாருமில்லை என்று கூறியது. இப்பிரகடனம் ஒரு முறைகேடான கட்டுக்கதை (Illegitimate Fabrication), அரசியல் போலிப்புனைவு (Political Fiction), கற்பனைச் செய்தி (Figment of Imagination) என்றெல்லாம் குறை கூறப்பட்டது. இக்குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்கும் வகையில் பிராமணர் அல்லாதார் (Non-Brahmin) என்ற நீதிக்கட்சி பத்திரிகை "கேலி பேசுவோர் பேசட்டும். பிராமணரல்லாதார் சமுதாயம் எவராலும் தடுத்து நிறுத்த முடியாத அளவுக்கு முன்னேறும்" என்று எழுதியது. எனினும் நீதிக்கட்சியின் எழுச்சி கோப்பையில் எழுந்த புயல் அல்ல என்பதை உணர வைத்தது.

நீதிக்கட்சி பத்திரிகைகள்

1917 ஆம் ஆண்டு தென்னிந்திய மக்கள் சங்கம் தனது பங்குகளை (Shares) விற்று, மேலும் பணம் திரட்டி ரூ.40,000க்கு ஒரு அச்சுக்கூடத்தை வாங்கி நீதி (Justice) என்ற பெயரில் முதல் இதழை வெளியிட்டது (1917 பிப்ரவரி 24). டி.எம்.நாயர் இப்பத்திரிகையில் கவுரவப் பதிப்பாளராகவும், எம்.எ.பூர்ணலிங்கம் துணைப் பதிப்பாளராகவும் பொறுப்பேற்றனர். அதேபோன்று, பக்தவத்சலம் பிள்ளையைப் பதிப்பாளராகக் கொண்டு திராவிடன் என்ற தமிழ் செய்திப் பத்திரிகை 1917 ஜூன் மாதம் துவக்கப்பட்டது. ஏ.சி.பார்த்தசாரதி நாயுடு ஆந்திர பிரகாசிகா என்ற தெலுங்கு செய்திப் பத்திரிகையை விலைக்கு வாங்கி பதிப்பித்தார். நீதிக்கட்சி மூன்று பத்திரிகைகள் மூலம் கொள்கைகளையும், திட்டங்களையும், செயல்பாடுகளையும் பரப்பும் பழக்கத்தை ஏற்படுத்தியது. அந்த காலகட்டத்தில் பிராமணர் பத்திரிகைகளை எதிர்த்து நிற்பது என்பது நினைத்துப் பார்க்க முடியாதது. எடுத்துக்காட்டாக, திவான் பகதூர் கருணாகர மேனன் நீதி (Justice) ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியராக இருக்க ஒப்புதல் கொடுத்தார். ஆனால் அன்னிபெசண்ட், சி.பி. இராமசாமி ஐயர், பி.கேசவ பிள்ளை ஆகியோரின் பேச்சைக் கேட்டு கடைசி நேரத்தில் ஆசிரியர் பொறுப்பேற்க மறுத்து விட்டார்.

பிராமணரல்லாதார் மாநாடு

நீதிக்கட்சி துவக்கப்பட்டு, பிராமணரல்லாதார் பிரகடனம் வெளியிடப்பட்ட பின், முதல் பிராமணரல்லாதார் மாநாடு (First Non-Brahmin Conference) 1917 ஆகஸ்டு 19 ஆம் நாள் கோயம்புத்தூரில் இரமராயனின்கரின் தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் நீதிக்கட்சியின் நோக்கங்களும், இலக்குகளும் தெளிவுபடுத்தப் பட்டது: 1) தென்னிந்தியாவிலுள்ள அனைத்து சமுதாயங்களின் கல்வி, பொருளாதார, சமூக, ஒழுக்க நிலைகளை மேம்படுத்தல் 2) பிராமணரல்லாதாரின் எண்ணங்களையும், எதிர்பார்ப்புகளையும் ஆங்கில அரசாங்கத்திடம் எடுத்துரைத்தல் 3) பொதுக்கூட்டங்கள், பிரசுரங்கள் மூலம் கட்சிக் கொள்கைகளையும், செயல் திட்டங்களையும் பற்றிப் பிரச்சாரம் செய்தல்.

குறிப்பு

இக்கொள்கைகளை மக்களிடம் கொண்டு செல்வதற்காக 1917 ஆம் ஆண்டு இறுதிக்குள் கோவை, சேலம், திருநெல்வேலி, பிக்காவளே, புலிவெண்டியா, பெசவாடா ஆகிய நகரங்களில் மாநாடுகள் நடத்தப்பட்டன. இம்மாநாடுகள் நீதிக்கட்சி நிலை பெற்றுவிட்டது என்பதை உறுதிப்படுத்தின. ஒரே ஆண்டில் (1917) 6 வட்டார மாநாடுகளை நடத்திய பின் முதல் மாநில மாநாடு 1917 டிசம்பர் 28-29 தேதிகளில் சென்னை வெல்லிங்கடன் திரை அரங்கில் நடைபெற்றது. அம்மாநாட்டில் துவக்கக் கல்வி, விவசாயக் கல்வி, தொழில் கல்வி, பொது நிறுவனங்கள், அரசாங்கப் பணி, உள்ளாட்சி அமைப்புகள், அறக்கட்டளை அமைப்புகள், சமூக-சமய முன்னேற்றம், தற்காப்பு இயக்கம், அரசியல் சீர்திருத்தம், வகுப்புவாரி பிரதிநிதித்துவம், லட்சியக் கனவுகள் பற்றியெல்லாம் பரிசீலிக்கப் பட்டது. "அரசியல் போர் துவங்கிவிட்டது. ஓயாது உழையுங்கள். வெற்றி நோக்கி நடை போடுங்கள். உங்களுடைய சமுதாய உரிமைகள் உடனடியாக ஏற்றுக் கொள்ளப்படாமல் போகலாம். ஆனால் வருங்கால சமுதாயம் இவற்றை நிச்சயம் அறுவடை செய்யும்" என்ற அறைகூவலுடன் மாநாடு முடிவுற்றது.

முதல் நான்கு ஆண்டுகள், 1916-1920

நீதிக்கட்சி துவக்கப்பட்டபின் அக்கட்சி பல சவால்களை சந்திக்க வேண்டிய தாயிற்று. அவற்றுள் முதலாவது அறிவிலும், ஆற்றலிலும், அரசாங்க ஆதரவிலும் வலுவாக இருந்த பிராமணர்களுடன் மோதியதாகும். அன்றைய சென்னையில் மூன்று வலுவான பிராமணர் கோஷ்டிகள் (குயஉவழைளெ) செயல்பட்டு வந்தன: 1) மைலாப்பூர் குழு. இக்குழுவில் சேத்துப்பட்டு ஐயர்களும், வெம்பாக்கம் ஐயங்கார்களும் இடம் பெற்றிருந்தனர். 2) எக்மோர் குழு. இந்தக் குழு "இந்து" பத்திரிகை பதிப்பாளர் கஸ்தூரிரங்க ஐயங்காரின் தலைமையில் செயல்பட்டது. 3) சேலம் குழு. சி. இராஜகோபாலாச்சாரியும் பிற தேசிய வாதிகளும் சேலம் பிரிவின் பிரதான தலைவர்களாவர். இக்கோஷ்டிகள் நீதிக்கட்சியின் கொள்கைகளை எதிர்த்தன.

நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்தால் எத்தகைய திட்டங்களை நிறைவேற்றும் என்பது பற்றி இக்கோஷ்டிகளுடன் போராட வேண்டியிருந்தது. குறிப்பாக மைலாப்பூர், எக்மோர் பிராமணக் கோஷ்டிகள் இனவாரி இட ஒதுக்கீட்டு முறையை (Communal Representation) எதிர்க்க சேலம் குழுவின் தலைவர் இராஜாஜியும் அவரது ஆதரவாளர்களும் காந்தி துவக்கிய ஒத்துழையாமை இயக்கத்தை சென்னை இராஜதானியில் வெற்றகிரமாக செயல்படுத்த வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தனர். நீதிக்கட்சி வகுப்புவாரி இட ஒதுக்கீட்டுக் கொள்கையிலும், ஒத்துழையாமை இயக்கத்தை எதிர்ப்பதிலும் பிடிவாதமாக இருந்தது.

நீதிக்கட்சியும் சுயாட்சி இயக்கமும்

நீதிக்கட்சியும், அன்னிபெசண்ட் அம்மையாரின் சுயாட்சி இயக்கமும் (Home Rule Movement) ஒரே ஆண்டில் துவக்கப்பட்டன

குறிப்பு

(1916). அம்மையார் சனாதன இந்து மதத்தின் தீவிர ஆதரவாளர். அவரது இயக்கத்தை தமிழ் நாட்டுப் பிராமணர்கள் ஆர்வத்துடன் ஆதரித்தனர். எனவே, நீதிக்கட்சி சுயாட்சி இயக்கத்துக்கு எதிராகச் செயல்பட்டது. டாக்டர் டி.எம்.நாயர் அன்னிபெசண்ட்டின் பிற்போக்கு மருத்துவக் கருத்துக்களை எதிர்த்து வந்தார். பிராமணரல்லாதார் பிரகடனம் சுயாட்சி இயக்கத்தைக் கடுமையாக எதிர்த்தது. அதேபோன்று அன்னிபெசண்டின் நியூ இந்தியா பத்திரிகையும் இப்பிரகடனத்தைச் சாடியது. நீதிக்கட்சி அன்னிபெசண்டை "அயர்லாந்து பிராமணி" என்று வர்ணித்தது. சுயாட்சி என்பது பிராமணர் ஆட்சி என்று விமர்சித்தது திராவிடன் பத்திரிகை. நீதிக் கட்சியின் மூன்று பத்திரிகைகளிலும் சுயாட்சி இயக்கத்தை எதிர்த்துப் பல விமர்சனக் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. வெள்ளைக்கார பெண்மணியால் துவக்கப்பட்ட சுயாட்சி இயக்கத்தின் எதிர்மறைப் பயனை பிராமணர்கள் தான் அறுவடை செய்வர் என்பதை நீதிக்கட்சி பிரச்சாரம் செய்தது. இதற்கு எதிராக சுயாட்சி இயக்கத்தின் பிராமண ஆதரவாளர்கள் ஒன்று சேர்ந்து தங்களுக்கு அதிக பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கோரிக்கையை பிரிட்டிஷ் வைசிராய்க்கு அனுப்பியதாகக் குறிப்பிட்டுள்ளார் சிதம்பரம் குடியரசு.

13.7.2. நீதிக்கட்சி ஆட்சி, 1920-1937

நீதிக்கட்சியின் அமைப்பு

நீதிக்கட்சி ஒரு அரசியல் அமைப்பாக துவக்கப்பட்டது. அதன் நோக்கம் பிராமணரல்லாதாரிடையே விழிப்புணர்வை உருவாக்கி, தேர்தலில் போட்டியிட்டு, ஆட்சியைக் கைப்பற்றி, சமூக நீதியை நிலைநாட்டுவதாகும். நீதிக்கட்சியின் நிர்வாகிகள் 1917 அக்டோபர் மாதம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நீதிக்கட்சி வெளியிட்ட கொள்கை அறிக்கையே அக்கட்சியின் அரசியல் சட்ட வரைவாகக் கருதப்பட்டது. 1925 டிசம்பர் 19 ஆம் தேதி நீதிக்கட்சியின் அமைப்புச் சட்டம் (Party Constitution) அங்கீகரிக்கப்பட்டது. அதன் அலுவலகம் மௌண்ட் ரோடில் இருந்தது. கட்சிக் கிளைகள் முதலில் சென்னையில் துவக்கப்பட்டு பின்னர் மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டன. கட்சித் தலைவர்கள் அவ்வப்போது மாவட்டக் கிளைகளுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டனர்.

நீதிக்கட்சிக்கு ஒரு தலைவரும், நான்கு துணைத் தலைவர்களும், ஒரு பொதுச் செயலரும், ஒரு பொருளாளரும் இருந்தனர். 25 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு (Executive Committee) கட்சியின் கொள்கை முடிவுகளை செயல்படுத்தியது. 1920 தேர்தலுக்குப் பிறகு நீதிக்கட்சி ஐரோப்பிய அரசியல் கட்சி போன்று சீரமைக்கப் பட்டது. கட்சிக் கொரடா (Party Whip) என்ற புதிய கட்சிப் பதவி உருவாக்கப்பட்டது. செயற்குழு உறுப்பினர்களைக் கொண்ட குழுக்கள் (Committees) அமைக்கப் பட்டன. நீதிக்கட்சித் தலைவர் கட்சியோடு

குறிப்பு

இணைக்கப்பட்ட அனைத்து பிராமணரல்லாதார் சங்கங்களுக்கும் பொதுவான தலைவர் என்பது உறுதி செய்யப்பட்டது. அவரே சட்டமன்ற உறுப்பினர்களின் தலைவராகவும் செயல்பட்டார். செயற்குழு, அதன் உறுப்பினர்களது நிலை வரையறுக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் நீதிக்கட்சி மாநாடு கூட்டப்படுதல் வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. நீதிக்கட்சியின் முதல் தலைவராக சர்.தியாகராய செட்டியும், முதல் பொதுச் செயலாளராக ஆர்க்காடு இராமசாமியும் பொறுப்பேற்றனர். ஒரு மாநில அரசியல் கட்சி எவ்வாறு அமைக்கப்படுதல் வேண்டும் என்பதற்கு நீதிக்கட்சி சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்ந்தது. நீதிக்கட்சி 1920 ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை சட்டமன்றத் தேர்தலில் முதல் முறையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றது.

சென்னை சட்டமன்றம்

சென்னை சட்டமன்றம் (Madras Legistative Council) 1861 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. அப்போது அம்மன்றம் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத ஆலோசனை அவையாக மட்டுமே இருந்தது. அதன்பின் 1909 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மிண்டோமார்லி சீர்திருத்தங்களின் (Minto-Morley Reforms) விளைவாக மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் இடம் பெற்றனர். பின்னர் 1919 இல் மாண்டேகு-செம்ஸ் போர்டு சீர்திருத்தங்களின் (Montfort Reforms)படி அமைக்கப்பட்ட இரட்டை ஆட்சி (Diarchy)யின் கீழ் நடைபெற்ற தேர்தலில் சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றம் ஓரவை (ருஒஎயஅநசயட) அமைப்பாக 1920லிருந்து 1937 வரை செயல்பட்டது.

சட்டமன்றத் தேர்தல், 1920

சென்னை சட்டமன்றத்தில் 127 உறுப்பினர்கள் இருந்தனர். ஆளுநரின் நியமன உறுப்பினர்கள் இந்த எண்ணிக்கையில் அடங்கார். 127 உறுப்பினர்களில் 98 பேர் 61 தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்தல் தொகுதிகள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன: 1) வகுப்புவாரி தொகுதிகள் (Communal Constituencies). இவற்றுள் முகமதியரல்லாத நகரம், முகமதியரல்லாத கிராமம், பிராமணரல்லாத நகரம், முகமதியர் நகரம், முகமதியர் கிராமம், இந்திய கிறிஸ்த்துவர், ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர் ஆகியோருக்கான தொகுதிகள் அடங்கும் 2) சிறப்புத் தொகுதிகள்: (Special Constituencies) நிலச் சொந்தக்காரர், பல்கலைக்கழகங்கள், பண்ணையார், வர்த்தக சங்கங்கள் ஆகியோருக்கான தொகுதிகள் இவை 3) ஒதுக்கப்பட்ட தொகுதிகள் (Reserved Constituencies). இத்தொகுதிகளில் 28 பிராமணரல்லாதவர்களுக்கும் 29 நியமன உறுப்பினர்களுக்கும் 5 பறையர், பள்ளர், வள்ளுவர், மாலா, மடிகா, சக்கிலியர், தோட்டியர், செனுமான்கள், ஹோலேயர் ஆகிய வகுப்பினருக்கும் ஒரு தொகுதி பிற்பட்ட பகுதிகளுக்கும்“ (Backward

குறிப்பு

Tracts) ஒதுக்கப்பட்டன. நியமன உறுப்பினர்களையும் சேர்த்து சென்னை சட்டமன்றத்தின் மொத்த எண்ணிக்கை 134. வாக்காளர்களும், வாக்குப்பதிவும் சென்னை சட்டமன்றத்துக்கான முதல் பொதுத் தேர்தல் 1920 நவம்பர் மாதம் நடைபெற்றது. அப்போது சென்னை இராஜதானியின் மக்கள்தொகை 40 மில்லியன். சொத்துத் தகுதி உடையோர் மட்டுமே வாக்காளர்களாக அங்கீகரிக்கப்பட்டனர். எனவே, 12,48,156 பேர் மட்டுமே வாக்களிக்கும் தகுதியைப் பெற்றிருந்தனர். இவர்களுள் 3,03,558 பேர் மட்டுமே வாக்களித்தனர்! சராசரியாக 24.9% வாக்குப் பதிவாயிற்று. இருப்பினும், இத்தேர்தல் மக்களின் அரசியல் விழிப்புணர்வையும், பொதுத் தேர்தலில் நேரடியாகப் பங்கேற்கும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துவதாக இருந்தது. மைலாப்பூர் தொகுதியில் மட்டுமே அதிகபட்சமாக 52மூ வாக்குகள் பதிவாயின என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் முடிவுகள்

இந்திய தேசிய காங்கிர ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்று சட்டமன்றத் தேர்தலைப் புறக்கணித்தது. பலமிக்க எதிர்க்கட்சி இன்மையால் நீதிக்கட்சி 63 இடங்களில் வெற்றி பெற்றது. மொத்தம் தேர்ந்தெடுக்கப்படாத 18 உறுப்பினர்கள் ஆதரவைப் பெற்ற நீதிக்கட்சியின் எண்ணிக்கை 81 ஆக உயர்ந்தது. 1920 சட்டமன்றத் தேர்தலில் நீதிக்கட்சி குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றமைக்கான முக்கிய மூன்று காரணங்களாவன: 1) காங்கிர இத்தேர்தலைப் புறக்கணித்தது 2) நீதிக் கட்சியின் தீவிரப் பிரச்சாரம் 3) பிராமணரல்லாதாருக்கான இட ஒதுக்கீடு வாங்கித் தருவதாகக் கொடுத்த வாக்குறுதி.

நீதிக்கட்சி ஆட்சி, 1920-1923

சுப்பராயலு நாயுடு ஆட்சி

சென்னை இராஜதானி ஆளுநர் மார்க்குஸ் வில்லிங்டன் (Marquess Willington) தேர்தலில் வெற்றி பெற்ற நீதிக்கட்சித் தலைவர் பி.தியாகராய செட்டியை ஆட்சி அமைக்குமாறு அழைத்தார். ஆனால் அவர் மக்கள் வரிப்பணத்தில் ஊதியம் பெற விரும்பவில்லை எனக் கூறி அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருக்குப் பதில் ஏ.சுப்பராயலு நாயுடுவின் பெயரைப் பரிந்துரைத்தார். அவரின் பரிந்துரையை ஏற்று சுப்பராயலு நாயுடுக்கு அழைப்பு விடுத்தார் ஆளுநர். ஆளுநரின் அழைப்பை ஏற்றுக் நாயுடு முதலமைச்சரானார். அவருடன் இராமராயனின்கரும், வெங்கடரெட்டி நாயுடுவும் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்கள் 1920 டிசம்பர் 17 ஆம் நாள் பதவிப் பொறுப்பேற்றனர்.

பெருங்காவூர் இராஜகோபாலாச்சாரி சட்டமன்றத் தலைவராக நியமிக்கப்பட்டார். எட்வின் பெரியநாயகம், ஆர்க்காடு இராமசாமி முதலியார், பி.சுப்பராயன் ஆகிய மூவரும் சட்டமன்ற செயலர்களாயினர். சர் லியோனல் டேவிட்சன் (உள் துறை), சர் சார்ல தோதுந்தர் (நிதி), முகமது ஹபிபுல்லா (வருவாய்), எ .சீனிவாச ஐயங்கார் (சட்டம்) ஆகிய

குறிப்பு

சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளுநர் ஆட்சி அவையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். பிராமணரல்லாதார் அமைச்சரவையில் பிராமணர் அமைச்சராக நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. 1921 ஜூலை 11 ஆம் தேதி உடல் நிலை காரணமாக சுப்பராயலு ரெட்டியார் பதவி விலகியதால் அவக்குப் பதில் பனகல் அரசர் (சுயதய ழக ீயெபயட) முதலமைச்சராக நியமிக்கப்பட்டார். ஏ.பி.பாட்ரோ கல்வி அமைச்சரானார். நீதிக்கட்சியின் முதல் அமைச்சரவை 1923 செப்டம்பர் 11 வரை பதவியில் இருந்தது.

13.7.3. சட்டச் சாதனைகள்

முதல் நீதிக்கட்சி அரசாங்கம் சில வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சட்டங்களை நிறைவேற்றி நடைமுறைப்படுத்தியது. 1) 1921 ஏப்ரல் முதல் தேதி சென்னை சட்டமன்ற தீர்மானத்தின்படி சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட பெண்களுக்கு (1919 இந்திய அரசாங்கச் சட்டத்தில்) விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது. இத்தடை நீக்கம் 1926 இல் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட வழிவகுத்தது. 2) 1920 இல் சென்னை மாநகராட்சி சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் இருந்த பள்ளிகளில் இலவச காலை உணவு வழங்கியதற்கு சட்டமன்றம் அங்கீகாரம் அளித்தது. இதுவே, பின்னர் மதிய உணவுத் திட்டமாக விரிவடைந்தது. 3) பஞ்சமர், தீண்டத்தகாதோர், அரிஜன் என்று முத்திரை குத்தி சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த மக்கள் ஆதிதிராவிடர் என்று அழைக்கப்பட்டு சமுதாய அந்தஸ்து அளிக்கப்பட்டது. 4) உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (டுழஉயட டீழயசனள யுஉவ, 1920) மாவட்ட, தாலுகா, பஞ்சாயத்து நிறுவனங்களுக்கு சுயேட்சையாக இயங்கக்கூடிய அதிகாரத்தைக் கொடுத்தது. இச்சட்டம் உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டியது. இந்த அமைப்புகளுக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்ததோடு அதிகாரிகளுக்கு இவற்றின் மீது இருந்த ஆதிக்கத்தைக் குறைத்தது. 5) 1922 டிசம்பர் 18 ஆம் நாள் இந்து சமய அறக்கட்டளை சட்ட மசோதா (Madras Hindu Religious Endowment Act). இச்சட்டம் 1925 இல் நிறைவேற்றப் பட்டது. இந்தச் சட்டத்தின் மூலம் சென்னை இராஜதானியில் உள்ள அனைத்து இந்து கோயில்களும் அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. இச்சட்டம் அரசாங்கத்தின் சமயக் கொள்கையைத் தீர்மானித்தது. பின்னர் இது சம்மந்தமாக கொண்டுவரப்பட்ட சட்டங்களுக்கு முன்மாதிரிச் சட்டமாக அமைந்தது. முதல் நீதிக்கட்சி அரசாங்கம் கொண்டு வந்த இந்த ஐந்து சீர்திருத்தங்களும் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

தாழ்த்தப்பட்டோருக்குத் தனி அதிகாரி

சட்டங்களை நிறைவேற்றினால் மட்டும் போதாது அவை செம்மையாக நிறைவேற்றப்படுதல் வேண்டும். குறிப்பாக நீதிக்கட்சி ஆட்சி

குறிப்பு

தாழ்த்தப்பட்டோரின் நலனில் சிறப்புக் கவனம் செலுத்தியது. அவர்களது நலனைப் பாதுகாத்துப் பராமரிப்பதற்காகவே ஒரு ஐ.சி.எஸ் .அதிகாரியை கமிஷனர் (டுயடிழரச ஊழஅஅளைளழைநெச, ஐ.ஊ.ளூ) ஆக நியமித்தது. அவர் தாழ்த்தப்பட்டோர், ஆதிவாசிகள், மலைவாழ் மக்கள் போன்றோரின் உரிமைகளையும், நலத் திட்டங்களையும் பாதுகாத்து, நிறைவேற்றும் பொறுப்புடையவர். அவர் மேற்கண்ட வகுப்பிற்கு 1) வீட்டுமனை வழங்கினார் 2) கூட்டுறவு கடன் சங்கங்களைத் துவக்கினார் 3) குடிநீர் வசதி செய்து கொடுத்தார் 4) பொது நிலத்தை குறைந்த வாடகைக்கு வழங்கினார் 5) குடிப்பழக்கத்திலிருந்து விடுபடுமாறு ஊக்குவித்தார் 6) சாதி இந்துக்களின் எதிர்ப்பிலிருந்து பாதுகாத்தார் 7) அரசாங்க நிலத்தை விவசாயத்துக்காக ஒதுக்கினார் 8) இவர்கள் பிரதான பாதையை எளிதில் அடைப்பதற்கான கிளைப் பாதைகளைப் போட்டுக் கொடுத்தார் 9) பெண்களுக்கென கழிப்பறைகள் கட்டிக் கொடுத்தார் 10) ஏழைகள் வீடுகட்டிக் கொள்ள 20 சென்ட் நிலம் இலவசமாகக் கொடுத்தார் மரக்கன்றுகள் நடப்பட்டன் மிகக் குறைந்த விலையில் வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டன. தாழ்த்தப்பட்டோர் நலனுக்காகத் தனி அதிகாரியை நியமித்தது நீதிக்கட்சியில் நிலைத்த மகத்தான சரித்திர சாதனையாகும்.

நீதிக்கட்சி ஆட்சி, 1920-1923

நீதிக் கட்சியின் முதல் மூன்றாண்டு கால ஆட்சியின் போது பல முக்கிய சமுதாய, சமய, கல்வி, உள்ளாட்சி, வகுப்புவாரி பிரதிநிதித்துவ திட்டங்களை நிறைவேற்றிய போதிலும் கட்சிக்குள் ஒற்றுமை இல்லாமல் போயிற்று. கட்சி அதிருப்தியாளர்கள் அரசாங்க எதிர்ப்புக் குழுவினர் (Anti-Ministerialists) என்று கூறிக் கொண்டு தனியே செயல்படலாயினர். சி.நடேச முதலியார், டி.ஏ. இராமலிங்கம் செட்டியார், சி.ஆர்.ரெட்டி, பி.சுப்பராயன் போன்றோர் இக்குழுவின் பிரதான பிரமுகர்கள். இவர்கள் நீதிக்கட்சித் தலைவர் தியாகராய செட்டியின் மீது கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகளைச் சுமத்தினர்: 1) பிறரைக் கலந்து ஆலோசிக்காத யதேச்சாதிகார தலைமை 2) பிற்படுத்தப் பட்ட வகுப்பினரின் நலனைவிட உயர்சாதி வகுப்பினருக்கு சாதகமாகச் செயல்படல் 3) ஒத்துழையாமை இயக்கத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்கிய பிரிட்டிஷ் அரசாங்கத்தின் செயலை ஆதரித்தது 4) முதல் நீதிக்கட்சி அமைச்சரவையில் தமிழருக்கு இடம் கொடுக்காமை. இச்செயல் தமிழர் தலைவர்களிடையே மிகுந்த மனக்கசப்பை ஏற்படுத்தியது. அவர்கள் முதல் அமைச்சரவையைத் தெலுங்கர்களே ஆக்கிரமித்துக் கொண்டதாக குற்றம் சாட்டினர். எனவே, நீதிக்கட்சிக்குள் இரு கோஷ்டிகள் எதிரும் புதிருமாகச் செயல்பட்டதால் கட்சி பலவீனமடைந்தது.

சுயராஜ்யக் கட்சி

1920 தேர்தல் இந்திய தேசிய காங்கிரசில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. காந்தி, இராஜாஜி போன்றோர் காங்கிரஸ் தேர்தல்களில் பங்கேற்கக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர். ஆனால் சித்தரஞ்சன்தாஸ், மோதிலால் நேரு போன்றோர் காங்கிரஸ் தேர்தலில்

பங்கேற்பதை ஆதரித்தனர். அதற்கான தீர்மானத்தையும் 1922 செப்டம்பர் 7 ஆம் தேதி நிறைவேற்றினர். இவர்கள் காங்கிரசுக்குக் சுயராஜ்யக் கட்சி (Swaraj Party) என்ற தனி அமைப்பை உருவாக்கினர்.

குறிப்பு

தமிழ் நாட்டில் கஸ்தூரிரங்க ஐயங்கார், சீனிவாச ஐயங்கார், ஏ. இரங்கசாமி ஐயங்கார், வரதராஜுலு நாயுடு, விஜயராகவாச்சாரி, ஏ. இரங்கசாமி ஐயங்கார் ஆகியோர் சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து, தேர்தலில் போட்டியிட்டு, சட்டமன்றம் சென்று ஒத்துழையாமை இயக்கத்தை நடத்துவதென்று முடிவு செய்தனர். 1923 நவம்பர் 13 ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில் பங்கேற்றனர்.

சட்டமன்றத் தேர்தல்

நீதிக்கட்சியின் முதல் ஆட்சி 1923 செப்டம்பர் 11 ஆம் தேதி முடிந்தது. சட்டமன்றத்துக்கான தேர்தல் 1923 அக்டோபர் 31 ஆம் நாள் நடத்தப்பட்டது. அடை மழையும், வெள்ளமும் தேர்தல் உரிய நாளில் முடிவதில் காலதாமதம் ஏற்படுத்தின. தேர்தல் நவம்பர் 10 ஆம் தேதி முடிவுற்றது. 17 தொகுதிகளில் 20 உறுப்பினர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 44 தொகுதிகளில் மட்டுமே தேர்தல் நடைபெற்றது. கடந்த தேர்தலைவிட இத்தேர்தலில் அதிக வாக்காளர்கள் பங்கேற்றனர். சென்னை நகரில் 58.8% திருநெல்வேலி-பாளையம்கோட்டை நகரில் 77%; வடஆர்க்காடு கிராமத் தொகுதி 58.8% வாக்குப்பதிவு இருந்தது. சென்னை இராஜதானியின் சராசரி வாக்குப்பதிவு 36.2%. இத்தேர்தலில் சுயராஜ்யக் கட்சி பங்கேற்றதால் நீதிக்கட்சியின் தேர்தல் வெற்றியைப் பெரிதும் பாதித்தது. சுயராஜ்யக் கட்சி போட்டியிட்ட 11 இடங்களிலும் வெற்றி பெற்றது. நீதிக்கட்சி தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்றாலும், அரசாங்கத்தை அமைக்கக்கூடிய பெரும்பான்மையை இழந்தது.

1923 தேர்தலில் நீதிக்கட்சிக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. அதற்கான காரணங்கள்: 1) கட்சிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் நீதிக்கட்சியை பலவீனப் படுத்திவிட்டது. நடேச முதலியார், எம்.சி. இராஜா, ஓ.கந்தசாமி செட்டியார் போன்றோர் கட்சித் தலைமையை வெளிப்படையாகவே விமர்சித்தனர். 2) முதல் அமைச்சரவையில் தமிழருக்கு இடம் கொடுக்காமையால் ஏற்பட்ட ஏமாற்றம் தென் தமிழ்நாட்டுத் தொகுதிகளில் நீதிக்கட்சி வேட்பாளர்கள் தோல்வியடைவதற்குக் காரணமாக இருந்தது 3) சுயராஜ்யக் கட்சி நீதிக்கட்சிக்குப் பிரதான பலமிக்க எதிர்க்கட்சியாக உருவெடுத்தது 4) கட்சிப் பூசலால் நீதிக்கட்சியின் தேர்தல் பிரச்சாரம் பலமிழந்துவிட்டது. சுருங்கக்கூறின், 1923 சட்டமன்றத் தேர்தல் நீதிக்கட்சியின் சரிவுக்கான அடையாளமாக அமைந்தது.

பனகல் அரசர் ஆட்சி

தேர்தல் முடிந்தபின் ஆளுநர் வெல்லிங்டன் நீதிக்கட்சி அரசாங்கம் அமைப்பதற்கு அழைப்பு விடுத்தார். தியாகராய செட்டியின்

குறிப்பு

பரிந்துரையின் பேரில் பனகல் அரசர் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார் ஏ.பி.பாட்ரோ அமைச்சரவையில் இடம் பெற்றார் கூர்மா வெங்கடரெட்டி நாயுடுவுக்குப் பதில் தமிழ் சட்டமன்ற உறுப்பினர் டி.என்.சிவஞானம் இடம் பெற்றார். 1923 நவம்பர் 19 ஆம் தேதி நீதிக்கட்சியின் இரண்டாம் அமைச்சரவை பதவிப் பொறுப்பேற்றது. அப்துல்லா காட்டலா சாகிப் பகதூர், எ.அற்புதசாமி உடையார், டி.சி.தங்கவேலு பிள்ளை ஆகியோர் சட்டமன்ற செயலர்களாக நியமிக்கப்பட்டனர். ஆளுநரின் புதிய ஆட்சிக் குழுவில் சி.ஜி.தோதுண்தர், ஏ.ஆர்.நாப், சி.பி. இராமசாமி ஐயர், வாசுதேவ இரவிவர்மா ஆகியோர் இடம் பெற்றனர். எல்.டி.சாமிக்கண்ணு சட்டமன்றத் தலைவராக ஆளுநரால் ஒரு ஆண்டுக்கு நியமிக்கப்பட்டார் அதன்பின் அப்பதவிக்கு சட்ட மன்றமே நியமனம் செய்யும். நீதிக்கட்சியின் இரண்டாவது அமைச்சரவை 1926 நவம்பர் 7 ஆம் தேதி வரை செயல்பட்டது. பனகல் அரசர் ஆட்சியின் போது தான் வன்னியர் வகுப்பைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் மாணிக்கவேலு நாயக்கர் நீதிக்கட்சி அரசாங்கத்தின் பாராளுமன்ற செயலராகவும் வருவாய்துறை அமைச்சராகவும் இருந்தார்.

நம்பிக்கையில்லா தீர்மானம்

நீதிக்கட்சியின் அரசாங்க எதிர்ப்பாளர்கள் (Anti-Ministerialists) ஐக்கிய தேசிய கட்சி (United Nationalist Party) என்ற புதிய கட்சியை அமைத்தனர். ஐக்கிய தேசிய கட்சியின் சார்பாக சி.ஆர்.ரெட்டி நீதிக்கட்சிக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை முன்மொழிந்தார் (1923 நவம்பர் 27). அப்போது அவர் நீதிக்கட்சியைப் பற்றிய இரண்டு குற்றச்சாட்டுகளைக் கூறினார்: 1) நீதிக்கட்சி பெரும்பான்மை பலத்தைப் பெறாததால் வாக்காளர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது 2) பனகல் அரசர் உள்ளாட்சி நிறுவனத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கையில் அவரது உறவினர்களுக்கு முன்னுரிமை (நேிழவளைஅ) கொடுத்தார். இத்தீர்மானத்தை சுயராஜ்யக் கட்சி ஆதரித்தது. அக்கட்சியின் பிரபல உறுப்பினரான சொல்வலர் எஸ்.சத்தியமூர்த்தி நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஆதரித்து அவரது கன்னிப் பேச்சை நிகழ்த்தினார் (பின்னர் சுயராஜ்யக் கட்சியின் தலைவரானார்). இத்தீர்மானம் இரண்டு நாட்கள் விவாதிக்கப்பட்டது. விவாதத்துக்குப்பின் ஆளும் நீதிக்கட்சி நியமன உறுப்பினர்களின் ஆதரவோடு தீர்மானத்தைத் தோற்கடித்து பதவியைத் தக்கவைத்துக் கொண்டது. இந்திய சட்டமன்ற வரலாற்றில் முதல் முறையாகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் இதுவேயாகும்.

சாதனை

நீதிக்கட்சியின் இரண்டாவது அரசாங்கம் புதிய சாதனைகள் எதையும் செய்யவில்லை. 1920-1923இல் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை பனகல் அரசரின் ஆட்சி தொடர்ந்து செயல்படுத்தியது. குறிப்பாக 1922 டிசம்பர் 18 ஆம் தேதி சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்து அறநிலைய மசோதா (Hindu Religious Endowment Bill)வை

குறிப்பு

நிறைவேற்றியது (1925). இச்சட்டத்தின் மூலம் சென்னை இராஜதானியில் இருந்த இந்து கோயில்கள் அரசாங்கத்தின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன. எனினும் சரிவுப் பாதையில் சென்ற நீதிக்கட்சிக்கு 1926 சட்டமன்றத் தேர்தல் பெரும் சவாலாக இருந்தது.

நீதிக்கட்சியின் நிலை

நீதிக்கட்சி உட்கட்சி கோஷ்டிப் பூசல்களால் பலவீனப்பட்டுப் போயிருந்தது. அக்கட்சித் தலைவர் தியாகராய செட்டி இறந்தபின் (1925 ஏப்ரல் 28) நிலைமை மேலும் மோசமாயிற்று. முதலமைச்சராயிருந்த பனகல் அரசர் கட்சித் தலைமைப் பொறுப்பேற்றார். நடேச முதலியாரின் ஐக்கிய தேசிய கட்சியினரை மீண்டும் நீதிக்கட்சிக்குக் கொண்டு வருவதற்கு பனகல் அரசர் மேற்கொண்ட முயற்சி வெற்றி பெறவில்லை. பருவமழை பொய்த்ததால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு விவசாயிகள் வேலையின்றி புலம் பெயர்ந்து சென்றனர். இந்த இக்கட்டான நேரத்தில் நீதிக்கட்சிக்கும் புதிதாக ஆளுநர் பொறுப்பேற்ற வைகௌண்ட் கோஷனுக்கு (Viscount Goschen) மிடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது (1924). அதிகாரப் பகிர்வு மற்றும் வேண்டியவர்களுக்கு உதவுவது (Patronage) போன்ற விவகாரங்களில் அமைச்சர்களுக்கும் ஆளுநர் ஆட்சிக் குழுவுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் எழுந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக, ஈ.வே. இராமசாமி நாயக்கர் காங்கிரசை விட்டு வெளியேறி தேர்தலில் நீதிக்கட்சி வேட்பாளர்களை ஆதரித்தார். அவர் காங்கிரசை விட்டு வெளியேறியதற்கான முக்கியக் காரணம் அவர் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஆதரித்துக் கொண்டு வந்த தீர்மானங்களை காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளாததுதான்.

சட்டமன்ற தேர்தல்

1926 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் சென்னை இராஜதானி அரசியலில் எதிர்பாரா மாற்றத்தை ஏற்படுத்தியது. சுயராஜ்யக் கட்சி எ.சத்தியமூர்த்தி தலைமையில் இத்தேர்தலில் களமிறங்கிப் போட்டியிட்டது. இந்திய தேசிய காங்கிரஸ் தேர்தலைப் புறக்கணித்தது. நொண்டிக் குதிரையான நீதிக்கட்சி நம்பிக்கை இழந்த இத்தேர்தலில் கலந்து கொண்டது. அக்கட்சியால் 21 இடங்களை மட்டுமே பெற முடிந்தது. சுயராஜ்யக் கட்சி 41 இடங்களைக் கைப்பற்றியது. நீதிக்கட்சியின் கோட்டையாகக் கருதப்பட்ட சென்னை நகரில் 4 இடங்களிலும் வெற்றிவாகை சூடியது. நடேச முதலியார், ஓ.தணிகாசலம் செட்டியார், கூர்மா வெங்கிரரெட்டி நாயுடு, ஆர்க்காடு இராமசாமி முதலியார் போன்ற நீதிக்கட்சி பிரபலங்கள் தோல்வியைத் தழுவினர்.

சுப்பராயன் ஆட்சி, 1926-1929

இம்முறை அரசாங்கம் அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டது. தனிப் பெரும்பான்மையைப் பெற்ற சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த சி.வி.எ .நரசிம்மராஜுவை ஆட்சி அமைக்குமாறு அழைப்பு விடுத்தார் ஆளுநர்

குறிப்பு

கோஷன் (Goschen). ஆனால் சுயராஜ்யக் கட்சி அரசாங்கம் அமைக்க மறுத்துவிட்டது. பெரும்பான்மை இன்மையால் நீதிக்கட்சி அரசாங்கம் அமைக்க முன்வரவில்லை. எனவே ஆளுநர் கோஷன் தேசிய சுயேட்சைகளில் ஒருவரான டாக்டர் பி.சுப்பராயனை முதலமைச்சராக நியமித்தார். சுப்பராயன் முன்னாள் நீதிக்கட்சி பிரமுகர். பனகல் அரசருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் அவர் நீதிக் கட்சியிலிருந்து விலகினார். சுப்பராயன் ஆளுநரின் அழைப்பை ஏற்று சுயேட்சை அரசாங்கத்தை அமைத்தார். முன் விரோதத்தை மறந்து நீதிக்கட்சியும் அவருக்கு நேசக்கரம் நீட்டியது! எனவே, டாக்டர் பி.சுப்பராயன் சுயராஜ்யக் கட்சி, நீதிக்கட்சி ஆகியவற்றின் ஆதரவோடு ஆட்சி நடத்தினார். சுப்பராயன் அமைச்சரவையில் ஏ.இரங்கநாத முதலியாரும், ஆர்.என்.ஆரோக்கியசாமி முதலியாரும் இடம் பெற்றனர். பின்னர் இவர்களுக்குப் பதில் எ.முத்தையா முதலியாரும், எம்.ஆர்.சேதுரத்னம் ஐயரும் அமைச்சர்களாக நியமிக்கப் பட்டனர். இவ்விருவம் சுயராஜ்யக் கட்சியிலிருந்து பிரிந்து வந்தவர்கள். அதனால் சுப்பராயன் அமைச்சரவை நீதிக்கட்சியின் மறுபதிக்காகக் கருதப்பட்டது. அதாவது, சுயேட்சை அரசாங்கம் என்ற பெயரில் நீதிக்கட்சியின் நிழலாட்சி (Prexy) நடைபெற்றது.

கோட்டா முறை

டாக்டர் சுப்பராயன் அரசாங்கத்தின் மகத்தான சாதனையாகக் கருதப்படுவது கோட்டா முறை (Qutta System) ஆகும். நீதிக்கட்சி பிற்பட்டோருக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பெற்றுத் தந்தாலும் அதற்கான அறிவியல் பூர்வமான முறையை வகுக்கவில்லை. இப்பொறுப்பை சுப்பராயன் அமைச்சரவையில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட எ.முத்தையா முதலியார் ஏற்றுக் கொண்டார். முதலியார் செல்வந்தர், நிலச்சுவான்தார், சட்ட வல்லுநர். அவர் தனது சட்ட அறிவைப் பயன்படுத்தி வகுப்புவாரி பிரதிநிதித்துவ கொள்கையை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்குத் தேவையான விதிமுறை (Formula) வகுத்துக் கொடுத்தார். இது முத்தையா முதலியாரின் கோட்டா முறை என்று கூறலாம். முத்தையா முதலியார் வடிவமைத்த "கோட்டா முறை"யின்படி ஒவ்வொரு வகுப்பாருக்கும் எத்தனை இடங்கள் என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி பிராமணரல்லாதாருக்கு 44% முஸ்லீம்களுக்கு 16%; கிறித்துவர்களுக்கு 16%; பிராமணர்களுக்கு 16%; ஆங்கிலோ இந்தியருக்கு 16% ஆதிதிராவிடருக்கு 8% என்று பங்கிட்டு அளிக்கப்பட்டது. அப்படிப் பார்க்கும் போது 12 அரசாங்கப் பணிகளுக்கு பிராமணரல்லாதவர்களுக்கு 5 இடங்களும், பிராமணர்கள், ஆங்கிலோ இந்தியர், முஸ்லீம்கள் ஆகியோருக்கு தலா 2 இடங்களும், ஆதி திராவிடருக்கு 1 இடமும் கிடைக்கும். இந்த விகிதாச்சாரம் குறிப்பிட்ட வகுப்புகளின் மக்கள் தொகைக்கு ஏற்ப இல்லை என்று குறை கூறப்பட்டது. இந்துவும் சுதேசமித்திரனும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தன.

குறிப்பு

முதலில் முத்தையா முதலியாரின் கோட்டா முறையில் குறை கண்ட ஈ.வெ.ராமசாமி நாயக்கர் பின்னர் அமைச்சர் முத்தையா முதலியார் நீண்ட காலம் வாழ்க என்று குடியரசு பத்திரிகையில் எழுதினார் (குடியரசு, தலையங்கம் 1928, நவம்பர் 11). இன்றைய இடஒதுக்கீட்டு முறை (Reservation System)யின் அடித்தளத்தை அமைத்துக் கொடுத்ததால் முத்தையா முதலியாரை வகுப்புவாரி இட ஒதுக்கீட்டு முறையின் தந்தை என்று கூறினால் மிகையாகாது.

நீதிக்கட்சி ஆட்சி 1930-1934

1926 தேர்தல் தோல்விக்குப் பிறகு நீதிக்கட்சியின் சரிவு தொடர்ந்தது. இராமராயனின்கர் இறந்தபின் (1928) பொப்பிலி அரசர் (Raja of Bobbili) என்ற இராமகிருஷ்ண இரங்காராவ் நீதிக்கட்சியின் தலைவர் பொறுப்பேற்றார். டாக்டர் சுப்பராயனின் சுயேட்சை அரசாங்கத்தை நீதிக்கட்சி தொடர்ந்து ஆதரித்தது. நீதிக்கட்சிக்குள் நிலவிய கோஷ்டிப் பூசல்களை புதிய தலைவரால் தடுக்க முடியவில்லை. அக்கட்சி இரண்டுபட்ட வீடாக இருந்தது. உலகப் பொருளாதார மந்தத்தால் (World Economic Depression) தமிழ் நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. அந்நிலையில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது.

சட்டமன்றத் தேர்தல், 1930

இரட்டை ஆட்சியின் கீழ் சட்ட மன்றத்துக்கான நான்காவது தேர்தல் 1930 ஆம் ஆண்டு நடைபெற்றது. நீதிக்கட்சியின் நிலை மிகவும் மோசமாக இருந்ததால் அதன் ஆட்சிக் குழுவின் தீர்மானத்தின் (1930 ஜூன் 15) நீதிக்கட்சியின் கதவுகள் பிராமணர்களுக்குத் திறந்துவிடப்பட்டன. அதன் நோக்கம் காங்கிரசின் ஆதரவோடு ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதுதான். அரசியலில் மார்க்கத்தைவிட முடிவு தான் முக்கியம். 1929 இல் நடைபெற்ற லாகூர் மாநாட்டுத் தீர்மானத்தின்படி காங்கிரஸ் தேர்தலில் கலந்து கொள்வதில்லை என்று முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவின்படி தமிழ்நாட்டு காங்கிரஸ் சட்டமன்றத் தேர்தலைப் புறக்கணித்தது. அதுமட்டுமல்ல. சத்தியமூர்த்தி உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்களும் பதவி விலகினர். எனினும், சாமி வெங்கடாசலம், ஆர்.கே.சண்முகம் செட்டியார் போன்ற காங்கிர பிரமுகர்கள் இத்தேர்தலில் சுயேட்சைகளாகப் போட்டியிட்டன்னர். எனவே, இந்த சட்டமன்றத் தேர்தல் நீதிக் கட்சிக்கும், டாக்டர் பி.சுப்பராயன் தலைமையிலான தேசிய கட்சி (Nationalist Party)க்கும் இடையிலான நேரடிப் போட்டியாக இருந்தது.

சட்டமன்றத் தேர்தலில் 132 இடங்களுக்கு 61 தொகுதிகளிலிருந்து 98 உறுப்பினாகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நீதிக்கட்சி போட்டியிட்ட 45 இடங்களில் 35 இடங்களில் வெற்றி பெற்றது. சுயேட்சை தேசிய கட்சியும், லிபரல்களும் (Liberals) 10 இடங்களைக் கைப்பற்றினர். 98 இடங்களில் 35 வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். எஞ்சியிருந்த இடங்களில் சுயேட்சைகள் வெற்றி

பெற்றனர். இத்தேர்தலில் 43% வாக்குகள் பதிவாயின் இது சென்னை இராஜதானியின் மொத்த மக்கள் தொகையில் 4% மட்டுமே.

சிறுபான்மை அரசாங்கம்

நீதிக்கட்சிக்கு தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க முடியவில்லை. எனவே, ஆளுநர் நியமித்த 32 உறுப்பினர்களின் ஆதரவோடு நீதிக்கட்சித் தலைவர் முனுசாமி நாயுடு 1930 அக்டோபர் 27 ஆம் தேதி முதலமைச்சர் பொறுப்பேற்றார். பி.இராமச்சந்திர ரெட்டி சட்டமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பி.டி.இராஜாவும், எ.குமாரசாமி ரெட்டியாரும் முனுசாமி அமைச்சரவையில் இடம் பெற்றனர். முன்னாள் முதலமைச்சர் பி.சுப்பராயன் எதிர்க்கட்சித் தலைவரானார். தமிழ் நாட்டில் நிலவிய நிலையற்ற சூழ்நிலையில் முனுசாமி நாயுடு சிறுபான்மை அரசாங்கத்துக்குத் தலைமையேற்று நடத்தினர்.

அரசாங்கத்தின் அவல நிலை

கட்சி கட்டுக்கோப்புடன் இருந்தால்தான் அரசாங்கம் நிலையாக இருக்கும். முனுசாமி நாயுடு முதல்வர் பொறுப்பேற்ற போது நீதிக்கட்சி கோஷ்டிப் பூசல் புயலில் சிக்கியிருந்தது. நீதிக்கட்சியை ஆதரித்த ஜமீன்தார்களுக்கு அமைச்சரவையில் இடம் கொடுக்காமையால் அவர்கள் கட்சிக்கு எதிராகச் செயல்பட்டனர். அமைச்சர் பதவியை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த பொப்பிலி அரசரும், வெங்கடகிரி குமார ராஜவும், எம்.ஏ.முத்தையா செட்டியாரின் தலைமையில் நீதிக்கட்சிக்குள்ளேயே ஒரு இஞ்சிக் குழு (Ginger Group)வை உருவாக்கினர்.

முதலமைச்சர் முனுசாமி நாயுடு நெருக்கடிக்கிடையே மக்களின் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதில் முனைப்புடன் ஈடுபட்டார். அரசாங்கத்தின் வருவாய் இழப்பை சரிக்கட்டுவதற்காக நிலவரியை உயர்த்தினார். நிலவரி உயர்வு குழவிக் கூட்டில் கைவிட்டது போலாயிற்று. நிலவரி உயர்வால் பாதிக்கப்பட்ட ஜமீன்தார்களும், நிலச்சுவான்தார்களும் முதலமைச்சருக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தினர். பொப்பிலி அரசரும், வெங்கடகிரி குமார ராஜாவும் அமைச்சரவையில் இடம் பெறாதது எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றியது போலாயிற்று. இதற்கிடையே, நீதிக்கட்சியின் தலைமைப் பதவிக்காக பி.டி.இராஜானும், முனுசாமி நாயுடுவும் போட்டியிட்டார்கள் (1928). இப்போட்டியில் முனுசாமி நாயுடு வெற்றி பெற்றார். முனுசாமி நாயுடு கட்சித் தலைவராகவும், முதலமைச்சராகவும் இருந்தபோதிலும் அவரால் கட்சியின் கட்டுக்கோப்பையும், மாகாண நிர்வாகத்தையும் திறமையாகக் கையாள முடியவில்லை. நீதிக்கட்சி ஆண்டு மாநாட்டை மூன்றாண்டு காலம் கூட்டாமல் நிலைமையைச் சமாளித்தார். எனினும் உட்கட்சி 'இஞ்சிக் குழு", 1932 அக்டோபர் மாதம் நடைபெற்ற 12வது ஆண்டு மாநாட்டில் முனுசாமி நாயுடுவுக்குப் பதில் பொப்பிலி அரசரை கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. பொப்பிலி அரசர் 1932 நவம்பர் 5 ஆம் தேதி முதலமைச்சரானார்.

குறிப்பு

குறிப்பு

இரண்டாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்ற பொப்பிலி அரசர் மக்கள் பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் ஜமீன்தாரர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டார். இவரது ஜமீன்தார் ஆதரவு பொருளாதாரக் கொள்கையால் மக்கள் மிகுந்த ஏமாற்றமடைந்தனர். நீதிக்கட்சி மக்களின் ஆதரவை இழந்தது. ஜமீன்தாரர்களை மட்டும் நம்பி தேர்தலில் வெற்றி பெற முடியாதல்லவா? எனவே, நீதிக்கட்சி 1934 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் நிலைகுலைந்து போயிற்று. நம்பிக்கையோடு துவக்கப்பட்ட நீதிக்கட்சி மக்களின் நம்பிக்கையை இழந்த அரசியல் அமைப்பாக ஓரங்கட்டப்பட்டது. அக்கட்சியின் வீழ்ச்சிக்கான காரணங்கள் வருமாறு: 1) நீதிக்கட்சிக்குள் நிலவிய உட்குழுக்களிடையே நிலவிய மோதல்கள் 2) தாழ்த்தப்பட்டோர் நலன்களைப் புறக்கணித்துவிட்டு உயர் வகுப்பாரின் உயர்வுக்காகப் பாடுபட்டது 3) அரசாங்கத்தின் அனைத்து நிலைகளிலும் உறவினர்களுக்கும், வேண்டியவர்களுக்கும் பதவிகளை வழங்கியது 4) அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியது 5) ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான போட்டி 6) தேசப்பற்றுடைய காங்கிர மக்களிடையே செல்வாக்கு பெற்றது.

நீதிக்கட்சி ஆட்சி (1934-1937)

மீண்டும் பொப்பிலி அரசர் ஆட்சி

நீதிக்கட்சி ஜமீன்தார் ஆதரவு குழு, ஜமீன்தார் எதிர்ப்புக் குழு என்று இரு கோஷ்டிகளாகப் பிரிந்து பூசல்களில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்தன. பொப்பிலி அரசர் மக்கள் நிலையைப் பற்றிக் கவலைப்படாமல் தனது ஜமீன்தார் ஆதரவுப் பொருளாதாரக் கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றினார். இதற்கிடையே 1930-1931 இல் மேற்கொள்ளப்பட்ட உப்புச் சத்தியாகிரகம் மற்றும் ஒத்துழையாமை இயக்கத்தால் தமிழ் நாட்டில் காங்கிரசின் மீது மக்களுக்கு மரியாதையும், நம்பிக்கையும் அதிகரித்தது. இரட்டை ஆட்சியைத் தொடர்ந்து எதிர்த்து வந்த சுயராஜ்யக் கட்சி சத்தியமூர்த்தியின் திறமையான தலைமையின் கீழ் தேர்தலில் கலந்து கொள்ளத் தயாராக இருந்தது. இந்நிலையில் நீதிக்கட்சி தன் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ள இரண்டு முக்கிய முடிவுகளை எடுத்தது: 1) நீதிக்கட்சியில் பிராமணர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளல் 2) சுயமரியாதை இயக்கத்தை (Self-Respect Movement) வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருந்த ஈ.வெ. இராமசாமியின் ஆதரவைப் பெறுவது.

நீதிக்கட்சி பெரியாரின் ஈரோட்டுத் திட்ட" (Erode Plan)த்தை ஏற்றுக் கொண்டு அவரின் ஆதரவைப் பெற்றது. ஈரோட்டுத் திட்டத்தின் முக்கியக் கூறுகளாவன: 1) அத்தியாவசிய தொழில்களை நாட்டு உடைமையாக்கல் 2) அனைவருக்கும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை விரிவுபடுத்தல் 3) மதுவிலக்குக் கொள்கையைக் கடைப்பிடித்தல் 4) அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி அளித்தல் 5) தீண்டாமை ஒழிப்பு 6) அனைவருக்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை

நடைமுறைப்படுத்தல் 7) அனைத்து நிர்வாக அமைப்புகளுக்கும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுத்தல். இருப்பினும் நீதிக்கட்சி 1934 சட்டமன்றத் தேர்தலில் படுதோல்வி அடைந்தது. சுயராஜ்யக் கட்சி 29 இடங்களில் வெற்றி பெற்று தனிப் பெரும்பான்மையுடன் திகழ்ந்தது. எனினும், அக்கட்சி ஆட்சிப் பொறுப்பேற்க மறுத்துவிட்டதால் பொப்பிலி அரசர் தொடர்ந்து முதலமைச்சராக நீடித்தார்.

குறிப்பு

13.7.4.ஆட்சியின் வீழ்ச்சி

பொப்பிலி அரசர் சிறுபான்மை அரசாங்கத்தின் முதல்வராக நீடித்தாலும் நீதிக்கட்சியின் வீழ்ச்சியைத் தடுக்க முடியவில்லை. நீதிக்கட்சியின் தலைமைக் கொறடா (Chief Whip)வாக இருந்த எம்.ஏ.முத்தையா செட்டியார் அவரது ஆதரவை விலக்கிக் கொண்டதால் ஆர்.கே.சண்முகம் செட்டியும், ஆர்க்காடு இராமசாமி முதலியாரும் தேர்தலில் தோற்க நேர்ந்தது. எனவே பொப்பிலி அரசர் எம்.ஏ.முத்தையா செட்டியாரை கட்சியின் தலைமைக் கொறடா பதவியிலிருந்து நீக்கினார். அதனால் ஆத்திரமடைந்த செட்டியார் பொப்பிலி அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அவரைத் திருப்திப்படுத்துவதற்காக எ.குமாரசாமி ரெட்டியாருக்கு பதில் எம்.ஏ.முத்தையா செட்டியாரைக் கல்வி அமைச்சராக்கினார். பிறரைத் திருப்திப்படுத்து வதற்காக புதிதாக உள்துறை அமைச்சரகத்தை ஏற்படுத்தி அதில் முகமது உஸ்மானையும், பின்னர் ஏ.டி.பன்னீர் செல்வத்தையும் அமைச்சர்களாக நியமித்தார். பொப்பிலி அரசரின் யதேச்சாதிகாரப் போக்கு நீதிக்கட்சியினரிடையே அதிருப்தியை அதிகரித்து விட்டது. கட்சி முக்கியஸ்தர்களே அவரை நேரில் பார்த்துப் பேச முடியவில்லை. தன்னை எதிர்த்தவர்களையும், அவருடன் ஒத்துப்போகாத உள்ளாட்சி நிறுவனங்களையும் ஒடுக்க முற்பட்டார். இதற்காக உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (டுழஉயட டீழயசனள யுஉவ) திருத்தப்பட்டது. தாலுகா போர்டுகள் கலைக்கப்பட்டன. தனக்கு வேண்டாத ஒரு மாவட்ட மன்றம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அவரோடு ஒத்துழைக்காத பிற மாவட்ட மன்றங்களையும் பிரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதேபோன்று அவரது அதிகாரத்துக்குக் கீழ்ப்பணியாத நகராட்சி மன்றங்கள் முடக்கப்பட்டன் தனக்கு வேண்டாத நகராட்சி மன்றத் தலைவர் தண்டிக்கப்பட்டனர். கமிஷனர்களை நியமிப்பதன் மூலம் இம்மன்றங்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தப்பட்டது. சுருங்கக்கூறின், நீதிக் கட்சியின் தேர்தல் வெற்றிக்கு ஊற்றுக் கண்களாக இருந்த உள்ளாட்சி நிறுவனத் தலைவர்களை விரோதித்துக் கொண்டார் பொப்பிலி அரசர். அதுமட்டுமல்ல. ஜமீன்தாரியல்லாத நிலப் பகுதிகளில் அதீதமான நிலவரியைக் குறைக்க விடாப்பிடியாக மறுத்துவிட்டார். பொருளாதார நெருக்கடியில் உழன்று கொண்டிருந்த விவசாயிகளும், நிலச் சொந்தக்காரர்களும் பொப்பிலி அரசரின் விவேகமற்ற நடவடிக்கைகளால்

பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதன் காரணமாக இவர் கிராம மக்களின் ஆதரவை இழந்தார்.

குறிப்பு

காங்கிரசின் செல்வாக்கு

இந்திய விடுதலைப் போராட்டத்தை முன்னின்று நடத்திய அகில இந்திய காங்கிரசின் செல்வாக்கு மக்களிடையே விரைந்து பரவிக் கொண்டிருந்த சமயத்தில் பொப்பிலி அரசர் பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு சேர்ந்து கொண்டு நிலவரியைக் குறைக்கக் கோரி காங்கிரசார் நடத்திய ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்தார். இத்தகைய அடக்குமுறை நடவடிக்கைகள் காங்கிரசின் மக்கள் செல்வாக்கை அதிகரிக்கவே செய்தன. எளிய உடை அணிந்து நாட்டு விடுதலைக்காக காங்கிரஸ்காரர்கள் போராடிக் கொண்டிருக்கையில் நீதிக்கட்சி முதலமைச்சரும், பிற அமைச்சர்களும் அதிக ஊதியம் பெற்றுக் கொண்டு ஆடம்பரமாக வாழ்ந்ததை மக்கள் வெறுப்போடு பார்த்தனர் பத்திரிகைகள் கண்டித்தன. சுருங்கக்கூறின், பொப்பிலி அரசர் அடக்குமுறையை விதைத்து மக்களின் வெறுப்பை அறுவடை செய்தார். நீதிக்கட்சி மீண்டும் தலைதூக்க முடியாத அளவுக்கு 1934 சட்டமன்றத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டது காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. அதன்பின் எதிர்க்கட்சியாக செயல்பட்டு வந்த நீதிக்கட்சி 1938 டிசம்பர் 29 ஆம் தேதியிலிருந்து 1944 ஆகஸ்டு 27 ஆம் தேதி வரை பெரியாரின் தலைமையின் கீழ் செயல்பட்டது. பெரியார் தனியாகத் திராவிடர் கழகத்தைத் தோற்றுவித்த பின்னர் (1944) நீதிக்கட்சி பி.இராமச்சந்திர ரெட்டியின் தலைமையின் கீழும் (1944-1945), பி.டி. இராஜன் தலைமையிலும் (1945-1957) பெயரளவுக்கு நீடித்தது. அதன்பின் நீதிக்கட்சி தமிழ்நாட்டு அரசியல் வானிலிருந்து மறைந்துவிட்டது.

நீதிக்கட்சி பிராமணர் எதிர்ப்பு அமைப்பா? நீதிக்கட்சியின் பிராமணர் கொள்கை துவக்கத்திலிருந்தே தெளிவில்லாமல் இருந்தது. டாக்டர் டி.எம்.நாயர் மட்டுமே ஆதிகால ஆரியர்கள் "தூங்கும்போது நுழைந்த திருடர்களைப் போன்றவர்கள்" என்றும், அவர்களுடைய வாரிசுகளே பிராமணர்கள் என்றும், ஆரியர் களமும் திராவிடர் களமும் இருவேறு இனங்கள் என்றும் பகிரங்கமாகப் பேசினார். பொதுவாக நீதிக்கட்சித் தலைவர்கள் அரசாங்கப் பதவிகளில் பிராமணர் ஆதிக்கத்தை எதிர்த்தார்களேயன்றி பிராமணர்களை விரோதித்துக் கொள்ளவில்லை.

நீதிக்கட்சி துவக்கப்பட்ட போது கட்சிக் கூட்டங்களில் பிராமணர்கள் பார்வையாளர்களாக அனுமதிக்கப்பட்டனர். 1926 தேர்தல் தோல்விக்குப் பிறகு பிராமணர்களின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1929 அக்டோபர் மாதம் கூடிய நீதிக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இதற்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பின்னர் நெல்லூரில் கூடிய 11வது கட்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. முனுசாமி நாயுடு, பாட்ரோ போன்ற நீதிக்கட்சித் தலைவர்கள்

குறிப்பு

இத்தீர்மானத்துக்கு ஆதரவாக இருந்தனர். ஆனால் பெரியார் ஈ.வெ.ரா, ஆர்.கே.சண்முகம் செட்டியார் போன்றோர் இப்போக்கைக் கடுமையாக எதிர்த்தனர். 1930களில் நீதிக்கட்சியின் செல்வாக்கு சரிந்தபோது 1934 ஆகஸ்டு மாதம் நீதிக்கட்சி அதன் கதவுகளைப் பிராமணர்களுக்குத் திறந்துவிட்டது. பெரியார் ஈ.வெ.ரா. அக்கட்சிக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொண்டார்.

நீதிக்கட்சி அனைத்து பிராமணரல்லாதார் நலன்களையும் பாதுகாக்கும் என்ற தேர்தல் வாக்குறுதியுடன் ஆட்சிக்கு வந்தது (1920). ஆதிதிராவிடர்களும், முஸ்லீம்களும் பிற சிறுபான்மை வகுப்பினரும் அந்த வாக்குறுதியை நம்பினர் நீதிக்கட்சியை ஆர்வத்துடன் ஆதரித்தனர். ஆனால் ஆட்சிக்கு வந்த சில ஆண்டுகளுக்குள்ளாகவே நீதிக்கட்சி செட்டியார், முதலியார், நாயுடு, பிள்ளை போன்ற உயர் சாதியினரின் கோட்டை என்ற எண்ணம் சிறுபான்மையினரிடையே எழுந்தது. சட்டமன்ற உறுப்பினர் அப்பா அலிகான் ஒரு முஸ்லீமுக்குக்கூட அமைச்சரவையில் இடம் தரவில்லை என்று வெளிப்படையாகக் குற்றம் சாட்டினார் (1923). டாக்டர் டி.எம்.நாயர் இறந்தபின் ஆதி திராவிடர்களின் நலன் புறக்கணிக்கப்பட்டது. "புளியந்தோப்பு நிகழ்ச்சிகள்" என்று அழைக்கப்பட்ட பி அன்டு சி மில் வேலைநிறுத்தம் (B and C Mill Strike) பிராமணரல்லாத உயர் வகுப்பாருக்கும் ஆதி திராவிடர்களுக்குமிடையே பெரும் பிளவை ஏற்படுத்திவிட்டது. சுருங்கக்கூறின், சென்னை இராஜதானியிலிருந்த சிறுபான்மையினர் மலையை எதிர்பார்த்து மலை எலியைக்கூட பெறவில்லை.

நீதிக்கட்சி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆதரவுடன் பிராமணரல்லாதார் நலன்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட பிராந்திய அரசியல் அமைப்பாகும். துவக்கத்திலிருந்தே நீதிக்கட்சியினர் பிரிட்டிஷ் அரசாங்க விசுவாசிகள் என்பதை வெளிப்படையாகவே கூறி வந்தனர். அவர்கள் அன்னிபெசண்ட் அம்மையாரின் சுயாட்சி இயக்கத்தையும், காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தையும் எதிர்க்கத் தயங்கவில்லை. நீதிக்கட்சி ஜாலியன் வாலாபாத் படுகொலையைக்கூட கண்டிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. நீதிக்கட்சியினர் தேசியவாதிகளா? அல்லது தேச விரோதிகளா? என்ற வினா விவாதிக்கப்பட்டது. நீதிக்கட்சியினர் தேச விடுதலைப் போராட்ட நீரோட்டத்திலிருந்து விலகிச் சென்று அந்நிய அரசாங்க ஆதரவுடன் வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கையை நிறைவேற்றுவதிலேயே குறியாக இருந்தனர். அந்த நோக்கம் நிறைவேறிய பின் நீதிக்கட்சி சரிவுப் பாதையில் பயணிக்கத் தொடங்கியது. நீதிக்கட்சியினர் பிராந்தியவாதிகளேயன்றி தேசியவாதிகள் அல்லர்.

13.7.5. நீதிக்கட்சியின் சாதனைகள்

நீதிக்கட்சியின் எழுச்சி தற்காலத் தமிழ்நாட்டு வரலாற்றின் திருப்புமுனை நிகழ்ச்சியாகும். சென்னை இராஜதானியின்

குறிப்பு

பிராமணரல்லாதார் சார்பாகத் துவக்கப்பட்ட முதல் அரசியல் அமைப்பு நீதிக்கட்சி தான். இக்கட்சியின் சாதனைகள் வருமாறு: 1) நீதிக்கட்சி குரல் இல்லாதிருந்த பிராமணரல்லாதாரின் குரலாக ஒலித்தது. இக்கட்சியின் குறிக்கோள்கள் பிராமணரல்லாதோர் பிரகடனத்தின் மூலம் தெளிவாக்கப் பட்டது. கட்சிப் பத்திரிகைகள் மூலம் இக்குறிக்கோள்கள் மக்களிடையே பிரச்சாரம் செய்யப்பட்டது. 2) நீதிக்கட்சியின் சட்டச் சாதனைகளில் முதல் முக்கியத்துவம் வாய்ந்தது வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாங்க ஆணையாகும். இந்த ஆணையின் அடிப்படையில் தான் பிற்கால இட ஒதுக்கீட்டுக் கொள்கைகள் வகுக்கப்பட்டன. 3) இந்து மத அறக்கட்டளைச் சட்டம் இந்து கோயில்களை அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்த புரட்சிகரமான சீர்திருத்தமாகும். 4) பெண்களுக்கு வாக்குரிமை வழங்கியது பெண்ணுரிமை வழங்கப்பட்டதற்கான முதல் முன்னேற்ற நடவடிக்கையாகும். 5) சென்னை மாநகராட்சி துவக்கிய இலவச உணவுத் திட்டத்துக்கு சட்ட அங்கீகாரம் அளித்தது. பின்னர் வந்த அரசாங்கங்கள் விரிவுபடுத்திய பள்ளி மதிய உணவுத் திட்டங்களுக்கான அடித்தளமாகும். 6) பஞ்சமர்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதி திராவிடர் என்று பெயரிட்டு சமுதாய அங்கீகாரம் அளித்தது நீதிக்கட்சியின் துணிச்சல் மிக்க சமூக சீர்திருத்தச் செயலாகும். 7) உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் மூலம் தமிழ் நாட்டின் பாரம்பரிய புல்லிதழ் ஜனநாயக அமைப்புகளுக்கு புத்துயிர் ஊட்டப்பட்டது. இந்த நிறுவனங்களுக்கு அதிகாரம் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்ற முயற்சி தொலைநோக்குடன் மேற்கொள்ளப்பட்ட பாராட்டுக்குரிய புதுவழியாகும். 8) தாழ்த்தப்பட்ட மக்கள் சொந்த வீடு கட்டிக் கொள்வதற்காகப் பட்டா மனைகள் வழங்கும் திட்டத்தை நீதிக்கட்சி அறிமுகப்படுத்தியது. 9) மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி தொழில்மயமாவதில்தான் உள்ளது என்பதை நன்குணர்ந்த நீதிக்கட்சி சென்னை மாநில தொழிற்சாலைகளுக்கு உதவச் சட்ட (Madras State Aid to Industries, 1922)த்தை நிறைவேற்றியது. இது தொலைநோக்குடைய பொருளாதாரத் திட்டமாகும். 10) நீதிக்கட்சியின் துவக்ககால நடவடிக்கைகளின் விளைவாக மாநில மக்களிடையே, குறிப்பாக தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களிடையே தன்மான உணர்வும், உரிமை வேட்கையும், வாழ்க்கையில் உயர வேண்டும் என்ற எண்ணமும் வேர்விட்டு வளரலாயிற்று.

நீதிக்கட்சி ஆட்சியின் கீழ் சென்னை வரலாறு காணாத வளர்ச்சி அடைந்தது. சென்னை நகரத் திட்ட சட்டம் (Madras Town Planning Act, 1920) செயல்படுத்தப் பட்டதன் விளைவாக பல குடியிருப்புக் காலனிகள் உருவாக்கப்பட்டன. நீண்ட நுங்கம்பாக்கம் நீர்நிலை அமைக்கப்பட்டது. மர்மலான் கிராமம், மாம்பலம் ஆயிற்று தியாகராய நகர் என்ற பெயர் பெற்றது. சென்னை நகரின் மையப்பகுதியில் பனகல் பூங்கா புன்னகைத்தது. உஸ்மான் ரோடு, ஹபிபுல்லா ரோடு, தணிகாசலம் ரோடு, நடேசன் பூங்கா, பாண்டி பசார் போன்றவை நவநாகரிக

அடையாளங்களாயின. மருத்துவப் படிப்புக்காக இந்திய மருத்துவப் பள்ளி (Indian School of Medicine) துவக்கப்பட்டது. சிவஞானம் பிள்ளைக் குழுவின் (1926 மார்ச் 22) பரிந்துரையின் பேரில்தான் பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் துவக்கப்பட்டது (1929).

குறிப்பு

தமிழ் நாட்டில் இரட்டை ஆட்சிக் காலம் (Dyarchy) முழுவதையும் நீதிக்கட்சி ஆக்கிரமித்துக் கொண்டது. இரட்டை ஆட்சியின் கீழ் நிர்வாகப் பொறுப்புகள் இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டன: 1) பிரித்துக் கொடுக்கப்பட்ட துறைகள் (Transferred Subjects) 2) ஒதுக்கப்பட்ட துறைகள் (Reserved Subjects). கல்வி, பொதுப் பணிகள், விவசாயம், உள்ளாட்சி, பொது சுகாதாரம், மருத்துவ நிர்வாகம், தொழில் கல்விவளர்ச்சி-ஆராய்ச்சி போன்ற துறைகள் பிரித்துக் கொடுக்கப்பட்ட துறைகளாகும். அதேபோன்று, காவல், நீதி நிர்வாகம், நில வருவாய், சிறைகள், தொழில் தகராறுகளைத் தீர்த்தல் போன்றவை ஒதுக்கப்பட்ட துறைகளாகும். நீதிக்கட்சி பிரித்துக் கொடுக்கப்பட்ட துறைகளில் குறிப்பிடத்தக்க சாதனைகளைச் செய்தது.

நீதிக்கட்சியின் ஆட்சிக் காலத்தில் நிலையான அரசாங்கத்தை (Stable Government) அமைத்துச் செயல்பட்டது. அதன் விளைவாக சில ஆரோக்கியமான ஜனநாயக வழக்காறுகள் (Democratic Conventions) பின்பற்றப்பட்டன: 1) மக்கள் நலம் சம்மந்தப்பட்ட துறைகளை நிர்வகிக்கும் அனுபவம் கிடைத்தது 2) ஆளுநர் சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெற்ற கட்சியின் தலைவரை அரசாங்கம் அமைக்க அழைக்கும் வழக்கம் ஏற்பட்டது. 3) அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு (Collective Responsibility), அமைச்சரவை சட்ட சபைக்குப் பொறுப்பானது போன்ற பிரிட்டிஷ் நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. 4) சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும்-சுயராஜ்யக் கட்சியினர் உட்பட-சட்ட சபையின் முடிவுக்குக் கட்டுப்படல் என்ற வழக்கம் நடைமுறைக்கு வந்தது. 5) ஆளும் கட்சி-எதிர்க்கட்சி தொடர்பு ஜனநாயக அரசியல் பண்புக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாக அமைந்தது. 6) கட்சிக் கொறடா (யசவல றூணி) சட்டமன்றத்துக்குள் கட்சிக் கட்டுப்பாட்டை நிலைநாட்டும் பழக்கம் வழக்கத்துக்கு வந்தது. இந்திய அரசியல் சமூகவியலை (Political Sociology) ஆழ்ந்து ஆய்வு செய்த ஆர்.பாஸ்கரன் பிரிட்டிஷ் இந்தியாவில் சென்னை இராஜதானியில் மட்டுமே இரட்டை ஆட்சி வெற்றிகரமாக செயல்பட்டது என்று கூறுகிறார்.

நீதிக்கட்சியின் குறைகள்

நீதிக்கட்சியின் குறைபாடுகள் கட்சியின் பலவீனங்களின் வெளிப்பாடுகளே யன்றி வேரில்லை. அக்குறைகள் வருமாறு: 1) நீதிக்கட்சி ஒற்றைக் குறிக்கோள் கட்சியாக செயல்பட்டு தேக்கமடைந்தது. வகுப்புவாரி பிரதிநிதித்துவ சட்டம் நிறைவேற்றப்பட்ட பின் நீதிக்கட்சி தன்னைப் புதுப்பித்துக் கொள்ளத் தவறிவிட்டது. அதன் காரணமாக அக்கட்சி உந்து சக்தியை இழந்தது. 2) அரசாங்கத்தை

குறிப்பு

எந்த வகுப்பார் அமைக்கின்றார்களோ அந்த வகுப்பு நலனுக்காகவே பாடுபடுவர் என்ற அரசியல் அறிவியல் விதிக்கேற்ப நீதிக்கட்சி ஆட்சியாளர்கள் உயர் வகுப்பாரின் உயர்வுக்காக மட்டுமே முன்னுரிமை கொடுத்ததால் மக்களின் மதிப்பையும், ஆதரவையும் இழந்தனர். 3) நீதிக்கட்சியிடமிருந்து நிறைய எதிர்பார்த்த சிறுபான்மையினர், குறிப்பாக தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிடர்கள் பெருத்த ஏமாற்றமடைந்தனர். அக்கட்சி நம்பகத்தன்மையை இழந்தது. 4) அதிகார ஆசையும், பதவிப் பித்தும் நீதிக்கட்சிக்குள் கோஷ்டிப் பூசல்களையும், போராட்டங்களையும் தீவிரப்படுத்திவிட்டன. உட்கட்சிப் பூசல்களே நீதிக்கட்சியின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. 5) நீதிக்கட்சித் தலைவர்களின் ஆடம்பர வாழ்க்கை முறை அக்கட்சியை மக்களிடமிருந்து அந்நியப்படுத்திவிட்டது. 6) முதலமைச்சராயிருந்த பொப்பிலி அரசர் தனது யதேச்சாதிகார தன்முனைப் பாட்சியால் நீதிக்கட்சியை மீண்டும் தலைதூக்க முடியாமல் செய்துவிட்டார்! சுருங்கக்கூறின் நீதிக்கட்சியின் குறைபாடுகள் அக்கட்சியின் குறைபாடுகளேயாகும். விடிவெள்ளியாகத் தோன்றிய நீதிக்கட்சி எரிநட்சத்திரமாக எரிந்து மறைந்தது.

மதிப்பீடு

நீதிக்கட்சி பிராமணரல்லாதாருக்கு ஆதரவாகத் துவக்கப்பட்ட அமைப்பேயன்றி பிராமணர்களுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட கட்சி அல்ல. நீதிக்கட்சி பிராமணர்களுக்கு ஆதரவாக இருந்தது என்பது நியாயமற்ற குற்றச்சாட்டாகும். ஏனெனில், நீதிக்கட்சியின் வகுப்புவாரி பிரதிநிதித்துவ சட்டம் பிராமணர்களின் அரசாங்க வேலை வாய்ப்பை வெகுவாகக் குறைத்து விட்டது அதன் காரணமாக தமிழ் நாட்டில் பிராமணர் ஆதிக்கம் குறையலாயிற்று. நீதிக்கட்சி கொண்டு வந்த மாற்றத்தால் தமிழ்நாடு காங்கிரசும் அதிக அளவில் பிராமணரல்லாதாரை உறுப்பினர்களாகவும், பொறுப்பாளர்களாகவும் சேர்த்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

தேர்தல் தோல்வியை சந்திக்க விரும்பாத நீதிக்கட்சி பிராமணர்களை கட்சி உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டது சந்தர்ப்பவாத அரசியலாகும். நீதிக்கட்சி வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கையை செயல்படுத்தியது பிராமணரல்லாதாரின் வாக்குகளைப் பெறுவதற்காகத்தான் என்று குறை கூறினார் கம்யூனிட் தலைவர் பி. இராமமூர்த்தி. பொருளாதார நெருக்கடியில் விவசாயிகள் சிக்கித் தவித்தபோது நிலத்தீர்வை இரத்து செய்யாதது பொருளாதாரத் தவறாகும். அதேபோன்று, நீதிக்கட்சி சில பிராமணரல்லாத சமூகத்தினரைக் குற்றவாளிகளாகக் கருதிய குற்றப் பழங்குடியினர் சட்ட (Criminal Tribe Act)த்தை நீக்காதது சமுதாயத் தவறாகும்.

நீதிக்கட்சியினர் துவக்க காலத்தில் அந்நிய ஆதிக்க அரசாங்க ஆதரவாளர்களாக, விசுவாசிகளாக இருந்தனர் என்பதில் ஐயமில்லை. எனினும் விரைவிலேயே அவர்கள் தேசிய சுதேசிப் பொருளாதாரத் திட்டத்தை ஏற்றுக் கொண்டு அதற்கான தீர்மானத்தை 1925இல்

நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் நிறைவேற்றினர். நீதிக்கட்சி அரசியலமைப்பில் சுவராஜ்" என்ற சொல் இடம் பெற்றது. நீதிக்கட்சியின் நான்காவது ஆண்டுக் கூட்டத்தில் ஜாலியன்வாலாபாக் படுகொலைக்குக் கண்டனம் தெரிவித்ததோடு அதற்குக் காரணமாக இருந்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனினும், நீதிக்கட்சி தேசியத்தை (Nationalism)விட பிராந்தியத்துக்கே (Regionalism) அதிக முக்கியத்துவம் அளித்தது. பிரிட்டிஷ் ஆட்சியில் நம்பிக்கையுடைய நீதிக்கட்சி திராவிடர் இயக்கத்தின் அரசியல் கிளையாக இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார் சி.சுப்பிரமணியம். சுருங்கக்கூறின், நீதிக்கட்சியின் எழுச்சி தற்காலத் தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றைத் திசைதிருப்பிய நிகழ்ச்சியாகும்.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

9.வகுப்புவாரி பிரதிநிதித்துவ கொள்கையை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்குத் தேவையான விதிமுறை (Formula) வகுத்துக் கொடுத்தவர் யார்?
10. 1922 டிசம்பர் 18 ஆம் தேதி சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்து அறநிலைய மசோதாவை எந்த ஆண்டு நிறைவேற்றினர்?

13.8. சுயமரியாதை இயக்கம்

13.8.1. பெரியார் ஈ.வெ. இராமசாமி (1879-1973)

ஈரோடு வெங்கட இராமசாமி (ஈ.வெ.ரா) 1879 செப்டம்பர் 17 ஆம் தேதி ஈரோட்டில் மண்டி வெங்கட்டப்ப நாயக்கர் சின்னத்தாயம்மை ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். இவர் செல்வமும் செல்வாக்குமிக்க கர்நாடக பலிஜவார் வகுப்பைச் சேர்ந்தவர். இராமசாமி திண்ணைப் பள்ளியிலும், துவக்கப் பள்ளியிலும் படித்தார். 12வது வயதிலேயே பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டு, வெங்கட்டப்ப நாயக்கர் மண்டிக்கடை வியாபாரத்தைப் பார்த்துக் கொண்டார். 19 ஆவது வயதில் சேலம் நாதம்பட்டியைச் சேர்ந்த 13 வயது நாகம்மையைத் திருமணம் செய்து கொண்டார் (1898). 25 ஆம் வயதில் வீட்டைவிட்டு வெளியேறி, காசி, கல்கத்தா முதலான இடங்களுக்குச் சென்றுவிட்டு மீண்டும் ஈரோட்டுக்கே வந்து "ஈ.வெ. இராமசாமி நாயக்கர் மண்டி" வியாபாரியானார் (1904). வியாபாரியாக இருந்த போதே காங்கிரஸ் இயக்கத்தில் ஆர்வம் கொண்டார். காங்கிரஸ் மாநாடுகளில் கலந்து கொண்டார். அதேசமயம் ஈரோடு நகர் மன்றத் தலைவராகவும் இருந்தார். பின்னர் நகர் மன்றத் தலைவர் பதவியையும், பல கவுரவப் பொறுப்புக்களையும் விட்டுவிட்டு காங்கிரஸ் உறுப்பினராகி இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரப் பங்கேற்றார் (1919).

குறிப்பு

குறிப்பு

காங்கிரஸ் போராளி

காங்கிரஸ் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்ட ஈ.வெ. இராமசாமி நாயக்கர் ஒத்துழையாமை இயக்கத்துக்கு முழு ஒத்துழைப்பைக் கொடுத்தார். நெல்லை காங்கிரஸ் கூட்டத்தில் வகுப்புரிமைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். ஈரோட்டில் கள்ளுக்கடை மறியலைத் தலைமை தாங்கி நடத்தினார். காந்தியின் நிர்மானத் திட்டத்தை சிரமேற்கொண்டு நடைமுறைப்படுத்தினார். தாதம்பட்டியில் அவருக்குச் சொந்தமான தென்னந்தோப்பில் நூற்றுக்கணக்கான தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்தார். வீதி வீதியாகச் சென்று தீவிரக் கதர் பிரச்சாரம் செய்தார். தஞ்சாவூர் காங்கிரசில் மீண்டும் வகுப்புரிமைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார் (1921). கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டதற்காக சிறையில் அடைக்கப்பட்டார் (1922).

ஈ.வெ.இராமசாமி நாயக்கர் 1923 ஆம் ஆண்டு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழ் நாட்டில் முதல் முதலாக காங்கிரஸ் தலைமைப் பொறுப்பேற்ற பிராமணரல்லாதவர் இவர்தான். அப்படியும் வ.வே.சு.ஐயர் இவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தார். (விடுதலை, 1960, ஜனவரி 6). "தட்சிண காந்தி" என்று அழைக்கப்பட்ட இராஜாஜியுடன் பெரியார் பொள்ளாச்சிக்கு வந்ததாக (1925)க் குறிப்பட்டுள்ளார் சி.சுப்பிரமணியம். காங்கிரஸ் கமிட்டித் தலைவரான பின்னரும் வகுப்புரிமை கோரிக்கையைக் கைவிடவில்லை. ஈ.வெ.ரா 1924 ஆம் ஆண்டில் மூன்று முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்: 1) கேரளாவில் வைக்கம் மகாதேவர் கோவில் முன் தீண்டாமை ஒழிப்புச் சத்தியாகிரகத்தில் பங்கேற்று, இருமுறை சிறை சென்று, போராட்டத்தில் வெற்றி பெற்று வைக்கம் வீரர்" என்று பாராட்டப்பட்டார் 2) திருவண்ணாமலை காங்கிரசில் வகுப்புரிமைத் தீர்மானத்தை முன்மொழிந்து உணர்ச்சி உரையாற்றினார் 3) சேரன்மகாதேவி குருகுலத்தில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை வன்மையாகக் கண்டித்தார். இவற்றோடு நீதிக்கட்சி ஆட்சியின் அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தை ஆதரித்தார். ஈ.வெ. இராமசாமி நாயக்கர் 1925 நவம்பர் 25 ஆம் தேதி நடைபெற்ற காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டில் இறுதியாக வகுப்புரிமைத் தீர்மானத்தை முன்மொழிந்தார். அத்தீர்மானம் ஏற்கப்படாமையால் அவரும் அவரது ஆதரவாளர்களும் காங்கிரசை விட்டு வெளியேறினர். வெளியேறிய பின்னரும் அவர் காங்கிரசை ஒரு வகுப்புவாத சபை"யாகவே கருதினார். 19.1.3 சுயமரியாதை சமதர்மம், 1925-1938 கயாவது போயாங்கான 'தமிழ்நாட்டு ரூசோ" பப்ப காங்கிரசை விட்டு வெளியேறிய ஈ.வெ.ராமசாமி நாயக்கர் பல சமுதாய சீர்திருத்தப் பரிசோதனைகளில் ஈடுபட்டார். காங்கிரசின் இந்திக் கொள்கை"யைக் கண்டித்து எழுதினார். 1926 டிசம்பர் மாதம் மதுரையில் பிராமணரல்லாதார் முதல் மாநில மாநாட்டைக் கூட்டி பிற்பட்டோர், பிற்படுத்தப்பட்டோரின் பிரச்சனைகள் பற்றிப் பேசினார். காந்தியின் நிர்மாணத் திட்டத்தை நிராகரித்தார்.

குறிப்பு

காந்தியாரை பெங்களூரில் சந்தித்து பிராமண எதிர்ப்புக் கொள்கையைப் பற்றி விவாதித்தார் (1927). நாகை தொழிலாளர் கிளர்ச்சியில் பங்கேற்று சிறை சென்றார். சைமன் கமிஷனை வரவேற்றார். திருக்குறள், புத்தர் கொள்கைகளைப் பரப்பினார். தன் பெயருக்குப் பின்னால் இருந்த "நாயக்கர்" சாதிப் பட்டத்தை விலக்கிக் கொண்டார். சர்.ஏ. இராமசாமி முதலியார் ஈ.வெ.இராமசாமியை தமிழ் நாட்டின் ரூசோ" என்று அழைத்து பெருமைப்படுத்தினார் (1927 ஜூலை). 1928 ஆம் ஆண்டிலிருந்து காந்தியை "மகாத்மா" என்று அழைப்பதை நிறுத்திவிட்டார். அதேபோன்று காந்தியின் இந்து மதம் பற்றிய விளக்கத்தையும், ஆதி திராவிடர்களுக்கென தனிக் கோயில்கள் வேண்டும், கலப்புத் திருமணங்களும், சமபந்தி விருந்தும் தனிப்பட்ட கருத்துக்கள் என்ற கருத்துக்களை பெரியார் ஏற்றுக் கொள்ளவில்லை.

பெரியார் ஈ.வெ. இரா

ஈ.வெ.இராமசாமி என்று பெயரை மட்டும் போட்டுக் கொள்வது மரியாதையாக இருக்காது என்று கருதிய நாகர்கோவில் வழக்குரைஞர் பி.சிதம்பரம் பிள்ளை முதல் முதலாக ஈ.வெ. இரா.பெரியார் என்று அழைத்தார் (1927). அதிலிருந்து ஈ.வெ.இரா.பெரியார் என்ற பெயர் பிரபலமாயிற்று. 1929 பிப்ரவரி 17-18 தேதிகளில் செங்கல்பட்டில் முதலாவது சென்னை மாகாண சுயமரியாதை மாநாட்டைக் கூட்டி முறைப்படி சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கினார். மனைவி நாகம்மையுடன் மலேசிய நாட்டில் சுற்றுப் பயணம் செய்து சுயமரியாதைப் பிரச்சாரம் செய்தார். அப்பயணத்தின் போதுதான் பெரியார் தாடி வளர்க்கத் தொடங்கினார்.

சமதர்மவாதி

மலேசியாவிலிருந்து திரும்பிய பெரியார் ஈ.வெ.இரா பல பகுத்தறிவாளர் சங்கங்களைத் துவக்கினார். இரண்டாவது சுயமரியாதை மாநாட்டை ஈரோட்டிலும் (1930), மூன்றாவது மாநாட்டை விருதுநகரிலும் (1931) நடத்தினார். 1932 ஆம் ஆண்டு பல ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு வந்த பெரியார் சமதர்மவாதியானார். சமதர்மப் பிரச்சாரம் செய்ததற்காகப் பெரியார் தண்டிக்கப்பட்டு சிறை தண்டனை பெற்றார் (1933). பெரியார் தயாரித்த சமதர்ம வேலைத் திட்டத்தை நீதிக்கட்சி ஏற்றுக் கொண்டதால் அக்கட்சியின் ஆதரவாளரானார் (1935). பகுத்தறிவு என்ற நாளேட்டைத் துவக்கினார். 1937 இல் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் நீதிக்கட்சிக்காக பிரச்சாரம் செய்தார். இருப்பினும் நீதிக்கட்சி படுதோல்வி அடைந்தது. இத்தேர்தலில் காங்கிரஸ் மகத்தான வெற்றி பெற்று இராஜாஜி சென்னை இராஜதானியின் முதலமைச்சரானார். அவர் பள்ளிகளில் அறிமுகப்படுத்திய இந்தியை எதிர்த்துப் போராடி சிறை சென்றார் பெரியார் (1938). பெரியார் பெல்லாரி சிறையில் இருந்தபோதுதான் நீதிக்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழ்நாட்டுப் பெண்கள்

குறிப்பு

மாநாடு ஈ.வெ.இராவை எப்போதும் பெரியார் என்றே குறிப்பிட வேண்டும் என்று அறிவித்தது.

நீதிக்கட்சித் தலைவர், 1938-1944

நீதிக்கட்சித் தலைவரான பெரியார் அக்கட்சியை ஒரு சமுதாய சீர்திருத்த இயக்கமாக உருமாற்றம் செய்வதில் முனைப்புடன் ஈடுபட்டார். சிறையிலிருந்து திரும்பிய பெரியார் "திராவிட நாடு" கோரிக்கையை எழுப்பினார். திராவிட நாட்டை இலட்சியமாகக் கொண்டு அதற்கான பிரச்சாரத்தைத் துவக்கினார். சர். ஸ்டாபோர்டு கிரிப்சை (Sir Staford Gripps) சந்தித்து "திராவிட நாடு பிரிவினை" பற்றிப் பேசினார் (1939). 1940 ஜனவரி 8 ஆம் தேதி முகமது அலி ஜின்னாவை பம்பாயில் அவரது இல்லத்தில் சந்தித்து தனிநாடு கோரிக்கைக்கு அவரது ஆதரவைக் கோரினார். அந்த உரையாடலின் போது டாக்டர் பி.ஆர்.அம்பேத்காரும் உடனிருந்தார். திருவாரூர் மாநாட்டில் திராவிட நாடு கோரிக்கையை விளக்கிப் பேசினார் (1940 ஏப்ரல்). இராஜாஜி நேரில் வேண்டுகோள் விடுத்தும் பெரியார் அமைச்சர் பதவியை ஏற்க மறுத்துவிட்டார். பிராமணர் மற்றும் இந்திக்கார வடநாட்டவரிடமிருந்து தமிழ்நாட்டு மக்களைக் காப்பாற்றுவதற்காகவே தனிநாடு கோருவதாகக் கூறினார். ஆனால் அப்போது பெரியாருக்கு திராவிட நாடு பற்றிய தெளிவில்லை. ஒருபக்கம் தமிழ்நாடு தமிழருக்கே" என்று முழக்கமிட்டார். அந்த வாசகத்தை ஒவ்வொரு தமிழனும் கையில் பச்சை குத்திக் கொள்ள வேண்டும் என்றார். அதே சமயம் திராவிட பிரிவினை பற்றியும் பிரச்சாரம் செய்தார். பிராமணரல்லாதார் என்ற பெயரில் செயல்பட்டுவந்த அமைப்புகளைப் படிப்படியாக திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றம் செய்து வந்தார் (1941). அமைச்சரவை அமைக்கும் வாய்ப்பு வந்தும் அதைப் பெரியார் நிராகரித்துவிட்டார் (1942). திராவிடப் பிரிவினைப் பிரச்சாரத்தில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டார் பெரியார். 1944 ஆகஸ்டு 27 ஆம் தேதி சேலத்தில் பெரியார் நீதிக்கட்சி என்ற பெயரை திராவிடர் கழகம் என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

திராவிடர் கழகத் தலைவர், 1944-1973

நீதிக்கட்சியை திராவிடர் கழகமாக மாற்றியபின் பெரியார் தராசு சின்னம் பொறித்த நீதிக்கட்சியின் கொடியை கருப்புப் பின்னணியில் சிவப்பு வட்டம் கொண்ட கொடியாக மாற்றினார். தனிக் கொடியுடன் திருச்சி திராவிடர் கழக மாநில மாநாட்டில் கருஞ்சட்டைத் தொண்டர் படை என்ற அமைப்பை உருவாக்கினார் (1945 செப்டம்பர் 29-30). அதன்பின் மதுரையில் கருஞ்சட்டைப் படை மாநாடு நடத்தப்பட்டது (1946 மே 11). திராவிடர் கழகக் கொடி முறையாக ஏற்கப்பட்டது.

இயக்கம் இரண்டுபட்டது

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையின் அமைப்பு முறையை எதிர்த்தார் பெரியார் (1946). 1947 ஆகஸ்டு 15 ஆம் தேதி நாடு முழுவதும் சுதந்திர நாளாகக் கொண்டாடிய போது பெரியார் அந்த

நாளை "திராவிடருக்கு துக்க நாள்" என்று அறிவித்தார். வடநாட்டவர் தமிழ்நாட்டு ஆளுநராக நியமிக்கப்படுவதை எதிர்த்தார். கடலூரில் திராவிடர் மாநாடு கூட்டி நாட்டுப் பிரிவினைப் பிரச்சாரம் செய்தார். இந்தி எதிர்ப்புக் கொள்கையை தீவிரப்படுத்தினார். சென்னைக்கு வந்த இராஜாஜிக்கு எதிராக ஆர்ப்பட்டம் செய்ததற்காக சிறை தண்டனை பெற்றார் (1948). மூத்த கழகத் தலைவர்கள் மீது நம்பிக்கையின்றி திராவிடர் கழகப் பாதுகாப்பு கருதி 1949 ஜூலை 9 ஆம் தேதி பெரியார் மணியம்மையைத் திருமணம் செய்து கொண்டார். பெரியாரின் யதேச்சாதிகார சர்வாதிகாரப் போக்கை எதிர்த்து சி.என்.அண்ணாதுரையும் அவரது ஆதரவாளர்களும் திராவிடர் கழகத்தை விட்டுப் பிரிந்து சென்று திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் தனிக்கட்சியைத் துவக்கினர். அதன்பின் திராவிடர் கழகத்து தலைவர் பெரியார் பல போராட்டங்களை நடத்தி 1973 டிசம்பர் 24 ஆம் தேதி காலை 94 வயதில் இயற்கை எய்தினார்.

குறிப்பு

சுயமரியாதை இயக்கம், 1925-1935

பெரியார் ஈ.வெ.இராமசாமி சுயமரியாதை இயக்கத்தைத் துவக்குவதற்கு முன்னால் வெளிநாடுகளில் சுயமரியாதைக் கொள்கைகளுக்காக அமைக்கப்பட்டு செயல்பட்டு வந்த இயக்கங்களைப் பற்றி அறிந்து கொண்டார். எடுத்துக்காட்டாக, இலண்டன் பகுத்தறிவாளர் சங்கம் (RDA), அமெரிக்க சுதந்திர சிந்தனையாளர் சங்கம் (Free Thinkers' Association), இரஷ்ய கடவுள் எதிர்ப்பு சங்கம் (Anti-God Society), சீன வாலிப சீனர்கள் (Young Chinese) ஆகியவற்றைப் பெரியார் முன்மாதிரி இயக்கங்களாகக் கருதினார். இவற்றுள் இரஷ்ய சங்கம் அரசாங்கத்தால் ஆதரிக்கப்பட்டது. இவையன்றி ஆப்கானிஸ்தானத்திலும், துருக்கியிலும் சுயமரியாதைப் பிரச்சாரங்கள் நடைபெற்று வந்தன. இச்சங்கங்களின் செயல்பாடுகள் பெரியாருக்கு உந்து சக்திகளாக இருந்தன.

சுயமரியாதை-விளக்கம்

பெரியார் ஈ.வெ.இராமசாமி சுயமரியாதையை உயிருக்கு ஒப்பாகக் கருதினார். "சுயமரியாதையற்றவனைப் பிணமென்றுதான் சொல்ல வேண்டும்" என்றார். சுயமரியாதை இல்லாதவர்களுக்கு இந்தியா அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைவதால் எந்தப் பயனுமில்லை என்று கருதினார் ஈ.வெ.இரா. அவருடைய நோக்கில் சுயமரியாதை என்பது சமத்துவம், சம உரிமை, சம வாய்ப்பு, சிக்கனம், அன்பு, இரக்கம், ஒழுக்கம் ஆகியவற்றையும் குருட்டு நம்பிக்கை, மூடப் பழக்கவழக்கங்கள், தீண்டாமை, பெண் அடிமை ஒழிப்பு, எளியோரை வலியோர் அடக்கி ஆளாமை, படித்தவர்கள் படிக்காமல் இருப்போரை ஏமாற்றாமல் இருத்தல், பகுத்தறிவு வளர்ச்சி பெறல், தன் முயற்சிக்கு ஊக்கமளித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். சுருங்கக்கூறின், சுயசிந்தனையும், சுய சார்புடைமையும் சுயமரியாதையின் இரு கண்களானால் பகுத்தறிவும் தன்மானமும் இரு கால்களாகும்.

குறிப்பு

நீதிக்கட்சியில் ஏன் சேரவில்லை?

நீதிக்கட்சி பிராமணரல்லாதார் அனைவரது சமூக சமத்துவத்தையும், உரிமைகளையும், சமவாய்ப்பையும் அடிப்படையாகக் கொண்டு துவக்கப்பட்டது. அக்கட்சி எதிர்ப்புகளுக்கிடையே எதற்கும் அஞ்சாமல், உறுதியுடன் இருந்து சவால்களை சமாளித்து, அவ்வியக்கத்தை அழியவிடாமல் காப்பாற்றி, மக்களிடையே சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டி வந்தார்கள் என்பதை பெரியார் ஈ.வெ.இரா ஏற்றுக் கொண்டார். ஆனால் அக்கட்சி பிராமணர்களை உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்வது என்ற முடிவை தேன் கூட்டில் நெருப்பு வைக்கப்பட்டது போன்றது" என்றும் இந்த 'இயக்கம் செத்து, பார்ப்பன ஆதிக்கத்திற்கு மற்றொரு சாதனமாய் மாறிவிடும்" என்றும் அஞ்சிய பெரியார் ஈ.வெ.இரா. அக்கட்சியில் சேரவில்லை ஆனால் அக்கட்சியை ஆதரித்தார். எனினும் நீதிக்கட்சியை "உத்தியோக வேட்டைக் கட்சி"யாகவே கருதினார். எனவே பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கி அதன் தனித்தன்மையை நிலை நாட்டுவதில் குறியாக இருந்தார். ஆங்கிலம் தெரிந்த மக்களிடையே சுயமரியாதைக் கொள்கையைப் பரப்புவதற்காக ரிவோல்ட் (Revolt) என்ற இதழை நடத்தினார் (1928). சுயமரியாதை இயக்கம் வேர்பிடித்து வளர நீதிக்கட்சியைப் பயன்படுத்திக் கொண்டார். 1929 இல் செங்கல்பட்டில் நடைபெற்ற சென்னை மாகாண சுயமரியாதை முதல் மாநாடு இதைத் தெளிவுபடுத்தியது. இந்த வரலாற்று முக்கியத்துவமிக்க மாநாடு சுயமரியாதை இயக்கத்தின் தோற்றுவாயாகக் கருதப்பட்டது. - 1925 அரசியல் கட்சியல்ல சுயமரியாதை இயக்கம் ஒரு அரசியல் கட்சியைப் போன்று குறிப்பிட்ட இடத்தில் சிலர் கூடி துவக்கப்பட்ட அமைப்பல்ல. இந்த இயக்கம் பெரியார் ஈ.வெ.இராவின் தலைமையின் கீழ் செயல்பட்ட தனிமனித சமுதாய சீர்திருத்த இராணுவமாகும் இராணுவக் கட்டுப்பாட்டுடன் நடத்தப்பட்டது. பெரியாரின் வார்த்தைகளில் கூறுவதாயின் "சுயமரியாதை இயக்கமானது அரசியல்களின் பேரால் நமது நாட்டிலுள்ள பல கட்சிகளைப் போலல்லாமல், அன்னியர்களிடம் இருந்து யாதொருவிதமான சிறு விஷயத்தையும் எதிர்பாராமல் மக்கள் அறிவை விளக்கை அவரவர்களின் மனப்பான்மையை மாற்றுவதன் மூலம் உண்மையான விடுதலையையும், சமத்துவத்தையும், தன்மதிப்பையும் உண்டாக்கக் கூடிய ஒரு இயக்கமாகும்" (தலையங்கம், குடியரசு 25-8-1929). அதாவது, சுயமரியாதை இயக்கம் தமிழர்களின் அறிவை விரிவுபடுத்தி, மனப்பான்மையை மாற்றி, சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் இயக்கமாகும். ஏனெனில் அரசியல் தொண்டு என்பது "அயோக்கியர்களை உற்பத்தி செய்து அவர்கள் மூலம் பாமர மக்களை வஞ்சிக்கச் செய்வதே அல்லாமல் வேறில்லை" என்றார் பெரியார்.

பெரியார் ஈ.வெ.இராமசாமியால் துவக்கப்பட்ட சுயமரியாதை இயக்கம் வேகமாக வளரத் துவங்கியது. இந்த வேக வளர்ச்சியைக் கண்ட நீதிக்கட்சித் தலைவர்கள் அதன்பால் ஆர்வம் காட்டலாயினர். 1929 மே மாதம் பட்டுக்கோட்டையில் எ.குருசாமியின் தலைமையின் கீழ்

மாபெரும் சுயமரியாதை நடைபெற்றது. கே.வி.அழகிரிசாமி தொண்டர் படைக்குத் தலைமை தாங்கினார். இந்த மாநாட்டைப் போல் சென்னை இராஜதானியின் பிற நகரங்களிலும் சுயமரியாதை மாநாடுகள் நடத்தப்பட்டன. அவற்றுள் ஒன்றுதான் 1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடத்தப்பட்ட வரலாற்று முக்கியத்துவமிக்க சுயமரியாதை மாநாடு ஆகும்.

குறிப்பு

13.8.2. இயக்கத்தின் குறிக்கோள்கள்

1929 இல் செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மூலம் இந்த இயக்கத்தின் 10 அம்சக் கொள்கையை வெளியிட்டார் பெரியார் ஈ.வெ.இரா. அவையாவன: 1) மக்கள் பிறப்பால் சாதிபேதம் அற்றவர்கள் 2) சாதிபேதம் கற்பிக்கும் மதம், வேதம், சாஸ்திரம், புராணம் இவைகளைப் பின்பற்றக்கூடாது 3) வருணாசிரமப்படி பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர் என்ற பிரிவுகளை ஏற்றுக் கொள்ளக்கூடாது 4) மக்களிடையே தீண்டாமையை ஒழித்து, பொதுக்கிணறு, குளம், பள்ளிக்கூடம், சத்திரம், தெரு, கோயில் முதலியவற்றில் பொது மக்களுக்குச் சமஉரிமை இருக்க வேண்டும் 5) இவற்றுக்கு எதிர்ப்பு வந்தால் அரசாங்கம் மூலம் சட்டம் இயற்றி, அச்சட்டத்தின் மூலம் நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும் 6) சாதி மத வேறுபாட்டைக் காட்டக்கூடிய பட்டம், குறியீடுகள் முதலியவற்றை உபயோகிக்கக் கூடாது 7) பெண்களைப் பொறுத்தவரை, திருமண வயது 16க்கு மேல் இருக்க வேண்டும் கணவனுக்கும் மனைவிக்குமிடையே ஒத்துப்போக முடியாவிடில் பிரிந்து போகும் உரிமை வேண்டும் விதவைகள் மறுமணம் செய்து கொள்ள வேண்டும் கலப்பு மணம் செய்து கொள்ளலாம் ஆண்களும் பெண்களும் தங்கள் துணைகளை அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் 8) திருமணச் சடங்குகள் போன்றவை மிகவும் சுருக்கமாகவும், சிக்கனமாகவும், ஒரு நாளைக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும் , 9) கோயில் பூசைகளுக்குப் பண விரயம் செய்யக்கூடாது கடவுளுக்கும் பக்தனுக்குமிடையே இடைத்தரகர் கூடாது கோயில் சொத்தை கல்விக்கும், ஆராய்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் பயன்படுத்த வேண்டும். 10) மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்தல் 11) பெண்களுக்கு சொத்துரிமை, உத்தியோக உரிமை அளித்தல் ஆசிரியர்கள் அனைவரும் பெண்களாகவே இருக்க வேண்டும் 12) தீண்டத்தகாதோர்" என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருப்போருக்கு உணவு, உடை, புத்தகம் ஆகியவற்றைக் கொடுத்து அவர்களுக்கு அரசாங்க நிலங்களை வழங்கல். 13) பிராமணரல்லாத இளைஞர்களுக்கு உள்ள தடைகளையும், இடர்பாடுகளையும் நீக்கல் 14) கல்வி சம்பந்தமாக தாய்மொழி, அரசாங்க மொழி கல்விக்குப் பொதுப் பணம் செலவழித்து கட்டாயமாக கற்பிக்க வேண்டும் உயர்நிலைக் கல்வி பொது பணம் செலவிடக்கூடாது அரசாங்க அலுவல்களுக்குத் தேவைப்பட்டால் - ஒதுக்கீட்டின்படி மாணவர்களைத் தேர்ந்தெடுத்து படிப்பிக்க வேண்டும்: 15)

சிற்றுண்டி, ஓட்டல் முதலிய இடங்களில் வேறுபாடு எதுவும் இருக்கக்கூடாது.

குறிப்பு

13.8.3. சுயமரியாதை இயக்கத்தின் சாதனைகள்

சுயமரியாதை இயக்கம் கோப்பையில் எழுந்த புயல் அல்ல் வானத்தில் தோன்றி மறைந்த வானவில்லும் அல்ல. அது ஒரு சமுதாய, சமய, கலாச்சார சீர்திருத்த இயக்கம். சுயமரியாதை இயக்கம் சமுதாயப் புரட்சிக்கான முன்னோடி முயற்சியாகும். அந்தப் பாதையில் முளைத்தவைதான் திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஆகும். சுயமரியாதை இயக்கத்தின் சாதனைகள் பல. அவை வருமாறு: 1) தமிழ் நாட்டில் பிராமணர் ஆதிக்கம் படிப்படியாகக் குறைந்தது 2) பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த கண்மூடித்தனமான மரியாதையும், மதிப்பும், முன்னுரிமையும் முக்கியத்துவம் இழந்தன் 3) பொதுத் தேர்தல்களில் பிராமண வேட்பாளர் களுக்குப் பிராமணரல்லாத வாக்காளர்களின் ஆதரவு வெகுவாகக் குறைந்தது 4) பண்டிகைகள், விரதங்கள், சமயச் சடங்குகள் சிறப்பிழந்தன் 5) விதவைகள் திருமணம், கலப்பு மனம், சாதி வேறுபாடு கருதாமை, தீண்டாமை ஒழிப்பு, கோவில் நுழைவு ஆகியவை மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. 6) புரோகித விலக்குச் சங்கங்கள் தோன்றி, மதப் புரட்டுகளை அம்பலப்படுத்தி, புரோகிதர்களின் தேவையை மட்டுப்படுத்தியது 7) மக்கள் வாக்கெடுப்பின் போது, ஒவ்வொரு குடிமகனும் இந்தியன் என்று கூற வேண்டும், எக்காரணம் கொண்டும் சாதிப் பெயரைச் சொல்லக்கூடாது என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டன் 8) வகுப்புரிமை பிரதிநிதித்துவம் நடைமுறை சாத்தியமாயிற்று 9) பதிவுத் திருமணங்கள் பிரபலமடைந்தன் 10) சனாதன வைதீகங்களும், புராணங்களும், வர்ணாசிரம தர்மமும் செல்வாக்கு இழந்தன் 11) பொது உணவு விடுதிகள், ஆலயங்கள், புகைவண்டி நிலையங்கள், சத்திரங்கள் போன்ற பொது இடங்களில் பிராமணர்களுக்கும் பிறர்க்கும் காட்டப்பட்டு வந்த வேறுபாடுகள் மறைந்தன.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

11. யார் தாதம்பட்டியில் அவருக்குச் சொந்தமான தென்னந்தோப்பில் நூற்றுக்கணக்கான தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்தார்?

12. யாரை “தட்சிண காந்தி“ என்று அழைத்தனர்?

13.9.உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

1. கண்ணப்பா
2. சர் ஜான் பிக்ஸ்
3. 1712

குறிப்பு

4. 1813
5. தாம்சானின்
6. மறைமலை அடிகளார்
7. 1916
8. 1892
9. முத்தையா முதலியார்
10. 1925
11. பெரியார்
12. இராஜாஜி

13.10. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

குறுகிய வினாக்கள்

1. ஆங்கிலேயர் காலத்தில் கிராம நிர்வாகம் குறித்து விளக்குக.
2. தமிழகத்தின் கல்வி வளர்ச்சியில் மெக்காலேவின் பங்கு என்ன?
3. நீதிக்கட்சியின் தோல்வியை குறித்து சிறு குறிப்பு எழுதுக.

விரிவான வினாக்கள்

1. ஆங்கிலேயரின் நீதி நிர்வாகம் குறித்து விவாதி.
2. தமிழகத்தில் அரசியல் வளர்ச்சி குறித்து கட்டுரை எழுதுக.
3. சுயமரியாதை இயக்கத்தில் பெரியாரின் பங்கு குறித்து விவரி.
4. தமிழ் வளர்ச்சிக்கு மறைமலை அடிகளாரின் பங்கு குறித்து கட்டுரை எழுதுக.

13.11. கூடுதல் வாசிப்புகள்

Rajayyan K. History of Tamil Nadu

பிள்ளை கே.கே. தென்னிந்திய வரலாறு

Nilakanda Sastri K.N. A History of South India

Sathianathair R. History of India

வெங்கடேசன் க. தற்கால தமிழ்நாட்டு வரலாறு

இராமசாமி அ. தமிழ் நாட்டு வரலாறு

David Arnold. The Congress in Tamilnadu: nationalist politics in South India, 1919-1937

இராஜேந்திரன் நா. தமிழ்நாட்டில் தேசியம் சுதேசியம்

அலகு - 14

குறிப்பு

சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு - ஆரம்ப கட்டம் - வ.உ.சி. -சுப்ரமணிய பாரதி-வாஞ்சிநாதன்-சுப்ரமணிய சிவா-பிற்காலகட்டம்-இராஜாஜி-சத்தியமூர்த்தி-காமராஜ்

பாட அமைப்பு

14.1. முன்னுரை

14.2. நோக்கங்கள்

14.3. தமிழ்நாடும் துவக்க கால காங்கிரசும்

14.4. வாஞ்சிநாதன்

14.5. பாரதியார்

14.6. வ.உ.சிதம்பரம்

14.7. சுப்பிரமணிய சிவா

14.8. இராஜாஜி

14.8.1. நகர்மன்ற சாதனைகள்

14.8.2. விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்பு

14.8.3.சட்டச் சாதனைகள்

14.8.4. இந்தி எதிர்ப்புப் போராட்டம்

14.9. எஸ். சத்தியமூர்த்தி

14.10. கு.காமராசர்

14.11. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

14.12. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

14.13. கூடுதல் வாசிப்புகள்

14.1. முன்னுரை

இந்திய தேசிய காங்கிரசின் தோற்றம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். மேற்கத்தியப் பண்பாட்டின் தாக்கம் இந்திய சமுதாய, சமய மறுமலர்ச்சி ஆங்கில அதிகாரவர்க்கத்தின் ஆதிக்கப் போக்கு அந்நிய அரசாங்கத்தின் சுரண்டல் கொள்கை ஆகியவற்றின் விளைவாக இந்தியரிடையே தேசிய உணர்ச்சி உருவாயிற்று. சென்னை, வங்காளம், பம்பாய் இராஜதானிகளில் துவக்கப்பட்ட அரசியல் சார்ந்த அமைப்புகள் இந்திய தேசியத்தின் ஊற்றுக் கண்களாயின. இப்போக்கின் இயல்பான விளைவே இந்திய தேசிய காங்கிரசின் தோற்றமாகும். காங்கிரஸ் துவக்கப்பட்ட பின்னர் இந்திய விடுதலைப் போராட்ட

வரலாற்றில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. இப்போராட்டத்தின் துவக்க காலத்தில் தமிழ் நாட்டின் பங்கேற்பு பெருமைக்குரியதாக இருந்தது.

குறிப்பு

விஜய நகர, மதுரை சுல்தானிய, மராத்திய மேலாதிக்கங்களை அந்நிய ஆதிக்கமாகக் கருதாத தமிழ்நாடு ஆங்கிலேய ஆட்சிக்கெதிரான போராட்டத்தில் முனைப்புடன் ஈடுபட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே இந்திய விடுதலைப் போராட்ட கிளர்ச்சிக்குத் தோற்றுவாயாக இருந்தது தமிழ்நாடு. வேலூர்க் கிளர்ச்சி (1806)யில் தமிழ் நாட்டுப் படைவீரர்கள் துணிவுடன் போராடினார்கள். ஆயினும் அவ்விரு துவக்ககால ஆங்கிலேய ஆதிக்க எதிர்ப்புப் போராட்டங்கள் முறியடிக்கப்பட்டன. அதன் பின்னர் ஆங்கிலக் கல்வி பெற்ற தமிழ் நாட்டுத் தலைவர்கள் உரிமை உணர்வும், விடுதலை வேட்கையும் பெற்று அரசியல் சார்ந்த அமைப்புகளை ஏற்படுத்தினர். சென்னை சுதேசி சங்கமும், சென்னை மகாஜன சபையும் அத்தகைய அமைப்புகளேயாகும். 1884 டிசம்பர் மாதம் சென்னை அடையாற்றில் பிரம்மஞான சபையின் ஆண்டுக் கூட்டத்துக்குப் பின் திவான் இரகுநாதராவ் இல்லத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருந்த பிரதிநிதிகள் கூடி இந்தியாவுக்குப் பொதுவான ஒரு அமைப்பை ஏற்படுத்தவும், அதன் மாநிலக் கிளைகளைத் துவக்கவும், அடுத்த ஆண்டு இறுதியில் தேசிய மாநாட்டைக் கல்கத்தாவில் கூட்டவும் தீர்மானித்தனர். ஆனால் அத்தீர்மானம் செயல்வடிவம் பெறுவதற்கு முன்னரே பம்பாயில் இந்திய தேசிய காங்கிர அமைக்கப்பட்டுவிட்டது. இந்த பின்னணியில் இந்திய விடுதலை போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு குறித்து இந்த அத்தியாயம் விவரிக்கிறது.

14.2. நோக்கங்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர் கீழ் கண்டவற்றை அறிய முடியும்

- சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு குறித்து விவரிக்கிறது.
- விடுதலை போராட்டத்தில் சுப்ரமணிய பாரதி வ. உ. சி, வாஞ்சிநாதன், மற்றும் சுப்ரமணிய சிவா ஆகியோரின் பங்களிப்பை விளக்குகிறது.
- விடுதலை போராட்டத்தில் இராஜாஜி, சத்தியமூர்த்தி, மற்றும் காமராஜ் ஆகியோரின் பங்களிப்பை விவாதிக்கிறது.

14.3. தமிழ்நாடும் துவக்க கால காங்கிரசும்

குறிப்பு

ஆலன் ஆக்டேவியன் ஹியூமின் சோர்வற்ற முயற்சியின் விளைவாக இந்திய தேசிய காங்கிரசின் முதல் மாநாடு 1885 டிசம்பர் 28 ஆம் தேதி பம்பாயில் கூடியது. அக்கூட்டத்தில் கலந்து கொண்ட 72 பிரதிநிதிகளில் சென்னை மாநிலத்திலிருந்து சென்றவர்கள் 21 பேர் அவர்களுள் தமிழ்நாட்டுப் பகுதியிலிருந்து சென்ற பிரதிநிதிகள் 16 பேர். எ.சுப்பிரமணிய அய்யர், வி.அனந்தாச்சாரியார், எம்.வீரராகவாச்சாரியார், பி.ரெங்கைய நாயுடு, எ.ஏ.சுவாமிநாத ஐய்யர், எ.வெங்கடசுப்பராய பந்துலு, பி.கேசவப் பிள்ளை, சி.சிங்காரவேலு முதலியார், இரங்காச்சாரி, எ.வி.அதல்யீ, சபாபதி முதலியார், பால்பீட்டர் பிள்ளை, சாமிநாத ஐய்யர், நரசிம்மலுநாயுடு, வெங்கட சுப்பராயலு, கேசவப் பிள்ளை ஆகியோர் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் ஆவர். அவர்கள் அனைவரும் சென்னை மகாஜன சங்கத்தின் சார்பாகச் சென்றவர்கள் ஆவர். இவர்களன்றி சென்னை டிரேஷியன் சங்கத்தின் தலைவர் டி.எ.ஒயிட், சென்னை கலெக்டர் ஆர்.இரகுநாத ஐய்யர், ஆர்க்காடு பேராசிரியர் கே.சுந்தரராமன், திருவள்ளூர் டி.என்.ஐய்யர் ஆகியோர் பார்வையாளர்களாகச் சென்றிருந்தனர். முதல் காங்கிரஸ் மாநாட்டுத் தலைவராக டபுள்யு.சி.பானர்ஜியின் பெயரை வழிமொழிந்து, மாநாட்டின் முதல் தீர்மானத்தை முன்மொழிந்த பெருமை தமிழ் நாட்டுப் பிரதிநிதியான எ.சுப்பிரமணிய ஐய்யருக்கே கிடைத்தது. இந்திய விடுதலைப் போராட்டத்தில் புதிய சகாப்தத்தைத் துவக்கிய இந்திய தேசிய காங்கிரசின் முதல் மாநாட்டிலேயே தமிழ் நாட்டிலிருந்து சென்ற பிரதிநிதிகள் சிறப்பிடம் பெற்றனர்.

சென்னையில் மூன்றாவது மாநாடு

1886 டிசம்பர் மாதம் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரசின் இரண்டாவது மாநாட்டில் சென்னையிலிருந்து 47 பிரதிநிதிகள் சென்று கலந்து கொண்டனர். அவர்களுள் ஜி.சுப்பிரமணிய ஐய்யர், எ.சுப்பிரமணிய ஐய்யர், எ.ஏ.சுவாமிநாத ஐய்யர், கேசவப்பிள்ளை, பி.ரெங்கைய நாயுடு, பி.அனந்தாச்சாரி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். காங்கிரசின் மூன்றாவது மாநாடு 1887 டிசம்பரில் சென்னை நகரில், தற்போது ஆயிரம் விளக்கு என்றழைக்கப்படும் பகுதியில் மக்கீ தோட்டம் என்னுமிடத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பக்ருதீன் தியாப்ஜியின் தலைமையில் கூடிய அம்மாநாடு முதன் முறையாகத் திறந்த வெளித் திடலில் பிரத்யேகமாக அமைக்கப்பட்ட அலங்காரப் பந்தலில் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதில் சென்னை மாநிலத்தின் சார்பாக 362 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சென்னை பட்டதாரிகள் சங்கம், சென்னை மகாஜன சபை, திருவல்லிக்கேணி இலக்கிய சங்கம், தென்னிந்திய வர்த்தகக் கம்பெனி, சென்னை மெட்டல் கம்பெனி, அஞ்சுமான் முப்த இலம், புரசைவாக்கம் இந்து நிதி, சாணார் முன்னேற்ற சங்கம் ஆகிய பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கேற்றனர். சென்னை மாநாட்டின் ஒரு சிறப்பு அம்சம்

குறிப்பு

அதன் செலவின் பெரும்பகுதி பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட்டதாகும். மாநாடு வரவேற்புக் குழுச் செயலரும் இந்து பத்திரிகை நிர்வாகியுமான மு.விஜயராகவாச்சாரியார் தமிழில் எழுதிய காங்கிரஸ் வினாவிடை" என்ற சிறு நூல் மலிவு விற்பனையில் விற்பனை செய்யப்பட்டு, அதனால் கிடைத்த நிதியும் மாநாட்டுச் செலவுக்குப் பயன்படுத்தப்பட்டது. இராஜா சர்.டி.மாதவராவ் வரவேற்புக் குழுத் தலைவராகப் பணியாற்றி மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக் கொடுத்தார். இராவ்சாகிப் மூக்கணாச்சாரி தமிழில் பேசி அனைவரது பாராட்டையும் பெற்றார். அப்போது சென்னை கவர்னராயிருந்த கன்னிமாரா பிரபு சென்னை மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் அனைவருக்கும் சிறப்பு விருந்தளித்துச் சிறப்பித்தார்.

துவக்ககால காங்கிரசோடு தமிழ்நாடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. 1887க்குப் பின்னர் 1894, 1898, 1908, 1923, 1927 ஆகிய ஆண்டுகளில் காங்கிரஸ் மாநாடு சென்னை நகரில் நடைபெற்றது. 1920 கௌகாத்தி காங்கிரஸ் மாநாட்டில் தலைவர் சி.பி.விஜயராகவாச்சாரியும், 1926 கௌகாத்தி காங்கிர மாநாட்டுத் தலைவர் எ.சீனிவாச ஐய்யங்காரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களே. துவக்க கால தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் ஆங்கிலக் கல்வி பெற்ற செல்வமும் செல்வாக்குமிக்க அரசாங்க விசுவாசிகளாகவே இருந்தனர். விக்டோரியா மகாராணியின் மறைவின் போதும் (1901) அவர்களது அரசு விசுவாசம் தெளிவாக வெளிப்பட்டது. இந்துவும் சுதேசமித்திரனும் தமிழ் நாட்டு மக்களின் கருத்துக்களைப் பிரதிபலித்தன. அவை அவ்வப்போது அரசாங்கத்தின் நோக்கையும் போக்கையும் கண்டிக்காவிட்டாலும் குறை கூறவே செய்தன. இந்நூற்றாண்டின் துவக்கத்தில் நிகழ்ந்த வங்கப் பிரிவினையும் (1905), ஜப்பான் இரஷ்யாவைத் தோற்கடித்த நிகழ்ச்சியும் (1904-1905) தமிழ் நாட்டின் அரசியல் விழிப்புணர்ச்சிக்குப் புதிய பரிமாணத்தைத் தந்தன.

தமிழ்நாட்டு மிதவாதிகள்

கோபால கிருஷ்ண கோகலேயைப் பின்பற்றியவர்கள் காங்கிர மிதவாதிகள் என்றழைக்கப்பட்டனர். கோகலேயின் வலக்கரமாகத் திகழ்ந்த தமிழ் நாட்டைச் சேர்ந்த வி.எ.சீனிவாச சாஸ்திரி மிதவாதிகளுக்கெல்லாம் மிதவாதியாக விளங்கினார். அவரைப் போன்றே பி.எ.சிவகாமி ஐய்யரும், வி.கிருஷ்ணசாமி ஐய்யரும், டி.ஆர்.வெங்கட்ராம சாஸ்திரியும், இந்தியன் ரெவ்யூ" பத்திரிக்கை ஆசிரியரான ஜி.ஏ.நடேசனும் தமிழ் நாட்டின் தலைசிறந்த மிதவாதிகளாவர். அவர்கள் அனைவரும் பிராமண மத்திய தர வகுப்பைச் சார்ந்தவர்களாகவே இருந்தனர். பெரும்பாலும் வக்கீல் தொழிலை மேற்கொண்டிருந்தனர். தமிழ்நாட்டு மிதவாதிகள் அரசாங்க ஆதரவாளர்கள். மார்லி-மிண்டோ சீர்திருத்தத்தின் (1909) விளைவாக ஏற்படுத்தப்பட்ட சென்னை சட்டமன்றத்தில் மிதவாதிகள் இடம் பெற்றனர். வி.கிருஷ்ணசாமி ஐய்யரும், பி.எ .சிவகாமி ஐய்யரும் 1914க்கு முன் சென்னை மாநில கவர்னர் ஆட்சிக் குழுவில் இடம் பெற்ற முக்கிய மிதவாதத் தலைவர்களாவர். 1917 ஆகஸ்டு 20

குறிப்பு

ஆம் தேதி வெளியிடப்பட்ட மாண்டேகுவின் அறிக்கையைத் தமிழ்நாட்டு மிதவாதிகள் ஆர்வத்துடன் ஆதரித்தனர். அதேபோன்று இரட்டை ஆட்சியையும் ஏற்றுக் கொண்டனர். சீனிவாச சாஸ்திரி போன்ற மிதவாதத் தலைவர்கள் ரௌலட் சட்டத்தை எதிர்த்து சத்தியாகிரகத்தினின்றும் ஒதுங்கியே நின்றனர். ஒதுங்கி நின்றதோடு மட்டுமன்றி அந்நேரடி நடவடிக்கையைக் கண்டிக்கவும் செய்தனர். அதனால் தான் காந்தி தனது ரௌலட் சத்தியாகிரகத்துக்குத் தமிழ்நாட்டு தீவிரவாதிகளின் ஆதரவை நாட வேண்டியதாயிற்று என்கிறார் டேவிட் அர்னால்டு.

தமிழ்நாட்டுத் தீவிரவாதிகள்

பாலகங்காதர திலகரைப் பின்பற்றியவர்கள் தீவிரவாதிகள் என்றழைக்கப் பட்டனர். சேலம் விஜயராகவாச்சாரியைத் தமிழ் நாட்டுத் தீவிரவாதத்தின் தந்தை எனக் கூறலாம். அவரது பாசறையில் பயிற்சி பெற்றவர்தான் சி.இராஜகோபாலாச்சசாரி. சேலத்தைத் தென்னாட்டின் பூனா எனக் கருதிக் கொண்டு திலகர் அடிபற்றித் தமிழ் நாட்டுத் தீவிரவாதிகள் செயல்பட்டனர். சென்னையில் டி.எம்.நாயர், எ.கஸ்தூரிரங்க ஐய்யங்கார், ஏ.இராமசாமி ஐய்யங்கார், டி.ரெங்காச்சாரி ஆகியோர் செல்வாக்கு மிக்கத் தீவிரவாதிகளாகத் திகழ்ந்தனர்.

வங்காளப் பிரிவினையின் விளைவாக எழுந்த தேசிய இயக்கத்தால் பெரிதும் கவரப்பட்ட வ.உ.சிதம்பரம் பிள்ளை தூத்துக்குடியில் சுதேசி கப்பல் கம்பெனி ஒன்றை 1906 நவம்பரில் துவக்கினார். 1907 ஆம் ஆண்டில் நடைபெற்ற சூரத் காங்கிரசுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்நாட்டுத் தீவிரவாதிகளைத் திரட்டி வருமாறு வ.உ.சிதம்பரம் பிள்ளைக்கு அரவிந்த்கோஷ் கொடுத்த தந்தியைச் சிரமேற்கொண்டு தமிழ் நாட்டுத் திலகரான அவர் சென்னை சென்று சுப்பிரமணிய பாரதியாருடனும், மண்டையம் சீனிவாசாச்சாரியுடனும் கலந்து பேசித் தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளை சூரத் மாநாட்டுக்கு அழைத்துச் சென்றார். சுதேந்திரநாத் எத்திராஜ், திருவல்லிக்கேணி கிருஷ்ணமாச்சாரி, பாரதியார், வ.உ.சிதம்பரம் பிள்ளை, சீனிவாசராகவாச்சாரி, சக்கரைச் செட்டியார் ஆகிய தமிழ் நாட்டுத் தீவிரவாதப் பிரதிநிதிகள் திலகரைச் சூழ்ந்து கொண்டு அவருக்குப் பாதுகாப்பளித்தனர். "தமக்கு எத்தனை அடிபட்டபோதும் திலகரைக் காக்க வேண்டுமென்று அசையாது நின்ற இந்த சென்னை பிரதிநிதிகளின் தீரத்தன்மையை எண்ணும் போது உடல் புல்லரித்து மிகுந்த மகிழ்ச்சி உண்டாக்கியது" என்று அந்த அனுபவத்தைப் பற்றி எழுதியுள்ளார் பாரதியார்.

1908 பிப்ரவரி மாதம் கோரல் தொழிற்சாலை வேலை நிறுத்தத்தில் வ.உ.சிதம்பரம் பிள்ளை சம்பந்தப்பட்டதும், மார்ச் மாதம் தடை உத்தரவை மீறி அவரும் சுப்பிரமணிய சிவாவும் பொதுக் கூட்டத்தில் பேசியதும் அவர்கள் இருவரும் கைது செய்யப்படக் காரணமாயின. அவர்கள் கைதானதை அடுத்து தூத்துக்குடியிலும், திருநெல்வேலியிலும் வன்முறைக் கலவரங்கள் ஏற்பட்டுத் துப்பாக்கிச்

குறிப்பு

சூட்டில் முடிந்தது. 1911 ஜூன் 11 ஆம் தேதி வாஞ்சிநாதன் திருநெல்வேலி மாவட்டத் துணைக் கலெக்டரை மணியாச்சி இரயில் சந்திப்பு நிலையத்தில் சுட்டுக் கொன்றார். வன்முறை நிகழ்ச்சிகளை ஒடுக்க அரசாங்கம் மேற்கொண்ட அடக்குமுறையின் விளைவாகத் தமிழ்நாட்டுத் தீவிரவாதிகள் மறைமுகமாகச் செயல்படத் துவங்கினர். அவர்களில் சி.சுப்பிரமணிய பாரதியும், வ.வே.சுப்பிரமணிய ஐய்யரும், நீலகண்ட பிரம்மச்சாரியும், சுதேசி பத்மநாப ஐய்யரும், சுப்பிரமணிய சிவாவும் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழ்நாட்டு 'தேசிய போராளிகள்"

மிதவாதிகள், தீவிரவாதிகள் ஆகியோரின் சட்டரீதியான நடவடிக்கைகளைக் கூட பிரிட்டிஷ் அரசாங்கம் முறியடித்த போது தீவிரவாதிகளில் சிலர் பயங்கரவாதிகளாயினர் (வுநசசழசளைவள). மிதவாதிகளிடமிருந்து தீவிரவாதிகள் தோன்றியது போன்று தீவிரவாதிகளிடமிருந்து பயங்கரவாதிகள் உருவாயினர். இவர்களில் சிலர் 1905-ல் இலண்டனில் "ஹோம் ரூல் லீக்" என்ற அமைப்பையும், 1906-ல் இந்தியா விடுதி" என்ற முகாமையும் அமைத்தனர். தமிழ்நாட்டைச் சேர்ந்த வ.வே.சுப்பிரமணிய ஐயரும், திருச்சி டாக்டர் டி.எஸ்.எஸ்.இராஜனும், எம்.பி.டி.ஆச்சாரியாவும் இப்பயங்கரவாதப் பாசறையில் பயிற்சி பெற்றோர் ஆவர். வெள்ளை அதிகாரிகளைக் கொன்று அந்நிய ஆட்சியாளர்களிடையே பயத்தை ஏற்படுத்தி தக்க தருணத்தில் வன்முறைக் கிளர்ச்சி செய்து, இந்தியாவை விடுவிப்பது இவர்களது குறிக்கோளாகும்.

வ.வே.சு.ஐயர்

பாரிஸ்டர் படிப்புக்காக இலண்டன் சென்ற வ.வே.சு.ஐயர் பயங்கரவாதியானார். இந்தியா விடுதி"யில் தங்கியிருந்த இவர் பிற பயங்கரவாதிகளுடன் சேர்ந்து இந்திய விடுதலைக்காக பிரிட்டிஷ் அரசை எதிர்த்து ஆயுதப் புரட்சியை ஏற்படுத்தத் திட்டமிட்டார். 1908ல் இவர்களோடு இந்தியா விடுதியில் தங்கியிருந்த மதன்லால் திங்கரா என்ற இந்திய பயங்கரவாதி கர்ஸான் வாலி என்ற பிரிட்டிஷ் அதிகாரியைச் சுட்டுக் கொன்றதையடுத்து இந்தியா விடுதி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தீவிர கண்காணிப்புக்குள்ளாகியது. பயங்கரவாதிகள் தங்களது பாசறையை இலண்டனிலிருந்து பாரிசுக்கு மாற்றினர். வ.வே.சு. ஐயர் வீரசவார்க்கரின் 1857 முதலாவது இந்திய சுதந்திரப் போராட்டம்" என்ற நூலை மராத்தியிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அரசாங்கத் தடையை மீறி, உலகின் பல பகுதிகளுக்கும் அனுப்பினார். "தியாகப் பலிக்கு ஆயத்தமாகுங்கள், பாரத மாதா அழைக்கின்றாள், 1857 திரும்புகிறது" என்ற துண்டுப் பிரசுரங்களுடன் புத்தகங்கள் தாங்கிய பெட்டி ஒன்றைப் பாண்டிச்சேரிக்கு அனுப்பினார். ஐயர் இரஷ்யாவுக்குச் சென்று வெடிகுண்டு தயாரிக்கும் முறையைக் கற்றுக் கொண்டு புதுவைக்கு வந்தார் (1910).

குறிப்பு

புதுவையில் தஞ்சையில் புகுந்த ஐயர் தர்மாலயம்" என்ற அமைப்பை ஏற்படுத்தி பயங்கரவாதப் புரட்சியாளர்களுக்குக் குத்துச்சண்டை, மல்யுத்தம், கத்திச்சண்டை, துப்பாக்கிச் சுடல் ஆகியவற்றில் பயிற்சி அளித்து வந்தார். புதுவையில் புகலிடம் பெற்றிருந்த மற்றொரு தமிழ்நாட்டுப் பயங்கரவாதியான நீலகண்ட பிரம்மச்சாரியைப் பார்க்கச் சென்ற இளைஞர் வாஞ்சிநாதனுக்குப் பிரௌனிங்" கைத்துப்பாக்கியால் சுடுவதற்குப் பயிற்சி அளித்தார் வ.வே.சு.ஐயர்.

14.4. வாஞ்சிநாதன்

செங்கோட்டை இரகுபதி ஐயரின் மகனான வாஞ்சிநாதன் திருவிதாங்கூரிலுள்ள புனலூரில் அரசாங்கக் காட்டிலாகாவில் பணிபுரிந்து வந்தார். வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா போனற் தூய்மையான தேசியவாதிகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளால் வெள்ளை அதிகாரிகளுக்கெதிராக வெறுப்பையும், வஞ்சத்தையும் வளர்த்துக் கொண்டார் வாஞ்சிநாதன். அரசாங்க அடக்குமுறைக்குக் காரணமான நெல்லை மாவட்டக் கலெக்டர் இராபர்ட் வில்லியம் ஆஷ் (சுழடிநசவ றுடைடயைஅ னு.நுவாஉழரசவ யுளாந) என்ற அதிகாரியைக் கொல்லத் திட்டமிட்டார். புதுவையிலிருந்த நீலகண்ட பிரம்மச்சாரியை சந்தித்தார். வ.வே.சு.ஐயரிடம் துப்பாக்கி சுட பயிற்சி பெற்றார். 1911 ஜூன் 17 ஆம் தேதி கொடைக்கானலுக்குச் செல்வதற்காக நெல்லையிலிருந்து புகைவண்டியில் தன் மனைவியுடன் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்த ஆஷை மணியாட்சி புகைவண்டி நிலையத்தில் "பிரௌனிங்" கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு தன்னையும் சுட்டுக் கொண்டு உயிர்த்தியாகம் செய்தார் வாஞ்சிநாதன்.

நீலகண்ட பிரம்மச்சாரி

நீலகண்ட பிரம்மச்சாரி ஆஷ் கொலை வழக்கில் குற்றவாளியாகக் கருதப்பட்டு ஏழாண்டு கால சிறைத் தண்டனை பெற்றார். இவர் புதுவையில் தஞ்சம் புகுந்திருந்த போது 1910 ஏப்ரல் 10 ஆம் தேதி பாரத மாதா சங்கம்" என்ற அமைப்பை ஏற்படுத்தினார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அந்நிய அதிகாரிகளைக் கொன்று இந்தியாவுக்கு சுயராஜ்யம் பெறுவதே அதன் நோக்கமாகும். இச்சங்க உறுப்பினர்கள் காளி சிலைக்கு முன் நின்று கொண்டு தலைவரின் ஆணைக்குக் கட்டப்பட்டு எதையும் தியாகம் செய்யத் தயாராயிருப்பதாக ஆள்காட்டி விரலை அறுத்து இரத்தத்தில் தோய்த்துக் கையொப்ப மிட்டனர். இரகசிய சதி வேலைகளில் ஈடுபட்டனர். சங்கேத மொழியில் கடிதங்களை எழுதிக் கொண்டனர்.

நீலகண்ட பிரம்மச்சாரியின் தலைமையில் இயங்கிவந்த பயங்கரவாத புரட்சிப் படை ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஆலோசனைகளையும், ஆயுத உதவியையும், பொருளுதவியையும் பெற்று

குறிப்பு

வந்தது. புதுவையில் சூரியோதயம்" என்ற பத்திரிக்கையை நடத்தி வந்தார். வாஞ்சிநாதன் ஆஷை சுட்டுக் கொல்வதற்கு முன்பு புதுவை வந்து நீலகண்ட பிரம்மச்சாரியை சந்தித்தார். நீலகண்ட பிரம்மச்சாரி மீது சாட்டப்பட்ட ஆஷ் கொலைக் குற்றம் நிரூபிக்கப்பட்டதாகக் கூறி இவருக்கு ஏழாண்டு கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

இவர் இரண்டாண்டு காலம் சிறையில் இருந்த பின்னர் 1914ல் பெல்லாரி சிறையிலிருந்து தப்பியோடிவிட்டார்! எனினும் இரண்டே நாட்களில் தர்மாவரம் புகை வண்டி நிலையத்தில் பிடிபட்டார். சிறையிலிருந்து தப்பியோடிய குற்றத்துக்காக இவருக்கு மேலும் ஆறுமாத கால சிறை தண்டனை விதிக்கப்பட்டது. சிறை மீண்ட நீலகண்ட பிரம்மச்சாரி கம்யூனிஸ்டாக மாறினார். வங்கப் போராட்டத்தில் ஈடுபட்டு 1922ல் பத்தாண்டு கால சிறைதண்டனை பெற்றார். வ.வே.சு.ஐயர் சேரன்மாதேவியில் பரத்துவாஜ ஆசிரமம்" ஒன்றை நிறுவியதைப் போன்று நீலகண்ட பிரம்மச்சாரியும் கர்நாடகத்திலுள்ள நந்திமலையில் ஆசிரமம் ஒன்றை அமைத்து அமைதியாக வாழ்ந்து தனது 88வது வயதில் உயிர் நீத்தார்.

மாடசாமி

ஒட்டப்பிடாரத்தில் பிறந்த மாடசாமி வ.உ.சியின் வலக்கரமாக இருந்து சட்டப் பூர்வமாக நடத்தப்பட்ட சுதேசிக் கிளர்ச்சியில் பங்கேற்றார். பின்னர் வாஞ்சிநாதன் சார்ந்திருந்த பயங்கரவாதப் படையில் சேர்ந்தார். ஆஷ் கொலைக்குப் பிறகு தலைமறைவாகி விட்டார். இவரைக் கைது செய்ய பகீரதப் பிரயத்தனம் செய்யப்பட்டது. அவரது வீட்டிலிருந்த பொருள்களும் அவருக்குச் சொந்தமான நிலங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. ஒட்டப்பிடாரம் மாடசாமி பாண்டிச்சேரி, சிங்கப்பூர் வழியாக ஜெர்மனிக்குச் சென்றுவிட்டதாகக் கருதப்படுகிறது.

ஆச்சாரியா

எம்.பி.டி.ஆச்சாரியா சென்னை திருவல்லிக்கேணியில் வாழ்ந்து வந்த மைசூரைச் சேர்ந்த மண்டயம் குடும்பத்தைச் சார்ந்தவர். இவரது முழுப் பெயர் மண்டயம் பிரதிவாதி திருமலாச்சாரியார் ஆகும். இவர் இலண்டன் இந்தியா விடுதி"யில் வ.வே.சு.ஐயர், டி.எஸ்.எஸ்.இராஜன் ஆகியோரோடு தங்கி பயங்கரவாதப் புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். இவர் தூத்துக்குடி குருநாத ஐயர், டாக்டர் செண்பகராமன் ஆகியோருடன் சேர்ந்து பெர்லின் முகாமிலிருந்த புரட்சியாளரிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தார். பட்டதாரியான ஆச்சாரியா பெர்லின் முகாமில் இருந்து கொண்டு பயங்கரவாத ஆயுதப் புரட்சிவழி அந்நிய ஆதிக்கத்திலிருந்த இந்தியாவை விடுவிக்க முயன்றார்.

குறிப்பு

குருநாத ஐயர்

தூத்துக்குடி குருநாத ஐயர் போலீஸ் இலாகாவில் தலைமைக் காவலராக பணியாற்றியவர். வ.உ.சி. நடத்திய சுதேசி இயக்கத்தில் பங்கேற்பதற்காக வேலையைத் துறந்தார். வ.உ.சி. கைதானதையொட்டி நெல்லை நகரில் நடைபெற்ற கலவரத்தில் ஈடுபட்டு, அரசாங்கக் கட்டிடங்களுக்குத் தீ வைத்ததாக குருநாத ஐயர் கைது செய்யப்பட்டார். வழக்கு நடந்தது. சிறை தண்டனை வழங்கப்பட்டது. சிறை மீண்ட இவர் பெர்லின் சென்று அங்கு தங்கியிருந்த பயங்கரவாதப் புரட்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டு இந்திய விடுதலைக் கிளர்ச்சிக்குப் பாடுபட்டதாகக் கருதப்படுகிறது.

டாக்டர் செண்பகராமன்

நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த டாக்டர் செண்பகராமன் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தார். பிரிட்டனுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்ய சில அமைப்புகளை ஏற்படுத்தினார். புரோ இந்தியா" என்ற பெயரில் பத்திரிக்கை நடத்தினார். ஆங்கிலம் தவிர பிற மொழிகளிலும் பத்திரிக்கை நடத்தியவர். பெர்லின் முகாமில் இருந்தவர்களில் மிகுந்த செல்வாக்குப் பெற்றவர். ஜெர்மன் அதிபரான கெய்சரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். லெனினை சந்தித்து அவரது ஆதரவைப் பெற்றவர். முதல் உலகப் போரின் போது ஜெர்மனியின் துணை கொண்டு பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவிலிருந்து அகற்ற முற்பட்டவர். "எம்டன்" என்ற நீர்மூழ்கிக் கப்பல் மூலம் சென்னை உயர்நீதிமன்றக் கட்டிடத்தைக் குறிவைத்து குண்டு வீசியவர் (1914). இந்தியப் புரட்சியாளர்கள் ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலில் தற்காலிக இந்தியக் குடியரசு" ஒன்றை நிறுவிய போது அதன் அமைச்சரவையில் அயல்நாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டார். ஆயுத ஆக்கிரமிப்பால் இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட அந்நிய ஆட்சியை ஆயுத ஆக்கிரமிப்பால் அகற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இந்திய விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் "எம்டன் செண்பகராமன்! தமிழ்நாட்டுப் பயங்கரவாதிகளின் வன்முறை ஆயுதப் புரட்சி மூலம் இந்தியாவுக்கு விடுதலை பெற்றுத்தர வேண்டும் என்ற கனவு நனவாகவில்லை. எனினும் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தேசிய பயங்கரப் புரட்சியாளர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

14.5. பாரதியார்

1904 ஆம் ஆண்டு பாரதியார் "சுதேசமித்திரன்" பத்திரிக்கையின் துணை ஆசிரியர் பொறுப்பேற்றதிலிருந்து அவருடைய பத்திரிக்கை வாழ்க்கையோடு அரசியல் வாழ்க்கையும் துவங்கியது எனலாம். வங்கப் பிரிவினையை எதிர்த்து வங்கத்தைப் பாராட்டி அவர் எழுதிய முதல்

குறிப்பு

கவிதையை அப்பத்திரிக்கையில் வெளியிட்டார் (1905 செப்.15). வாரணாசி காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டு சென்னை திரும்பும் முன்னர் கல்கத்தா சென்று சுவாமி விவேகானந்தரின் பிரதம சிஷ்யையான சகோதரி நிவேதிதையை சந்தித்தார். வங்கப் பிரிவினை எதிர்ப்பிலே பிறந்த சுதேசி இயக்கத்தை ஆர்வத்தோடு வரவேற்றார் பாரதியார். பக்கிம் சந்திரரின் "வந்தே மாதரம்" பாடலைத் தமிழில் மொழி பெயர்த்து சக்ரவர்த்தினி" மாத இதழில் வெளியிட்டார். தாயே வந்தே மாதரம்" என்ற பாடலையும் புனைந்தார். ஜி.சுப்பிரமணிய ஐயர் சுதேசி இயக்க வளர்ச்சிக்கென நிதி திரட்டும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்ட போது அவரது நடவடிக்கையை ஆதரித்தும் பாராட்டியும் இந்தியா" பத்திரிகையில் எழுதினார். வ.உ.சி. வாங்கிய கப்பல்களை பாரத தேவி பெற்றெடுத்த இரண்டு தவப் புதல்வர்கள் என்று வர்ணித்தார்.

தமிழ் நாட்டுத் தீவிரவாதிகளின் பிரதிநிதியாகத் திகழ்ந்தவர் பாரதியார். அவரது இந்தியா பத்திரிக்கை தீவிரவாதக் கட்சியினரின் போர் முரசாக ஒலித்தது. 1906 டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்கத்தா காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டார் பாரதியார். அக்கூட்டத்தில் தலைவராக டெட் என்ற ஆங்கிலேயரை நியமிக்க வேண்டும் என்ற மிதவாதிகள் மேற்கொண்ட முயற்சியை மூடத்தனம்" என்று கண்டித்தார். அதே போன்று தீவிரவாதிகள் வெளிநாட்டுப் பொருள்களைப் புறக்கணிக்க வேண்டும் என்று கல்கத்தா காங்கிரசில் கொண்டு வந்த தீர்மானத்தை எதிர்த்த மிதவாதிகளையும் சாடினார். தென்னகத்துக்கு வருகை தந்த வங்கத்து தீவிரவாதிகளின் தலைவரான பிபின் சந்திரபாலரை பாரதியார் ஆந்திராவுக்குச் சென்று சந்தித்து சென்னைக்கு அழைத்து வந்தார் (1907 மே). லாலா லஜபதிராய் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட போது ஆங்கிலேய அரசாங்கத்தைக் கண்டித்தும், இராயின் தியாகத்தைப் பாராட்டியும், லஜபதிராய் துதி, லஜபதிராய் பிரவாபம் என்ற கவிதைகளைப் புனைந்தார். மிதவாதிகளைக் கேலி செய்தும், தீவிரவாதிகளைப் புகழ்ந்தும் பல பாடல்களை இயற்றினார் பாரதியார். சூரத் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டு திரும்பிய பாரதியார் அங்கு மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட அமளி பற்றி விரிவாக எழுதினார். "எங்கள் காங்கிர யாத்திரை" என்ற நூலை வெளியிட்டார். "புதிய கட்சியினரின் கோட்பாடுகள்" என்ற திலகரின் ஆங்கிலச் சொற்பொழிவைத் தமிழில் மொழி பெயர்த்தார்.

தேசிய தீவிரவாதிகள் கட்சியின் தென்னகச் செயலாளரான வ.உ.சி. தீவிரப் பிரச்சாரத்திலும் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்த போது அவரின் அழைப்பின் பேரில் நெல்லை கலெக்டர் விஞ்ச்சை சந்தித்ததை "தேசபக்தனுக்கு ஆங்கிலேயன் சொன்னது" ஆங்கிலேயனுக்கு தேசபக்தன் சொன்னது" என்ற தலைப்பில் பாடினார். வ.உ.சி., சிவா ஆகியோரைக் கைது செய்து சிறையில் அடைத்துப் பின்னர் அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்ட போது பாரதியார், நெல்லையிலேயே தங்கியிருந்து பல நாட்கள் நீதிமன்றத்திற்கே சென்று வழக்கு விசாரணையைக் கவனித்து வந்ததோடில்லாமல் வ.உ.சி., சிவா

குறிப்பு

ஆகியோருக்குச் சார்பாக சாட்சி சொல்லவும் தயாராகி இருந்தார். வழக்கு முடிந்தபின் வ.உ.சி.க்கு நாற்பதாண்டும், சிவாவுக்குப் பத்தாண்டும் சிறை தண்டனை விதிக்கப்பட்ட போது நீதிபதி பின்ஹேயின் தீர்ப்பை எதிர்த்தார் பாரதியார். அதற்காக இந்தியா" பத்திரிக்கை ஆசிரியரைக் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அப்பத்திரிக்கையின் அசிரியர் எம்.ஸ்ரீனிவாசன் கைது செய்யப்பட்டு ஐந்தாண்டுகள் சிறை தண்டனை பெற்றார். சிறை செல்வதைத் தவிர்க்க விரும்பிய பாரதியார் புதுச்சேரியில் தஞ்சம் புகுத்தார் (1908 ஜூன்).

தனது 27வது வயதில் புதுவை புகுந்த பாரதியார் சிதம்பரனாரும், சிவாவும் சிறையில் கொடுமைப்படுத்தப்பட்டதை அறிந்து குமுறினார், பதறினார், பாடினார். இந்தியாவிற்கு பிரிட்டிஷார் வழங்கிய மார்லி-மிண்டோ சீர்திருத்தத்தை கேலி செய்தார். வாஞ்சிநாதன் ஆஷைக் கொலை செய்த செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றார். அதை ஒரு துரதிஷ்டமான சம்பவம், எதிர்பாராத விபத்து" என்று வர்ணித்தார். ஆஷ் கொலையை வன்மையாகக் கண்டித்து எழுதினார் பாரதியார். அவருக்கு அரசியல் கொலையிலும், ஆயுதப் புரட்சியிலும் நம்பிக்கையில்லை. புதுவை வாசம் பாரதியாரை தேசியக் கவிஞராகவும், இலக்கியப் படைப்பாளியாகவும், உரைநடை, கட்டுரையாளராகவும் தத்துவ ஞானியாகவும், மனிதாபிமான முனிவராகவும் மாற்றியது. புதுவைப் புகலிட வாழ்க்கையில் சலிப்புற்று தனது மனைவி மக்களோடு தமிழ்நாடு திரும்பிய பாரதியார் கைது செய்யப்பட்டு கடலூர் சிறையில் அடைக்கப்பட்டார் (1918 டிசம்பர்). நோய்வாய்ப் பட்ட பாரதியார் சில வாரங்களில் நிபந்தனையின் பேரில் விடுவிக்கப்பட்டார். 1919 மார்ச் மாதம் ரௌலட் சட்டம் எதிர்ப்பு பற்றித் தமிழ்நாட்டுத் தலைவர்களுடன் பேச சென்னை வந்த காந்தியடிகளை சந்தித்துப் பேசினார் பாரதியார். மிதவாதியான பாரதியார் தீவிரவாதியாக மாறி பயங்கரப் புரட்சி வழியைத் தவிர்த்து அகிம்சாவாதியானார். அவரது தேசபக்திப் பாடல்கள் மக்களிடையே நாட்டு விடுதலையுணர்ச்சிப் பெருக்கை ஏற்படுத்தின.

14.6. வ.உ.சிதம்பரம்

வங்காளப் பிரிவினையின் விளைவாக எழுந்த சுதேசிய இயக்கம் தமிழ்நாட்டுக்கு அளித்த தவப்புதல்வன் வ.உ.சிதம்பரம் பிள்ளை. கோவில்பட்டி தாலுக்காவிலுள்ள ஒட்டப்பிடாரம் என்ற சிற்றூரில் பிறந்த வ.உ.சி., வீரபாண்டிய கட்டபொம்மனிடம் தலைமை அமைச்சராகப் பணியாற்றிய தானாபதிப் பிள்ளையின் குடும்ப வழித்தோன்றல் ஆவார். தூத்துக்குடியில் வழக்கறிஞராக இருந்த அவர் இராமகிருஷ்ணானந்தர், அபேதானந்தர், பிரமானந்தர் ஆகிய வங்கத் துறவிகளோடு தொடர்பு கொண்டு சுதேசி இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். கடல்வழி வந்த வெள்ளை வியாபாரியை கடல் வழியே அனுப்ப வேண்டும் என்ற எண்ணத்தோடு 1882 ஆம் ஆண்டு இந்தியக் கம்பெனிகள் சட்டப்பட்டி 1906 அக்டோபர் 16ம் தேதி "சுதேசி ஸ்டீம்

குறிப்பு

நேவிகேசன் கம்பெனி" பதிவு செய்யப்பட்டது. காலியா", லாவோ" என்ற பெயருடைய இரண்டு கப்பல்களும், சரக்கு மூட்டைகளை ஏற்றுவதற்கு வசதியாக இரண்டு இயந்திரப் படகுகளும் வாங்கப்பட்டன. ஆங்கிலேய வியாபாரிகள், அரசாங்கம் ஏற்படுத்திய கடுமையான, கொடுமையான இடர்ப்பாடுகளுக்கிடையே கப்பல்களை ஓட்டினார் வ.உ.சி.

சுதேசி கப்பல் கம்பெனியை நிறுவியதோடு நில்லாமல் சுதேசி இயக்கத்தை பல தொழில் துறைகளுக்கும் விரிவுபடுத்தினார் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. தூத்துக்குடியில் தருமலங்க நெசவுச் சாலை, தேசிய பண்டக சாலை ஆகியவற்றைத் தோற்றுவித்தார். சென்னை நகரில் "சென்னை விவசாய-கைத்தொழில் சங்கம் லிமிடெட்" ஒன்றை நிறுவினார். தனது சுதேசப் பணிக்கு மக்களிடையே ஆதரவைத் திரட்ட வி.சர்க்கரைச் செட்டியார் தலைமையில் சென்னை நகரில் சுதேசி பிரச்சார சபையையும் அமைத்தார்.

1906 ஆம் ஆண்டு இறுதியில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் வ.உ.சி., இராஜாஜி, கஸ்தூரிரங்க ஐயங்கார், வெ.ராமலிங்கம்பிள்ளை, எ.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். 1907 சூரத் காங்கிரசுக்குத் தீவிரவாதிகளை அதிக அளவில் அழைத்து வருமாறு அரவிந்தர் வ.உ.சிக்குக் கொடுத்த தந்தியை சிரமேற்கொண்டு தமிழ்நாட்டுத் திலகரான அவர் சென்னை சென்று பாரதியாருடனும், மண்டையம் சீனிவாசாச்சாரியுடனும் கலந்து பேசித் தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளை சூரத் மாநாட்டுக்கு அழைத்துச் சென்றார். சூரத் மாநாட்டுப் பந்தலில் ஏற்பட்ட இரகளையின் போது வ.உ.சி, துரைசாமி ஐயர், சுதேந்திரநாத் எத்திராஜ், திருவல்லிக்கேணி கிருஷ்ணமாச்சாரி, பாரதியார், சீனிவாசராகவாச்சாரி, சக்கரைச் செட்டியார் ஆகிய தமிழ் நாட்டுத் தீவிரவாதப் பிரதிநிதிகள் திலகரைச் சூழ்ந்து கொண்டு அவருக்குப் பாதுகாப்பளித்தனர். சூரத் மாநாட்டுப் பந்தலிலேயே தேசியத் தீவிரவாதிகள் தனிக் கட்சியைத் துவக்கி அக்கட்சிக்கு வங்காளத்துக்கு அரவிந்தரும், மகாராஷ்டிரத்துக்குத் திலகரும், சென்னை மாகாணத்துக்கு வ.உ.சியும் செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சூரத்திலிருந்து திரும்பிய வ.உ.சி., பிபின் சந்திரபாலர் விடுதலையான நாளை விமரிசையாகக் கொண்டாடத் திட்டமிட்டார். அதன்படி நெல்லை நகரில் வியத்தகு ஊர்வலத்தை நடத்தினார். வ.உ.சி. மாவட்ட மாஜிட்ரேட் கோர்ட் எதிரில், தாமிரபரணி ஆற்றங்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வ.உ.சியும், சுப்பிரமணிய சிவாவும் எழுச்சிப் பேருரையாற்றினர். வந்தே மாதரம் கோஷம் விண்ணைப் பிளந்தது. அழைப்பின் பேரில் நெல்லைக் கலெக்டர் விஞ்ச்சை சந்தித்தார். வ.உ.சியுடன் சிவாவும், பத்மநாப ஐயங்காரும் உடனிருந்தனர். பின்னர் இம்மூவரும் கைது செய்யப்பட்டனர். இராஜதுரோகக் குற்றம் சாட்டப்பட்டு வ.உ.சிக்கு 40 ஆண்டுகள் சிறைதண்டனை விதிக்கப்பட்டது. மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். இந்தியப் பத்திரிகைகள் கண்டனக் குரல் எழுப்பின. வ.உ.சியின்

குறிப்பு

மேல்முறையீடுகள் நிராகரிக்கப்பட்டன. எனினும் இலண்டன் பிரிவு கவுன்சிலில் வ.உ.சிக்கு அளிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை கடுங்காவல் தண்டனையாக மாற்றியது. வ.உ.சி. கோயமுத்தூர் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு அவர் அரக்கத்தனமான கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார். பின்னர் அவர் கேரள மாநிலத்திலுள்ள கண்ணனூர் மத்திய சிறைக்கு மாற்றப்பட்டார். அங்கும் அவர் மலச்சட்டி தூக்கினார். கல்லுடைத்தார், செக்கிழுத்தார். ஆஷ் கொலை செய்யப்பட்டதைத் தனக்குக் கிடைத்த "நற்செய்தி"யாகக் கருதினார் வ.உ.சி. 1912 டிசம்பர் இறுதியில் விடுதலை செய்யப்பட்டு விட்டார் வ.உ.சி. எனினும் அவரது சுதேசிக் கப்பல் கம்பெனியைக் காப்பாற்ற முடியவில்லை அது கவிழ்ந்துவிட்டது அதோடு தமிழ்நாட்டு அரசியலிலே வ.உ.சி., சகாப்தம் முடிந்தது எனலாம்" எனக் கருதுகிறார் ம.பொ.சி.

சென்னை ஜனசங்கம்

திலகரின் விருப்பத்துக்கேற்ப தமிழ்நாட்டு சுதேசித் தலைவர்கள் 1908 ஜனவரி 11 ஆம் தேதி சென்னை திருவல்லிக்கேணி கங்கை கொண்டான் மண்டபத்தில் சென்னை ஜனசங்கம் என்ற அமைப்பைத் துவக்கினர். இந்த அமைப்பைத் துவக்கப் பாரதி பெரிதும் காரணமாக இருந்தார். வ.உ.சி. இச்சங்கத்தின் தலைவராகவும், மண்டயம் எ.சீனிவாசாச்சாரி, சி.எ.ஆரியா, கே.வெங்கட்ரமணராவ் ஆகியோர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பல மாணவர்கள் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்ந்தனர். சென்னை ஜனசங்கத்தின் நோக்கங்கள்: 1) சுதேசிப் பொருட்களைப் புறக்கணித்தல் 2) தேசியக் கல்வியைப் பரப்புதல் 3) பள்ளிகளில் இளைஞர்களுக்கு உடற்பயிற்சி அளித்தல் 4) இளைஞர்களிடையே விழிப்புணர்வை உருவாக்கல் 5) சுதேசி இயக்கக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல் 6) சங்க உறுப்பினர்களை அதிகரித்தல். சென்னை ஜனசங்கம் 1912 வரை செயல்பட்டு தமிழ்நாட்டு சுதேசி இயக்கத்தை முன்கொண்டு சென்றது.

14.7. சுப்பிரமணிய சிவா

வ.உ.சியும் சிவாவும் தமிழ்நாட்டு சுதேசி இயக்கத்தின் இரட்டையர்களாகத் திகழ்ந்தார்கள். வ.உ.சியைப் போன்றே சிவாவும் இராமகிருஷ்ண-விவேகானந்தா வேதாந்த இயக்கத்தில் ஈடுபட்டு, அதன் வழி சுதேசி இயக்கத்துக்கு ஈர்க்கப்பட்டவர். "சுதந்திரானந்தா" என்ற புனைப் பெயரை சூட்டிக் கொண்டவர் சிவா. மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த வத்தலக்குண்டு வாசியான இளைஞர் சிவா, தூத்துக்குடி வந்து வ.உ.சியுடன் இணைந்து செயல்படலானார். சுதேசி இயக்கப் பிரச்சாரத்தில் இவ்இருவரும் தீவிரமாகப் பங்கு கொண்டனர். பிபின் சந்திரபாலர் விடுதலை நாளை தடையை மீறி தாமிரபரணி பொதுக்கூட்டத்தில் பேசியதற்காக வ.உ.சியுடன் சிவாவும் கைது

செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு, பத்தாண்டுகள் சிறை தண்டனை பெற்றார். திருச்சி சிறையில் அடைக்கப்பட்ட சிவா பல கொடுமைகளுக்குள்ளானதோடு தொழுநோயால் பாதிக்கப் பட்டார். எனவே அவர் சேலத்தில் தொழுநோய் கண்ட கிரிமினல் குற்றவாளிகள் அடைக்கப்பட்டிருந்த சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார். சிறையிலிருந்து விடுதலையான சிவா தருமபுரி மாவட்டத்திலுள்ள பாப்பாரப்பட்டியில் பாரதி ஆசிரமம்" என்ற பெயரால் தேசபக்தர்களின் பாசறை ஒன்றை நிறுவி, இளம் தேசாபிமானிகளுக்கு நாட்டு விடுதலைப் போருக்கான பயிற்சி அளித்தார். பாரதியாரின் தேசியப் பாடல்களைப் பாடிச் செல்வதற்கென பாரத ஆசிரியப் பாடல் குழுவை அமைத்தார். சிவாஜி, தேசிங்குராஜன் ஆகிய மாவீரர்களின் வரலாற்றை நாடகங்களாக்கினார். ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சியைத் தூண்டும் வகையில் நாடக உரையாடல்களை எழுதினார். பாடியும், பேசியும், நடித்தும் மக்களிடையே விடுதலை உணர்வை ஊட்டி வந்தார் சிவா. அரசுக்கெதிராக செயல்பட்டார் என சிவா மீது நான்கு முறை (1908, 1921, 1922, 1924) குற்றம் சாட்டி வழக்கு தொடுத்து தண்டித்தது அரசாங்கம். 'தேச சேவையிலும் சரி, சிறைபட்டு இன்னலுற்ற தியாகத்திலேயும் சரி, சிவாவுக்கு இணையாக மற்றொரு தேசபக்தரைச் சொல்ல முடியாது" என்று புகழாரம் சூடியுள்ளார் ம.பொ.சி.

குறிப்பு

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

1. யார் வீரசவார்க்கரின் 1857 முதலாவது இந்திய சுதந்திரப் போராட்டம்" என்ற நூலை மராத்தியிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தது?

2. எப்பொழுது "சுதேசி ஸ்டீம் நேவிகேசன் கம்பெனி" பதிவு செய்யப்பட்டது?

3. யார் "சுதந்திரானந்தா" என்ற புனைப் பெயரை சூட்டிக் கொண்டன?

14.8. இராஜாஜி

இராஜகோபாலன் 1878 டிசம்பர் 8 ஆம் நாள் தருமபுரி மாவட்டம் ஓசூருக்கு அருகே தொரப்பள்ளி என்ற ஊரில் சக்ரவர்த்தி ஐயங்காருக்கும், சிங்காரம்மாளுக்கும் மூன்றாவது மகனாகப் பிறந்தார். நரசிம்மாச்சாரியும், சீனிவாசனும் இவருக்கு மூத்தவர்கள். தொரப்பள்ளியிலும், ஓசூரிலும் பள்ளிப் படிப்பை முடித்த இராஜகோபாலன் பெங்களூர் மத்திய கல்லூரியில் பட்டப் படிப்பையும் (1894), சென்னை மாநிலக் கல்லூரியில் சட்டப் படிப்பையும் (1897) முடித்தார். தனது 21வது வயதில் அலமேலு மங்கம்மாவைத் திருமணம் செய்து கொண்ட இராஜகோபாலன் 1900 இல் சேலத்தில் வழக்குரைஞர் தொழிலைத் துவக்கினார். பிரபலமடைந்தபின் இவர் சக்கரவர்த்தி

குறிப்பு

இராஜகோபாலாச்சாரியார், சி.ஆர்.ராஜாஜி என்று அழைக்கப்பட்டார். 'சேலத்து மாம்பழம்" என்பது இவரது செல்லப் பெயராகும்.

அரசியல் ஆர்வம்

இராஜகோபாலாச்சாரி சேலத்தில் வக்கீல் தொழில் பார்த்துக் கொண்டிருந்த போது அரசியல் ஆர்வம் ஏற்பட்டது. வங்காளப் பிரிவினையின் விளைவாக எழுந்த சுதேசி இயக்கம் இவரது கவனத்தைக் கவர்ந்தது. இவர் வ.உ.சி., வெ.இராமலிங்கம் பிள்ளை ஆகியோருடன் 1906 ஆம் ஆண்டு இறுதியில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டார். 1900களில் பாலகங்காதர திலகர் எழுப்பிய "சுதந்திரம் எனது பிறப்புரிமை" என்ற முழக்கம் இராஜகோபாலாச்சாரியை மிகவும் கவர்ந்தது. அதேபோன்று பாரதியின் நாட்டுப்பற்றுப் பாடல்கள் இவரைக் காந்தம் போல் ஈர்த்தன. வ.உ.சி. பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிக்கு எதிராக சுதேசி டீம் நேவிகேஷன் கம்பெனி (ளுறயனநளாை ளுவநயஅ யேஎபையவழைஎ ஊழஅியலெ)யைத் துவக்கிய போது இவர் நிதி வசூல் செய்தும், பங்குகளை வாங்கி நிதி உதவி செய்தும் ஊக்குவித்தார். சுப்பிரமணிய சிவா இவரது நண்பரானார். சென்னை சுதேசிகளில் ஒருவரானார்.

14.8.1. நகர்மன்ற சாதனைகள்

சேலத்தில் பிரபல வக்கீலாகப் புகழ் பெற்றிருந்த இராஜகோபாலாச்சாரி சேலம் நகர் மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (1911). பின்னர் அதன் தலைவராக இரண்டு ஆண்டுகள் (1917-1919) பணியாற்றினார். அப்போது அவர் 1) தீண்டாமை ஒழிப்புப் பணியில் தீவிர கவனம் செலுத்தினார் 2) அரிஜன் நகராட்சி மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உறுதுணையாக இருந்தார் 3) பிற்படுத்தப்பட்டோர் கல்வி வசதிக்கும், வளர்ச்சிக்கும் ஏற்பாடு செய்தார் 4) எதிர்ப்பை எதிர்க்கொண்டு சமபந்தி சாப்பாட்டை நடத்தி வைத்தார் 5)நகருக்கான பல நலத்திட்டங்களை நிறைவேற்றினார். இப்பணிகளுக்கிடையே தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்ட பி.வரதராஜுலு நாயுடுவின் சார்பாக வழக்கு மன்றத்தில் வாதாடினார் (1917). இந்த காலகட்டத்தில் இராஜகோபாலாச்சாரியின் தொழிலும் சேவையும் கைகோர்த்துச் சென்றன. 1919 ஆம் ஆண்டு சென்னையில் குடியேறி உயர்நீதி மன்ற வழக்குரைஞரானார். இந்த காலகட்டத்தில் இராஜாஜி அரிஜன சமத்துவத்துக்கு அடையாளமாக அவர்களுடன் "சமபந்தி போஜனம்" செய்தார். "இராஜாஜி அவர்களால்தான் திராவிட நாட்டில் சமபந்தி போஜனம் என்பதும், அதைவிடத் தீவிரமான சாதிபேதம் என்பதே இல்லாமல் யார் வீட்டில் யாரும் உணவு அருந்தலாம் என்ற தன்மையும் ஏற்பட்டது" என்று பதிவு செய்துள்ளார் பெரியார் ஈ.வெ.ரா (விடுதலை, 1972 டிசம்பர் 26). இராஜாஜி கலப்புத் திருமணத்தை ஆதரித்தார்.

குறிப்பு

14.8.2. விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்பு

சென்னைக்கு வந்த இராஜகோபாலாச்சாரி காந்தி துவக்கிய ரௌலட் அறப் போராட்டத்தில் பங்கேற்றார் வக்கீல் தொழிலுக்கு விடை கொடுத்தார். 1919 மார்ச் 30 ஆம் தேதியை அறப்போராட்ட நாளாக (Satyagraha Day) அறிவித்த காந்தி சென்னைக்கு வந்த போது (மார்ச் 17) இராஜகோபாலாச்சாரி, எ.கஸ்தூரிரங்க ஐயங்கார், சி.விஜயராகவாச்சாரியார் ஆகியோருடன் கலந்து ஆலோசித்த பின்னர் அறப்போராட்ட நாளை ஏப்ரல் 6-க்குத் தள்ளி வைத்தார் காந்தி. காந்தியை சந்தித்த பிறகு இராஜகோபாலாச்சாரி இராஜாஜி ஆனார்.

1921 ஆம் ஆண்டு இராஜாஜி காங்கிரஸ் செயற்குழு (Congress Working Committee) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதன் பொதுச் செயலராகச் செயல்பட்டார். 1922 இல் கூடிய இந்திய தேசிய காங்கிரஸ் கயா (Gaya) மாநாட்டில் இராஜாஜி கலந்து கொண்டார். இந்த மாநாட்டில் தான் காந்தியின் சட்டமன்றப் புறக்கணிப்பை எதிர்த்து மோதிலால் நேருவும், சி.ஆர்.தாசுவும் காங்கிரசை விட்டு வெளியேறினர். காங்கிரஸ் "மாற்றம் வேண்டுவோர்" (Pro-Changes), மாற்றம் வேண்டாதோர் (ழே-ஊாயபெநசள) என்று இரண்டு கட்சியினராகப் பிரிந்தனர். காந்தியைப் பின்பற்றி சட்டமன்றப் புறக்கணிப்பைத் தொடர வேண்டுமென்ற மாற்றம் வேண்டாதோர்" பக்கம் உறுதியாக நின்றார் இராஜாஜி. 1923 இல் காங்கிரஸ் பிளவுபட்ட போது இராஜாஜி சட்டமறுப்பு இயக்க விசாரணைக் குழு (Civil Disobedience Enquiry Committee) உறுப்பினரானார். அதிலிருந்து அவர் தேசிய அரசியலில் பிரதான பங்கேற்கலானார். இராஜாஜி 1924 ஆம் ஆண்டு திருச்செங்கோட்டுக்கு அருகே புதுப்பாளையத்தில் காந்தி ஆசிரமம் ஆரம்பித்து கிராம மக்கள் முன்னேற்றத்துக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

தமிழ்நாட்டுத் தலைமை

காந்தி துவக்கிய ஒத்துழையாமை இயக்கத்தின்போது (Non Co-operation Movement, 1920-1922) இராஜாஜி தமிழ் நாட்டில் அந்த இயக்கத்துக்குத் தலைமை தாங்கி சிறப்பாக நடத்தினார். 1920 ஆம் ஆண்டு இறுதியில் நடக்கவிருந்த சட்டமன்றத் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்று இராஜாஜியும், டி.எஸ்.எஸ்.ராஜனும் தமிழ்நாடு மாவட்டங்களில் சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டனர். 1921 ஜனவரி 10 ஆம் தேதி சென்னைக்கு வந்த கானாட் கோமகனை (Duke of Connaught)ப் புறக்கணிக்கப் பிரச்சாரம் செய்தார். அதன் பின்னர் 1930 ஜனவரி 26 ஆம் நாளன்று தேசமெங்கும் பூரண சுதந்திர நாள்

குறிப்பு

கொண்டாடப்பட்ட போது, இராஜாஜியும் அவரது அணுக்க நண்பர் மதுரை ஏ.வைத்தியநாத ஐயரும் இக்கொண்டாட்டம் தமிழ்நாட்டில் கோலாகலமாகக் கொண்டாடியதில் பிரதான பங்கேற்றனர். அதன்பின் இவ்விருவரும் மதுரையில் பின்னவர் வீட்டில் சந்தித்து தமிழ் நாட்டில் உப்புச் சத்தியாக்கிரகம் மேற்கொள்வதற்கான திட்டத்தை முடிவு செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார் பி.எ .சந்திரபிரபு. இராஜாஜியின் தலைமையில் தமிழ் நாட்டில் உப்பு அறப்போராட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது. இராஜாஜி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார் (ஏப்ரல் 30).

1937க்கும் 1947க்கும் இடைப்பட்ட 10 ஆண்டுகளில் இராஜாஜியின் அரசியல் வாழ்க்கையில் பல அலைகள் எழுந்து அடங்கின் பல மாற்றங்கள் ஏற்பட்டன. சிறையிலிருந்து விடுதலையான இராஜாஜி (1934 பிப்ரவரி 6) தனது நிலையை மாற்றிக் கொண்டு மத்திய மாநில சட்டமன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் பங்கேற்க வேண்டும் என்று கூறினார். "மாற்றம் விரும்பாதவராக" அவர் "மாற்றம் விரும்புபவராக" மாறிவிட்டார்! 1937 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெற்று, சென்னை இராஜதானியின் முதல் காங்கிர பிரதமர்" (முதலமைச்சர்) ஆனார் (1937-1939). அவரது மொழிக் கொள்கை தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்குக் காரணமாயிற்று. இந்தி கற்றுக் கொண்டால் இந்திய அளவில் வேலை வாய்ப்புகளைப் பெறலாம் என்ற எண்ணத்தில் இந்தியை பாடமொழியாக்கினார் இராஜாஜி என்று குறிப்பிட்டுள்ளார் நம்பி ஆரூரான். இந்தியத் தலைவர்களைக் கலந்து ஆலோசிக்காமல் பிரிட்டிஷ் அரசாங்கம் ஜெர்மனி மீது போர் தொடுத்ததால் காங்கிரஸ் மத்திய-மாநில அரசாங்கங்களிலிருந்து விலகுவதென முடிவெடுத்தது. அந்த முடிவின்படி இராஜாஜி அமைச்சரவை 1939 அக்டோபர் 29 ஆம் தேதி பதவி விலகியது. இந்தியப் பாதுகாப்பு விதிகளின் (Defence of India Rules)படி இராஜாஜி கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் அடைக்கப்பட்டார்.

போராட்டப் புறக்கணிப்பு

சிறையிலிருந்து விடுதலையாகி வந்த இராஜாஜி தன் அரசியல் நிலைப்பாட்டை முற்றிலுமாக மாற்றிக் கொண்டார். பிரிட்டனுக்கு இந்தியா ஆதரவு கொடுப்பது பற்றி காங்கிரஸ் மேலிடத்துடன் கருத்து வேறுபாடு கொண்டார். பிரச்சனையை பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றார். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை (Quit India Movement) எதிர்த்தார் அந்த இயக்கத்தைப் புறக்கணித்தார். தனி சுதந்திர நாடு கோரிய முஸ்லீம் லீக்குடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றார். இந்து-முஸ்லீம் உடன்பாட்டுக்கான தனது திட்டத்தை (C.R.Formula) வெளியிட்டார். இராஜாஜியின் நடவடிக்கைகள் காங்கிரசாரிடையே மிகுந்த மனவேதனையைத் தந்தன. இரண்டாம் உலகப் போர் முடிந்தவுடன் 1946 இல் நடைபெற்ற மாநில சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் முதலமைச்சராக முயன்றார்.

அம்முயற்சி பலனளிக்காமையால் அவர் தமிழ்நாடு காங்கிரசிலிருந்து விலகிக் கொண்டார். காமராசரின் ஆதரவோடு டி.பிரகாசம் முதலமைச்சாரானார்.

குறிப்பு

14.8.3.சட்டச் சாதனைகள்

இராஜாஜி 1937 ஜூலை 15 ஆம் தேதி ஆட்சிப் பொறுப்பேற்றார். அவரது அமைச்சரவையில் டி.பிரகாசம், பி.சுப்பராயன், வி.வி.கிரி, பெசவாடா கோபால ரெட்டி, டி.எஸ்.எஸ்.இராஜன், மௌலானா யாகூப் காசன் சேத், வி.ஐ.முனுசாமி பிள்ளை, எ .ராமநாதன் பிள்ளை, கோங்கட்டி இராமன் மேனன் ஆகியோர் இடம் பெற்றனர். இராஜாஜி ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் சில சமுதாயச் சீர்திருத்த நடவடிக்கைகளைக் கால இழப்பின்றி மேற்கொண்டார்: 1) விவசாயிகள் கடன் தள்ளுபடி சட்டம் (Agricultural Debt Relief Act, March 1938). இச்சட்டம் மாநில விவசாயிகளைக் கடன் பிடியிலிருந்து விடுவித்து நிம்மதிப் பெருமூச்சு விடச் செய்தது 2) ஆலய நுழைவு மற்றும் இழப்பீட்டுச் சட்டம் (Temple Entry Authorisation and Indemnity Act, 1939). இந்தச் சட்டம் தலித்துகளும், நாடார்களும் கோவிலுக்குள் நுழைவதற்கு எதிராக இருந்த கட்டுப்பாடுகளையும் தடைகளையும் நீக்கியது. பிற்படுத்தப்பட்டோர் உயர் சாதியினருக்குச் சமமாக கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவதற்கான உரிமை வழங்கப்பட்டது 3) சட்டம் இயற்றுவதோடு நின்றுவிடாமல் உடனடியாக மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் தலித்துகளுக்கும் நாடார்களுக்கும் திறந்துவிடப்பட்டது (1939). 4) மாநிலம் முழுவதம் மதுவிலக்கு (Prohibition) நடைமுறைப்படுத்தப் பட்டது. சமுதாயத்தின் அடித்தட்டு மக்களின் நலன் கருதி இத்திட்டம் உறுதியுடன் செயல்படுத்தப்பட்டது 5) மதுவிலக்குத் திட்டத்தால் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்வதற்காக விற்பனை வரி (ளுயடநள வுயஒ) விதிக்கப்பட்டது 6) அரசாங்க செலவைக் குறைக்க நூற்றுக்கணக்கான அரசாங்க ஆரம்பப் பள்ளிகள் மூடப்பட்டன! 7) பள்ளிகளில் காந்தியின் வார்தா கல்வித் திட்டம் (Wardha Scheme) அறிமுகப் படுத்தப்பட்டது. 8) பள்ளிகளில் ஆறாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை இரண்டாவது மொழியாக இந்தி பாடமாக்கப்பட்டது. அதாவது மாணவர்கள் தாய்மொழியோடு இந்தியையும் கட்டாயப் பாடமாகக் கற்க வேண்டும்.

14.8.4. இந்தி எதிர்ப்புப் போராட்டம்

இராஜாஜி அறிமுகப்படுத்திய திட்டங்களில் நூற்றுக்கணக்கான துவக்கப் பள்ளிகளை மூடியதும், பள்ளிகளில் வார்தா திட்டத்தை அறிமுகப்படுத்தியதும், கட்டாய இந்திப் படிப்பும் பிற சமுதாய சீர்திருத்த திட்டங்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு எதிர் விளைவுகளை ஏற்படுத்தின. மதுவிலக்குத் திட்டத்தால் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை சரிக்கட்டுவதற்காக இராஜாஜி புதிதாகக் கொண்டு வந்த விற்பனை வரியை ஏற்றுக் கொண்ட மக்கள் நூற்றுக்கணக்கான

குறிப்பு

அரசாங்கப் பள்ளிகள் மூடப்பட்டதை நிராகரித்தனர். இராஜாஜியின் இந்த நடவடிக்கை ஆயிரக்கணக்கான கீழ்ச்சாதி மக்களின் குறிப்பாக தலித்துகளின், கல்வி வாய்ப்பைப் பறித்துவிட்டதாகக் கருதினார். வார்தா திட்டம் வர்ணாசிரமத் திட்டமாக சித்தரிக்கப்பட்டது இத்திட்டம் சாதிமுறையை சாசுவதப்படுத்துவதற்கான முயற்சி என்று கூறப்பட்டது. .

ஈ.வெ.ரா எதிர்ப்பு

இந்தி ஆதரவாளரான இராஜாஜி ஆட்சிப் பொறுப்பேற்று இந்தி மொழியைக் கற்பிப்பதைப் பற்றிய அறிவிப்பை வெளியிட்டார். அதைத் தொடர்ந்து 1938 ஏப்ரல் 21 ஆம் தேதி ஒரு அரசாணை (Government Order, G.O) வெளியிடப்பட்டது. அதன்படி சென்னை இராஜதானியிலுள்ள 125 உயர்நிலைப் பள்ளிகளில் இந்தி மொழி கட்டாயமாக கற்பிக்கப்பட வேண்டும். இந்த அரசாணை வெளியிடப்பட்ட உடனே பெரியார் ஈ.வெ.ராவின் தலைமையிலான சுயமரியாதை இயக்கத்தினரும், ஏ.டி.பன்னீர் செல்வத்தின் தலைமையிலான நீதிக்கட்சியினரும் எதிர்த்தனர். இவர்களது எதிர்ப்பை மறைமலை அடிகள், சோமசுந்தரபாரதி, கே.அப்பாதுரை, முடியரசன், இலக்குவனார் போன்ற தமிழ் அறிஞர்கள் ஆதரித்தனர்.

பெண்களும் அதிக அளவில் இப்போராட்டத்தில் பங்கேற்றனர். மூவலூர் இராமாமிர்தம், நாராயணி, வ.ப.தாமரைக்கனி, முன்னகர் அழகியார், டாக்டர் தர்மாம்பாள், மலர் முகத்தம்மையார், பட்டம்மாள், சீத்தம்மாள் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். தமிழ்நாடு பெண்கள் மாநாட்டில் கூடிய பெண்களும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு அளித்தனர் (1938 நவம்பர் 13). காஞ்சி இராஜகோபாலாச்சாரி போன்ற பிராமணர்களும் இப்போராட்டத்தில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் பேசும் முஸ்லீம்களும் ஆதரவளித்தனர். இந்தி எதிர்ப்புப் போராட்டம் அனைத்து தரப்பினரும் கலந்து கொண்ட மக்கள் இயக்கமாக மாறிற்று.

பள்ளி மாணவர்கள் இந்தியைக் கட்டாயமாகக் கற்க வேண்டும் என்ற இராஜாஜியின் கல்வித் திட்டத்துக்கு உள்நோக்கம் கற்பிக்கப்பட்டு எதிர்க்கட்சிகள், குறிப்பாக பெரியார் ஈ.வெ.ராவின் தலைமையிலான சுயமரியாதை இயக்கம் போர்க்கொடி உயர்த்தியது. கட்டாய இந்தி எதிர்ப்பு பெரிய போராட்டமாக உருவெடுத்து விரிவடைந்தது. மூன்றாண்டுகள் நீடித்த இப்போராட்டத்தின் போது உண்ணாவிரதங்கள், ஆர்ப்பாட்டங்கள், கருப்புக் கொடி ஊர்வலங்கள், மறியல்கள், கண்டனங்கள், இந்திஎதிர்ப்பு மாநாடுகள் நடத்தப்பட்டன. 1938 ஜூலை முதல் தேதியும், டிசம்பர் மூன்றாம் தேதியும் இந்தி எதிர்ப்பு நாட்களாக அனுசரிக்கப்பட்டன. இப்போராட்டம் இராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், தஞ்சாவூர், வடஆர்க்காடு ஆகிய தமிழ் பேசும் மாவட்டங்களில் தீவிரமடைந்தது. நிலைமை கட்டுக்கடங்காமல் போயிற்று.

குறிப்பு

இந்தி மொழிக் கல்வி பற்றி ஆளும் காங்கிரஸ் கட்சியினரிடையே கருத்து ஒற்றுமை இல்லை. இந்தி ஆதரவாளரான இராஜாஜி இதில் விடாப்பிடியாக இருந்தார். நிலைமை கட்டுமீறிச் செல்வதைத் தடுக்கும் பொருட்டு சத்தியமூர்த்தியும், சர்வபள்ளி இராதாகிருஷ்ணனும் ஒரு சமரசத் தீர்வைக் கூறினர். அதாவது, இந்தியை விருப்பப் பாடமாக சொல்லிக் கொடுப்பதே அந்த தீர்வாகும். ஆனால் இராஜாஜி இதற்கு சம்மதிக்க வில்லை. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை சட்டம் ஒழுங்குப் பிரச்சனையாகப் பார்த்த இராஜாஜி போலீஸ் தீர்வு" காணத் தீர்மானித்தார்.

இந்தி எதிர்ப்புப் போராளிகள் போலீஸ் தாக்குதலை எதிர்கொண்டனர். சில இடங்களில் இப்போராட்டம் வன்முறையில் முடிந்தது. ஆயிரக்கணக்கானோர் போலீஸ் தடியடிக்கு உள்ளாயினர். மொத்தம் 1,198 பேர் கைது செய்யப்பட்டனர். பெண்கள் கைக்குழந்தைகளுடன் சிறை சென்றனர். இப்போராட்டத்தின் போது தாளமுத்து, நடராசன் ஆகிய இருவரும் உயிரிழந்தனர். 1,179 பேர் தண்டிக்கப்பட்டனர். பெரியாருக்கு ரூ.1,000 அபராதமும், ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டன. அண்ணாதுரை நான்கு மாதங்கள் சிறை தண்டனை பெற்றார். 1939 ஜூன் 7 ஆம் தேதி போராட்டத்தில் பங்கேற்று கைதான அனைவரும் விடுவிக்கப்பட்டனர். பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராக அகில இந்திய காங்கிரஸ் எடுத்த முடிவின்படி காங்கிரஸ் ஆட்சி செய்த மாநில முதலமைச்சர்கள் பதவி விலகினர். அதன்படி இராஜாஜி அமைச்சரவை பதவியிலிருந்து விலகியது (1939 அக்டோபர் 20). சென்னை அரசாங்கம் ஆளுநர் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது. 1940 பிப்ரவரி 21 ஆம் தேதி ஆளுநர் எர்ஸ்கின் (நுசளமநெ) இந்தி மொழி பற்றிய அரசாணையை விலக்கிக் கொண்டார். இந்தி விருப்ப பாடமாக அறிவிக்கப்பட்டது. பெரியார் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை விலக்கிக் கொண்டார்.

மதிப்பீடு

இராஜகோபாலாச்சாரி பல பரிமாணங்களைக் கொண்ட ஆளுமை பெற்றவர். அவர் ஒரு அப்பழுக்கற்ற தேசியவாதி, இந்திய விடுதலைப் போராட்ட வீரர், சமூக சேவகர், சட்ட நிபுணர், அரசியல் விவேகி, சிந்தனையாளர், இலக்கியப் படைப்பாளி, மத்திய-மாநில அரசியலில் பிரதான பங்கேற்றவர். தமிழ் நாட்டில் சமூக சீர்திருத்தத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தவர் கிராம மக்களின், குறிப்பாக தலித் மக்களின் முன்னேற்றத்துக்கு முன்னுரிமை கொடுத்தவர் பிற்படுத்தப்பட்டோரின் ஆலய நுழைவுக்கு சட்ட அங்கீகாரம் கொடுத்தவர் மதுவிலக்கை மாநிலம் முழுவதும் நடைமுறைப் படுத்தியவர் மொழிவழி மாகாணங்கள் மக்களிடையே பிராந்திய மனப்பான்மையை ஊதி வளர்க்கும் என்று எச்சரித்தவர்.

இராஜாஜி குறைகளுக்கு அப்பாற்பட்டவர் அல்லர். அவரால் தேசிய அளவில் பிரகாசித்ததைப் போன்று மாநில அளவில் வெற்றி பெற

குறிப்பு

முடியவில்லை. இந்தியத் தலைவர்களின் மனநிலையைப் புரிந்து கொண்ட அவரால் மக்களின் விருப்பு வெறுப்புகளை அறிந்து கொள்ள முடியவில்லை. காங்கிரஸ் மேலிடத்தின் ஆதரவோடு மாநில அரசியலுக்கு வந்த இராஜாஜி மக்களின் பேராதரவைப் பெற்றிருந்த சத்திய மூர்த்தியின் உயர்வுக்குத் தடையாக இருந்தார் தமிழ் நாட்டு காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபடக் காரணமானவர். இவரது மொழிக்கொள்கை தமிழக மக்களை இந்தி எதிர்ப்பாளர்களாக்கிவிட்டது. இராஜாஜியின் பிடிவாதப் போக்கு அவரது ஆக்கப் பூர்வமான சாதனைகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது. எனினும் இராஜாஜி இந்திய அரசியல் மணற்பரப்பில் அழியாத காலடிச் சுவடுகளை விட்டுச் சென்றுள்ளார் என்பதில் ஐயமில்லை. "இவர்தான் என் மனசாட்சியின் காவலர்" என்றார் காந்தி. உண்மையான வார்த்தைகள்.

14.9. எஸ். சத்தியமூர்த்தி

எஸ். சத்திய மூர்த்தி அவர்கள், ஒரு தேசபக்தர் மற்றும் இந்திய விடுதலைக்காக பாடுபட்ட விடுதலை வீரரும் ஆவார். சிறந்த வழக்கறிஞராக விளங்கிய எஸ். சத்தியமூர்த்தி அவர்கள், தமிழக காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்காக பாடுபட்ட ஒப்பற்ற தலைவராவார். 1937-38 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் போது, இந்தியை ஆதரித்து உரக்க குரல்கொடுத்தவர். இந்திய மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க எண்ணிய ஆங்கில அரசைப் பார்த்து "நாங்கள் சுதந்திரமாகவே வாழ விரும்புகிறோம், யாருடைய அதிகாரத்தின் கீழும் நாங்கள் வாழ விரும்பவில்லை" என துணிச்சலாக கூறி தன்னுடைய சுதந்திர உணர்வை வெளிபடுத்திய எஸ். சத்தியமூர்த்தி. சத்திய மூர்த்தி அவர்கள், இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்திலுள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கும் 'திருமயம்' என்ற ஊரில் பிறந்தார். இவர் ஆச்சாரமான பிராமணர் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய தந்தை சுந்தரேச சாஸ்திரியர் ஒரு பண்டிதர் மற்றும் தொழில்ரீதியாக வழக்கறிஞரும் ஆவார். சத்தியமூர்த்திக்கு எட்டு சகோதரர்கள் இருந்தனர்.

ஆரம்ப வாழ்க்கை

சத்திய மூர்த்தி அவர்களின், இளம் வயதிலேயே அவரது தந்தை காலமானதால், தன்னுடைய தாய் மற்றும் சகோதரர்களை பார்த்துக்கொள்ளும் பொறுப்பு இவருக்கு அதிகமானது. 1906 ஆம் ஆண்டு "சென்னை கிறிஸ்துவ கல்லூரியில்" வரலாற்றுத் துறையில் இளங்கலைப் பட்டம் பெற்றார். பின்னர், சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டம் பயின்ற அவர் திரு. ஸ்ரீனிவாச ஐயங்கார் மற்றும் இந்திய தேசிய காங்ரஸ் தலைவரான ஸ்ரீ.எஸ்.ஸ்ரீனிவாச ஐயங்காரின் கீழ் சட்டப் பயிற்சி மேற்கொண்டார்.

குறிப்பு

அரசியல் வாழ்க்கை

தனது கல்லூரி நாட்களிலேயே கல்லூரி தேர்தல்களில் கலந்துகொண்டு வெற்றிபெற்ற அவருக்கு மக்களாட்சி முறையில் ஆழ்ந்த பிடிப்பையும் அரசியலில் ஈடுபடவும் வழிவகுத்தது. அதனால் 1919 லிருந்து எஸ். சத்தியமூர்த்தியின் அரசியல் வாழ்க்கை தொடங்கியது எனலாம். காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளில் ஈடுபாடுகொண்டு, தமிழக காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக சேர்ந்து, அக்கட்சியின் நன்மதிப்பைப் பெற்ற அவர், காங்கிரசின் பிரதிநிதியாக மாண்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்கள் மற்றும் ரௌவ்லத் சட்டத்திற்கெதிரான இணை நாடாளுமன்றக் குழுவில் வாதாட இங்கிலாந்து அனுப்பப்பட்டார். பின்னர், 1923 ஆம் அண்டு சட்டசபை தேர்தலில் போட்டியிட்டு சட்டசபை உறுப்பினராகவும் ஆனார். 1930 ஆம் ஆண்டு சென்னை பார்த்தசாரதி கோவிலில் இந்திய கோடி ஏற்ற முயன்றபோது கைது செய்யப்பட்டார். சி.ஆர். தாஸ் மற்றும் மோதிலால் நேரு போன்றோர்கள் தொடங்கிய "சுயராஜ்யக் கட்சியில்" தன்னை ஈடுபடுத்திக் கொண்ட சத்தியமூர்த்தி அவர்கள், இந்திய பாராளுமன்ற ஜனநாயகம் அமைவதற்கு உறுதுணையாக இருந்தார். 1937 ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற அவர், சென்னை மாகாண கவுன்சிலராகவும் தேர்தெடுக்கப்பட்டார். 1939 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி தலைவராக பணியாற்றிய பொழுது, சென்னையில் கடும் தண்ணீர் பஞ்சம் நிலவியது (இரண்டாம் உலகப் போர்நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டம்). இந்த பிரச்சனையைத் தீர்க்க பிரிட்டிஷ் அரசுடன் போராடி பூண்டி நீர்தேக்கத்திர்கான (இப்பொழுது சத்தியமூர்த்தி சாகர் நீர்தேக்கம் என அழைக்கப்படுகிறது) வரைவு ஒப்புமைப் பெற்று பணிகள் உடனே தொடரவும் தீவிரம் காட்டினார். பின்னர், சுதேசி இயக்கத்தில் தீவிர ஈடுபாடு கொண்டு செயல்பட்ட அவர், 1940 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். 1942 ஆம் ஆண்டு நடைபெற்ற "வெள்ளையனே வெளியேறு" போராட்டத்திற்காக மீண்டும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

சத்திய மூர்த்தி அவர்கள், குமாரசாமி காமராஜருக்கு ஒரு சிறந்த அரசியல் வழிகாட்டியாக திகழ்ந்தவர். 1936 ஆம் ஆண்டு காங்கிரஸ் கமிட்டி தலைவராக தேர்தெடுக்கப்பட்ட சத்தியமூர்த்தி, காமராஜரை பொது செயலாளராகவும் நியமித்தார். இந்தியா சுதந்திரம் பெற்ற போது காமராஜர், முதலில் சத்தியமூர்த்தி வீட்டுக்கு சென்று, சுதந்திரக்கொடியை ஏற்றி, தன்னுடைய குருவின் மீது கொண்ட பக்தியை வெளிப்படுத்தினார். தமிழக முதலைச்சராக பதவியேற்ற காமராஜர் முதலில் சத்தியமூர்த்தி வீட்டுக்கு சென்று, அவருடைய புகைப்படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்திவிட்டுத் திரும்பினார். மேலும், அவர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்கு ஆற்றிய தொண்டை நினைவுகூறும் வகையில், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைமையகத்திற்கு "சத்தியமூர்த்தி பவன்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பூண்டி நீர்தேக்கம் இவரால் தொடங்கப்பட்டு 1944 ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டது. ஆனால், கட்டி

குறிப்பு

முடிக்கப்பட்டபோது இவர் உயிருடன் இல்லை. இவருடைய முதன்மை சீடரான காமராஜர் அந்த நீர்தேக்கத்திற்கு "சத்தியமூர்த்தி சாகர் அணை" என பெயர் சூட்டினார். சத்திய மூர்த்தி அவர்கள், 1942 ஆம் ஆண்டு தனிநபர் சத்தியாகிரகம் செய்தமையால் கைதுசெய்யப்பட்டு நாக்பூரிலுள்ள அமராவதி சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர், முதுகு தண்டு காயத்தினால் அவதிப்பட்ட சத்தியமூர்த்தி, மார்ச் 28, 1943 ஆம் ஆண்டு சென்னை மருத்துவமனையில் தன்னுடைய 55 வது வயதில் காலமானார்.

14.10. கு.காமராசர்

காமராசர் என்ற காமாட்சி 1903 ஜூலை 15 ஆம் தேதி இராமநாதபுரம் மாவட்ட விருதுநகரில் நடுத்தர நாடார் குடும்பத்தில் குமாரசாமிக்கும் சிவகாமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். இவர் உள்ளூர் பள்ளியிலும், ஏனாதி நாயனார் வித்யாசாலாவிலும், சத்திரிய வித்யாசாலாவிலும் படித்தார். இளமையிலேயே தந்தையையும், பாட்டனாரையும் இழந்த காமாட்சி பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே நிறுத்த நேரிட்டது. அதன்பின் இவர் தனது சித்தப்பா கருப்பையா நாடார் துணிக் கடையிலும், திருவனந்தபுரத்தில் தாய்மாமன் காசி நாராயண நாடாரின் மரத் தொட்டியிலும் வேலை செய்தார். அப்போது காமராசருக்கு நாட்டு அரசியலிலும், சமூக சீர்திருத்தத்திலும் ஆர்வம் ஏற்பட்டது. கேரளாவில் தீண்டத்தகாதோராக் கருதப்பட்டு பல கொடுமைகளுக்கு உள்ளான ஈழவர்கள் பற்றிய அறிய நேரிட்டது. வைக்கம் அறப்போராட்டத்தில் ஆயிரத்தில் ஒருவராகக் கலந்து கொண்டார். அதன் பின்னர் சுசீந்திர ஆலய நுழைவுப் போராட்டத்திலும் பங்கேற்றார்.

விடுதலைப் போராட்டத்தில்

திருவனந்தபுரத்திலிருந்து விருதுநகர் திரும்பிய காமராசர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொள்ளும் நோக்கத்தோடு 1919 இல் காங்கிர தொண்டராகச் சேர்ந்தார். 1920 ஆம் ஆண்டில் அவருக்குக் காந்தியை மதுரையில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதன்பின் அவர் விருதுநகரிலும், மாவட்டத்திலும் காங்கிரசைப் பலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். அப்போதுதான் அவருக்கு எஸ்.சத்தியமூர்த்தியுடன் தொடர்பு ஏற்பட்டது. அப்போதிலிருந்து காமராசர் சத்தியமூர்த்தியின் நம்பிக்கைக்குரிய சீடரானார். திருச்சி, மதுரை போன்ற நகரங்களில் காங்கிரஸ் கிளைகளைத் துவக்கினார். காங்கிரஸ் தொண்டர்களுக்குப் பயிற்சி அளித்தார். 1920 இல் துவக்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டு மதுக்கடை மறியல் செய்தார்.

காமராசர் 1922 ஆம் ஆண்டில் அப்போது காங்கிரசில் இருந்த ஈ.வெ.இராமசாமி நாயக்கர் தலைமையின் கீழ் செயல்பட்ட காங்கிர பேரவையின் செயலராக இருந்தார் அப்பேரவையின் மாநில காங்கிரஸ் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்களுக்கு நன்கு அறிமுகமான

குறிப்பு

காமராசர் விருதுநகர் நகராட்சி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (1922). மாவட்ட காங்கிர சிறப்புக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்து அதில் உயர் மட்டத் தலைவர்களை அழைத்துப் பங்கேற்கச் செய்தார். 1924 இல் காமராசர் சத்தியமூர்த்தியுடன் சேர்ந்து விருதுநகர் மாவட்டத்தில் தேர்தல் சுற்றுப் பயணம் செய்தார். காந்தி சீனிவாச ஐயங்காரின் விருந்தினராக இருந்தபோது காமராசர் காந்தியை சந்தித்து ஒத்துழையாமை இயக்கத்தை முன்னின்று நடத்த அனுமதி பெற்றார். மதுக்கடை மறியல் செய்தார். சைமன் குழுவை எதிர்த்து மறியல் போராட்டம் செய்தார் (1928). உப்பு அறப்போராட்டத்தில் கலந்து கொண்டு இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றார் காமராசர். அலிப்பூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

காங்கிரஸ் தலைவர்

1930 ஆம் ஆண்டு அலிப்பூர் சிறையில் அடைக்கப்பட்ட காமராசர் 1931ல் விடுதலை செய்யப்பட்டார். அவருக்கு விருதுநகரில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அவர் இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காந்தி இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றபோது காந்தி-இர்வின் ஒப்பந்தத்தை மீறி சட்டமறுப்புப் போராட்ட வீரர்கள் மீது பழி வாங்கப்பட்டது. அப்போது காமராசர் கைது செய்யப்பட்டு திருச்சி சிறையில் அடைக்கப்பட்டு, பின்னர் வேலூர் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவர் மீது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. விடுதலையான பின் 1935 டிசம்பர் 20 ஆம் தேதி காமராசர் விருதுநகரில் காங்கிர பொன்விழாவை சிறப்பாகக் கொண்டாடினார். 1936 இல் ஜவஹர்லால் நேரு தமிழ் நாட்டில் சுற்றுப் பயணம் செய்த போது சத்தியமூர்த்தியும், காமராசரும் உடன் சென்றனர். அடுத்த ஆண்டே காமராசர் சாத்தூர் தொகுதியிலிருந்து சென்னை சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1940 இல் தமிழ்நாடு காங்கிர கமிட்டித் தலைவர் தேர்தலுக்கான தேர்தல் நடைபெற்றது. அப்போது முதலமைச்சராக இருந்த இராஜாஜியின் ஆதரவோடு சி.பி.சுப்பையாவும், சத்தியமூர்த்தியின் ஆதரவோடும் காமராசரும் போட்டியிட்டனர். காமராசர் மூன்று வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவர் அப்பதவியில் தொடர்ந்து 16 ஆண்டுகள் நீடித்தார். சத்தியமூர்த்தி காங்கிரஸ் செயலரானார்.

நகர் மன்றத் தலைவர்

1940 இல் துவக்கப்பட்ட தனிநபர் அறப்போராட்டத்தின் போது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராயிருந்த காமராசர் தமிழ்நாடு முழுவதற்குமான சத்தியாக்கிரகிகளின் பெயர்ப் பட்டியலைத் தயாரித்துக் கொண்டு காந்தியை சந்தித்துப் பேசுவதற்காக வார்தாவுக்குச் செல்லும் வழியில் கரூர் புகை வண்டி நிலையத்தில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். காமராசர் சிறையில் இருந்தபோது அவர் விருதுநகர் நகர் மன்றத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

குறிப்பு

(1941 மே 31). விடுதலையானவுடன் காமராசர் மரியாதை நிமித்தம் நகராட்சித் தலைவராகப் பொறுப்பேற்று விரைவிலேயே கட்சிப் பணிக்காகப் பதவி விலகினார்.

சிறைவாசம்

1942 ஆகஸ்டு 7-8 தேதிகளில் பம்பாயில் கூடிய காங்கிரஸ் கூட்டத்தில் "வெள்ளையனே வெளியேறு" போராட்டத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அக்கூட்டத்தில் கலந்து கொண்டு திரும்பிய காமராசர் கைது செய்யப்பட்டு அம்ரோலி சிறையில் அடைக்கப்பட்டுப் பின்னர் வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டார். மூன்று ஆண்டுகால சிறைவாசத்துக்குப் பின் விடுவிக்கப்பட்டார் (1945 ஜூன் 30). காமராசர் சிறையிலிருந்த போது அவரது அரசியல் ஆசான் சத்தியமூர்த்தி காலமானார் (1943). 1945 ஜூலை மாதம் சிறையிலிருந்து திரும்பிய காமராசர் கட்சிப் பணியில் கருத்தூன்றி செயல்பட்டார். 1946 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ் நாட்டில் 205 இடங்களில் 165 இடங்களைக் காங்கிரஸ் கைப்பற்றியது. காமராசர் சாத்தூர் தொகுதியிலிருந்து சட்டப் பேரவைக்குப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். காமராசரின் ஆதரவோடு டி.பிரகாசம், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், குமாரசாமி இராஜா ஆகியோர் முறையே சென்னை முதலமைச்சரானார்கள் (1946-1952). அவர் ஆட்சியாளர்களை உருவாக்குபவர்" (King-Maker) என்று அழைக்கப்பட்டார்.

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கவும்

4. எந்த ஆண்டு இராஜாஜி காங்கிரஸ் செயற்குழு (ஊழபெசநளள றுழசமபெ ஊழஅஅவைவநந) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்?

5. 1930 ஆம் ஆண்டு சென்னை பார்த்தசாரதி கோவிலில் இந்திய தேசிய கொடியை ஏற்ற முயன்றபோது கைது செய்யப்பட்டார் யார்?

6. எந்த ஆண்டு காமராசர்க்கு காந்தியை மதுரையில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது?

14.11. உங்கள் முன்னேற்ற கேள்விகளை சரிபார்க்க விடைகள்

1. வ.வே.சு. ஐயர்
2. 1906 அக்டோபர் 16-ம் தேதி
3. சுப்பிரமணிய சிவா
4. 1921
5. எஸ். சத்திய மூர்த்தி
6. 1920

14.12. சுய உதவி கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

குறிப்பு

குறுகிய வினாக்கள்

1. வாஞ்சிநாதன் குறித்து சிறு குறிப்பு எழுதுக
2. விடுதலை போராட்டத்தில் சுப்ரமணிய பாரதியின் பங்களிப்பை விவரி
3. விடுதலை போராட்டத்தில் காமராஜரின் பங்கு குறித்து விளக்குக

விரிவான வினாக்கள்

1. விடுதலை போராட்டத்தில் வ. உ. சி. பங்களிப்பை விளக்குக
2. இராஜாஜியின் நிர்வாக திறமை குறித்து விளக்குக.
3. சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு குறித்து கட்டுரை எழுதுக

14.13. கூடுதல் வாசிப்புகள்

Rajayyan K. History of Tamil Nadu

பிள்ளை கே.கே. தென்னிந்திய வரலாறு

Nilakanda Sastri K.N. A History of South India

Sathianathair R. History of India

வெங்கடேசன் க. தற்கால தமிழ்நாட்டு வரலாறு

இராமசாமி அ. தமிழ் நாட்டு வரலாறு

David Arnold. The Congress in Tamilnadu: nationalist politics in South India, 1919-1937